சமூகவியல் மற்றும் மானிடவியல் கலைச்சொல் விளக்க அகராதி

தா. இராபர்ட் சத்திய சோசப்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

சமூகவியல் மற்றும்
மானிடவியல்
கலைச்சொல் விளக்க அகராதி

தொகுப்பாசிரியர்

முனைவர் தா. இராபர்ட் சத்திய சோசப்
இணைப் பேராசிரியர்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

ISBN : 81-7090-298-3

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனப் பதிப்புச்சுழல்நிதியில் வெளியிடப்பட்டது

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 238

திருவள்ளுவராண்டு 2033 மாசி - மார்ச்சு 2002

நூல்	:	சமூகவியல் மற்றும் மானிடவியல் கலைச்சொல் விளக்க அகராதி
தொகுப்பாசிரியர்	:	தா. இராபர்ட் சத்திய சோசப்
மொழி	:	தமிழ்
பொருள்	:	அகராதி
பதிப்பு	:	முதற்பதிப்பு
பக்கம்	:	(4 + 300) = 304
தாள்	:	டி.என்.பி.எல்.மேப்லித்தோ 16kg
அளவு	:	டெம்மி 1/8
நூற்கட்டுமானம்	:	சாதாக்கட்டு
விலை	:	உரு. 95/-
படிகள்	:	1000
கணினி அச்சுப் பதிவம்	:	அழகு அச்சகம், தஞ்சாவூர்.
அச்சு	:	தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்.

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் - 613 005 - இந்தியா

முனைவர் இ. சுந்தரமூர்த்தி
துணைவேந்தர்

அணிந்துரை

தமிழ்நாட்டுக் கல்வி நிறுவனங்களில் அனைத்துத் துறைகளின் உயர்கல்வி நிலையிலும் தமிழ் பயிற்றுமொழியாதல் வேண்டும் என்ற கருத்து அரசுநிலையிலும் அறிஞர்கள் மத்தியிலும் காணப்படுகிறது. இதனைச் செயல்படுத்த, கடந்த இருபது ஆண்டுகளாகத் தமிழ்ப் பல்கலைக்கழகம் மருத்துவம், பொறியியல் மற்றும் பல அறிவியல் தொழில்நுட்பத் துறைகளில் பாடநூல்களையும், கலைச் சொல் அகராதிகளையும் வெளியிட்டு ஆக்கபூர்வமான பணிகளைச் செய்துவருகிறது. அவற்றில் ஒன்றாக முனைவர் தா. இராபர்ட் சத்தியசோசப் தொகுத்துள்ள `சமூகவியல் மற்றும் மானிடவியல் கலைச்சொல் விளக்க அகராதி' என்ற இந்த நூலும் அமைந்துள்ளது. சமூக அறிவியல் துறைகளான சமூகவியல், மானிடவியல் ஆகிய துறைகளில் தமிழில் நூல்கள் தோன்றுவதற்கு இவ்வகராதி பெரிதும் உதவும். இதுபோன்ற பணிகள் `தமிழால் முடியும்' என்ற நம்பிக்கையை ஏற்படுத்திவருகிறது.

சமூகவியல் மற்றும் மானிடவியல் துறைகளைச் சார்ந்த எல்லாக் கலைச்சொற்களும் அவற்றிற்கான விளக்கங்களும் இவ்வகை அகராதிகளில் தொகுக்கப் பெறவேண்டும். சமூகவியல், மானிடவியல் மற்றும் தொடர்புடைய பிற துறைகளான உளவியல், சமூகப் பணியியல், ஆய்வு முறையியல் ஆகிய துறைகளைச் சேர்ந்த 1462 ஆங்கிலக் கலைச்சொற்களும் அச்சொற்களுக்குத் தமிழ் நேர்ச் சொற்களும் அவற்றிற்கான விளக்கங்களும் இவ்வகராதியில் இடம்பெற்றுள்ளன. அகராதியின் இறுதியில் தரப்பட்டுள்ள தமிழ் அகரவரிசைப் பட்டியலானது மிகவும் பயனுடையதாக அமையும். அண்மைக் காலத்தில் தமிழில் இதுபோன்ற அகராதிகள்

வெளிவரத் தொடங்கியுள்ளன. எனினும் சமூகவியல் மற்றும் மானிடவியலில் இது முதல் பணியாகும்.

இவ்வகராதியைத் தொகுத்த முனைவர் தா. இராபர்ட் சத்திய சோசப் `முள்ளுக்குறும்பர்' என்ற பழங்குடி மக்களின் மொழியை ஆராய்ந்து முனைவர் பட்டம் பெற்றவர். இவர் எழுதிய `சமகாலத் தமிழர்களின் உறவுமுறை அமைப்பும் உறவுமுறைச் சொற்களும்', `குறும்பர்களின் உறவுமுறை' ஆகிய நூல்களைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது. இவர் சென்ற இருபது ஆண்டுகளாகத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி வருபவர். சமூக அறிவியல் துறைகளில் அவருடைய ஈடுபாடும் மொழியியல் மற்றும் அகராதியியல் துறை அறிவும் இவ்வகராதியில் வெளிப்படுகின்றன.

தமிழ் அறிஞர்களும் மாணவர்களும் இவ்வகராதியை வரவேற்பர் என நம்புகிறேன். தொடர்புடைய துறைகளில் தமிழில் நூல்கள் எழுதப்படவும் அதனால் தமிழ் பல்வேறு துறைகளில் வளரவும் இதுபோன்ற அகராதிகள் நமக்குத் தேவை.

இன்றைய புதிய அறிவியல் சூழலுக்கேற்ப இத்தகைய அகராதி வெளியீடுகள் தமிழ்வழிக்கல்விக்கு மேலும் பயனுடையதாக அமையும்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் இத்தகைய வெளியீட்டு முயற்சிகளைத் தமிழ்கூறு நல்லுலகம் போற்றிப் பயன் கொள்ள வேண்டுகின்றோம். இம் முயற்சியில் ஈடுபாடு கொண்டு உழைத்த நூலாசிரியருக்கும், பதிப்புத்துறையினருக்கும் இனிய பாராட்டுதல்கள்.

நாள் : 7.3.2002

இடம் : தஞ்சாவூர்

(இ. சுந்தரமூர்த்தி)

முன்னுரை

அனைத்து நிலைகளிலும் தமிழ் என்பதற்கான முயற்சிகள் அரசாலும் தனிநிறுவனங்களாலும் எடுக்கப்பட்டுவரும் நிலையில் தமிழ்நாட்டில் தமிழ்வழிக் கல்வி இன்றியமையாதது என்ற கருத்து வேரூன்றியுள்ளது. இளைய சமுதாயத்தினரைத் தாமாகவே சிந்திக்கவைக்கத் தமிழ்வழிக் கல்வி மிகவும் உதவும். சமூகவியல் மற்றும் மானிடவியல் பாடநூல்கள் ஆங்கில மொழியிலேயே காணப்படுகின்றன. பயிற்றுமொழியும் பொதுவாக ஆங்கிலமாகவே உள்ளது. ஆங்கிலத்தில் கற்பிக்கப்படும் பாடங்கள் தமிழ்மொழியில் கற்பிக்கப்படவேண்டுமானால் பாடநூல்கள் தமிழில் எழுதப்பட வேண்டும். இப்பணி நிறைவேறக் கலைச் சொற்கள் உருவாக்கப்பட்டுத் தரப்படுத்தப்பட வேண்டும். அத்துடன் இத்தகைய கலைச்சொற்களுக்கான விளக்கங்களும் தமிழ்மொழியில் எழுதப்பட வேண்டும்.

மொழி வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுவனவற்றுள் அகராதிகளும் அடங்கும். கலைச்சொல் அகராதிகள் இதில் முதலிடம் பெறுகின்றன. குறிப்பிட்ட ஒரு துறைக்குரிய சொற்களையோ தொழிலுக்குரிய சொற்களையோ தொகுத்து வழங்கும் அகராதி கலைச்சொல் அகராதியாகும்.

சமூகவியல் மற்றும் மானிடவியல் கலைச்சொற்களை மாணவர்கள் எளிதாகப் புரிந்துகொள்ள வேண்டும். அதற்கான ஒரு நோக்கீட்டு நூல் அமையவேண்டும். இத்துறைகளில் பாடநூல்கள் தமிழில் எழுதப்பட வேண்டும். உயர்கல்வி நிலையிலும் தமிழ் பயிற்றுமொழியாக அமைய வேண்டும். என்ற நோக்கங்களுடன் இவ்வகராதி தொகுக்கப்பட்டுள்ளது. இத்துறைகளில் இவ்வகராதி ஒரு முதல் பணியாகும்.

இவ்வகராதியில் இடம்பெற்றுள்ள கலைச்சொற்கள் முறைப்படி தரப்படுத்தப்பட்டவை அல்ல. முறையான

தரப்படுத்தம் நிகழும்பொழுது சொற்கள் மாறுதல்களுக்கு உட்பட வாய்ப்புள்ளது. தொடர்புடைய துறைகள் வளரும் நிலையில் அகராதியில் இடம்பெற்றுள்ள சொற்களுக்குப் பதிலாக வேறு சொற்கள் உருவாக்கப்படலாம்; பண்பாட்டு மாற்றம் நிகழும்பொழுதும் சொற்களில் மாறுதல்கள் ஏற்படலாம். நிலைபேறாக்கம் பெற்றுவிட்ட சொற்களில் இத்தகைய குறிப்பிடத்தக்க மாறுதல்கள் ஏற்பட வாய்ப் பில்லை.

கலைச்சொற்களும் அவற்றிற்கான விளக்கங்களும் அடிப்படைச் சமூகவியல் மற்றும் மானிடவியல் நூற்களிலிருந்தும் ஆங்கில-சமூகவியல் அகராதிகளிலிருந்தும் தொகுக்கப்பட்டன. பெரும்பாலான சமூகவியல் கலைச் சொற்கள் இவ்வகராதியில் இடம்பெற்றுள்ளன. ஆனால் மானிடவியல் கலைச்சொற்கள் முழுமையாக இடம் பெறவில்லை. சமூகவியலோடு தொடர்புடைய பிற துறைகளான உளவியல், சமூகப்பணியியல் மற்றும் ஆய்வு முறையியல் போன்ற துறைச் சொற்களும் ஆங்காங்கு இடம்பெற்றுள்ளன. இவ்வகராதியில் 1462 ஆங்கில கலைச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்களும் அவற்றிற்கான விளக்கங்களும் இடம்பெற்றுள்ளன.

பொதுச்சொற்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. எனினும் பொது மொழியில் பரவலாக வழங்கப்படும் சொல்லாயினும் துறைசார் பொருள் பெற்றிருப்பின் அவையும் கலைச்சொற்களாகச் சேர்க்கப்பட்டுள்ளன. நீண்ட தொடர்களாக வரும் பதிவுகள் தவிர்க்கப்பட்டுள்ளன. சமூகவியலில் குறிப்பிடத்தக்க கருத்துருவைக் குறிக்கும் தொடர்கள் பதிவுகளாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

சொற்களின் பதிவுஅமைப்பு மூன்று பகுதிகளைக் கொண்டது. முதல் பகுதியில் ஆங்கிலக் கலைச்சொல் கொடுக்கப்பட்டுள்ளது. இரண்டாவது பகுதியில் ஆங்கிலக் கலைச்சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல் தரப்பட் டுள்ளது. மூன்றாவது பகுதியில் கலைச்சொல்லிற்கான விளக்கம் தமிழில் கொடுக்கப்பட்டுள்ளது. தேவைப்படும் இடங்களில் தொடர்புடைய சொற்களின் விளக்கங்களுக்காகக் குறுக்கு நோக்கீடுகளும் தரப்பட்டுள்ளன. அகராதியின்

இறுதியில் தமிழ்க் கலைச்சொல் அகர வரிசையும் அவற்றிற்கு இணையான ஆங்கிலச் சொற்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

ஓர் ஆங்கிலச் சொல்லுக்கு ஒரு தமிழச்சொல் என்ற விதிமுறை முழுமையாகப் பின்பற்றப்படவில்லை. ஓர் ஆங்கிலச் சொல்லுக்கு இரண்டு தமிழ்ச்சொற்கள் காணப்படின் இவ்விரு சொற்களும் பொருளாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இணைப்பாகத் தரப்பட்டுள்ள தமிழ்க் கலைச்சொல் அகரவரிசையில் இரு சொற்களும் தனித்தனியாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

கூட்டுக் கலைச்சொற்களை ஆங்கில அகராதிகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது போன்று அவ்வாறே பதிவுசெய்ய இயலாத நிலை உள்ளது. சான்றாக ஆங்கிலக் கலைச்சொல் அகராதிகளில் Hypothesis-Alternative, Hypothesis- Null, Hypothesis-Working எனப் பதிவு செய்யப்பட்டுள்ளன. Hypothesis முதன்மை வாய்ந்ததாக உள்ளதால் அது தலைச் சொல்லாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இச்சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைப் பதிவு செய்யும்பொழுது முறையே கருதுகோள் - மாற்றுநிலை, கருதுகோள்-பயனில், கருதுகோள்-செயல்பாட்டு என்று பதிவு செய்யாமல் தமிழ் மொழிநடைக்கு ஏற்ப Alternative Hypothesis - மாற்று நிலைக் கருதுகோள், Null Hypothesis - பயனில் கருதுகோள், Working Hypothesis - செயல்பாட்டுக் கருதுகோள் என்று பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆங்கிலக் கூட்டுச்சொற்களைப் பிரிக்க இயலுமாயின் இயன்றவரை பிரித்துத் தனிச் சொற்களாகத் தரப்பட்டுள்ளன.

இவ்வகராதியில் இடம்பெற்றுள்ள சொற்களில் மூன்று வகைகள் உள்ளன.

1. தமிழ்ப் பண்பாட்டு அடிப்படையில் உருவாகிப் பன்னெடுங்காலமாக நிலவிவரும் கலைச்சொற்கள் முதல்வகையில் அடங்கும். இவை பண்பாடு, தொழில் ஆகியவற்றின் அடிப்படையிலான பிறமொழித் தாக்கம் எதுவும் இன்றி இயல்பாக உருவானவையாகும். சான்றாக Bride Price- பரிசம், Lineage- கால்வழி போன்ற சொற்களைக் கூறலாம்.

2. தமிழ்ப் பண்பாட்டோடு நெருங்கிய தொடர்புடைய

ஆனால் பிற மொழியின் அல்லது பண்பாட்டின் தாக்கத்தால் ஏற்பட்ட சொற்கள் இரண்டாவது வகையில் அடங்கும். இத்தகைய சொற்கள் சில நிலைகளில் தமிழ்ப் பண்பாட்டோடு ஒத்துப்போவனவாகவும்; சில நிலைகளில் வேறுபடு வனவாகவும் காணப்படும். சான்றாக Jajmani System - குடி சார்பு ஊழிய முறை, Age Set- வயதுக் குழு போன்ற சொற்களைக் கூறலாம்.

3. முற்றிலும் ஆங்கில மொழி வாயிலாக வந்த சொற்கள் மூன்றாவது வகையில் அடங்கும். சான்றாக Cultural Blindness - பண்பாட்டு மடமை, Cultural Drift- பண்பாட்டுப் பிறழ்வு போன்ற சொற்களைக் கூறலாம்.

பொதுநிலையில் சமூகவியல், சமூக மொழியியல் மற்றும் மானிடவியல் துறைகளில் ஆர்வமுடையவர்களுக்கு இவ்வகராதி பெரிதும் துணைபுரியும்.

'சமூகவியல் கலைச்சொல் விளக்க அகராதி' எனும் திட்டம் தமிழ்ப் பல்கலைக்கழக முதல் துணைவேந்தரும் மதிப்பிற்குரிய எனது ஆசிரியருமான பேராசிரியர் வ.ஐ.சுப்பிரமணியம் அவர்களால் பணிக்கப்பட்டு முன்னாள் சமூகவியல் துறைத்தலைவர் பேராசிரியர் சி.செ.தேக்கமலை அவர்களால் தொடங்கப்பட்டது. இத்திட்டம் ஆரம்ப நிலையில் அதாவது சுமார் 200 சொற்களுக்கான விளக்கங்கள் எழுதப்பட்ட நிலையில் கைவிடப்பட்டது. பேராசிரியர் சி.செ. தேக்கமலை அவர்களின் மறைவுக்குப் பின்னர் 'சமூகவியல் மற்றும் மானிடவியல் கலைச்சொல் விளக்க அகராதி' என்ற இத்திட்டம் தொடங்கப்பட்டது. பேராசிரியர் அவர்களால் முழுமையாக விளக்கம் எழுதப்பட்ட சமூகவியல் கலைச் சொற்கள் இவ்வகராதியில் சேர்க்கப்பட்டுள்ளன.

அகராதியைத் தட்டச்சு செய்வதற்கான தொகையை அனுமதித்து ஆணை வழங்கி உதவிய தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் கி. கருணாகரன் அவர்களுக்கும் இவ்வகராதியை வெளியிடுவதற்கு அனுமதி வழங்கிய முன்னாள் துணைவேந்தர் முனைவர்.கதிர் மகாதேவன் அவர்களுக்கும் பதிவாளர் அவர்களுக்கும் பதிப்புத் துறையினருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்ளத்

கடமைப்பட்டுள்ளேன். இவ்வகராதிப் பணியின் தொடக்க நிலையில் ஆக்கபூர்வமான பல கருத்துக்களை வழங்கி உதவிய முனைவர். பா. ரா. சுப்பிரமணியன், (மொழி அறக்கட்டளை, சென்னை) அவர்களுக்கும் இப்பணியைச் செய்து முடிப்பதற்கு முழு ஆதரவும் ஊக்கமும் அளித்த சமூகஅறிவியல் துறைத்தலைவர் பேராசிரியர் அரோமா கு. சாம் அவர்களுக்கும் நாட்டுப்புறவியல் துறைத்தலைவர் நண்பர் முனைவர் ஆறு. இராமநாதன் அவர்களுக்கும் எனது நன்றி.

யாதொரு கைமாறும் கருதாமல் அகராதியின்பால் கொண்ட ஆர்வத்தால் இவ்வகராதியை படித்துத் திருத்தங்கள் செய்து ஆக்கபூர்வமான கருத்துக்கள் வழங்கிய அகராதியியல்துறைத் தலைவர் முனைவர் எச். சித்திரபுத்திரன் அவர்களுக்கும், இலக்கியத்துறை இணைப் பேராசிரியர் முனைவர் தா. ஈஸ்வரபிள்ளை அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சொற்களை அகரவரிசைப் படுத்தல், தட்டச்சுப் படிகளைச் சரிபார்த்தல் போன்ற பணிகளைச் செய்து உதவிய துறையின் ஆய்வு உதவியாளர்கள் திரு. ம. மதியழகன் மற்றும் திரு. சு. ம. பெருமாள் ஆகியோருக்கும் எனது நன்றி உரியது.

இவ்வகராதியை அச்சாக்கம் செய்யும் பணியை ஏற்று நன்முறையில் அச்சிட்டு உதவிய அழகு அச்சக உரிமையாளருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தா. இராபர்ட் சத்தியசோசப்

A

Ability
திறமை

ஒருவரிடம் காணப்படும் தனியியல்பு. இத்தனியியல்பு ஒருவர் செயல்களை நிறைவேற்றவும், சிக்கல்களைத் தீர்க்கவும் அல்லது சீரமைத்துக் கொள்ளவும் துணைசெய்கிறது. திறமை என்பது ஆற்றல்வாய்ந்த செயல்திறம். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒருவர் தனியியல்பாகச் செயல்படுகிறாரா அல்லது குறிப்பிட்ட திறமைகள் மற்றும் செய்திகளைக் கற்றுக் கொள்கிறாரா என்பதையும் குறிக்கிறது.

Abnormal Behaviour
இயல்பு பிறழ்ந்த நடக்கை

எதிர்பார்க்கப்படுகின்ற நடக்கை முறையிலிருந்து பிறழ்வதைக் குறிக்கிறது. சமூக அல்லது உளவியல் தொடர்பான இயல்பு பிறழ்ந்த நடக்கைகளை வெவ்வேறு பண்பாடுகளில் வெவ்வேறு காலகட்டங்களில் மற்றும் வேறுபட்ட சமூகச் சூழல்களில் வெவ்வேறு விதத்தில் வரையறுக்கலாம். சமூகவியலார் தனிநபர் மற்றும் குழுக்களின் இயல்பு பிறழ்ந்த நிலைகளை உற்றுநோக்கி ஆராய்கின்றனர்.

Aboriginal Tribe
முதுபழங்குடி

ஒரு பழங்குடியினர் மிகத் தொன்று தொட்டு குறிப்பிட்ட இடத்தில் காணப்படின் அப்பழங்குடி முதுபழங்குடி ஆகும். அவர்கள் வாழும் நிலப்பரப்பில் முதன்முதலில் குடியேறியவர்களாக இருப்பார்கள். இவர்களின் பழமை பல நூற்றாண்டுகளை உள்ளடக்கியதாக இருக்கும்.

Absenteeism
பணிக்கு வராமை

ஒரு குறிப்பிட்ட காலத்தில் தனிநபர் அல்லது ஓர் உழைக்கும் மக்கள் குழாம் பணிக்குச் செல்லாது விலகியிருக்கும் நாட்களின் நிலை. ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கைக்கான அல்லது ஒரு வகையினத்தின் அல்லது ஒரு தனிநபரின் வராமை நிலையினை ஆராய இயலும். சான்றாக ஒரு நாட்டின் அனைத்து உழைக்கும் மக்கள் குழாம், ஒரு தொழிற்சாலையின் பணியாளர்கள், சில நிறுவனங்களின் பெண் பணியாளர்கள், ஒரு குறிப்பிட்ட வயதைச் சேர்ந்தவர்கள் மற்றும் ஒரு தனிநபர் ஆகியோரின் வராமைநிலையினை ஆராயலாம்.

Absentee Ownership
நேர் பார்வையில்லாத உடைமை

உற்பத்தி அல்லது வினியோக வழிவகைகளை ஒழுங்காக உடனிருந்து மேற்பார்வையிடாத அல்லது முழுமையாக ஈடுபடாத கடுஞ்செயல் நேர்பார்வையில்லாத உடைமையாகும். இச் செயல் குத்தகை விவசாயிகளால் பயிரிடப்படும் நேர்பார்வை யில்லாத நில உடைமை மற்றும் தொழிற்சாலைகளின் நேர்பார்வை யில்லாத உடைமை போன்றவற்

றையும் குறிக்கும்.

Absolute Deprivation
முழுநிலை இழப்புணர்வு

வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் முதலியன இல்லையே என்ற ஏக்க உணர்வு. இந்த ஏக்கம் ஒருவருக்கு அல்லது ஒரு குழுவுக்கு வசதியான வாழ்க்கை வாழும் பிறரைப் பார்க்கும் போது ஏற்படுகிறது.

Abstract
கருச்சுருக்கம்

1) ஒரு நூல் அல்லது ஆவணத்தின் கருச்சுருக்கம். திண்மை என்ற சொல்லிற்கு எதிர்ச்சொல்.

2) மக்கள் அல்லது பொருட்கள் பற்றிய பொதுப் படையான கருத்தைக் கருச்சுருக்கமாக எடுத்துரைக்கும் முறை.

Abstraction
சுருக்கிப் பிரித்தெடுத்தல்

கற்கின்ற இயல் நிகழ்ச்சிகளி லிருந்து சுருக்கிப் பிரித்தெடுத்தல் நிகழ்கிறது. எதையாவது விளக் யுரைப்பதற்கு அல்லது புரியும்படி சொல்வதற்குத் தேர்ந்தெடுத்தல் இன்றியமையாதது என்ற உண்மையை இச்சொல் குறிப்பி டுகிறது. இச்சொல்லுக்குத் தெளி வான வரையறை அளிப்பது சற்றுக் கடினம். காரணம் இச்சொல்லின் பயன்பாடானது பெரும்பாலும் சிந்தனையும் கோட்பாடு உருவாக்கமும் எவ்வாறு நடைபெறுகின்றன என்ற கருதுதலை முன்னூகிக் கின்றதாக உள்ளது.

Accommodation
இசைவுபடுத்துதல்

சமூக உறவுகளில் எதிரான குழுக்களோடு இசைவுபடுத்திக் கொள்கிற நடைமுறை. இதனால் ஒருவருக்கொருவர் சகித்துக் கொள்ளும் சில பணி ஒத்திசைவுகள் தோன்றுகின்றன. மேலும் அடித்தளத்தில் காணப்படுகின்ற பகைமைகளை வெளிப்படையாகக் காண்பிப்பது குறைவாகிறது.

Acculturation
பண்பாடு ஏற்றல்

நேரடியான அல்லது மறை முகமான தொடர்புமூலம் தனிநபர் அல்லது குழு இன்னொரு பண்பாட்டுச் சிறப்புப் பண்பு களைப் பெற்றுக்கொள்கிற நடை முறையே பண்பாடு ஏற்றலாகும், ஒரு தனிநபரை எடுத்துக் கொண்டால் சமூகவயமாதலைப் போன்று இதுவும் ஒரு சமூகக் கற்றல் நடைமுறையாகும். இதில் மொழிசார் தகவல்தொடர்பு முக்கிய பங்கு வகிக்கிறது. ஒரு சமூகநோக்கில் புதிய பண்பாடு ஏற்றல் என்பது குறிப்பிட்ட சில மதிப்பீடுகள், உத்திகள், நிறுவனங் களின் பரவுதல் மற்றும் பல்வேறு நிலைகளில்அவற்றின் உருத்திரிபு ஆகியவற்றைக் குறிக்கிறது. இது பண்பாட்டுச் சிக்கலையும் குழுத் தனித்தன்மையில் உருத்திரிபையும் ஏற்படுத்தும். சில நிலைகளில் இசைவிப்பையும் தோற்றுவிக்கும்

Acephalous
தலையுரிமையற்றமை

சமுதாயங்களோடு தொடர்பு படுத்திக் கூறும்போது நாடற்றவர்களை அல்லது நாட்டுக் குடியுரிமை எதுவும் பெற்றிராதவர்களை இச்சொல் குறிக்கிறது. அத்தகைய சமுதாயங்களில் உறவினர்களுக்குள் அல்லது குடும்பத்திற்குள் காணப்படும் ஆணையுரிமையானது கட்டுப்பாட்டுக்கான வழிவகைகளை அளிக்கிறது. இது கால்வழிகள் மற்றும் இனப்பிரிவுகளோடு தொடர்புடைய அமைப்பு முறைக் குட்படுத்தப்பட்ட நடத்தையோடு சேர்ந்து செயல்படும்.

Achieved Role
தானெய்து பங்கு / ஈட்டிய பங்கு

ஒருவர் தன் சொந்த முயற்சியாலும் திறமையாலும் சமுதாயத்தில் அடையப் பெற்ற நிலையின் கடமை அல்லது பங்கே தானெய்து பங்கு அல்லது ஈட்டிய பங்கு ஆகும்.

Achieved Status
ஈட்டுச்சாதனைத்தகுதி

வகுப்புச் சமுதாயங்களில் ஒருவர் தன் தகுதியை முயன்று ஈட்டுவதால் அவர்கள் அடையும் தகுதியே ஈட்டிய சாதனைத் தகுதியாகும்.

Achievement Motivation
ஈட்டுச்சாதனைத் தூண்டுணர்ச்சி

மனித மற்றும் மனித குழுக்களின் ஈட்டுச் சாதனைப் பெற வேண்டும் என்ற மன உணர்ச்சி.

Action
செயல்/வினை

ஒரு தனிநபருக்குப் பொருளுடையதாகக் காணப்படுகின்ற நடத்தை. ஒரு குறிக்கோளை நோக்கி ஒருவரைத் திசை திருப்புகின்ற வினை அல்லது ஒழுகலாறு.

Action Research
செயல்பாட்டாய்வு

அறிவியல் பயன் கருதியோ நடைமுறைப் பயன்பாடு கருதியோ அமையும் ஆய்வு. இது ஒரு சமூக வளர்ச்சித் திட்டத்தின் பகுதியாகவும் இருக்கும்.

Action Theory
செயல் கோட்பாடு

செயலானது நடத்தையில் உட்கருத்து அல்லது பொருள் தொடர்புடையதாயிருக்கிறது. செயல் கோட்பாடு செயல்படுகின்ற தனிநபரின் செயல்களை ஆராய்வதிலிருந்து ஆரம்பமாகிறது. குறிப்பிட்ட சூழ்நிலைகளில் செயல்படுகின்ற குறிப்பிட்ட நபர்களின் குறிக்கோள்கள், எதிர்பார்ப்புகள் மற்றும் மதிப்பீடுகளை இனம் அறிவதின் மூலம் இவ்வாய்வு முன் செல்கிறது.

Activitiy
நடவடிக்கை

உற்றுநோக்கக்கூடிய உடல்சார் செயலைக் குறிக்கிறது. ஜார்ஜ் சி.கோமன்ஸ் (G.C. Homens)

என்பவர் சமூகக் குழுக்களை ஆராய்வதற்குப் பயன்படுத்திய மூன்று முக்கிய கருத்துப் படிவங்களில் நடவடிக்கையும் ஒன்று.

Adaptation
இசைவறிய முறை

ஓர் உயிரினம் சுற்றுச்சூழலுக் கேற்பத் தன்னை இசைவுபடுத்திக் கொள்ளும் பொதுவான உயிரியல் பண்பு. குடும்பம் அல்லது பலர் இணைந்த ஒரு பெரிய அமைப்பாண்மை அல்லது ஒரு முழு பழங்குடிச் சமுதாயம் ஆகியன உடல்சார் அல்லது சமூக சுற்றுச்சூழலுக்கு இசைவாகுகின்ற பாங்கினை அல்லது வழிவகை களைக் குறிப்பிட இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

Addiction
சார்புப் பழக்க அடிமையாதல்

ஒரு குறிப்பிட்ட பொருளின்மீது சார்புநிலையாக இருக்கும் தன்மை. ஒருவர் குறிப்பிட்ட ஒரு பொருளை உட்கொண்டுதான் ஆகவேண்டும் என்ற உணர்வு உடையவராக இருக்கும் நிலை. சான்றாகப் புகையிலை, சாராயம், போதைப்பொருட்கள் ஆகியவற்றை உட்கொள்பவர்களுக்கு இத்தகைய சார்புடைமையானது உடல்ரீதியான தாகவோ அல்லது உளவியல் தன்மை வாய்ந்ததாகவோ இருக்கும்.

Adjustment
ஒத்துப்போகுதல்

தனிநபர்களுக்கிடையேயும், குழுக்களுக்கிடையேயும், குழுக்களுக்குள்ளும் இணக்கமான உறவுக்கள் ஏற்படுவதற்கு ஒத்துப் போகுந் தன்மை பயன்படுகிறது. குறிப்பாகச் சொல்வதானால் இச்சொல் சமூகவியலைவிட உளவியல் சார்ந்ததாக உள்ளது. தனிநபர் அவருடைய சுற்றுச் சூழலில் இணக்கமான மற்றும் உறுதியான உறவில் நுழைகின்ற நடைமுறையைக் குறிப்பிடுவதற்குச் சமூக உளவியலார் இச்சொல்லைப் பயன்படுத்துகின்றனர்.

Administrative Region or Area
அரசாண்மைப் பகுதிப்பரப்பு

அரசுக்குரிய எல்லைகளால் வரையறுக்கப்பட்ட நகரம், பெரும் நகரம் அல்லது மாநிலம் போன்ற அரசாண்மையைச் சார்ந்த பகுதி. அறிஞர்கள் இயற்கையான பகுதிக்கு மாறான பகுதியைக் குறிப்பிட இச்சொல்லைப் பயன்படுத்துகின்றனர்.

Adolescence
வளரிளமை

உடல்ரீதியில் பருவநிறை வுக்குக் கடந்துசெல்லும் ஒரு காலகட்டம். இது பொதுவாக 12 அல்லது 13ஆவது வயதில் ஆரம்பிக்கிறது. இப்பருவத்தில் ஏற்படுகின்ற சமூக மற்றும் உளவியல் தாக்கமானது பண்பாட்டு மற்றும் முன்மாதிரி களுக்கு ஒத்து வேறுபடுகிறது.

Affectivity
உணர்ச்சித் தன்மை

மனக்கிளர்ச்சியை அனுபவித்து-

வெளிப்படுத்தும் தன்மை. குறிப்பாக உடனடித் தேவையின் அல்லது மனத்தூண்டுதலின் திருப்தியோடு தொடர்புபடுத்தி பயன்படுத்தப்படுகிறது.

Affinal relation
மணஉறவு

ஆணும் பெண்ணும் மண வாழ்க்கையை ஏற்படுத்திக் கொள்ளும் பொழுது கணவனுக்கு மனைவி வழி உறவினர்களோடு பிணைப்பு ஏற்படுகிறது. மனைவிக்குக் கணவன் வழி உறவினர்களோடு பிணைப்பு ஏற்படுகிறது. இவ்வாறு திருமண நிகழ்வால் ஏற்படும் உறவு மண உறவு ஆகும். தனிக் குடும்பத்தில் கணவன் - மனைவி உறவு மணவிலக்கால் துண்டிக் கப்படுமானால் இருவருக்கும் மணஉறவு அறுபட்டுப்போகும். உறவினர்களைப் பாகுபடுத் துவதில் மணவழி என்பதும் முக்கிய காரணியாக உள்ளது.

Affinolocal Family
மணவழி உறவினரகக் குடும்பம்

திருமணத்திற்குப்பின் மணமக்கள் உறைவிடம் ஏற்படுத்திக்கொள்ள மணவழி உறவினர் யாராவது இடம் கொடுத்தால் அதனை மணவழி உறவினரகக் குடும்பம் என்பர்.

Affirmative Action
உடன்பாட்டு வினை

சமுதாயத்தில் நலிவடைந்த வர்களை அல்லது பெண்களைத் தேர்வுசெய்து பயிற்சியளித்து, பொறுப்பினையளித்து ஒரு குறிப்பிட்ட நிலையை அடையும் வரை அவர்களை முன்னேற்றப் பாதையில் நடத்தும் செயல்.

Agamy
முறையின்மை

வரையறைக்குட்பட்ட விதி முறைக்குப்புறம்பானது முறை யின்மை. குழு அங்கத் தினர்கள் குழுவுக்குள்ளேயே திருமணம் செய்துகொள்ளலாமா அல்லது அத்தகைய திருமணம் தடை செய்யப்பட்டுள்ளதா என்ற வரையறை இன்மை. குழுவினர் அக மணமுறையோ அல்லது புற மணமுறையோ இல்லாது நடு நிலையாகக் காணப்படுவார்கள்.

Age-area hypothesis
வயதுநிலைக் கருதுகோள்

பண்பாட்டுப் பரவலில், பரவிய கூறுகளின் காலத்தை மதிப்பிடக் கையாளப்படும் ஓர் உத்தி வயதுநிலைக் கருதுகோளாகும். பண்பாட்டுப் பரவலில் எக்கூறுகள் முதலில் பரவின எவை பின்னர் பரவின என்பதைக் கணிப்பதற்கு இது பயன்படுத்தப்படும். இதன்படி நெடுங்காலத்திற்கு முன் தோன்றிய கூறுகள் மிகுந்த அளவில் பரவியும், அவை தோன்றிய இடத்தில் பெருமளவில் பரவியும் இருக்கும். சான்றாக ஒரு பகுதியில் மூன்றுவகையான மண்பாண்டங்கள் பரவியிருக்கு மானால் எந்தவகை மிகுதியாகப் பரவியுள்ளது என்பதை மதிப்பிட்டால் அது மற்ற இரண்டு வகைகளுக்கு முன்னால்

தோன்றியது என்று மதிப்பிடலாம்.

Age Grade
வயது தரநிலை

சமுதாயம் சமூகவியல் அடிப்படையிலான பல வயது பிரிவுகளாகப் பிரிக்கப்படுவதைக் குறிக்கிறது. குறிப்பிட்ட வயதுக்குழுக்கள் அமைப்பு ரீதியிலான வயது தரநிலைகள் வழியாகக் கடந்து செல்கின்றன. சமுதாயத்தில் வயது தரநிலைப் பிரிவுகளின் வெவ்வேறு அந்தஸ்த்துகளோடு பல உரிமைகள், கடமைகள், உதவிகள் மற்றும் சிறப்புரிமைகள் இணைந்துள்ளன.

Age-sets
வயதுக்குழுக்கள்

ஒத்த வயதுடையோர் திரள்களின் அமைப்பு. இவர்கள் அன்றாட வாழ்வில் ஒருமைப்பாட்டுடனும் கட்டுப்பாட்டுடனும் செயல்படுவர். இக்குழுக்களுக்கென்று தனிப்பட்ட சொத்தோ வழிபாட்டு மரபோ இல்லை. பழங்குடி சமுதாயங்களில் வயது அடிப்படையில் செயல்படும் குழுக்கள் பெரும்பங்கு வக்கின்றன.

Age-sex Specific Death Rate
வயது, பால் குறிப்பான இறப்புவீதம்

ஏதாவது ஒரு குறிப்பிட்ட வயது-பால் பிரிவில் 1000 நபர்களுக்கு எத்தனை இறப்புகள் நிகழ்ந்துள்ளன என்று வரையறுக்கப்படுவது. குறிப்பிட்ட மக்கள் தொகையில் ஐம்பது வயதான 1000 ஆண்களில் எத்தனைபேர் இறந்துள்ளார்கள் என்ற வரையறையைச் சான்றாகக் கூறலாம்.

Aggregate
ஒரினத்திரள்

தங்களிடையே எவ்விதத் தொடர்பும் செயற்பாடும் இல்லாத ஒரு நிகழ்வுடைய கூட்டம். சான்றாக இரயிலுக்காகக் காத்திருக்கும் மக்கள் கூட்டம் அல்லது கடற்கரையில் காற்றுவாங்க வந்திருக்கும் மக்கள்கூட்டம் ஆகியவற்றைக் கூறலாம்.

Agnation
ஆண்வழி உறவு

கால்வழி மற்றும் உறவுமுறையானது முற்றிலுமாக ஆண்வழியில் கணக்கிடுவது ஆண்வழி உறவாகும். ஒரின உறவு அல்லது ஒரு குலத்தவர் என்றும் குறிப்பிடுவர். தமிழக மக்களிடையே காணப்படும் கால்வழி கணக்கிடலை இதற்குச் சான்றாகக் கூறலாம்.

Agnosticism
உலோகாயதவாதம்

கடவுள் இருக்கிறார் என்பதை அறிவியல்ரீதியல் நிருபிக்க இயலாது அல்லது கடவுள் உண்டு என்பதைக் கண்டறிய முடியாது என்னும் கொள்கை.

Agrarian Movement
விவசாய இயக்கம்

விவசாயப் பொருளாதாரத்தை அங்கீகரிப்பது மட்டுமல்லாமல் நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரத்தில் விவசாயத்திற்கு

அளிக்கப்படும் முக்கியத்துவத்தை மாற்றி அமைக்கவேண்டும் என்பதை வலியுறுத்தும் இயக்கம். ஒரு நாட்டின் விவசாயிகள் இந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். அவர்களின் கல்வி, பொருளாதாரம், அரசியல் சமூக அந்தஸ்து ஆகியவற்றை உயர்த்தவேண்டும் என்ற கருத்தையும் வலியுறுத்துவார்கள்.

Agrarian Socialism
விவசாய பொதுமைக் கோட்பாடு

நிலம் மற்றும் விவசாயத்தில் பொதுவுரிமையைச் சரியென நிறுவும் அரசியல் மற்றும் பொருளாதாரக் கருத்துரு. பொது நலனை முன்னிட்டுத் தனிப்பட்டவர்களின் உரிமையைக் கீழ்ப் படுத்த வேண்டுமென்னும் கோட்பாடு.

Ahimsa
அகிம்சை

துன்பம் செய்யாமல், வன்முறையில் ஈடுபடாமல் பொதுநலனுக்குத் தடையாக் காணப்படும் அதிகாரத்தை எதிர்த்தல். ஜைனமதத்தில் அகிம்சை என்பது எல்லா உயிர்களும் புனிதமானது என்ற கருத்தை வலியுத்துகிறது.

Alien
அயல்வேற்றுவர்தனிமைப்பாட்டு இனம்

பிற இடங்களிலிருந்து வந்த உயிரினம். ஒருவர் தான் வாழும் நாடடில் பிறக்காமல் அந்நாட்டில் அவருக்குக் குடியுரிமையும் இல்லாதிருந்தால் அவர் அயலாராகக் கருதப்படுவார்.

Alienated Mass view
அயன்மை மக்கள் திரள்நோக்கு

மக்கள் திரளின் அயன்மை நோக்கு. மக்கள் அதிருப்தியின் காரணமாகவே ஆர்ப்பாட்டம் போன்றவைகளுக்காக ஒன்று சேருகிறார்கள் என்ற கருத்தை மக்கள் திரளின் அயன்மை நோக்கு எனக் குறிப்பிடுவர்.

Alienation
அயன்மைத் தனிமைப்பாடு

ஒருவர் தன்னுடைய சமுதாயத்தினரிடமிருந்து விலகித் தனிமைப் படும்படியான உளநிலை உடையவராக இருத்தலே அயன்மைத் தனிமைப்பாடாகும். இவ்வாறு மாறுபடும் மனிதர் தனித்திருப்பார், மன உறுதியில்லாதவராகவும், கோட்பாடுகளைக் கடைப்பிடிக்காதவராகவும் இருப்பார். சில அமைப்புகள் அல்லது குழுக்களில் மட்டும் தொடர்பு கொண்டிருப்பார்.

Alimony
வாழ்வுப்படி / ஜீவனாம்சம்

பிரிந்துபோகின்ற அல்லது பிரிக்கப்பட்டுவிட்ட மனைவியின் அல்லது கணவனின் வாழ்வுக்கு நீதிமன்றத்தால் ஆணையிடப்பட்டு கணவன் அல்லது மனைவியால் அளிக்கப்படும் தொகை.

Alliance Theory
மணஉறவுக் கோட்பாடு

சமுதாயத்தில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் தனிநிலையில்

நின்று செயல்பட முடியாது. பிற குடும்பங்களோடு உறவுகொண்டு செயல்படும் நோக்கத்தில்தான் ஆதிமனிதன் தன் குடும்பத்திற்குள் மண உறவு ஏற்படுத்திக் கொள்ளாமல் வேற்றுக் குடும்பங்களோடு ஏற்படுத்திக் கொண்டான். அதனால் குடும்பங் களுக்கிடையில் பிணைப்பும் சமுதாய அமைப்பிற்குள் ஒருங்கிணைப்பும் ஏற்பட்டன. இதுவே மணஉறவுக் கோட்பாடு ஆகும்.

Allopatric Group
முதல் குடிக்குழு

வேறு எந்த பண்பாட்டுக் குழுவோடும் பங்கிட்டுக் கொள்ளாது தனக்கென்றே உரிய எல்லைப்பரப்பை உடைய பண்பாட்டுக் குழு. ஒரு குறிப் பிட்ட பகுதியில் தோன்றி அங்கு வாழும் குழு அல்லது வெவ்வேறு நிலப்பகுதிகளில் புதிதாகக் குடியேறும் குழு.

Alternative Hypothesis
மாற்று நிலைக் கருதுகோள்

செல்லுபடியாகாத அல்லது பயனில் கருதுகோள் மறுக்கப் படும்போது ஏற்றுக்கொள்ளப் படுகின்ற கருதுகோளைக் குறிக்கிறது. மாற்று நிலைக் கருதுகோளானது பயனில் கருதுகோளிலிருந்து வேறுபட்ட தாகவும் ஆராயப்படுகின்ற மாறிகளிடையே தொடர்புடைய தாகவும் காணப்படும்.

Altruism
பொதுநலப் பண்பு

பிறர்க்கென வாழுந் தகைமை. இயல்பாக தான் என்ற எண்ணத்துக்கும், தனியுரிமைக் கோட்பாட்டிற்கும் மாறானது. பொதுநலப் பண்பானது பிறரின் தேவைக்கும் ஆர்வத்துக்கும் மதிப்பளிக்கும் தன்னலமற்ற கொள்கை ஆகும்.

Amalgamation
ஒன்றாக்கம்

மாறுபட்ட உடல் தோற்றத்தைக் கொண்ட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட இன மக்கள் கலப்புத் திருமணம் மூலம் உடல்வடிவ வேறுபாடுகளை இழந்து நாளடைவில் ஓர் இனமாக மாறுதல். சான்றாக ஆங்கிலோ இந்தியர்களைக் கூறலாம். அவர்கள் நாளடைவில் திருமணமுறையால் இந்திய இனத்தோடு கலந்து இப்பொழுது பெரும்பாலோர் இந்தியராகவே உள்ளனர்.

Ambience
சூழ்விளைவு

நியமனம் செய்யப்பட்ட சூழலில் நியமனம் செய்யப்பட்ட நபர்களோடு கொடுக்கல் வாங்கல் செய்கின்ற நபர்களின் ஒழுங்கமைதியற்ற வலை யமைவைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

Ambilineal
ஈரியல் மரபு

ஒருவழி, இருவழி மரபு

வகைகளுக்கடுத்து ஈரியல் மரபு வகையும் குறைந்த எண்ணிக்கையுடைய சமுதாயங்களில் காணப்படுகிறது. இவ்வகைச் சமுதாயங்களில் மக்கள் குடிவழியைத் தொடர்புபடுத்தும் பொழுது சிலர் தந்தை வழியையும் சிலர் தாய் வழியையும் பின்பற்றுவர். இராபின்ஃபாக்ஸ், ஈரியல் மரபு முறையை 'வரையறுக்கப்படா ஈரியல் மரபு' (Unrestricted Cognatic Descent). 'வரையறுக்கப்பட்ட ஈரியல் மரபு' (Restricted Cognatic Descent), 'நலப்போக்குடைய வரையறுக்கப்பட்ட ஈரியல் மரபு' (Pragmatically Restricted Cognatic Descent) என மூன்றுவகையாகப் பிரித்துக் காட்டுவார்.

Ambilocal
ஈரிட உறைவிடம்

கணவனின் அல்லது மனைவியின் பெற்றோரோடு வாழ்தல் ஈரிட உறைவிடமாகும். இம்முறையில் திருமணத்துக்குப் பின் மணமக்கள் தங்கள் விருப்பப்படி கணவனின் பெற்றொருடனோ அல்லது மனைவியின் பொற்றோருடனோ தங்கள் குடும்பத்தை அமைத்துக் கொள்ளலாம்.

Ambivalence
ஓர் மனமற்ற போக்கு

ஒருவர் தன்னுடைய குறிப்பிட்ட செயல் எதிர்மறையான விளைவினை ஏற்படுத்தும் என்பதை உணர்வதைத் தொடர்ந்து அவருள் ஏற்படுகின்ற நேர்மாறான உணர்ச்சிவேகம் அல்லது தூண்டுதல். ஓர் மனமற்ற போக்கு குறிப்பிட்ட ஒரு பொருள், தனிநபர் அல்லது செயலின்பால் கவர்ச்சி மற்றும் வெறுப்பு உணர்வு ஏற்படுவதோடு தொடர்புடையதாக உள்ளது.

Amitate
அத்தையுறவு

1) ஒரு குழந்தைக்கும் அதன் தகப்பன்வழி மாமிக்கும் (தகப்பனின் சகோதரி) இடையே காணப்படுகின்ற சிறப்புநிலை உறவு.

2) ஒருபெண்ணுக்கும் அவளுடன் பிறந்தவர்களின் பிள்ளைகளுக்குமிடையே காணப்படும் சிறப்புநிலை உறவு.

Amitalocal family
அத்தையகக் குடும்பம்

திருமணத்திற்குப்பின் மணமக்கள் உறைவிடம் ஏற்படுத்திக்கொள்ளும் நிலையில் தந்தையின் உடன்பிறந்தாள் அல்லது கீழிறங்கு தலைமுறையின் தந்தைவழிப் பெண் உறவினர் இடம் கொடுத்தால் அது அத்தையகக் குடும்பம்.

Amulet
தாயத்து

இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தி வாய்ந்ததாக நம்பப்படும் எளிதில் எடுத்துச்செல்லக்கூடிய ஒரு சிறிய பொருள். தீவினைகளிலிருந்து காக்கப்படுவதற்காக இது அணியப்படுகிறது.

Anatomy
உடற்கூற்றியல்

மனித உடற்கூறுகளை ஆராயும் துறை. உடல்சார் மானிடவியலார் இத்துறைக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பார்கள்.

Ancestor Worship
முன்னோர் வழிபாடு

இறந்தோரின் ஆற்றல் வாழ்வோரின் நலனில் பெரும்பங்கு வகிக்கிறது என்னும் கருத்தாக்கத்தால் எழுவது முன்னோர் வழிபாடு. ஒரு பிறப்பில் ஒருவர் பெறும் ஆற்றல் அவர் இறந்தபின்னும் அவருடைய இனத்தவருடன் தொடர்பு பெறுகின்றது என்பது போன்ற நம்பிக்கைகள் முன்னோர் வழிபாட்டிற்கு அடித்தளமாக அமைகின்றன. முன்னோர்களைப் பற்றிய எண்ணங்கள் தொன்மைக் குடியினரிடையே பலவாறாக உள்ளன. ஆவியின் அச்சமும் முன்னோர் வழிபாட்டுக்கு முக்கியக் காரணமாக உள்ளது.

Animatism
உயிரியம்

உயிர்ப்புச் சக்தியின் அடிப்படையில் நிலவும் நம்பிக்கையே உயிரியம். இது தொன்மைச் சமயத்தின் தோற்றத்தை விளக்க முற்பட்ட இரண்டாவது மானிடவியல் கோட்பாடாகும். இன்று எல்லா மதத்தினரிடையேயும் உயிரிய நம்பிக்கை அதிஷ்டம் என்னும் பெயரில் வேரூன்றியுள்ளது.

Animism
ஆவியுலகக் கோட்பாடு

தொன்மைச் சமயம் (Primitive Religion) தோன்றிய முறையை விளக்க முற்பட்ட முதல் மானிடவியல் கோட்பாடு 'ஆவியுலகக் கோட்பாடு' ஆகும். ஆவியுலகக் கோட்பாட்டின் மையக்கருத்தை டைலர் குறிப்பிடும்போது 'சமயத்திதன் தொடக்கம் ஆவிகளின்பால் ஏற்பட்ட நம்பிக்கைகளிலிருந்து தோன்றியது' என்பார். அதாவது இன்று உலகிலுள்ள அனைத்துச் சமயக் கோட்பாடுகளும் ஆவியுலகக் கோட்பாடு என்ற மூலத்திலிருந்து வளர்ச்சி பெற்றதாகக் கருதப்படுகின்றன. எங்கு உயிர், ஆவி, பிசாசு, கடவுள் முதலானவற்றின் நம்பிக்கை இருக்கிறதோ அங்கு ஆவியுலகக் கோட்பாட்டின் நம்பிக்கை இருக்கும்.

Animistic Theory of Religion
ஆன்மவாத மதக் கோட்பாடு

எழுத்தறிவுக்கு முற்பட்ட மனிதர்கள் எல்லாவற்றையும் உருவகம் செய்துள்ளனர். எனவே ஆவிகள் சக்திவாய்ந்த கடவுளின் நிலைக்குஉயர்த்தப்பட்டன. 'மதம் ஒரு மனித நிறுவனம்' என்னும் நிலை ஏற்பட்டது என்ற கருத்தை உடையது ஆன்மவாத மதக் கோட்பாடு.

Annihilation
இன அழிப்பு

ஒரு இனம் மற்றொரு இனத்தைப் படுகொலை செய்து

அந்த இனத்தையே அழித்து விடுவது இன அழப்பு ஆகும். இரண்டாம் உலகப்போரில் நாஜி மக்கள் யூத மக்களைக்கொன்று யூத இனத்தையே அழிக்க முயன்றது இன அழிப்பு முயற்சியாகும்.

Anthropologist
மானிடவியலார்

எவனொருவன் அவனைப் பற்றி விவாதிக்கிறானோ அவனே மானிடவியலார் என்னும் கருத்தில் இச்சொல்லை முதன் முதலில் அரிஸ்டாட்டடில் பயன் படுத்தினார்.

Anthropology
மானிடவியல்

மனிதகுலத்தின் தோற்றம் முதல் தற்கால நிலை வரையிலான ஒப்பாய்வுக்கென்று அர்ப்பணிக்கப்பட்ட ஒரு விரிவான அறிவியல்சார் துறை. இச்சொல் 'Anthropos', 'logos' ஆகிய கிரேக்கச் சொற்களின் மூலங்களைப் பெற்றது. கிரேக்கத்தில் இச்சொற்கள் முறையே 'மனிதன்' 'அறிவியல்' என்ற பொருள்களைச் சுட்டுகின்றன.

Anthropocentric
மானிடமையம்

மனிதனை மையமாகக் கொண்ட ஆய்வு. மனித இனத்தை இயற்கையின் இறுதி இலக்காகக் கொண்டு இயற்கை நிகழ்ச்சிகளை மதிப்பிடுவது. மனித உள்ளத்தினுடன் ஒப்புமை யுடையவையாகக் கொண்டு உயிரினங்களை ஆராய்வது.

Anthropogeny
மானிட முதலாய்வு

மனித இனத் தோற்றம் மற்றும் வரலாறு பற்றிய ஆய்வு.

Anthropography
மானிடவினப் பரப்பாய்வு

நிலஇயல் அடிப்படையான மக்கள் இனங்களின் பரப்புப் பற்றிய ஆய்வு மானிடவினப் பரப்பாய்வாகும்.

Anthropolatry
மானிட வழிபாடு

மனிதரைக் கடவுளாக வழிபடுதல் மானிட வழிபாடாகும். வழிபடப்படும் மனிதர்மேல் அளவுகடந்த மதிப்பும் மரியாதையும் கொண்டிருப்பதாலும், ஆவியின் அச்சத்தாலும் மானிட வழிபாடு ஏற்படுகிறது.

Anthropometry
மானிட உடலளவையியல்

மக்களின் பல்வேறுவகையான உடல்தோற்றம் பற்றியும் அதன் தன்மைகள் பற்றியும் ஆராய்வது மானிட உடலளவையியலாகும். இப்பிரிவில் மனித வேறுபாடுகளை அறிய உடல் அளவுகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. உடலளவையியல் புறத்தோற்ற உடலளவையியல், மண்டையோட் டளவையியல், எலும்பளவையியல் என முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றது.

Anthropomorphise
மானிடமாக்கம்

இறைவனுக்கோ தெய்வங்களுக்கோ பொருள்களுக்கோ மனித வடிவு அல்லது மனிதப்பண்பினை ஏற்படுத்துதல்.

Anthropomorphism
மானிடவியல்பு சார்த்தும் கொள்கை

மனிதவடிவம் கற்பித்தல் அல்லது மனிதப் பண்பேற்றுதல். இறைவனுக்கோ தெய்வங்களுக்கோ பொருள்களுக்கோ மனிதவுரு அல்லது மனிதப் பண்பைச் சார்த்தும் கொள்கை. அதாவது மனிதன் அல்லாதவற்றிற்கு மனிதத்தன் மையை உடைமையாக்கிக் கூறுதல்.

Anticipatory Socialization
முன்னறி சமூகவயமாக்கம்

ஒருவர் தான் புதிதாகச் சேரவிருக்கும் குழுவின் முக்கிய பண்புகள் முன்னரே தெரிந்து கொள்ளுதல் முன்னறி சமூகவய மாக்கமாகும். முன்னறிதல் வாழ்வில் முன்னேற்றத்தை அடைய பெரிதும் உதவும். மேலும் புதிய சமுதாயத்தினரோடு சேர்ந்து வாழ்வது எளிதாக இருக்கும். முன்னறிசமூகவயமாக்கம் ஒருவரின் வாழ்நாள் முழுவதும் நடந்துகொண்டே இருக்கும். ஒரு குழந்தை பெரியவர்களின் நடவடிக்கைகளைக்கற்றுக்கொள் வதும், ஒரு சிறுமி ஒரு மனைவி யின் பொறுப்பைத் தெரிந்து கொள்வதும் முன்னறி சமூக வயமாக்கத்துக்கு உதார ணங்களாகும்.

Antiquarian
பழம்பொருள் ஆய்வாளர்

மனிதனின் தோற்றம், தன்மை, அவர்களுக்குள் உள்ள வேறுபாடுகள் ஆகியவற்றைக் குறித்து ஆராய்பவர்கள். வேறுபட்ட மக்களின் வழக்கங்களை அறிவதில் பழம்பொருள் ஆய்வாளர்கள் மிகுந்த ஆர்வம் காட்டியுள்ளனர். மனிதர்களைப் பற்றிய இவர்களின் ஊகங்களும் ஆர்வமும் நீண்ட வரலாற்றை உடையன.

Antisocial Behaviour
சமூக எதிர்மறை நடக்கை

ஒரு குழுவின் நலனுக்கு எதிரானது என அக்குழு மக்களால் நம்பப்படுகின்ற நடத்தை. அத்தகைய நடத்தையானது குழு அங்கத்தினர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுமிகமுக்கியமானதாகக் கருதப்படுகின்ற சமூக விதிமுறைகள் மற்றும் மதிப்பீடுகளைப் புறக் கணிப்பதைப் பிரதிபலிக்கும்.

Apartheid
இனவேறுபாட்டுணர்வு

குறிப்பிட்ட இன மக்களை ஒதுக்கப்பட்ட தனிக் குடியிருப்பில் வாழச்செய்யும் முறை. தென்னாப் பிரிக்க நாட்டில் நீக்ரோ மக்களும் ஏனைய கருப்பர்களும் ஒதுக்கப் பட்ட தனிக் குடியிருப்பில் வாழச் செய்திருப்பதை இன வேறுபாட்டுணர்வுக்குச் சான்றாகக் கூறலாம்.

Aphasia
பேச்சிழப்பு

பொதுவாக மூளை பாதிப்பினால்

ஏற்படுகின்ற சீர்குலைவு. இது ஒருவித இழப்பை ஏற்படுத்தி மொழியைப் பயன்படுத்தும் அல்லது புரிந்துகொள்ளும் திறமையை சேதப்படுத்துவதில் தொடர்புடையதாக உள்ளது. இதனால் பேச்சிழப்பும் ஏற்படுகிறது.

Applied Sociology
பயன்பாட்டுச் சமூகவியல்

சமூகவியல் கல்வி அல்லது அறிவு சமூகச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு அல்லது குறைப்பதற்குப் பயன்படும்போது அது பயன்பாட்டுச் சமூகவியல் எனப்படும்.

Aptitude
இயல்திறம்

குறிப்பிட்ட அறிவு அல்லது திறனைக் கற்றுக்கொள்வதற்கான ஒருவரின் இயல்திறம் அல்லது செயல்படுந்திறன். நாட்டம் என்ற சொல் திறமை என்ற சொல்லி லிருந்து வேறுபட்டது. நாட்டம் என்பது சில வரம்புகளுக்குள் குறிப்பிட்ட திறமை அல்லது அறிவைக் குறிப்பிடுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.

Aptitude Test
இயல் சோதனை

குறிப்பிட்ட ஒரு பிரிவில் ஒருவருக்குப் பயிற்சி அளித்தால் அவருடைய வெற்றியின் நம்பக்கூடிய தன்மையை முன்னறி வதற்கென்றே வடிவமைக்கப்பட்டுத் தரப்படுத்தப்பட்ட ஒரு சோதனை.

Archaeology
தொல்லியல்

முன்வரலாற்றுக் காலத்தில் வாழ்ந்த மக்களின் வரலாற்றையும், வாழ்க்கை முறைகளையும், அவர்களின் பண்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்களையும், வளர்ச்சியையும் விளக்கும் அறிவியலே தொல்லியல். மனித சமுதாயத்தின் வரலாறு எழுத்து வடிவத்தில் ஏறுவதற்கு முன்னர் வாழ்ந்த மக்களின் வாழ்வியலைப்பற்றியது தொல்லியல்.

Aristocracy
உயர்குடியாட்சி

1. பரம்பரையான மேல்குடியாட்சி

2. மேல்குடி மக்கள் ஆட்சி அடிப்படையில் அமைக்கப்பட்ட அரசு, வழக்கமாக இது பரம்பரையாகவோ அல்லது உயர்ந்தோர் குழுவால் அமைக்கப் பட்டதாகவோ இருக்கும்.

Arranged Marriage
ஒழுங்குபண்ணப்பட்ட மணம்

திருமணத்தில் இணையும் நபர்கள் அவர்களால் அல்லாமல் பிறரால் இணைக்கப்படுதல், ஒழுங்குபண்ணப்பட்ட மணமுறையில் பெற்றோர் அல்லது குடும்ப உறுப்பினர்கள் தங்கள் பிள்ளை களுக்கு மணத்துணையைத் தேர்ந் தெடுப்பதில் மிக முக்கிய பங்காற்றுகின்றனர்.

Art
கலைத்திறன்

குறிப்பிட்ட வேலைச்சுமையை நிறைவேற்றும் திறம். இத்திறன் அறிவு, அனுபவம், பலதரப்பட்ட

காரணக்கூறுகளின் நுட்பமான செயல்விளைவுகளைப் புரிந்து கொள்ளுதல் ஆகியவை இணைவதன் விளைவாக ஏற்படுகிறது.

Aryan-Semetic-Uralian System
ஆரிய செமிட்டிக்-உரேலிய வகை

மார்கனின் உறவுமுறை வகைப்பாட்டின் மூன்றாவது நிலை 'ஆரிய செமிட்டிக் -உரேலிய வகை' ஆகும். இக்கால மானிடவியலாரின் உறவுமுறை வகைப்பாட்டின்படி ஆரிய-செமிட்டிக் உரேலிய வகையானது எஸ்கிமோ முறைக்கு (Eskimo System) இணையானது.

Asceticism
கடும்நோன்பு/தன்னொறுப்பு

ஆன்மீகத் தன்மையின் மேம்பாட்டுக்காகப் புலனுணர்வை அடிப்படையாகக் கொண்ட இன்பங்களை மறுக்கின்ற ஒரு போதனை அல்லது பழக்கம். இக் கருத்து மதங்களின் மிகமுக்கியமான பிரிவுகளோடு இணைந்துள்ளது. எம்.வெப்பர் (M.Webber) என்பவரின் கருத்துப்படி கடும்நோன்பு மறுப்புரையானது முதலாளித்துவம் தொழில் கட்டுப்பாடு மற்றும் முதலாளித்துவ அமைப்பாண்மைகள் ஆகியவை தோன்றுவதற்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்பட்டது.

Ascribed Role
பாரம்பரியப் பங்கு

ஒருவரின் திறமையையோ தனித் தன்மையையோ கருத்திற்கொள்ளாமல் அவருடைய பிறப்பிலேயே அவர் அடையும் கடமைகள், உரிமைகள் ஆகியன பாரம்பரியப் பங்கு ஆகும். பிறப்பால் ஏற்படும் சாதிநிலை குடும்ப அந்தஸ்து, ஆண் அல்லது பெண் என்ற நிலை போன்றவை சமுதாயத்தில் ஒருவரின் பொறுப்புக்களைப் பெரும்பாலும் நிர்ணயிக்கின்றன. கீழ்ச்சாதியினர் உயர்சாதியினருக்குத் தொண்டாற்றவேண்டிய நிலை ஏற்படுவது இதற்குச் சான்றாகும்.

Ascribed Status
பிறப்புச் சார்புத்தகுதி

ஒருவர் மரபுவழியில் அடையும் சமூக அந்தஸ்து அல்லது தகுதி. ஒருவரின் சாதி மற்றும் குடும்பப் பின்னணி ஆகியவற்றிற்கேற்ப அவருடைய அந்தஸ்து சமுதாயத்தில் நிர்ணயிக்கப்படுகிறது. பிறப்பு சார்புத் தகுதியில் அதிக மாறுதல்கள் ஏற்படுவதில்லை.

Ascription
பிறப்புத்தகுதி உணர்வு

தனிநபர் அந்தஸ்துகளின் சில தன்மைகளைச் சுட்டுவது பிறப்புத் தகுதி உணர்வு ஆகும். சான்றாக ஒருவரின் தொழில் அல்லது வருவாய் அவர் பிறந்தநிலையில் அடைவதைக் குறிப்பிடலாம்.

Assimilation
ஒரினமாதல்

அண்டைய பகுதிகளில் சந்திக்கும் இரு பண்பாடுகளுள் ஒன்று ஆதிக்கம் மிக்கதாகவும் மற்றொன்று ஆதிக்கம் குறைந்த

தாகவும் இருக்குமானால் ஆதிக்கப் பண்பாட்டின் கூறுகளை ஆதிக்கம் குறைந்த பண்பாடு பெற்றுக்கொண்டு மாறிவரும். இவ்வாறு ஆதிக்கம் குறைந்த பண்பாடு ஆதிக்கப் பண்பாட்டின் கூறுகளை முழுமையாக ஏற்றுக்கொண்டு அதன் தனித் தன்மையை இழந்தால் அது ஓரினமாதல் ஆகும். அதாவது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பண்பாடுகள் இரண்டறக் கலந்து ஒன்றாகுதலாகும். சான்றாகச் சப்பானிய சமுதாயத்தில் ஐரோப்பிய மற்றும் ஆசிய நாகரிகம் இரண்டறக் கலந்திருப்பதைக் கூறலாம்.

Association
சங்கம்/தோழமை.

செயலெதிர்ச் செயலுக்கான வழிமுறைகளை உருவாக்கும் தன்மை. புதிய குழுக்கள் உருவாகின்ற செயற்பாங்கு அல்லது குழு ஒட்டிணைவாற்றலை வலுப்படுத்துவது. முறையாக ஒருங்கிணைக்கப்பட்ட பல மக்கள் ஒன்றாக இணைந்து சில குறிக்கோள்களை அடைய நாடுவது.

Atheism
நாத்திகம்

கடவுள் இல்லை என்ற கொள்கை. இக்கொள்கையை உடையவர் நாத்திகர்.

Atomism
அணுமைக்கோட்பாடு

அணுவுக்கு ஒப்பான செயலெதிர் செயல்களை உடைய தனிநபர் ஒருமங்களால் உருவாக்கப்பட்ட உட்பொருட்களாகச் சமுதாயங்களை நோக்கலாம் என்ற கருத்து. ஒட்டுமொத்த சமூக அமைப்பை ஆராயாமல் தனிநபர்கள் மற்றும் அவர்களின் செயல்பாடுகளின் பொருள்களை ஆராய்வதன் மூலமே சமூகவியல் முன் செல்ல இயலும் என்று தீவிர அணுவாதக் கோட்பாடுகள் வாதிடுகின்றன.

Atomization
அணுவாக்குதல்

குழு இணைப்புகளை உடைத்தலே அணுவாக்குதல் ஆகும். குறிப்பாகக் குடும்பத்திற்குள், அக்கம்பக்கத்தாருக்குள் அல்லது முதல் நிலைக் குழுக்களுக்குள் இணைப்புகள் உடையும்போது சார்பற்ற தனி நபர்கள் உருவாகின்றனர். அவர்களின் சமூக உறவுகள் பெரும்பாலும் அல்லது முற்றிலும் இரண்டாவது நிலையாகவும், ஆளைக் குறிக்காத பண்பு குறித்ததாகவும் காணப்படும்.

Attitude
மனப்பான்மை

பொதுவாக ஒரு தனிநபர் அல்லது ஒரு குழுவின் நடத்தையால் சான்றளிக்கப்பட்ட ஒரு கற்றறிந்த முற்சார்பினைக் குறிக்கிறது. இது ஒரு கருத்துநோக்கம் அல்லது கருத்துநோக்கப் பிரிவினைச் சீரான, தனிச்சிறப்பான விதத்தில் சீர்தூக்குவதற்குப் பயன்படுகிறது.

Attitude Scale
மனப்பான்மை அளவை

மனப்பான்மை அளவையானது தரப்படுத்தப்பட்ட விவர வாசக அளவைகளை உடையதாகும். இதன்மூலம் மக்கள் ஒப்புக்கொள் கிறார்களா,ஒவ்வாதிருக்கிறார்களா என்று கேட்கப்படுவார்கள். இத்தகைய அளவையின் போது மனப்பான்மையானது பல்வேறு கூறுகளை உடையது என்பதைக் கருத்தில் கொண்டு அளவிடப்படும்.

Attribute
இயற்பண்பு

பண்புவகை சார்ந்த மாறிகளின் வகையினத்தைக் குறிக்கிறது. இதன்படி கிறித்தவர், யூதர், முகமதியர், பௌத்தர் மற்றும் இந்து ஆகியவை மதம் என்ற மாறுபடும் உருவின் இயற்பண்பு களாகின்றன. மேலும், ஆண், பெண் என்பவை பால் என்ற மாறியின் இயற்பண்புகளாகின்றன.

Authority
ஆணையுரிமை

ஒரு சமுதாயத்தில் அல்லது ஏனைய சமூக அமைப்பில் முறையாக்கப்பட்டதும் அமைப்பு முறைக்குட்படுத்தப்பட்டதுமான அதிகாரம். இத்தகைய அதிகாரம் ஒரு சமூக அந்தஸ்தோடு இணைந்ததாகவும் சமூக அமைப்பின் அனைத்து அங்கத்தினர்களாலும் ஒழுங்கானதும் சரியானதுமென ஏற்றுக்கொள்ளப்பட்டதாயும் காணப்படும். கீழ் பணியாளர்கள் ஆணையுரிமையாளரின் பொதுக் கட்டளைகளுக்கு இணங்கச் செயலாற்றுவார்கள்.

Autistic Thinking
தற்புனைவு எண்ணம்

அக எண்ணஞ்சார்ந்த அல்லது தற்பற்றுடைய எண்ணம். இது கற்பனையல்லாத மெய்ம்மை யிலிருந்து விலகிக் கனவுப் புனைவில்செல்வதன் அடிப்படையில் அமைகிறது.

Autocracy
தன்முனைப்பாட்சி

இறுதியான ஆணையுரிமை அனைத்தும்ஒருவர்மேல் (ஏகாதிபதி) தங்கியிருக்கும் அரசவகை, அதிகாரப் படிநிலையில் மேல்நிலை வகிப்பவரிடமிருந்து கீழ்நிலையில் இருப்பவர்களுக்கு ஆணையுரிமை இறங்கிவரும்.

Autonomy
தன்னுரிமை

தனக்குரிய தகுதிகளைத் தெரிந் தெடுத்தல் மற்றும் குறிப்பிட்ட சூழ்நிலையில் ஒத்துப்போவதற் கான சமூக வற்புறுத்தல்களுக்கு ஈடுகொடுத்தல் ஆகியவற்றில் தனிநபரின் திறமை.

Avoidance
தவிர்ப்பு

பல சமுதாயங்களில் குறிப்பிட்ட உறவுகளில் இருக்கும் தனிநபர்கள் அல்லது குழுக்கள் ஒருவரை ஒருவர் தவிர்க்கின்றனர். நடத்தைமுறை என்ற நிலையில் தவிர்ப்பு என்பது மரியாதையை வெளிப்படுத்துகிறது. தவிர்ப்பில் இருவர் தொடர்புடைய வர்களாகவும் இருவர்மீதும்

அத்தகைய தடை காணப்பட்டாலும் பொதுவாக ஒருவர் குறிப்பாக இன்னொருவரைத் தவிர்க்க வேண்டியுள்ளது. சான்றாக ஒருவர் தன் மனைவியின் தாயைத் தவிர்க்கவேண்டியது கடமையாக இருப்பதைக் கூறலாம். தவிர்ப்பின் அளவு சமுதாயத்துக்குச் சமுதாயம் வேறுபடுவதுண்டு.

Avoidance Relationship
தவிர்ப்பு நிலை உறவு

உறவுமுறை நடத்தையில் தகாப்புணர்ச்சி விலக்கிற்காக ஏற்பட்டது தவிர்ப்புநிலை உறவு. உலகின் அனைத்துச் சமுதாயங்களிலும் மாமியார்-மருமகன் உறவு தவிர்ப்பு நிலை உறவாக உள்ளது. முரண்பாடு ஏற்பட வாய்ப்பு உள்ள உறவு நிலைகளுக்குள் தவிர்ப்பு நிலை என்ற சமுதாயக்கூறு செயல் படுகிறது. தமிழ்ச் சமுதாயத்தில் குறிப்பிட்ட சில உறவினர்களின் பெயரைக் குறிப்பிடுவதிலும் தவிர்ப்பு நிலை உறவு நிலவுகிறது. சான்றாகக் கணவன், மாமனார், மாமியார் ஆகியோரின் பெயரைக் குறிப்பிடுவது தவிர்க்கப்படுகிறது. இவ்வகை தவிர்ப்பு நிலை உறவு மரியாதை குறித்த நிலையில் அமைகிறது.

Avoidance Rituals
தவிர்ப்புச் சடங்குகள்

சமூக உறவின் தூரத்தைத் தக்க வைப்பதற்காகச் செயல்படுகின்ற வரையறைகள் மற்றும் விதிமுறைப் படுத்தப்பட்ட எடுத்துக்காட்டான நடத்தை ஆகியவற்றைக் குறிக்கிறது.

Avuncular Systems
பெற்றோர்தலைமுறை உறவுகள்

பிரித்தல் மற்றும் சேர்த்தல் விதிமுறைகளைப் பேசுநரின் முதல் முன் தலைமுறைக்கு, குறிப்பாக ஒருவரின் தாயின் சகோதரன் மற்றும் தகப்பனின் சகோதரன் ஆகியோரை வகைப் படுத்துவதற்கும் பயன்படுத்தலாம். அவ்வாறு பெற்றோர் தலைமுறையில் உறவினர்களை வகைப்படுத்தும் முறையால் அமையும் உறவுமுறைகளை நான்கு வகைகளாகப் பாகுபடுத்தலாம்.

1) தலைமுறை (Generational System)
2) கிளைவழி உறவைப் பிரித்தல் முறை (Bifurcate Collateral System)
3) நேர்வழி முறை (Lineal System)
4) பிரித்திணைத்தல் முறை (Bifurcate-merging System)

Avunculate
மாமனுறவு

தாய்மாமனுக்கும் அவருடைய சகோதரியின் குழந்தைக்குமிடையிலான உறவு மற்றும் ஒருவரின் தகப்பனின் சகோதரனின் உறவு.

Avunculocal Family
மாமனகக் குடும்பம்

திருமணத்துக்குப்பின் மணமக்கள் தாயின் உடன்பிறந்தான் வீட்டில் அல்லது அவருடைய கீழிறங்கு தலைமுறையின் 'தாய்வழிப்

பெண் உறவினர் வீட்டில் உறைவிடத்தை ஏற்படுத்திக் கொண்டால் அது மாமனகக் குடும்பம் ஆகும்.

Avuncupotestal Family
தாய்மாமன் தலைமைக் குடும்பம் / தாய்மாமனாட்சிக் குடும்பம்

சில சமுதாயங்களில் தாய்மாமன் குடும்பப் பொறுப்புகளைக் கவனிக்கும் முறை உள்ளது. இவ்வகைக் குடும்பங்கள் தாய்மாமன் தலைமைக்குடும்பம் அல்லது தாய்மாமனாட்சிக் குடும்பம் எனப்படும்.

B

Balanced Reciprocity
சமச்சீர் பரிமாற்றம்

சமச்சீர் பரிமாற்றம் நண்பர்களிடையேயும், ஒருவரை ஒருவர் நன்கு புரிந்துகொண்ட இரு வேறு பழங்குடிகளுக்குள்ளும் நிகழ்கிறது. இப்பரிமாற்றத்தில் ஒரு பொருள் கொடுத்தால் அதற்கு ஈடான பொருள் குறிப்பிட்ட காலத்திற்குள் கிடைக்கவேண்டும் என்ற நிலை காணப்படுகிறது. தமிழக ஊரகப் பகுதிகளில் காணப்படும் 'மாத்து ஏர்' என்ற முறை சமச்சீர் பரிமாற்றத்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

Band
குழாம்

ஒன்றுபட்டுழைக்கும் கூட்டம். ஒரு பழங்குடி சமுதாயத்தைவிடச் சிறிய அளவிலான ஆட்சிப்பரப்பு அடிப்படையிலானப்பண்புக்குழுவைக் குறிக்கிறது. இவர்கள் பெரும்பாலும் குடிநிரந்தரமற்ற நாடோடி மக்களாயிருப்பார்கள். குழுவின் பரப்பெல்லை அளவானது மேய்ச்சல் நிலங்கள் மற்றும் உணவுப் பொருட்களின் எளிதில் கிடைக்கும் தன்மையால் உறுதிப்படுத்தப்படுகிறது. இதன் சமூக அமைப்பாண்மையானது எளிமையானதாகவும் சமூகக் கட்டுப்பாடானது முறைசாராத தாகவும் இருக்கும்.

Barbarian
காட்டுமிராண்டி

கொடூரமான அல்லது நாகரீகமில்லாத ஒருவரைக் குறிக்க பேச்சுவழக்காக அல்லது கொச்சையாக இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. கிரேக்க வழக்கில் அயல்நாட்டான் என்பதைக் குறிக்கிறது. முதலாவதாக ரோமன் அல்லாத நபரை விளக்க இச்சொல் பயன்படுத்தப்பட்டது.

Barter
பண்டமாற்று

ஒரு பண்டத்துக்கு நிகரான மற்றொரு பண்டத்தின் அளவுக் கணக்கீடு. அதாவது பணம் கொடுத்து வாங்கி விற்கும் முறை இல்லாமல் நேரடியான பண்டமாற்று மூலம் வியாபாரம் செய்தல். பொதுவாக எளிமையான சமுதாயங்களில் பண்டமாற்றுமுறை மட்டுமே பொருளாதாரக் கொடுக்கல் வாங்கலாக இருக்கும்.

Basic Social Institution
அடிப்படைச் சமூக நிறுவனம்

மனிதனின் அடிப்படைத் தேவையை நிறைவுசெய்கின்ற ஒரு சமூக நிறுவனம். இது சமுதாயம் நிலைத்திருப்பதற்கு இன்றியமையாததாக உள்ளது. வழக்கமாகக் குடும்பம், பொருளாதாரம், மத நிறுவனம் ஆகியவை அடிப்படைச் சமூக நிறுவனங்களாக மதிக்கப் படுகின்றன.

Behaviour
நடக்கை

ஒரு தனிநபரின் எல்லாவிதமான மறுமொழி அல்லது எதிர்செயல். இதில் உடல்சார் அசைவுகள் மற்றும் எதிர்செயல்கள் மட்டுமல்லாமல் வாய்வழி அறிக்கைகள் மற்றும் உணர்ந்தறியும் அனுபவம் என்பனவும் அடங்கும்.

Behaviour Pattern
நடக்கைப் பாங்கு

கொடுக்கப்பட்ட ஒருவித சூழ்நிலையின் மறுமொழியாக தனிநபர் அல்லது குழுக்களின் சீரான மற்றும் பின்பற்றக்கூடிய செயல்கள் நடக்கைப்பாங்காகும்.

Behavioural Science
நடக்கைசார் அறிவியல்

மனிதநடக்கையைப் புரிந்துகொள்வதற்குப் பயன்படுகின்ற விதிமுறைத் திரளின் வளர்ச்சியில் தொடர்பு கொண்டுள்ள ஓர் அறிவியல் துறை அல்லது விதிமுறைப் பயிற்சிப் பிரிவு. பொதுவாகச் சமூகவியல், உளவியல், பண்பாட்டு மானிடவியல், சில பொருளாதாரக் கூறுகள் மற்றும் அரசியல் ஆகியவை நடக்கை சார் அறிவியலில் சேர்க்கப் பட்டுள்ளன.

Behaviourism
நடக்கைக்கொள்கை

அகப்பண்புகளுக்குப் புறவாழ்வுக் கூறுகளே காரணம் என்ற கோட்பாடு. புறப்பண்புக் கூறுகளைக் கொண்டும் ஒழுக்கத்தைக் கொண்டும் ஒருவரைப் பற்றி ஆராயும் முறை.

Bifurcate Collateral System
கிளைவழி பிரித்தல் முறை

பெற்றோரின் தலைமுறையைச் சேர்ந்த ஆண்பால் உறவினர்களான தந்தை, தந்தையின் சகோதரர், தாயின் சகோதரர் ஆகிய மூவரும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு தனித்தனிச் சொல்லால் குறிப்பிடப்படும் உறவுமுறை வகை. அவ்வாறே பெண்பால் உறவினர்களான தாய், தாயின் சகோதரி, தந்தையின் சகோதரி ஆகிய மூவரும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டுத் தனி சொற்களால் குறிப்பிடப்படுகின்றனர். இங்கு முற்றிலுமாகப் பிரித்தல் விதிமுறையே பின்பற்றப்படுகிறது.

Bifurcate Merging System
பிரித்திணைத்தல் முறை

தந்தையின் தலைமுறையில் தந்தை, தந்தையின் சகோதரர், தாயின் சகோதார் ஆகிய மூவருள் பின்னிரு உறவினர்களும் கிளை உறவினர்கள். இக்கிளை உறவினர்களுள் தந்தையின் சகோதரர்

நேர்வழி உறவினரான தந்தையோடு இணைக்கப்படுகிறார். இதனால் இவ்விருவரும் ஒரே சொல்லால் குறிக்கப்படுகின்றனர். தாயின் சகோதரர் தனி சொல்லால் குறிப்பிடப்படுகிறார். இதே போன்று தாயின் தலை முறையில் தாய், தாயின் சகோதரி, தந்தையின் சகோதரி ஆகிய மூவருள் பின்னிரு உறவினர்களும் கிளை உறவினர்கள். ஆனால் இக்கிளை உறவினர்களுள் தாயின் சகோதரி தாயோடு இணைக்கப்பட்டு ஒரே சொல்லால் இருவரும் குறிப்பிடப்படுகின்றனர். தந்தையின் சகோதரி மட்டும் தனிச்சொல்லால் குறிப்பிடப்படுகிறார். இது திராவிட உறவுமுறையில் காணப்படும் ஒரு சிறப்புக்கூறாகும். இம்முறையில் குறிப்பிட்ட சில உறவினர்கள் ஒன்றாக இணைக்கப்படு வதையும் வேறுசிலர் தனியாகப் பிரிக்கப்படுவதையும் காணலாம். பெற்றோரின் உடன்பிறந்தவர்களின் பிள்ளைகளில் தாயின் சகோதரனின் பிள்ளைகள் மற்றும் தகப்பனின் சகோதரியின் பிள்ளைகள் ஆகியோர் ஒன்றாக இணைக்கப் படுவதையும் இவர்களிடமிருந்து தகப்பனின் சகோதரனின் பிள்ளைகள், தாயின் சகோதரியின் பிள்ளைகள் மற்றும் உடன்பிறந்தோர் பிரிக்கப்பட்டு ஒரு தனி உறவுமுறைப் பிரிவாகப் பிரிக்கப்படுவதையும் சான்றாகக் கூறலாம்.

Bifurcation
பிரிவுறுதல்

நேர்வழி உறவினர்களையும் (Lineal Relatives) கிளைவழி உறவினர்களையும் (Collateral Relatives) பிரித்துக்காட்டும் உறவுமுறைச் சொற்கள் உறவு நிலைகளைப் பல கூறுகளாகப் பிரித்துக் காணும் தன்மை. தந்தை நேர்வழி உறவினராகவும், தந்தையின் சகோதரர் கிளைவழி உறவினராகவும் உள்ளனர். இவர்கள் ஒரே சொல்லால் குறிப்பிடப்படுகின்றனர். இதனால் நேர்வழி உறவினரான தந்தையும் கிளைவழி உறவினரான தந்தையின் சகோதரரும் ஒரே வகையினராகச் சேர்க்கப்படுகின்றனர். எனினும் தாயின் சகோதரர் தனிச்சொல்லால் குறிப்பிடப்படுகிறார். இவர் மேற்கூறிய வகையிலிருந்து பிரிக்கப்பட்டுத் தனி வகையினராகக் குறிப்பிடப்படுகிறார்.

Bi- Gamy
இருதார மணம்

முதல் மனைவி அல்லது கணவனிடம் முறையான விவாகரத்து செய்யாமல் இன்னொருவரைத் திருமணம் செய்வது இருதார மணம் ஆகும்.

Bilateral Cross-Cousin Marriage
இருவழி மணவழிச் சகோதர மணம்

தந்தை வழியிலும் தாய் வழியிலும் அவர்களுடன் பிறந்த எதிர்பாலினரின் மக்களை மணந்துகொள்ளும் முறை. இதன் படி ஒருவர் தன் தாயின் சகோதரனின் மகளையும் தகப் பனின் சகோதரியின் மகளையும் மணந்து கொள்ளலாம்.

Bilateral Descent
இருவழி மரபு

இருவழி மரபைச் சேர்ந்தவர்கள் தங்கள் குடிவழியை அல்லது மரபைத் தாய்வழி மூலமும் தந்தைவழி மூலமும் சமமாக இணைத்துக் கூறுபவர்களாக இருப்பர். இருவழி மரபு மிகவும் நவீன தொழிற் சமுதாயங்களிலும் அச்சமுதாய அமைப்பை ஒத்த பிற சமுதாயங்களிலும் காணப்படுகிறது. இருவழியிலும் வரும் உறவினர்கள் முக்கியமானவர்களாகவும் சம மானவர்களாகவும் கருதப்படுவர். உறவுமுறைச் சொற்கள் தாய்வழி உறவினர் யார், தந்தைவழி உறவினர் யார் என வகைப்படுத்திக் குறிப்பிடாமல் இருவழி உறவினர்களையும் சமமாகக் கணக்கிடும் தன்மை உடையதாகக் காணப்படும். தாத்தா, பாட்டி முதலிய சொற்கள் இதற்குச் சான்றுகளாகும்.

Bilateral Reckoning
இருவழி கணக்கிடல்

தாய்வழி, தந்தைவழி உறவினர்களைச் சமமாகப் பிரித்துக் காணும் முறை.

Binominal Nomenclature
இருவழிப் பெயரிடல்

உயிரினங்களை அவற்றின் இனப் (Genus) பெயரோடும் சிறப்புப் (Species) பெயரோடும் குறிப்பிடும் பண்பு.

Biological Determinist View of Culture Change
உயிரியல் நியதிவாத பண்பாட்டு மாற்றக் கொள்கை

வெவ்வேறு இனக்குழுக்களுக்கிடையே காணப்படும் பண்பாட்டு வேறுபாடுகளுக்கு அவற்றின் உள்ளார்ந்த உடற்கூறுகளில் உள்ள வேறுபாடுகளே காரணம் என்ற கருத்து. அத்தகைய இனக்குழுக்களின் பண்பாடுகளில் ஏற்படும் மாறுதல்கள், உடல்சார் பண்புக்கூறுகளில் ஏற்படும் மாறுதல்களைப் பொறுத்தது அல்லது சார்ந்தது.

Biological Sociology
உயிரிய சமூகவியல்

சமுதாய நடைமுறைகளை உயிரியல்நடைமுறை ஒப்புமைகளின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்வதும் விளக்குவதும் உயிரிய சமூகவியலாகும். சான்றாக மரபுரிமையாகப்பெறும் அறிவுத்திறன் பண்பாட்டு உருவாக்கத்திற்கு வலுவாக அமைகிறது.

Biomass
உயிர்சார் திரள் ஆற்றல்

ஓர் இனம் அதன் சுற்றுச்சூழலைப் பயன்படுத்தி, தாங்கள் உயிர் வாழ்வதற்குப் பெற்றுக் கொள்ளும் ஆற்றல் உயிர்சார் திரள் ஆற்றல் ஆகும். மக்கள் உண்ணும் சாதாரண உணவிற்கும், தேர்ந்தெடுத்து உண்ணும் சிறப்புணவிற்கும், பிற ஊட்ட உணவிற்கும் ஒவ்வொரு பண்பாட்டிலும் அதற்கெனப் பல காரணங்கள் உள்ளன.

Black Magic
தீய மந்திரம்

பகைவனைக் கொல்லவும்

இடையூறு செய்யவும் பயன்படுத்தப்படும் மந்திரம் தீயமந்திரம். சூனியம் (Witchcraft), பில்லி சூனியம் (Sorcery), ஏவல் சூனியம் (Voodoo), கெட்ட ஆவி, பேய் போன்றவற்றை ஒரு குறிப்பிட்ட மனிதனுக்கு அல்லது சமுதாயத்துக்கு எதிராக எவுவது இம்மந்திரத்தின் தன்மையாகும்.

Blood Feud
இரத்தச்சண்டை

சில பழங்குடிகளில் இரு வேறுபட்ட கால்வழிக் குழுக்களிடையே சண்டை மூளுவதுண்டு. இதனை இரத்தச்சண்டை எனக் குறிப்பிடுவர். அவ்வாறு சண்டை ஏற்படும்போது வேற்றுக் கால்வழித் தலைவர் நடுவராகச் செயலாற்றிச் சண்டையைத் தீர்த்து வைப்பார். இரத்தச்சண்டையில் ஒரு கால்வழியைச் சேர்ந்தவர் இன்னொரு கால்வழியைச் சேர்ந்தவரைக் கொன்றுவிட்டால் பாதிப்புக்குள்ளானவர்கள் கொன்றவனைக் கொல்வர் அல்லது அவருடைய கால்வழியைச் சேர்ந்த வேறு யாரையாவது கொல்வர்.

Body Intimacy Theory of Family Origin
உடல்நெருக்க குடும்பத் தோற்றக் கோட்பாடு

குழந்தைகள் உயிர் வாழ்வதற்குத் தாயையோ அல்லது வயதுவந்த ஒருவரையோ சார்ந்துவாழவேண்டிய நிலையில் உள்ளனர். இவ்வாறு குழந்தைகள் தாயை அல்லது நெருங்கிய உறவினர்களை நெருங்கி வாழவேண்டியுள்ள நிலையில்தான் மனிதக் குடும்பங்கள் தோன்றின என்ற கருதுகோளே உடல்நெருக்க குடும்பத்தோற்றக் கோட்பாடு ஆகும்.

Bogardus Law of Social Tension
பொகாடஸ்சமூக-மனத்தாக்கலைவு விதி

இரு மக்கட் குழுக்களிடையே சமூக இடைவெளி (Social Distance) அதிகமாக இருக்கும் பொழுது அவ்விரு குழுக்களிடையே வெளிப்படையான உட்புயல் அமைதிநிலை ஏற்படுவதற்கான சாத்தியக்கூறு அதிகமாக உள்ளது என்ற கருத்தை எமொரி எஸ்.பொகாடாஸ் குறிப்பிடுகின்றார். இதுவே பொகாடஸ் சமூக. மனத்தாக்கலைவு விதி ஆகும்.

Brain Washing
மூளைச்சலவை

ஒரு கொள்கை தொடர்பான கருத்துகளையும் செய்திகளையும் ஒருவரிடம்தொடர்ந்து கூறும்பொழுது அவருடைய பழைய நம்பிக்கைகளும் உயர்மதிப்பீடுகளும் மாறிவிடுகின்றன. இதன்விளைவாக முற்றிலும் மாறுபட்ட கொள்கைகளை அவர் பெறுகிறார். பொதுவாகப் பிற மக்களோடு தொடர்பில்லாமல் தனித்து வாழ்பவர்களிடையே இத்தகைய மூளைச்சலவை எளிதில் நடைபெறும்.

Bride-Price
மணப்பெண் பணம்/பரிசம்

மணமகன் வீட்டார் மணமகள் வீட்டாருக்குப் பணமோ பொருளோ

கொடுப்பது மணப்பெண் பணம் ஆகும். இவ்வாறு கொடுப்பதன் மூலம் மணமகளையும் அவளுக்குப் பிறக்கும் குழந்தையையும் மணமகன் வீட்டார் முழுமையாக உரிமை கொண்டாட முடிகிறது. மணப்பெண்ணின் உழைப்பை இழந்த பெண்வீட்டாருக்கு அதை ஈடுகட்டும் தொகையாகவும் இது அமையும்.

Broken Family
சிதைந்த குடும்பம்

கணவன், மனைவி, பிள்ளைகளுடன் அல்லது பிள்ளைகள் இல்லாத ஒரு குடும்பத்தில் பெற்றோரில் ஒருவரின் இறப்பின் மூலமோ மணவிலக்கினாலோ அக்குடும்பத்தில் நிரந்தரமாக இல்லாதிருந்தால் அக்குடும்பம் சிதைந்த குடும்பமாகும்.

Building Density
கட்டிட அடர்த்தி

எல்லை குறிக்கப்பட்ட ஒரு பகுதிக்குள் மொத்த அளவில் கட்டிடங்களால் மூடப்பட்ட பகுதியின் விகிதம்.

Bureaucrat
அதிகார அமைப்பர்

விதிமுறைகளின்படி செயல்படுகின்ற பெரிய அளவிலான நிறுவனத்தின் அதிகார அமைப்பர் அத்தகைய நிறுவனம் அரசு நிறுவனமாகவோ தனியார் நிறுவனமாகவோ இருக்கும்.

Burgeoisie
உடைமைவர்க்கம்

சமுதாயத்திற்கு வருவாய் தரும் நிலம், தொழிற்சாலை போன்றவற்றைச் சொந்தமாக்கிக்கொண்டு தொழிலாளிகளைச் சுரண்டும் முதலாளி இனவர்க்கம் உடைமை வர்க்கம் ஆகும். இது மார்க்சீய சித்தாந்தக் கருத்து.

Buttress Function
ஆறுதல் மதப்பணி

தனி மனிதருக்கு அல்லது சமூகத்திற்குச் சோதனைக் காலங்களில் ஒரு பாதுகாப்புணர்வை அளிப்பது ஆறுதல் மதப்பணி ஆகும். தங்கள் குடும்ப உறுப்பினர் வெகுவாக நோய்வாய்ப்பட்டிருக்கும்போது தெய்வத்திற்கு வேண்டிக்கொண்டு மன வலிமை பெறுவது இதற்குச் சான்றாகும்.

C

Calendrical Rite
ஆண்டுச் சடங்கு

முன்னறியக்கூடிய இயற்கை நிகழ்வுகளுக்கேற்ப ஆண்டுதோறும் ஒழுங்காக நடத்தப்படுகின்ற சடங்கு. காலநிலையின் தோற்றம், சூரியன், சந்திரன் போன்றவற்றின் சிறப்புநிலைகள் - ஆகியவற்றின் அடிப்படையில் நடத்தப்படும் சடங்குகள் இதற்குச் சான்றுகளாகும். இத்தகைய பருவகாலத்துக்குரிய சடங்குகளை ஆண்டுச்சடங்குகள் அல்லாதவற்றிலிருந்து வேறுபடுத்தலாம். தனிப்பட்ட அல்லது குழுவின் உடனடித் தேவைக்காகவும் ஆர்வத்தாலும்

நடத்தப்படும் அவசரகாலச் சடங்கு களிலிருந்து வேறுபடுத்தலாம்.

Cannibalism
தன்னின உண்ணுந் தன்மை

மனிதன் மனிதனையே உண்ணுதலே தன்னின உண்ணுந் தன்மை ஆகும். இது சில ஆப்பிரிக்கப் பழங்குடியினரிடமும் அமெரிக்க இந்தியர்களிடமும் காணப்பட்டது.

Capital
மூலதனம்

உடனடி பயன்பாட்டுக்குத் தேவைப்படாத பொருட்கள் அல்லது செல்வம். ஆனால் இச்செல்வம் வேறு மூலதனத் தையோ, பொருட்களையோ உற்பத்தி செய்வதற்கு அல்லது சேவைப்பணிக்குப் பயன் படுத்தப்படும்.

Capitalism
முதலாளித்துவம்

ஒரு சமுதாயத்தின் உற்பத்திப் பொருட்கள் அனைத்தும் தனிப்பட்ட வர்களின் உடைமையாய் இருந்தால் அது முதலாளித்துவம் ஆகும்.

Case History
வரலாற்று நிகழாய்வு

தனிநபரின் குழந்தைப்பருவத் திலிருந்து தற்காலம் வரையிலான வாழ்க்கை குறித்த தீவிரமான ஆய்வு.

Case Study
நிகழாய்வு

குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சி, சூழல் அல்லது வளர்ச்சி பற்றிய ஆழமான முழுமையான ஆய்வுமுறை.

Caste
சாதி

சமுதாய அமைப்பில் இயங்கும் ஒரு தனிப்பட்ட குழுவே சாதியாகும். இக்குழுவில் இடம் பெறும் தகுதி பிறப்பால் அமைகிறது. சாதி அகமண முறையைக் கொண்ட ஓர் அமைப்பாகும். பொதுவாக ஒவ்வொரு சாதிக்குமுரிய தொழில்கள் வரையறை செய்யப் பட்டுள்ளன.

Catastrophism
திடீர் நிகழ்வுக் கொள்கை

வெவ்வேறு காலகட்டத்தில் பூமியின் மேற்பரப்பானது பெருவெள்ளம், நில அதிர்வு, எரிமலை போன்ற திடீர் நிகழ் வுகளால் அடித்துச் செல்லப்பட்டு மாற்றம் பெற்றது. அப்போது பூமியின் மேற்பரப்பில் வாழ்ந்த உயிரினங்களும் அழிந்துவிட்டன. அவையே இன்று புதைவடிவங் களாகக் கிடைக்கின்றன. ஒவ்வொரு முறையும் திடீர் நிகழ்வுகள் நிகழ்ந்த பின்னர்த் தெய்வீகப்படைப்பு மூலம் புதிய உயிரினங்கள் தோற்று விக்கப்பட்டன. இக் கோட் பாட்டை வகுத்தவர் ஜார்ஜ் கூவியர் (1769-1832) என்பவராவார்.

Catharsis
உணர்ச்சித் தூய்மையாக்கம்

எண்ணக்குலைவினால் செயல்படுவதன் மூலமோ அல்லது வாய்மொழியாக்கம் மூலமோ மனக்கிளர்ச்சியை வெளிப்படுத்துவது உணர்ச்சித்தூய்மையாக்கமாகும். இவ்வாறு கவலை அல்லது உணர்ச்சிவயப்பட்ட சிக்கல்களைக் குறைத்துக் கொள்ளும் நடைமுறையை இது குறிக்கிறது.

Causal Hypothesis
காரணமான கருதுகோள்

ஒரு குறிப்பிட்ட நிகழ்வு அல்லது நிலையானது இரண்டாவது நிலையான நிகழ்வு அல்லது நிலையின் உளதாம் தன்மையை உறுதிப்படுத்த உதவுகின்றதைக் குறிப்பிடுகின்ற கருதுகோள்.

Cenogamy
கூட்டுமணம்

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்கள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பெண்களைத் திருமணம் செய்து கொள்ளும் முறை. இது மிகவும் அரிதான திருமண முறையாகும்.

Census
மக்கள்தொகைக் கணக்கு

மக்கள்தொகைக் கணக்கு என்பதை ஒரு நாட்டின் எல்லைக் குட்பட்ட அல்லது வேறு நிலவியல் ஒருமத்தின் எல்லைக் குட்பட்ட அனைத்து மக்களின் பிறப்பு-நோய் முதலிய புள்ளிவிவரம். பொருளியல் மற்றும் சமுதாயத் தரவுகளின் திரட்டு என வரையறுக்கலாம். மக்கள்தொகைக் கணக்கு மக்கள்தொகை அல்லாத தொழிற்சாலை உற்பத்தி, வீட்டுவசதி மற்றும் விவசாயம் போன்ற தலைப்புகள் குறித்த செய்திகளை அளிக்கக்கூடிய விதத்திலும் வடிவமைக்கப்படலாம். சாதாரணமாக மக்கள்தொகைக் கணக்கு என்பது மக்களின் எண்ணிக்கையைக் குறிப்பதற்காகவே பயன்படுத்தப்படுகிறது.

Ceremonial Chief
சடங்குத்தலைவர்

சில பழங்குடியினர் சமுதாயத்தில் சடங்குத்தலைவர் ஒருவர் இருப்பார். அவர் சமுதாயத்தில் பெரும் பங்காற்றுகிறார். மழை வரச்செய்தல், பயிரிடுதல் போன்ற பல செயல்களுக்குச் சடங்குத்தலைவர் சடங்குகள் நடத்தி மந்திரம் கூறுவார். இதனால் சடங்குத்தலைவரின் செயல் அவர்களால் போற்றத் தக்கதாக அமைகிறது.

Ceremony
சடங்கு

ஒரு குறிப்பிட்ட நிகழச்சி, அல்லது நம்பிக்கையின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகின்ற முறையான, நிலைநாட்டப்பட்ட தொடர்ச்சியான நடவடிக்கை. சடங்குகள் பொதுவாக மக்களால் சேர்ந்து நடத்தப்படும்.

Chiefdom
தலைமையுரிமை அமைப்பு

தலைமையுரிமை அமைப்பு

முறையில் தரநிலைகள் (Ranking) காணப்படும். தலைவரின் குழுவைச் சார்ந்தோர் உயர்ந்த தகுதியையும் மற்றவர்கள் வெவ்வேறு தகுதிநிலைகளையும் சேர்ந்த குழுவினராகவும் இருப்பார்கள். இது பெரும்பாலும் தரநிலைச் சமுதாயங்களில் காணப்படும். பழங்குடி அமைப்பில் அனைத்து உட்பிரிவுகளும் (குலங்கள்/கால்வழிகள்) சமமான தகுதியைப் பெற்றவை. அவற்றிற்குள் எவ்விதப் பாகுபாடும் காணப்படுவதில்லை.

Childhood
குழந்தைப்பருவம்

பிறப்புமுதல் முழுவளர்ச்சி அடையும் வரையிலான பருவம். குழந்தைப்பருவ கால அளவுப் பண்பாட்டுக்குப் பண்பாடு வேறுபடுவதுண்டு.

Child Rearing Stage
குழந்தை வளர்ப்பு நிலை

திருமணத்திற்குப்பின் குடும்ப அமைப்பின் அடுத்த நிலை குழந்தை வளர்ப்பு நிலையாக மாறுகிறது. இது மணவாழ்விற்குப் பிந்தைய நிலையாகவும் இருக்கும். இந்நிலை சமுதாய வாழ்வில் மிக இன்றியமையாத நிலையாகும்.

Christian Orthodoxy
கிறித்தவ மரபாண்மைகள்

கடவுளே அனைத்திற்கும் மூலமானவர். அவரால் மட்டுமே மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் நல்லூழினை வழங்க இயலும்; எனவே இறைவனை வணங்கி நல்லூழினைப் பெறுதல் மனிதனுக்குக் கிடைத்த பெரும் சிறப்பு என்ற கருத்தை வலியுறுத்துவது கிறித்தவ மரபாண்மையாகும். மேலும் மண்ணுலகம், விண்ணுலகம், வழிமண்டலம் உட்படப் பிரபஞ்சம் அனைத்தும் மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட ஓர் உயர்ந்த ஆற்றலால் தோற்றுவிக்கப் பட்டுள்ளது என்ற கருத்தையும் உடையது.

City
மாநகரம்

சிறு நிலப்பரப்பில் மக்கள் அடர்த்தியாகக் குடியேறியிருக்கும் பகுதியைக் குறிக்கிறது. அம்மக்கள் விவசாயம் அல்லாத தொழில்களில் ஈடுபாடு கொண்டிருப்பார்கள்.

Civil Disobedience
ஒத்துழையாமை

மக்கள் அரசு அல்லது வேறு சக்திகளின் சட்டம் அல்லது விதிமுறைகளை வெளிப்படையாக எதிர்த்து வன்முறையின்றி அறவழியில் போராடுவதை ஒத்துழையாமை என்பர். இது எதிர்ப்பவர்களை வன்முறையின்றிப் பணியவைக்கும் ஒரு முயற்சியாகும். ஒரு நன்னெறிக் கொள்கைக்காக எந்தத் துன்பத்தையும் தாங்கிக்கொள்ளுகின்ற மக்களின் துணிவே ஒத்துழையாமை.

Clan
குலம்

பெரும்பாலும் குலக்குழுவினர்

பெயர் தெரியக்கூடிய உண்மை மூதாதையரிடமிருந்து (Real Ancestor) தோன்றாமல் ஒரு தொன்மை மூதாதையரிடமிருந்தோ (Mythical Ancestor) விலங்கு, தாவரம், பிற இயற்கைப் பொருட்கள்போன்றவற்றிலிருந்தோ தோன்றியவர்கள். குல அமைப்புடையோரில் ஒருகுலத்தவர் அனைவரும் ஒரு மூதாதையரிடமிருந்து தோன்றியவர் என்பதால் இவர்களுக்குள் மணஉறவு ஏற்படுவதில்லை. தமிழ்ச் சமுதாயத்தில் வழங்கப்படும் கோத்திரம், பரம்பரை, வம்சம், வகையறா போன்றவை குலக்குறி எச்சங்களைக் கொண்டவையாகும். தந்தைவழி அல்லது தாய்வழி அடிப்படையிலான ஒருவழி உறவுக்குழுவைக் குறிக்கிறது.

Class Conflict Interpretation of Society
வகுப்பு முரண்பாட்டுச் சமுதாய விளக்கம்

அனைத்துச் சமூக நிறுவனங்கள், சமூகக் கட்டுப்பாடுகளின் வடிவங்கள், அரசின் கொள்கைகள், அந்தஸ்து அமைப்பு மற்றும் மாறுதல்களின் நடைமுறை போன்றவை யாவும் பொருளாதார வகுப்புகளுக்குள் உள்ள அடிப்படை முரண்பாடுகளின் வெளிப்பாடுகளாகும் என்ற கருத்து.

Class Consciousness
வர்க்க உணர்வு

ஒரு குறிப்பிட்ட சமூக வகுப்பைச் சேர்ந்தவர் என்று ஒருவர் இனம் அறிந்துகொள்வதும் அதுகுறித்த விழிப்புணர்வும் வர்க்க உணர்வாகும். அதே வகுப்பின் பிற அங்கத்தினர்களோடு ஓரளவு ஒருமைப்பாட்டுணர்வும், தன்னுடைய நலன்கள் தன் வகுப்பின் ஒட்டுமொத்த வளர்ச்சி மற்றும் நிலையைச் சார்ந்திருக்கிறது என்ற உணர்வும் வர்க்க உணர்வில் காணப்படும்.

Classificatory Term
வகைப்படுத்தும் சொல்

ஒன்றிற்கு மேற்பட்ட உறவினர்களை ஒரே சொல்லைக் கொண்டு குறிப்பிடுவது வகைப்படுத்தும் சொல்லாகும். சான்றாகத் தாத்தா, பாட்டி, மாமா, அக்கா, அண்ணன், தம்பி போன்ற உறவுமுறைச் சொற்களைக் கூறலாம்.

Class Society
வர்க்க சமுதாயம்

ஒரு சமுதாயத்தின் வகுப்புகளிடையே மிகவும் தெளிவான அல்லது கூர்மையான வேறுபாடுகளும் வகுப்புகளை உறுதிப்படுத்தும் தன்மையும் காணப்படுவதை இச்சொல் குறிக்கிறது. அத்தகைய வர்க்க அல்லது வகுப்புச் சமுதாயத்தில் ஒவ்வொரு வகுப்பும் சில வேறுபட்ட மனப்பான்மைகளையும், மதிப்பீடுகளையும் வெவ்வேறு பண்பாட்டுக் குணாதிசயங்களையும் உடையதாகக் காணப்படும். இவ்வாறு ஒரு சமுதாயத்தின் ஒட்டுமொத்தப் பண்பாட்டில் வகுப்புகள் உட்பிரிவுப் பண்பாடுகளாக அமைந்திருக்கும்.

Class Struggle
வர்க்கப் போராட்டம்

சமூக வகுப்புகளிடையே போராடும் தூண்டுதலினால் ஏற்படுகின்ற தவிர்க்க முடியாத போராட்டம். இது பல சமூகப் படிநிலைகள் தோன்றக் காரணமாயிருக்கிறது. பல்வேறுவகையான முரண்பாடு தொடர்பான கோட்பாடுகளிலும் இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

Class System
வர்க்கமுறை

வர்க்கம் என்பது ஒத்த சமுதாயப் பொருளாதாரத் தகுதியைக் கொண்ட ஒரு குழுவாகும். தொழிலின் எண்ணிக்கை எண்ணிலடங்கா வகையில் பெருகி உள்ளமையால் மக்களிடையே வருவாய் வேறுபாடுகள் மிகுதியாகி உள்ளன. இவ்வேறுபாடுகளே வர்க்க அமைப்பு ஏற்படுவதற்கும் காரணமாக உள்ளன. சொத்து, வருவாய், தொழில், கல்வி ஆகியவற்றின் அடிப்படையிலேயே வர்க்கங்கள் பாகுபடுத்தப்படுகின்றன. சமூகவியல் அறிஞர்கள் வர்க்கமுறையைப் பின்வரும் ஆறு பிரிவுகளாகப் பிரிக்கின்றனர்.

1) உயர்ந்த மேல்நிலை வர்க்கம்
2) தாழ்ந்த மேல்நிலை வர்க்கம்
3) உயர்ந்த இடைநிலை வர்க்கம்
4) தாழ்ந்த இடைநிலை வர்க்கம்
5) உயர்ந்த கீழ்நிலை வர்க்கம்
6) தாழ்ந்த கீழ்நிலை வர்க்கம்

Climatic Determinism
தட்பவெப்பநியதிவாதம்

சமுதாயங்களில் சமூக அமைப்பையும் மனித நடக்கை முறைகளையும் முடிவு செய்வதில் அல்லது வரையறுப்பதில் தட்பவெப்பநிலை மிக முக்கிய காரணக்கூறாக உள்ளது என்ற கருத்தைக் கொண்ட கோட்பாடு. பண்பாட்டு வேறுபாடுகளைக் காலப்போக்குக்கேற்ப மக்கள் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதன் அடிப்படையில் விளக்கலாம்.

Clique
ஆர்வச்சிறுகுழு

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களால் ஆர்வத்தாலும் நட்பு அடிப்படையிலும் ஏற்படுகின்ற முறையான அமைப்பு இல்லாத, சிறிய, முறைசாராத் தன்னார்வக் குழு. இக்குழுவின் அங்கத்தினர்களிடையிலான உறவுகள் பொதுவாக நெருக்கமானதாகவும் கூட்டு உறவாகவும் காணப்படும். ஆர்வச்சிறுகுழு என்பது பெரிய முறையான அமைப்பாண்மையின் உள் காணப்படும் சிறிய முறைசாராக் குழுவையும் குறிக்கும். இச்சிறு குழு அங்கத்தினர்கள் சில பொதுநலன்களைப் பகிர்ந்து கொள்வார்கள். இது பெரிய அமைப்பாண்மையின் குறிக்கோள்களின் மாற்று வடிவங்களாகவும் காணப்படும்.

Closed-class System
அடைபட்ட வர்க்கமுறை

சமூக வர்க்கமுறை அல்லது வகுப்புமுறையானது முதல்நிலையாகக் குடும்ப அந்தஸ்து அடிப்படையில் அமைவதைக் குறிக்கிறது. தனிநபர்களின் திறமை மற்றும் சாதனைகளின் அடிப்படையில் வகுப்புமுறை அமைவதில்லை. இது தனிநபர்களுக்கு அடைபட்ட வர்க்கமுறையாகும்.

Closed Group
அடைபட்ட குழு

அடைபட்ட குழுவானது குறிப்பிட்ட சில மனிதர்களையே அங்கத்தினராகக் கொண்டது. எல்லோரும் அங்கத்தினராக அனுமதிக்கப்படமாட்டார்கள். இராணுவ அதிகாரிகளின் மன்ற அமைப்பை எடுத்துக்காட்டாகக் கூறலாம். இதில் சாதாரண மக்களோ அல்லது போர்வீரரோ அங்கத்தினராக இயலாது.

Closed Society
அடைபட்ட சமுதாயம்

ஒருவர் தன் சமூக அந்தஸ்தை உயர்த்திக்கொள்வதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு எவ்வித வாய்ப்புகளும் இல்லாத சமுதாயம் அடைபட்ட சமுதாயமாகும். சாதிமுறையினால் அமைக்கப்பட்ட சமூகத்தை இதற்குச் சான்றாகக் கூறலாம்.

Coalition
கூட்டிணைவு

இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட குழுக்கள் அல்லது தனிநபர்களின் நிரந்தரமற்ற கூட்டிணைவு. குறிப்பிட்ட சில கூட்டு செயல்பாடுகளுக்காக இக்கூட்டிணைவு ஏற்படும். அரசுகளோ கட்சிகளோ தத்தம் கொள்கைகளை விட்டுக் கொடுக்காமல் குறிப்பிட்ட சில நோக்கங்களுக்காகச் சிறிது காலம் ஒன்றாக இணைதல். சான்றாக அரசியல் கட்சிகள் கூட்டாக இணைந்து நடத்தும் ஆட்சியைக் கூறலாம்.

Code
சட்டத் தொகுப்பேடு

ஓர் இனத்தினரிடையே அல்லது வகுப்பினரிடையே வழங்கிவரும் ஒழுக்கமுறைத் தொகுப்பு. இது குழு அங்கத்தினர்களின் நடக்கையை முறைப்படுத்தி முழுமையாக்க நாடுகிறது. சான்றாக நம்பிக்கைகள், விதிமுறைகள், சட்டங்கள் ஆகியவற்றைக் கூறலாம்.

Coding
தர அளவுபடுத்தல்

பகுப்பாய்வு செய்யப்படாத களஆய்வுத் தரவுகளைக் கணித்து ஆராயப் பயன்படும் விதத்தில் மொழிபெயர்க்கும் நடைமுறையைக் குறிக்கிறது. இயல்பாகக் கணிப்பொறி மூலம் பகுப்பாய்வு செய்து வகைப்படுத்தி ஒவ்வொரு வகைக்கும் எண்மதிப்பு ஒதுக்கப்படும். களத்தில் சேகரிக்கப்பட்ட தரவுகளைச் சுருக்கித் தர அளவுபடுத்தப்படுதல். தரவுகளின் தன்மைக்கேற்ப வகைப்படுத்தப்படும்.

Coercion
கட்டாயப்படுத்துதல்

கீழ்ப் பணியாளர்களைத் தனி நபர்கள் அல்லது சமூகக்குழுக்கள், உடம்பின் மீதான வலுவந்தத் தாக்குதலைப் பயன்படுத்தியோ அல்லது பயமுறுத்தியோ கட்டாயப் படுத்தப்படும் நடைமுறைகளைக் குறிக்கிறது. இத்தகைய கட்டாயப் படுத்தும் கூறு அனைத்து சமுதாயங்களிலும் இருப்பதைச் சமூகவியலார் கண்டுகூர் கின்றனர்.

Cognate
குருதி உறவு

இரு நபர்கள் குருதி உறவு டையவர்கள் என்றால் இருவரின் மரபும் ஒரே மூதாதையரிடமிருந்து கண்டறியக்கூடியதாக இருக்கும். அத்தகைய இணைப்பு பெண் வழியிலோ அல்லது ஆண் வழியிலோ காணப்படும். இவ்வாறு ஒரு குருதி உறவுமுறை இருவழி மரபுடையதாகக் காணப்படும்.

Cognition
அறிவு/அறியும் ஆற்றல்

ஒருவர் அவருடைய சுற்றுச் சூழலை நன்கு அறிந்துகொண்டு அதன்உட்பொருளைவெளிப்படுத்தும் ஆற்றலைக் குறிக்கிறது. ஒருவர் அறிவுபெறும் அனைத்து நடை முறைகளான மனத்தால் உணர்தல், சிந்தித்தல், நினைவுகூர்தல், ஆச்சரியப்படுதல், கற்பனை செய்தல், பொதுமைப்படுத்துதல் மற்றும் தீர்ப்பளித்தல் ஆகிய அனைத்தும் இச்சொல்லில் அடங்கும்.

Cognitive Components
அறிதல்சார் கூறுகள்

உலகத்தைப் பற்றியும் உலகிலுள்ள ஒவ்வொரு பொருளைப் பற்றியும், வாழ்க்கையைப் பற்றியும் மக்கள் என்னென்ன அறிந்து கொண் டுள்ளனர், அவற்றை எவ்வாறு அறிந்துகொள்கின்றனர் என்பவையே அறிதல்சார் கூறுகளாகும். அதாவது ஒரு பண்பாட்டின் அறிதல்சார் கூறுகள்என்பவைஅப்பண்பாட்டைச் சேர்ந்தவர்களின் 'அறிதிறன்' கூறுகளைக் குறிக்கும்.

Congitive Consonace
அறிதல்சார் உடன்பாடு

அறிதல்சார் வகைமுறையை உருவாக்கும் நம்பிக்கைகள், கருத் துக்கள், உணர்வுகள் மற்றும் ஏனைய அறிவுக்கூறுகளிடையிலான உடன்பாடு அல்லது கொள்கை மாறாமையைக் குறிக்கிறது. இதனால் அறிவுசார் முறைமை ஒருங்கிணைந்த, அமைதியான, ஒருமையானதாக உள் முரண் பாடுகள் இல்லாது செயல்படுகிறது.

Collateral Relative
கிளைவழி உறவினர்

நேர்வழி உறவினர்களோடு அவர்களின் உடன்பிறந்தவர்களும் அவர்களின் மக்களும், மணவழி மக்களும் பேசுநருக்குக் கிளைவழி உறவினர்களாவர்.

Collective Bargaining
கூட்டுப்பேரம்

கூட்டுப்பேரம் என்பது ஒரு இசைவுபடுத்தும் நடைமுறையைக் குறிக்கிறது. இதில் ஒரு

தொழில்சங்க அங்கத்தினர்கள் கூடுதல் சம்பளம், நல்ல பணி நிலைகள் மற்றும் ஏனைய குறைகளுக்கான தீர்வுகாணுதல் ஆகியவற்றிற்காகப் பிரதிநிதிகள் வாயிலாக நிருவாகத்தோடு ஒப்பந்தநோக்குடன் கலந்துரை யாடுவார்கள். கூட்டுபேரம் பணி யாளர்கள் தனித்தனியாக நிரு வாகத்தோடு பேரம் பேசுவதற்கு எதிரானது. பணியில் அமர்த்துபவரின் அதிகாரத்துக்கு ஒத்த எதிர்ச்செல் வாக்கை உருவாக்கும் உத்தியாக உள்ளது கூட்டுப்பேரம்.

Collective Behaviour
கூட்டு நடக்கைமுறை

அனைத்துச் சமயங்களிலும் இடம்பெறும் சடங்குகள் மக்களை இணக்கமுறச் செய்கின்றன; கருத்து வேறுபாடுகளை மறக்கச் செய்கின்றன. இதன்மூலம் அனைவரின் ஒன்றுபட்ட நடக்கைமுறை ஏற்படுகிறது. இது சமுதாயக் கூட்டமைப்பை வலுப்படுத்தி நிலைப்படுத்துகிறது.

Collective Responsibility
கூட்டுப்பொறுப்பு

ஒரு குடும்பம் அல்லது பெரிய சமூகக் குழுவாகிய குலம் அல்லது கிராமம் ஆகியவை அவற்றின் அங்கத்தினர்களின் நடத்தை குறித்த பொறுப்புடையவை என்ற சமூகவிதியைக் குறிக்கிறது. குடும்பம் அல்லது குழு அதன் அங்கத்தினர்களின் குற்றச் செயல் களுக்குப் பதில் சொல்லும் பொறுப்புடையதாகவும் காணப்படும். இதுவே கூட்டுப்பொறுப்பாகும்.

Collectivism
கூட்டாண்மை

தொழில் மூலதனம் பொது வுரிமையாக இருக்கவேண்டுமென்ற கோட்பாடு கூட்டாண்மையாகும். பொருளாதார நடவடிக்கைகள் கூட்டான செயல்முறையால் கட்டுப்படுத்தப்படவேண்டும் என்ற கருத்து. சுயநல நாட்டத் தோடு முறைப்படுத்தப்படாத செயல்முறைகளில் பொருளாதார நடவடிக்கைகளை விடக்கூடாது என்ற கொள்கைக் கூட்டாண்மை.

Colonial Government
குடியேற்ற அரசு

பிறநாடுகளில் குடியேறி அங்கு அமைக்கப்படும் அரசு. 17 மற்றும் 18 ஆம் நூற்றாண்டுகளில் போர்ச்சுகல், ஸ்பெயின், இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற நாட்டைச் சேர்ந்தவர்கள் உலகின் பல்வேறு நிலப்பகுதிகளில் குடியேறி அங்கு அரசுகளையும் அமைத்தார்கள். அவையே குடியேற்ற அரசாகும்.

Commensalism
பொதுச்செயல்

ஒரே செயலை மேற்கொள்கின்ற தனிநபர் அல்லது குழுக்களுக் கிடையிலான கொடுக்கல் வாங்கலைக் குறிக்கிறது. இத்தகைய செயல் ஒருமைப்பாடு சமூக ஒருமைப் பாட்டுணர்வை ஏற்படுத்திக் கூட்டுச் செயல்முறைக்கு அடித்தளமாக அமைகிறது. இது இன்னொரு நிலையில் போட்டி மனப்பான் மையையும் உருவாக்கும்.

Communal Norms
சமூக விதிமுறை

மனிதனின் அன்றாடச் செயற்பாடுகள் குறித்த விதிமுறைகளான இவை சமூகத்தின் ஒப்புதலைப் பெற்றிருக்கும். சமுதாயத்தில் பெரும்பாலோரால் கடைபிடிக்கப்படும் விதிமுறை சமூகவிதிமுறையாகும். ஒருவர் செய்த உதவிக்காக அவருக்கு நன்றி கூறுவதைச் சான்றாகக் கூறலாம்.

Communal Society
சாதிச் சமுதாயம்

பெரும்பாலான வாழ்நாட்களும் மரபு, வழக்காறு மற்றும் வழக்கடிபாடுகள் ஆகியவற்றால் கட்டுப்படுத்தப்படுகின்ற ஒரு சமுதாயம். இத்தகைய சமுதாயத்தில் தனிநபர்களின் பொறுப்பு அதிகமாக வலியுறுத்தப்படுவதில்லை.

Commune
தனிச்சமூகம்

மக்கள் தாங்கள் வாழும் பெரிய சமூகத்திலிருந்து வேறுபட்டுத் தனி இடத்தில் சிறிய சமுதாயமாக வேலைகளையும் வருமானத்தையும் சமமாகப் பங்கிட்டு ஒன்றுபட்டு வாழ்வது. பொதுவாகச் சில கலைஞர்கள், குறிப்பிட்ட மத நம்பிக்கை உடையவர்கள் மற்றும் குறிப்பிட்ட அரசியல் தத்துவத்தை நம்புகிறவர்கள் ஆகியோர் இத்தகைய முறையைக் கடைபிடித்து வாழ்கிறார்கள்.

Community
பொதுப்பண்புச் சமுதாயக் குழு

1) ஒரு பொதுப்படையான வாழும் பகுதி, அங்கு வாழும் மக்களின் நலன் தனிச் சிறப்புப் பண்புகளின் அடிப்படையில் வரையறுக்கப்பட்டிருக்கும். அம்மக்களிடையே அவர்கள் யாவரும் ஒரே மதத்தைச் சார்ந்தவர்கள் என்ற உணர்வு காணப்படும். 2) ஒரு பகுதியில் வாழும் மக்களின் உறவுகள் குறிப்பிட்ட நபரைக் குறிக்காது, பண்பு குறித்ததும் முறையானதுமாகக் காணப்படும். அவர்கள் சமுதாய அளவில் அல்லாமல் வாழ்க்கைச்சூழல் மற்றும் இணை வாழ்வுத்திறன் அடிப்படையில் வரையறுக்கப்பட்டிருப்பார்கள். இத்தகைய மக்கள் குழுக்களைப் பொதுப்பண்புச் சமுதாயக் குழு என்பர்.

Community Organization
பொது பண்புச் சமுதாயக் குழு அமைப்பாண்மை

ஒரு பொது பண்புக்குழுவில் மக்களிடையே காணப்படும் நன்கு வளர்ந்த பொது பண்புச் சமுதாயக்குழு ஒட்டிணைவுணர்வு. ஒன்றிணைந்து பொது நலன்களை வென்றெடுக்கும் ஆர்வம். சமூக நிறுவனங்களுக்கிடையே காணப்படும் உயர்ந்த அளவிலான ஒன்றுக்கொன்று பரிமாற்றமான பின்னிச் சார்ந்த கூட்டுச்சார்புடைமையே பொது பண்புச் சமுதாயக்குழு அமைப்பாண்மை ஆகும்.

Community Study Method
பொது பண்புச் சமுதாயக்குழு ஆய்வுமுறை

ஒரு தனி பண்புக்குழுவில் கவனத்தைச் செலுத்தி ஆழமாக ஆய்வு செய்கின்ற மனிதநடத்தை குறித்த ஆய்வுமுறையைக் குறிக்கிறது.

Companionate Marriage
தோழமைநிலை மணம்

சோதனை நிலையிலான ஒருவித மண ஒழுங்குமுறையைக் குறிக்கிறது. இதில் மணத் தம்பதிகள் தங்கள் மணவாழ்வு வெற்றியாக அமையும் என்பதை உறுதிப்படுத்தும்வரை பிள்ளைகள் இல்லாதிருப்பது என ஒப்புக் கொள்வர். மண உறவு இணக்க மானதாக அல்லது பொருத்த மானதாக இல்லாதிருந்தால் இருவரின் ஒப்புதலோடு திருமணம் கலைக்கப்படும். திருமணத்தின் மூலம் குழந்தைகள் தோன்றும்போது மண உறவு கட்டப்படுவதாகக் கருதப்படும்.

Comparative Anatomy
ஒப்பியல் உடற்கூற்றியல்

உடல்சார் மானிடவியலின் இன்றியமையாத பெரும்பிரிவுகளுள் ஒப்பியல் உடற்கூற்றியலும் ஒன்று. படிமலர்ச்சி ஆய்வுகளிலும், புதை வடிவ ஆய்வுகளிலும், மனித இனங்களுக்கிடையியே உள்ள வேறுபாடுகளை அறியும் ஆய்வுகளிலும் இப்பிரிவின் பங்கு இன்றியமையாததாக உள்ளது. இதுகுறித்த ஆய்வே ஒப்பியல் உடற்கூற்றியலாகும்.

Comparative Method
ஒப்பீட்டு ஆய்வு முறை

மானிடவியலின் கொள்கைசார்ந்த ஆய்வுகள் அனைத்திற்கும் அடித்தளமாக விளங்குவது ஒப்பீட்டு ஆள்வு முறையாகும். இது பண்பாட்டிடை ஒப்பீடு என்றும் பண்பாட்டிடை ஆய்வு என்றும் கூறப்படும். ஒரு சமுதாயத்தை ஆராயும்போது எந்த அளவிற்குப் பிற சமுதாயங்களை ஒப்பிட்டுப் பார்க்கமுடியுமோ அந்த அளவிற்கு ஒப்பிட்டுப் பார்க்கப்படும்.

Compartmentalisation
செயல் தனிபகுதியாக்கம்

ஒரு செயலிலிருந்து இன்னொரு செயலை தனிமைப்படுத்துதல் செயல் தனிபகுதியாக்கமாகும். ஒருவர் தன் வாழ்க்கையில் ஒருவேளையில் ஒரு செயலை மட்டும் செய்து சிக்கலைத் தவிர்ப்பது. ஒருவர் தன் அலுவலகப் பணியையும், குடும்ப வாழ்க்கையையும் ஒரேவேளையில் ஒன்றுடன் மற்றொன்றை இணைப்பதில்லை. ஒரு சமயத்தில் ஒரு செயலை மட்டும் செய்வதால் வாழ்க்கை முறையில் முரண்பாடு களையும் மன உளைச்சலையும் தவிர்க்கின்றனர்.

Complex Hypothesis
கலவைக் கருதுகோள்

இரண்டு அல்லது மேற்பட்ட தனியான மாறிகளை சார்புடைய ஒரு மாறியோடு தொடர்பு படுத்துகின்ற கருதுகோளைக் குறிக்கிறது.

Complex Organization
கலவை அமைப்பாண்மை

பெரிய அளவிலான, முறையான அமைப்பாண்மையைக் குறிக்கிறது. மாநகராட்சிகள், தொழிற்சங்கங்கள், பல்கலைக்கழகங்கள், வாழ்க்கைத் தொழிற் சங்கங்கள், சமயக்கிளைகள் மற்றும் அரசுச் செயலாண்மைகள் ஆகியவை கலவை அமைப்பாண்மைகளாகும்.

Complex Society
கலவைச் சமுதாயம்

அமைப்புரீதியில் கண்டறியக்கூடிய பல மாறுதல்களுக்குள்ளான சமுதாயம். ஒரு காலகட்டத்தில் இச்சொல் பரவலாகப் பயன்படுத்தப்பட்டது. தற்போது சிறிதளவு பயன்பாட்டில் உள்ளது.

Componential Analysis
பொருள் பகுப்பாய்வு

இது ஒரு பண்பாட்டில் இடம்பெறும் அனைத்துவகையான பொருள்களையும், நிகழ்ச்சிகளையும், உணர்வுகளையும், எண்ணங்களையும் வகைப்படுத்தி, வரிசைப்படுத்திக் காண்பதில் மக்கள் மனதில் எவ்வகையான விதிமுறைகள் செயல்படுகின்றன என்பதைக் கருத்தாக்க அளவில் காணும் ஒரு அளவையியல் முறை ஆகும். இனக்குழு அறிவியல் பிரிவில் இது ஒரு புதிய முறையியலைத் தோற்றுவித்ததால் இதற்குப் புது இனக்குழு வியல் (New Ethnography) என்ற பெயரும் சூட்டப்பட்டது.

Concept
கருத்துப்படிவம்

பொதுவாகக் கருத்துப்படிவம் என்பது எண்ணத்தோற்றம் அல்லது எண்ணப்போக்கு என்ற பொருளை உடையது. சமூகவியலில் கருத்துபடிவம் கோட்பாட்டைவிடச் சற்று தாழ்ந்த நிலையில் உள்ளதாகக் கருதப்படுகிறது. கருத்துப் படிவங்களிலிருந்து கோட்பாடுகள் உருவாக்கப்படுவதால் இது கோட்பாடுகளின் தேவையான ஒரு பகுதியாக உள்ளது. கருத்துப்படிவங்கள் மாறாதவைகளாக இருப்பதில்லை. சமூகவியலாருக்குக் கருத்துப்படிவம் தொடர்பான தெளிவுபடுத்துதலும் மறுவரையறை செய்வதும் தொடர்பணியாக உள்ளது.

Conciliation
இணக்கப்படுத்தல்

ஒரு பொதுவான குறிக்கோளை அடைவதை வலியுறுத்திச் சமரச இணக்கத்தின் வாயிலாக ஒரு கருத்து வேறுபாட்டுக்குத் தீர்வு காண்பதைக் குறிக்கிறது. இத்தகைய சமரச இணக்கமானது ஒரு மூன்றாவது நபரின் உதவியோடு நடைபெறும்.

Concrete Social Class
திண்ணிய சமூக வகுப்பு

ஒரு குழு ஒரு சமூக ஒருமமாகச் செயல்படுவதைக் குறிக்கிறது. இதனால் அங்கத்தினர்கள் ஒருவருக்கொருவர் நேரடித்தொடர்புடையவர்களாகின்றனர். சான்றாக அரசியல் கட்சிகள், கழகங்கள் ஆகியவற்றைக் கூறலாம்.

Concubinage

காமக்கிழத்தியர் உறவு

மனைவியாயிராமல் ஒரு பெண் ஒருவருடன் கூடி வாழ்வதைக் குறிக்கிறது. காமக் கிழத்தி என்ற நிலை சமூக ரீதியிலோ அல்லது சட்டப் படியோ அங்கீகரிக்கப்பட்ட முறையாகப் பல சமுதாயங் களிலும் காணப் படுகின்றது. அத்தகைய சமூக ஒழுங்க மைவில் காமக் கிழத்தியர் மனைவிக்குச் சமமான நிலையில் இருந்தாலும் அவர்களும் அவர் களின் குழந்தைகளும் மனைவி-பிள்ளைகளைவிடத் தாழ்ந்த அந்தஸ்து உடையவர்களாக உள்ளனர். காமக்கிழத்தி உறவினால் பிறக்கும் பிள்ளைகளுக்கு உரிமைகள் குறைவாக இருக்கும். ஒருவர் தன் மனைவியோடு ஒன்று அல்லது மேற்பட்ட காமக்கிழத்தியரை உடையவராகவும் இருப்பதுண்டு. பெரும்பாலும் காமக்கிழத்தியர் சமூகநிலையில் தாழ்ந்த பிரிவைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள்.

Conduct

நடத்தை

சமூக விதிமுறைகளுக்கும் ஏனையவர்களின் மதிப்பீடுகளுக்கும் ஏற்பக் கவனமாகத் திசைதிருப் பப்பட்ட நடத்தையினைக் குறிக்கிறது. சமூக மதிப்பீடுகளாலும் குழு விதி முறைகளாலும் தீர்ப்பளிக்கப்பட்ட நடத்தைமுறை.

Configuration

அமைப்பொழுங்கு

ஒரு பண்பாட்டைச் சிறப்பித்துக் காட்டக்கூடிய அல்லது பிற பண்பாட்டிலிருந்து ஒரு பண்பாட் டைத் தனியாகப் பிரித்துக் காட்டக்கூடிய பண்புகளின் தொகுப்பு அமைப்பொழுங்காகும்.

Conflict

முரண்பாடு

1) எதிரான குழுக்களிடையே காணப்படும் சமூக நடைமுறை யிலான பகைநிலை. ஒவ்வொரு குழுவும் பிற குழுக்களை அழிப்பதற்கோ, கீழ்ப்படுத் துவதற்கோ அல்லது செயல் குலையச் செய்வதற்கோ நாடும். அத்தகைய எதிரான நிலை வன்முறையின் மூலமோ அல்லது வன்முறை இல்லாமலோ காணப்படும்.

2) குழுக்களுக்கிடையிலான வன்முறை எதிர்முரண்.

3) ஒருவரையொருவர் செயல் குலையச் செய்து கீழ்ப்படுத்த விரும்பும் இரு தனிநபர்களுக் கிடையிலான உறவு அல்லது தொடர்புகள்.

Conflict Theory

முரண்பாட்டுக் கோட்பாடு

முக்காலங்களிலும் முரண்பா டுகளினால் ஏற்படுகின்ற சமூக இயல் நிகழ்ச்சிகளை நோக்குகின்ற சமுதாயக் கோட்பாடு. சமுதாய நடைமுறை - சமூகக்குழுக்களின் ஒற்றுமையின் அடிப்படையில் நோக்கப்படாமல் மனிதனின் தாக்கும் தன்மையின் அடிப்படையில் நோக்கப்படுகிறது. வரலாறு முழுவதையும் எடுத்துக்கொண்டால் பல முரண்பாடுக் கோட்பாடுகள் காணப்படுகின்றன.

Congeniality Group
உறவமைதிக்குழு

பொதுப்படையான நலன் அல்லது ஆர்வத்தின் அடிப்படையிலான சிறிய முறைசாராக் குழு. இக்குழு அங்கத்தினர்களிடையே தனிப்பட்ட ஒத்திசைவு மற்றும் விருப்பம் காணப்படும். பொதுவாக இக்குழு அங்கத்தினர்கள் ஓய்வுநேரச் செயல்களில் ஈடுபட்டு இருப்பார்கள்.

Conjugal
மணவாழ்வுக்குரிய

திருமணத் தம்பதிகளுக்கிடையிலான உறவு அல்லது சேர்ந்துவாழும் ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான உறவு.

Conjugal Family
மணவழிக் குடும்பம்

மணமக்கள் இருவரும் மணவாழ்வை மேற்கொள்ளும் நிலையில் குடும்பம் தோன்றுகிறது; இத்தகைய நிலையில் அமையும் குடும்பம் மணவழிக் குடும்பமாகும். பின்னர் இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் குடும்பத்தில் வந்துசேர்வர். தனிக் குடும்பம் மணவழிக் குடும்பத்தின் விரிவுபெற்ற நிலையைக் குறிப்பதாகும்.

Connubium
மணஉரிமம்

மானிடவியலில் மணஉரிமம் என்பது குறிப்பிட்ட ஒரு பிரிவைச் சேர்ந்த ஆண்கள் குறிப்பிட்ட மற்றொரு பிரிவைச் சேர்ந்த பெண்களை மனைவிகளாகத் தெரிந்துகொள்ளும் உரிமை மற்றும் கடப்பாடுகளைக் குறிக்கிறது. இரண்டு பிரிவுகளும் மண உரிமக் குழுக்களாகும். இதன் அடிப்படையில் கால்வழிக் குழுக்களிடையே விதிமுறைகளுக்குட்பட்ட மண உறவின் மூலம் இணைப்புகள் ஏற்படுகின்றன.

Consanguine
இரத்தக்கலப்பு

இரத்தக்கலப்பு, இரத்த உறவு அல்லது பொதுப்படையான மூதாதையரைக் குறிக்கிறது. பொதுப்படையான மூதாதையர் குலங்களில் காணப்படுவது போன்று ஒரு சமூக மரபுச் சின்னமாகவும் இருக்கலாம்.

Consanguineal Kin Group
இரத்த உறவுக்குழு

இரத்த உறவுடைய ஒரு குழுவினரைக் குறிக்கிறது. அவர்கள் எல்லோரும் பொதுவான ஒரு குடியிருப்பில் வாழ்வதில்லை. அவர்களின் உறவானது சமூகரீதியில் நிர்ணயிக்கப்படுகிறது. அதாவது உண்மையாக இல்லாதிருந்தாலும் குழு உறுப்பினர்கள் அனைவரும் பொதுவான ஒரு மூதாதையரின் வழி வந்தவர்கள் என்று நம்புவதின் அடிப்படையில் அமைகிறது. இரத்தஉறவுக் குழுவில் எந்த இரத்த உறவினர்கள் சேர்க்கப்படுகிறார்கள் என்பது பண்பாட்டு ரீதியில் வரையறுக்கப்படுகின்ற மரபுவழி விதிமுறைகளைச் சார்ந்ததாகும்.

Consanguine Family
இரத்த உறவுக் குடும்பம்

இரத்தஉறவுக் குடும்பம் சொந்த சகோதர, சகோதரிகள், இரத்த வழியுடைய கிளைவழிச் சகோதர்கள் (பெரியப்பா, சித்தப்பா பிள்ளைகள்) ஆகியோருக்குள் ஏற்பட்ட மணவுறவால் ஏற்பட்டதாகும். இரத்த உறவுத் திருமணங்கள் பண்டைய எகிப்து, பெர்சியா, உறவாய், பெரு ஆகிய நாடுகளில் அரச குடும்பத்தினர்களிடையே காணப்பட்டுள்ளது. இரத்த உறவுக் குடும்பமே மனித இனத்தில் தோன்றிய முதல் குடும்பமுறை என்றும் கூறப்படுகிறது. உடன்பிறந்தவர்கள் ஒருவரையொருவர் திருமணம் செய்து கொள்ளாவிட்டாலும் அவர்கள் ஒன்றாக வாழ்வார்கள். அவர்களின் கணவன் அல்லது மனைவி வேறு உறைவிடத்தில் வாழ்வார்கள்.

Consanguineolocal
இரத்த உறவினரக உறைவிடம்

திருமணத்துக்குப் பின்மணமக்களுக்கு அவர்களின் இரத்த உறவினர் யாராயினும் இடம்கொடுத்து அங்கு உறைவிடத்தை ஏற்படுத்திக் கொண்டால் அதனை இரத்த உறவினரக உறைவிடம் என்பர்.

Consanguinity
இரத்த உறவு

குடும்பத்தில் குழந்தைகள் பிறக்கும்பொழுது ஒரு புதுவகையான உறவு தோன்றுகிறது. பெற்றோருக்குக் குழந்தைகளும், குழந்தைகளுக்குக் குழந்தைகளும், அக்குழந்தைகளுக்குக் குழந்தைகளும் தோன்றும்பொழுது இவ்வனைத்து உறுப்பினர்களும் குடும்பம் என்னும் அமைப்பில் இரத்தஉறவால் பிணைக்கப்படுகின்றனர். அவர்களிடம் ஏற்படும் உறவு இரத்த உறவு ஆகும். இரத்த உறவு பிறப்பால் ஏற்படுகிறது. இரத்த உறவைப் பிரித்துவிடவும் முடியாது. இதன் வேர்ச்சொல்லானது இரத்த இணைப்பு என்ற உட்பொருளை உடையது. ஆனால் ஒருவரின் கால்வழி மற்றும் கிளைவழி உறவுகளைக் குறிப்பிடும்பொழுது தத்தெடுக்கப்பட்டவர்களையும் அல்லது போலி இரத்த இணைப்புடையவர்களையும் இரத்த உறவாகக் குறிக்கப்படுகிறது.

Consciousness of kind
ஒருமித்த உணர்வு

ஒரு குழு மக்களிடையே தாங்கள் அனைவரும் ஒரு சூழ்நிலையில் இருப்பவர்கள், பொதுவான நோக்கங்களைக் கொண்டிருப்பவர்கள், ஒரேமாதிரியான எண்ணங்களைக் கொண்டிருப்பவர்கள் என்று காணப்படும் ஒருமித்த உணர்வு. இச்சொல் பிராங்கிளின் கிட்டிங்ஸ் (Franklin Giddings) என்ற சமூகவியல் அறிஞரால் உருவாக்கப்பட்டது. பொதுவாக இத்தகைய ஒருமித்த உணர்வை ஒரே மதத்தைச் சார்ந்தவர்களும், ஒரே மொழியைப் பேசுபவர்களும், ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களும் தங்களிடையே கொண்டிருப்பார்கள்.

Consensual Marriage
உடனிணக்க மணம்

மதம் சார்ந்த, சட்டப்படியான அல்லது எழுத்து வடிவிலான ஒப்புதல்களால் அல்லாமல் பொதுவான ஒத்தியைவால் நடைபெறுகிற மணம். அத்தகைய இணைப்பு பொதுவான மண முறையாக இருக்குமிடங்களின் பொது பண்புக்குழுவின் முறைசாரா அங்கீகாரமும் காணப்படும். அதனால் பாரம்பரிய சமூகக் கட்டுப்பாட்டின் ஆக்கக்கூறுகளும் செயல்பாடுகளும் அத்தகைய மணங்களிலும் ஈடுபடுகின்றன.

Conservatism
பழமைவாதம்

பழம் பண்புப் பாதுகாப்புக் கொள்கை. சமூக மாறுதல்களை எதிர்க்கின்ற தனி கருத்துப் போக்கை இச்சொல் குறிக்கிறது. குறிப்பாகப் பாரம்பரியப் பண்பாட்டு மதிப்பீடுகளிலிருந்து மாறுவதை எதிர்ப்பது. மெய்யெனக் கருதப்பட்ட பாரம்பரிய அறிவின் அடிப் படையில் நடக்கைகளும் மதிப்பீடு களும் சரியென நிருபிக்கப் படுகின்றன.

Constructive Period
ஆக்கநிலைக் காலம்

மானிடவியல் வரலாற்றிலுள்ள நான்கு காலகட்டங்களில் மூன்றாவது காலகட்டத்தை ஆக்கநிலைக் காலம் என்பர். இது கி.பி. 1859 முதல் 1900 வரையான காலமாகும்.

Contact
தொடர்பு

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களிடையே காணப்படும் பரஸ்பர விழிப்புணர்வு மற்றும் தொடர்பினைக் குறிக் கிறது. தொடர்பானது சமூக உறவுகளின் வளர்ச்சியில் முதல் கட்டமாக அமைகிறது.

Content Analysis
பொருள்சார்பு ஆய்வு

இவ்வாய்வு தெரிவிக்கப்பட்ட செய்திகளின் அடிப்படை அமைப்பை வெளிக் கொணரும் வகையில் பொருளடக்கத்தை வகைப்படுத் துவதில் ஈடுபடுகிறது. சாதாரண மாக இச்சொல் களஆய்வு செய்திக்கூறுகளைவிட ஆவணம் சார்ந்த அல்லது நேரடிப் பார்வையிலுள்ள செய்திகளின் ஆய்வில் அதிகமாகப் பயன்படுத் தப்படுகிறது.

Contra-Acculturation
எதிர் பண்பாட்டுப்பேறு

இரு பண்பாடுகளிடையே நேருக்குநேர் தொடர்பு ஏற்படும் பொழுது ஒன்று மற்றதன் கூறுகளைத் தொடக்கத்தில் ஏற்கத் தொடங்கிப் பின் தன் தனித்தன் மையைக் கட்டிக்காக்க வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டுக் கலப்பை ஏற்க மறுத்தால் அது எதிர் பண்பாட்டுப் பேறு ஆகும்.

Contract
ஒப்பந்தம்

சமூக கொடுக்கல் வாங்கல் களை முறைப்படுத்துவதற்கான

முறையான ஒரு வழிமுறை அல்லது ஏற்பாடு ஒப்பந்தமாகும். இது தனிநபர்களுக்கிடையேயும் குழுக்களுக்கிடையேயும் உள்ள ஒப்பந்தங்களைத் தரப்படுத்தி, வலியுறுத்தி நடைமுறைப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

Contract Society
ஒப்பந்தச் சமுதாயம்

ஒரு சமுதாயத்தில் சமூகக் கட்டுப்பாடானது முதல்நிலையாக மரபுவழியில் மட்டும் ஏற்படுத்தப் படாமல் முறையான சட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்படுமானால் அச்சமுதாயம் ஒப்பந்தச் சமுதாயம் ஆகும். ஒரு குழுவில் அல்லது சமுதாயத்தில் ஒருவரின் உரிமைகள், கடமைகள் மற்றும் தனிச்சலு கைகள் அச்சமுதாயத்தில் அவருடைய உயர்ந்த அல்லது தாழ்ந்த சமூகப்படிநிலையோடு தொடர்பு டையதாக இருப்பது இதற்குச் சான்றாகும்.

Contract Theory of Societal Origin
சமுதாயத் தோற்ற ஒப்பந்தக் கோட்பாடு

மனித சமுதாயத்தின் தோற்றம் ஒரு முன்கருதலுடனமைந்த ஒப்பந்தத்தின் மேல், ஒரு இயற்கை அரசில் வாழ்ந்துவந்த நாகரீகத் தடமற்ற காட்டுமிராண் டிகளால் தீர்மானிக்கப்பட்டது. இதன் கார்ணமாகச் சமுதாயத்தில் ஒவ்வொருவரும் சில உரிமைகள் மற்றும் கடமைகளுடன் குறிப்பிட்ட சில அந்தஸ்துகளை மேற்கொள் கின்றனர் என்ற கருதுகோளை உடையது இக்கோட்பாடு.

Contradiction
மாறுபாடு

இரு சமூக செயல்கள் அவற்றின் அடிப்படைத் தன்மை யிலேயே முரண்பாடானதாக இருக்கும் நிலை. மார்க்சீய சமூகவியலில் இச்சொல் வெகு வாகப் பயன்படுத்தப்படுகிறது.

Contrived Group
புனைக்குழு

புனைந்து தோற்றுவிக்கப்பட்ட குழு. அதாவது தேர்வாய்வு முறைக்காக அல்லது உற்றுநோக்கு வதற்காக ஒரு ஆய்வாளரால் உருவாக்கப்பட்ட ஒரு குழு.

Control Culture
கட்டுப்பாட்டுப் பண்பாடு

சமுதாயத்தின் முறையான செயல்பாட்டுக்கு வழிவகுக்கும் பண்பாட்டுக் கூறுகளை இச்சொல் குறிக்கிறது. இப்பண்பாட்டுக் கூறுகள் செயல்நோக்கமளித்தல் மற்றும் வற்புறுத்தல் மூலம் சமூக எதிர்ப்புகளுக்கேற்பத் தனி நபர்களைநடந்துகொள்ளச்செய்கிறது.

Control Group
கட்டுப்பாட்டுக்குழு

பரிசோதனை ஆய்வில் பயன்படுத்தப்படும் குழு. ஒத்த குணங்களைக் கொண்டு பிற தாக்கம் அல்லது தூண்டுதல் ஏற்படாத குழு. சமூக அறிவியல் சோதனைகளில் கட்டுப்பாட்டுக் குழுவானது ஒரு பரிசோதனைக் குழுவோடு தொடர்புடைய

மாறிகளில் முடிந்தவரை மிக நெருக்கமாக ஒப்பிட்டு ஆராயப் படுகிறது. சோதனைக்குழுவானது தன்னுரிமையான மாறிகளுக்குத் திறந்து வைக்கப்பட்டுக் கட்டுப் பாட்டுக்குழு திறந்த நிலையில் இல்லாது கட்டுப்பட்டிருக்கும் நிலையில் விளைவுகள் ஆராயப்படும். பின்னர் இரு குழுக்களுக்குமிடை யிலான வேறுபாடுகள் கண்டறி யப்படும். சான்றாக குழந்தைக ளின்மீது தொலைக்காட்சியின் விளைவு குறித்த ஆய்வில் சோதனைக்குழுவை தொலைக் காட்சிக்குத் திறந்தநிலையில் வைப்பதோடு தொலைக்காட்சிக்குத் திறந்தநிலையில் இல்லாத அதேபோன்ற வயது, பால், கல்வி, சாதி ஆகியவற்றில் பொருத்தமான ஒரு குழுவைத் தேர்ந்தெடுப்பதைக் கூறலாம். அத்தகைய கட்டுப்பாடு இல்லாத நிலையில் உற்றுநோக்கப்பட்ட விளைவுகள்தொலைக்காட்சியால் ஏற்பட்டதா அல்லது ஏனைய சிறப்புக்கூறுகளால் ஏற்பட்டதா என்று ஆய்வாளாரால் கூற இயலாது.

Control Group Method
கட்டுப்பாட்டுக் குழு முறை

சமுதாயத்தில் குறிப்பாக கிராம சமுதாயத்தில் ஏற்பட்டுவரும் மாறுதல்களை ஆராய்வதற்குப் பயன்படுத்தப்படும் ஓர் முறை யாகும். இம்முறையின்படி ஆய்வுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமத்தைப் போன்ற இயல்புகள் உடைய கல்வி, பொருளாதாரம், வாழ்க்கைத்தரம், குடியேற்றநிலை ஆகியவற்றால் பாதிக்கப்படாத இன்னொரு கிராம சமுதாயத்தைத் தேர்ந்தெடுத்து ஒப்பீட்டாய்வு செய்யப்படும்.

Controlled Comparison
கட்டமைந்த ஒப்பீடு

ஒரு பண்பாட்டை ஆராய விரும்புபவர் அதே தன்மையுடைய பண்பாடுகளை மட்டும் ஒப்பீடு செய்யவேண்டும் என்ற கருத்தை இம்முறை வலியுறுத்துகிறது. அதாவது ஒத்த சமுதாயங்களையும் ஒத்த பண்பாடுகளையும் மட்டுமே ஒப்பிடவேண்டும் என்பது. இம் முறை 'குறைந்த அளவுடைய ஒப்பீட்டு முறை' யாக இருந்த மையால் பெரும் செல்வாக்கு பெறவில்லை.

Convention
மரபு வழக்கம்

'பரந்துள்ள புறச்சமுதாயத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிலைநிறுத் தப்படுகிற, பொதுவாக எல்லோ ருடைய ஒப்புதலையும் பெற்று நிலவுகிற வழக்கம் அல்லது விதி'. (ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி)

Convergent period
ஒருமுகப்படுத்தப்பட்ட காலம்

மானிடவியல் வரலாற்றிலுள்ள நான்கு காலகட்டங்களில் இரண்டாவது காலகட்டத்தை ஒருமுகப்படுத்தப்பட்ட காலம் என்பர். இது கி.பி.1835 முதல் 1895 வரை உள்ள கால கட்டமாகும்.

Conversion
கருத்துமாற்றம் / மதமாற்றம்

ஒரு தனிநபரின் வாழ்வில் ஓரளவு திடீரென ஏற்படும் அதிரடி மாற்றத்தைக் குறிக்கிறது. கருத்து மாற்றத்தால் நம்பிக்கைகள். குழு அடையாளம். ஆள்தத்துவ குணாதிசயங்கள் ஆகியவற்றில் மாறுதல்கள் ஏற்படும். பாரம்பரிய வழக்காற்றில் பொதுவாகக் கருத்து மாற்றம் என்பது பெரும்பாலும் மதமாற்றத்தைக் குறிப்பதாக இருந்தாலும் ஒரு தனிநபரின் அரசியல், பொருளாதார, சமூக அல்லது தத்துவரீதியிலான கருத்துக்களிலும் மாறுதல்கள் ஏற்படுகின்றன.

Conversational Analysis
கருத்துப்பரிமாற்ற ஆய்வு

சமூகவியலில் இது ஒரு புதிய பிரிவாகும். கருத்துப் பரிமாற்ற ஆய்வு இனஆய்வு முறையிலிருந்து வளர்ந்தது. கருத்துப்பரிமாற்றம் நடைபெறுகின்ற சமூகப் பின்னணியமைப்பில் இயற்கை மொழியைப் பயன்படுத்துவது, ஒழுங்கு மற்றும் செயலாட்சியை அளிக்கிறது. கருத்துப்பரிமாற்ற ஆய்வு கருத்துப் பரிமாற்றம் எவ்வாறு அத்தகைய ஒழுங்கை நாடிப் பெறுகிறது என்ற விளக்கத்தை அளிக்கிறது.

Co-operation
கூட்டுறவு

ஒருவிதச் சமூகக் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவாகும். இதில் தனிநபர்கள் அல்லது குழுக்கள் ஒரு பொதுவான குறிக்கோளுக்கு மெய்ம்மைத்தோற்றம் அளிக்கக் கூட்டுச்செயலில் ஈடுபடுவார்கள்.

Co-ordinating Science
ஒன்றிணைக்கும் அறிவியல்

பல்வேறு துறைகளின் அறிவை ஒருங்கிணைத்து மனிதனை ஆராய்வதால் மானிடவியல் ஒருங்கிணைக்கும் அறிவியலாகும்.

Co-Parcenary
கூட்டுடைமையின்இணையுரிமைச் சொத்து

குடும்ப ஒருமம் பிரிந்து செல்லாதிருக்கும் நிலையில் அக்குடும்பத்தின் சொத்தைக் கூட்டுடைமையின் இணையுரிமைச் சொத்து என்பர். இதனை ஒவ்வொரு தலைமுறையிலுமுள்ள சகோதரர்கள் சுதந்தரித்துக் கொள்வார்கள். இந்தியாவின் பாரம்பரியக் கூட்டுக்குடும்பங்களில் இத்தகைய சொத்து காணப்படுகிறது. தற்போது இந்நிலை அரிதாகிவருகிறது.

Co-Parsoners
கூட்டுடைமையின் இணையுரிமையாளர்

குடும்பச்சொத்துகளின் விளைவுகளில் உரிமை உடையவர்கள். இதில் ஏதாவது ஒரு தலைமுறையைச் சேர்ந்த சகோதரர்கள், அடுத்த தலைமுறையைச் சேர்ந்த அவர்களின் மகன்கள் மற்றும் மகனின் மகன்கள் ஆகியோர் அடங்குவர். அதாவது ஒரு குறிப்பிட்ட தலைமுறையைச் சேர்ந்த சகோதரர்களிடமிருந்து

நேரடியாக வரும் ஒவ்வொரு தலை முறையையும் சேர்ந்த சகோதரர்கள் இதில் அடங்குவர். குடும்ப ஒருமம் பிரிந்து செல்லாதிருக்கும்வரை இந்நிலை காணப்படும். சகோதரர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதற்குக் காரணம் இந்தியப் பாரம்பரியத்தில் ஒரு ஆண் மகனுக்கு பிறப்பிலேயே குடும்பச்சொத்தில் உரிமை உடையதாகும். இத்தகைய சொத்தைக் கூட்டுடைமையின் இணையுரிமைச் சொத்து என்பர். இந்தியாவின் பாரம்பரிய கூட்டுக் குடும்பங்கள் இணையுரிமையாளர்களையும் இணையுரிமைச் சொத்துக்களையும் உடையனவாகும்.

Corporate Group
கூட்டுச்சொத்துரிமைக் குழு

தலைமுறை, தலைமுறையாகச் சொத்துரிமையாளர்களாகக் காணப்படும் குழுக்கள். இவர்கள் உறவுமுறை அடிப்படையில் திட்டவட்டமான மரபுவழி விதிமுறைகளின்படி சொத்துரிமை அடைவர். இத்தகைய சொத்துரிமை தாய்வழியில் அல்லது தந்தைவழியில் கணக்கிடப்படும்.

Corporate Property
கூட்டுரிமைச் சொத்து

இச்சொல் வழக்கமாக ஒரு தனி ஒருமமாகக் கருதப்படுகின்ற மக்களின் உரிமை வரையறை சார்ந்த உடைமையைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. அவர்கள் சட்டப்படி கூட்டுரிமைஉடையவர்களாக இருப்பார்கள். இதன் தற்கால வகைமாற்றமானது பலரை உரிமையாளர்களாகக் கொண்ட மூலதன நிதியைக் குறிக்கிறது.

Corporatism
கூட்டுரிமைக்கழக முறை

ஒருவிதச் சமூக அமைப்பாண்மையே கூட்டுரிமைக்கழக முறையாகும். முக்கியமான பொருளாதார, அரசியல் மற்றும் சமூக முடிவுகள் அல்லது தீர்மானங்கள் அனைத்தும் கூட்டுரிமைக் குழுக்களால் எடுக்கப்படும் அல்லது அரசும் குழுவும் சேர்ந்து முடிவு எடுக்கும். கூட்டுரிமைக்குழுவில் உறுப்பினராக இருப்பதன்மூலம் தனிநபர்கள் செல்வாக்கு அடைவார்கள். வர்த்தகச் சங்கங்கள், தொழிலாளர் சங்கங்கள், வியாபாரச் சங்கங்கள், தன்னார்வச் சங்கங்கள் ஆகியவை இதில் அடங்கும்.

Correlation
பிணைமுறை

சமூகவியல் ஆய்வில் ஒரே வேளையில் பலதரப்பட்ட தரவுகளைப் பதிவுசெய்வது இயல்பு. சான்றாக அளவாய்வுகளில் தகவலாளியின் கல்வித்தகுதி மற்றும் வேலையின் படிநிலை ஆகியவற்றைப் பதிவுசெய்வதைக் கூறலாம். ஒரு தரவு இன்னொரு தரவைக்குறித்த செய்தியை அளிப்பதாக இருந்தால் அவை இணைவானவை அல்லது பிணைமுறையிலானவையாகும். மேற்கூறிய சான்றில் பொதுவாக உயர்ந்த பதவியில் இருப்பவர் உயர்ந்த கல்வியையும் பெற்றிருப்பார். அதாவது இரு தரவுகளுக்

குமிடையிலான பிணைமுறை நேர் அளவையில் உள்ளது. அதாவது இரண்டு மாறிகளும் ஒன்றாகக் கூடவோ குறையவோ செய்கிறது. ஒரு எதிர்மறை இடைத்தொடர்பானது ஒரு மாறியின் மதிப்பு கூடுவதையும் இன்னொன்றின் மதிப்பு குறைவதையும் விளக்கும்.

Correlation Cluster
பிணைமுறைத் தொகுதி

ஒன்றுக்கொன்று பிணை முறையிலான பல மாறிகளின் தொகுதியைக் குறிக்கிறது. ஒரு பிணைத் தொகுதியானது அடிநிலையிலுள்ள ஒரே காரணக் கூறைச் சுட்டுவதை வெளிப்படுத்துகிறது.

Cosmopolitan
அகலுலகக் குடிமகார்

உலகப் பொதுப் பற்றாளர். தன் வட்டார அமைப்பாண்மை மற்றும் பண்புக்குழுவுக்கு வெளியே பெரிய அளவிலான சமூக உலகோடு ஈடுபாடு கொள்ளும் எண்ணமுடையவர். சான்றாகத் தேசிய மற்றும் அகில உலக அளவில் அங்கீகாரமும் சிறப்பும் அடைய விரும்பும் தொழில்சார் கல்வி கற்றவரைக் கூறலாம்.

Counseling
அறிவுரை பகர்தல்

தனிநபர் தனிப்பட்ட சிக்கல்களைத் தீர்த்துக்கொள்ளவும். தன் எதிர்காலத்தைக் கற்பனையல்லாத மெய்ம்மை நிலையில் திட்டமிட்டுக் கொள்ளவும் உதவும்வகையில் நேர்காணல், உளவியல் சோதனைகள், நெறிப்படுத்துதல் மற்றும் பிற உத்திகளைப் பயன்படுத்தும் நடைமுறையைக் குறிக்கிறது.

Counter Culture
எதிர் பண்பாடு

ஒரு சமுதாயத்தின் முதன்மைப் பண்பாட்டின்கீழ் இயங்கும் உட்பண்பாடானது தனித்தன்மையைக் கொண்டது. இது முதன்மைப் பண்பாட்டிற்கு எதிராகச் செயல்படும்போது இதனை எதிர் பண்பாடு எனக் கூறுவர். சான்றாக ஒரு இளங்குற்ற நடத்தைக் குழுவானது தன் சமுதாயத்தின் நெறிமுறைகளையும், மரபுகளையும் மீறிச் செயல்படும் போது அது எதிர் பண்பாடாகிறது.

Courtship
காதலாட்டம்

திருமணமாகாத ஒரு ஆணுக்கும் பெண்ணுக்குமிடையிலான இணைதலைக் குறிக்கிறது. இதன் குறிக்கோள் திருமணமாகும். காதலாடும் பழக்கம் சமுதாயத்துக்குச் சமுதாயம் வேறுபடும்.

Cousin Classification
பெற்றோர் உடன்பிறந்தார் பிள்ளைகள் வகைப்பாடு

உலகிலுள்ள அனைத்துப் பண்பாடுகளிலும் காணப்படும் உறவுமுறைகளை குறிப்பாகப் பெற்றோரின் உடன்பிறந்தாரின் பிள்ளைகளைத் தற்கால மானிடவியலார் ஆறு வகைகளாகப் பகுத்துள்ளனர். அவை:

1) உறவ்ாய் முறை (Hawaiian System)

2) சூடானிய முறை (Sudanese System)
3) எஸ்கிமோ முறை (Eskimo System)
4) இரோக்குவாய்ஸ் முறை (Iroquois System)
5) குரோ முறை (Crow System)
6) ஒமகா முறை (Omaha System)
இந்த ஆறு வகைகளும் இனக்குழுக் களின் பெயர்களால் குறிக்கப்படு கின்றன.

Couvade
பேறுகாலத் தனிமை

மனைவி குழந்தையை ஈன்றெடுக்கும் பேறுகாலத்தில் அவள் ஏற்கும் விலக்கு, உணவுக் கட்டுப்பாடு, துன்பங்கள் ஆகியவற்றைப் போலக் கணவனும் கடைபிடிக்கும் ஒரு முறையே பேறுகாலத் தனிமை ஆகும். இம்முறை சில பழங்குடியினரிடம் காணப்படுகிறது. இது பண்பாட்டு மானிடவியலில் சிறப்பிடம் பெற் றுள்ளது.

Craniometry
மண்டையோட்டளவையியல்

மனிதனின் உடலுறுப்புகளுள் மண்டையோட்டைப் போல் வேறு எந்தப் பகுதியும் மிகுதியான பண்புகளைக் கொண்டிருக் கவில்லை. அப்பண்புகளை ஆராய்வது மண்டையோட்ட ளவையியல். இவ்வகை ஆய்வில் இறந்த மனிதனின் மண்டையோடு களே அளக்கப்படுகின்றன.

Craze
ஆர்வநெறி

வழக்கமான சமூக நடக்கையி லிருந்து மாறுபடுகின்ற புதுமையான வியப்பளிக்கும் விதத்திலான நடக்கை. இத்தகைய நடக்கை சமுதாயத்தில் மிகச்சிலரால் மட்டுமே ஆர்வத்தோடு பின்பற்றப் படும். பெரும்பான்மையோரால் ஒவ்வாததெனக் கருதப்படும். இது குறுகிய காலம் மட்டுமே நடை முறையில் இருக்கும். பொருளாதார ஆதாயங்களுக்காக வேண்டு மென்றே தகவல்தொடர்பு மூலம் தூண்டப்பட்ட நடக்கைமுறையாகவும் இருப்பதுண்டு. சான்றுகளாக நடன ஆர்ப்பாட்டம், வித்தியாசமாக தலைமயிரை வளர்த்தல், தங்க மீன் விழுங்குதல் போன்றவற்றைக் கூறலாம்.

Creed
திருமுறைக் கோட்பாடு

அடிப்படை நம்பிக்கைகளின் ஒரு வழித்துணைக் குழு. இது நன்னெறி சார்ந்த ஒழுகலாற்றுக்கு வழிகாட்டுகிறது.

Criminal Tribe
குற்றவாளிப் பழங்குடியினர்

குற்றம் செய்வதை முதன்மைத் தொழிலாகக் கொண்டிருந்த பழங்குடியினரைக் குற்றவாளிப் பழங்குடியினர் என்றனர். இத் தொழிலை விடுத்து வேறுதொழில் களில் ஈடுபட்டுள்ள இன்றைய நிலையில் இவர்களை முன்னாள் குற்றவாளிப் பழங்குடி என்றும், குற்றவாளித் தொழிலிலிருந்து விடுபட்டவர்களைக் குற்றமரபினர்

பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினர் என்றும் குறிப்பிடுவர்.

Crisis
நெருக்கடி

தனிநபர் அல்லது குழுவின் இயல்பு வாழ்வில் கடுமையான குறுக்கீட்டைக் குறிக்கிறது. இதன் விளைவாக எதிர்பாராத சூழ்நிலை உருவாகிப் பல சிக்கல்கள் தோன்றும். நெருக்கடி புது மாதிரியான சிந்தனை மற்றும் செயல்வளர்ச்சியின் தேவையை ஏற்படுத்தும்.

Crisis Rite
நெருக்கடிச் சடங்கு

தனிநபரின் அல்லது குழுவின் நெருக்கடி காலத்தில் உடனடித் தேவைகள் மற்றும் கவலைகளின் மறுமொழிக்காக நடத்தப்படும் சடங்குகளைக் குறிக்கிறது. சான்றாக வறட்சிக் காலத்தில் நடத்தப்படும் மழைநடனம் போன்றவற்றைக் கூறலாம்.

Critical Period
தீர்வுகட்ட காலம்

மானிடவியல் வரலாற்றில் நான்காவது காலகட்டத்தைத் தீர்வுகட்ட காலம் என்பர். இது 1900 முதல் 1935 வரையிலான காலகட்டமாகும்.

Cross - Cousins
மணவழிச் சகோதரர்

பெற்றோருடன் பிறந்த எதிர் பாலினரின் பிள்ளைகள். அதாவது ஒருவரின் தாயின் சகோதரரின் பிள்ளைகளும் தந்தையின் சகோதரியின் பிள்ளைகளும் அவருடைய மணவழிச்சகோதரராவர்.

Cross-Cousin Marriage
மணவழிச் சகோதர மணம்

குறிப்பிட்ட சமுதாயங்களில் முன்னுரிமை அளிக்கப்படுகின்ற அல்லது விதிமுறைப்படுத்தப்பட்ட ஒருவித மணமுறையைக் குறிக்கிறது. இம்முறையில் ஒரு சகோதரர் மற்றும் சகோதரியின் பிள்ளைகளிடையே மண இணைப்பு ஏற்படுகிறது. வேறுவிதத்தில் சொன்னால் எதிர்பால் உடன் பிறப்புக்கள் பெற்றோர்களாக இருக்கும். ஒன்றுவிட்ட சகோதர சகோதரிகளுக்கிடையிலான மணம் எனக் குறிப்பிடலாம்.

Cross - Cultural Approach
பண்பாட்டிடை அணுகுமுறை

சமுதாயங்களுக்கிடையே காணப்படும் மாறுபாடுகளை அறிவதற்குப் பயன்படுத்தப்படும் அணுகுமுறை.

Cross - Cultural Method
பண்பாட்டிடை ஆய்வுமுறை

தனிநபர்கள் மற்றும் குழுக்களின் நடக்கை தொடர்பான கருதுகோள்களைச் சோதிக்கும் வகையில் வெவ்வேறு பண்பாடுகளிலிருந்து ஒப்பாய்வு செய்யக்கூடிய தரவுகளைச் சேகரிப்பது பண்பாட்டிடை ஆய்வாகும். சில பண்பாடுகள் குறித்த பொதுக்கருத்துக்களைக் கொண்டுவரவும், உலகளாவிய பொதுக்கருத்துக்களை வளர்க்கவும் இம்முறை பயன்படுகிறது.

Crowd
மக்கள்திரள் / கூட்டம்

பின்னிய செயலெதிர் செயல்களை உடைய நிரந்தரமற்ற மக்கள் திரள். அவர்களுக்குள் முறையான அமைப்பு மற்றும் தலைமை இருப்பதில்லை. அவர்களிடையே குழு மரபோ அல்லது தனிப் பண்பாட்டுப் பின்னணியோ காணப்படாது. இத்தன்மை அவர்கள் ஒரு குழுவாக உடனடி எதிர் செயலாற்ற ஏதுவாக அமையும். அவர்களைக் கருத்துத் தூண்டுதலுக்கு உட்படத் தக்கவர்களாகவும், திடீர் உணர்ச்சிகளுக்கு ஆளாகும் இயல்புடையவர்களாகவும், பகுத்தறிவுக்கு மாறானவர்களாகவும், அடிக்கடி மாறும் இயல்புடையவர்களாகவும் ஆக்குகிறது. புதிய சூழ்நிலையில் அவர்களின் நடத்தை முன்னறிந்து குறிப்பிட இயலாத நிலையிலும் காணப்படும்.

Crow System
குரோ முறை

குரோ முறையில் பேசுநரின் தந்தையின் சகோதரர்களின் பிள்ளைகள், தாயின் சகோதரிகளின் பிள்ளைகள் மற்றும் அவருடைய சகோதர சகோதரிகள் ஆகியோர் ஒரு பிரிவாகப் பிரிக்கப்படுகின்றனர். அவருடைய தந்தையின் சகோதரிகளின் பிள்ளைகள் மற்றும் தாயின் சகோதரர்களின் பிள்ளைகள் ஆகியோர் மேற்கூறிய பிரிவிலிருந்து தனித்தனியாக வேறுபடுத்தப்படுகிறார்கள். இவ்வாறு ஒருவரின் தகப்பனின் சகோதரியின் பிள்ளைகள் அவருடைய தாயின் சகோதரனின் பிள்ளைகளிடமிருந்து வேறுபட்ட ஓர் உறவு முறைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ளனர். 565888

இதேமுறையில் பேசுநரின் தாயின் சகோதரனின் பிள்ளைகளைத் தன் சொந்தப் பிள்ளைகளோடு சமப்படுத்தி மகன் அல்லது மகள் என்ற பொருளைத் தரும் சொற்களாலே அழைக்கின்றனர். காரணம் பேசுநருக்கு அவருடைய தாயின் சகோதரனின் மனைவியின் உறவும் அவருடைய மனைவியின் உறவும் ஒன்றாகும். இம்முறையில் மூன்று முக்கிய உறவுமுறைப் பிரிவுகள் ஏற்படுகின்றன. அவை: 1) பேசுநரின் சகோதர சகோதரிகள், தந்தையின் சகோதரர்களின் பிள்ளைகள் மற்றும் தாயின் சகோதரியின் பிள்ளைகள் ஆகியோர் அடங்கிய பிரிவு 2) தந்தையின் ்சாவழி அங்கத்தினர்கள் அடங்கிய பிரிவு 3) பேசுநரின் சொந்தப் பிள்ளைகள் மற்றும் அவருடைய தாயின் சகோதரனின் பிள்ளைகள் அடங்கிய பிரிவு என்பனவாகும்.

Crude Death Rate
முறைப்படுத்தப்படாத இறப்புவீதம்

ஒருகுறிப்பிட்ட மக்கள்தொகையில் ஒரு வருட காலத்தில் 1000 நபர்களுக்கு எத்தனை இறப்புகள் நிகழ்ந்துள்ளன என்பதை வரையறுப்பது. முறைப்படுத்தப்படாத இறப்புவீதமானது மக்கள் தொகையின் அங்கத்தினர்கள் என்ன வீதத்தில் இறந்திருக்கிறார்கள் என்ற விவரத்தை மட்டும் அளிக்கும். மக்கள் தொகையின் ஏனைய குணாதிசயங்களைக்

கருத்தில் கொள்ளப்படுவதில்லை இதில் காணப்படும் மிக முக்கிய குறையானது மக்கள்தொகையின் வயது மற்றும் பால் அமைப்பையும் கணக்கில் கொள்ளாதிருப்பதாகும்.

Cult
வழிபாட்டுக் குழு

குறிப்பிட்ட ஒரு கடவுள் அல்லது சிறு தெய்வங்களைத் தீவிரமாக வழிபடுபவர்களின் வழிபாட்டுமுறைகளும் சடங்குகளும் கொண்ட மத வழிபாட்டுக் குழு. குறைந்த எண்ணிக்கையைக் கொண்டிருந்தாலும் உணர்ச்சிபூர்வமான மத அனுபவங்களுக்கு முக்கியத்துவம் தரும் மதக் குழுக்கள். அரசு, கல்வி மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. வழிபாட்டு முறைகளில் தவறுவது மிகவும் தீமையானது என்று நம்புகிறார்கள். வழிபாட்டில் பக்தர்கள் உணர்ச்சிவசப்படுவது முக்கியமானதாக உள்ளது. பக்தர்களிடையே மலை யாத்திரை போன்ற நேரத்தில் ஒற்றுமை உணர்வு நிலவுகிறது. சக்தி வழிபாட்டினரை வழிபாட்டுக் குழுவுக்குச் சான்றாகக் கூறலாம்.

Cultural Absolute
பண்பாட்டு முழுமை

இச்சொல் பண்பாட்டு விதிமுறை அல்லது மதிப்பீட்டைக் குறிப்பிடப் பயன்படுத்தப் படுகிறது. அதாவது குறிப்பிட்ட ஒரு பண்பாட்டைச் சேர்ந்த மக்களின் உணர்வு அல்லது எண்ணம் உலகளாவிய நிலையில் பயன்படத் தக்கதாயும், எப்போதும் எல்லோருக்கும் சரியானதாகவும் காணப்படுவது. சான்றாகக் குடும்ப அமைப்பாண்மைக்கு ஒருதுணை மணம் மட்டுமே இயற்கையானதும் அறமுறையானதுமென மதிக்கப் பட்டால் அது பண்பாட்டு முழுமையாகிறது.

Cultural Anthropology
பண்பாட்டு மானிடவியல்

மானிடவியலைப் பண்பாட்டு மானிடவியல், உடல்சார் மானிடவியல் என்னும் இரு பெரும் பிரிவு களாகப் பிரிப்பர். பண்பாட்டு மானிடவியலில் மனிதச் சமுதா யத்தில் காணப்படும் பல்வேறு பண்பாட்டுக் கூறுகள் காலப் பரிமாணங்களுடன் ஆராயப்படுகின்றன. இதன் முக்கியமான பிரிவுகள் இனக்குழுவியல் மற்றும் இனக்குழு ஒப்பாய்வியல் என்பவையாகும். பண்பாட்டு மானிடவியல் ஆய்வின் தொடக்க காலத்தில் ஆங்கிலேய, அமெரிக்க அறிஞர்களின் அணுகு முறையில் வேறுபாடுகள் ஏற்பட்டதால் இப்பிரிவு பண்பாட்டு மானிடவியல், சமுதாய மானிடவியல் என இரு பெரும் பிரிவுகளாகப் பாகுபடுகிறது. பண்பாட்டு மானிடவியலார் அமெரிக்க மானிட வியல் மரபினைச் சேர்ந்தவர்கள். சமுதாய மானிடவியலார் ஆங்கிலேய மானிடவியல் மரபைச் சேர்ந்த வர்கள்.

Cultural Blindness
பண்பாட்டு மடமை

மக்கள் உலகை நோக்குவதில் காணப்படும் முற்சார்புடைமையே

பண்பாட்டு மடமை. தங்களுக்குக் கற்பிக்கப்பட்ட இனவகை கூறுகளை மட்டும் கொண்டு உலகைப் பார்ப்பதால் பிற பண்பாட்டுப் பின்னணியில் காணப்படும் உறவுகள், அம்மக்களுக்குத் தெளிவாகத் தெரிகிற நிகழ்ச்சிகள். ஆகியவற்றைக் குறித்து தெரிந்துகொள்ளும் உணர்வு காணப்படுவதில்லை. இதுவே பண்பாட்டு மடமைக்குக் காரணமாய் அமைகிறது.

Cultural Change
பண்பாட்டு மாற்றம்

மக்களோடு தொடர்புடைய மாறுதல்கள், கருத்துக்களைச் சேர்த்தல் அல்லது இழத்தல், உத்திகள் மற்றும் வழக்கமான செயல்களின் பண்பாட்டுக் குறிக்கோள்களை மாற்றியமைத்தல் ஆகியன பண்பாட்டு மாற்றமாகும்.

Cultural Conditioning
பண்பாடு வரையறுத்தல்

ஒரு சமுதாயத்தின் செயற்பாடு களில் பங்கேற்று அச்சமுதாயத்தின் மதிப்பீடுகள், கட்டளைச் சட்டங்கள், நோக்குநிலை மற்றும் வழக்கமான சமூக செயல்கள் ஆகியவற்றைக் கற்றுக்கொள்கிற செயற்பாங்கு பண்பாடு வரையறுத்தலாகும்.

Cultural Configuration
பண்பாட்டு வடிவமைதி

ஒருபண்பாட்டின் அடிப்படையான ஆதிக்கம் வகிக்கிற முழுமையான எடுத்துக்காட்டமைப்பைக் குறிக்கிறது. அவ்வமைப்பைச் சுற்றிலும் மக்களின் வாழ்க்கை முறையானது ஒருமுகப்படுத்தப்படும். வடிவமைதியானது ஒன்றுக்கொன்று பின்னிப்பிணைந்து சார்ந்திருக்கின்ற நம்பிக்கைகளாலும் விதிமுறைக ளாலும் உருவாக்கப்படுவதாகும். இது விரிவாக்கப்பட்டுப் பண்படுத் தப்பட்டுத் தனி மாதிரியான ஆய்வுப்பொருளாகும் தன்மை யுடையது.

Cultural Deprivation
பண்பாட்டு இழப்புணர்வு / பண்பாட்டு ஏமாற்றம்

உழைக்கும் வகுப்பு மற்றும் சில சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த குழந்தைகளின் தோல்வியைக் குறிக்கிறது. இக்குழந்தைகள் நடுத்தர வகுப்புக் குழந்தைகளைப் போன்று கல்வித்தகுதி அடைய இயலாமல் போவதைப் பண்பாட்டு இழப்பு அல்லது பண்பாட்டு ஏமாற்றம் குறிக்கிறது. கல்விமுறை களுள் வெற்றிக்குத் தேவையான செயல் நோக்கமளிக்கக் குடும்பமும் சுற்றுப்புறமும் தவறிவிடுவதைக் குறிக்கிறது.

Cultural Determinism
பண்பாட்டு நியதிவாதம்

மனிதன் பண்பாட்டுக் கூறுகளினால் மட்டுமே உருவாக்கப்படுகிறான் என்றும் அவன் தன் பண்பாட்டுக் குணநலன்களைத் தானாகவே சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்பதன் மூலம் ஒரு முதிர்ந்த மனிதனாகிறான் என்னும் கருத்து உடையது பண்பாட்டு நியதிவாதம்.

Cultural Drift
பண்பாட்டுப் பிறழ்வு

ஒரு பண்பாட்டுக்குள் ஒரே திசையை நோக்கி நிகழ்கின்ற தொடர்ச்சியான சிறு மாற்றங்களால் ஏற்படுகின்ற திட்டமிடப்படாத பண்பாட்டு மாற்றம். இத்தகைய மாற்றங்கள் படிப்படியாகத் திரண்டு வளர்ந்து ஒரு கட்டத்தில் புதிய பண்பாட்டு வடிவங்களைத் தோற்றுவிக்கும்.

Cultural Ecology
பண்பாட்டுச் சூழலியல்

சுற்றுச்சூழல், அதில் வாழும் மக்கள், பண்பாடு ஆகிய மூன்றுக்கும் உள்ள தொடர்புகளை ஆராய்தல் முக்கிய பணியாகும். இதில் மூன்று நிலைகள் இடம்பெறுகின்றன. 1) மக்களின் தொழில்நுட்பத்திற்கும்,சுற்றுசூழலுக்கும் உள்ள உறவை அறிதல் (2) சுற்றுசூழல், தொழில் நுட்பம் மக்களின் நடத்தை முறைகள் ஆகியவற்றிலுள்ள தொடர்புகளை அறிதல் 3) இரண்டாம் வகையில் இடம்பெறும் உறவு பண்பாட்டின் பிற உறவுகளோடு எவ்வகையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதை அறிதல்.

Cultural Ethos
பண்பாட்டுப் பண்பாண்மை

ஒரு பண்பாட்டில் அல்லது உட்பண்பாட்டில் முக்கிய கூறாயிருக்கின்ற கருத்துக்கள், குறிக்கோள் வடிவங்கள் மற்றும் மதிப்பீடுகள் பண்பாட்டுப் பண்பாண்மையாகும். இக்கூறுகள் பண்பாட்டிற்கு அவற்றின் தனி வேறுபட்ட குணங்களை அளிக்கிறது.

Cultural Evolution
பண்பாட்டுப் படிமலர்ச்சி

பண்பாட்டுப் படிமலர்ச்சி பற்றிய சிந்தனை பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளில் மேலோங்கத் தொடங்கியது. இக்காலத்தைச் சேர்ந்த வல்லுநர்கள் நாகரீகமானது தொன்மைப் பண்பாட்டு வகையிலிருந்து தோன்றியது எனக் கருதினர். தொன்மைப் பண்பாடானது இன்று வாழும் விலங்குத் தன்மையர் (savages) காட்டுவாசிகள் (Barbarians) ஆகியோரின் பண்பாட்டை ஒத்தது என்று கருதினர். இன்றைய நிலையில் பண்பாட்டுப் படிமலர்ச்சி குறித்துப் பல கொள்கைக் குழுக்கள் உள்ளன. பண்பாட்டுப் படிமர்ச்சி பற்றிமார்கள் குடும்பமுறை, அரசியல் முறை, சமயம், உறவுமுறை முதலான பல நிறுவனங்களின் படிமலர்ச்சியை ஆராய்ந்துள்ளார்.

Cultural Imperatives
பண்பாட்டு ஏவல் வடிவங்கள்

எல்லாச் சமுதாயங்களிலும் காணப்படுகின்ற சமூகக் கட்டளைச் சட்டங்கள் அல்லது படிவங்கள். இவை அனைத்து மக்களின் அடிப்படைச்சமூகத் தேவைகளையும் மெய்யெனக் கொள்ளத்தக்க விதத்தில் வெளிப்படுத்துகின்றன. இக்கட்டளைச் சட்டங்கள் அல்லது படிவங்கள் பண்பாட்டு ஏவல் வடிவங்களாகும்.

Cultural Integration
பண்பாட்டு ஒன்றியம்

பண்பாடு என்பது மிகவும் இணக்கமுற்ற, ஒருங்கிணைந்த ஓர் ஒன்றியமாகவும், அதன் கூறுகள் அனைத்தும் செயல்நிலையில் ஒன்றோடொன்று இணைந்து செயல்படுவதாலும் அதனைப் பண்பாட்டு ஒன்றியம் என்று கூறுகின்றனர்.

Cultural Island
பண்பாட்டுத் தீவு

பல்வேறு பண்புகளை உடைய பெரிய சமுதாயத்தின் மத்தியில் வாழும் ஒரு பண்புக்குழு பண்பாட்டுத் தீவு எனப்படும்.

Cultural Lag
பண்பாட்டுத் தேக்கம்

ஒரு பண்பாடு ஏதேனும் ஒரு காரணத்தால் மாற்றத்திற்கு இலக்காகும்போது அம்மக்கள் சில வழிகளில் மாறும் சூழலுக் கேற்பத் தங்களை மாற்றிக்கொள்வர். ஆனால் சில வழிகளில் மாற இயலாமல் நிற்பர். அவ்வாறு மாற இயலாத நிலையில் மாறிய புதிய கூறுகளுக்கும் அவர்களின் மாற இயலாத பழைய கூறுகளுக்கு மிடையே தேக்கம் ஏற்படும். இதனைப் பண்பாட்டுத் தேக்கம் என்பர். சான்றாக அமெரிக்க ஐக்கிய நாடுகளில் குடியேறும் தமிழ்மக்கள் அங்குள்ள சூழலுக் கேற்பப் பொருள்சார் கூறுகளை மாற்றிக்கொள்வர். ஆனால் அமெரிக்க மக்களின் பொருள்சாராக் கூறுகளை எளிதில் ஏற்றுக் கொள்வதில்லை. இந்நிலையில் இவர்களின் குடியேற்றப் பண்பாட்டில் ஒரு தேக்கம் ஏற்படும்.

Cultural Landscape
பண்பாட்டுச் சூழ்நிலம்

பண்பாட்டால் மாற்றியமைக் கப்படுகின்ற நிலஇயல் சார்ந்த சுற்றுச்சூழல்.

Cultural Materialism
பண்பாட்டுப் பொருள் முதல் வாதம்

மக்கள் அவர்களின் வாழ்க்கை முறையில் தொழில்நுட்பத்தை எவ்வாறு பயன்படுத்துகின்றனர் என்ற கருத்தை மையமாகக் கொண்டு அவர்களின் கொள்கை களை வரலாற்றோடும் மக்களின் நடத்தைமுறையோடும் இணைத்துப் பண்பாட்டு மாற்றத்தை அறிய முயல்வது பண்பாட்டுப் பொருள் முதல் வாதமாகும்.

Cultural Minority
பண்பாட்டுச் சிறுபான்மையினர்

ஒரு சமுதாயத்தில் தனிப்பண் புடைய ஒரு ஓரின மக்கள் குழு வேறு பண்புடைய ஒரு குழுவால் மேலாதிக்கம் செய்யப்படுதல். பொதுவாகச் சமுதாயத்தில் சிறுபான்மையினர் மேலாதிக்கம் செலுத்துகின்ற பண்புக்குழுவை விட அரசியல் பொருளாதார மற்றும் சமூக அந்தஸ்துகளில் தாழ்வான நிலையில் காணப்படு வார்கள். பண்பாட்டுச் சிறுபான் மையினர் ஒரு பல நாட்டினத் துக்குரிய தனியரசின் ஒரு முழு தேசீய இனமாகவும் இருக்கலாம்.

Cultural Monism
பண்பாட்டு ஒருபொருண்மை வாதம்

சமுதாயத்துக்குள் பண்பாட்டுச் சீரமைவைக் கருத்தில்கொண்டு சிறுபான்மை இனக்குழுக்கள் சமுதாயத்தில் ஆதிக்கம் வகிக்கிற பண்பாடோடு ஒன்றுபட்டு முழுமையாக இணைந்துவிடலாம் என்ற கோட்பாட்டை ஆதரித்து வாதிடுவது. இதனால் இனக்குழுக்களுக்கிடையிலான உள்பூசல்களை அல்லது முரண்பாடுகளை அகற்றலாம் என்ற வாதம்.

Cultural Orthogenesis
பண்பாட்டு ஒழுங்கமைப்பு வாதம்

ஒரு பண்பாட்டின் சில பண்புக் கூறுகளின் அதிக வளர்ச்சி அப் பண்பாட்டில் ஏனைய பண்புக் கூறுகளோடு ஒப்பிடப்படுகிறது. இக்கருத்துப் படிவம், ஒரு பண்பாடு என்ற நிலையில் அதன் எல்லாப் பண்புக்கூறுகளும் சமமாக அல்லது சீராக வளர்ந்திருக்கும் என்று கருதிக் கொள்கிறது. இதுவே பண்பாட்டு ஒழுங்கமைப்பு வாதமாகும்.

Cultural Pluralism
பண்பாட்டுப் பன்மைவாதம்

பல தேசிய இனங்களுக்குரிய ஒரு நாட்டரசில் பல வெவ்வேறு பண்புக்குழுக்கள் உடனிருப்பது அல்லது கூட்டாக வாழ்வது பண்பாட்டுப் பன்மைவாதமாகும்.

Cultural Relativism
பண்பாட்டுச் சார்புடைமை

ஒரு பண்பாட்டை உயர்ந்தது என்றோ மற்றதைத் தாழ்ந்தது என்றோ கூற இயலாது. இக்கருத்தை அனைவரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் நிறுவிய வர்கள் மானிடவியலாராவர். இக்கருத்து இன்று பண்பாட்டுச் சார்புடைமைக் கொள்கை என்று குறிப்பிடப்படுகிறது. பொதுவாக எந்த ஒரு பண்பாட்டினரும் அவர்களின் சொந்தப் பண்பாட்டு முறைகள் சிறந்தவை எனக் கருதுவர். அதாவது ஒரு சமுதாயத்தின் தரங்களைக் கொண்டு மற்றொரு சமுதாயத்தை மதிப்பிடக் கூடாது. இக்கொள்கை 19 ஆம் நூற்றாண்டில் மானிடவியலாரால் உருவாக்கப்பட்டது.

Cultural Sociology
பண்பாட்டுச் சமூகவியல்

ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் சமூகப் பழக்கவழக்கங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள் ஆகியவற்றின் தோற்றம் மற்றும் மாறுதல்களை ஆராய்வது பண்பாட்டுச் சமூகவியல்.

Cultural survival
பண்பாட்டு உய்வு

ஒரு பண்பாட்டுக் கூறு அதன் உண்மையான செயல்பாட்டை செய்யாதிருந்தாலும் அதனைத் தக்கவைத்துக் கொள்வதைக் குறிக்கிறது. ஒரு பண்புக்கூறானது அதன் பயன்பாட்டு நோக்கத்தை நிறைவு செய்திருக்கலாம். ஆனால் தற்போது தொழில்மயமாக் கத்தாலோ அல்லது வேறு மாறுதல்களினாலோ அதன் பயன்பாட்டு முக்கியத்துவம் முடிவடைந்தாலும் அது பாரம்பரிய

மானதாக அல்லது அணியானதாக இருப்பதால் தக்கவைத்துக் கொள்ளப் பெறுகிறது. சான்றாக ஆண்கள் 'டை' அணிதல், தொப்பியைச் சுற்றிக் கட்டப்பட்டுள்ள இழப்பட்டை, மின்சாரவிளக்கு உள்ள இடத்தில் மெழுகுவர்த்தி பயன்படுத்துதல் போன்றவற்றைக் கூறலாம்.

Cultural Transmission
பண்பாட்டு அனுப்பீடு

திரண்டிருக்கும் பண்பாட்டைக் கீழ்நோக்கி அனுப்பும் நடைமுறையே பண்பாட்டு அனுப்பீடாகும். முறையான மற்றும் முறைசாரா ஒழுங்குமூலம் கற்றல் வாயிலாகத் தலைமுறையிலிருந்து தலைமுறைக்குப் பண்பாடானது அனுப்பப் படுகிறது. ஒரு பண்பாட்டின் சிந்தனை, உணர்தல் மற்றும் செயல்படும் விதம் ஆகியவை மரபுவழியாகப் பெற்றுக்கொள்வனவாகும்.

Cultural Type
பண்பாட்டு மாதிரி

தனிமனிதர் சிறப்பியல்பு மாதிரியானது ஒரு குறிப்பிட்ட பண்பாட்டால் உருவாக்கப் படுகிறது அல்லது ஒரு குறிப்பிட்ட பண்பாட்டோடு தொடர்புகொண்டு முறையாகச் செயல்படுவதால் பொருளுடையதாகிறது. இது ஒரு சமூகப்பண்பு மாதிரியைப் போன்றது.

Cultural Universals
பண்பாட்டுப் பொதுமைகள்

உலகிலுள்ள அனைத்துப் பண்பாடுகளுக்கும் பொதுவான கூறுகள். எண்ணற்ற கூறுகள் அனைத்துப் பண்பாடுகளுக்கும் பொதுவாக உள்ளன. காரணம் மனிதனின் அடிப்படைத் தேவைகள் அனைத்துப் பண்பாடுகளிலும் ஒன்றாக இருப்பதேயாகும்.

Cultural Values
பண்பாட்டு மதிப்பீடுகள்

மக்கள் அனைவரும் கூட்டாகச் சேர்ந்து வாழ முற்படும்பொழுது எவைஎவை இன்றியமையாதவை எனக் கருதப்படுகிறதோ அவை பண்பாட்டு மதிப்பீடுகள் எனப்படும் பண்பாட்டு மதிப்பீடுகள் தனி மனிதரைச் சாராமல் அவர் சார்ந்த குழுவிற்கும். சமுதாயத்துக்கும் பொருந்தக்கூடியதாக இருக்கும். சான்றாக நீதிக்குக் கட்டுப்படுதல், அறம் செய்து வாழ்தல், பிறன் மனை நோக்காமை போன்ற பல மதிப்பீடுகள் சமுதாய வாழ்விற்கு இன்றியமையாதவை எனக் கருதப்படுகின்றன.

Culture
பண்பாடு

ஒரு சமுதாயத்தில் வழக்கமாகச் செயற்படுத்தப்பட்டுள்ள, நன்குணர்ந்த, சமூக அடிப்படையிலான பொருளுடைய ஒழுக லாறுகள். இதில் வழக்கம் அல்லது மரபு, கட்டளைச் சட்டங்கள், மொழி, மதம், பொருளதார மற்றும் அரசியல் பழக்கங்கள், கலை போன்றவை அடங்கும்.

ஒரு குறிப்பிட்ட சமுதாய மக்களால் கற்றுக்கொண்ட அல்லது பகிர்ந்துகொண்ட அனைத்தும் மற்றும் மக்களால் உருவாக்கப்பட்ட

சமூக அடிப்படையில் பொருளுடைய அனைத்துப் பொருட்கள், உபகரணங்கள் ஆகியவையும் பண்பாட்டில் அடங்கும். மேலும் பண்பாடு என்ற சொல் மனிதன் விலங்குகளைவிடத் தனிச் சிறப்புடையவன் என்ற நிலையில் உயிரியல் அடிப்படையில் மனிதன் மரபுவழியாகப் பெற்றுக்கொள்ளும் குணாதிசயங்களையும் குறிக்கும். பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கநெறிகள், சட்டம், வழக்கம் முதலானவையும், மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும், பழக்கங்களும் அடங்கிய முழுமைத் தொகுதி யாகும்.

Culture Accumulation
பண்பாட்டுக்குவியல்

புதிய பண்புக்கூறுகளை விட்டுவிடாமல் நடைமுறை யிலிருக்கும் பண்பாட்டு அடிப்படை யோடு அவற்றையும் சேர்த்துக் கொள்வதன் மூலம் ஒரு பண்பாடு விரிவுபடுவதைக் குறிக்கிறது. ஒரு பண்பாடானது கட்டிக் காக்கப்பட்டு ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு அனுப்பப்படுகிறது. பண்பாட்டுக் குவியலானது அடிப்படைக்கூறுகளான உபகர ணங்கள், திறமைகள், கருத்துக்கள் போன்றவைகளாகும்.

Culture Adhesion
பண்பாட்டு ஒட்டுப்பண்பு

ஒரு பண்பாட்டின் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பண்புக்கூறுகளுக்கிடையிலான இணையும் தன்மையின் வளர்ச்சியே பண்பாட்டு ஒட்டுப்பண்பாகும். மேலும் இயல்பான செயல் பாட்டுத் தொடர்பு இல்லாத பண்பாட்டுக்கூறுகளுக்கிடையிலான இணையும் தன்மையும் பண் பாட்டு ஒட்டுப்பண்பாகும். இத்தகைய இணைவானது குறிப்பிட்ட பண்பாட்டின் வரலாற்றில் ஏற்பட்ட சில சூழ்நிலைகளின் காரண மாகவோ அல்லது அத்தகைய தனிக்கூறுகள் பிற பண்பாட்டுத் தொடர்பினால் பெற்றுக் கொள்ளப் பட்டதாகவோ இருக்கலாம்.

Culture Area
பண்பாட்டுப் பரப்பு

பண்பாட்டு வகைகளையும், பண்பாட்டுப் பரவலையும் ஆராய் வதில் செல்வாக்கு பெற்று விளங்கும் ஒரு கோட்பாடு. பரந்து விரிந்த பல்வகையான மக்கள் வாழும் முறையை அறியும்பொருட்டு அந்நிலப்பரப்பினைப் பல பிரிவு களாகப் பிரித்து ஆராய்தல் பண்பாட்டுப் பரப்பாகும். "ஒத்த பண்பாடுகளைக் கொண்ட புவிப்பரப்பே பண்பாட்டுப்பரப்பாகும்" என விஸ்லர் சுருக்கமாக வரையறை செய்துள்ளார்.

Culture Base
பண்பாட்டு ஆதாரம்/பண்பாட்டு அடித்தளம்

குறிப்பிட்ட மக்களின் பண்பாட்டில் காணப்படும் மூலப்பொருட்கள் மற்றும் கலை நுணுக்கத் திறன்கள் புதியகண்டுபிடிப்புகள்மேற்கொள்ளும் அளவுக்குக் காணப்படுமேயானால் அது பண்பாட்டு ஆதாரம் அல்லது

பண்பாட்டு அடித்தளம் எனப்படும்.

Culture Centre
மையப் பண்பாடு

ஒவ்வொரு பண்பாட்டுப் பகுதியிலும் குறிப்பிட்ட சில குழுவினர் அந்த நிலப்பரப்பின் மையப் பகுதியிலோ அதற்கு மிக அருகிலோ வாழ்வர். அவர்கள் அந்தப் பண்பாட்டுப் பகுதியின் அனைத்துக் கூறுகளையும் அல்லது மிகப் பெரும்பான்மையான கூறுகளை உடையவர்களாக இருப்பார்கள். அம்மக்களின் பண்பாடே அப்பகுதியின் உரு மாதிரிப் (Typical) பண்பாடாகும். அப்பகுதியை அப்பண்பாட்டின் மையம் அல்லது மையப் பண்பாடு என்பர்.

Culture Complex
பண்பாட்டுக் கலவை

பல கூறுகள் ஒன்றாகக் கலந்து ஒரு சேர்மமாகக் காணப்படுவது பண்பாட்டுக் கலவையாகும். ஒன்றுக்கு மேற்பட்ட கூறுகளால் இணைக்கப்பட்ட இப்பண்பாட்டுக் கலவையானது பண்பாடு என்னும் இயந்திரத்தில் பல துணை உறுப்புகளாக இணைக்கப்பட்டுள்ளது. சான்றாகக் கால்பந்தாட்டத்தை எடுத்துக்கொண்டால் விளையாட்டுத்திடல், பார்வையாளர்கள், விளையாட்டுக் கருவிகள், விளையாட்டு நுட்பம், ஆட்டக்காரர்கள், நடுவர் போன்ற பல கூறுகள் அதனுள் இடம் பெற்றுள்ளன.

Culture Conflict
பண்பாட்டு முரண்பாடு

இரண்டு பண்பாட்டுக் குழுக்களுக்கிடையிலான உறவு அல்லது தொடர்பு. இதில் ஒவ்வொரு குழுவும் ஏனைய குழுப் பண்பாட்டை அழிக்கவோ அல்லது மேலாதிக்கம் செலுத்தவோ நாடுமேயானால் அதைப் பண்பாட்டு முரண்பாடு அல்லது பண்பாட்டு மோதல் என்பர்.

Culture Contact
பண்பாட்டுத் தொடர்பு

வெவ்வேறு பண்பாடுகளை உடைய குழு அங்கத்தினர்களுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்களின் காரணமாக இரு பண்பாடுகளுக்கிடையேயும் பண்பாட்டுக்கூறுகளின் பரவல் ஏற்படுகிறது. இதனைப் பண்பாட்டுத் தொடர்பு என்பர். பண்பாட்டுக் குழுக்களிடையே ஆரம்பநிலையில் காணப்படும் பரஸ்பரமான முன்னுணர்வு அல்லது தெரிநிலையும் பண்பாட்டுத் தொடர்பு ஆகும்.

Culture Myth
பண்பாட்டுப் புனைந்துரை

ஒரு சமுதாயத்தின் தோற்றம் குறித்த கற்பனைப் பழங்கதை விளக்கம். சமூகப் பழக்கங்கள் அல்லது பண்பாட்டுப் பொருள் ஆகியவை ஒரு பண்பாட்டுத் தெய்வத்தின் அல்லது மாவீரனின் செயற்பாடுகளைச் சார்ந்ததாகக் காணப்படும். இதுவே பண்பாட்டுப் புனைந்துரை ஆகும்.

Culture Object
பண்பாட்டுப் பொருள்

சமூக அடிப்படையில் வரையறுக்கப்பட்ட செயல்நோக்குக்குப் பயன்படுத்தப்படுகின்ற, மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரு மூலப் பொருள். இப்பொதுக்கருத்து தொழில்நுட்ப நிலையில் உண்மையிலேயே மனிதனால் உருவாக்கப்படாத பொருட்களையும் சேர்க்கிறது. எனினும் அது ஒரு சமூகப் பொருளுடையதாகக் காணப்படும். சான்றாக ஒரு தூய ஏரி அல்லது தூய மலை போன்றவற்றைக் கூறலாம்.

Culture Pattern
பண்பாட்டுப் பாங்கு

ஒரு பண்பாட்டின் அனைத்து தனிக்கூறுகளையும் சிக்கல்களையும் ஒருபொருளுடைய முழுமையாக்கும் நம்பத்தக்க பொருள் விளக்கத்தைக் குறிப்பிடுகின்ற ஓர் உடன்படிக்கை. இது ஏனைய பண்பாடுகளோடு ஒப்பிடுவதற்கு முழு பண்பாட்டின் பொதுவான பண்புருவருணனையாக எண்ணப்படுகிறது.

Culture Shock
பண்பாட்டு அதிர்ச்சி

ஒருவர் புதிய நாட்டிற்கோ அல்லது வேறுபட்ட பண்பாட்டு முறைகளைக் கடைப்பிடிக்கும் இடத்திற்கோ செல்லும்போது அப்பண்பாட்டு முறைகளைப் பற்றி ஏற்கெனவே ஒன்றும் தெரியாததால் ஏற்படும் குழப்பம் அல்லது அதிர்ச்சியே பண்பாட்டு அதிர்ச்சியாகும். இவ்வதிர்ச்சி பண்பாட்டைச் சரியாகப் புரிந்து கொள்ளாததாலும், பண்பாட்டு வேறுபாடுகளாலும் ஏற்படுகிறது. பொதுவாக மக்கள் பிற நாட்டில் குடியேறும்பொழுது இத்தகைய அதிர்ச்சியைப் பெறுகிறார்கள். ஒரு இந்தியருக்குச் சப்பானியக் குடும்பம் தங்கள் குடும்ப நீர்த்தடாகத்தில் ஆடையின்றி எல்லோரும் ஒன்றாகக் குளிப்பது அதிர்ச்சியைத் தரும்.

Culture Spread
பண்பாட்டுப் பரவல்

ஒவ்வொரு பண்பாட்டிற்கும் ஒரு மையம் இருக்கவேண்டியது அவசியம். அந்த மையமே ஆரம்பத்தில் அப்பண்பாட்டினர் குடியேறிய இடமாய் இருக்கமுடியும். அம்மையத்திலிருந்தே அப்பண்பாட்டின் கூறுகள் வெளிநோக்கிப் பரவியிருக்கும் என்ற கருத்து பண்பாட்டுப் பரவலாகும்.

Culture Trait
பண்பாட்டுக் கூறு

பண்பாட்டின் மிகச் சிறிய அலகு பண்பாட்டுக் கூறு ஆகும். ஒரு பண்பாட்டின் நடத்தைமுறை மற்றும் பயன்பாட்டுப் பொருள்கள் ஆகியவற்றை எந்த அளவுக்குக் குறைத்துக் காணமுடியுமோ அந்தஅளவிற்குக் குறைத்துக் காணக்கூடிய ஒன்றே பண்பாட்டுக் கூறு ஆகும். நகம், கத்தி, எழுதுகோல் போன்றவற்றைப் பொருள்சார் பண்பாட்டுக் கூறுகளாகவும் தலை வாருதல், நண்பர்களைச் சந்திக்கும்போது கைகுலுக்குதல், அன்பை வெளிப்

படுத்த முத்தம் கொடுத்தல் போன்றவற்றைப் பொருள்சாராப் பண்பாட்டுக் கூறுகளாகவும் கூறலாம்.

Culture Typology
பண்பாட்டுப் படிமாதிரி மரபாய்வு

பண்பாடுகளின் வாதப்பொருத்தமுடைய வகைப்படுத்தல் அல்லது வகுப்புமுறை. இது பண்பாடுகளிடையே உள்ள ஒப்புமைகளையும் வேற்றுமைகளையும் தனிச் சிறப்புகளால் விளக்குவதற்குப் பயனுடையதாக உள்ளது.

Culturology
பண்பாட்டியல்

பண்பாடுகளின் தோற்றம், வளர்ச்சி ஆகியவற்றைக் குறித்த ஆராய்ச்சி அல்லது படிப்பு.

Custom
வழக்கம்

வழக்கம் என்ற சொல் நிலைநாட்டப்பட்ட முறையான சிந்தனை மற்றும் செயலைக் குறிக்கிறது. பொதுவான இச்சொல் மானிடவியலாரால் பலநிலைகளிலும் பயன்படுத்தப்படுகிறது. இதன் பயன்பாட்டைக் கவனத்தில் கொண்டால், அன்றாட வாழ்வின் நடைமுறையான செயல்கள் என்பதைக் குறிக்கிறது.

Customary Laws
மரபுசார் சட்டங்கள்

அரசு அமைப்பைக் கொண்டிராத பல சமுதாயங்களில் எழுதப்படாத சட்டங்களை மையமாகக் கொண்டே அரசியல் நடவடிக்கைகள் செயல்படுகின்றன. குறிப்பாகப் பழங்குடிச் சமுதாய அமைப்பில் இவ்வகை எழுதப்பெறாச் சட்டங்கள் மிகச் சிறப்பாகக் காணப்படுகின்றன. இவை மரபு வழியாக மிக உறுதியுடன் மக்களால் பின்பற்றப்பட்டு வருகின்றன. இவ்வகைச் சட்டங்களை மானிடவியலார் மரபுசார் சட்டங்கள் என்பர். இவ்விதிமுறைகள் நடக்கை முறைகளை விதிமுறைப் படுத்துதல், செயற்படுமுறைகளை வலியுறுத்துதல், மீறுபவர்களுக்குத் தண்டனை அளித்தல் போன்றவற்றை அளித்தாலும் முதல்நிலையாகப் பாரம்பரிய பழக்கங்களின் முறைப்படுத்தலாக உள்ளது.

Cyclical Movement
சுழல் இயக்கம்

சில நிகழ்ச்சிகள் அல்லது நிலைமைகளின் மறுநிகழ்வை உள்ளடக்கிய திரும்பத் திரும்ப நேரும் இயல்புடைய மாறுதல் சுழலின் எதிர்திசை திரும்பும் நிலைமாற்றம் காலத் தொடர்ச்சியில் வேறுபடும். வியாபாரச் சுழலானது சுழல் இயக்கத்துக்கு ஒரு சான்றாக அமைந்துள்ளது.

D

Data
தரவுகள்

குறிப்பிட்ட ஆய்வுக்காகக் களப்பணியின் மூலமும் நூல்கள் மற்றும் வெளியிடப்பட்ட அல்லது வெளியிடப்படாத ஆவணங்களிலிருந்தும் சேகரிக்கப்படும் செய்திகள், களப்பணி மூலம் சேகரிக்கப்படும்

தரவுகள் முதல்நிலைத் தரவுகள் என்றும் ஏனையவை இரண்டாவது நிலைத்தரவுகள் என்றும் இரு வகைப்படும்.

Decay of the World
உலகச் சீரழிவு

இப்போதுள்ள காலத்தைக் காட்டிலும் கடந்தகாலமே பொன்னானதும் சிறப்பானதும் என்ற கருத்து. மனித சமுதாயத்தின் வரலாறு தொன்மையான பொற் காலத்தில் தொடங்கி வெள்ளி, செம்புக் காலங்களைக் கடந்து இறுதியில் இரும்புக் காலத்தை (சமகாலம்) அடைந்துள்ளது என்ற கருத்து. ஆனால் அக்கருத்தை இயற்கை அறிவியலின் வளர்ச்சி மாற்றியது. இயற்கை அறிவியல் துறையைச் சேர்ந்தோர் மனிதனின் திறமைக்கு ஓர் எல்லையில்லை என அறிவுறுத்தினர்.

Decentralization
மைய வலுதளர்த்துதல்

இச்சொல் வாழ்க்கைச் சூழல் தொடர்பான ஒரு நடைமுறையைக் குறிக்கிறது. ஒரு நகரத்தின் நடுப்பகுதியில் நிலம் மற்றும் ஏனைய பொருட்களின் விலை உச்சக்கட்டத்தை அடைந்து அதிக நெருக்கடி ஏற்படும்போது வியாபாரம், தொழிற்சாலை மற்றும் ஏனைய சேவைச் செயலாண்மைப் பிரிவுகள் அங்கிருந்து வேறு இடங்களுக்கு நகருகின்றன. அத்தகைய இயக்கமானது புறநகர் பகுதியில் அமைந்துள்ள அதிக நிலப்பரப்பும் குறைந்த விலைவாசியும் உடைய இரண்டாவது நிலை மையங்கள் அல்லது கிளைமையங்களை நோக்கி நடைபெறுகிறது. இத்தகைய நடைமுறையானது மையப்படுத்துதலுக்கு நேர்மாறானதாகும்.

Deconcentration
செறிவு நீக்குதல்

ஒரு நகரத்தின் மையப்பகுதியில் வாழும் மக்களின் எண்ணிக்கை குறைவடைகின்ற வாழ்க்கைச்சூழல் நடைமுறையைக குறிக்கிறது. உறைவிடங்கள் புறநகர்ப் பகுதிகளுக்கு நகர்வதனால் இத்தகைய செறிவுநீக்கம் ஏற்படுகிறது.

Deduction
உய்த்துணர்தல்

பொதுவான விதிமுறைகளிலிருந்து குறிப்பிட்ட எடுத்துக்காட்டுகளை ஆராயும் நடைமுறை உய்த்துணர்தல் அறிவியல்ரீதியான முறைகளில் மிகவும் பயனுடையதாக அமைகிறது. அதாவது திட்டவட்டமான கருதுகோள்கள் அல்லது குறிப்பிட்ட முன்மதிப்பீடுகள் விரிவான கோட்பாட்டு விதிமுறைகளிலிருந்து வருவித்து உருவாக்கப்படும்போது உய்த்துணர்தல் மிகவும் பயன்படும்.

Definition of the Situation
நிலைமை வரையறை

ஒரு சமூக உளவியல்சார் நடைமுறையைக் குறிக்கிறது. அதாவது தனிநபர் எந்தவிதமான மனப்பான்மை மற்றும் நடக்கைமுறை உகந்ததாக இருக்குமென்பதை முடிவுசெய்யுமுன் குறிப்பிட்ட நிலைமையை ஆராய்ந்து

சீர்தூக்குதலைக் குறிக்கிறது.

Delicts
சட்டமீறுகைகள்

சட்டமுறைகளின் சமூகவியல் சார் நடைமுறையில் குற்றஇயல் மற்றும் குற்றஇயல் சாராத குற்றச்செயல்களை வேறுபடுத்துவது தேவையானதாக உள்ளது. காரணம் ஒரு சமுதயாத்தில் குற்ற இயல் சாராத ஒரு குற்றமாகக் கருதப்படுவது இன்னொரு சமுதயாத்தில் ஒரு தவறாக எண்ணப்பட்டாலும் தனிப்பட்ட நிகழ்வாகக் கருதப்படும். ரெட்கிளிப் பிரவுன் (Radcliffe -Brown) என்பவர் பொதுமக்கள் சட்டமீறுகைகள் மற்றும் தனிப்பட்ட சட்டமீறுகைகள் ஆகிய சட்டங்களுக்கிடையிலான வேறுபாடுகளை அறிமுகப்படுத்தியுள்ளார். இதன் அடிப்படையில் வெவ்வேறு சமுதயாங்களில் வெவ்வேறுவிதமான குற்றங்களுக்கு வெவ்வேறுவிதமான இசைவாணை வழங்குவது குறித்த சமூகவியல்சார் விவாதங்கள் உள்ளன.

Delinquency
நெறிபிறழ்தல்

இச்சொல் பொதுவாக ஒரு இளைஞனின் எந்த ஒரு விரும்பத்தகாத நடத்தையையும் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. அதாவது குடும்பத்துக்கு வெளியே அதிகாரமுடைய அல்லது உரிமையுடைய நபர்களின் கவனத்தை ஈர்க்கும் அளவிலான விரும்பத்தகாத செயல்கள். இதில் பணிக்குச் செல்லாமை அல்லது மட்டம் போடுதல், பள்ளிக்கூடத்தில் திருத்தமுடியாத நிலையில் இருத்தல், சிறு குற்றங்கள் மற்றும் சில வேளைகளில் சீரிய குற்றங்கள் ஆகியவை அடங்கும்.

Delinquent Group
நெறிபிறழ் நடத்தைக் குழு

தங்கள் சமுதாயத்தின் நெறிமுறைகளையும், மதிப்பீடுகளையும், ஒழுக்கநெறிகளையும், பொதுவான மரபுகளையும் மீறிச் செயல்படும் இளவயதினர் அடங்கிய குழு.

Delusion
மருட்சி

உண்மைநிலைக்கு முற்றிலும் மாறானதாக இருந்தாலும் தனிநபரால் உறுதியாகப் பற்றிக்கொள்ளப்படுகின்ற ஒரு நம்பிக்கையைக் குறிக்கிறது. அது தவறான நம்பிக்கை என்பதற்குப் போதுமான சான்றுகள் இருந்தாலும் குறிப்பிட்ட நம்பிக்கை அவரால் தக்கவைத்துக் கொள்ளப்படும்.

Democracy
குடியாட்சி

ஆளப்படுபவர்களின் ஒப்புதலின் அடிப்படையிலான அரசியல் முறையைக் குறிக்கிறது அதாவது நேரடியாகவோ மறைமுகமாகவோ சமுதாயத்தின் பெரும்பான்மை அங்கத்தினர்களின் விருப்பத்தின் அடிப்படையிலான அரசு. நேரடி குடியாட்சியில் மக்களாகவே சட்டமியற்றுவார்கள். அதாவது சட்டத்தின்மீது நேரடியாக வாக்களிப்பார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளடங்கிய குடியாட்சி

யானது ஒரு பொதுவான முறையும் பெரிய சமுதாயங்களுக்கு மிகவும் பொருத்தமானதும ஆகும் இதில் குடிமக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பார்கள், அவர்கள் சமுதயாச் சட்டமியற்றுவார்கள்.

Demography
மக்கள்தொகையியல்

மக்கள்தொகை மாறுதல்களையும், பிரச்சனைகளையும் குறித்து ஆராயும் இயல் இது மக்கள் தொகை மாறும்விதம், அதன் மூலம் எவ்விதப் பிரச்சனைகள் விளைகின்றன என்பதை ஆராய்கிறது.

Denotative term
தனிப்படக் குறிக்கும் சொல்/ விளக்கச்சொல்

குறிப்பிட்ட ஒரு உறவை மட்டும் குறிக்கும் சொல் சான்றாகத் தந்தை, தாய், கணவன், மனைவி ஆகிய சொற்களைக் கூறலாம். விளக்கச் சொற்கள் இரண்டு அல்லது இரண்டுக்கும் மேற்பட்ட தனிமச் சொற்களை இணைத்தும் அல்லது தனிமச்சொல்லை இரட்டித்தும் உருவாக்கப்படும் சான்றாக 'அம்மப்பா' 'அப்பப்பா' போன்ற சொற்களைக் கூறலாம்

Dependent Variables
சார்புடைய மாறிகள்

சமூக அறிவியலில் அனைத்து வகையான பகுப்பாய்வுகளும் சார்புடையதும், சார்பற்றதுமான மாறிகளைக்கொண்டு மேற்கொள்ளப்படுகின்றன சார்பற்ற மாறிகளால் கட்டுப்படுத்தப்பட்டோ, மாற்றம்பெற்றோ காணப்படும் காரணிகள் சார்புடைய மாறிகள் எனப்படும்

Depth Interview
ஆழ்நிலை நேர்காணல்

தீவிரமான மற்றும் முழுவிவர நேர்காணலைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. பொதுவாக அறியாத மாறிகளை தன்னுரிமையுடன் முற்றாய்தலுக்கு அனுமதிக்க விரிந்த சமூக அல்லது உளவியல்சார் சூழ்நிலையில் தகவலாளியின் மறு மொழிகளை ஆராய மற்றும் புதிய உள்நோக்குகளை வெளிப்படுத்துதல் போன்றவற்றிற்காக ஆழ்நிலை நேர்காணல் வடிவமைக்கப்படும்.

Dermatoglyphics
தோற்கூற்றியல்

மனிதனின் உள்ளங்கைகளிலும், உள்ளங்கால்களிலும், விரல்களிலும் உள்ள ரேகைகள், வரியமைப்புகள் முதலானவற்றையும் தலைச் சுழிகளையும் பற்றி அறியும் பிரிவே தோற்கூற்றியலாகும் முதலில் இப்பிரிவு தோற்கூற்றியல் கூறுகளைக் கொண்டு மனித இனங்களை அடையாளங் காணும்வகையில் உடல்சார் மானிடவியலில் ஒரு உட்பிரிவாக இருந்தது. தற்போது இப்பிரிவு பலநிலைகளில் வளர்ச்சிபெற்று உடற்கூற்றியல், கருவியியல், மருத்துவவியல் போன்ற பல துறையில் பயனுடையதாக உள்ளது.

Derivative terms
உருவாக்கச்சொற்கள்

உறவுமுறைச்சொற்களில் தனிமைச்சொல்லோடு உறவு முறையை ஏற்று நிற்காத சொல்லை இணைத்து உருவாக்குகிற சொல் உருவாக்கச்சொல் எனப்படும். சான்றாகப் பெரியப்பா, சின்னம்மா, கொள்ளுப்பேரன், கொள்ளுப்பாட்டன் போன்ற சொற்களைக் கூறலாம். பொதுவாக ஒரு மூலச்சொல் லோடு இன்னொரு சொல்லை இணைத்து உருவாக்கப்படும் சொல் உருவாக்கச் சொல்லாகும்.

Descent
மரபுவழி வருகை

ஒரு நபருக்கும் அவருடைய மூதாதையர்களுக்குமிடையிலான அங்கீகரிக்கப்பட்ட சமூக இணைப்பை விளக்க இச்சொல் பயன்படுத்தப் படுகிறது. ஒருவர் யாரிடமிருந்து மரபுவழி வந்தாரோ அவரே அவருடைய மூதாதையர் ஆகும். அத்தகைய மரபுவழி வருகை தகப்பனின் குடும்பவழியிலோ தாயின் குடும்ப வழியிலோ அல்லது இருவரின் குடும்பவழி களிலோ காணப்படும்.

Descent and Kinship
மரபுரிமையும் உறவுமுறையும்

ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட ஓர் உறவுக்கூட்டமுண்டு. அவர் களில் சிலர் மிக நெருங்கியவர் களாகவும் ஏனையோர் வெவ் வேறுநிலைகளில் நெருங்கியவர் களாகவும் உள்ளனர். நெருக் கமான உறவினர்கள் என்னும் பிணைப்பு அந்தந்தச் சமுதாய மரபுமுறைக்கு ஏற்ப அமைகிறது. அனைத்துச் சமுதாயங்களிலும் நிலவும் மரபுமுறையை நான்கு வகைகளாகப் பாகுபடுத்தலாம். 1. இருவழி மரபு (Bilateral or Double Descent) 2. ஒருவழி மரபு (Unilineal Descent), 3. ஈரியல் மரபு (Ambilineal or Cognetic Descent) 4. இணைமரபு (Parallel Descent).

Descent Groups
மரபுவழிக் குழுக்கள்

ஒரு சமூகக்குழுவில் உறுப்பினர் நிலை ஓர் உண்மையான அல்லது புனைவியலான மூதாதையரிடமி ருந்து பொதுவான மரபுவழி வருகையைச் சார்ந்திருந்தால் அது மரபுவழிக்குழு எனப்படும். இவ்வாறு ஒரு கால்வழியானது ஒருவழி மரபுக்குழுவாகும். அதில் உறுப்பினர் நிலை தாய்வழி அல்லது தந்தைவழி மரபில் அமையும்.

Descriptive Kinship
விளக்க உறவுமுறை

எந்த ஓர் உறவினரும் வேறு ஒருவரோடு இணைத்து வகைப்படுத்தும் சொல்லால் குறிப்பிடப்படாதிருப்பது. தாயைக் குறிப்பிட ஒரு சொல், தாயின் சகோதரியைக் குறிப்பிட வேறொரு சொல். இவ்வாறே தந்தை, தந்தையின் சகோதரர், தாயின் சகோதாரர் ஆகியோர் தனித் தனிச் சொற்களால் குறிப்பிடப் படுகின்றனர். அதேப்போன்று சொந்தச் சகோதரனைக் குறிப்பிடும் சொல்லால் தந்தையின்

சகோதரனின் மக்களையோ, தாயின் சகோதரியின் மக்களையோ குறிப்பிடுவதில்லை சூடானிய உறவுமுறை விளக்க உறவுமுறைக்கு எடுத்துக்காட்டாகும்.

Descriptive Linguistics
விளக்கமொழியியல்

மொழிகள் அவற்றின் அமைப்பிலும் பயன்பாட்டுநிலையிலும் எவ்வாறு வேறுபட்டுக் காணப் படுகின்றன என்பதை விளக்கு வது விளக்க மொழியியல்.

Descriptive Term
விளக்கச்சொல்

காண்க : **Denotative Term**

Deviance
மரபுசாராமை

சமுதாயத்தின் பாரம்பரிய விதிமுறைகளிலிருந்து மாறுபட்ட நடத்தை மரபுசாரா நடத்தை எனப்படும். இத்தகைய மரபுசாரா நடத்தையால் சமுதாயத்தில் சிக்கல்கள் ஏற்படுமாதலால் அத்தகைய செயல்களில் ஈடுபடுபவர்கள் தண்டிக்கப்படுவார்கள் அல்லது திருத்தப்படுவார்கள்.

Deviant Behaviour
மரபுசாரா நடக்கை

மரபுசாரா நடக்கை குறித்த சமூகவியல் ஆய்வானது மிகப் பரந்துபட்ட வரையறையைக் கொண்டுள்ளது. அதாவது சமுதாயத்தில் விலக்கிவைக்கப்பட்ட இயல்நிலையிலிருந்து வழுவிச் செல்லுகிற எந்தஒரு நடக்கையையும் குறிக்கிறது. நடக்கைமுறைகள் குறிப்பாகச் சட்டத்துக்குப் புறம்பானதாக இல்லாவிட்டாலும் வெவ்வேறுவிதமான நடக்கை முறைகள் சமூகரீதியில் கண்டிக்கப் பட்டவையாகும். அருவருக்கத்தக்க சொற்களைப் பேசுதல், தீய நண்பர்களோடுள்ள தொடர்பு, குடிப்பழக்கம் ஆகியவை வெளிப்படையான சான்றுகளாகும்.

Deviant Habits
மரபுசாராப் பழக்கம்

சமூகவிதிமுறைகளையும் நன்னடத்தை விதிகளையும் மீறித் தீயசெயல்களில் ஈடுபடும் பழக்கம் மரபுசாராப் பழக்கமாகும். இப்பழக்கம் தண்டனைக்குரியதாகும். இப்பழக்கத்தில் ஈடுபடுபவர்களைத் திருத்துவதற்கான வழிமுறைகளும் சமூகத்தில் காணப்படும்.

Deviant Sub Culture
மரபுசாரா உள்பண்பு

சமூகத்தில் பொதுவாக எல்லோராலும் பின்பற்றப்படுகின்ற வாழ்க்கை முறைகளைப் பின்பற்றாமல் மாறுபட்ட வாழ்க்கைமுறைகளைக் கடைப்பிடித்தல். சான்றாகப் பரத்தையர்கள் தங்கள் வாழ்க்கையில் மாறுபட்டவர்களாக உள்ளனர். திருமண வாழ்விற்கு முக்கியத்துவம் அளிக்காமல் மாறுபட்ட வாழ்க்கை முறைகளைக் கடைபிடிக்கிறார்கள்.

Dialectic
வாதமுறை ஆய்வு

எதிர்மறையான கருத்துக்களை வளர்த்து அதற்கான தீர்வுகளைக் காண்பதன் வாயிலாகச் சிந்தனை

முறையை வளர்ப்பது வாதமுறை ஆய்வாகும். வாதமுறை அனுகுமுறை முற்காலக் கிரேக்கத் தத்துவ ஞானிகள் காலத்திலிருந்தே இருந்து வருகிறது.

Diaspora
சிதறிப்பரவல்

யூதர் தாயகத்திலிருந்து வெளியேறி உலகெங்கும் சிதறிப் பரவிய நிகழ்ச்சியைக் குறிப்பிட இச்சொல் பயன்படுத்தப்பட்டது. தற்போது இச்சொல் தங்கள் அரசின் பாதுகாப்பின்றி வெளிநாடுகளில் வாழும் எந்தக் குழுவினரையும் குறிப்பிடப் பயன்படுத்தப்படுகிறது. ரசியப் புரட்சிக்குப்பின் ரசியாவிலிருந்து வெளியேறி மேற்கு ஐரோப்பாவில் வாழ்ந்து வருபவர்களை இதற்குச் சான்றாகக் கூறலாம்.

Differential Association
வேற்றுச் சேர்கை

ஒருவர் குற்றங்கள் அதிகம் நிகழும் சூழ்நிலையில் இருப்பதாலும் அல்லது குற்றவாளிகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதாலும் அவரும் குற்றவாளியாகவோ அல்லது கெட்டவராகவோ மாறுவதற்குத் தேவையானவற்றைக் கற்றுக்கொள்கிறார். இக்கோட்பாடு எட்வின் எச். சதர்லாண்ட் என்பவரால் உருவாக்கப்பட்டது.

Differential Opportunity
வேற்றுச் சந்தர்ப்பம்

பெரும்பாலும் ஒருவரின் சமூக வகுப்பு மற்றும் இனநிலைகள் அவர் குற்றவாளியாகவோ அல்லது தீயவராகவோ ஆவதற்குரிய சந்தர்ப்பங்களை உண்டாக்குகின்றன என்ற கருத்தே வேற்றுச் சந்தர்ப்பம் ஆகும்.

Differentiation
வேற்றுமை விளக்கம்

சமூக மாறுதல்கள் குறித்த கோட்பாடுகளில் வேற்றுமை விளக்கம் முக்கியமாகப் பயன்படுத்தப்படுகிறது. ஒரு சமூக நிறுவனத்தால் நிகழ்த்தப்படும் ஓரினக்கூட்டான சமூக செயல்கள் வெவ்வேறு நிறுவனங்களுக்கிடையே பிளவுபடுத்தப்படும் நடைமுறையைக் குறிக்கிறது. வேற்றுமை விளக்கம் சமுதாயப் பிரிவுகளில் தனிப்பண்பு வளர்ச்சியைச் சுட்டிக்காட்டுகிறது. இது சமுதாயத்துக்குள் அதிக முரண்கூறுகளை ஏற்படுத்துகிறது. சான்றாக ஒரு குடும்பம் ஒரு காலத்தில் இனவிருத்தி, பொருளாதாரம் மற்றும் கல்விப்பணிகளை உடையதாக இருந்தது. தற்காலச் சமுதாயத்தில் குடும்பத்துக்கு வெளியே தனிப்பண்புடைய நிறுவனப் பணிகள் மற்றும் கல்வி ஆகியவற்றை வளர்த்துள்ளதைக் கூறலாம்.

Diffuseness
பரவலாகுகை

ஒரு சமூக உறவில் தொடர்புடைய நபர்களிடையே பரந்த அளவெல்லையிலான உரிமைகளும் கடப்பாடுகளும் நிலவ வேண்டுமென்ற எதிர்பார்ப்பைக் குறிக்கிறது. அவர்களின் கடப்பாடுகளின்

அளவு தனிப்பட குறித்துக் காட்டப்படாத நிலையில் பிற நபர்கள் மற்றும் குழுக்களுக்குச் செய்யவேண்டிய கடப்பாட்டு வரம்புக்குள் மட்டும் நின்று விடுகிறது.

Diffusion
பரவல்

ஒரு பண்பாட்டின் சிறப்புப் பண்பை வேறொரு பண்பாடு பெற்றுக்கொள்ளும் நிகழ்வைக் குறிப்பது பரவல்முறையாகும். பரவல்நிகழ்வு நேரடித்தொடர்பாலும் இடைநிலைத் தொடர்பாலும் நிகழவல்லது. நேரடித் தொடர்பால் நிகழும் பரவல்முறைக்குக் காகித உற்பத்தி செய்யும் முறை பரவியதை எடுத்துக்காட்டாகக் கூறலாம். இடைநிலைத் தொடர்பால் பரவும் முறைக்கு ஒரு சமுதாயத்தின் சிறப்புக்கூறு மற்றொரு பண்பாட்டுக்கு வணிகர்கள் மற்றும் போர் வீர்கள் மூலம் பரவும் நிகழ்ச்சியைச் சான்றாகக் கூறலாம்.

Diffusionism
பரவல்வாதம்

மானிடவியலில் மனிதப் பண்பாட்டின் வளர்ச்சியில் பரவுதலின் முக்கியத்துவத்தை வற்புறுத்தும் கோட்பாட்டு நோக்கு பரவல்வாதமாகும். பரவல்வாதக் கோட்பாடுகள் மனித வரலாற்றில் தொடர்புடைய புதிய கண்டுபிடிப்புகளின் அருமை மற்றும் பண்பாட்டுக்கூறுகளைப் பரம்பரமாகக் கடன்வாங்குதலின் முக்கியத்துவம் ஆகியவற்றை வற்புறுத்துகின்றன.

Disaster Studies
சேதச்செயல் ஆய்வு

சமூக அமைப்பாண்மை மற்றும் தனிநபர்களின் நடக்கைமுறை ஆகியவற்றின் மீது திடீரென ஏற்படும் சேதச்செயல்களின் தாக்கத்தை ஆராய்வது சேதச்செயல் ஆய்வாகும். பூமி அதிர்ச்சி, வெள்ளப் பெருக்குப் போன்றவற்றின் தாக்கத்தைச் சான்றாகக் கூறலாம்.

Discrimination
வேறுபாட்டுணர்வு

சமூகவியலில் வேறுபாட்டுணர்வு என்ற சொல் ஒரு மேலாணைக் குழு அதன் மேம்பட்ட அதிகாரத்தால் மரபுவழக்கான அல்லது சட்டப் படியான கட்டுப்பாடுகளையும் இடர்பாடுகளையும் கீழ்பணியாளர் குழுக்களின் மீது திணிப்பதைக் குறிகிறது. சிறப்புரிமை மற்றும் ஏற்றத்தாழ்வோடு கூடிய வாய்ப்புவள நிலையைத் தக்கவைத்துக் கொள்வதற்காக அவ்வாறு செய்யப்படுகிறது. இத்தகைய வேறுபாட்டுணர்வானது பெண்களுக்கு எதிராக ஆண்களால் கையாளப்படலாம். மேலாண்மை வகிக்கும் அரசியல், மத அல்லது இனக் குழுக்கள் இன்னொரு குழுவுக்கு எதிராக வேறுபாட்டு ணர்வோடு செயல்படலாம்.

Distant Relation
தூரத்து உறவு

பேசுநரோடு (Ego) உறவு கொள்வோர் விரிவடைந்து உறவினர்களின் தொடர்பு நிலை

மூன்று, நான்கு எனப் பெருகும் போது நான்காம்நிலை உறவினர் ஐந்தாம்நிலை உறவினர் என உறவுப்பட்டியல் வளர்ந்துகொண்டே செல்லும். இவ்வாறு மூன்றாம் நிலைக்கு மேலும் விரியும் பொழுது அமையும் உறவினர்கள் அனைவரும் தூரத்து உறவினராவார்கள்.

Division of Labour
தொழிற்பகுப்பு

தொழிற்பகுப்பு என்பது செய்யும் தொழிலை ஆண்கள் செய்யக் கூடியவை, பெண்கள் செய்யக் கூடியவை, முதியோர் செய்யக் கூடியவை, வாலிபவயதினர் செய்யக்கூடியவை, சிறுவர்கள் செய்யக்கூடியவை எனப் பாகுபடுத்துதலாகும். தொழிற்பகுப்பு முறையானது, சாதி, தகுதி, வயது, பால் போன்றவற்றின் அடிப்படையில் அமையும்.

Divorce
மணவிலக்கு/விவாகரத்து

சட்டவரம்புக்கு உட்பட்டு நடைபெற்ற ஒரு திருமணத்தைச் சட்ட ஒழுங்கின்படி ரத்துசெய்வது மணவிலக்காகும்.

Documentary Sources of Information
ஆவணச்செய்தி ஆதாரம்

குறிப்பிடத்தக்கச் சமூகவியல்சார் தரவுகளை அளிக்கும் வெளியிடப் பட்டட மற்றும் வெளியிடப்படாத ஆவணங்களை இச்சொல் குறிக்கிறது. மக்கள்தொகை அறிக்கைகள், அரசுத்துறையின் அறிக்கைகள், பொது மற்றும் தனியார் ஆவணங்கள், கையெழுத்துப்பிரதிகள், கடிதங்கள் மற்றும் நாட்குறிப்பேடுகள் ஆகியவை இதில் அடங்கும்.

Document
ஆவணம்

தனிமனிதர்களாலும், நிறுவனங்களாலும், அரசினராலும் பேணப் பெற்றுள்ள குறிப்பேடுகள். தனிமனிதர்களாய் இருந்தால் அவருடைய கடிதங்கள், நாட்குறிப்புகள் போன்றவை ஆவணக் குறிப்புகளாகும். பத்திரிகைச் செய்திகள், அரசுஆணைகள் அல்லது குறிப்புகள், கூட்ட நடவடிக்கைக் குறிப்புகள், வரவு செலவு அட்டவணை போன்றவை நிறுவன அளவில் உள்ள ஆவணக் குறிப்புகளாகும்.

Domestic Labour
குடும்பம்சார் பணி

குடும்பத்தில் ஆண் மற்றும் பெண்ணால் நிகழ்த்தப்படும் வேலை. இதில் தினவாழ்வுக்குத் தேவையான சமைத்தல், சுத்தம் செய்தல், குழந்தைகளைப் பராமரித்தல், முதியோரையும் நோய்வாய்ப் பட்டவரையும் கவனித்தல் ஆகியன அடங்கும். குடும்பத்தைச் சார்ந்த பணிப் பாகுபாட்டில் பெண்கள் அதிக சுமையை ஏற்கின்றனர்.

Dominant Culture
ஆதிக்கப் பண்பாடு

ஒரு சமுதாயத்தின் அல்லது நாட்டின் பெரும்பகுதியின் பண்பாடு. இதன் கூறுகள் அனைத்துத்

தனிமனிதர்களாலும், அனைத்து உட்குழுவினராலும் பகிர்ந்து கொள்ளப்படுவனவாக இருக்கும். புரிந்துகொள்ளக் கூடியனவாகவும் இருக்கும் அதனாலேயே 'பண்பாடு' என்பது அனைவராலும் பகிர்ந்து கொள்ளப்பட்டது (Culture is shared) என்றும், கற்றுணரப் பட்டது (Culture is learned) என்றும் கூறப்படுகிறது.

Dormitories
இளையோர்க்கூடங்கள்

இளையோர்க்கூடங்கள் பெரும் பாலான பழங்குடிமக்களின் முக்கிய பண்பாட்டுக் கூறுகளில் ஒன்றாகவும் சமூக நிறுவனங் களில் ஒன்றாகவும் காணப்படு கின்றன. பெரும்பாலும் மண மாகாத இளையோர்களே உறுப்பினர்களாக உள்ளனர். ஒருவர் வாழ்நாளின் முற்பகுதியில் பல்வேறு வயதுநிலைகளில் கற்கவேண்டியவற்றைக் கற்பிக்கும் கல்விக்கூடமாகவும், பொருளாதாரச் செயற்பாட்டினை அறிவுறுத்துமிட மாகவும், பண்பாட்டின் சிறப்புக் கூறுகளைச் சிதையாமல் நிலை நிறுத்தும் களமாகவும், திருமணத் துக்கு முந்தையநிலையில் உடலு றவுச் செயல்களை அறிமுகப்ப டுத்தும் கூடமாகவும், பொழுது போக்கிடமாகவும் இளையோர்க் கூடம் திகழ்கிறது. இளையோர் கூடம் இருபாலாருக்கும் பொது வாகவோ, தனித் தனியா கவோ அமைகின்றது.

Double Descent
இருவழி மரபு

ஒரே பண்பாட்டில் தாய்வழி மற்றும் தந்தைவழி உரிமை நிலவுதல் இருவழி மரபாகும். இதனால் தாய்வழி உறவினர்க ளோடும் தந்தைவழி உறவினர்க ளோடும் நெருங்கிய தொடர்பு ஏற்படுகிறது. இம்முறையில் இருதரப்பு உறவினர்களும் சமமாகவே கருதப்படுகின்றனர். சொத்துரிமைக்குத் தந்தைவழியும் குலம் போன்ற உரிமைகளுக்குத் தாய்வழியும் பின்பற்றப்படுவதை இதற்குச் சான்றாகக் கூறலாம்.

Dowry
வரதட்சணை/மணக்கொடை

மணப்பெண் வீட்டார் மணமகன் வீட்டாருக்குப் பெருந்தொகை யையோ பொருள்களையோ கொடுப்பதே வரதட்சணையாகும். இந்தியாவின் பல சமுதாயங் களிலும் வரதட்சணை கொடுக்கும் பழக்கம் காணப்படுகிறது. ஐரோப் பாவில் இம்முறை பரவலாக மறைந்துபோனாலும் கிழக்கு ஐரோப்பா, தெற்கு இத்தாலி, பிரான்ஸ் போன்ற பகுதிகளில் வரதட்சணை இன்றும் வழக்கில் உள்ளது.

Dramatic Role Presentation
கவர்ச்சிப்பாவனை

பிறரைக் கவரவேண்டும் என்பதையே குறிக்கோளாகக் கொண்டு செயலாற்றுகை. அதாவது பிறரைக் கவரும்வண்ணம் தெரிந்தே பாவனையாகச் செலாற்றுகை. சான்றாக அரசியல் தலைவர்கள் ஏழைமக்களின் குழந்தைகளை எடுத்துக் கொஞ்சுதல்,

அவர்களோடு அமர்ந்து உண்ணுதல் ஆகியவற்றைக் கூறலாம்.

Drive
செயலூக்கம்

மரபுவழியாகப் பெறப்படும் ஓர் உள்ளான தூண்டுதலைக் குறிக்கிறது. இது தனிநபரின் செயல்பாட்டுக்குச் செயல்நோக்கமளித்து மனஉலைவு அல்லது மனத்தாக்கலைவு உணர்வுகளைக் குறைக்கிறது. இது தற்காலிகமாகத் தோன்றி ஒருவிதத் திருப்தி ஏற்பட்டவுடன் மறைந்துவிடும் தன்மை உடையது.

E

Ecclesla
செல்வாக்கு மதக்குழு

சமுதாயத்தில் அதிகச் செல்வாக்கும், வலிமையும் கொண்டுள்ள மதக்குழு. இது அரசு அல்லது ஆளும் வகுப்பினரின் ஆதரவைப் பெற்றுக்கொண்டு சமுதாயத்தின் அடிப்படையான பண்பாட்டு முறைகளை நடைமுறையில் இருக்கச் செய்கிறது.

Ecological Distance
வாழ்க்கைச்சூழல் தூரம்

வாழுமிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குச் செல்வதற்கான செலவின் அடிப்படையில் கணக்கிடப்படும் தூரத்தைக் குறிக்கிறது. வாழ்க்கைச் சூழல் தூரமானது ஓர் இடத்துக்குச் சென்றுவரத் தேவைப்படும் நேரம், பொருளாதாரச் செலவு ஆகியவற்றின் அடிப்படையில் கணக்கிடப்படும்.

Ecological Mobility
வாழ்க்கைச்சூழல் நிலைபெயர்வு

மக்கள் ஓர் இடச்சூழலில் இருந்து இன்னொரு இடச்சூழலுக்கு நகர்வதைக் குறிக்கிறது. வழக்கமாக குடியிருப்பை மாற்றிக்கொள்வதோடு தொடர்புடையது. நகரின் மத்திய வியாபாரப் பகுதிக்கு உள்ளேயும் வெளியேயும் மக்களின் அன்றாட நகர்வு, இன்னொரு இடச்சூழலுக்குத் தற்காலிகமாக நகர்வது ஆகியவை வழக்கமாக வாழ்க்கைச்சூழல் நிலைபெயர்வாகக் கருதப்படுவதில்லை. வாழ்க்கைச்சூழல் நிலைபெயர்வானது சில வேளைகளில் நிலவியல்சார் நிலைபெயர்வு எனவும் குறிப்பிடப்படும்.

Ecological Structure
வாழ்க்கைச்சூழல் அமைப்பு

ஒரு பண்புக்குழுவின் தனி நபர்கள் மற்றும் குழுக்களின் இடை உறவுத்தன்மை மற்றும் இடம்சார் பரப்பீட்டுப்பாங்கம் ஆகியவற்றைக் குறிக்கிறது. இதன்படி வாழ்க்கைச்சூழல் அமைப்பு என்பது பண்புக் குழுவின் சமூக மற்றும் பொருளாதார முறைகளில் ஆட்சிப்பரப்புச் சார்ந்த அமைப்பாண்மையாகும்.

Ecological Unit
வாழ்க்கைச்சூழல் ஒருமம்

வாழ்க்கைச்சூழல்சார் பரப்பீட்டைக் குறிக்கிறது சுற்றுப்புறத்திலிருந்து வேறுபடுத்துவதற்குப் போதுமான சீர்மைக்குணங்கள் உடைய குடியிருப்புகள், கடைகள், அலுவலகங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றை உடைய ஒருமம்.

Ecology
வாழ்க்கைச்சூழல்

மக்களுக்கும் அவர்களின் உடல்சார்ந்த அல்லது நிலவியல் சார்ந்த சுற்றுச்சூழலுக்குமிடையிலான எதிரிடைத் தாக்கங்களைக் குறித்த ஆய்வு. பண்புக்குழுக்களின் மேன்மையான இட அமைவுக்காக ஒன்றுக்கொன்று போட்டி ஏற்படும் நிலையில் காணப்படும் நிறுவனச் செயற்பாடுகள் மற்றும் இடஞ்சார் பரப்பீடு மற்றும் பங்கீடு. மக்களுக்கிடையிலான இடையுறவுகள் ஆகியவற்றைக் குறிக்கிறது. மக்களின் இடஞ்சார் பரப்பீட்டினால் அவர்களின் சமூக உறவுகளில் ஏற்படும் விளைவுகள் மற்றும் அவர்களின் இடஞ்சார் பரப்பீட்டில் அர்களின் சமூக உறவுகளின் செல்வாக்கு ஆசியவற்றையும் குறிக்கிறது.

Economic Sociology
பொருளாதார சமூகவியல்

சமூக வாழ்வின் பொருளாதார மற்றும் பொருளாதாரமற்ற கூறுகளின் தொடர்புகளை ஆராய்வது பொருளாதார சமூகவியலாகும். இது பத்தொன்பதாம் நூற்றாண்டு மற்றும் இருபதாம் நூற்றாண்டு ஆரம்பகட்டத்தில் பெரும்பாலான சமூகவியலாரின் முக்கியமான ஆர்வமாகக் காணப்பட்டது. இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் நடைமுறைவர்த மற்றும் பண்பாட்டுச் சமூகவியலின் ஆதிக்கத்தால் பொருளாதார நடைமுறைகளின் ஆர்வம் குறையத் தொடங்கியது. இது ஏறத்தாழ 1970 வரையிலும் நீடித்தது. சமுதாயத்தைப் புரிந்து கொள்வதில் பொருளாதாரம் மிகமுக்கிய இடத்தை வகிக்கிறது என்பதைச் சமூகவியலார் மீண்டும் வலியுறுத்தினர். பொருளாதாரச் சமூகவியல் என்பது பல பாரம்பரியக்கோட்பாடுகளை உள்ளடக்கிய பொதுவான தலைப்பாகும்.

Ecumenism
கிறித்துவப் பொதுப்படைவாதம்

கிறித்துச் சமயக் கிளைகளுக்கிடையிலான வேறுபாடுகளைக் களைந்து ஒற்றுமையை முயன்றடைவதற்காக கிறித்தவர்களிடையே காணப்படும் மதஇயக்கம். இது இரண்டாவது வாட்டிகன் மன்றத்தால் அண்மையில் பரிந்துரைக்கப்பட்டது.

Education
கல்வி

முறைசார்புடைய அல்லது முறைசாரா முறைமைகள் மூலம் அறிவை அனுப்பீடு செய்தல். கல்வி என்ற கருத்துப்படிவத்தோடு சமூகவயமாக்கம் (ஒரு குழந்தை அதன் குழுவின் பண்பாட்டைக் கற்றுக்கொள்ளும் நடைமுறை) மற்றும் கற்றல் ஆகியவை நெருங்கிய தொடர்புடையவை ஆகும். இவ்விரண்டும் உண்மையிலேயே கல்வியிலிருந்து பிரிக்க முடியாதனவாகும்.

Educational Institution
கல்விசார் நிறுவனம்

ஒரு தலைமுறையிலிருந்து இன்னொரு தலைமுறைக்கு

அறிவை அனுப்பீடு செய்வதை உறுதிப்படுத்துகின்ற எந்தஒரு சமூக நிறுவனமும் இதில் அடங்கும். கல்விசார் நிறுவனம் என்பதில் குறிப்பாகக் கல்விக்கென்று அர்ப்பணிக்கப்பட்ட அமைப்பாண்மைகள் மட்டுமல்லாமல் பண்பாட்டு மரபுகளை அனுப்பீடு செய்வதற்குச் சமூகரீதியில் கண்டறியப்பட்ட அனைத்து வழிவகைகளும் அடங்கும்.

Egalitarian Society
சமத்துவச் சமுதாயம்

ஒவ்வொரு தனிமனிதனும் பொருளாதார, சமுதாயத் தகுதி நிலைகளில் சமமான வாய்ப்புப் பெறும் நிலையை உடைய சமுதாயம் சமத்துவச் சமுதாயமாகும். மானிடவியலார் சமத்துவச் சமுதாயம் அல்லது சமுதாயச் சமத்துவம் இன்றும் நிலவுகிறது என்பர். இவ்வகையான சமுதாய முறை வேட்டையாடி உணவு சேகரிக்கும் மக்களிடம் உள்ளது என்றும் கருதப்படுகிறது.

Ego
தன்முனைப்பு/ஆளுமைக்குணம் / பேசுநர்

உலக நடைமுறையினைப் புரிந்துகொண்டு அதன்படி ஒத்துநடக்கும் ஆளுமைக்குணம். தன் ஆசைகளையும் தேவைகளையும் சமூகம் ஒத்துக்கொள்ளும் வகையில் தனித்துச் செயல்பட உதவும் குணம். இக்குணம் எப்பொழுதும் மனிதனின் உணர்வில் காணக்கூடியது. இது இளம் வயதிலிருந்து வளர்கிறது.

உறவுமுறை ஆய்வில் உறவுமுறைச் சொற்களையும் உறவுகளையும் இனம் அறியத் தொடர்பு முனையாக இருப்பவர் (பொதுவாக வயதுவந்த ஓர் ஆணாக இருப்பார்).

Egocentric
தன்முனைப்பு ஆளுமை

தன்னைத்தானே ஒரு முக்கியத்துவம் வாய்ந்த நபராகக் கருதிக்கொள்ளும் தன்மை. உலகில் உள்ள அனைத்தும் தன் முக்கியத்துவத்துக்காகத்தான் இருக்க வேண்டும் என்ற சுயநல மனப்பான்மை மற்றும் பிறர் நலனைப் பற்றி கவலைப்படாத தன்மை.

Ego-focused Group
தன்முனைப்பு வழியமையும் குழு

ஒவ்வொரு நபரும் தத்தம் நெருங்கிய உறவுக்கூட்டத்தைத் தனித்தனியாக இனங்காண்பதால் இவ்வகைக் குழு "தன்முனைப்பு வழியமையும் குழு" என்று கூறப்படும்.

Egoism
தன்முனைப்புப் போக்கு

தன்னுடைய எல்லாச் செயல்பாடுகளையும் தன்னுடைய முன்னேற்றத்திற்காகவே செய்துகொள்வது. பிறர் நலன் குறித்து அக்கரைப்படாத மனப்பான்மை. தன் மகிழ்ச்சி, தன் நலன் ஆகியவற்றிலேயே நாட்டம் கொள்ளுதல், பிறரிடம் பயனை எதிர்பார்த்துத் தொடர்புகொள்ளும் குறுகிய

எண்ணம். இத்தன்மை பொதுநல மனப்பான்மைக்கு எதிரானது.

Elementary Terms
தனிமச்சொற்கள்

ஓர் உறவைக் குறிக்கும் சொல் பிரிக்கமுடியாத அளவில் தனிச் சொல்லாக இருப்பின் அது தனிமச்சொல்லாகும். சான்றாக அம்மா, அப்பா, கணவன், மனைவி, மகன், மகள் முதலிய சொற்களைக் கூறலாம்.

Elite
உயர்ந்தோர்குழாம்

ஒரு சமுதாயத்துக்குள் தனிநபர் களால் ஆன சிறுபான்மைக் குழு அல்லது பிரிவு. அவர்கள் சிலநிலைகளில் உயர்ந்தவர்கள் என்று சமூகரீதியில் ஏற்றுக்கொள் ளப்பட்டவர்களாக இருப்பார்கள். சமூகத்தில் சில அல்லது அனைத்துப் பிரிவுகளையும் கட்டுப்படுத் தவோ அல்லது ஆதிக்கம் செலுத்தவோ செய்வார்கள்.

Emergent Properties
வெளிமய பண்பாட்டுக் கூறுகள்

சமூகமுறைகளின் ஆய்வில் பார்சன் (T.Parsons) என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்ட கருத்துப்படிவம். இதுதொடர்பாக மூன்று கருத்துக்கள் உள்ளன. முதலாவது சமூகமுறைகள் அல்லது ஒழுங்குகள் சமூகக் கொடுக்கல் வாங்கல் நடைமுறை களிலிருந்து வெளிப்படுகிற ஓர் அமைப்பை உடையதாக உள்ளது. இரண்டாவது இத்தகைய வெளிப் படுகிற தன்மைகள் சமூகச் செயல்களின் உயிரியல் மற்றும் உளவியல் குணாதிசயங்களுக்குக் குறைக்கப்படுவதில்லை. சான்றாகப் பண்பாட்டை உயிரியலோடு தொடர்புபடுத்தி விளக்க இயலாது. மூன்றாவதாக ஒரு சமூகச்செயலை அது காணப்படுகிற முழுமையான சமூக முறையிலிருந்து தனிமைப் படுத்தப்பட்ட நிலையில் அதன் பொருளைப் புரிந்து கொள்ள இயலாது.

Emic Viewpoint
அகவயநோக்கு

களப்பணியின் மூலம் ஆய்வு செய்யும் ஒரு பண்பாட்டை, அச்சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் எவ்வாறு காண்கிறார்களோ அதேப்போன்று நோக்கும் அணுகு முறையை அகவய நோக்கு என்பர்.

Emigration
புறக்குடிபெயர்வு

தனிநபர்கள் அல்லது குழுக்கள் தங்கள் சொந்த நாட்டிலிருந்து வேறுநாட்டில் உறைவிடத்தைப் பெற்றுக்கொள்வதற்கான புறப்பாடு அல்லது வெளியேறு தலைக் குறிக்கிறது.

Empirical
செயலறிவு

செயலறிவால் தெரிந்து கொள்ளப்படுகிறவை அல்லது அனுபவத்தால் அறியப்படுகிறவை. ஒரு செயலறிவுசார் கோட்பாடு அல்லது அறிக்கையானது அனுப வத்திலிருந்து பெறப்பட்ட சில வித சான்றுகள் மூலம் சோதித்

தறியப்படத்தக்கவையாகும்.

Empirical Method
செயலறிவு முறை

சமுதாயத்தின் பல்வேறு தன்மைகளையும், இயல்நிகழ்ச்சிகளையும் கண்ணுற்று ஆராயப் பயன்படுத்தப்படும் முறை. இம்முறை சமுதாயத்தின் பல்வேறு உறவுகளை உற்றுநோக்கி அவற்றைப் பகுத்தாய்வதற்கு உதவுகிறது.

Empirical Test
செயலறிவு சோதனை

ஒரு கருதுகோளின் சோதனையைக் குறிக்கிறது. இதில் ஆய்வாளர் கேள்விக்குரிய இயல் நிகழ்ச்சிகளை உற்றுநோக்குவார். அத்தகைய உற்றுநோக்கலின் வாயிலாகக் கருதுகோளானது ஆதரிக்கப்படுகிறதா அல்லது முரண்படுகிறதா என்று உறுதி செய்யப்படும்.

Employee Society
பணியாளர் சமுதாயம்

ஆட்சார்பற்ற அமைப்பாண்மைகளின் அடிப்படையிலான மக்கள் உறவுகள் மற்றும் கடுமையான தரநிலைமுறை பண்புகளையுடைய சமுதாயத்தைக் குறிக்கிறது.

Empty Shell Family
வெறுமைக்குடும்பம்

வெறுமைக்குடும்பத்தில் குடும்ப அங்கத்தினர்கள் தொடர்ந்து ஒன்றாக வாழ்வார்கள், ஆனால் ஒருவருக்கொருவர் மிகக் குறைவாகவே பேசிக் கொள்வார்கள். குறிப்பாக ஒருவருக்கொருவர் தார்மீக ஆதரவு அளிப்பதற்கும் தவறிவிடுவதுண்டு. குடும்பங்களில் ஏற்படுகின்ற ஒழுங்கின்மைகளில் இதுவும் ஒன்றாகும்.

Enacted Law
ஆணையிடு விதி

விதிமுறைப்படுத்தப்பட்ட செயல்முறையின் மூலம் நடைமுறைக்குக் கொண்டுவரப்படுகின்ற விதி. இது குறிப்பிட்ட தருணத்தில் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளால் வலியுறுத்தி அறிவிக்கப்படும்.

Enculturation
பண்பாட்டுவயமாக்கம்

புதிதாகப் பிறந்த ஒரு குழந்தையின் தனிமனிதச் சிறப்பியல்பு அக்குழந்தை பங்கேற்கும் குழுக்களின் பண்பாட்டால் வடிவங்கொள்கிறது. இச்செயற்பாங்கினைப் பண்பாட்டு வயமாக்கம் என்பர்.

Endogamy
அகமணம்

ஒருவர் தாம் சார்ந்த குழுவிற்குள்ளே திருமணம் செய்துகொள்ளவேண்டும் என்னும் சமூக முறைமையே அகமணம் ஆகும். தன்னுடைய சாதி அல்லது குழுவிற்குள் மட்டும் மணம் செய்துகொள்ளவேண்டும் என்ற வரையறையை உடையது அகமணம். பொதுவாக இவ்விதிமுறைக்குச் சமுதாயங்களில் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

Environmentalism
சுற்றுச்சூழல்வாதம்

பண்பாடு அல்லது சமூக மாறுதல்களுக்கு நிலவியல் சார்ந்த சுற்றுச்சூழல்தான் முதல் நிலைக் காரணமாகும் என்ற கொள்கை. மனிதன் வாழுகின்ற பொருளாதார நிலை, பண்பாட்டு அல்லது வாழ்க்கைச்சூழல் நிலைகள் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வற்புறுத்தி மனிதனின் சமூகநடத்தையை விளக்க முற்படும் கொள்கை.

Epidemiology
நோய் நிகழ்வு நிலை இயல்

மக்கள்தொகையில் நோய்கள் மற்றும் உடல்நலக்கேடுகளின் நிகழ்வுகள் மற்றும் அவை பரவுதல் பற்றிய ஆய்வு. மருத்துவச் சமூகவியல் சமூகக் காரணிகளான வகுப்பு, வயது, பால் மற்றும் பண்பாடு ஆகியவை . உடல்நலக்கேடுகளை எவ்வாறு தூண்டுகிறது என்ற ஆய்வில் ஈடுபடுகிறது. மரபுக்கோட்பாடு நோய் நிகழ்வு நிலை இயல் நோய்களின் பரப்பீட்டுச் சமூகக் காரணக்கூறுகளை ஆராய்கிறது.

Eskimo System
எஸ்கிமோ முறை

பெற்றோரின் உடன்பிறந்தவர்களின் பிள்ளைகளைப் பாகுபடுத்தும் ஆறு உறவுமுறைகளில் எஸ்கிமோ முறையும் ஒன்று. இம்முறையில் ஒருவரின் எல்லாச் சகோதர சகோதரிகளின் பிள்ளைகளும் ஒன்றாக வகைப்படுத்தப் படுகின்றனர். இவர்கள் உடன் பிறப்புக்களிடமிருந்து வேறுபடுத் தப்படுகின்றனர். இம்முறையில் இரண்டுவிதமான உறவுமுறைப் பிரிவுகள் ஏற்படுகின்றன.

Estates
வரிசையர்

ஐரோப்பாவிலும் ரசியாவிலும் காணப்பட்ட வரலாற்று தொடர்பான ஒரு படிநிலை அமைப்பு. இது சாதி அமைப்பைப் போன்று சிறிய எண்ணிக்கையிலான வகுப்புப் படிநிலைகளுக்கிடையே தெளிவான வேறுபாடுகள் மற்றும் தடைகளை உடையது. சாதிகளைப்போல் அல்லாமல் மனிதர்களால் அரசியல் தொடர்பாக உருவாக்கப்பட்ட சட்டங்களை உடையது. மத முறைமைகளின்படி அமைந்ததும் அல்ல. அத்தகைய சட்டங்கள் வகுப்புப் படிநிலைகளுக்கிடையிலான நிலைபெயர்தலைக் கட்டுப்படுத்தவும் உதவுகிறது. ஒவ்வொரு வரிசையருக்கும் அவர்களுக்கென தகுதியான நடத்தைமுறைகள் உள்ளன. பொதுவாக வரிசையர் பிரிவு நிலப்பண்ணை உரிமைமுறையில் காணப்பட்டது.

Esteem
மதிப்பு

உயர்ந்த அல்லது தாழ்ந்த அந்தஸ்து என்ற வேறுபாடின்றிக் குறிப்பிட்ட ஓர் அந்தஸ்தில் ஒருவரின் செயல் நிறைவேற்றத்தைச் சீர்தூக்குவதைக் குறிக்கிறது. ஒரு தனிநபர் உயர்வாக அல்லது தாழ்வாக மதிக்கப்படுகிறாரா என்பது

ஏனையவர்களின் தீர்ப்பில் அவர் தன் கடமைகளை நன்றாகச் செய்து முடிக்கிறாரா என்பதைப் பொறுத்து அமைகிறது. இவ்வாறு மதிப்பு என்பது செல்வாக்கு அல்லது கீர்த்தி என்பதிலிருந்து வேறுபட்டது.

Ethclass
ஒரினக்குழு

பொருளாதார நிலையிலும் இனமுறையிலும் ஒரேநிலையை உடைய குழு ஒரினக்குழு. சான்றாகச் செல்வநிலையில் உள்ள அமெரிக்க வெள்ளையர் களைக் கூறலாம்.

Ethics
அறவியல்

சமுதாயத்தில் நிலவும் ஒழுக்க முறைகளுக்குப் பின்னால் உலகளாவிய அறவியல் கூறுகள் இருப்பதைக் காணமுடியும். உலகளாவிய நீதிமுறை ஒன்றின் அடிப்படையிலேயே ஒவ்வொரு சமுதாயத்தின் சட்டதிட்டங்கள் ஏற்பட்டுள்ளன என்பது அறவியல் ஆகும்.

Ethnic Group
இனக்குழு

இனக்குழு என்பது பொதுவான மூதாதையரையும், மொழியையும், நிலப்பரப்பையும் ஒத்த பண்பாட் டையும், வரலாற்றையும் கொண்டது.

Ethnobotany
இனக்குழுத் தாவரவியல்

தாவர வர்க்கத்துக்கும் பண்பாட் டுக்குமிடையிலான உறவுகள் அல்லது தொடர்புகள் குறித்த ஆய்வு.

Ethnocentrism
தன்னின உயர்வுக் கொள்கை

ஓர் இனத்தைச் சார்ந்தவர்கள் தங்கள் தரத்தையும், மதிப்பையும் கொண்டு ஏனைய இனத்தைச் சார்ந்தவர்களைத் தாழ்ந்தவர்கள் என்று கருதுவது. ஐரோப்பியர்கள் தங்கள் தரத்தையும், மதிப்பையும் கொண்டு ஐரோப்பியர் அல்லா தாரைத் தாழ்ந்தவர்கள் எனக் கருதுவது தன்னின உயர்வுக் கொள்கைக்குச் சான்றாகும். அதாவது, தன் சொந்தப் பண் பாட்டு முறையை அளவு கோலாகக் கொண்டு பிற பண்பாடுகளை மதிப்பிடும் பாங்கு. இதன் இறுதிநிலை, தன் சொந்தப் பண்பாடே உயர்ந்தது என முடிவுசெய்வதாக அமைகிறது. பொதுவாக இந்த மனப்பான்மை குழந்தைப் பருவத்திலிருந்தே உருவாகி வளர்கிறது. இக்கொள்கை பிற பண்பாட்டுமுறைகளை அறியாத நிலையில் ஏற்படுவதாகும்.

Ethnography
இனக்குழுவியல்

சமுதாயப் பண்பாட்டு மானிட வியலுக்கு அடித்தளமாக விளங்குவது இனக்குழுவியல் ஆகும். இனக்குழுவியல் என்பது ஒரு தனிப்பட்ட சமூகத்தின் பண்பாட்டை முழுமையாகப் புரிந்துகொண்டு அதை முறை யாகத் தொகுத்து வழங்கு தலாகும். இவ்வாய்விற்குப்

பங்கேற்று உற்றுநோக்குதல், நேர்காணல், மக்களிடம் நல்லுறவை வளர்த்தல் போன்ற களப்பணி உத்திகளைக் கையாளுவர். இவ்வாறு தொகுக்கப்படும் செய்திகள் ஒரு தனிப்பட்ட சமூகத்தைப் பற்றியதாக இருப்பதால் இனக்குழுவியல் நூல்கள் அனைத்தும் தனிவரைவு நூல்கள் (Monographs) எனப்படும். இதில் பிற பண்பாடுகளோடு ஒப்பிட்டு எழுதும் முறை தவிர்க்கப்படும்.

Ethno Historic Method
இனக்குழு வரலாற்றுமுறை

சமுதயாத்தில் ஏற்பட்டுவரும் மாறுதல்களை ஆராய்வதற்குப் பயன்படுத்தப்படும் ஓர் ஆய்வுமுறை. அதாவது தேர்ந்தெடுக்கப்பட்ட சமுதாயத்திலிருந்து வயது முதிர்ந்த சில தகவலாளிகளைத் தெரிவு செய்து அவர்கள்மூலம் அச் சமுதாயத்தின் பாரம்பரிய செய்திக் கூறுகளைச் சேகரிப்பர். அச் சமுதாயத்தின் புதிய தலை முறையினரைத் தகவலாளிகளாகக் கொண்டு தற்போதைய செய்திக் கூறுகளையும் சேகரித்து அச்சமுதாயத்தில் ஏற்பட்டு வரும் மாறுதல்களை ஆராய்வார்.

Ethno History
இனக்குழு வரலாறு

மக்களின் தொல் பண்பாட்டினை மீட்டுருவாக்கம் செய்து அம்மக்களின் இனக்குழு வரலாற்றினை அறிதல். இந்த ஆய்வுக்கு முதியோர்களுடன் நேர்காணல், தொடர்புடைய தொல்லியல் தரவுகள், பழைய கடிதங்கள், கால இதழ்கள், நாட்குறிப்பேடுகள், தொன்மைக்கதைகள் ஆகியவற்றை ஆதாரங்களாக எடுத்துக் கொள்வர்.

Ethnology
இனக்குழு ஒப்பாய்வியல்

பல்வேறு இனமக்களைப் பற்றியும், அவர்களின் பண்பாட்டைப் பற்றியும், வரலாற்றைப் பற்றியும் பண்பாட்டிடை நிலையில் அறியும் அறிவியலே இனக்குழு ஒப்பாய்வியலாகும். ஒன்றுக்கு மேற்பட்ட பண்பாடுகளை ஒப்பீட்டுநோக்கிலும் வரலாற்று நோக்கிலும் ஆராயும் அறிவியலே இனக்குழு ஒப்பாய் வியல் என்பது ஒருவகை வரையறை. மனித இனங்களை ஆராயும் அறிவியலே இனக்குழு ஒப்பாய்வியல் என்றும் வரையறுப்பதுண்டு. இதனைப் பண்பாட்டு வரலாற்றியல் (Cultural History) என்றும் குறிப்பிடுவர்.

Ethno Science
இனக்குழு அறிவியல்

அயற்பண்பாடுகளை ஆராய்வதற்கு மானிடவியலார் கையாளும் புதிய அணுகுமுறை இனக்குழு அறிவயலாகும். இதனை அறிதல் சார் மானிடவியல் (Cognitive Anthropology) என்றும் கூறுவர். ஆய்வாளர்கள், ஆய்வு செய்யும் மக்களோடு மக்களாக இணைந்து அப்பாண்பாட்டின் ஓர் உறுப்பினர் என்ற நிலையில் தரவுகளைப் பெறவேண்டும். ஆய்வாளர் தன் சொந்தக் கருத்துக்களைத் திணித்தல் கூடாது போன்ற கருத்துக்களை

இனக்குழு அறிவியல் வலியுறுத்துகிறது.

Ethology
விலங்கின நடத்தையியல்

விலங்கினங்களின் நடத்தை முறைகளை அறிவதில் பல்வேறு துறையினர் ஆர்வங்கொண்டுள்ளனர். உயர்பாலூட்டிகளின் நடத்தை பற்றிய பெரும்பாலான ஆய்வுகள் அவை இயல்பாகச் சுற்றித்திரியும் காட்டுப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டன. இவ்வகை ஆய்வுகள் மூலம் உயர்பாலூட்களின் சமுதாய வாழ்க்கை, உணவு ஈட்டும் முறைகள், பால் சார்ந்த வாழ்க்கை, கருத்துப் புலப்படுத்தும் முறை, ஆளுகைமுறை போன்ற பலவற்றைப் பற்றி அறியமுடிந்தது. இதுபோன்ற ஆய்வினை விலங்கினநடத்தையியல் என்பர்.

Ethos
பண்பாண்மை

ஓர் இனக்குழுவுக்குரிய அடிப்படைச் சிறப்பியல்பு எடுத்துக்காட்டமைப்பு பண்பாண்மையாகும். இது ஏனைய அனைத்து இனக்குழுக்களிலிருந்து அக்குழுவை வேறுபடுத்துகிறது.

Etic Viewpoint
புறவயநோக்கு

களப்பணியின்மூலம் ஆய்வு செய்யும் ஒரு பண்பாட்டை ஆய்வாளர் ஒரு வெளிநபராக நின்று விளக்க முற்பட்டால் அது புறவய நோக்கு ஆகும்.

Etiquette
ஒழுங்காசாரம் / சமுதாய ஆசாரமுறை

ஒரு பரந்த மரபு வழக்கான நடத்தைமுறையின் முக்கியமான பகுதியைக் குறிக்கிறது. இது சமுதாயத்தில் வெவ்வேறு பிரிவினரிடையே காணப்படும் மரபு வழக்கான நடைமுறையாகும். வெவ்வேறு பிரிவு என்பது ஆண் அல்லது பெண்ணாகவோ, இளையவர் அல்லது மூத்தவராகவோ, அதிகாரிகள் அல்லது கீழ்வேலை பார்ப்பவர்களாகவோ இருக்கலாம். ஒழுங்காசாரம் அல்லது சமுதாய ஆசாரமுறையின் விதிமுறைகள் ஏனைய பண்பாட்டுக் கூறுகளைப் போன்றுபண்பாட்டுக்குப் பண்பாடு வேறுபடலாம்.

Eugenics
இனமேம்பாட்டியல்

குறிப்பிட்ட சில அணுகுமுறைகளில் சிறந்த மனிதகுலத்தை உருவாக்கும் ஒரு பிரிவே இனமேம்பாட்டியலாகும். குறைபாடுடையவர்களை நீக்கியோ மேம்படுத்தியோ வளமான மனிதஇனத்தை உருவாக்கும் வழிமுறைகளைக் காண்பது இனமேம்பாட்டியலாகும். இது ஆக்கமுறை இனமேம்பாட்டியல் (Positive Eugenics), எதிர்மறை இனமேம்பாட்டியல் (Negative Eugenics) என்ற இரு உட்பிரிவுகளைக் கொண்டது.

Evaluative Research
பயனறிதல் ஆய்வு

ஒரு திட்டத்தின் விளைவுகளைத்

தெரிந்துகொள்ள மேற்கொள்ளப்படும் ஆய்வு பயனறிதல் ஆய்வாகும். பொதுவாகச் செயல்முறைத் திட்டத்தோடு இவ்வாய்வு தொடர்புடையது. திட்டத்தின் குறைநிறைகளைத் தெரிந்துகொள்ள இப்பயனறிதல் ஆய்வு உதவுகிறது.

Event Analysis
நிகழ்ச்சி பகுப்பாய்வு

பொதுவான அடிநிலையிலுள்ள மாதிரிப்படிவங்களை உறுதியாய் அறிவதற்காக வேறுபட்ட பண்பாட்டு நிலைகளின் தொடர்ச்சியான நிகழ்ச்சிகளைப் பகுப்பாய்வு செய்வதைக் குறிக்கிறது.

Evolution
படிமலர்ச்சி

மண்ணுலகமும் மண்ணுலகில் வாழும் உயிரினங்களும் பலநூறு மில்லியன் ஆண்டுகளுக்குமுன் தோன்றி, பலநிலைகளில் மாறுதல்கள் அடைந்துள்ளன. அவை தோன்றிய காலம்முதல் இன்றுவரை ஏற்பட்ட அனைத்துவகையான மாற்றங்களையும் இயக்கிய செயலே படிமலர்ச்சி ஆகும். மண்ணுலகம், உயிரினங்கள் ஆகியவற்றின் வளர்ச்சிகளோடு பண்பாடுகளின் வளர்ச்சியும் ஒன்றிவிட்டது. இம்மாற்றங்களின் இயக்கமும் செயல்பாடுகளும் ஒரு வரையறைக்குள் நின்று செயல்பட்டுள்ளன.

Exogamous Group
புறமணக்குழு

ஒவ்வொரு கால்வழிக்குழுவும் புறமணக் குழுவாகும். ஒரு குழுவினர் வேறு ஒரு குழுவினருடன் மட்டுமே மணம் செய்துகொள்ள முடியும். பொதுவாக கோத்திரங்களும் வம்சாவளிப் பெயர்களும் கால்வழியினரைத் தனிவகையினராகக் கட்டிக் காக்கின்றன. இன்னும் சில பகுதிகளில் வீட்டுப்பெயர், இடப்பெயர், கிராமப்பெயர் முதலானவை கால்வழிக் கூட்டத்தினரைச் சுட்டிக்காட்டுகின்றன.

Exogamy
புறமணம்

புறமணம் என்பது அகமண முறைக்கு நேர்மாறானது. அதாவது ஒருவர் அவர் சார்ந்த குழுவுக்குள் திருமணம் செய்துகொள்ளாமல் வேற்றுக்குழுவினருடன் மட்டுமே திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்னும் முறையைப் புறமணம் குறிக்கிறது. பழங்குடிச் சமுதாயங்களில் காணப்படும் குலங்கள் ஒவ்வொன்றும் புறமணக் குழுவாகும்.

Experimental Group
ஆய்வுக்கான குழு

சோதனைக்கு அல்லது ஆய்வுக்குப் பயன்படுத்தப்படும் குழு. இக்குழு அங்கத்தினர்களின் மாறுதல்களை ஆய்வு செய்வதற்காகத் தூண்டுதல் தரப்படும். தூண்டுதலுக்கு முன் இருந்த நிலையையும் தூண்டுதலுக்குப் பின் இருக்கும் நிலையையும் ஒப்பிட்டு மாறுதல்கள் நிர்ணயிக்கப்படும்.

Explicit Culture
வெளிப்படைப் பண்பாடு

ஒரு சமுதாயத்தின் நடத்தை முறைகள் எக்கூறுகளால் வெளிப்படு

கிறதோ அவையே அச்சமுதாயத்தின் வெளிப்படைப் பண்பாடாகும். பொதுவாகப் பொருள்சார் பண்பாட்டுக்கூறுகளால் அறியப் படுபவை அனைத்தும் வெளிப் படைப் பண்பாடு எனக் கூறலாம்.

Extended Family
விரிவுக்குடும்பம்

ஒரே வம்சாவழியைச் சேர்ந்த இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனிக் குடும்பங்கள் ஒன்றுசேர்ந்து பெரிய குடும்பமாக வாழ்ந்தால் அது விரிவுக்குடும் பமாகும். சில சூழ்நிலைகளில் விரிவுக்குடும்பம் பெரிய குழுவா கவும் காணப்படும். குடும்பத்தின் விரிவாக்கம் எந்தநிலையில் நிகழ்கிறது அல்லது எத்தகைய உறவினர்கள் சேர்ந்து வாழ்கி றார்கள் என்பதைப் பொறுத்து குடும்பத்தின் வகைகள் வேறுபடு கின்றன.

Extended Household
விரிவுக் குடும்பத்தினர்

ஒரு குறிப்பிட்ட மனிதரோடு எத்தனை தாய்-குழந்தைகள் என்ற ஒருமங்கள் இணைக்கப்பட் டுள்ளன என்பதன் அடிப்படையில் குடும்பத்தினரை வகைப்படுத்தலாம். ஒன்றுக்கு மேற்பட்ட அத்தகைய ஒருமங்கள் இணைக்கப்பட் டிருந்தால் அக் குடும்பத்தினர் விரிவுக்குடும்பத்தினர் ஆவார்கள்.

Extrovert
அயலீடுபாட்டாளர்

ஒருவரின் முக்கிய சமூக மற்றும் தனிப்பட்ட ஆர்வங்கள் அல்லது நலன்கள் அயலாரோடு தொடர்புகொள்வது அல்லது கூட்டுச்சேர்வதன் மூலம் திருப்திய டைகிறது. இத்தகைய தனித்தன்மை உடையவரை அயலீடுபாட்டாளர் என்பர்.

F

Fact
அனுபவச்செய்திக்கூறு

கூர்நோக்கின் அல்லது பல நபர்களின் பரந்த அனுபவங் களின் அடிப்படையிலான இயல் நிகழ்ச்சி குறித்துக் கூறப்படும் உண்மைச்செய்திக்கூறு.

Factor
காரணக்கூறு

காரணக்கூறு பகுப்பாய்வு மூலம் நிர்ணயிக்கப்பட்டுத் தொடர்புபடுத்தப்பட்ட பல அளவுகளில் வேறுபட்டதும் அடிப்படையானதுமான பல மாறிகளில் ஒன்றைக் குறிப்பது.

Factor Analysis
காரணக்கூறுப் பகுப்பாய்வு

அளவாய்வுத் தரவுகளைப் பகுப்பாய்வு செய்து பொதுவான ஆக்கக்கூறுகளைக் கண்டறிவதற்குப் பயன்படுத்தப்படும் புள்ளியியல் உத்தியே காரணக்கூறுப் பகுப்பாய்வாகும்.

Factual Judgement
மெய்ந்நிகழ்ச்சித் தீர்ப்பு

உண்மை நிகழ்ச்சிகளுக் கிடையிலான தொடர்புகளை உறுதியாகக் கூறக்கூடிய அறிவிப்பு. இது செயலறிவு மூலம்

உறுதிப்படுத்தவோ அல்லது மறுக்கவோ தக்கதாக இருக்கும்.

Fad
போலிவிளக்கக்கூறு

வழக்கத்துக்கு மாறுபட்ட மாதிரியான நடக்கைமுறையைக் குறிக்கிறது. இது வேகமாகப் பரவி, ஆதரவாளர்களால் சுறுசுறுப்பான ஆர்வத்தோடு தனதாக்கிகொள்ளப்படும். ஆனால் மிகக் குறுகிய காலம் மட்டுமே மக்கள் பாராட்டக் கூடியதாக இருக்கும்.

Family
குடும்பம்

ஒன்றுக்கு மேற்பட்ட இரத்த உறவினர், மண உறவினர் மற்றும் தத்தெடுக்கப்பட்டோர் ஒன்றாக வாழ்வது குடும்பமாகும். இது ஒரு முக்கியமான சமூக நிறுவனமாகும். குடும்ப அங்கத்தினர்களின் தன்மையைப் பொறுத்துத் தனிக்குடும்பம், கூட்டுக்குடும்பம் என குடும்பம் பலவகைப்படும்.

Family Cycle
குடும்ப நிகழ்வுச்சுழல்

கணவன் மனைவியரின் திருமணம் முதல் இறப்புவரையிலான குடும்ப நிகழ்ச்சிகளின் தொடர்ச்சியைக் குறிக்கிறது. இதில் முதல் மற்றும் கடைசிப் பிள்ளையின் பிறப்பு, திருமணம், குழந்தைவளர்ப்பு நடைமுறையின் முக்கிய நிகழ்ச்சிகள், முதிர்வயது கால நிகழ்ச்சிகள் ஆகியவை அடங்கும்.

Family Institution
குடும்ப நிறுவனம்

அடிப்படையான ஒரு சமூக நிறுவனம். ஒரு சமுதாயம் நிலைத்திருப்பதற்கு குடும்ப நிறுவனம் மிக முக்கியமான ஒன்று. பாலுறவு, குழந்தை வளர்ப்பு, உறவுமுறைத் தொடர்புகளின் வடிவமைப்பு ஆகிய ஒழுங்குமுறைகளைச் சுற்றி ஒருமுகப்படுத்தப்பட்ட இடைத் தொடர்புடைய சமூகப்பங்கு மற்றும் கட்டளைச் சட்டம் ஆகியவற்றை உள்ளடக்கியது குடும்ப நிறுவனம்.

Family Culture
குடும்பப் பண்பாடு

குடும்ப அங்கத்தினர்களுக்குரிய தனியியல்புகளான மரபுகள், வழக்கங்கள், குழுப் பழக்கங்கள், மனப்பான்மைகள் மற்றும் புரிந்து கொள்ளும் ஆற்றல் ஆகியவை அக்குடும்பப் பண்பாடாகும்.

Family of orientation
பிறந்தகம்/தோன்றிய குடும்பம்

ஒருவர் பிறந்து வளர்ந்து திருமணம் ஆகும்வரை அவருடைய பெற்றோருடன் வாழ்கிறார். திருமணம் ஆனபிறகு தன் மனைவியுடன் தனிக்குடும்பம் தொடங்குகிறார். அந்நிலையில் திருமணம் ஆவதற்குமுன் அவர் வாழ்ந்த குடும்பம் பிறந்தகம் எனப்படும். பெரும்பாலும் ஒருவர் சமூகவயமாக்கப்படுவது இக்குடும்பத்திலாகும்.

Family of Procreation
உருவாக்கக் குடும்பம்

ஒருவர் தன் திருமணத்துக்குப்பின் ஏற்படுத்தும் குடும்பம் உருவாக்கக் குடும்பமாகும் இக்குடும்பத்தில் ஒருவர் மகவு பெறுதல் மூலம் தன் கால்வழியை உண்டுபண்ணுகிறார்.

Family Planning
குடும்பக் கட்டுப்பாடு

மகப்பேறு கட்டுப்பாட்டு முறைகள் மூலம் குடும்பத்தின் அளவைக் கட்டுப்படுத்துவது. இந்தியாவில் விரும்பத்தக்க குடும்பத்தின் அளவானது குடும்பத்திற்கு இரண்டு குழந்தைகள் என்று வரையறுக்கப்பெற்றுள்ளது.

Fashion
வடிவமைதிமுறை

குறிப்பிட்ட காலத்தில் சமூக ரீதியில் அனுமதிக்கப்பட்ட ஒருவித நடக்கைமுறை. இது குறிப்பிட்ட இடைவெளியியல் மாறுதலுக்குட்படுவது. வடிவமைதி முறை சில விதிமுறைகளை முன்மாதிரியாகக் கொண்டு மாறுதல்களில் ஈடுபடுகிறது. அவை மாறுதலுக்கு அனுமதிக்கப்பட்டதும் எதிர்பார்க்கப்பட்டதுமாகும்.

Federalism
கூட்டரசு அமைப்புமுறை

ஒரு மத்திய அரசுக்கும், குறிப்பிடத்தக்க அளவு சுய ஆட்சியுரிமை உடைய பல உட்பிரிவு அரசுகளுக்குமிடையே அதிகாரங்களும் செயல்பாடுகளும் பகிர்ந்தளிககப்பட்டிருக்கும் இரு நிலைகளிலான அரசுகளின் ஆணையுரிமை அதிகார எல்லையானது பெரும்பகுதியும் தெளிவாக வேறுபடுத்தப்பட்டிருக்கும்

Felony
பெருங்குற்றம்

மரணதண்டனை அலலது ஒரு ஆண்டுக்கு மேற்பட்டச் சிறைத் தண்டனை அளிககக் கூடிய கடுமையான குற்றம்.

Feminism
பெண்ணுரிமைவாதம்

தற்காலச் சமுதாயத்தில் பெண்கள் பாதிக்கப்படும் நிலையில் உள்ளார்கள என்ற கருத்தை அறிவிக்கும் கோட்பாடு அல்லது போதனைத்தொகுப்பு இது ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டுமென வாதிடுகிறது

Feminization
பெண்தன்மையாதல்

தொழில்களில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பெண்கள் நுழையும்போது அதனைப் பெண் தன்மை கொள்ளுதல் என்பா. ஒரு தொழிலின் பெண்தன்மை கொள்ளும் அளவு அதன் தொழிலாளர் வகுப்புத் தன்மையோடு தொடர்புடையது. அதாவது வேலை அதிக திறமை தேவையற்றதாக இருநதால் பெண்களை வேலையில அமாததுவது லாபகரமாக இருக்கும்

Feral Children
சமூகவயமாகாக் குழந்தைகள்

மனிதப் பண்பாட்டுக்கு அறிமுக மாகாத குழந்தைகள் அல்லது மனித சமூகச் சூழ்நிலையில் வளராத குழந்தைகள் சமூக வயமாகாக் குழந்தைகள் ஆகும். பொதுவாக இவர்கள் மனிதர்க ளிடமிருந்து தனிமைப்படுத் தப்பட்டோ அல்லது விலங்குகளால் வளர்க்கப்பட்டோ இருப்பார்கள். எனவே, இவர்கள் மனிதப் பழக்கவழக்கங்களிலிருந்து மாறுபட்டுக் காணப்படுவார்கள். மொழி தெரியாதவர்களாகவும் தாங்கள் வளர்ந்த சூழ்நிலையிலுள்ள விலங்குகளின் பழக்கவழக்கத்தை உடையவர்களாகவும் காணப்ப டுவார்கள். இவர்கள் மனிதச் சமூகச் சூழ்நிலைக்குக் கொண்டு வரப்படும்போது மனிதரின் பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொள்ள விரும்புவதில்லை. கட்டாயப்படுத்தினாலும் கற்றுக் கொள்ள முடிவதில்லை. இவர்கள் மனிதச் சூழ்நிலைக்கு ஒத்துப்போக இயலாமல் சிறிதுகாலமே உயிர்வாழ்கிறார்கள்.

Fertility
கருவளம்

குறிப்பிட்டக் காலகட்டத்தில் குறிப்பிட்ட மக்கள்தொகையில் நடைபெற்றுள்ள மகப்பேறுகளின் எண்ணிக்கை கருவளமாகும்.

Fertility Rate
கருவளவீதம்

மக்கள்தொகையின் கருவளப் பொருளடக்க அட்டவணையைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப் படுகிறது. இது குறிப்பிட்ட மக்கள்தொகையில் குழந்தைகளைப் பெறுவதற்குரிய வயதில் உள்ள 1000 பெண்களுக்குப் பிறந்துள்ள குழந்தைகளின் எண்ணிக்கையின்படி கணக்கிடப்படும்.

Fertility Ratio
கருவளவிகிதம்

மக்கள்தொகையில் குழந்தைகளைப் பெறுவதற்குரிய வயதில் உள்ள 1000 பெண்களுக்குப் பிறந்துள்ள ஐந்து வயதுக்குட்பட்டக் குழந்தைகளின் எண்ணிக்கை. குழந்தைகளைப் பெறுவதற்குரிய வயது பொதுவாக 15-44 என வரையறுக்கப்பட்டுள்ளது. இருப்பினும் 20-44, 20-49 மற்றும் 15-49 ஆகிய வயது நிலைகளும் உள்ளன.

Fetishism
போலிப்பொருள் வழிபாடு

இயற்கையின் ஆற்றல்கள் சில பொருள்களில் உறைந்துள்ளன என எண்ணி அவற்றை வழிபடும் முறை. இப்பொருட்கள் மந்திர ஆற்றலைக் கொண்டுள்ளன என்றும், மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டச் செயல்களைச் செய்யவல்லன என்றும் மக்கள் நம்புகின்றனர். பெரும்பாலான பண்பாட்டில் மண்டையோடுகள், எலும்புகள், சிற்பங்கள், மரப்பொருட்கள் போன்ற பலவகைப்பட்ட பொருட்கள் வழி பாட்டுப்பொருட்களாக உள்ளன. தமிழ்நாட்டில் செப்பு அல்லது இரும்பினால் செய்யப்பட்ட தாயத்து களைக் கட்டிக்கொள்வது இதற்குச்

சான்றாகும்.

Feud
குடிமரபுப்பகை

கூட்டுரிமையுடைய இரு குழுக்களிடையே நிலவும் நீடித்த நிலையிலான பகை. குழுக்களின் அங்கத்தினர்கள் சந்திக்கும் பொழுதெல்லாம் வன்முறை அல்லது மனிதக்கொலை நடைபெறும்.

Feudal Society
நிலப்பண்ணைமுறைச்சமுதாயம்

இலக்கியல் வகையான ஒரு சமூதாயம். இது அந்தஸ்துநிலை வகைப் பிரிவுகள் அல்லது அந்தஸ்து வரிசையர்களைக் கொண்டது. இச்சமுதாயத்தில் பெருமளவிலான உழவுத்தொழி லாளர்கள், மிகச்சிறு எண்ணிக்கை யிலான தனிச்சலுகையுடைய நில உடைமையாளர்கள், கைவினை ஞர்கள், வியாபாரிகள், படை வீரர்கள் மற்றும் அறிவுசார் அல்லது மதம் சார்ந்தவர்கள் காணப்படுவார்கள். ஒவ்வொரு அந்தஸ்துப் பிரிவும் அதனதன் விதிமுறைகளைப் பின்பற்றக் கடமைப்படுத்தப்பட்டதாகக் காணப்படும்.

Fictive Kinship
புனைவியல் உறவு/போலி உறவு

புனைவியல் உறவு என்பது மணவாழ்க்கை தொடங்கிய தம்பதியினர் மக்கட்பேறு பெற இயலாதநிலையில் வளர்ப்புப் பிள்ளைகளைத் தேர்தெடுத்து அவர்களைச் சொந்தப் பிள்ளை களாகவே கருதி வளர்ப்பர். இவ்வகையில் ஏற்படும் உறவைப் புனைவியல் உறவு என்பர்.

Field Experiment
களச்சோதனை

களச்சோதனை ஆய்வில் ஒரு குறிப்பிட்ட மாறுதலுக்கு முன்னும் பின்னும் சூழ்நிலைக்கூறுகள் (Aspects) ஆராயப்பெறும். இக்களச் சோதனையில் ஆய்வுச் சூழ்நிலை முற்றிலுமாக ஆய் வாளரின் கட்டுப்பாட்டில் இருப் பதில்லை. எனினும் கருது கோள்களை ஆய்வின்மூலம் சோதனை செய்ய இயலும்.

Field Study Method
களஆய்வு முறை

ஆய்வு உத்திகளில் ஒன்று. இதில் ஆய்வாளர் தன் ஆய்வுப்பொருளைச் சோதனைக் கூடத்தில் அல்லாமல் மக்களின் வழக்கமான வாழ்க்கைச்சூழல் நிலைகளில் கூர்ந்துநோக்குவார். பொதுவாக இத்தகைய ஆய்வில் நேர்காணல் முறை பயன்படுத் தப்படும். சமூகவியல், மானிடவியல் மற்றும் மொழியியல் துறைகளில் களஆய்வு முறை மிக முக்கியமா னதாகும்.

Filiation
மகவுத்தொடர்பு

பெற்றோருக்கும் பிள்ளைக ளுக்குமிடையே பண்பாட்டளவில் வரையறுக்கப்பட்ட இணைப்பு. இதனை நேர்மரபுவழி உறவு என்றும் குறிப்பிடுவர். அதாவது பெற்றோரின் மரபு பிள்ளைகள்

மூலம் தொடரப்படுவது.

Focused Interview
குவிமைய நேர்காணல்

தகவலாளி நன்கு அனுபவப்பட்ட குறிப்பிட்ட சூழ்நிலை நிகழ்ச்சியின் தேர்ந்தெடுக்கப்பட்ட பண்புக்கூறு களின்மீது ஆய்வுக்கவனம் செலுத் துகின்ற நேர்காணல். பொதுவாகக் குவிமைய நேர்காணல் பொதுப் படையான அனுபவம்வாய்ந்த பல தகவலாளிகளோடு நடை பெறுகிறது.

Folklore
நாட்டுப்புறவியல்

மக்கள் (Folk) தம் வாய்வழியாக வழங்கிவந்த பாடல்கள், கதைகள், புராணங்கள், பழமொழிகள் முதலியவற்றைக் குறிக்கும் சொல்லாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியிலிருந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது இச்சொல் பல்வேறு பொருள்களில் பயன்படுத் தப்படுகிறது.

Folk Society
நாட்டுப்புறச் சமுதாயம்

ஒருபடித்தான மக்கள்தொகை மற்றும் பண்பாடு உடைய தனிப்படுத்தப்பட்ட ஒரு சிறிய சமுதாயம். அடிப்படையான தொழில் பாகுபாடு, முறைப்படுத் தப்படாத தெளிவற்ற மதிப்பீடு முறை, சாதாரண உத்திமுறை, நிலையான வரன்முறை மரபு சார்ந்த தலைமைப்பதவி, உறுதியான இரத்த மற்றும் குலமரபுச் சின்னம் சார்ந்த உறவுமுறை இணைப்பு, பெரும் போற்றுதலுக்குரிய மரபு, மதம்மற்றும் மந்திரத்துக்கு அதிக முக்கியத்துவம் அளித்தல் ஆகியவை இச்சமுதாயத்தில் காணப்படும்.

Folk Culture
நாட்டுப்புறப் பண்பாடு

ஒரு இனக்குழுவை உருவாக்க வழிவகுக்கும் குறிப்பிட்ட மக்கள் தொகுதியின் வாழ்க்கைமுறையே நாட்டுப்புறப் பண்பாடு ஆகும்.

Folkway
குடிவழக்கு

ஒரு சமுதாயத்தில் அனைவ ரிடமும் காணஇயலும் பொதுவான நடத்தைமுறையே குடிவழக்கு ஆகும். இது பழக்கத்தால் வருவது; இயல்பாய் வெளிப்படுவது. அந்தந்த மக்களுக்கே உரிய பாங்காய்க் காணப்படுவது. குடிவழக்கு 'வழக்கம்', 'பழக்கம்' ஆகியவற்றிலிருந்து மாறுபட்டது. 'வழக்கம்', 'பழக்கம்' ஆகியவை ஒருபண்பாட்டின் பரப்பிற்குள்ளேயே இடத்திற்கு இடம் மாறுபடும் தன்மை உடையன. ஆனால் குடிவழக்கானது அனைத்துப் பரப்பிலும் பரவிக் காணப்படும்.

Force
வற்புறுத்தல்

அதிகாரத்தை வெளிப்படை யாகக் காண்பிப்பது. தனிநபரை யோ அல்லது ஒரு குழுவையோ வேறொரு நபர் அல்லது குழுவால் விரும்பப்பட்ட செயலைப் பின்பற்ற வற்புறுத்தப் பயன்படுத்தும் அதிகாரம். வற்புறுத்தல் என்பது வெளிப்படையான' அதிகாரம்

என்றும் குறிப்பிடப்படுகிறது.

Formal Group
முறைசார் குழு

திட்டவட்டமாகக் குறிக்கப்பட்ட குழு விதிமுறைகள், குறிக்கோள்கள் மற்றும் தலைவர்களை உடைய ஒரு குழுவைக் குறிக்கிறது. அதன் அமைப்பு மற்றும் செயல்பாடுகள் பகுத்தறிவுசார் நிலையில் ஒழுங்கு படுத்தப்பட்டுத் தரப்படுத்தப்பட்டதாக இருக்கும். முறைசார் குழுக்கள் ஒரு பெரிய அமைப்பாண் மையாகவோ அல்லது ஒரு பெரிய அமைப்பாண்மையின் ஒரு பகுதி யாகவோ இருக்கும். ஒரு இராணுவம் மற்றும் தொழிற்சங்கம் ஆகியவற்றை முறைசார் குழுவுக்குச் சான்றாகக் கூறலாம்.

Formal Norms
முறைசார்பண்பாட்டுவிதிமுறைகள்

பண்பாட்டு விதிமுறை உயர்ந்த வர்களால்கற்பிக்கப்படுகிறது. அவற்றைக் கடைபிடிப்பதில் தவறுசெய்தால் தண்டிப்பதும், நன்கு கடைபிடித் தால் பாராட்டுவதும் உண்டு. இம்முறையை முறைசார் பண்பாட்டு விதிமுறை என்பர்.

Formal Organization
முறையான அமைப்பாண்மை

உயர்ந்தநிலையில் ஒழுங்க மைக்கப்பட்ட ஒரு குழுவைக் குறிக்கிறது. இக்குழுவில் தெளிவான குறிக்கோள்கள், முறையாகக் குறிப்பிடப்பட்ட விதிமுறைகள் மற்றும் வரையறைகள் தெளிவாக வரையறுக்கப்பட்ட கடமைகளின் ஒழுங்கமைப்பு ஒவ்வொருவருக்கும் தெளிவாகத்தனிப்பட குறிப்பிடப்பட்ட பணிகள் மற்றும் உரிமைகள் ஆகியவை காணப்படும். இச்சொல்லின் பயன்பாடானது மிகவும் கட்டுப்ப டுத்தப்பட்ட நிலையில் உள்ளது.

Formative Prenuptial Stage
திருமணத்துக்கு முந்தைய நிலை

மணவாழ்வை ஆரம்பிப்பதற்கு முன்னரே மணமக்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளும் நிலை. குக்கி, பெஸ்கர், கோண்டு போன்ற சில பழங்குடியினரிடையே காணப்படும் தகுதிகாண் மணம், பணிமணம் போன்ற திருமணங்களில் திருமணத்துக்கு முன்னால் மணமக்கள் ஒருவரைஒருவர் புரிந்து கொள்ள வாய்ப்பு கிடைக்கும். மேலை நாட்டுச் சமுதாயங்களிலும் இந்நிலை பரவலாக உள்ளது. தமிழர்களிடையே பெரும்பாலும் பெற்றோர் நடத்தும் திருமணமாக இருப்பதால் திருமணத்துக்கு முந்தைய நிலை அமைவதில்லை.

Formulatory Period
உருவாக்க காலம்

மானிடவியல் தோன்றியது முதல் இன்றைய நிலைவரை நான்கு காலகட்டங்களாக வளர்ச்சியடைந்துள்ளது. அவற்றில் முதல் காலகட்டம் உருவாக்க காலம் அல்லது கருவுற்ற காலமாகும். இது கி.பி. 1835க்கு முற்பட்ட கர்லம்.

Fossils
புதைவடிவங்கள்

பாறை அல்லது மண்ணினுள்

பாதுகாக்கப்பட்ட பொருள். பழங்கால விலங்கினங்களின் உடலமைப்பு அவற்றின் வளர்ச்சி நிலைகள், அவற்றின் காலக் கணிப்பு மற்றும் இக்கால மனிதனின் மூதாதையர்கள், அவர்களின் சமுதாய வாழ்க்கை முதலானவை பற்றிய ஆய்வு களுக்குப் புதைவடிவங்கள் ஆதாரங் களாக அமைகின்றன.

Fraternal Polyandry
சகோதர பலகணவர் மணம்

ஒன்றுக்கும் மேற்பட்ட ஆண்கள் சேர்ந்து ஒரு பெண்ணை மணந்து கொள்ளும்போது அவர்கள் அனைவரும் சகோதரர்களாக இருந்தால் அத்திருமணம் சகோதரர்கள் பலகணவர் மணம் எனப்படும்.

Fratrilocal Family
உடன்பிறந்தவனக உறைவிடம்

திருமணத்துக்குப்பின் மணமக்கள் உறைவிடத்தை ஏற்படுத்திக்கொள்ள உடன்பிறந்தான் அல்லது தன் தந்தையின் உடன்பிறந்தாரின் ஆண்மக்கள் இடம் கொடுத்தால் அதனை உடன்பிறந்தவனக உறைவிடம் என்பர்.

Free Will
கட்டற்ற விருப்பம்

தனிநபர் தன்னுடைய செயல்பாடு களை நிர்ணயிப்பதற்கு அவருக்குத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் உண்டு என்ற கொள்கை. மேலும் அவருடைய நடக்கை முறை அவருடைய கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணக்கூறுகளால் முற்றிலுமாக முன்குறிக்கப் படுவதில்லை.

Frustration
எண்ணக்குலைவு

தன்னுடைய தேவைகள் அல்லது ஆசைகளைத் திருப்திப்படுத்து வதற்கான ஒரு தனிநபரின் முயற்சிகளில் ஏற்படும் தடை களையும் இடையூறுகளையும் குறிக்கிறது.

Functional Community
செயற்பாட்டுப் பண்புக்குழு

சிறப்பான சில செயல்பாடுகளின் அடிப்படையில் இணைகின்ற பொது பண்புக்குழு. சான்றாக உணவு விடுதி வைத்திருக்கும் பண்புக்குழுவினரைக் கூறலாம்.

Functional Disorder
செயற்பாட்டுச் சீர்குலைவு

ஓர் அமைப்பு அல்லது உடலின் இயல்பான செயல்பாடுகளில் ஏற்படும் சேதம். அத்தகைய சேதம் ஏதாவது உறுப்புக்குரிய சிதைவு அல்லது அமைப்புரீ தியிலான திருத்தியமைத்தல் ஆகியவற்றால் ஏற்படும். சமூக சுற்றுச்சூழலில் ஒரு தனிநபரின் எதிர்செயல்களால் மூளை அளவிலான செயற்பாட்டுச் சீர்குலைவு ஏற்படுகிறது என்று கருதப்படுகிறது.

Functional Group
செயற்பாட்டுக் குழு

சில சிறப்பு நலன்களுக்குச் சாதகமாக அல்லது குறிப்பிட்ட குறிக்கோள்களை அடைவதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட குழு. ஒரு

வாழ்க்கைத் தொழில் சார்ந்த அல்லது கலைத்தொழிலர் குழுவைச் சான்றாகக் கூறலாம்.

Functional Integration
செயற்பாட்டு ஒருமையாக்கம்

ஒரு ஒழுங்குமுறையமைப்பில் தனித்தன்மையுடையதாக்கப்பட்ட பகுதிகளின் இடைச்சார்புகளின் அடிப்படையிலான ஒற்றுமை மற்றும் ஒத்திசைவைக் குறிக்கிறது. குழுக்களைப் பொறுத்தவரை இச்சொல்லானது குழு உறுப்பினர்கள் தனித்தன்மையாக்கப்பட்ட இடைத்தொடர்புடைய செயல்களை மேற்கொள்கிறார்கள் என்ற உண்மையால் ஏற்படுகின்ற குழு ஒருமைப்பாட்டைக் குறிக்கிறது. இவ்வாறு குழு உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் சார்புடையவர்களாகின்றனர்.

Functionalism
செயற்பாட்டியல் கொள்கை

பண்பாடு, சமுதாயம் ஆகியவற்றின் அமைப்பும் செயல்தன்மையும் எத்தன்மை வாய்ந்தது என்பதை விளக்குவதே செயற்பாட்டியல் கொள்கையாகும். சமுதாயத்தில் பல உட்பிரிவுகள் ஒன்றோடொன்று தொடர்புகொண்டு செயல்படுகின்றன என்ற கொள்கை. பண்பாட்டுக் கூறுகளின் ஒருங்கிணைப்பும் செயற்பாடும் அந்தந்தப் பண்பாட்டினரின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன என்பதே செயற்பாட்டியலின் மையக் கருத்தாகும்.

Functional Relationship
செயற்பாட்டு உறவு

பணிப்பாகுபாட்டின் விளைவாக ஏற்படுகின்ற கூட்டுச்சார்பு அடிப்படையிலான சமூக உறவே செயற்பாட்டு உறவாகும்.

Functional Requisits
செயற்பாட்டுத் தேவைக்கூறு

ஒரு சமூகமுறை நிலைத்திருப்பதற்குரிய இன்றியமையாத சூழ்நிலையைக் குறிக்கிறது. செயற்பாட்டுக் கட்டளை அல்லது ஏவல் ஒருவித செயற்பாட்டுத் தேவைக் கூறாகும். இது எந்த ஒரு சமூகமுறையும் நீடித்திருப்பதற்குத் தேவையான ஒரு நிலையாக உள்ளது. பல வேளைகளில் குறிப்பிட்டவிதமான சமூகமுறையில் செயற்பாட்டுத் தேவைக்கூறுகள் கட்டுப்படுத்தப்படுகின்றன.

Fundamentalist
மரபேற்பாளர்

மத நம்பிக்கையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துபவர்கள். மதநம்பிக்கையை எல்லாவற்றிற்கும் அடிப்படையாக மதிப்பவர்கள்.

Fundamental Right
அடிப்படை உரிமை

குடியுரிமையாளர்களுக்கு உரிமையளிக்கப்பட்டுள்ள இன்றியமையாத உரிமை மற்றும் தனிச்சிறப்புரிமைகளைக் குறிக் கிறது. இவை மக்களாட்சியைச் சார்ந்த நாடுகளின் அரசியல் அமைப்புகளில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

G

Gandarva Marriage
கந்தர்வமணம்/விருப்பத்திருமணம்

இந்துமத மரபில் மதிக்கப்படாத திருமணங்களில் ஒன்று. இத் திருமணத்தில் மணமக்கள் பெற்றோரின் ஒப்புதல் இல்லாமல் ஒரு தனிச்சடங்கில் திருமணம் செய்துகொள்வதற்காக மறைந்தோடிவிடுவர். இதனை விருப்பத் திருமணம் என்றும் குறிப்பிடலாம்.

Gang
தனிக்கும்பு

ஒரு பொதுவான பற்றுறுதி மற்றும் இடம்சார் பற்றுணர்வோடு ஒன்றாக இணைக்கப்பட்டுள்ள சிறிய குழுக்களைக் குறிக்கிறது. இக்குழு ஒரு தலைவரை மையமாகக்கொண்டு படிநிலையாக அமைக்கப்பட்டிருக்கும். இச்சொல் 'பணிக்குழு' போன்ற பல சூழ்நிலைகளில் பயன்படுத்தப் பட்டாலும் சமூகவியலில் பொது நிலையிலிருந்து விலகிய பல்வேறு செயல்களில் ஈடுபடுகின்ற இளம் வயது வாலிபர்களைக் கொண்ட குழுவைக் குறிக்கிறது.

Gemeinschaft
அடிப்படைச்சமுதாயம்

ஒருவருக்கொருவர் ஆழ்ந்த நேரடித்தொடர்புடனும் நல்லுறவுடனும் கூடிய சிறிய சமுதாயம்.. உறவுகள் இயற்கையாகவும் எவ்விதக் கட்டுப்பாடும் இன்றிக் காணப்படும். ஒருவரையொருவர் நன்கு நேசித்து அன்புடன் வாழ்வர். இத்தகைய சமுதாயத்தை அடிப்படைச் சமுதாயம் என்பர்.

Gender
பால்கூறு / பால்வகை

ஒருவரின் பால் உயிரியல் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டுவிட்டால் சமூக மற்றும் பண்பாட்டு அடிப்டையில் அவரின் பால்வகை இணைத்துருவாக்கப் படுகிறது. இவ்வாறாக இரண்டு பால்கள் (ஆண், பெண்) மற்றும் இரண்டு பால்வகைகள் (பெண்ணியல்பு, ஆண் இயல்பு) உள்ளன. பெண்களின் கடமைகள் ஆண்களால் நிறைவு செய்யப்படலாம். அதைப் போன்று ஆண்களின் கடமைகள் பெண்களால் நிறைவு செய்யப்படலாம் என்று பண்பாட்டிடை ஆய்வுகள் தெரிவிக்கின்றன. உறவினர்களை வகைப்படுத்துவதில் பால்வகை முக்கிய காரணியாக உள்ளது.

Genealogical Chart
குடிவழிப்பட்டியல்

மானிடவியல் களப்பணியில் குடிவழிப்பட்டியல் தயாரிக்கும் முறை ஓர் இன்றியமையாத முறையாக உருவாகியுள்ளது. பல தலைமுறையினரின் உயிரியற் பண்புகளைக் கண்டறியவும், கால்வழி அமைப்புகளை ஆராயவும், உறவுமுறைகளை ஆராயவும் குடிவழிப்பட்டியல் மிகவும் உதவுகின்றது.

Generalization
பொதுசீர்மயமாக்கம்

பல கூர்நோக்குகளின் அடிப்படையில் முறைப்படுத்தப்பட்ட ஒரு பொதுவான 'அறிவிப்பு

அல்லது அறிக்கை பொதுசீர்மய மாக்கம் ஆகும். சான்றாக "அனைத்து அண்டங்காக்கைகளும் கறுப்பு" என்பதைக் கூறலாம். தொகுப்பாய்வு முடிவில் பொதுசீர்மயமாக்கம் ஒரு அடிப்படை நடைமுறையாக உள்ளது.

Generalized Marital Exchange
பொது மணப் பரிமாற்றம்

ஒரு முன்னுரிமை மணமுறையைக் குறிக்கிறது. இதில் மூன்று அல்லது மேற்பட்ட குழுக்கள் ஒன்றுக்கொன்று மணப்பங்காளிகளை ஒரு சுழல்வடிவில் அளிக்கின்றன. சான்றாக மூன்று குழுக்கள் அத்தகைய சுழலில் அல்லது வட்டத்தில் ஈடுபட்டால் முதல் குழுவைச் சேர்ந்த ஆண் இரண்டாவது குழுவைச் சேர்ந்த பெண்ணை மணப்பார். இரண்டாவது குழுவைச் சேர்ந்த ஆண் மூன்றாவது குழுவைச் சேர்ந்த பெண்ணை மணப்பார். மூன்றாவது குழுவைச் சேர்ந்த ஆண் முதல் குழுவைச் சேர்ந்த பெண்ணை மணப்பார். ஒரு குழுவானது ஒரேவேளையில் மணச்சுழலில் காணப்பட்டால் இம்முறையில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. இத்தகைய பொது மணப் பரிமாற்றத்தில் ஈடுபடும் குழுக்கள் குடும்பங்கள், கிராமங்கள் போன்ற ஆட்சிக்குழுக்கள் அல்லது ஏனைய சமூகக்குழுக்களாக இருக்கலாம்.

Generalized Reciprocity
பொதுப்படிப் பரிமாற்றம்

பொதுப்படிப்பரிமாற்றம் கடப்பாடு எண்ணம்மிகுந்த நெறுங்கிய உறவுக்கூட்டத்திற்குள் நிகழ்கிறது. இவ்வகை பறிமாற்றத்தில் கணக்கு வைத்துக்கொண்டோ ஈடான வேறுபொருள் உடனே கிடைக்க வேண்டுமென்றோ எண்ணுவதில்லை. சான்றாகத் தமிழ்ப் பண்பாட்டில் திருமணத்தின்போது மணமக்களுக்கு நெருங்கிய உறவினர்களும் நண்பர்களும் அன்பளிப்புகளைக் கொடுப்பதைக் கூறலாம்.

Generation
தலைமுறை

தலைமுறை உறவினர்களைப் பல்வேறுநிலைகளில் பாகுபடுத்தப்படுவதற்கு முக்கிய காரணியாக உள்ளது. ஒருவரின் ஏறுதலைமுறைகளைச் சேர்ந்தோரையும் இறங்கு தலைமுறைகளைச் சேர்ந்தோரையும் தலைமுறை வாரியாகப் பிரித்துக் காட்டும் சொற்கள் உறவினர்களை வகைப்படுத்திக் காட்டுகின்றன.

Generational System
தலைமுறை முறை

பேசுநரின் தகப்பன், தகப்பனின் சகோதரன் மற்றும் தாயின் சகோதரன் ஆகியோர் (ஆண்பால் அனைவரும்) ஒரேவித உறவினராகின்றனர். எனவே அவர்கள் ஒரேபெயர் சூட்டப்பட்ட பிரிவில் சேர்க்கப்படுகின்றனர். இத்தகைய உறவினர்கள் எல்லோரும் ஒரே தலைமுறையைச்சேர்ந்தவர்ளாதலால் இம்முறையை தலைமுறை முறை எனக் குறிப்பிடுவர். இதில் சேர்த்தல் விதிமுறை பயன்படுத்தப்படுகிறது. இவ்வித முறையானது உறவாயன் முறையில்

காணப்படும் விதிமுறைக்கு ஒத்ததாகக் காணப்படுகிறது.

Genetic Character
மரபுப் பண்பு

மூதாதையர்களிடமிருந்து மரபுவழியாகப் பெறும் பண்பு. ஒருவழித் தோற்றக் கொள்கையினர் இப்பண்புக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பர்.

Genetic Method
மரபுமுறை

மூதாதையர்களிடமிருந்து மரபுவழியாகப் பெறும் தொடர்ச்சியான வளர்ச்சிசார்ந்த தொடர்பு களின்படி பண்பாட்டு, சமூக அல்லது உளவியல்சார் இயல் நிகழ்ச்சிகளை ஆராய்வதில் பயன் படுத்தப்படும் ஆய்வுமுறை.

Genius
கூர்மதியாளர்

ஒரு சமுதாயத்தில் குறைந்தபட்சம் சில பிரிவுகளால் கூர்மதிவாய்ந்த நுண்ணறிவாளர் என்று அங்கீகரிக் கப்பட்ட நபரைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

Gentile Society
புறஇனச் சமுதாயம்

ஒரு பழங்குடிச் சமுதாயம்; அல்லது சட்டதிட்டங்களை அடிப்படையாகக் கொள்ளாமல் உறவுமுறையை அடிப்படையாகக் கொண்ட சமுதாயம்.

Genuine Culture
உண்மைப் பண்பாடு

சில பண்பாடுகள் தனிமனிதர் களைச் சிறப்பாகவும் மிகவும் இணக்கமாகவும் சமநிலையிலும் நடத்துகிறது. உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைச் சுதந்திரமாக வெளிப்படுத்த வழிகோலுகிறது. இத்தகைய பண்பாட்டை உண்மைப் பண்பாடு என்பர்.

Geochronology
மண்ணியல் காலக்கணிப்பு முறை

மனிதவரலாறு பதிவு செய்யப் பட்டுள்ள காலத்துக்கு முந்தைய கால வரலாற்று ஆய்வைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. பாறை வகைகளின் தோற்றம் மற்றும் புதைபொருட்களின் அடிப்படையில் காலத்தொடர்ச் சியைப் பெறுவதற்காக நில அடுக்குப்படிவங்கள் ஆராயப் படுகின்றன.

Geographical Community
நிலவியல்சார் பண்புக்குழு

நாட்டுப்படத்தில் எல்லை வரையறுக்கப்பட்ட குறிப்பிட்ட ஒரு பகுதியை இருப்பிடமாகக் கொண்டுள்ள குழு மக்கள்.

Geographic Determinism
நிலவியல்சார் நியதிவாதம்

பண்பாடு நில அமைப்பொழுங் குமுறையால் வடிவமைக்கப்ப டுகிறது என்ற பொருள் விளக் கத்தைக் குறிக்கிறது. மனிதச் சமுத்தாயங்களில் காணப்படும் வேறுபாடுகள் நிலவியல்சார் சுற்றுச்சூழலில் காணப்படும் வேறுபாடுகளால் ஏற்பட்டவை என்ற விளக்கத்தை உடையது.

இவ்வாறு பண்பாட்டு மற்றும் சமூக இயல் நிகழ்வுகளை நிலவியல்சார் காரணக்கூறுகளான காலநிலை, மழைபொழிவு, நிலம் மற்றும் கனிமப்பொருட்கள் ஆகியவற்றின் அடிப்படையில் விளக்கலாம் என்ற கருத்து.

Gerontocracy
முதியவர் ஆட்சிமுறை

சமுதாயத்தில் முதியவர்கள் ஆட்சி செலுத்துகிறதைக் குறிக்கிறது. அவர்கள் வயது அந்தஸ்தோடு தொடர்புடையதாகக் கருதப்படுகின்ற உன்னத ஞானத்தின் மூலம் ஆளுகை செய்கிறார்கள் என்ற கருத்து.

Gerontology
மூப்பியல்

மூப்புப் பற்றியும் மூப்புக்குரிய நோய்கள் பற்றியும் ஆராயும் முறை. குறிப்பாக முதியவர்களைப் பற்றிய அறிவியல்ரீதியான ஆய்வைக் குறிக்கிறது.

Gesellschaft
கலவைநிலை சமூகஅமைப்பு

மாறிக்கொண்டிருக்கும் சமூக அமைப்பு. இத்தகைய சமூக அமைப்பில் மக்களிடையே மாறிக் கொண்டிருக்கும் நிலையில்லாத உறவு காணப்படும். இக்குழு மக்களி டையே, ஆட்சார்பற்ற பண்பு குறித்த ஒப்பந்த இயல்புடைய உறவுகள் மற்றும் பொதுப் படையான குறிக்கோள்கள் காணப்படும்.

Gesture
சைகை

குறிப்புணர்த்தும் உடலுறுப்பு அசைவு இயக்கத்தைக் குறிக்கிறது. பண்பாட்டளவில் தரப்படுத்தப்பட்ட பொருளை வெளிப்படுத்தக்கூடிய உடல்சார் அசைவு அல்லது தோற்ற அமைவு அல்லது முகபாவனை. சான்றாகக் கண் புருவத்தை உயர்த்துவது, கையசைப்பது போன்றவற்றைக் கூறலாம். இது பண்பாடுக்குப் பண்பாடு வேறுபடுவதுண்டு.

Ghetto
யூதர்கள் வாழும் பகுதி

ஐரோப்பிய நகரங்களில் யூதர்கள் வாழ்ந்துவந்த பகுதியைக் குறிப்பிட இச்சொல் பயன்படுத் தப்பட்டது. சமூகவியலில் இச்சொல் நிறம், இனம், மதம் ஆகியவற்றின் அடிப்படையில் தனிப்படுத்தப்பட்ட ஒரு குழுவால் குடியிருப்பாட்சி கொள்ளப்பட்ட, பல தடவைகளில் இழக்கப்படுகின்ற எந்த ஒரு நகர்புறப் பகுதியையும் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

Ghost Marriage
ஆன்மா மணம்

ஒருவர் இறந்துவிட்டால் அவருடையமனைவியை அவருடைய ஆவியின் நினைவாக அவரு டைய சகோதரன் மணந்து கொள்வார். இது ஆன்மா மணம் எனப்படும். இவர்களுக்கு பிறக்கும் குழந்தை இறந்த சகோதரனின் குழந்தை என்றே கருதப்படும். இது நூயர் (Neur) பழங்குடியி னர்களிடம் காணப்படுகிறது.

Gift
கொடை

கொடைப்பொருள் பரிமாற்றம் சமூக உறவுகளை உருவாக்கவும் வலுப்பெறச் செய்வதற்குமான ஒரு முறையாகும். உறவுமுறை அமைப்பு குறித்த மானிடவியலில் கொடை பற்றிய ஆய்வு மிக முக்கிய பங்கு வகிக்கிறது. குறிப்பாக மாமன்முறைத் திருமணங்களில் குடும்பங்களுக்கிடையிலான பெண் பரிமாற்றமுறையானது கொடை உறவுக்கு ஓர் எடுத்துக்காட்டாக உள்ளது.

Goal
இலக்கு

ஒரு தேவை அல்லது விருப்பத்தைத் திருப்தி செய்வதற்காக ஒரு தனிநபரால் நாடிச் செல்லப்படுகின்ற ஒரு நிலை அல்லது பொருள். இதனால் நடக்கை முறையானது செயல் நோக்கமளிக்கப்படுகிறது.

Government
அரசு

ஒரு மத்தியச் செயலாண்மை அல்லது இடைத்தொடர்புடைய அமைப்பாண்மைகளின் ஒட்டுமொத்த பல்திறக் கூட்டொருமை. இது ஒரு சமுதாயத்தின்மீதோ அல்லது ஒரு சமுதாயத்தின் எல்லை வரையறுக்கப்பட்ட உட்பிரிவின்மீதோ ஒட்டுமொத்த கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்துகிறது.

Gradient
படித்தரம்

சமூகவியலில் இச்சொல் ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து தூரம் செல்லும்போது சீராக இறங்கவோ அல்லது ஏறவோ செய்கிற ஒரு மாறியைக் (variable) குறிக்கிறது. பெரும்பாலும் படித்தரம் ஒரு நகரத்தின் மையப்பகுதியிலிருந்து வெளிப்புறம் நோக்கி அளவிடப்படுகிறது. வருபாய், கல்வி, குற்றம், பிறப்பு, மணவிலக்கு, வீட்டு உடைமை, மனநோய், செய்தித்தாள் சுற்றோட்டம் போன்றவை மாறிகளாக வரும். படித்தரக் கருத்துப்படிவம் வாழ்க்கைச்சூழல் ஆதிக்கக் கருத்துப் படிவத்தோடு நெருங்கிய தொடர்புடையது.

Great Man Theory in Culture Change
பண்பாட்டு மாற்றத்தில் உயர் மனிதக் கோட்பாடு

சமூக மற்றும் பண்பாட்டு மாறுதல்களைக் குறித்த ஒரு கோட்பாடு. மாறுதல்களைக் கொண்டு வருவதில் திறமைவாய்ந்த மற்றும் உயர்ந்த தனிநபர்களின் முக்கியத்துவத்தை இக்கோட்பாடு வலியுறுத்துகிறது.

Greenbelt Town
பசுமைப் பகுதி நகரம்

குறைந்த மக்கள்தொகை உடைய திட்டமிடப்பட்ட ஒரு பண்புக்குழுவைக் குறக்கிறது. இது ஏனைய பண்புக்குழுக்களிலிருந்து பிரிக்கப்படும் வகையிலும் அழகு மற்றும் இன்பப் பொழுதுபோககு அளிக்கும்வகையிலும் வாழும் பகுதியின் வடிவமைப்பில் பூங்காக்கள், புல்வெளிகள், காடுகள் ஆகியவை

குழப்பட்ட பகுதிகள் இணைக்கப் பட்டிருக்கும்.

Green Funeral
பசுமைச் சடங்கு

ஒருவர் இறந்தவுடன் செய்யப்படும் சடங்கு பசுமைச் சடங்காகும். பசுமைச் சடங்கு உடல் ஆவி பிரிந்து இறப்புக்குள்ளான சதைப் பகுதிக்குச் செய்யப்படும் சடங்கு. இது தொன்மை மக்களிடையே காணப்பட்ட சடங்குமுறையாகும்.

Gregariousness
கூடி வாழும் தன்மை

மனிதர்களிடையே இருப்பதாகக் கருதப்படுகின்ற குழுக்களாகச் சேர்ந்து வாழும் மனப்பாங்கு. மனிதன் இதனை மரபுவழியாக அடைகிறான். மனிதச் சமுதாயங்கள் உருவாவதற்கு இதுதான் அடிப் படையான காரணம் எனவும் கருதப்பட்டது.

Group
குழு

ஓரளவு நிரந்தரமான ஒரு சமூக ஒருமத்தில் அங்கத்தினர்களாக இருக்கவேண்டும் என்ற ஆர்வ முடைய செயல்விளைவுகளை உடைய நபர்கள் அடங்கிய தொகுதி. அத்தகைய ஒருமத்தில் ஒருவித ஒழுங்கமைவும் செயல் பாகுபாடும் காணப்படும். குழுவி னரின் நடத்தைகளைக் கட்டுப்பத் துவதற்கென அங்கீகரிக்கப்பட்ட விதிமுறைகள், அந்தஸ்து அமைப்பு மற்றும் ஒரே தன்மையிலான ஆர்வம் அல்லது செயல்நோக்கம் ஆகியவை காணப்படும்.

Group Acceptance
குழு ஏற்பு

குறிப்பிட்ட ஒரு குழுவில் ஒருவரை அங்கத்தினராக அங்கீ கரிக்கும் அல்லது ஏற்றுக்கொள்ளும் செயல். அதன் விளைவாக அக்குழுவில் அவருக்குச் சில குறிப்பிட்ட பங்குகளும் அந்தஸ்தும் ஒதுக்கிக் கொடுக்கப்படுகின்றன.

Group Climate
குழு நிலை

ஒரு குழுவின் பொதுவான குணங்கள் அல்லது மனப்பற்று. இது குழு உறுப்பினர்களின் எண்ணங்கள் மற்றும் நடக்கை முறைகளை நேரடியாகவோ மறை முகமாகவோ பாதிக்கக்கூடிய எதிர்பார்ப்புகள் மற்றும் மனப் பான்மைகளின் அடிப்படையில் ஏற்படுகிறது.

Group Cohesiveness
குழு இணைவாற்றல்

ஒரு குழுவின் உள்ளார்ந்த ஒருமைப்பாடு, ஒற்றுமை அல்லது ஒன்றாய தன்மையைக் குறிக் கிறது. இது தனிநபர்களின் ஆர்வம் மற்றும் கருத்துப் போக்குகள் ஒரு பொதுநலனாக இரண்டறக் கலப்பதன்மூலம் தோன்றுகிறது. வழக்கமாக ஆற்றல்வாய்ந்த தலைமையின் விளைவால் ஏற்படுகிறது.

Group Demoralization
குழு ஒழுக்கச்சிதைவு

ஒரு குழுவின் ஒழுங்குணர்வில் தடீரென ஏற்படும் தீவிரமான குறைபாடு குழு ஒழுக்கச்

சிதைவாகும் இக்குறைபாடோடு இணைந்து தொடர் குழு முயற்சி அல்லது உழைப்பு பயனுடையதாக இருக்காது என்ற எண்ணமும் வளரும்.

Group Dynamics
குழு ஆற்றல் இயல்

சிறிய குழுக்களைப் பற்றிய ஆய்வு. ஒரு குழுவுக்குள் நிலவும் கொடுக்கல் வாங்கல் முறைகள், ஒரு குழுவுக்கும் அதன் சுற்றுச் சூழலுக்குமிடையிலான (ஏனைய குழுக்களையும் சேர்த்து) இடைத் தொடர்புகள் ஆகியன இவ்வாய்வில் அடங்கும். இதனைக் குறிப்பிடப் பல சமூகவியலாரால் சமூக வாழ்வின் அனைத்துப் பண்புக் கூறுகளும் இயக்காற்றல் உடையன என்றும், சிறிய குழு பற்றிய ஆய்வானது சமூகவியல் ஆய்வில் ஒரு முழுமைவாய்ந்த பகுதி என்றும் கருதப்படுவதால் 'சிறு குழு ஆய்வு' என்ற தொடரைப் பயன்படுத்த விரும்புகின்றனர்.

Group Expectations
குழு எதிர்பார்புகள்

கூர்ந்து நோக்குகின்ற ஒரு வரால் அல்லது ஒரு குழுவினரால் அல்லது பலராலும் உணரப்படுகின்ற ஒரு இயல்பான தரம் அல்லது அமைப்பைக் குறிக்கிறது. ஒரு குழுவின் சமூக விதிமுறைகள் உறுப்பினர்களின் நடக்கைமுறையை ஒருவருக் கொருவர் முன்னறிந் துகொள்ளச் செய்கிறது.

Group Feeling
குழு உணர்வு

குழு அங்கத்தினர்களிடையே காணப்படும் முன்னுணர்வு அல்லது விழிப்புணர்வு. அதாவது அவர்கள் இணைந்து ஒரு தனி சமூக ஒருமத்தை உருவாக்கியுள்ளனர் என்ற உணர்வு. அது சிலநிலைகளில் ஏனைய அனைத்து குழுக்களிலி ருந்தும் வேறுபட்டது என்ற உணர்வை குழு உணர்வு என்பர்.

Group Goal
குழு இலக்கு

குழுச்செயல்பாட்டின் வாயிலாகப் பெற விரும்புகின்ற ஒரு குறிக் கோள். ஒரு குழு இலக்கு அக்குழு நிலைத்திருப்பதற்கு வெளிப் படையாகக் குறிப்பிடப்பட்ட காரணமாக இருக்கலாம்.

Group Identification
குழு இனமறிதல்

ஒரு தனிநபர் ஒரு குழுவின் இலக்குகள், மதிப்பீடுகள், தரங்கள் மற்றும் எதிப்பார்ப்புகளுக்குத் தன்னைத்தானே கூட்டிணைவாகச் சேர்த்துக்கொள்கிற நடைமுறை. அத்தகைய நடைமுறைகளைத் தன் சமூகவாழ்வின் அமைப்பாண்மை, அங்கீகாரம் அல்லது நிலைப் படுத்துதல் ஆகியவற்றுக்குப் பயன்படுத்திக்கொள்கிறார்.

Group Integration
குழு ஒருமைப்பாடு

பல்வேறுபட்ட சமுதாய மக்களை ஒரே குழு அமைப்பாக வகுத் தமைக்கும் செயல். அக்குழுவின் ஓர் உயர்ந்த அளவிலான அமைப்புமுறை, செயல்நோக்கு ஒருமைப்பாடு மற்றும் ஒழுங்கு

ணர்வு ஆகியவை காணப்படும்.

Group Marriage
குழு மணம்

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்கள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பெண்களை ஒரேநேரத்தில் மணக்கும் முறை. இம்முறையில் ஒருவருக்குத் தனிப்பட்ட மனைவி அல்லது கணவன் இருப்பதில்லை. தற்போது இத்தகைய திருமணம் எங்கும் நடைமுறையில் இல்லை. இது பலகணவர் மணமுறையில் திருந்திய வடிவம் என்றும் கருதுகின்றனர். பல கணவர் குடும்பத்தில் மனைவியின் எண்ணிக்கை ஒன்றிலிருந்து இரண்டோ அதற்கு மேலோ ஆகும்பொழுது அது குழுமணக் குடும்பமாக மாறுகிறது.

Group Membership
குழு உறுப்பினர்நிலை

ஒரு தனிநபர் ஒரு குழுவில் உறுப்பினராக இருத்தல். இச்சொல் குழு என்ற சொல்லோடு ஒரு பொருள் பிறசொல்லாக உள்ளது. ஆனால் வழக்கமாக முன்மாதிரிக் குழுவுக்கு மாறாகப் பயன்படுத்தப்படுகிறது.

Guest People
விருந்தினர்

ஒரு சிறுபான்மைக் குழுவைக் குறிக்கிறது. சமுதாயத்தில்மேலாண்மை செலுத்தும் பெரும்பான்மையினரின் பண்பாட்டிலிருந்து வேறுபட்ட பண்பாட்டை உடையவர்கள். அவர்கள் மேலாதிக்கக் குழுவால் பொறுத்துக்கொள்ளப்பட்ட அயலார்களாக நடத்தப்படுவார்கள்.

Guided Interview
தூண்டிய நேர்காணல்

இத்தகைய நேர்காணலில் முன்னரே கவனமாகத் தயாரிக்கப் பட்ட ஒருவகையான கேள்விகளைப் பேட்டி காண்பவர் தகவலாளியிடம் கேட்பார். இதில் முன்னரே வரையறுக்கப்பட்ட ஆய்வுப்பொருள்கள் ஆராயப்படுகின்றன. சேகரிக்கப்பட்ட தரவுகளின் பகுப்பாய்வின்போது புதிய உள்நோக்குகள் வெளிக்கொணரப்படும். தகவலாளியோடு முறைசாரா உரையாடலாக அமைவதில்லை.

Guild
கூட்டுறவுக்குழு

தொழில்மய சமுதாயத்துக்கு முந்தைய மற்றும் தொழில்மய சமுதாய ஆரம்ப காலத்தில் காணப்பட்ட தொழில்சார் சங்கங்கள். இது வர்த்தகத் திறமையிலும் புலமையிலும் முறையான தொழிற் பயிற்சிகள், உறுப்பினர்களின் தொழில்சார் செயல்பாடுகளின் கட்டுப்பாடு, மற்றும் வர்த்தகப் பயிற்சியில் அயலாரை வெளியேற்றுவது ஆகியவற்றில் ஈடுபட்டு வந்தது. இயல்பாக அவர்கள் சட்டப்படி ஒன்றுபட இணைக்கப்பட்ட அமைப்பாகக் காணப்பட்டார்கள்.

Guilt
குற்றத்தன்மை

கவலை அல்லது ஏக்கத்தைக் குறிக்கிறது. இது சில நேர்மைத் தகவுடையதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பீடுகள் மற்றும் விதிமுறைகளிலிருந்து ஒருவர்

விலகிவிட்ட உணர்வால்ஏற்படுகிறது. குற்றத்தன்மையானது தனிநபரின் தோல்வியாலோ அல்லது குறைபா டாலோ மட்டும் ஏற்படுவதில்லை. சிக்கலான மதிப்பீடுகள் மற்றும் உரிமைக் கோரிக்கைகளிலிருந்தும் தோன்றுகிறது. எனவே குற்றத்தன் மையானது ஒரு தனிநபரின் சமூக மற்றும் பண்பாட்டுச் சூழலில் காணப்படும் முரண்பாடுகளின் பிரதிபலிப்பாகும்.

H

Habit
பழக்கம்

உரிய தருணங்களில் ஒரு தனிநபரால் தானாகவே மறுபடியும் செய்யப்படுகின்ற கற்றறிந்த அல்லது நன்குணர்ந்த முன்மாதிரி மறுமொழி அல்லது எதிர்ச்செயலைக் குறிக்கிறது. சமூகப் பழக்கவழக் கங்கள் மற்றும் நடத்தைமுறை களையும் பழக்கங்கள் என்று குறிப்பிடுவர்.

Habitat
இருப்பிடம்

ஒரு பொதுப் பண்புக்குழு வாழும் இடம். குறிப்பிட்டுக் கண்டறியப்பட்ட நிலவியல்சார் சுற்றுச்சூழலைக் குறிக்கிறது. இதில் இயற்கையான சுற்றுச்சுழலின் ஆக்கக்கூறுகளான காலநிலை, உயரம் மற்றும் இடக்கிடப்பியல் கூறுகள் ஆகியவை அடங்கும்.

Hamlet
சிற்றூர்

ஒரு சிறிய கிராமப்புறப் பணி மையம். இது ஒரு ஊரைவிடச் சிறியதாகவும் மக்கள்தொகை 250க்கும் குறைவாகவும் இருக்கும். ஒரு சிற்றூர் ஒன்று அல்லது இரண்டு விற்பனைக்கூடங்கள், ஒரு புனித இடம், சில வேளைகளில் ஒரு பள்ளிக்கூடம் மற்றும் சேவைமையம் ஆகியவை உடைய வகைமாதிரியாகக் காணப் படும். இதனைத் திருக்கோயில் இல்லாத சிற்றூர் என்றும் குறிப்பிடுவர்.

Hard Information
நிலையான செய்திக்கூறு

உண்மையான, நிலையானசெய் திக்கூறு. உணர்ச்சியாலோ அல்லது ஏனைய சூழ்நிலைகளாலோ எவ்விதப் பாதிப்பும் ஏற்படாத நிலையான செய்தி. இச்செய்தி களைக் களஆய்வின் மூலம் தெரிந்துக்கொள்ளலாம். வயது, பால், படிப்பு போன்ற செய்திகள் உண்மையான நிலையான செய்திகளாகும்.

Hawaiian System
உறவாய் முறை

உறவாயன் முறையில் ஒருவரின் பெற்றோரின் பிள்ளைகளும் (உடன்பிறப்புக்களும்) பெற்றோரின் உடன்பிறந்தவர்களின் பிள்ளைகளும் ஒரு குறிப்பிட்ட உறவுமுறைப் பிரிவின்கீழ் வகைப்படுத்தப் படுகின்றனர். இவர்களிடையே உறவுமுறைச் சொற்களில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இல்லை. ஒரே உறவுமுறைச் சொல்லால் எல்லோரும் அழைக்கப் படுகின்றனர். எனினும் பாலின்

அடிப்படையில் வேறுபடுத்தப் படுகின்றார்கள். இம்முறையில் ஒரே ஒருவிதமான உறவுமுறையே ஏற்படுகிறது.

Head Hunting
தலைவேட்டை

வெற்றிச்சின்னமாக எதிரிகளின் தலைகளைச் சேகரித்து அதன் பொருட்டுத் தங்கள் தன்மானம் அல்லது கீர்த்தியை உயர்த்திக் கொள்ளும் ஒரு வழக்கம் அல்லது ஒரு சடங்குமுறை செயல்நோக்கை நிறைவேற்றும் வழக்கம்.

Heathenism
காட்டுமிராண்டித்தன்மை

நாகரீகமற்றவர்களாய், காட்டுப் பகுதிகளில் வாழும் மக்களின் பழக்க வழக்கங்கள், பொதுவாக அவர்கள் வரிவடிவமற்ற மொழி களைப்பேசுபவர்களாகஇருப்பார்கள்.

Hegemony
தலைமைநிலை

அரசியல் மற்றும் கருத்தியல் இணைவின்மூலம் ஒரு வகுப்பு இன்னொரு வகுப்பின் மீதான மேலாதிக்கத்தை எவ்வாறு முயன்றடைகிறது என்பதை விளக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

Henotheism
தலைக்கடவுள் கோட்பாடு

பிற தெய்வங்களை விலக்காது ஒரு முழு முதற்கடவுளை நம்பும் கோட்பாடு. அதாவது அனைத்துத் தெய்வங்களுக்கும் மேலாக ஒரு கடவுள் இருக்கிறார். அவரை வழிபடவேண்டும் என்றகொள்கை. தலைக்கடவுள் கோட்பாடானது ஒருகடவுள் கோட்பாட்டிலிருந்து வேறுபட்டது.

Herd
மக்கட்கும்பல் / மந்தை

உணர்ச்சிவயப்பட்ட, சீராக இல்லாத, ஒழுங்கமைதியற்ற மக்கள்திரள். அவர்கள் தன்செய லின்றிப் பிறர் செயலுக்குட்பட்டு ஒருதலைவரைப் பின்பற்றுவார்கள்.

ஒரேவிதமான மிருகங்களின் தொகுதியையும் குறிக்கிறது.

Heredity
மரபுத்தொடர்பு

உடல்கூறு தனிச்சிறப்புப் பண்புகளைக் கரு உயிர்மம் மூலம் ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு ஒப்படைத்தல் அல்லது மரபுவழியுய்த்தல்.

Hero
வீரன் / பெருந்தகை

ஒரு தனிநபர் அவருடைய கடந்தகால அல்லது நிகழ்காலச் சமூகப் பங்கு அல்லது செயல்களால் ஒரு பண்பாட்டின் முக்கிய மதிப்பீட்டுப்பண்புக்கூறின்சின்னமாய் அமைவதைக் குறிக்கிறது. அவர் உண்மைநிலையிலோ அல்லது கற்பனையாகவோ, உயிரோடிருப் பவராகவோ அல்லது இறந்தவ ராகவோ இருப்பதுண்டு.

Heterogamy
கலப்புமணம்

பெரும் மதிப்புத்தன்மைகளில் வேறுபடுகின்ற நபர்களிடையே நடைபெறுகின்ற திருணம். சான்றாகப்

பண்பாட்டுப் பின்னணி, இனம், சமூகவகுப்பு, மதம் போன்றவற்றில் வேறுபடுகின்ற நபர்களிடையே நடைபெறும் திருணமங்களைக் கூறலாம்.

Heterolocal Family
கலப்பு உறைவிடம்

திருமணத்துக்குப்பின் மணமக்கள் உறைவிடத்தை ஏற்படுத்திக்கொள்ள இரத்த உறவினர் யாராயினும் இடம்கொடுத்தால் அது கலப்பு உறைவிடமாகும்.

Hidden Curriculum
மறைவான பாடத்திட்டம்

பெரும்பாலான கல்வி நிறுவனங்கள் மாணவர்கள் பெற்றுக் கொள்ளவேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகின்ற கல்விசார் அறிவுப் பகுதிகளை உள்ளடக்கிய முறையான பாடத்திட்டங்களை உடையதாக இருக்கும். சான்றாகக் கணிதம், வேதியியல் போன்றவை. இத்தகைய வெளிப்படையாகப் போதிக்கப்படுகின்ற பாடத்திட்டத்துக் கிடையேஇணையான மதிப்பீடுகள், பழக்க நடக்கை அல்லது விதிமுறைகள் ஆகிய மறைவான பாடத்திட்டம் உள்ளடக்கமாக மாணவர்களுக்கு ஆசிரியர்களால் அறிவிக்கப்படுகிறது. மறைவான பாடத்திட்டம் பள்ளிக்கூடத்திலும் சமுதாயத்திலும் சமூகக் கட்டுப்பாட்டை மேம்படுத்துவதாக நம்பப்படுகிறது.

Hierarchy
படிநிலை அமைப்பு

ஓர் அமைப்பாண்மைக்குள் குறிப்பிட்ட ஒழுங்குகளுக்குட்பட்டுச் சில தேர்வு முறையிலான சீர்தூக்கலின்படி பொருத்தமானது என ஏற்றுக்கொள்ளப்பட்ட அந்தஸ்துகளின் படித்தரம். படித்தர ஒழுங்கில் ஈடுபடுகின்ற குழுக்கள், வகுப்புகள் ஆகியவற்றின் உறவைக் குறிப்பிட இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

Higher Animism
மேல்நிலைஆவியுலகக் கொள்கை

மேல்நிலை ஆவியுலகக் கொள்கையினர் அவர்கள் வாழும் காலத்தில் செய்த நன்மை தீமைகளுக்கேற்ப மதிப்புகளோ தண்டனைகளோ கிடைக்குமென நம்புகின்றவர்கள். இவ்வகையினர் படிமலர்ச்சிக்கோட்டில் மேல்நிலையில் உள்ளவர்கள் எனக் கருதப் படுகின்றனர். இக்கொள்கை மேல்நிலை ஆவியுலகக் கொள்கை எனப்படும்.

Historical Materialism
வரலாற்று இயற்பொருள்வாதம்

சமூக, பண்பாட்டு மற்றும் அரசியல் இயல்நிகழ்ச்சிகள் இயற்பொருள் உற்பத்தி முறையால் முடிவு செய்யப்படுகிறது அல்லது உறுதிப்படுத்தப்படுகிறது என்ற கொள்கை. இக்கொள்கை வரலாற்று நடைமுறை விளக்கங்களின் கருத்துக்களைவிடப் பொருளாதாரத்துக்கு முன்னுரிமை அளிக்கிறது.

Historical Method
வரலாற்றுமுறை

கடந்தகாலச் செய்தி மூலங்களின் நம்பத்தக்க நிலையை உறுதிப்படுத்

துவதற்கான சீர்தூக்கல். மேலும் ஆராயப்படுகின்ற குறிப்பிட்ட காலகட்டத்தைக் குறித்த விரிவான தரவுகளுக்காக உண்மையான அல்லது அதிகாரப்பூர்வமான மூலங்களை ஆராய்வதையும் குறிக்கிறது. வரலாற்றாசிரியர்களால் பயன்படுத்தப்படுகின்ற செய்தி மூலம் எல்லாவிதமான எழுதப்பட்ட பதிவுமூலங்கள் அல்லது ஆவணங்கள், சட்டங்கள், பொது ஆவணங்கள், அறிக்கைகள், வியாபார ஆவணங்கள், செய்தித் தாள்கள், தனிப்பட்ட குறிப்பேடுகள், கடிதங்கள், குடிவழிப் பட்டியல்கள், பயணிகளின் குறிப்புகள் மற்றும் எல்லாவிதமான இலக்கியங்கள், மேலும் கட்டிடங்கள் மற்றும் கலைத்தொழில்கள் ஆகியவைகளாகும்.

Historical Sociology
வரலாற்றுச் சமூகவியல்

சமுதாயங்கள், குழுக்கள், கருத்துத்தொகுதிகள், நிறுவனங்கள் மற்றும் ஏனைய இயல்நிகழ்ச்சிகள் ஆகியவற்றின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்த ஆய்வு மற்றும் விளக்கங்கள். இது இன்றியமையாத பண்பாட்டு அறிவியலாகும், வரலாற்றுச் சமூகவியல், சமூக இயல்நிகழ்ச்சிகளுக்கு உயிர்க்கூறான வளர்ச்சியின் மூலச் கோட்பாடுகள் மற்றும் விதிமுறைகளை நாடுகிறது. வரலாற்றுச் சமூகவியல் என்ற சொல் சுமார் 50 ஆண்டுகளுக்கும் முந்தைய சமூக ஆக்கக்கூறுகளைப் பற்றிய ஆய்வைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. நடைமுறையில் வரலாற்றுச் சமூகவியல் சமூகக்குழுக்கள், அவர்களின் கூட்டமைவு, இடைத்தொடர்புகள், சமூகநிலைகள் ஆகியவற்றின் ஒரு குறிப்பிட்ட விதத்திலான ஒப்பாய்வாகும்.

Holism
முழுதளாவியம்

மானிடவியலின் பரப்பு எவ்வாறு விரிந்து காணப்படுகிறதோ அவ்வாறே அதன் அணுகுமுறையும் தனித்தன்மையானது. இது மானிடவியல் வழக்கில் முழுதளாவியம் என்று சிறப்பாக வழங்கப்பெறும்.

Holistic Approach
முழுதளாவிய அணுகுமுறை

மானிடவியலில் உள்ள மிக முக்கிய அணுகுமுறை. பண்பாட்டையும் சமுதாயத்தையும் பற்றிய கருத்துக்களைத் தவிர உயிரியல்சார் பண்புகளையும், வம்சாவளி, வரலாறு, இடப்பெயர்ச்சி ஆகியவற்றையும் ஆராயும் முறை முழுதளாவிய அணுகுமுறையாகும்.

Homogamy
ஒருபடித்தான மணம்

உடல்ரீதியிலோ, உளவியல் அடிப்படையிலோ அல்லது சமூக நிலையிலோ ஒரே குணாதிசயங்களை உடைய நபர்களுக்கிடையிலான திருமணம்.

Homogeneous Society
ஒருபடித்தான சமுதாயம்

சிக்கலற்ற எளிமையான சமுதாயம். இத்தகையசமுதாயங்களை ஆராய்வதன் மூலம் சமுதாயப் பண்பாட்டு அமைப்புகளை நன்கு புரிந்துகொள்ள

முடியும் என மானிடவியலார் நம்பினர். எனவேதான் தொழிற் சமுதாயத்தைக் காட்டிலும் குறைவான மக்கட்தொகையுடைய ஒருபடித்தான சமுதாயங்களை ஆராய்வதில் மானிடவியலார் ஈடுபட்டுவந்தனர்.

Horde
இனத்திரள்

ஒரு ஒருமமாக வாழ்ந்துவந்த பிரித்தறியப்படாத மக்கள் தொகுதியைக் குறிப்பிடுவதற்குச் சில முற்காலச் சமூக விஞ்ஞானி களால் கற்பனையாகப் பயன்ப டுத்தப்பட்ட கருத்துப்படிவம். அதில் குடும்ப அளவிலான சமூக அமைப்போ அல்லது ஏனைய உறவுமுறை ஒருமங்களோ இருந்ததில்லை. அத்தகைய இனத்திரள் பாலுறவு பொதுவு டைமையைக் கையாண்டதாக நம்பப்பட்டது. அவர்களிடையே தனி சொத்துடைமை அறியப் படாதிருந்தது. மனிதர்களி டையே அத்தகைய சமுதாயத் திற்கான ஆதாரம் இல்லை.

இச்சொல் கல்லாத வரையறுக் கப்படாத மக்கள்தொகுதிக்கு அருள் பாலிக்கின்ற குறிப்பீ டாகவும் பயன்படுத்தப்படுகிறது.

Horizontal Group
சமச்சமூகநிலைக்குழு

பெரும்பாலும் ஒரேமாதிரியான பொருளாதாரநிலை அல்லது ஒரே சமூக நிலையைச் சார்ந்தவர்களை அங்கத்தினர்களாகக் கொண்ட சமூகக்குழு. சான்றாக வழக்கறிஞர் சங்கம் போன்ற தொழிற்சங் கங்களைச் சமச் சமூகநிலைக் குழுக்களாகக் கருதலாம்.

Horizontal Mobility
சமச்சமூகநிலை மாற்றம்

ஒரு தனிநபரோ அல்லது குழுவோ ஒரு சமூக அந்தஸ்து நிலையில் எவ்வித ஏற்றத்தாழ்வும் ஏற்படாமல் மாறுவதைச் சமச்சமூக அந்தஸ்துநிலை மாற்றம் என்பர். சான்றாகக் கூலிவேலை செய்பவர் தச்சுத்தொழிலாளியாக மாறினாலும், அவருக்குச் சமூகத்தில் எந்த முக்கியத்துவமும் கொடுக்கப்படு வதில்லை. அவர் ஒரு கூலி வேலைக்காரராகவே கருதப்படுகிறார்.

Horizontal work Group
சமநிலைப்பணிக்குழு

தனிநபர்களின் பணிக்குழுவைக் குறிக்கிறது. அவர்களின் வேலையானது அந்தஸ்து நிலை, வருவாய், திறமை மற்றும் ஆணையுரிமையின் அளவு ஆகியவற்றில் சமநிலையில் அல்லது ஒரேமாதிரியாகக் காணப்படும்.

Household
குடித்தனம்

ஒரே சமையல் அறையை உடைய வர்களாகப் பலநபர்கள் ஒரே இடத்தில் ஒன்றாக வாழ்வது குடித்தனம்.

Human Ecology
மனிதச்சூழலியல்

மக்கள் இன்று ஏறக்குறைய் உலகின் அனைத்துச் சூழ்நிலைகளிலும் வாழ்ந்து வருகின்றனர். ஒவ்வொரு வகையான சுற்றுச்சூழலுடனும் அவர்கள் கொண்டுள்ள தக்கவைப்பு

முறைகள், சுற்றுச்சூழலுடன் மக்கள் கொண்டுள்ள கூட்டுவாழ்க்கை, உடற்கூற்றியல், உடலியக்கம், நோய்முறைகள் முதலானவற்றை மனிதச்சூழலியல் பிரிவு ஆராய்கிறது.

Humanism
மனிதநேயம்

மனிதநேயத்தின் முக்கிய தத்து வக்கூறானது கடவுள் அல்லது இயற்கையைவிட மனிதனோடு அதிக சார்புடையதாக இருப்பதாகும். இக்கோட்பாடு இனம், சாதி, வகுப்பு, சமயம் போன்ற அனைத்துப் பிரிவுகளையும் கடந்தது. மக்கள் அனைவரின் பெருமானத்தையும் மதிப்பையும் வலியுறுத்துகிறது.

Human Nature
மனிதஇயல்பு

ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் காணப்படும் நபர்கள் ஒருவரோடு ஒருவர் கொள்கிற தோழமை அல்லது தொடர்பின் மூலம் கற்றுக்கொள்கிற குழு பழக்கவழக் கங்கள், விதிமுறைகள், பண்பாட்டு மனப்பான்மை, உணர்ச்சிக் கனிவுகள் மற்றும் மதிப்பீடுகள் ஆகியவை.

Human Relation
மனித உறவு

ஒரு பொதுப் பண்புக்குழுவில் வெவ்வேறு குழுக்கள் மற்றும் பிரிவு மக்களிடையே காணப் படுகின்ற அல்லது எழுகின்ற பகைமை மற்றும் உட்புயல் அமைதிநிலையைக் குறைக்க நாடும்பயன்பாட்டு சமூகவியல் பிரிவு.

Hunting and Food Gathering
வேட்டையாடி உணவுசேகரித்தல்

வேட்டையாடுதல், மீன்பிடித்தல், காட்டில் கிடைக்கும் காய்-கனிகள், கொட்டைவகைகள், தேன், பிற உண்ணும்பொருட்களைச்சேகரித்தல். அதோடு மரப்பட்டைகள், நார், மரப்பொருட்கள் போன்றவற்றைச் சேகரித்து ஏனைய மக்களுக்குக் கொடுத்து அவர்களிமிருந்து தேவையான பொருட்களைப் பெறுதல். இவ்வாறு உணவுத் தேவைகளை ஈட்டும் முறையே வேட்டையாடி உணவு சேகரிக்கும் முறையாகும். உணவுத்தேவைகளை ஈட்டும் முறைகளில் இதுவே மிகவும் எளியமுறையாகவும் முதன்முதலில் ஏற்பட்ட முறை யாகவும் உள்ளது.

Hypergamy
உயர்சாதி மணம்

ஒரு பெண் கீழ்சாதியில் திருமண உறவு கொள்வதை அனும திக்காத வழக்கம். பெண்கள் அவர்களின் சாதியில் அல்லது உயர்ந்த சாதியில் மணஉறவு கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். இம்முறையில் திருமணத்துக்குப்பின் மணமகனின் தகுதி மாறுவ தில்லை.

Hypogamy
கீழ்ச்சாதி மணம்

ஒரு பெண் அவளுடைய சாதிக்குக் கீழுள்ள சாதிகளிலிருந்து கணவனைப் பெற்றால் அது கீழ்சாதி மணமாக அமையும். திருமணத்ததுக்குப்பின் மணமகளின் தகுதி மாறுகிறது.

Hypothesis
கருதுகோள்

ஆய்வில்நிருபிக்கப்படவேண்டிய தற்காலிக முடிவுகள், அவை நிருபிக்கப்படாமலும் போகலாம். இத்தகையதாக இருக்கலாம் என எண்ணி தொடங்குவதே கருதுகோள் ஆகும். ஒரு முடிவை, மனத்தில் நினைத்துக்கொண்டு அக்கருத்தைக் குறிப்பிட்டுப் பிறகு அதற்கு ஆதரவானவற்றையும் எதிரானவற்றையும் திரல்பட எடுத்துத்தர முற்படுதல். சான்றுகளைத் தொகுத்து ஆராயும்போது கொண்ட கருத்துக்கள் பல சரி எனவும் முடிவாகும், தவறெனவும் முடிவாகும். முதலில் தெளிவற்ற கருதுகோளாக இருக்கும் ஒன்று ஆய்வுக்குப்பின் செவ்விய கருதுகோளாக மாறிடவும் வாய்ப்புண்டு, கருதுகோளின் செம்மையும், தெளிவும், எளிமையும் ஆய்வுச் செம்மைக்கு வழிநடத்தும்.

I

Ideal Culture
உகந்தநிலைப் பண்பாடு

உகந்தநிலைப் பண்பாடு என்பது சமுதாய வாழ்வில் இதை இதைத்தான் செய்ய வேண்டும் என்று மக்களிடமிருந்து எதிர்பார்ப்பதைக் குறிக்கிறது. காலந்தவறாமையை வலியுறுத்திப் பேசுவதும், அவரவர் கடமையைத் தவறாமல் செய்யவேண்டும் என்று கூறுவதும் உகந்தநிலைப் பண்பாட்டைக் குறிக்கிறது. அவற்றைக் கடைபிடிக்க இயலாமல் வாழும்நிலை உண்மைப் பண்பாட்டைக் குறிக்கிறது. அதாவது மக்களின் நடத்தைமுறை, இந்த இந்த முறையில்தான் இருக்கவேண்டும் என்று அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட மரபுவழி விதி முறைகளைக் குறிக்கின்றது. பெரும்பாலும் நல்நடத்தையோடு தொடர்புடையதாக இருக்கும் குடும்ப ஒற்றுமை, குழந்தைகளைப் பேணுதல் போன்ற கருத்துக்களைச் சான்றாகக் கூறலாம்.

Idealism
கருத்தியல் கோட்பாடு

புலன்வழி அறியப்பட்ட புற அறிவுலகு முழுவதும் கருத்தியலின் தோற்றமே எனும் கொள்கை. சமூகவியலில் அக உணர்வுச் சார்பு கருத்தியல் கோட்பாடு குறியீட்டளவிலான கொடுக்கல் வாங்கல் நிலைகளை விளக்குவதற்கு அவ்வப் போது கையாளப்படுகிறது. மார்க்சீயவாதிகள் சமூகவியலை ஒட்டுமொத்தமாகக் கருத்தியல் சார்புடையது என வாதிடுகின்றனர். சமூகவியலில் பொருள்சார் பொருளாதார நிலைகளை விட்டுவிடுவது அல்லது குறைத்துக் கொள்வதைக் காரணமாகச் சுட்டிக் காட்டுகின்றனர்.

Idealistic Category
கருத்தியல்வகை

மக்கள் அவரவர் பண்பாட்டைப் பற்றிக்கொண்டுள்ள மதிப்பீடுகளையும் நெறிமுறைகளையும், பிற கருத்தாக்கங்களையும் புரிந்துகொண்டு பண்பாட்டை விளக்கமுற்படுகின்றனர். இவர்கள் பண்பாட்டை மனதளவில் மட்டுமே புரிந்து கொள்ளமுடியும் என்ற கருத்தை உடையவர்கள்.

Idealistic Society
கருத்தியல்சார் சமுதாயம்

ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் பண்பாடானது உணர்வுக்கிளர்ச்சி மற்றும் கருத்தில்சார் மாதிரியாக பண்பாடுகளுக்கிடையே ஒரு சமரச இணக்க உருமாதிரியாக அமையும் போது அச்சமுதாயம் இலக்கியல்சார் சமுதாயம் ஆகுகின்றது.

Ideational culture
எண்ணப்படிவிலான பண்பாடு

மிக உயர்ந்த மதிப்பீடுகள் இயல்நிலை கடந்ததாகவும், அறிவெல்லை கடந்த தத்துவமாகவும் பொருள்சாராததாகவும் இருக்கும்படியான ஒருவித பண்பாட்டைக் குறிக்கிறது. இறுதியான மெய்ம்மை ஆன்மீகமாகவும் பயனீட்டுக் கொள்கையற்றதாகவும் இருக்கும்.

Identification
ஒன்றுபடுதல்

இது ஒரு சமூக-உளவியல் நடைமுறையாகும். ஒருவர் தனக்கு இன்னொருவரை முன்மாதிரியாகக் கொண்டு அவரோடு ஒன்றுபடும் தன்மையைக் குறிக்கிறது. வேறொரு நபரின் அல்லது நபர்களின் மதிப்பீடுகள், தரங்கள், எதிர்பார்ப்புகள் அல்லது சமூகப் பங்குகளைத் தன் சொந்த நடக்கைமுறை மற்றும் சுயகருத்தாக ஒன்றுபட்டு உள்வாங்கிக் கொள்வதில் ஈடுபடுகிறது. இவ்வாறு ஒன்றுபடுதல் என்பது சான்றாக ஒருவர் தன்பெற்றோரை முன்மாதிரியாகக் கொள்வதைக் கூறலாம்.

Identity
தனித்துவ எண்ணம்

தன்னைப்பற்றிய எண்ணம், தன்னைத்தானே புரிந்துகொண்டு மனதில் ஆளுமையும், தான் எவ்வாறானவர் என்ற எண்ணத்தையும் கொண்டிருந்தல். இத்தகைய எண்ணம் அவரின் கடந்தகால, நிகழ்கால மற்றும் எதிர்கால செயல்களின் அடிப்படையில் அமைவதாகும். மேலும் அவரைப் பற்றிய அவரோடு இருப்பவர்களின் அல்லது பழகுபவர்களின் எண்ணத்தைப் பொறுத்தும் தன்னைப் பற்றிய எண்ணம் உருவாகிறது. இத்தகைய தனித்துவ எண்ணம் அமைவதில் ஒருவரின் வாழ்க்கைக் குறிக்கோள்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

Identity confusion
தனித்துவக் கலக்கம்

வளரும் இளமைப்பருவத்தைச் சார்ந்த வாலிபர்களுக்கு எதிர்படுகின்ற சிக்கலான நிலை. இது பெற்றோரோடுள்ள பிணைப்பு மற்றும் இளமைப்பருவக்குழுக்களோடுள்ள இணைப்பு ஆகியவைகளுக் கிடையிலான சிக்கல்களால் ஏற்படுகிறது.

Identity crisis
தனித்துவ நெருக்கடிக் காலம்

ஒருவர் உறுதியில்லா வாழ்க்கை நிலையில் இருந்தும், தெளிவில்லாத வாழ்க்கைக் குறிக்கோள்களிலிருந்தும் விடுபட்டு நிலையான தெளிவான தனித்தன்மை கொண்ட நிலையை அடையும் மிகமுக்கியமான காலகட்டம்.

Illegitimacy
சட்டவிரோதம் / முறைகேடு

இது முழுமைபெறாத குடும்ப ஒருமத்தைக் குறிக்கும். குடும்பத்தில் காணப்படும் இயல்முரணை, குடும்பத்தில் ஏற்படுகின்ற ஏனைய கடமை இழப்புகளோடு சேர்க்கலாம். கணவன் மற்றும் தகப்பன் இல்லாதிருக்கும்போது சமுதாயத்தால் நிர்ணயிக்கப்பட்ட அவருடைய கடமைகளை வேறு யாராலும் செய்யமுடியாது. மேலும் குடும்ப அங்கத்தினர்களின் கடமைத்தோல்விக்கு ஆதாரமாக கணவன் மனைவியிடம் ஏதாவது இயல்முரண் காணப்படுமானால் அவர்கள் தங்கள் கடமைகளை நிறைவேற்ற இயலாதநிலை ஏற்படுகிறது. திருமணமாகாத பெண் குழந்தை பெறுவது சட்டவிரோதமான அல்லது முறைகேடான பிறப்பு எனக் கருதப்படும்.

Illegitimacy ratio
சட்டவிரோத பிறப்புவிகிதம்

ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் ஆயிரம் முறையான பிறப்புக்கு எவ்வளவு சட்டவிரோத பிறப்பு உள்ளது என்பது சட்டவிரோத பிறப்பு விகிதமாகும்.

Imitation
போலச் செய்கை

மக்களின் நடைமுறையில் தனிநபர்கள் அல்லது குழுக்கள் பிற நபர்கள் அல்லது குழுக்களின் நடக்கைமுறையைப் பார்த்து ஏறத்தாழ அதே நடக்கைமுறையைப் பின்பற்றுகிற மனப்பாங்கைக் குறிக்கிறது. பிறரை முன் உதாரணமாகப் பின்பற்றுவது கற்றல், சமூகவயமாதல், பண்பாட்டுவயமாதல் ஆகியவற்றில் போலச்செய்கை முக்கியமான ஆக்கக்கூறுகளாகும். ஆனால் போலச்செய்கை என்ற சொல்லின் பயன்பாடு ஒருவரின் நடக்கைமுறை மற்றும் ஆள்தத்துவத்தின் பகுதியான தானே இயங்குகின்ற இயல்நிலை இயக்கத்தின் நடைமுறையை வெளிப்படுத்துகிறது.

Imitative Magic
போலச்செய்யும் மந்திரம்

கருணைநிலையிலான ஒருவித மந்திரம் அல்லது மாயவித்தையைக் குறிக்கிறது. மந்திரப் பழக்கமானது ஒரு விரும்பும் பலனை குறியீடாக ஆணையிடுவதன் மூலம் அதே பலனை ஏற்படுத்தும் என்ற ஊகத்தின் அடிப்படையிலானது. இவ்வாறு ஒருவர் மழை காற்றுக்கு ஆணையிடுவதன் மூலம் மழை பெய்யும் என்று ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

Immigration
குடியேறுதல்

நிரந்தரமான ஒரு புதிய வாழுமிடத்தை நிறுவுவதற்காகத் தனிநபர்கள் அல்லது குழுக்கள் தங்கள் சொந்த நாட்டைவிட்டு வேறொரு நாட்டுக்குள் நுழைதல்.

Imperialism
பேரரசுக்கொள்கை

ஏனைய அரசுகள்மீதும் மக்கள்மீதும் ஆதிக்கம் செலுத்தும் கொள்கை, சான்றாக ஐரோப்பியர்கள் ஏனைய

நாடுகளில் குடியேறி அங்குள்ள வளங்களை சொந்தம் கொண்டாடி, அங்கு வாழ்ந்த மக்களின் விழிப்புணர்வையும் எதிர்ப்பையும் கட்டுப்படுத்தி, அவர்களின்மீது ஆதிக்கம் செலுத்தியதைக் கூறலாம். ஐரோப்பியர்களின் பேரரசுக்கொள்கை தொடக்ககால மானிடவியல் வரலாற்றில் பெரும் பங்கு வகித்தது.

Implicit culture
உள்ளார்ந்த பண்பாடு

மக்கள் மனத்தளவில் பதிய வைத்துள்ள பண்பாட்டு விதிகளின் அடிப்படையில் நிகழும் நடத்தை முறைகளின் தொகுப்பு. சான்றாகப் பெரியோர்கள் வரும்போது எழுந்து வணக்கம்செய்தல், தேசியக்கொடி ஏற்றியவுடன் நிமிர்ந்து நின்று வணக்கம் செலுத்துதல் போன்றவற்றைக் கூறலாம்.

Incest
தகாப்புணர்ச்சி

சமுதாயம் பாலுறவைத் தடை செய்துள்ள உறவுகளுக்கிடையே பாலுறவோ மணவுறவோ நிகழ்ந்தால் அது தகாப்புணர்ச்சி எனப்படும். சான்றாகச் சகோதர-சகோதரிகளிடையேயும், தந்தை-மகளிடையேயும், தாய்-மகனிடையேயும் எல்லாச் சமுதாயங்களிலும் பாலுறவு தடை செய்யப்பட்டுள்ளது. இதனை மீறுவது தகாப்புணர்ச்சியாகும்.

Incest Taboo
தகாப்புணர்ச்சித் தடைக்கட்டு

நெருங்கிய உறவினர்களோடு வழக்கமாகப் பெற்றோர், உடன்பிறப்புகள், மற்றும் பிள்ளைகள் ஆகிய முதல்நிலை உறவினர்களோடான பாலுறவு தடை அல்லது தவிர்ப்பு. இத்தகைய தடை தனிக்குடும்பத்தோடு மட்டும் கட்டுப்படுத்தப்பட்டதாகவோ அல்லது அனைத்து உறவினர்களோடும் கட்டுப்படுத்தப்பட்டதாகவோ காணப்படும்.

Incorporation
கூடியிணைதல்

பணியாளர் வகுப்பில் அரசியல் மற்றும்பொருளாதார செயற்பாடுகளை நடைமுறையில் உள்ள நிறுவனங்களுக்குள்ளாகக் கொண்டுசெல்கிற நடைமுறை. பணியாளர் வகுப்பை வெளியே இருக்க அனுமதித்து நிலைநாட்டப்பட்ட விதிமுறைகளுக்கு அச்சுறுத்தலாக இல்லாதிருக்க அவ்வாறு செய்யப்படுகிறது. இந்த நடைமுறை குடிமக்களின் வளர்ச்சியிலும் பணியாளர் வகுப்பின் பண்பாட்டில் மாறுதலை ஏற்படுத்துவதிலும் ஈடுபடுவதாக எண்ணப்படுகிறது.

Incorporeal Property
உடல்சார்பில்லா உடைமை

தனிப்பட்ட முறையில் சொந்தமாக்கிக் கொள்ளப்படுகின்ற பொருள் சாராப் பண்பாட்டுக்கூறுகளைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. கல்வி அறிவற்ற சமுதாயங்களில் பண்பாட்டுக் கூறுகளான நடனம், பாட்டு, வேண்டுதல், புராணக்கதை மற்றும் மந்திரப் பழக்கங்கள் ஆகியவை தனிநபர்களால் சொந்தமாக்கிக் கொள்ளப்படுவதாகவும் மரபுவழி அனுப்பீடு செய்யப்படுவதாகவும் உள்ளன.

Independent variables
சார்பற்ற மாறிகள்

சமூக அறிவியலில் அனைத்து வகையான பகுப்பாய்வுகளும் சார்புடையதும் சார்பற்றதுமான மாறிகளைக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றன. ஓர் அமைப்பின் கூறுகளின் மாற்றத்தைஏற்படுத்தக் கூடியதும் முந்தும் தன்மை உடையதுமான கூறுகள் சார்பற்ற மாறிகள் ஆகும்.

Index
பொருளடக்க அட்டவணை

அளவாய்வுகளில் பல மாறிகள் பலவற்றின் ஆக்க அளவாக ஒன்று சேர்க்கப்படுகின்றன, அல்லது பொருளடக்க அட்டவணையானது ஒரே கணிப்புத்தலைப்பாக வெளிப் படுத்தப்படுகிறது. சான்றாக ஓர் ஆய்வாளர் சமூக ஏற்றத்தாழ்வுகள் குறித்த வீட்டுவசதி, கல்வி, வருவாய் உடல்நலம் போன்ற பல' பண்புக் கூறுகளைப் பற்றிய பல வினாக்களைக் கேட்கலாம். பின்பு அனைத்துப் பதில்களையும் ஒன்று சேர்த்து ஏற்றத்தாழ்வு குறித்த ஓர் அறிக்கையாக்குவார். இப் பல வற்றின் ஆக்க அளவில் ஒவ்வொரு தகவலாளிகளும் ஒரு தனி கணிப்புருக் குறியாக வகுத்தமைக் கப்படுவர். இதுவே பொருளடக்க அட்டவணை ஆகும்.

Individual deviant
தன்மீறல்

தான் சேர்ந்துள்ள குழுவின் அல்லது சமுதாயத்தின் விதிமுறை களை அல்லது கிளைப் பண்பாட்டு முறைகளைக் கடைபிடிக்காது தன்னிச்சையாகச் செயல்படுதல் தன்மீறலாகும்.

Individualism
தனித்துவம்

தனிமனிதனின் தனிச்செயலு ரிமையை ஆதரிக்கும் சமுதாயக் கொள்கை. தனிநபரின் முக்கியத் துவத்தை வலியுறுத்துகின்ற கூட்டான போதனைகளைக் குறிக்கிறது. கிறித்தவச் சமயத்தில் கத்தோலிக்கக் கொள்கையை மறுத்துப் பிரிந்து சென்று போப்பாண்டவரின் ஆட்சிக்கு எதிரான கொள்கையைப் பின்பற்றுகிற கிறித்தவ சமயம் ஒருவித மத தனித்துவமாகும். அதில் கடவுளுக்கும் தனிநபருக்கும் இடையிலான நேரடித்தொடர்பினைக் காரணங்காட்டி நிலைநாட்டப்படுகிறது.

Indevidual Representation
தனிநபர் பிரதிநிதித்துவம்

கூட்டான பிரதிநிதித்துவத்துக்கு எதிரான தனிநபரின் தனிப்பட்ட அனுபவங்களைக் குறிக்க இச்சொல் பயன்படுத் தப்படுகிறது.

Individual values
தனிமனித மதிப்பீடு

தனிமனித மதிப்பீடு பண் பாட்டு விழுமியங்களிலிருந்து மாறுபட்டது. ஒருவரின் வாழ் விற்கு அவசியமானவை எவை? அவரின் நடத்தை முறைக்கு அவர் கூறும் விளக்கங்கள் எவை? ஆகியவற் றைச் சார்ந்தது தனிமனித மதிப்பீடு. சான்றாகப் பணம், கல்வி, அதிகாரம் போன்றவற்றைக் கூறலாம்.

Individuation
தனித்தன்மையாதல்/அணுவாகுதல்

குழு இணைப்புகள் தகர்தலையும் குழு பற்றுறுதி உணர்வில்லாத தனிநபர்கள் திடுமெனத் தோன்று வதையும் குறிக்கிறது. இதனை அணுவாகுதல் என்றும் குறிப்பிடுவர்.

Indoctrination
ஒருவழிப் போதனை

ஒரு குறிப்பிட்ட கொள்கை அல்லது கருத்து மக்களிடையே அதிக முக்கியத்துவம் பெறவேண்டு மென்பதற்காக மாறுபட்ட கருத்துக்கள் தெரியாவண்ணம் ஒருவருக்குத் தொடர்ந்து குறிப்பிட்ட கருத்துக்களையே போதனை செய்தல். இதனால் அவர் தனக்குப் போதிக்கப்பட்ட கருத்தே சிறந்தது என்று நம்பத் தொடங்கிவிடுவார். பொதுவாக ஒருவர் வாழ்க்கையில் அவர் வாழும் சமூகத்தின் வாழ்க்கை முறைகளே உயர்ந்தவை என்று அவருடைய இளம்வயதிலேயே முதியோர்களால் கற்றுக் கொடுக் கப்படுகிறது. இதனால் அவர் தன் பண்பாட்டு முறைகளை மிக உயர்வாக மதிப்பீடு செய்கிறார்

Induction
புகுமுகம் செய்தல்

ஒரு ஆய்வுப்பொருள் குறித்த உண்மையானது உறுதிப்படுத் துகின்ற சான்றுகளைச் சேர்ப்பதன் மூலம் அதிக உண்மையுடையதாக இருக்கக்கூடிய தாக்கப்படுகின்ற நடைமுறையைக் குறிக்கிறது. இது அறிவியல்சார் மற்றும் சமூக வியல் ஆய்வுகளில் பொதுவான முன்மாதிரிப் படிவமாக உள்ளது.

Inductive Method
உய்த்துணரும் முறை

உற்றுநோக்குவனவற்றில் காரண காரியங்களைப் பொதுமைப்படுத்திப் பின்னர்ப் பொதுமைப்படுத்தியவற்றை எடுகோளாகக் கொண்டு சோதனைகள் மூலம் சோதித்துப் பார்த்து அதன்பின் அவற்றை இயற்கை விதிகளாக மாற்றுவதைக் குறிக்கிறது.

Industrial conflict
தொழில்நிலை முரண்பாடு

தொழிற்சாலைகளில் உரிமை யாளர்கள் மற்றும் மேலாளர்களுக் கிடையிலான உறவு ஒருபுறத்திலும் பணியாளர்கள் இன்னொரு புறத் திலும் அடிக்கடி முரண்படுவர். முரண்பாடுகளின் வடிவங்களையும் முரண்பாடுகளின் மூலங்களையும் இச்சொல் சுட்டுகிறது. முரண் பாடுகளின் வடிவங்கள், பலதரப் பட்டவை. வேலைக்கு வராதி ருத்தல், அழிவு வேலை, ஒத்து ழையாமை மற்றும் வேலை யளவில் வரையறை ஆகியவை முரண்பாடுகளின் வடிவங்களாகும்.

Industrial Relation
தொழில்நிலை உறவு

தொழில் உறவுகள் மற்றும் அதனோடு தொடர்புடைய நிறுவ் னங்களைக் குறிக்கிறது. இது பணியாளர்கள், பணிக்குழுக்கள், பணியாளர் அமைப்பாண்மைகள் மற்றும் மேலாளர்கள், தொழில் நிறுவனங்கள் மற்றும் பணியில் அமர்த்துவோர் அமைப்பாண்மைகள் ஆகியவற்றிற்கிடையிலான உறவுகளை

இணைவிழையச் செய்கிறது. தொழில்சார் உறவுகள் குறித்த ஆய்வு ஒரு பல்துறை முயற்சியாகும். இவ்வாய்வு குறிப்பாகத் தொழில்நிலை சமூகவியல், தொழில்மயப் பொருளாதாரம், தொழிற்சங்க வரலாறு, உளவியல் மற்றும் அரசியல் ஆகியவற்றோடு தொடர்புடையது.

Industrial Revolution
தொழில்நிலைப்புரட்சி

இக்கருத்துப்படிவம் உற்பத்தி முறைகள் மற்றும் சமூகப் பொருளாதார அமைப்பாண்மைகளில் ஏற்படுகின்ற அடிப்படை மாறுதல்களைக் குறிக்கிறது. அத்தகைய மாறுதல்கள் இயந்திர ஆற்றலை நேரடியாக அறிமுகப்படுத்துவது மற்றும் அதன்விளைவாக ஏற்படுகின்ற தொழிற்சாலை முறையின் உயர்வு ஆகியவற்றால் ஏற்படுகின்றன.

Industrial Society
தொழில்நிலைச் சமுதாயம்

தொழில்நிலைச் சமுதாயத்தில் தொழில்சார் பொருளாதாரம் மக்களிடையே காணப்படும் உறவுகளை மிகக் கடுமையாகப் பாதிக்கிறது. அத்தகைய சமுதாயங்களில் பெரும் நகர்ப்புறப் பகுதிகளில் வாழும் ஏராளமான மக்கள் உழைக்கும் சக்திகளாக அமைகின்றனர். அவர்கள் அரசியல் செல்வாக்கு, தொழில் அந்தஸ்து, சிறப்புப்பயிற்சி மற்றும் செல்வவள வேறுபாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில்பல்வேறு அந்தஸ்த்துப் பிரிவுகளாக வேறுபடுத்தப்படுகின்றனர். பெரும் உற்பத்தி உத்திகளைப் பயன்படுத்துவதால் பல தரப்பட்ட பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. உயர்ந்த வாழ்க்கைத்தரமும் அமைகிறது. இச்சமுதாயத்தில் சமூகச் செயலெதிர்ச் செயல்கள் முறையானதாக இருக்கும். அரசு சற்று தூரமானதாகவும் இயந்திரத் தன்மையாகவும் காணப்படும். தகவல்தொடர்பு முறைகள் வெகுவாகப் பயன்படுத்தப்படும்.

Industrial Sociology
தொழில்நிலைச் சமூகவியல்

பணியாளர்களின் வாழ்க்கை முறையில் தொழிற்சாலைப் பணியின் பலன் அல்லது விளைவு குறித்த ஆய்வே தொழில்நிலை சமூகவியலாகும். இதில் சமூக ஒருமங்களான பணிக்குழுக்கள் மற்றும் அக்குழுக்களில் காணப்படும் சமூகஉறவுகள் ஆகியவை அடங்கும்.

Infant Death Rate
குழந்தை இறப்பு வீதம்

குறிப்பிட்ட மக்கள்தொகையில் ஒரு வருடத்தில் 1000 குழந்தைகளுக்கு எத்தனை குழந்தைகள் (ஒரு வயதுக்கு உட்பட்டது) இறந்துள்ளன என்ற கணக்கு.

Infanticide
சிசுக் கொலை

குழந்தைகள் பிறந்த உடன் அல்லது பிறந்த சில நாட்களில் கொன்றுவிடுகிற அங்கீகரிக்கப்பட்ட பழக்கத்தைக் குறிக்கிறது. குறிப்பாகப் பெண் குழந்தைகளைக் கொன்றுவிடுவது வழக்கம். இது பண்பா

டுகளில் குறிப்பிட்ட நிலைகளில் காணப்படுகின்ற ஒரு பழக்கம்.

Inference
உணர்வுக் கருத்தளவை
உளதாயிருக்கின்ற அறிவு அல்லது உண்மைகள் புதிய அறிவு அல்லது உண்மைகளை வெளிக் கொணரப்பயன்படுத்தப்படுகின்றன என்ற ஒரு வாத முடிவான நடைமுறையைக் குறிக்கிறது. உணர்வுக் கருத்தளவை மூளை அளவிலான ஒருநடைமுறையாகும்.

Infertility
கருவழக்கேடு/மலட்டுத்தன்மை
இனவிருத்திச் செயல்பாட்டில் ஆண் அல்லது பெண்ணின் குறைபாட்டினால் குழந்தைகளைப் பெற இயலாத நிலை ஏற்படுகின்ற பாலுறவு ஒழுங்கின்மை நிலை

Influence
செல்வாக்காண்மை
ஒரு தனிநபரின் மனப்பான்மையில் அல்லது கருத்தில் தூண்டுசெயல் மூலம் ஒரு தன்னார்வ மாறுதலை ஏற்படுத்தக்கூடிய அதிகாரத்தைக் குறிக்கிறது.

Influentials
செல்வாக்குமிக்கோர்
ஒரு குறிப்பிட்ட சமூக ஒழுங்கிற்குள் இயக்கவிளைவுகளை ஏற்படுத்தக்கூடியமக்கள். இருவகைச் செல்வாக்குமிக்கோர் உள்ளனர். 1) மேல்நிலைச் செல்வாக்கு மிக்கோர். 2) வழிகாட்டுநிலை செல்வாக்கு மிக்கோர்.

Informal Group
முறைசாராக் குழு
குழுவிதிமுறைகள், குறிக்கோள்கள், அல்லது தலைவர்கள் முறையாகக் குறிப்பிடப்படாதகுழுவைக்குறிக்கிறது. இது சிறுமாதிரிக் குழுவாக இருக்கும். பெரும்பாலும் தற்செயலாகவும் தன்னியல்பாகவும் உருவான குழுவாக இருக்கும்.

Informal Norms
முறைசாரா விதிமுறைகள்
தன்னையொத்த நண்பர்களிடம் இயல்பாகக் கற்றுக்கொள்ளும் பண்பாட்டு விதிமுறைகள். பொதுவாக நண்பர்கள் ஒவ்வாத செயற்பாடுகளைக் கண்டித்தும், உரிய செயற்பாடுகளை அங்கீகரிக்கவும் தெரிந்துகொள்ளச் செய்வார்கள்.

Informal Organization
முறைசாரா அமைப்பாண்மை
ஒரு முறையான அமைப்பாண்மைக்குள் தனிநபர்கள் கருத்துப் பரிமாற்றம் செய்யும்பொழுது இயல்பாக வளருகின்ற தனிநபர்களுக்கிடையிலான உறவுகளின் ஒழுங்குமுறை. அனைத்து முறையான அமைப்பாண்மைகளும் அவற்றின் சமூக அமைப்பாண்மையில்முறைசாராப்பண்புக்கூறுகளை உடையதாக இருக்கும். அது திட்டமிடப்படாததாகவும்முறையாகக் குறிப்பிடப்படாததாகவும் இருக்கும். முறைசாராச் சமூக அமைப்பாண்மையில் சடங்குகள், பாரம்பரியங்கள், ஆர்வக் கொள்கைகள் மற்றும் உட்குழுக்கள் ஆகியவை அடங்கும்.

In-Group
உட்குழு

உறுதியான ஈடுபாட்டுணர்வுடைய அங்கத்தினர்களை உடைய எந்த ஒரு குழுவும் உட்குழுவாகும். அது முதல்நிலைக் குழுவாகவோ இரண்டாவது நிலைக் குழுவாகவோ இருக்கலாம். குழு உறுப்பினர்கள் பற்றுறுதி மற்றும் உறுப்பினர் அல்லாதவர்களோடு விலக்கி வைக்கிற உணர்வுடையவர்களாகவும் இருப்பர்.

Inheritance
மரபுரிமை

பொருள்சார் அல்லது பொருள் சாராச் சொத்துக்களை இறப்பின் போது ஒரு நபரிடமிருந்து இன்னொரு நபருக்கு அனுப்பீடு செய்வதற்குப் பயன்படுத்துகின்ற நடைமுறை. பல சமுதாயங்களில் இந்த நடைமுறை தந்தைவழி, தாய்வழி அல்லது இருவழிகளிலும் உள்ளது.

Inhibition
தேக்கநிலை உணர்வு

விரும்பிய ஒரு செயலோடு தொடர்புடைய எதிர்மறையான விளைவுகளை எதிர்பார்ப்பதால் ஒரு செயலைத் தாமதப்படுத்துவது அல்லது தன்னை அடக்கிக்கொள்ளும் நிலை. சமூகச்செயல்களில் தேக்க நிலை உணர்வு முரண்படும் மதிப்பீடுகள், சமூக அனுமதி குறித்த அச்சம் அல்லது மோசமாக வரையறுக்கப்பட்ட சமூக சூழ் நிலைகள் ஆகியவற்றின் உடைமையாகக் கருதலாம். அத்தகைய சூழ்நிலையில் ஒரு செயலின் விளைவு என்ன என்பது தனிநபருக்குத் தெளிவற்றதாக இருக்கும்.

Initiation Rites
புகுமுக உரிமை

ஒரு தனிநபர் ஒரு சடங்காச்சார நடைமுறையின்மூலம் ஒரு புதிய சமூகநிலையை ஏற்பதைக்குறிக்கிறது. வயது அடிப்படைக் குழுக்களை உடைய சமுதாயங்களில் இளைய குழந்தைகள் பருவ வயதடையும் போது புகுமுகச் சடங்குமூலம் புதிய நிலையையும் உரிமைகளையும் அடைகின்றனர்.

Initiation Ritual
புகுமுகச் சடங்கு

சில சமுதாயங்களில் அல்லது குழுக்களில் காணப்படுகின்ற வழக்கமான செயல். அத்தகைய சமுதாயங்களில் ஒரு தனிநபர் ஒரு குழுவில் உறுப்பினராக நுழைவது அல்லது ஒரு குழு உறுப்பினர் நிலையிலிருந்து இன்னொரு குழுவுக்கு மாறுதல் அல்லது புகுமுகம் செய்யப்படுவதை சடங்காச்சாரமாகக் குறிப்பிடும் வகையில்வடிவமைக்கப்பட்டிருக்கும். வயதுக்குழுக்களை உடைய சமுதாயங்களில் இச்சடங்கு பெரும்பாலும் ஆண்களுக்குச் செய்யப்படுகின்றது. இன்றைய பழங்குடியல்லாத சமுதாயங்களில் பெண்கள் பூப்படைந்தவுடன் செய்யப்படும் சடங்கு பழங்குடிச் சமுதாயங்களில் நடைபெறும் புகுமுகச்சடங்கின் கருத்தாக்கத்தைக் கொண்டதாகும். இச்சடங்கு இளம் பருவத்திலிருந்து பருவ வயதடையும்

நிலைக்கு மாறுவதைக் குறிக்கவே நிகழ்த்தப்படுகிறது.

Innate Behaviour

உள்ளார்ந்த நடக்கைமுறை

இயல்பாக மனிதர்களின் பிறப்பிலேயே காணப்படுகின்ற கற்றுக்கொண்டதல்லாத நடக்கை முறை. இது அனுபவத்தால் மாறுவதில்லை. தானகவே பின் தொடருகின்ற உயிரியல்சார் முதிர்வைக் குறிக்கிறது.

Innate Urge

உள்ளார்ந்த உணர்வு

மனதின் அடித்தளத்தில் பிறரால் சுலபமாகப் புரிந்துகொள்ளமுடியாத வண்ணம் மறைந்துகிடக்கும் உணர்ச்சிகள். இவை வலுவானதும் பாலுணர்வு மற்றும் உடல் தொடர்பான மகிழ்ச்சி ஆகியவற்றோடு நெருங்கிய தொடர்பு கொண்டதாகவும் காணப்படும்.

Inner City

நகர உட்புறம்

நெருக்கமாகக் கட்டப்பட்ட, மிகவும் நகர்மயமாக்கப்பட்ட ஒரு பெரிய நகரத்தின் மத்தியப்பகுதியைக் குறிக்கிறது. இதில் நகரத்தின் மையப்பகுதிக்கு அருகாமையில் உள்ள உட்புறமான குடிசைப்பகுதிகள், வாடகை அறைகளுள்ள வீடுகள், அறிவாளிகளின் குடியிருப்புகள், அடுக்குமாடி வீடுகள் ஆகியவை அடங்கும்.

Innovation

புதுமுறை காணல்

ஒரு பண்பாட்டில் புதிய பொருள்சார் அல்லது பொருள் சாரா அடிப்படைக் கூறுகளை அங்கீகரிப்பதன் மூலம் பண்பாட்டில் வளர்ச்சி ஏற்படுவதைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. புதுமுறை காணல் என்பது பரந்த பொருளை உடையது. இதில் கண்டுபிடிப்புகள் மற்றும் புதிது புனைதல் ஆகியவையும் சிறிய மாறுதல்களும் அடங்கும்.

Insect Society

சிற்றுயிர் சமுதாயம்

தேனீ, எறும்பு மற்றும் குளவி போன்ற சிற்றுயிர்களிடையே காணப்படுகின்ற மரபுரிமையாகப் பெறப்பட்டுள்ள சிக்கலான நடக்கைமுறைப் படிவங்களைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. இத்தகைய சிற்றுயிர் பண்புக் குழுக்களில் ஒருவித சார்புடைமையும் செயல்பாடுகளில் தனித்துறைப் பயிற்சியும் காணப்படுகின்றன.

Instincts

இயல்புணர்வுகள்

ஒரு குறிப்பிட்ட உயிர்வாழ் இனம் பிறப்பிலே கொண்டிருக்கும் பொதுச் செயல்முறைகள்.

பறவைகளிடையே காணப்படும் கூடுகட்டும் செயல், குஞ்சுகளுக்கு இரை கொடுத்தல் போன்றவையும், மனிதர்களிடையே காணப்படும் காதல் உணர்வு, பசியுணர்ச்சி போன்றவையும் இயல்புணர்வு செயல்முறைகளுக்குச் சான்றுகளாகும். இவை பிறர் கற்றுத்தராமலே தானாகவே தோன்றி வளர்கின்றன. மானிடவியல் வல்லு

நர்கள் பல்வேறு நாகரீகங்களை ஆராய்ந்து மனிதனின் சில செயல்பாடுகள் எவ்வாறு குறிப்பிடத்தக்கவகையில் வேறுபடுகின்றன என்று விளக்கியுள்ளனர். தற்போது இக்கோட்பாடு அதன் முக்கியத்துவத்தை இழந்துவருகிறது.

Institution
நிறுவனம்

சமூக அறிவியலில் நிறுவனம் என்பது பல பண்பாட்டுக் கலவைகளால் ஆனது. குடும்பம் ஒரு நிறுவனமாகும். இதில் உறைவிடம், திருமணம், உடலுறவு, குழந்தை வளர்ப்பு போன்ற பல பண்பாட்டுக் கலவைகள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு நிறுவனத்திலும் பண்பாட்டுக் கலவைகள் சிறப்பிடம் பெறுகின்றன. மற்றவை சிறப்பிடம் பெறாமல் உள்ளன. இது சமூக உறவுகளை ஒழுங்குபடுத்துகிற ஓர் அமைப்பு அல்லது முறையாகும். திருமணம் ஒரு சமூக நிறுவனம் என்ற முறையில் மனிதனின் பாலுறவை முறைப்படுத்துகிறது.

Institutionalization
அமைப்புமுறையாக்கம்

சமூகப் பழக்கங்களை விதிமுறைப் படுத்தி நிலைபெற்றிருக்கச் செய்யும் செயற்பாங்கு அல்லது வழிமுறை அமைப்புமுறையாக்கமாகும். இது முக்கியமான சமூக மதிப்பீடுகளை அழியாமல் காக்கவும் சமுதாயத்தில் வழக்கமான கட்டுப்பாட்டு நடைமுறைகளை நிலைநாட்டவும் உதவுகிறது.

Institutional Agency
நிறுவனப் பதிலாண்மை

குறிப்பிட்ட ஒரு நிறுவனம் சார்ந்த செயல்பாடுகளை மேற்கொள்கின்ற ஒருமுகப்படுத்தப்பட்ட குழு. சான்றாக ஒரு சமயக்கிளை சமயம் என்ற நிறுவனத்தின் நிறுவனப்பதிலாண்மையாக உள்ளது. ஒரு தொழில்சார்ந்த கூட்டுரிமைக் குழு பொருளாதார நிறுவனத்தின் நிறுவனப் பதிலாண்மையாக உள்ளது.

Institutional Order
நிறுவன ஒழுங்கு

இச்சொல் ஒரு பெரிய அளவிலான சமூக நிறுவன ஒழுங்கைக் குறிக்கிறது. அரசியல் ஒழுங்கு அல்லது விதிமுறை, பொருளாதார ஒழுங்கு, படைத்துறை ஒழுங்கு, உறவுமுறை ஒழுங்கு, மத ஒழுங்கு ஆகியன சமுதாயத்தின் அடிப்படை நிறுவன ஒழுங்குகள். பல நிறுவனங்கள் ஒரேவிதமான சமூகச் செயல்களை மேற்கொள்கின்றன.

Institutional Pattern
நிறுவனப்பாங்கம்

இடைத்தொடர்புடைய சமூக விதிமுறைகளின் பாங்கத்தைக் குறிக்கிறது. இது குறிப்பிட்ட சமுதாயத்தின் சமூக சூழ்நிலையில் எதிர்பார்க்கப்படுகின்ற மற்றும் சட்டப்படியான அல்லது ஒழுங்கான நடக்கைமுறைகளை வரையறுக்கிறது. இது ஒரு இயல்பான பாங்கமாகவும் குறிப்பிட்ட சமுதாயத்தில் நிலையாக வடிவமைக்கபட்டதாகவும் அதோடு இணைக்கப்பட்ட திட்டவட்டமான

சமூக ஒப்புதல்களை உடையதாகவும் காணப்படும்.

Integration
ஒருமையாக்கம்

சமூக அறிவியலில் இச்சொல் பல கட்டங்களில் பயன்படுத்தப்படுகிறது. அதாவது முன்னால் தனித்தனியாகத் தொடர்ச்சியற்று இருந்தவற்றை ஒரே முழு அமைப்பாக வகுத்தமைக்கும் ஒருங்கிணைப்புச் செயற்பாங்கினைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

Intellectuals
அறிவுத்திறம் வாய்ந்தோர்

ஒரு சமுதாயத்தில் மூல கருத்துக்களின் வளர்ச்சிக்காகத் தங்களை அர்ப்பணித்துக்கொண்டு ஆக்கபூர்வமான அறிவுத்திறம்சார் குறிக்கோள்களில் ஈடுபடுகின்ற உறுப்பினர்களைக் குறிக்கிறது. அறிவுத்திறம் வாய்ந்தோர் கற்றறிந்தோர் வகுப்பில் ஒரு சிறிய ஆக்கபூர்வமான பிரிவாக அமைகின்றனர்.

Intelligence
அறிவுத்திறம்

புதிய பழக்கங்கள் மற்றும் ஆழ்நோக்கு ஆகியவற்றைக் கற்றுக்கொள்வதற்கான அறிவுத்திறன். அதாவது கற்றறிந்தவற்றைத் தக்கவைத்தல், புதிய சூழ்நிலைகளைப் போதியமுறையில் மேற்கொள்ளுதல், இயல் நிகழ்ச்சிகளின் தொடர்புகளை நோக்குதல், சிக்கல்களைத் தீர்த்து வைத்தல், பிறர் நடவடிக்கைகளை முன்கருதுதல் போன்றவற்றை அறிவுத்திறனாகக் கூறலாம்.

Intelligence Test
அறிவுத்திறன் சோதனை

தரப்படுத்தப்பட்ட கேள்விகள் அல்லது கணக்குகளின் தொகுதி. இக்கேள்வித் தொகுதி சோதனை செய்பவரைப் பல்வேறு நபர்களிடையே காணப்படும் வாய்மொழியான அல்லது வாய்மொழி அல்லாத சிக்கல்களைத் தீர்க்கும் திறமையின் வேறுபாட்டைக் கண்டறிய அனுமதிக்கிறது.

Intelligentsia
அறிவுத்திறன் குழாம்

சமுதாயப்படிநிலையில் கல்வி கற்ற சமூகத்தரத்தைச் சேர்ந்தவர்களைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்டுகிறது. அவர்கள் பெரும்பாலும் தொழில்சார் அல்லது மேலாண்மைத்தொழில்களில் ஈடுபடுவார்கள். அவர்கள் புதுக்கருத்துக்களில் ஆர்வமுடையவர்களாகவும் தாங்கள் ஒரு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்ற உணர்வுடையவர்களாகவும் இருப்பார்கள்.

Interaction
இடைத்தொடர்பு நிலை

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாறிகளுக்கிடையிலான இயக்காற்றல் சார்ந்த இடைவிளைவு மற்றும் கூட்டான நியதிவாத உறவுகள் ஆகியவற்றை இச்சொல் குறிக்கிறது. மாறிகள் ஒன்றுக்கொன்று தாக்கத்தை ஏற்படுத்துவனவாகும். இதனால் ஒவ்வொரு மாறிகளின் மதிப்பும் தொடர்புடைய வேறு மாறிகளின் மதிப்புகளில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இதுவே இடைத்

தொடர்பு நிலை ஆகும்.

Interactionism
இடைத்தொடர்பு நிலை வாதம்

சமூக உளவியலுக்கான சமூகவியல் அணுகுமுறையைக் குறிக்கிறது. இது தனிநபர்கள் மற்றும் குழுக்களுக்கிடையிலான செயல்கள் மற்றும் செயலெதிர் செயல்களை வலியுறுத்துகிறது.

Interactionist Perspective
தொடர்புநிலைமுறை நோக்கு

சிறிய குழு அளவில் இக்கோட்பாடு மனிதரிடையே காணப்படும் அன்றாட தொடர்பையும், நடத்தையையும் நன்கு புரிந்துகொள்ள உதவுகிறது. இக்கோட்பாடு பெரிய சமூக அளவில் மனிதர்களின் நடத்தைகளை விளக்கப் பயன்படுவதில்லை. மக்கள் தங்கள் அன்றாட வாழ்வில் குறியீடுகள் மற்றும் சொற்கள்மூலம் பிறரோடு தொடர்பு கொள்கின்றனர். மக்களின் சொற்கள் அல்லது மொழி மற்றும் நடத்தை ஆகியவற்றின் பொருள் சந்தர்ப்ப சூழலுக்கேற்றாற் போல் புரிந்துகொள்ளப்படுகின்றது. எனவே, மக்கள் தங்களைச் சுற்றிலும் நடைபெறும் செயல்களின் பொருளுக்கேற்ற வாறு நடந்துகொள்கிறார்கள். இக்கோட்பாடு மக்களின் ஆள்தத்துவம் மற்றும் செயற்பாடுகள் குறித்துத் தெளிவுபடுத்துகிறது.

Interest Group
ஆர்வக்குழு

குழு உறுப்பினர்கள் தங்களுக்குள் பயனுள்ளதாக மதிக்கின்ற குறிப்பிட்ட குறிக்கோள்களை நாடிப் பெறுவதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட குழு. ஆர்வக்குழுக்கள் சிறப்பு ஆர்வக்குழுக்கள் என்றும் குறிப்பிடப்படும். இது பெரும்பாலும் குறிப்பிட்ட பொருளாதார ஆர்வத்தைக் குறிப்பதாக இருக்கும். சான்றாகத் தொழிலாளர் அமைப்புகள், பெரும் உற்பத்தியாளர்கள், சிறு விவசாயிகள் ஆகிய குழுக்களைக் கூறலாம்.

Intergenerational Marriage
தலைமுறையிடைத் திருமணம்

இவ்வகைத் திருமணமுறை ஒருவர் தன் சொந்த சகோதரியின் மகளை மணந்துகொள்ளும் முறையைக் குறிக்கும். இம்முறையில் மணமகன், மணமகள், மாமியார் ஆகியோரிடையே தலைமுறை வேறுபாடு மிகத் தெளிவானதில்லை. அதாவது இரு தலைமுறைகளைச் சேர்ந்தவர்களிடையே நடைபெறும் திருமணம்.

Inter-Generational Mobility
தலைமுறையிடை நிலைபெயர்வு

இரு தலைமுறைகளுக்கிடையே ஒரு தனிநபருக்கு அல்லது குழுவிற்கு சமூக அந்தஸ்தில் ஏற்படும் உயர்வு அல்லது தாழ்வு. இது தொழில் அல்லது கல்வி நிலைகளில் ஏற்படுகிற மாறுதல்களாக இருக்கும். இம்மாறுதலைப் பொதுவாகத் தந்தை-மகன் இவர்களிளடையே ஏற்படும் அந்தஸ்து உயர்வுதாழ்வினைக் கொண்டு கணக்கிடலாம். தலைமுறைகளுக்கிடையிலான அந்தஸ்து மாற்றம் உயர்தல்

அல்லது தாழ்ந்துபோவதாக இருக்கும். பொதுவாகச் சமுதாயத்தில் தாழ்ந்தநிலையில் இருப்பவர்களுக்கு அந்தஸ்து என்பது சற்றுக் கடினமானது.

Intergroup Relations
குழுவிடைத் தொடர்புகள்

பொதுவாகச் சமூகக் குழுக்களுக்கிடையிலான செயலெதிர் செயல்கள் அல்லது அவற்றைக் குறித்த ஆய்வைக் குறிக்கிறது. வழக்கமாக இன, மத குழுக்களுக்கிடையிலான தொடர்புகள், உடன்வாழ்தல் அல்லது முரண்பாடுகள் ஆகியவை குறித்த ஆய்வைக் குறிக்கிறது.

Intermarriage
கலப்பு மணவுறவு

இரு சமூகக்குழுக்கள் அல்லது பிரிவுகளைச் சேர்ந்த நபர்களிடையே நடைபெறும் திருமணம் இத்தகைய திருமணத்துக்கு இயல்பாக ஒரு குழு உறுப்பினர்கள் அல்லது இரு குழு உறுப்பினர்களும் ஓரளவு மறுப்பு தெரிவிப்பார்கள். இதனால் கணவன் - மனைவியிடையே அல்லது இரு குழுக்களுக்கிடையே முடிந்தவரை சிக்கல்களை ஏற்படுத்துவார்கள். வழக்கமாக வெவ்வேறு மத இன பின்னணியைச் சேர்ந்த நபர்களிடையிலான திருமணத்தை கலப்பு மணவுறவு என்பர்.

Internalization
முழுக்கருத்தேற்பு

பிறர் கருத்தை முழுமையாகத் தன்னுடையதாக ஏற்றுக்கொள்ளுதல். பிறர் கருத்தை ஏற்றுக் கொள்ள வற்புறுத்தப்படாமல் தானாகவே ஏற்றுக்கொள்ளுதல். சான்றாக நம் சமுதாயத்தில் ஆண்களின் ஆடையணியும் முறை மேநாட்டு முறையாக இருந்தாலும் தற்போது அது நமது வாழக்கைமுறையில் இரண்டறக் கலந்துவிட்டதைக் கூறலாம்.

Internal Migration
உள்நாட்டு புலப்பெயர்வு

ஒரு நாட்டுக்குள் அல்லது ஒரு அரசியல் ஒருமத்துக்குள்ளான புலப்பெயர்வைக் குறிக்கிறது.

Interpersonal Relations
தனிமனிதரிடை உறவுகள்

நீடித்த அல்லது தொடர்ந்த சமூகச்செயலெதிர்செயல்களிலிருந்து வளர்கின்ற தனிநபர்களுக்கிடையிலான உறவுகளின் பாங்கங்களைக் குறிக்கிறது.

Intervening Variable
குறுக்கிடுமாறி

ஒரு மாறியின் விளைவைத் தொடர்புபடுத்துகின்ற மாறி. தகப்பன் மற்றும் மகன்களுக்கிடையே தொழில்நிலைகளுக்கிடையிலான நேர்அளவை இடைத் தொடர்பு பல குறுக்கீடு மாறிகளால் தொடர்புபடுத்தப்படுகிறது. அவற்றில் மிக முக்கியமான ஒன்று ஈட்டப்பட்ட கல்விநிலை.

Interview
நேர்காணல்/பேட்டிகாணல்

ஒரு கருத்துகுறித்த மற்றொருவருடைய எண்ணங்கள் மற்றும்

அவருக்குத் தெரிந்த செய்திகள் ஆகியவற்றை அவரிடமிருந்து நேரடியாகப் பெறுதல் பேட்டியாகும். நேர்காணலில் செய்திச் சேகரிப்பு என்ற முக்கிய நோக்கம் பேட்டி காண்பவருக்கும் பேட்டி அளிப்ப வருக்கும் இடையில் காணப்படும். சமூக அறிவியலில் ஆய்வுத்தலைப்புத் தொடர்பான செய்திகள் நேர்முக உரையாடல் மூலம் சேகரிக்கப்படும்.

Interviewer's Effect
பேட்டியாளரின் பாதிப்பு

பேட்டி எடுக்கும் சூழ்நிலை சாதகமாக இருந்தாலும் பேட்டியின் மூலம் கிடைக்கும் செய்திகளில் சில மாறுபட்ட விளைவுகள் ஏற்படலாம். பேட்டி எடுப்பவருக்கும் பேட்டி அளிப்பவருக்குமிடையே உள்ள கருத்துப் பரிமாற்றத்தால் ஏற்படும் விளைவுகளாலும், இருவரின் குணாதிசயங்களினாலும் மாறுபட்ட விளைவுகள் ஏற்படலாம். இதுவே பேட்டியாளரின் பாதிப்பு ஆகும். சான்றாக ஓர் ஆண் ஒரு பெண் பேட்டி அளிப்பவரிடம் செய்திகளைக் கேட்டறியும்போது பேட்டியில் பாதிப்பு ஏற்படலாம். ஆய்வுத்தலைப்பின் தன்மையைப் பொறுத்தும் பேட்டியாளரின் பாதிப்பு ஏற்படுவதுண்டு.

Interview Guide
நேர்காணல் முன்மாதிரி

ஓரளவு நெறிமுறைப்படுத்தப்படாத நேர்காணலில் பயன்படுத்துவதற்கான தலைப்புகளின் பட்டியலைக் குறுக்கிறது. இது நேர்காணலில் சில ஒழுங்குகளை ஏற்படுத்தவும் நேர்காண்பவரால் முக்கியமான பகுதிகளை உள்ளடக்கிக்கொள்ளவும் உறுதியளிக்கிறது. நேர்காணல் முன்மாதிரியானது நேர்காணல் அட்டவணையிலிருந்துவேறுபட்டது. இது நிலையான கேள்விகளைக் கொண்டது அல்ல. இதனால் நேர்காண்பவருக்கும் தகவலாளிக் குமிடையே மிகுந்த ஒழுங்குமுறை சாராத தன்மையையும் இசை விணக்கத் தன்மையையும் அனுமதிக்கிறது.

Interview Schedule
நேர்காணல் அட்டவணை

நேர்காண்பவர் ஒரு தகவலாளி யிடம் வினவுதலை வடிவமைக்கவும் வழிகாட்டவும் பயன்படுத்துகின்ற வினாப்பட்டடியல். நேர்காண்பவர் வினாக்களைக் கேட்டுப் பதில்களை அவரே பதிவு செய்துகொள்வார். இது தகவலாளிக்குப் பதிலாக நேர்காண்பவர் பூர்த்திசெய்கிற ஒரு வினாநிரல்.

Invasion
வல்லந்த நுழைவு

ஒருநிலச்சூழல்சார்நடைமுறையைக் குறிக்கிறது. ஒருவிதமான மக்கள் தொகை அல்லது நிலப் பயன்பாடானது முன்னரே அமர்வு கொள்ளப்பட்ட வேறுபட்ட மக்கள் தொகை அல்லது நிலப் பயன் பாடுடைய பகுதிக்குள் வலுக்கட் டாயமாக நகர்தலைக் குறிக்கிறது. வல்லந்த நுழைவர்னது ஒரு பகுதிக்குள் புதிய இன, பண்பாட்டு அல்லது அந்தஸ்து குழு நகர்வது அல்லது நுழைவதாகும்.

Ivention

புதிதுபுனைதல்

பொருள்சார் அல்லது பொருள்சாரா பண்பாட்டுக்கூறுகளுக்கியடையிலான தொடர்புகளில் புதுமுறை படைத்தலைக் குறிக்கிறது. இதனை நடைமுறையில் உள்ள பண்பாட்டுக் கூறுகள் மற்றும் புதிய பண்பாட்டுக் கூறுகளின் கூட்டிணைவு என வரையறுக்கப்படுகிறது.

Investigator

செய்தி சேகரிப்பாளர்

செய்திக்கூறுகளை நேரடியாக மக்களிடமிருந்தோ அல்லது நூல்களிலிருந்தோ சேகரிப்பவர். சிலவேளைகளில் ஆய்வாளரே நேரடியாகச் செய்திகளைச் சேகரிக்கலாம்.

Iroquois System

இரோக்குவாய்ஸ் முறை

இரோக்குவாய்ஸ் முறையில் ஒருவருடையதகப்பனின் சகோதரியின் பிள்ளைகள் மற்றும் தாயின் சகோதரனின் பிள்ளைகள் ஆகியோர் ஒரு உறவுமுறைப் பிரிவினராகச் சேர்க்கப்படுகின்றனர். தகப்பனின் சகோதரனின் பிள்ளகைள், தாயின் சகோதரியின் பிள்ளைகள் மற்றும் சகோதர, சகோதரிகள் ஆகியோர் ஒன்றாக வகைப்படுத்தப்பட்டு வேறுபட்ட ஒரு பிரிவில் அமைக்கின்றனர். இவ்வாறு இரண்டுவிதமான உறவுமுறைப் பிரிவுகள் ஏற்ப்டுகின்றன. தமிழரின் உறவுமுறை இராக்குவாய்ஸ் முறையைச் சேர்ந்தது.

Isolation

ஒதுக்கநிலை/தனிமை

தனிநபர்கள் அல்லது குழுக்கள் ஒன்றுக்கொன்று விலகியிருக்கும் அளவு. அதாவது செயல்இடைத் தொடர்பு, தகவல்தொடர்பு, கூட்டுறவு சமூக மற்றும் உணர்ச்சிவயப்பட்ட ஈடுபாடு ஆகியவற்றில் ஒருவருக்கொருவர் விலகியிருக்கும் அளவு. ஒரு தனிநபர் பிறரோடுள்ள சமூக மற்றும் உளவியல்சார் ஈடுபாடுகளைத் திருப்திப்படுத்துவதிலிருந்து நீண்டகாலமாக ஒதுக்கநிலையில் இருப்பது மூளையளவிலான நிலைகுலைவை ஏற்படுத்தும்.

J

Jajmani System

குடிசார்புஊழிய முறை

ஒவ்வொரு சாதியும் தங்களுக்குத் தெரிந்த தொழிலை மற்றவர்களுக்கு ஊழியமாகச் செய்துகொள்ளும் பரிமாற்றத் தொழில் உறவு. துணி வெளுத்தல, இரும்பு வேலை, மர வேலை, முடி வெட்டுதல் போன்ற பணிகளில் தனிப்பட்ட சாதியினர் தேர்ச்சிபெற்று விளங்குவதால் அச்சாதியினர் தங்கள் தொழிலைப் பிறசாதியினருக்கு ஊழியமாகச் செய்கிறார்கள். அவ்வூழியத்தைப் பெற்றவர்கள் கைமாறாக உணவுப் பொருட்கள், பணம், துணி வகைகள் போன்ற உதவிகளை ஆண்டுதோறும் செய்வார்கள். குடிசார்புஊழிய முறையில் ஊழியம் செய்வோர் 'காமின்கள்' எனப்படுவர். அதன் பொருள் பிரஜைகள் அல்லது குடிமக்கள் என்பதாகும். ஊழியத்தைப் பெற்றுக்

கொண்டு ஊழியம் செய்தோரை ஆதரிப்பவர்கள் 'ஜஜ்மான்' எனப்படுவர். இதன் பொருள் 'எசமான்' அல்லது ஆண்டை என்பதாகும்.

Jargon
சிறப்புமொழி/வரையறைமொழி

ஒரு சமுதயாத்தின் உட்குழுக்களான வர்த்தக அல்லது தொழில்சார் குழுக்களால் பயன் படுத்தப்படுகின்ற சிறப்புச் சொற்களின் தொகுதி. சிதைவுற்ற ஆங்கில மொழி வழக்கு போன்ற பண்படாத மொழிகளைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. எளிய இலக்கணம் மற்றும் குறைந்த சொற்கள் உடைய மொழி. பொதுவாக முறையான மொழிப் பயிற்சி இல்லாத வெவ்வேறு மொழிகளைப் பேசும் மக்களிடையே உடனடித் தகவல் தொடர்புக்காக உருவாக்கப்படும் மொழி.

Joint Family
கூட்டுக்குடும்பம்

ஒரே கூரையின்கீழ்ப் பெற்றோரும் அவர்களின் மணமான மக்களும், சிலவேளைகளில் பெற்றோரின் உடன்பிறந்தோரும் அவர்களின் மக்களும் வாழ்வதுண்டு. இவ்வாறு நேர்வழி மற்றும் கிளைவழி உறவினர்கள் ஒன்று சேர்ந்து வாழும் குடும்பம் கூட்டுக்குடும்பம் எனப்படும். இது இரத்த உறவுக் குடும்பம் என்றும் கூறப்படும். இக்குடும்பத்தின் அடிப்படைப் பண்பானது இரத்த உறவுள்ள உறுப்பினர்கள்இணைந்துவாழ்வதாகும்.

Joking Relationship
கேலி உறவு

கேலி உறவு பெரும்பாலும் மணஉறவால் இணையும் உறவினர்களிடையே காணப்படும். தவிர்ப்பு உறவுக்கு நேர்மாறான நடத்தைமுறையாகக் கேலி உறவு காணப்படுகிறது. இவ்வகை நடத்தைமுறையில் உறவாடுபவர்களிடையே கிண்டல், ஏளனம் செய்தல், பாலுணர்வு சார்ந்த சொற்களைப்பயன்படுத்துதல், ஒருவரை ஒருவர் அடித்துக்கொள்வது, அணைத்துக்கொள்வது போன்றவை காணப்படும்.

Juvenile Court
இளங்குற்ற முறைமன்றம்

இளங்குற்றவாளிகள் பற்றிய வழக்குகளை அராய்வதற்கென்றே அமைக்கப்பட்ட முறைமன்றம்.

Juvenile Delinquents
இளம் குற்றவாளிகள்

ஒருவன் சிறுவயதில் கட்டுப்பாடுடனும் ஒழுக்கத்துடனும் வளர்க்கப்படும்போது அவனுடைய ஆளுமை செம்மைப்படுத்தப்படுகிறது. அவன் சமுதாயத்தில் நல்லவனாக ஒழுக்கமுடையவனாக திகழ்கிறான். சிறுவயதில் குடும்பம் நிலைகுலையுமேயானால் குடும்பத்தில் அவனால் நல்லமுறையில், கட்டுப்பாடாக வளர வாய்ப்பு இல்லாமல் போகிறது. இதனால் சமுதாயப் பண்பற்றவனாக இளம்வயதில் குற்றவாளியாகும் நிலை ஏற்படுகிறது. குடும்பம் தவிர இளையோர்க் கூடங்கள், ஒப்பார் குழுக்கள் போன்றவற்றின் தூண்டுதலாலும் இளம்வயதில் குற்றவாளியாகும்

நிலை ஏற்படுகிறது.

K

Kin
உறவினர்

திருமணத்தின் மூலமோ, மரபுவழியாகவோ சமுதாயத்தால் அங்கீகரிக்கப்பட்ட உறவினை உடையவர்கள் உறவினர்களாவர்.

Kin Categories
உறவுவகைகள்

உறவுமுறைச் சொற்களை ஆராயும் போது ஒருவரின் முதல்நிலை உறவினர், இரண்டாம் நிலை உறவினர் மற்றும் மூன்றாம்நிலை உறவினர் ஆகியோரின் எண்ணிக்கை 191 வரை வளரும். ஆனால் உறவினர்களை வகைப்படுத்தும்பொழுது இதனைச் சுருக்கி விடலாம். 48 முதன்மையான உறவுவகைகள் காணப்படுவதுண்டு. இந்த 48 உறவுவகைகளுள் ஒரே சொல் ஒன்றுக்கு மேற்பட்ட உறவுவகைகளைக் குறிப்பிடுமாதலால் இறுதியாகச் சொற்களின் எண்ணிக்கை மேலும் குறையும்.

Kindred
உறவுக்கூட்டம்

ஒருவருக்குத் தாய்வழியிலும் தந்தைவழியிலும் மிக நெருக்கமாக அமையும் உறவினர்கள் உறவுக்கூட்டம் எனப்படுவர். நெருங்கிய உறவுக் கூட்டமென்பது குடும்பத்தில் நிகழும் இன்பதுன்பங்களில் நேரடியாகப் பங்குபெறும் முதல்நிலை உறவினர்களைக் குறிக்கும்.

Kin Group
உறவுக்குழு

இரத்த அல்லது திருமண இணைப்பால் ஒன்றாக்கப்பட்ட குழு. குடும்பம் தவிரப் பெரும்பாலான உறவுக்குழுக்களும் இரத்த உறவுடைய குழுக்களாகும்.

Kinology
உறவுமுறையியல்

உறவுமுறை குறித்த அறிவியல் முறையிலான ஆய்வு. உறவுமுறையியல் கூறுகள் உறவுமுறைச் சொற்களின் அடிப்படை உறவுமுறை குணாதிசயங்களுக்கு அமைப்புமுறையிலான விளக்கங்கள் அளிக்கின்றன. திருமணம், குடும்பம், வாழ்விடம், குல அமைப்பு, முன்னுரிமை மணக்குழுக்கள் ஆகியவற்றில் காணப்படும் உறவுமுறை அமைப்பு தொடர்பான கூறுகளே உறவுமுறைச் சொற்களின் உறவுமுறையியல் தொடர்பான உறவுகளாகும்.

Kinship
உறவுமுறை

இரத்த இணைப்பாலும் திருமண இணைப்பாலும் ஏற்படுகின்ற சமூக உறவுகள் கூட்டாக உறவுமுறை எனப்படும். உறவுமுறை என்பது உலக முழுதளாவிய ஒன்றாகும். பெரும்பாலான சமுதாயங்களிலும் குழு கட்டொருமைப்பாட்டினைத் தக்கவைப்பதிலும் தனிநபர்களின் சமூகவயமாதலிலும் உறவுமுறை குறிப்பிடத்தக்க பங்காற்றுகிறது. மானிடவியலார் மரபுவழி அடிப்படையிலான இணைப்புகளையும் திருமண

அடிப்படையிலான இணைப்புகளையும் வேறுபடுத்துவர்.

Kinship Behaviour
உறவுமுறை நடக்கை

குடும்பம், குலம், கால்வழி, உறவுக்கூட்டம் போன்ற உறவுமுறை குழுக்களுக்குள் சில உறவுகளுக்கிடையே நிலவும் நடக்கைமுறை தனித்தன்மை உடையதாகவும், நிலையானதாகவும் இருக்கும். உறவுமுறை நடத்தைகள் மொழி சார்ந்தோ, மொழி சாராமலோ அமையும். சான்றாகத் தவிர்ப்பு உறவு, கேலி உறவு போன்றவற்றைக் கூறலாம்.

Kinship System
உறவுமுறை அமைப்பு

அந்தஸ்த்து மற்றும் பங்குகளின் மரபுவழக்கான ஒழுங்கைக் குறிக்கிறது. உறவுமுறை அமைப்பு உறவினர்களின் நடக்கைமுறையை ஆளுகை செய்வதாகவும் ஒரு முன்மாதிரியாகவும் செயலாற்றுகிறது. உறவுமுறை அமைப்பில் குடும்பம் மற்றும் திருமணமுறை முக்கிய இடத்தை வகிக்கின்றன.

L

Labelling
நிர்ணயநிலை

ஒருவர் செய்யும் தீய செயல்களைக் கண்டுபிடித்து அவரைக் குற்றவாளி என்று நிர்ணயிப்பது. ஒருவர் சட்டத்திற்குப் புறம்பான செயல்களைச் செய்து சமுதாயத்தினால் குற்றவாளியாகக் கருதப்படும்பொழுது அவர் பிறருடன் எவ்விதத் தொடர்புமில்லாமல் தனிமையில் வாழவேண்டியதாகிறது. அவர் தானாக திருந்திக் கொள்வதற்கான வாய்ப்பும் மிகக் குறைவாகிவிடுகிறது.

Labour
தொழில் உழைப்பு

குறிப்பிட்ட ஒரு குறிக்கோளை அடைவதற்கான எந்த ஒரு பணி அல்லது முயற்சி. தொழிற்சாலைகள், நிலங்கள், சுரங்கங்கள், கட்டுமானம் போன்ற பணிகள் மற்றும் பல உடல்சார் பணிகளைச் செய்யும் பணியாளர்களைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

Labour Aristocracy
உழைப்பாட்சி வகுப்பு

உழைக்கும் வகுப்பின் மேல்மட்டத்திலான முன்னுரிமை படைத்த சமூகத்தரம். அத்தகைய சமூகத்தரம் பற்றாக்குறையான திறமைகள், சூழ்ச்சிமுறையான நிலைகள் அல்லது அமைப்புரீதியான வலு ஆகியவற்றால் நிலைநாட்டப்படுகிறது.

Labour Dispute
தொழில் உழைப்புத் தகராறு

வேலை அல்லது தொழில் தொடர்பான ஒப்பந்த விதிமுறைகள், உடைமையுரிமை அல்லது நிபந்தனைகள் ஆகியவை குறித்த எந்த ஒரு கருத்து மாறுபாடும் தொழில் உழைப்புத் தகராறு ஆகும்.

Labour Force
தொழில் உழைக்கும் சக்தி

சமுதாயத்தில் பல்வேறு

தொழில்களில் உழைக்கும் மக்கள். பெரும்பாலும் இவர்கள் 16 வயதிற்கு மேற்பட்டவர் களாவர்.

Labour Movement
தொழில் உழைப்போர் இயக்கம்

தொழில்மயச் சமுதாயத்தில் பணியாளர் மனநிறைவின்மையும் மறுப்பும் எங்கும் காணப்படுவதாகும். இத்தகைய உணர்ச்சிக் கனிவுகளுக்குப் பயனுறுதியுள்ள குரல் கொடுக்கும் தன்மையை வளர்க்கும் அமைப் பாண்மைகள் இணைந்து தொழில் உழைப்போர் இயக்கம் உருவாகுகிறது.

Labour Process
தொழில் உழைப்பு நடைமுறை

உற்பத்தி நடைமுறையைக் குறிப்பிட இச்சொல் பயன்படுத் தப்படுகிறது. இதில் பயனுடைய பொருட்களை அல்லது சரக்குகளை உற்பத்தி செய்வதற்காக உழைப்புச் சக்தியானது மூலப்பொருள்களுக்கும் இயந்திரத் தொகுதிக்கும் பயன்படுத் தப்படுகிறது. உற்பத்தி என்ற சொல்லுக்குப் பதிலீடான உழைப்பு என்பது, உழைப்பே எல்லா மதிப்பையும் உருவாக்குகிறது என்ற மார்க்சீய கொள்கையைப் பிரதிபலிக்கிறது.

Language
மொழி

மொழி என்பது மனித நடக்கை முறையின் ஓர் உலகளாவிய பொருண்மையாகும். இது தரப் படுத்தப்பட்ட பொருளுடைய, பண்பாட்டு ரீதியில் ஏற்றுக்கொள் ளப்பட்ட, முறையான ஒலி அமைப்புகள் வாயிலாகக் குறியீடாயமைந்த தகவல்தொடர்பில் ஈடுபடுகிறது. மொழி பண்பாட்டு மரபின் ஒரு பகுதியாகவும் பண்பாட்டு மரபை வெளிப்ப டுத்துவதாகவும் உள்ளது.

Latent Function
உள்விளைவுச்செயல்

முக்கியமானதாகக் கருதப்படாத, அங்கீகரிக்கப்படாத, உள்விளைவுகளாக ஏற்படும் செயல்கள். இவற்றை ஆழ்ந்து நோக்கும்பொழுதுதான் ஒருவரால் தெரிந்துகொள்ள இயலும். சான்றாகக் கிராமத் திருவிழா இறை வழிபாட்டிற்காக நடத்தப்பட்டாலும் கிராம மக்களிடையே ஒற்றுமையை வளர்க்கிற ஒரு நிகழ்ச்சியாக அமைகிறது. ஒற்றுமையை வளர்க்கும் செயலானது குறிப்பிடப்படாத உள்விளைவுச் செயலாகும்.

Laterally Extended Family
கிளைவழி விரிந்த குடும்பம்

குடும்பத்தின் அளவு விரிவடை யும்போது அதில் கிளைவழி உறவினர்களான சித்தப்பா, பெரியம்மா போன்ற உறவினர்களும் அல்லது அவர்களைச் சேர்ந்த வர்களும் இடம்பெற்றால் அக்குடும்பம் கிளைவழி விரிந்த குடும்பம் எனப்படும். (காண்க : Extended Family)

Law of Social Migration
சமூக இடப்பெயர்ச்சி விதி

மனிதன் அதிக சமூகப் பொருளாதார நெருக்கடி அல்லது

துன்பம் உடைய இடத்திலிருந்து குறைந்த சமூகப் பொருளாதார நெருக்கடி உடைய இடத்திற்கு இடம்பெயர நாடுகின்றான் என்ற விதி சமூக இடப்பெயர்ச்சி விதியாகும்.

Law of Social Motion
சமூக இயக்கவிதி

சமூகமாறுதல் அல்லது சமூக இயக்கச் சாய்வானது குறைந்த இடையூறுகள் உடைய இலக்கைப் பின்தொடர நாடுகிறது என்ற கருத்து.

Law of Stratification
அடுக்கமைவியல் விதி

ஒரு நாட்டில் தனிச்சலுகை படைத்த உயர்குடியாட்சி தொடர்ந்து நிலவுவது. அது தன் பலத்தைப் பயன்பத்தித் தன்னை நீடித்திருக்கச்செய்யும் என்ற விதி அடுக்கமைவியல் விதியாகும்.

Leader
தலைவர்

ஒரு குழுவில் மேலாதிக்கம் செலுத்தி ஆக்கத்திரிபு உண்டு பண்ணுகின்ற தலைமைப் பதவி வகிக்கும் நபர்.

Leadership
தலைமை

சமூக உளவியலில் சிறிய குழுக்கள் பற்றிய ஆய்வில் தலைமை அடிக்கடிகையாளப்படுகிறது. சமூகவியலில் தலைமை சமூகக் கூட்டம் அல்லது சமூகத்திரளில் ஆக்கத்திரிபு உண்டுபண்ணுதல் அல்லது அதிகாரத்தைக் கையாளுதல் என்று வரையறுக்கப்படுகிறது. அதிகாரத்தின் அடிப்படையில் தலைமையை மூன்று பிரிவுகளாப் பிரிப்பார்.

1)பொதுத்தலைமை
2)மரபுரிமைத்தலைமை
3)சட்டப்படியானதலைமை.

தற்காலச் சமூகவியலார் தலைமையைவிட அதிகாரத்தை அதிகமாக வலியுறுத்துகின்றனர்.

Learning
கற்றல்

கற்றல் என்பது புதிதாக அனுபவப்படுகின்ற அல்லது உணரப்படுகின்ற சுற்றுச்சூழலில் முந்தைய செயல்வடிவங்களைத் தக்கவாறு அமைத்துக்கொள்ளும் நடைமுறை. கற்றல் புதிய அனுபவத்தினால் ஒருவரின் நடக்கைமுறையைப்புத்தமைவாக்குதல் மற்றும் மாற்றியமைத்தல் ஆகியவற்றில் ஈடுபடுகிறது. மேலும் கற்றல் நடக்கைமுறையில் நிரந்தர மாறுதலை ஏற்படுத்துகிறது.

Legal Fiction
சட்டப்படியானபுனைவு

உண்மையில் போலியானதாக இருந்தாலும் சட்டத்தின்கீழ் உண்மையானதாகக்கொள்ளப்படுகின்ற ஊகம். சான்றாகச் சட்டம் என்பது எப்போதும் அப்படியே இருக்கும் என்ற ஊகத்தைக் கூறலாம். உண்மையில் சட்டம் பயன்படுத்துவதிலும், பொருள் விளக்கத்திலும் மிகுதியாக மாற்றியமைக்கப்படுகிறது.

Legend
புராணக்கதை

மக்களால் ஆர்வமாக நம்பப்படும் மரபுவழிக் கதை. சில நபர்கள் அல்லது நிகழ்சிகள் குறித்த ஓரளவு வரலாற்று நிகழ்வுகளின் அடிப்படையிலான நாட்டுப்புறக் கதை. ஆனால் சில பண்பாட்டு மதிப்பீடுகளைப் பெருமைப்படுத்துவதாகவும்வலியுறுத்துவதாகவும் காணப்படும்.

Leisure
ஓய்வுநேரம்

வழக்கமான செயல்பாடிலிருந்து தற்காலிகமாகப் பின்வாங்குவதைத் குறிக்கிறது. இது வெளிப்புறமாகத் திணிக்கப்பட்ட சமூக நிர்ப்பந்த நிலைகளின் அடிப்படையிலானதும் தனிநபருக்கு முழுமையான மனநிறைவு அளிக்காததாகவும் இருக்கும்.

Leninism
லெனின் கோட்பாடு

1917ஆம் ஆண்டு நிகழ்ந்த உருசியப்புரட்சித்தலைவர்லெனினின் கோட்பாடுகள். அவருடையஅரசியல்சார் போதனைகள் சமூகவியலில் சில ஆக்கத்திரிபுகளை ஏற்படுத்தியுள்ளன. பணியாளர் வர்க்கத்துக்கு தொழிற்சங்க உணர்வு மட்டுமல்லாமல் உண்மையானபுரட்சியாளர் இனவுணர்வை அளிப்பதற்கு மார்க்சிய அறிவாளிகளால் நடத்தப்படுகின்ற சமதருமவாத புரட்சியாளர் கட்சி இன்றிமையாதது என்பது இவர் கருத்து.

Levels of Kinship Relation
உறவெல்லை

விரிந்து பரந்த எல்லைக்குள் உள்ள அனைத்து உறவினர்களும் ஒருவருக்கு ஒருவர் நேரடியாகத் தொடர்புடையவராக இருக்க இயலாது. ஒவ்வொருவரும் வெவ்வேறு நிலையில் தொடர்புள்ளவராக இருப்பர். இவர்களுக்குள் நிலவும் தொடர்பைக் கொண்டு உறவினர்கள் முதல்நிலை உறவினர்கள் (Primary Kin), இரண்டாம்நிலை உறவினர்கள் (Secondary Kin) மூன்றாம் நிலை உறவினர்கள் (Tertiary Kin) மற்றும் தூரத்து உறவினர் என்றும் வகைப்படுத்துவர்.

Levirate
மதனி மணம்

ஒருவர் இறக்க நேரிட்டால் அவருடையமனைவியை அவருடைய சகோதரன் திருமணம்செய்துகொள்ளும் மணமுறை.

Liberal
முற்போக்காளர்

பொதுவாகச்சமுதாயஅமைப்புமுறை அடிப்படைநிலையில் சரியானது என்றும், சமுதாயம்நன்குசெயல்படும் வகையில் பல மாறுதல்களைச் செய்யவேண்டும் என்றும் கருதுபவர்கள். முற்போக்காளர்கள் மத நம்பிக்கையில் பழமைவாதிகளாக இருப்பதில்லை.

Life-Cycle
வாழ்க்கைச்சுழல்

இச்சொல்முதல்நிலையாகஒருவரின் குழந்தைப்பருவம், இளம் வாலிபப் பருவம், நடுவயதுப் பருவம்,

முதிர்வயது மற்றும் இறப்பு ஆகியவற்றின் வாயிலாக அவருடைய வளர்ச்சியை விளக்கப் பயன்படுத்தப்படுகிறது. வாழ்க்கைச்சுழல் குறித்த சமூகவியல்சார் கருத்துப்படிவம் முற்றிலுமாக முதிர்வைக் குறித்த உயிரியல்சார் நடைமுறைகளைக் குறிப்பிடுவதில்லை. ஆனால் கருத்துப் படிவம் ஒரு தனிநபர் சமூகரீதியில் அமைக்கப்பட்ட வயதுப் பிரிவுகளைக் கடந்து செல்வதைக் குறிக்கிறது. அதோடு வயதுநிலை சமூக அனுபவங்களின் வேறுபாடுகளையும் குறிக்கிறது.

Life Cycle Analogy
வாழ்க்கைச்சுழல் ஒப்புமை

சமூகவியலில் சமூகக்குழுக்கள் சமூக நிறுவனப் பழக்கங்கள் ஆகியவற்றின் வளர்ச்சியை ஓர் உயிரினத்தின் வாழ்க்கையில் சுழற்சியாக வரும் நிகழ்ச்சிகளைக் கொண்டு விளக்க முற்படுதல். சான்றாக ஒரு விலங்கின் பிறப்பு, வளர்ச்சி, முதிர்வு, நலிவு மற்றும் இறப்பு ஆகியவை ஒரு குழுவின் வளர்ச்சியோடு ஒப்புமையுடையதாக எண்ணப்பட்டது.

Life Cycle Ceremonies
வாழ்க்கைச்சுழல் சடங்குகள்

ஒருவரின் வாழ்க்கையில் பிறப்பு முதல் இறப்பு வரை நிகழும் சடங்குகள். வாழ்க்கையின் பல்வேறு வயதுநிலைகளில் ஏற்படுகின்ற பிறப்பு, பூப்பெய்தல், திருமணம், இறப்பு போன்ற நிகழ்ச்சிகளுக்கான சடங்குகள்.

Life-History Method
வாழ்க்கைச் சரித்திரமுறை

ஓர் ஆய்வு உத்தியைக் குறிக்கிறது இதில் ஆய்வுக்குட்பட்டவர் அவருடைய விரிவான விவரங்களை அளிப்பார். இதில் அவருடைய குறிப்பிடத்தக்க உணர்வுகள், எண்ணங்கள், கூர்நோக்குகள் மற்றும் அவரைப்பற்றிய பொதுவான ஒரு பகுப்பாய்வும் அடங்கும். ஆதாரச் சான்றுகள் ஆய்வுக்குட்பட்டவரால் எழுதப்படலாம் அல்லது பகுப்பாய்வுக்காக ஆய்வாளரால் பதிவு செய்யப்படலாம்.

Life Span
வாழ்வெல்லை

மனிதனின் உயிரியல்சார் வயது வரம்பு. ஒருவர் நோயினாலோ விபத்தினாலோ அல்லது காயத்தாலோ இறக்காதிருந்து எதிர்பார்க்கப்படும் மனிதவாழ்வின் பொதுவான மதிப்பளவு. மனித வாழ்வெல்லை துல்லியமாக இருப்பதில்லை. எனினும் தோராயமாக 100 ஆண்டுகளாகும்.

Life-Style
வாழ்க்கை மாதிரி

சமூக உறவுகளின் மாதிரிப்படிவங்கள், பொருள்களின் பயனீட்டளவு மற்றும் பண்பாடு ஆகியவை இணைந்து வாழ்க்கை மாதிரியை ஏற்படுத்துகின்றன. சமூகக் குழுக்களுக்கிடையிலான வாழ்க்கை மாதிரி வேறுபாடுகளில் படித்தர சமூகவியல் ஆர்வம் செலுத்துகிறது. அமெரிக்க சமூகவியலில் வாழ்க்கை மாதிரி என்ற கருத்து நகர்ப்புற மற்றும் கிராமப்புறச் சமூக வாழ்க்கை முறைகளை வேறுபடுத்தப்

பயன்படுத்தப்பட்டது.

Life Table
வாழ்க்கை வாய்ப்பு வள அட்டவணை

ஒரு குறிப்பிட்ட மக்கள்தொகையில் குறிப்பிட்ட காலத்தில் அல்லது கால வரையறைக்குள் வயது மற்றும் பால் பிரிவுகளில் இறப்புவீதம் மற்றும் வாழ்நாள் எதிர்பார்ப்பு குறித்த புள்ளிவிவரங்களைக் காட்டும் அட்டவணை. மனிதர்களின் சராசரி வயது பற்றிய புள்ளிவிவர அட்டவணை.

Lineage
கால்வழி

நன்றாக நினைவுபடுத்திப் பார்க்கக்கூடிய மூதாதையர் வழிக் குடிவழியைத் தொடர்புபடுத்திக் கூறும் உறவுக்குழு. ஒரு கால்வழியைச் சேர்ந்த அனைவரும் ஒருமூதாதையர்வழி தோன்றியவர்கள் என்பதால் அவர்கள் அனைவரும் தம் கால்வழியைச் சேர்ந்தோரை மணந்துகொள்ள இயலாது. இதனால் கால்வழி என்பது ஒரு புறமணக் குழுவாகும்.

Lineally Extended Family
நேர்வழி விரிந்த குடும்பம்

குடும்பத்தின் அளவு விரிவடைவது நேர்வழி உறவினர்களால் அமையுமாயின் அக்குடும்பம் நேர்வழி விரிந்த குடும்பமாகும். இவ்வகைக் குடும்பத்தில் குடிவழியில் நேராக வரும் பாட்டன், பாட்டி, பெற்றோர், மக்கள், பேரன், பேத்தி ஆகியவர்கள், இடம்பெறலாம்.

Lineal Relatives
நேர்வழி உறவினர்

ஒரு குடும்பத்தில் முப்பாட்டன், முப்பாட்டி, பாட்டன், பாட்டி, தந்தை, தாய், மகன், மகள், பேரன், பேத்தி, கொள்ளுப்பேரன், கொள்ளுப்பேத்தி ஆகிய உறவினர்கள் பேசுநருக்கு நேர்வழி உறவினர்களாவார்கள்.

Lineal System
நேர்வழி முறை

ஏறு தலைமுறையைச் சேர்ந்த நேர்வழி உறவினர்களையும் இறங்கு தலைமுறையைச் சேர்ந்த நேர்வழி உறவினர்களையும் பிரிப்பதோடு நேர்வழி உறவினர்களைக் கிளைவழி உறவினர்களிடமிருந்தும் பிரிப்பது நேர்வழி முறையாகும். இதனால் தாய் அவளது சகோதரியிடமிருந்தும் கணவனின் சகோதரியிடமிருந்தும் பிரிக்கப்படுகிறாள். இதேமுறையில் தந்தையும் அவரது கிளைவழி உறவினர்களிடமிருந்து பிரிக்கப் படுகிறார்.

Lineal Terminology
நேர்வழி உறவுமுறைச் சொல் வழக்கு

ஒருவரின் தந்தை, தாய், சகோதரன், சகோதரி, மகன், மகள் முதலான நேர்வழி உறவினர் களைக் குறிப்பிட மட்டுமே தனிச்சொற்கள் உள்ளன. ஏனைய உறவினர்களைக் குறிப்பிட வகைப் படுத்தும் சொற்களே பயன்படுத் தப்படுகின்றன. இச்சொற்கள் தந்தை மற்றும் தாய் வழிகளில் வரும் அனைத்து கிளை உறவினர் களையும் சமமாகக் குறிப்பிடும் தன்மையைக் கொண்டவை.

எஸ்கிமோ உறவுமுறைச் சொல் வழக்கை நேர்வழி உறவுமுறைச் சொல்வழக்கு என்று குறிப்பிடு வதுண்டு.

Linguistics
மொழியியல்

மொழிகள் குறித்த அறிவியல்சார் கல்வி, மொழியியலில் ஒலியியல், உருபனியல், தொடரியல், வாக்கியம் மற்றும் சொல் உருவாக்கம், மொழிகளின் தோற்றம் மற்றும் இடைத்தொடர்புகள் ஆகியவை அடங்கும். மேலும் மொழிகளின் தன்மை மற்றும் அமைப்பு பற்றிய ஒப்பாய்வும் இதில் அடங்கும். மொழிகளைப் பெரும் மொழிக் குடும்பங்களாகவும், உட்பிரிவுக ளாகவும் வகைப்படுத்துதல், மொழிகளின் வரலாறு மற்றும் பரப்பீடு குறித்த ஆய்வு, குறிப்பிட்ட சமகால மொழிகள் குறித்த ஆய்வு ஆகியனவும் மொழியியலில் அடங்கும்.

Longitudinal Study
நீட்டுநோக்காய்வு

ஒரே ஆய்வுப்பொருளைக் குறிப்பிட்ட நீண்டகாலத்தில் ஆராய் வது. இதன்மூலம் குறிப்பிட்ட காலகட்டத்தில் ஏற்பட்டுள்ள மாறுதல்களையோ அல்லது நிகழ்வுகளையோ அறிந்துகொள்ள இயலும்.

Looking Glass Self
பிறருக்கேற்ற சுய ஆளுமை

ஒருவர் தன் நடவடிக்கைகளைக் குறித்துப் பிறர் எவ்வாறு கருத்தில் கொள்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டு அதற்கேற்பத் தன் நடவடிக்கை, பேச்சு ஆகியவற்றை அமைத்துக்கொள்ளுதல். ஒருவர் சமுதாயத்தில் பழகும்போது ஏனையோர் தன்னைப் பற்றி என்ன கருதுகிறார்கள் என்ற உணர்வோடுதான் பழகுகிறார். ஒருவரைப் பற்றிய உயர்எண்ணம் மற்றும் சுயமதிப்பு போன்றவை ஏனையோரின் எண்ணத்தைப் பொறுத்தே அமைகின்றன.

Lower Animism
கீழ்நிலை ஆவியுலகக் கோட்பாடு

கீழ்நிலை ஆவியுலகக் கோட்பாடு உடையவர்கள் ஒழுக்கநிலை சாராத தொன்மை மக்களாவார்கள். இவர்கள் இறப்புக்குப்பின் உயிர் தொடர்ந்து வாழ்கிறது அல்லது நன்மை தீமைகளைச் செய்யும் ஆற்றலைக் கொண்டு நிலைத் திருக்கிறது என நம்புகின்றனர்.

Lower-lower Class
தாழ்ந்த கீழ்நிலை வகுப்பு

இப்பிரிவில் நிலையற்ற வேலையும் பகுதிநேரக் கூலிவேலையும், வேலையின்மையும் உடையவர்கள் காணப்படும் சமுதாயத்தரம் அடங்கும்.

Lower -middle Class
தாழ்ந்த நடுத்தர வகுப்பு

அளவான ஆனால் தன்னடக் கமான நிலையில் போதிய அளவு பணம் கல்வி உடைய மக்களை உள்ளடக்கிய சமூகத் தரத்தைக் குறிக்கிறது. அவர்களின் முக்கியமான விழுமியங்கள் பொறுப்பு, கடின உழைப்பு, சிக்கனம் மற்றும் சுத்தம்

ஆகியவற்றை வலியுறுத்த நாடும். இப்பிரிவில் அரசுப்பணியாளர்களும், சுமார் பாதியளவு தொழில்துறை சார்ந்த துறையினரும், கைவினைத் தொழில்களில் சிறந்து விளங்குவோரும் காணப்படும் சமுதாயத்தரம் அடங்கும்.

Lower-upper Class
தாழ்ந்த மேல்நிலை வகுப்பு

இப்பிரிவைச் சேர்ந்தவர்களும் செல்வந்தர்களேயாவர். எனினும் தங்கள் செல்வத்தை நெடுங்காலமாகக் கொண்டிராது குறிப்பிட்ட கால கட்டத்திற்குள் பெற்றவர்களாகக் காணப்படுவர்.

M

Macro-Functionalism
பேரிய செயற்பாட்டியல்

பெரிய அளவிலான சமூக ஒழுங்கமைப்புகளின் செயற்பாட்டியல் ஆய்வினை வலியுறுத்துகின்ற சமூகவியல்சார் கோட்பாட்டு ஆற்றுப்படுத்தலுக்குப் பயன்படுத்தப்படும் கருத்துப்படிவம். இத்தகைய அணுகுமுறை சமுதாயங்களின் செயற்பாட்டு ஒற்றுமைகளைக் கணக்கில் கொண்டு ஆய்வானது ஒரு சமுதாயத்தில் ஆரம்பித்து சமுதாயத்தின் கீழ்மட்டத்திலுள்ள சிறு குழுக்கள்வரை செல்ல வேண்டுமென குறிப்பிடுகிறது.

Macro-Sociology
பேரிய சமூகவியல்

சமுதாயங்கள் முழுவதையும் மற்றும் பெரிய அளவிலான பண்புக்குழுக்களையும் பற்றிய

பரந்தநிலை ஆய்வு. நுண்ணிய ஆய்வுக்கு மாறாகப் பேரிய ஆய்வு மேற்கொள்ளப்படும்.

Magic
மந்திரம்

மந்திரம் என்பது தொன்மை மக்களின் தொழில்நுட்பம் பற்றாக் குறையைப் போக்கத் தோன்றிய ஒரு கற்பனைத் (போலி) தொழில் நுட்பமாகும். இது அறிவியல் தோன்றுவதற்கு முந்திய கலையாகும். பயன்பாட்டின் அடிப்படையில் மந்திரங்கள் தூய மந்திரம், தீய மந்திரம், உற்பத்தி மந்திரம், பாதுகாப்பு மந்திரம், அழிப்பு மந்திரம் எனப் பலவகைகள் உள்ளன.

Malayan System
மலாய முறை

உறவுமுறையின் வளர்ச்சியை மார்கன் மூன்று நிலைகளாகப் பிரித்துள்ளார். அவற்றில் முதல்நிலை மலாய முறையாகும். இக்கால மானிடவியலாரின் உறவுமுறை வகைப்பாட்டின்படி மலாய முறை உறவாய் முறைக்கு இணையானது. (காண்க : உறவாய் முறை)

Male Ego
ஆண் பேசுநர்

உறவுமுறைச் சொற்களை ஆராயும் போது பேசுநரின் பாலின் தன்மையைப் பொறுத்து உறவின் தன்மை வேறுபடுவதுண்டு. என்வே ஆண் பேசுநர் பெண் பேசுநர் என்று பிரித்து ஆராயப்படுகின்றது.

Malthusian Doctrine
மல்தூசியன் போதனை

மனித இனவிருத்தி ஒரே வீதத்தில் ஏறிச்செல்லும் எண் தொடர்பில் அதிகரிக்கிறது என்ற போதனை. இதன் விளைவாக மக்கள்தொகை கிடைக்கக்கூடிய உணவு வழங்கீட்டைக் கடந்து செல்லுகிறது. இதனால் பஞ்சமானது அவ்வப்போது தவிர்க்கமுடியாத கட்டாய விளைவாகக் காணப்படும். தன்னார்வ இனவிருத்திக் கட்டுப்பாடு அல்லது போரில் மக்களைக் கொன்றுகுவித்தல் ஆகியவற்றால் மட்டுமே பஞ்சத்தின் வேகத்தைக் கட்டுப்படுத்தமுடியும் என்பது மல்தூசியன் போதனை.

Management
மேலாண்மை

ஒரு பொருளாதார இடர்நிறைந்த முயற்சியில் திட்டமிடுதல், ஒழுங்குபடுத்துதல், ஒருங்கிணைத்தல் ஆகிய முறைகள் மற்றும் ஆக்கவள நடைமுறை குறித்த ஆணை பிறப்பித்தல் ஆகியவற்றைக் குறிக்கிறது. செயலாட்சிசார் நடைமுறைகளைச் செயல்படுத்துபவரையும் இச்சொல் குறிக்கும்.

Managerial Sociology
மேலாண்மைசார் சமூகவியல்

தொழிற்சாலைகளில் செயலாட்சியின் ஒழுங்குமுறைகள் மற்றும் செயல் நோக்கங்கள் குறித்த சமூகவியல்சார் ஆய்வு.

Manifest Functions
வெளிப்படைச் செயல்கள்

சமூக அமைப்பில் அங்கீகரிக்கப்பட்டதும், தேவையானதுமான செயல்கள் அல்லது குறிக்கோள்கள். இச்செயல்கள் வெளிப்படையாகத் தெரியக்கூடியவை. சான்றாகத் திருவிழாவின் முக்கிய நோக்கம் மக்கள் நலனுக்காக இறைவழிபாடு செய்வதாகும். மக்கள் யாவரும் இதனை அறிவர்.

Marginal Area
ஓரப்பகுதி

ஒரு பண்பாட்டுப் பகுதியின் ஓரத்தில் காணப்படும் ஆட்சிப்பகுதி. அங்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பண்பாடுகள் சந்திப்பதாக இருக்கும். மேலும் அப்பகுதிப் பண்பாடுகள் அண்டைய பண்பாட்டுக்கூறுகளை உடையதாகக் காணப்படும். ஓரப்பகுதியானது உச்ச உயர் தொலைவிலுள்ள ஒரு பகுதியாகவும் ஒரு குறிப்பிட்ட பண்பாட்டுப்பகுதியில் உள்ளடங்கக் கூடியதாகவும் இருக்கும்.

Marginal Culture
ஓரப் பண்பாடு

ஒரு பண்பாட்டுப் பகுதியின் எல்லையில் வாழும் மக்கள் தம் பண்பாட்டுப் பகுதிக்கூறுகளுடன் அண்டைய பகுதிப் பண்பாட்டுக் கூறுகளின் தாக்கத்தையும் பெற்றுக் கலப்புப்பண்பாடு உடையவர்களாகக் காணப்படுவார்கள். அத்தகைய பண்பாடே ஓரப் பண்பாடு ஆகும்.

Marginal Group
ஓரக்குழு

ஒரு பண்புக்குழுவானது சில பாரம்பரியங்களையும், தனித்தன்மைகளையும் விட்டுவிட்டு

நடைமுறையில் தனதாக்கிக்கொள்கிற பண்பாட்டின் மதிப்பீடுகள் மற்றும் வாழ்க்கைமுறையை ஓரளவு ஏற்றுக்கொள்கிறது. அத்தகைய குழுக்கள் ஓரக்குழு எனப்படும்.

Marginal Man
ஓர மனிதன்

இரண்டு வேறுபட்ட பண்புக் குழுக்களில் கலந்துகொள்வதால் இரண்டகநிலையில் அல்லது குழப்பமான மனநிலையில் காணப் படும் நபர். அவர் இரு குழுக்களின் மதிப்பீடுகள் மற்றும் தரங்களுக்கு உண்மையாகவும், பொறுப்பு ஒப்புடைக்கப்பட்டவராகவும் இருப்ப தில்லை. அவர் சார்ந்திருக்கும் குழுக்களில் முற்றிலுமாக அவர் ஏற்றுக்கொள்ளப்படுவதும் இல்லை. மேலும் இரு குழுக்களிலும் காணப்படும் சில சிக்கலூட்டும் மதிப்பீடுகளையும் விதிமுறைகளையும் அவர் குறிப்பிட்ட அளவுக்கு மட்டுமே ஏற்றுக்கொள்வார்.

Market
சந்தை

பரந்த பொருளில் சந்தை என்பது பரிமாற்றத்தின் வட்டரங்கு அல்லது செயற்களமாகும். அங்கு தனிநபர்கள் தங்கள் சொந்த இலாபத்தைப் பெருக்கிக்கொள்ள முயற்சிக்கின்றனர். சந்தை நடைமு றையில் சில செயல்பாடுகளை ஒருங்கிணைக்கும் பணியைச் செய்கிறது. இந்நிலையில் சந்தை சமூகக் கோட்பாடு, பரிமாற்றக் கோட்பாடு ஆகியவற்றில் பயன்படுத் தப்படுகிறது. பொருளாதாரக் கோட்பாடுகளில் சந்தை மிக முக்கிய இடத்தை வகிக்கிறது.

Marriage
திருமணம்

1) ஒரு ஆணையும் பெண்ணையும் ஒரு குடும்பமாக இணைக்கும் சடங்காச்சாரம்.

2) ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் உரிய சட்டவரம்புக்கு உட்பட்ட கூட்டுப் பங்காண்மை.

3) ஒருகணவனுக்கும்மனைவிக்கும் இடையிலான மனிதஉறவு. இவ்வுறவு அவர்களின் பங்கு, தொடர்புடைய கடமைகள் மற்றும் ஒருவர் பொருட்டு ஒருவருக்கு உடைய தனிச்சலுகைகள் அல்லது சிறப்பு ரிமைகள் ஆகியவற்றால் உருவாக் கப்படுகிறது.

Marriage by Capture
கடத்தல் மணம்

பெண்ணைக் கடத்திச்சென்று திருமணம் செய்தல். பொதுவாக இம்முறைத் திருமணத்தில் பெண்ணைப் பிற சமுதாயத்திலிருந்து வலுக்கட்டாயமாகக் கடத்தி வந்து திருமணம் செய்துகொள்வர். இப்பழக்கம் சில பழங்குடியி னரிடையே காணப்படுகிறது.

Marriage by Elopement
உடன்போக்கு மணம்

மணமக்கள் ஒருவரையொருவர் நன்கு புரிந்து காதலர்களாகி மணம்செய்ய முற்படும்போது எதிர்ப்பு ஏற்படுவதுண்டு. அப்போது மணமக்கள் வெளிஇடத்திற்கு ஓடிச்சென்று மணந்துகொள்வர். சில காலத்திற்குப்பின் அவர்களின் சமுதாயத்தோடு சேர்ந்துவிடுவர்.

இதுவே உடன்போக்குமணம் ஆகும்.

Marriage by Exchange
பரிமாற்ற மணம்

மணமகன் தன் மணத்துணையை வேற்றுக் குடும்பத்திலிருந்து பெறும் அதே வேளையில் தன் சகோதரி அல்லது தன் குடும்பத்துக்கு நெருங்கிய பெண்ணை அக்குடும்பத்துக்கு ஈடாகக் கொடுக்கும் பழக்கம் உள்ளது. இதனைப் பரிமாற்ற மணம் என்பர்.

Marriage by Intrusion
அழையாநுழைவுமணம்

ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் விரும்பியபிறகு அவன் அவளை மணக்க மறுத்தோ அவளை அடைய தடைகள் ஏற்படுத்தியோ காலந்தாழ்த்தினால் மணமகளே வலிய மணமகன் இல்லத்தில் சென்று குடும்பம் நடத்த முற்படுவாள். அவ்வாறு வாழும்போது பல துன்புறுத்தல்களுக்குப்பின் ஏற்றுக்கொள்ளப்படுவாள். இதனை அழையாநுழைவு மணம் என்பர். இம்முறை பிர்கார், ஹோ (Ho) போன்ற இந்தியப் பழங்குடிகளிடம் காணப்படுகிறது.

Marriage by Purchase
விலை மணம்

பெண்ணுக்கு விலைகொடுத்துத் திருமணம் செய்துகொள்ளுதல். இம்முறையில் மணமகன் அல்லது அவரது வீட்டார் பெண்ணின் தகப்பனாரிடம் பெண்ணுக்காக ஒரு குறிப்பிட்ட தொகையையோ, பொருளையோ கொடுத்துத் திருமணம் செய்துகொள்ளுதல்.

Marriage by Service
பணி மணம்

பணிசெய்து பெண்ணை மணத்தல். திருமணத்துக்குமுன் மணமகன் மணப்பெண் வீட்டில் சிலகாலம் இலவசமாக வேலைசெய்து, பின்னர் பெண்ணை மனைவியாக அடைதல். பணி செய்யவேண்டிய காலம் சமுதாயத்துக்குச் சமுதாயம் வேறுபடுவதுண்டு. பொதுவாக இப்பணி மணப்பெண் பணத்தை ஈடு செய்தவதற்காகவே செய்யப் படுகிறது. கோட்டு, பெய்கர் போன்ற இந்தியப் பழங்குடி மக்களிடம் இப்பழக்கம் காணப்படுகிறது.

Marriage by Trial
தேர்வு மணம்

ஆண்கள் விழாக்காலங்களில் நடைபெறும் ஒருவகைப் போட்டியில் தன் திறனை வெளிப்படுத்தி அவருக்குப் பிடித்த பெண்ணை மணந்துகொள்வர். இதனைத் தேர்வு மணம் என்பர். பில்லர் பழங்குடியினரிடம் இப்பழக்கம் காணப்படுகிறது.

Marriage Rate
மணவீதம்

ஒரு வருடகாலத்தில் 1,000 மக்கள்தொகையில் நடைபெற்றுள்ள திருமணங்களின் எண்ணிக்கை.

Marxian Theory of population
மார்க்சீய மக்கள்தொகைக் கோட்பாடு

முதலாளித்துவ நாடுகள்

மக்கள்தொகை மிகுதியால் பல சிக்கல்கள் உடையனவாக இருக்கும் என்ற கருத்து, தொழிலாளிகளின் குறைந்த சம்பளம் அவர்களின் குடும்பங்களை ஆதரிப்பதில் சிரமங்களை ஏற்படுத்துகிறது என்பது இதற்குரிய காரணமாகும். இக்கோட்பாட்டின்படி சமதருமவாத அல்லது கூட்டுப் பொது நலஞ்சார்ந்த நாடுகளில் கூடிய வரையில் இத்தகைய சிக்கல்கள் ஏற்படாது. காரணம் உழைப்புக்கான ஊதியம் தேவை அடிப்படையில் அளிக்கபப்படுகிறது. இதனால் முழு வேலைவாய்ப்பு மற்றும் போதுமான வருவாய்க்கு உறுதிய ளிக்கப்படுவதால் வலுவான ஊழிய வகுப்பினர்கள் பெரிய குடும்பங்களை உடையவர்களா யிருக்க அனுமதிக்கப்படுகிறது.

Mass
மக்கள்திரள்

தரப்படுத்தப்பட்ட சில தகவல் தொடர்புகளின் பார்வையாளர்களாக அல்லது நுகர்வோர்களாக அமையும் பெரும் எண்ணிக்கையிலான மக்கள். இதனை சமூக அமைப் பாண்மை இல்லாத தம்முள் மாறுபட்ட தன்மைகளையுடைய மக்கள் தொகை எனவும் வரை யறுக்கலாம்.

Mass Behaviour
மக்கள்திரள் நடக்கைமுறை

கூட்டான ஒருவித நடக்கை முறையைக் குறிக்கிறது. இது பாரம்பரிய முறையில் அல்லாத, பலதரப்பட்ட, பெருமளவிலான மக்கள்தொகையின் மத்தியில் காணப்படும் ஆள்சார்பற்ற, மறைமுகமான தகவல்தொடர்பின் அடிப்படையிலானது. மக்கள்திரள் நடக்கைமுறை வளர்ச்சியில் தகவல் தொடர்பு மிக முக்கிய பங்காற்றுகிறது. இது தனிப்பட்ட முறையில் ஒருவரோடொருவர் தொடர்பு கொள்ளாத தனிநபர்கள் மத்தியில் குறிப்பிட்ட தகவல்களை அளிக்கிறது.

Mass Communication
திரள் தகவல்தொடர்பு

பலதரப்பட்ட மக்கள்தொகையில் ஆக்கத்திரிபுகளை ஏற்படுத்தக்கூடிய எந்த ஒரு செய்தி அல்லது பண்பாட்டு அடிப்டையிலான புறத்தூண்டுதல் தரும் பொருள்.

Mass Culture
திரள் பண்பாடு

பல்வேறு கூறுகளைக் கொண்ட பெரிய சமுதாயத்தில் வளருகின்ற பண்பாட்டு ஆக்கக்கூறுகள், இது மக்கள் பாராட்டக்கூடிய பாடல்கள், நடனங்கள் போன்ற தகவல்தொடர் புகளுக்கு அனுபவப்படுவதாலும் சமுதாயத்தின் பொதுவான திறந்த நிலையினாலும் ஏற்படுகிறது. திரள் பண்பாட்டின் தோற்றம் பொதுவான பண்பாட்டு மதிப்பீடுகள் மற்றும் மனப்பான்மைகளின் ஒருங் கிணைப்பு நடைமுறையின் ஒரு பகுதியாக அமைகிறது.

Mass Media
மக்கள் திரள் தகவல் தொடர்பு சாதனம்

மக்கள்திரள் தகவல்தொடர்பில் எந்த ஒரு வழிவகையாகவும்

அல்லது கருவிகளாகவும் பயன்படுத்தப்படும் கருத்துரு. அவை மக்களைச் சென்றடையும் செய்தித்தாள்கள், புத்தகங்கள், கால இதழ்கள், வானொலி, தொலைக்காட்சி மற்றும் நகரும் படங்கள் போன்றவைகளாகும்.

Mass Movement
திரள் இயக்கம்

ஒட்டுமொத்த திட்டமிடுதல் அல்லது ஒருங்கிணைப்பு இல்லாமல் ஒரேமாதிரியான குறிக்கோளை நோக்கிய பெருமளவிலான மக்களின் இயல்பானநடக்கைமுறை. இத்தகைய இயல்நிகழ்ச்சிக்கு திரள் இடப் பெயர்ச்சி மற்றும் திரள் ஆதரவுபெற்று மதம் அல்லது அரசியல் உயர்வுபெறுதல் போன்றவை சான்றாக அமைகின்றன.

Mass Observation
திரள் கூர்நோக்கு

மக்கள் மத்தியில் அளவாய்வுகள் மேற்கொண்டு முடிவுகளை முடிந்த வரை பரவலாக அறிவிக்கும் நோக்கத்தோடு 1936-ல் நிறுவப்பட்ட ஓர் அமைப்பாண்மை. அதை நிறுவியவர்கள் சமூக அறிவியல் கல்விசார்ந்ததாக மட்டும் இருத்தல் கூடாது என்று கருதினர். அதற் காக நாட்குறிப்புகள், அறிக்கைகள் மற்றும் வினாநிரல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் பல ஆய்வுகளை மேற்கொண்டனர். நுண்ணிய நிலையில் இம்முறைகள் எப் போதும் நிறைவானதாக இருப்ப தில்லை.

Mass Society
திரள் சமுதாயம்

தற்கால மேற்கத்திய சமுதாயங் களை, குறிப்பாக அமெரிக்க ஐக்கிய நாட்டுச் சமுதாயம் போன்ற சமுதாயங்களின் பண்புகளை விளக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. இக்கருத்துரு கீழ்க்கண்ட தனிச்சிறப்புக்களைத் தழுவியதாக இருக்கும். அதாவது பெருமளவிலான தொழில்மயம், பெரும் நகர்ப்புற வளர்ச்சி மற்றும் எங்கும் நிறைந்திருக்கும் அதிகார இனத்திற்குரிய நிருவாகம் ஆகிய பண்புகளை உடையதாக இருக்கும்.

Matching
ஈடிணைத்தல்

சோதனை ஆய்வில் காணும் ஒருவித கட்டுப்பாடு. இதில் சோதனையாளர் தன் ஆய்வோடு தொடர்புடையதாகக் கருதும் மாறிகளை உன்னிப்பாக நோக்கி சோதனைக்குழுவுக்குத் தேர்ந்தெடுக் கப்பட்ட பொருளும் கட்டுப்பாட்டுக் குழுவுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருளும் ஒருநிலைப்பட்டதாக இருக்கச் செய்யவேண்டும். ஈடிணைத்தல் இணையாக வகுத்தமைத்தல் அடிப்படையிலோ அல்லது அடுக்குநிகழ்வு பரப்பீட்டின் அடிப்படையிலோ காணப்படும்.

Material Culture
பொருள்சார் பண்பாடு

மக்கள் அவர்களின் பயன்பாட் டிற்காக ஏற்படுத்திக்கொள்ளும் அனைத்துப் பொருள்களும் பொருள்சார் பண்பாட்டுக் கூறுகள் ஆகும். ஆய்வு செய்யப்படும்

சமுதாயத்தின் பொருள்சார் பண்பாட்டைப் பற்றிய தரவுகள் மிகவும் பயனுள்ளவை. வீடுகளின் அமைப்பு, செய்பொருட்கள், அன்றாடம் பயன்படுத்தப்படும் பொருட்கள், வீட்டுச்சாமான்கள், உடைகள், அணிகலன்கள், போக்குவரத்துச் சாதனங்கள், தொழிற்கருவிகள், தற்காப்புக்கருவிகள் போன்ற பொருள்களைப் பற்றிய தரவுகள் சமுதாயப் பண்பாட்டு முறைகளை அறிய உதவும். மேலும் இவை மக்களின் சிந்தனைமுறை, உணர்வு, அறிவு, அழகுணர்வு போன்ற பல பொருள்சாராப் பண்பாட்டையும் வெளிப்படுத்துவனவாக உள்ளன.

Materialism
இயற்பொருள்வாதம்

சமூகவியலில் கோட்பாடுகளைக் குறிப்பிடுவதில் இச்சொல் குறிப்பிட்ட பொருளை உடையது. அக்கோட்பாடுகளில் பொருளாதார உறவுகள் சமூக இயல்நிகழ்வுகளுக்கு அடிப்படைக் காரணங்களாக அமைகின்றன. பொதுவான நிலையில் இயற்பொருள்வாத விளக்கங்களில் வரையறுக்கப்படுகின்ற உறுதியான சமூக உறவுகள் கனவியற்போக்குடைய விளக்கங்களுக்கு மாறானதாகும்.

Maternal Deprivation
தாய்சார் இழப்புணர்வு

சிறு குழந்தைகளுக்கு நிலையான, தொடர்பான பாசமுடைய தாய் உறவு தேவைப்படுகிறது. அத்தகைய உறவு இல்லாதிருப்பது மனநோய் அல்லது கடமை வழுவை விளைவிக்கும். இதனை தாய்சார் இழப்புணர்வு என்பர். இக்கோட்பாடு சமுதாயத்தில் பெண்களுக்கு முக்கியமான பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. அதாவது பெண்கள் பிள்ளைகளோடு வீட்டிலேயே இருக்கவேண்டும்என்றுகுறிப்பிடுகிறது.

Matriarchal Family
தாய்ஆதிக்கக் குடும்பம்

தாய்ஆதிக்கக் குடும்பமுறையில் குழந்தைகளும் சொத்துக்களும் மனைவிக்கு உரிமையாகின்றன. இவ்வகைக் குடும்பத்தில் பெண்கள் திருமணமானவுடன் கணவனின் வீடு செல்லாமல் தான் பிறந்த இடத்திலேயே. வாழ்கின்றனர். வம்சாவழியும் பெண்கள் மூலமே தொடருகிறது. குடும்பத்தில் வயதில் மூத்த பெண்களின் கருத்துக்களே பின்பற்றப்படுகின்றன. இத்தகைய குடும்ப அமைப்பில் ஆண்களுக்கு எவ்வித முக்கியத்துவமும் அளிக்கப் படுவதில்லை.

Matriarchate
தாய்ஆதிக்கச் சமுதாயம்

பெண்கள் மேலாதிக்கம் செலுத்துகின்ற சமுதாயம், சமூகக்குழு அல்லது ஓர் அமைப்பு.

Matrilineal Descent
தாய்வழி மரபு/பெண்வழி மரபு

ஒருவர் தம் மரபினைத் தந்தைவழியிலோ ஆண்வழியிலோ தொடர்புபடுத்தாமல் தாய்மூலம் தொடர்புபடுத்தினால் அவரது மரபு தாய்வழி மரபு எனப்படும். இங்கு மரபுவழியானது பெண்கள்

வழி தொடர்புபடுத்தப்படுவதால் சிலவேளைகளில் பெண்வழி மரபு என்றும் கூறப்படும். பொதுவாக தந்தைவழி உறவினர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதில்லை. அதாவது ஒரு குழந்தையின் உறவு தாய்வழியாக நிர்ணயிக்கப்பட்டு தாய்வழி உறவினர்களோடு இணைக்கப்படுகிறது.

Matrilineal Extended Family
தாய்வழி விரிந்த குடும்பம்

குடும்பத்தின் அளவு விரிவடைந்து தாய்வழி உறவினர்களை மட்டும் சேர்ந்ததாக அமையுமாயின் அது தாய்வழி விரிந்த குடும்பமாகும் (காண்க : Extended Family)

Matrilineal Inheritence
தாய்வழிச் சொத்துரிமை

குடும்பச் சொத்துக்கள் பெண்கள் வழியாகச் சேர்கை. குலம், குடும்ப அந்தஸ்து போன்ற உரிமைகளும் பெண்கள் வழியாகவே வருகின்றன. இதில் ஆண்களுக்கு எவ்வித உரிமைகளும் இருப்பதில்லை.

Matrilocal Residence
தாயக உறைவிடம்

சில சமுதாயங்களில் காணப்படும் ஒரு வழக்கம். அதாவது திருமண மான தம்பதிகள் மனைவியின் பெற்றோரின் இல்லத்தில் அல்லது பண்புக்குழுவில் உறைவிடத்தை அமைத்துக்கொள்ளுகை.

Matri- Partrilocal Residence
தாய்-தந்தையக உறைவிடம்

ஒருவிததந்தையக உறைவிடத்தைக் குறிக்கிறது. இதில் மணமகளும் மணமகனும் முதலில் மணமகளின் குடும்பத்தோடு வாழ்வார்கள். ஒரு குறிப்பிட்ட காலம்வரை மணமகன் அங்கு பணியாற்றுவார். பின்னர் தம்பதியர் மணமகனின் பெற்றோரின் வீட்டிற்கு அல்லது பண்புக்குழுவுக்கு வந்து அங்கு நிரந்தரமாக வாழ்வார்கள்.

Matripotestal
தாய்வழி ஆதிக்கம்

ஒரு குடும்பத்தினர் மத்தியில் நிலவும் தாய் அல்லது தாய்வழிப் பாட்டியின் ஆணையுரிமை அல்லது ஆதிக்கம்.

Maturation
முதிர்கை

உடல்சார் வளர்ச்சி, கற்றல் மற்றும் சமூகவயமாக்கம் ஆகியவற்றின் வாயிலாக தனிநபரின் உடல்சார், அறிவுசார், உணர்ச்சிவய மற்றும் சமூகரீதியிலான வளர்ச்சி அல்லது முன்னேற்றம்.

Maturation Hypothesis
முதிர்கை கருதுகோள்

குழந்தைப் பருவத்திலிருந்து இளவயதுவரை பல நடக்கைமுறைப் பாங்கங்கள் முதிர்ச்சியுறுகின்றன என்ற கோட்பாடு. இதனை அனுபவம், கற்றல் மற்றும் சமூகவயமாக்கம் ஆகியவற்றின் விளைவினால் அல்லாமல் உடல் சார் முதிர்கை நடைமுறையின் வாயிலாக நன்கு விளக்கலாம் என்ற கருதுகோள். பொதுவாக இக்கருதுகோளை சமூகவியலார் மற்றும் சமூக உளவியலார் ஏற்றுக்கொள்வதில்லை.

Maturing Stage
முதிர்ச்சிநிலை

குடும்ப அமைப்பின் இறுதிநிலை. மணக்குடும்பத்தை அமைத்துப் பெற்றோர் ஆகி அவர்களின் வாழ்வு முற்றுப்பெறும்போது இந்நிலை ஏற்படுகிறது. சில குடும்பங்களில் இந்நிலை ஏற்படாமலும் போகலாம். அதற்கு மணமுறிவு, குழந்தைப் பேறின்மை, இறப்பு போன்ற பல நிகழ்வுகள் காரணங்களாக உள்ளன.

Mazeway
தனிமனிதப்பாணி

பண்பாட்டு நடத்தைமுறைகளைப் பற்றியும், சமுதாயத்தில் ஒவ்வொருவரின் பங்கு என்ன என்பதைப் பற்றியும் ஒவ்வொரு தனிமனிதனும் கொண்டுள்ள அறிதிறன் பாங்கே தனிமனிதப்பாணியாகும்.

Mediation
இடைநின்றிணைத்தல்

கருத்து வேறுபாடுகளுக்குத் தீர்வுகாணப் பயன்படுத்தப்படும் ஓர் உத்தி. இதில் தன்னலமற்ற தன்மை உடைய மூன்றாவது நபர் ஒருவர் முரண்பாடான அல்லது போராடுகிற இரு நபர்களை ஒன்றுசேர்க்க முயற்சிப்பார்.

Medical Anthropology
மருத்துவ மானிடவியல்

பண்பாட்டுக் கூறுகளுக்கும் உயிரியல் கூறுகளுக்குமிடையே உள்ள தொடர்பைத் தெளிவாகப் புரிந்துகொள்வதன் மூலம் மனிதநோயியல் பற்றி முழுமையாக அறியமுடியும் என மானிடவியல் அறிஞர் கருதுவர். தனித்து வாழும் பழங்குடியினரின் பெரும்பாலான நோய்கள் அரவரவர் பண்பாட்டோடு தொடர்புடையன. ஏனெனில் இக்குழுவினரின் நோயியல் சுற்றுச்சூழல், நோய் பற்றிய நம்பிக்கைகள், சடங்குகள், மந்திரம், உணவுமுறை, தொழில்நுட்பம் போன்ற பல கூறுகள் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளன. அவர்களுக்கு நவீன மருத்துவ முறையில் மருத்துவம் செய்வதிலும் மருத்துவவியலார் வெற்றிபெற இயலவில்லை. இந்நிலையில் மருத்துவமானிடவியலார்முழுதளாவிய அணுகுமுறையில் இனக்குழுவினரின் நோய்முறைகளை ஆராய்வதில் ஈடுபட்டுள்ளனர்.

Medical Sociology
மருத்துவ சமூகவியல்

பொதுமக்களின் சுகாதாரச் சிக்கல்கள் மற்றும் நிலைமைகளைச் சமூகவியல் நோக்கில் ஆராயும் முறை. மருத்துவ சமூகவியல் கீழ்க்கண்ட பல்வேறு தலைப்புகளை உள்ளடக்கியுள்ளது.

1) குணப்படுத்தும் தொழில்சார் சமூகவியல்

2) நோய்சார் சமூகவியல், நோய்சார் மற்றும் உதவிநாடும் நடக்கைமுறை.

3) மருத்துவ நிறுவனங்கள் மறறும் சுகாதார சேவை அமைப்பாண்மை.

4) நோய் காரணம் பற்றிய ஆய்வில் சமூகக் காரணக்கூறுகள்.

5) கருத்தரிப்புமற்றும்நன்னடத்தையில் சமூகக் காரணக்கூறுகள்.

6) மருத்துவவசதி வேண்டுகோள்கள் மற்றும் பயன்படுத்துதல் ஆகியவற்றில் சமூகஆக்கக்கூறுகளின்இயக்கவிளைவு.

7) மருத்துவர்-நோயாளி ஆகியோருக்கிடையிலான கருத்துப்பரிமாற்ற சமூகவியல்.
8) பலதரப்பட்ட மருத்துவ ஒழுங்குகளின் சமூகவிளைவுகள்.
9) அகில உலகப் பாங்கத்திலான நோய் மற்றும் சுகாதார சேவை.
இங்கு மருத்துவத்தில் சமூகவியல், மருத்துவ சமூகவியல் ஆகியவற்றிக்கிடையிலான முக்கியமான வேறுபாட்டை மனதில் கொள்ளவேண்டும்.

Memory
நினைவுத்திறம்

கடந்தகால அனுபவங்கள், நிகழ்வுகள் மற்றும் கருத்துக்களை விடாதுவைத்திருத்தல், நினைவூட்டுதல், திரும்ப எடுத்துரைத்தல் மற்றும் மறுசீரமைத்தல் போன்ற திறன்கள். முதல்நிலையாக மனிதனின் நினைவுத்திறம் குறியீடுகளைப் பயன்படுத்தும் திறமையினாலானதாகும். இறுதியாக மனித நினைவுத்திறம் மொழி மற்றும் பண்பாடுகளின் உளதாம் தன்மையைச் சார்ந்திருக்கிறது.

Meritocracy
தகுதிக்கேற்ற அந்தஸ்து

ஒரு குறிப்பிட்டச் சமுதாயத்தில் ஒருவரின் தகுதிக்கேற்ப அவருக்குச் சமூக அந்தஸ்தை நிர்ணயித்தல். அத்தகைய சமூக அமைப்பைத் தகுதிக்கேற்பச் சமூக அந்தஸ்து நிர்ணயிக்கும் சமுதாயமாகக் கருதுவர்.

Mestizo
கலப்பினப்பிறவி

இலத்தீன் அமெரிக்காவில் வெள்ளையர் மற்றும் இந்திய மூதாதையர்களின் கலப்பால் தோன்றிய நபரைக் குறிக்கிறது. இனக்கலப்பினால் தோன்றிய கலப்பினப் பிறவிகளைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

Meta Sociology
உறுநுணுக்க சமூகவியல்

சமூகவியல்சார் கோட்பாடுகளின் ஒரு பிரிவைக் குறிக்கிறது. செயல்முறையினின்று விலகிய கோட்பாட்டுச் சமூகவியல். இது சமூகவியல்சார் ஆய்வாராய்வில் முறைகள் மற்றும் வாதமுறைகளோடு தொடர்பு கொண்டதாகும். இது சமூக வாழ்வு குறித்த பொதுமையாக்கங்கள், விதிமுறைகள் மற்றும் ஆய்வுப்பொருள்கள் ஆகியவற்றோடு அதிக சார்புடையதாக இருப்பதில்லை.

Methodology
ஆய்வுமுறையியல்

இச்சொல்லின் பயன்பாடு ஒரு குறிப்பிட்ட பிரிவில் அல்லது பயிற்சியின் தரவுகளைத்திறமையாகக் கையாண்டு அறிவைப் பெருக்கிக் கொள்ளும் உத்திகளைக் குறிப்பதாகும். எனினும் முக்கியமாக ஒரு பிரிவின் தற்போதைய ஆய்வு உத்திகளின் தத்துவரீதியிலான பரிநாமவளர்ச்சியைக் குறிப்பிடுவதற்கு இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. இச்சொல்லின் பயன்பாடு ஆய்வுமுறை அறிவுக்கோட்பாட்டின் அல்லது அறிவாதார முறையியலின் ஒரு பகுதி என்பதைக் குறிக்கிறது.

Metropolitan Area
தலைநகர்ப்பகுதி

ஒரு பெரிய மத்திய நகரத்தைச் சுற்றிலும் சமூகரீதியிலும் பொருளாதார ரீதியிலும் ஒருங்கிணைக்கப்பட்ட தொடர்ச்சியான ஆட்சிப்பரப்பு ஒருமத்தைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுறது.

Metropolitan Community
தலைநகரப் பண்புக்குழு

பல அரசியல்சார் எல்லைக்கோடுகளால் பல ஒருமங்களாக்கப் பட்டிருப்பதற்கு மாறாக ஒரே செயற்பாட்டு ஒருமமாக நோக்கப் படுகின்ற ஒரு தலைநகருக்குரிய பகுதி மக்கள். அப்பகுதியின் அனைத்து உட்பிரிவுகளும் தெளிவாகப் புலப்படாத இடைச்சார்பை நாடுவதாக இருக்கும்.

Micro-Functionalism
நுண்ணிய செயற்பாட்டியல்

சமூகவியல்சார் கோட்பாட்டுத் தொடர்பிணைவினைக் குறிக்கிறது. இது சிறு அளவிலான ஒழுங்கமைவுகளின் செயற்பாட்டு ஆய்வில் கவனம் செலுத்துகிறது.

Micro-Sociology
நுண்ணிய சமூகவியல்

சமூகவியலில் ஒரு ஆய்வுநிலையைக் குறிக்கிறது. இத்தகைய சமூகவியல் ஆய்வு அன்றாட வாழ்வில் நேருக்குநேரான சமூக எதிர்படுதல்கள் மற்றும் சில குழுக்களில் நபர்களுக் கிடையிலான நடக்கைமுறை ஆகியவற்றோடு தொடர்புடையது. சிறிய குழுக்களின் அமைப்பாண்மை மற்றும் இயங்குகிற முறை குறித்த ஆழ்நிலை ஆய்வு.

Middle Class
நடுத்தர வகுப்பு

ஒரு சமுதாயத்தின் சமூகப் பொருளாதார அடுக்கமைப்பு ஒழுங்கமைவின் ஓர் பிரிவு. இது இயல்புகடந்த நிலையில் தாழ்ந்த அந்தஸ்தையோ அல்லது உயர்ந்த அந்தஸ்தையோ உடையதாக இருப்பதில்லை. நடுத்தர வகுப்பு குறித்த துல்லியமான ஒப்புக்கொள்ளப்பட்ட வரையறை இல்லை.

Migrant
புலம்பெயர்பவர்

வாழும் இடத்தை மாற்றிக் கொள்ளும் நபர். அவ்வாறு செய்யும்பொழுது அரசியல் எல்லைக் கோட்டைக் கடந்துசெல்வதும் மாநிலம் அல்லது நாடு போன்ற புதிய அரசியல் பகுதியில் குடியேறுவதும் உண்டு.

Migrant Worker
புலம்பெயர்ந்த பணியாளர்

பல்வேறு பருவகாலங்களில் வேலைதேடும் பணியாளரைக் குறிக்கிறது. புலம் பெயரும் பணியாளர் பெரும்பாலும் அறுவடைப் பாதையைப் பின்பற்றுகிற ஒரு விவசாயப் பணியாளராக இருப்பார்.

Migration
புலப்பெயர்வு/இடப்பெயர்வு

தனிநபரின் அல்லது மக்கள் தொகையின் ஓரளவு நிரந்தரமான நகர்தல் அல்லது இடப்பெயர்வு. இது ஒரு அரசியல் எல்லையைக் கடந்து ஒரு புதிய பண்புக்குழு

வுக்கோ அல்லது வாழும் பகுதிக்கோ செல்வதாக இருக்கும்.

Military Institution
இராணுவ நிறுவனம்

ஒரு அரசின் மேலாதிக்க உயர்ந்தோர் குழாமின் செயல் பாடுகளைச் சுற்றி உச்ச அளவிலான சக்தியைப் பயன் படுத்துவதற்காக ஒழுங்கமைக்கப் பட்டுள்ள இடைத்தொடர்புடைய சமூகப்பங்குகள் மற்றும் விதி முறைகளின் ஒழுங்கமைவு. இராணுவ நிறுவனம் வரையறுக் கப்பட்ட பகைவரின் உயிரை எடுப்பதை சட்டத்துக்கு உடன்பா டானதாகக் கொள்கிறது. இது ஒரு சமுதாயத்தின் தொடர்ச்சியான வாழ்வு, அதிகாரம், ஆர்வம் அல்லது அமைப்பு ஆகியவற்றிற்கு வெளியேயிருந்தும் உள்ளேயி ருந்தும் வரும் அச்சுறுத்தல்களை அடக்குவதில் ஈடுபடுகிறது.

Minority
சிறுபான்மை

பெரும்பாலான சமூகவியலார் சிறுபான்மையை எண்ணிக்கைசார் கருத்துருவாக அல்லாமல் அரசியல்சார் கருத்துருவாக நோக்குகின்றனர். இதனால் தென்னாப்பிரிக்க கறுப்பர்கள் மக்கள்தொகையில் பாதிக்கு மேற்பட்டவர்களாகக் காணப்பட்டாலும் அவர்கள் சிறுபான்மையினர் என அழைக் கப்படலாம். இத்தகைய அணுகு முறையில் குறைபாடுகள் உள்ளன. எனவே ஒரு குறிப்பிட்ட மக்கள்தொகையில் பாதிக்குக் குறைவான ஒரு பிரிவு அல்லது குழுவைக் குறிப்பிடுவதற்கும்: இனம், மொழி, அரசியல், தேசிய மற்றும் மத அடிப்படையிலான சிறுபான் மையினரை வேறுபடுத்துவதற்கும் இச்சொல்லைப் பயன்படுத்துவது உகந்ததாகும்.

Minority Group
சிறுபான்மைக்குழு

ஒரு பொது பண்புக்குழுவில் தப்பெண்ணத்தாலோ அல்லது வேறுபடுத்திக் காண்பதாலோ சில பாதிப்புகளுக்குள்ளாகும் எந்த ஒரு ஒப்புக்கொள்ளத்தக்க இனம் அல்லது மத குழுவைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

Miscegenation
இனக்கலப்பு

சமூகரீதியில் ஒப்புக்கொள்ளப்பட்ட இரு இனங்களுக்கிடையிலான கலப்பு மணம் அல்லது இனக்கலப்பு. சான்றாக அமெரிக்க ஐக்கிய நாட்டின் நீக்ரோவர் வெள்ளையர் பாலினக்கலப்பைக் கூறலாம்.

Mixed Marriage
கலப்புத் திருமணம்

இரு வெவ்வேறு மதம், இனம், சாதி அல்லது நாடுகளைச் சேர்ந்த இரு நபர்களிடையே நடைபெறும் திருமணம் கலப்புத்திருமணம் ஆகும்.

Mob
மக்கட்கும்பல்

மிகவும் சுறுசுறுப்பான உணர்ச்சி வயப்பட்டு எழும்புகிற மக்கள்திரள் அல்லது கூட்டம். பொதுவான நோக்கம் அல்லது ஆர்வம்

அவர்களை நாசவேலைகள், வன்முறை அல்லது வலுச்சண்டை போன்ற செயல்களைச் செய்யத் தூண்டும்.

Mobility
நிலைபெயர்வு

சமூக அந்தஸ்தில் ஏற்படும் மாறுதல் மற்றும் மாறிவரும் குடியிருப்பு நடைமுறை. அதாவது ஒரு சமூக அந்தஸ்திலிருந்து இன்னொரு சமூக அந்தஸ்துக்கு இடம்பெயரும் ஆற்றல்.

Mobilization
ஆயத்தமாக்குதல்

புதுமையாக்கக் கோட்பாட்டில் இச்சொல் கூட்டான குறிக்கோள்களை முயன்றடைவதற்காகப் பணியாளர்கள் அல்லது உழவர்களை ஒன்றாகத் திரட்டுகின்ற நடைமுறையைக் குறிக்கிறது. அரசியல்சார் ஆயத்தமாக்குதல் என்பது புதிய அரசியல் நிறுவனங்கள் மற்றும் புதிய கட்சிகளை உருவாக்குவதன் மூலம் மக்களை அரசியல் செயற்களத்திற்குக் கொண்டுவரும் நடைமுறையாகும்.

Model Personality
மாதிரி ஆளுமைக்குணங்கள்

மாதிரி ஆளுமைக்குணங்கள் அல்லது பொதுகுணநலன்கள் ஒரு குழு அல்லது பிரிவைச் சேர்ந்த மக்களின் பெரும்பான்மைக் குணங்களைக் குறிக்கும். இப்பெரும்பான்மைக் குணநலன்களானது எல்லோரிடமும் ஒரேமாதிரியாகக் காணப்படும் என்று கூற இயலாது. ஆனால் பெரும்பான்மையான ஆளுமைக் குணங்களில் ஒருவரையொருவர் ஒத்திருப்பர். சான்றாக கிராம சமுதாயத்தினரை எடுத்துக் கொண்டால் அவர்கள் இயற்கையோடு தொடர்புடைய சூழ்நிலையில் வாழ்வதால் மிகவும் கடவுள் நம்பிக்கை உள்ளவர்களாகவும் விதியை நம்புகிறவர்களாகவும் இருப்பார்கள்.

Model Society
மாதிரிச்சமுதாயம்

மாதிரிச்சமுதாயம் அல்லது விரும்பத்தக்கச் சமுதாயம் மக்கள்தொகை மிகுதியாக இல்லாமல் நடுத்தரமாக இருக்கும்.

Mode of Production
உற்பத்திமுறை

மார்க்சிய கோட்பாடுகளில் அதிக முக்கியத்துவம் உடைய இந்த கருத்துரு சமூகவியலின் பல பிரிவுகளிலும் ஆக்கத்திரிபுகளை ஏற்படுத்தியுள்ளது. உற்பத்தி முறை என்பது உற்பத்தி உறவுகளுக்கும் உற்பத்தி சக்திகளுக்குமிடையிலான தொடர்பாகும். உற்பத்தி சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்குமிடையிலான வேறுபட்ட உறவுகள் மூலம் உற்பத்திமுறைகளை வேறுபடுத்திக் காண இயலும். சான்றாக நிலப்பண்ணை உற்பத்திமுறையில் உற்பத்தி சக்தி, கருவிகள் மற்றும் நிலம் ஆகியவற்றின்மீது ஆண்டைக்கு நேரடியான கட்டுப்பாடு இருப்பதில்லை. ஆனால் உழவர்களின் விளைச்சல்களை ஒழுங்கமைப்பதைக் கட்டுப்படுத்துகிறார். முதலாளித்துவ உற்பத்தி முறையில் முதலாளி உற்பத்தி சக்திகள் மற்றும் விளைச்சலை

ஒழுங்கமைத்தல் ஆகிய இரண்டையும் கட்டுப்படுத்துகிறார்.

Modernization
நவீனமயமாக்குதல்/புதுமையாக்கம்

மரபுச் சமுதாயங்கள் தொழில்மயமான நாடுகளின் தொழில்நுட்ப முறைகளையும் சமுதாயப் பண்பாட்டு முறைகளையும் ஏற்கும் நிகழ்வே 'நவீனமயமாக்குதல்' எனப்படும். உற்பத்திமுறைகளைத் தொழில்மயமாக்குதல், உயர்ந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த முயலுதல், நகர வாழ்வை மேற்கொள்ளுதல், உறவுமுறை சாரா குழுக்கள் ஏற்படுத்துதல் போன்றவை நவீனமயமாக்குதலில் அடங்கும்.

Moiety
பெருங்கூட்டம்/இருபிளவமைப்பு

பெருங்கூட்டம் என்பது ஒருவழி மரபுக்குழுவாகும். சிலவேளையில் சமுதாயம் இரண்டு பெருங்குழுக்களாக மட்டுமே பிரிந்து காணப்படும். இவ்வாறு இரு குழுக்களாகப் பிரிவதன்மூலம் இரண்டு குழுக்களும் ஒன்று மற்றதிலிருந்து பெண் எடுத்துக் கொள்கின்றது. சில சமுதாயங்களில் பெருங்கூட்டம் அகமணக்குழுவாகவும் செயல்படுகிறது. இவ்வகைச் சமுதாயங்களில் ஒவ்வொரு பெருங்கூட்டத்தில் சில கூட்டங்களோ குலங்களோ உறுப்புக்குழுக்களாகக் காணப்படும்.

Monism
ஒருபொருண்மைவாதம்

எல்லாமே ஒரு விதிமுறை அல்லது ஒரு பொருளில் குறைக்கப் படத்தக்கவை என்ற தத்துவ அடிப்படையிலான கருத்து. அனைத்து சமூக உண்மைகளையும் ஓர் அடிப்படை விதிமுறை அல்லது காரண விளக்கத்தின் மூலம் விவரிக்கலாம் என்ற கருத்து ஒருபொருண்மை வாதமாகும்.

Monogamian Family
ஒருதுணைமணக்குடும்பம்

இவ்வகைக் குடும்பமுறை ஓர் ஆண் ஒரு பெண்ணை மணந்து கொண்டு அல்லது ஒரு பெண் ஒரு ஆணை மணந்துகொண்டு வாழ்வதைக் குறிக்கும். குடும்பத்தின் படிமலர்ச்சியில் ஒருதுணை மணக்குடும்பமே இறுதியாக ஏற்பட்டதும் உயர்ந்த நிலையுடையதுமாகும்.

Monogamy
ஒருதுணைமணம்

ஓர் ஆண் ஒரு பெண்ணை அல்லது ஒரு பெண் ஒரு ஆணை மணம் செய்துகொள்வது ஒருதுணை மணமுறையாகும். இம்மணமுறை பெரும்பாலான சமுதாயங்களிலும் காணப்படுகிறது.

Monogenesis
ஒருவழித்தோற்றக்கொள்கை

மனிதர்கள் அனைவரும் ஒரு தாய், தந்தையரிடமிருந்து தோன்றியவர்கள். அனைவ்ரும் கருணையின் இடத்திலிருந்து வந்தவர்கள். சமகாலத்து மக்களிடம் உள்ள வேறுபாடுகளுக்கு அவரவர் சுற்றுப்புறச் சூழ்நிலையின் இயல்புகள்

ஒரு காரணம், மூதாதையர்களிடமிருந்து பெற்ற மரபுப் பண்புகளைச் சந்ததியினருக்குக் கொடுக்கும் தன்மை இரண்டாவது காரணம் என்ற கருத்து ஒருவழித் தோற்றக் கொள்கையாகும்.

Monogenetic Hypothesis
ஒருகுடி இனமலர்ச்சி கருதுகோள்

உயிர்வாழும் அனைத்து மனித இனங்களும் ஒருதுணை பெற்றோர் மற்றும் ஒரு நிலப்பகுதியிலிருந்து வழிவழியாக வந்தவர்கள் என்ற சமூகவியல் மற்றும் மானிடவியல் கருதுகோள்.

Monopoly
தனிஉரிமை

ஒரு சந்தை அல்லது தொழிற்சாலை தனிப்பட்ட அமைப்பாண்மையால் கட்டுப்படுத்தப்படுவது தனி உரிமையாகும்.

Monotheism
ஒருகடவுள்வாதம்

ஒரு கடவுள் வழிபாடு. ஒரு கடவுள் வாதம் என்பது பல கடவுள் உளதாயிருத்தலைப் புகுமுகப் படுத்துகிறது.

Mood
மனப்பாங்கு

ஒரு தற்காலிகமான மற்றும் திரும்பவும் நிகழக்கூடிய் மகிழ்ச்சி, கோபம், துக்கம் போன்ற உணர்ச்சிவயப்பட்ட உணர்வுகளைக் குறிக்கிறது. இது ஓரளவு மென்மை உள்ளதாகவும் ஆனால் அதைத் தோற்றுவித்த சூழ்நிலைக்கு அப்பாலும் விடாது தொடர்வதாகவும் இருக்கும்.

Moral Restraint
அறமுறைக் கட்டுப்பாடு

திருமணத்துக்கு முந்தைய கன்னித்தன்மையாலும் திருமணத்தைத் தள்ளிப்போடுவதன் மூலமும் மக்கள்தொகையின் பிறப்பு எண்ணிக்கையைக் குறைந்த அளவில் வைத்துக்கொள்ளுதல்.

Mores
வழக்கடிபாடுகள்/ஒழுக்கவிதிகள்

வழக்கடிபாடுகள் என்பவை நல்லவை, கெட்டவை என்னும் நம்பிக்கையோடு தொடர்புடைய கருத்துக்களையும் செயல்களையும் குறிப்பவையாகும். சில குறிப்பிட்ட சொற்கள் தீய பொருளைக் குறிப்பவை என ஒதுக்குவதும், நல்லதைக் குறிப்பிட சில சொற்களையே விரும்பிப் பயன்படுத்துவதும் வழக்கடிபாடுகளுக்குச் சான்றாகக் கூறலாம். சமுதாயத்தில் வழக்கடிபாடுகளுக்கு முக்கியத்துவம் தரப்படுவதோடு அவற்றை மீறுவோருக்குத் தண்டனையும் அளிக்கப்படுகிறது. உடன்பிறந்தவர்களிடையே திருமணத் தொடர்பு கொள்வதைத் தடை செய்வதையும் சான்றாகக் கூறலாம்.

Morganatic Marriage
உரிமையில்லா உயர்நிலைமணம்

சமுதாயத்தில் உயர்ந்தநிலையில் உள்ள ஒருவருக்கும் தாழ்ந்த நிலையில் உள்ள ஒருவருக்குமிடையிலான மண ஒப்பந்தத்தைத்

குறிக்கிறது. இத்திருமணத்தில் பிள்ளைகள் சட்டப்படியானவர்களாக இருப்பார்கள். ஆனால் பிள்ளைகளோ தாழ்ந்தநிலையில் உள்ள கணவன் அல்லது மனைவியோ உயர்ந்த நிலையில் உள்ள கணவன் அல்லது மனைவியின் செல்வம் பட்டங்களைச் சுதந்தரிப்பதில்லை. பொதுவாகச் சமுதாயத்தில் உயர்நிலையிலுள்ள ஆணுக்கும் தாழ்ந்த நிலையிலுள்ள பெண்ணுக்குமிடையே இத்தகைய மணம் நடைபெறும். பெண்ணுக்கோ, அவள் வயிற்றுப் பிள்ளைகளுக்கோ எவ்வகை உடைமை உரிமையும் இருப்பதில்லை.

Morphology
வடிவ அமைப்பியல்

வடிவம் மற்றும் அமைப்பு குறித்த ஆய்வைக் குறிக்கிறது. வடிவ அமைப்பியலானது உடற்கூறு சார்ந்த, மொழியியல் சார்ந்த மற்றும் சமூகஅமைப்பு சார்ந்த ஆய்வுகளில் ஈடுபடலாம்.

Mortality
இறக்கும் இயல்பு

இறக்கும் இயல்பு தரவுகள் இயல்பாக வயது, பால் மற்றும் சமூகவகுப்பு ஆகியவற்றின் அடிப்படையில் ஆயிரம் நபர்களுக்குள் ஏற்பட்டுள்ள இறப்புகளின் எண்ணிக்கை என்ற நிலையில் வெளிப்படுத்தப்படுகிறது. இறக்கும் இயல்புவீதமானது முக்கிய சமூக ஒழுங்கமைப்புகளை சுட்டிக் காட்டுவதாக உள்ளது. குறிப்பாகப் பிறந்த நான்கு வாரத்தில் குழந்தைகளின் இறப்புவீத மானது எந்த ஒரு சமுதாயத்திற்குள்ளும் பல்வேறு பகுதிகளில் பொதுவான சமூகநலத் திட்டங்களின் விளைவுகளை உடனுக்குடன் தெளிவாகச் சுட்டிக்காட்டுவதாக உள்ளது. சமூக வகுப்புகளுக்கிடையிலான இறக்கும் இயல்புவீத வேறுபாடானது சுகாதாரப் பராமரிப்பு, செல்வம், பணிநிலைகள் ஆகியவற்றில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைச் சுட்டிக் காட்டுவதாக உள்ளது.

Mother-in-Law Taboo
மாமியார் தடைக்கட்டு

மனைவியின் தாயோடு உரையாடுவது தடைசெய்யப் படுகிறது அல்லது போதுமான அளவு கட்டுப்படுத்தப்படுகிறது. இது சில சமுதாயங்களில் காணப்படும் ஒரு வழக்கம்.

Motor Intelligence
குழந்தையறிவு

குழந்தையின் அறிவுநிலை, குழந்தைகள் தங்களைப் பற்றியும், தங்களைச் சார்ந்தவர்களைப் பற்றியும் கொண்டுள்ள அறிவுநிலை.

Multibonded Group
பல்பிணைப்புக்குழு

நலன்கள், தேவைகள், மதிப்பீடுகள் போன்ற ஒன்றுக்கும் மேற்பட்ட இணைப்புகளால் ஒன்றுபடுத்தப்பட்ட உறுப்பினர்களை உடைய குழுவைக் குறிக்கிறது.

Myth
புராணக்கதை

சமூகநிறுவனங்கள் மற்றும்

உலகம் முழுமையின் தோற்றம் அல்லது மக்களின் வரலாறு பற்றிய அறிவெல்லை கடந்த நம்பிக்கைகள் குறித்த கதை கூற்றியல்பான தரவு, இதுகுறித்த ஒரு சமுதாய அங்கத்தினரின் செயல்பாடு அவற்றில் அளிக்கப் பட்டுள்ள தொடர்புடைய கூறுகளைப் பதிவுசெய்தல், அவை பிரதிபலிக்கும் படிப்பினை ஒழுங்குகளை வெளிக்கொணர அனுமதித்தல் போன்றவைகளாகும்.

Mythical Ancestor
தொன்மை முதாதையர்

சில பழங்குடியினர் அவர்களின் குலங்கள் யாருக்கும் நினைவில் இல்லாத வகையில் மிக நீண்ட காலத்துக்கு முன்னர் வாழ்ந்த ஒரு மூதாதையர்வழி தோன்றியது என்று மதிப்பிடுவர். அவ்வாறு மதிப்பிடப்படும் மூதாதையரே தொன்மை மூதாதையர் ஆவார்.

N

Name Calling
பெயர் அழைத்தல்

ஒரு நபருக்கு அல்லது கருத்துக்கு ஓர் எதிர்மறையான பொருட்பெயரைச் சூட்டி அதன்மூலம் கெட்ட பெயரை ஏற்படுத்தி மக்கள் உண்மையை உணராது மனத்தளர்வை ஏற்படுத்துவது அல்லது ஒரு கருத்து மற்றும் நபரோடு ஒற்றுமையை வளர்த்துக் கொள்வது போன்ற ஒரு பிரச்சார உத்தியைக் குறிக்கும் சொல்.

Nation
நாட்டினம்

தன்னாட்சியுரிமையுடைய ஆட்சிப்பரப்புஎல்லை குறிக்கப்பட்ட ஓர் அரசியல் தொகுதி. அதன் உறுப்பினர்கள் பண்புக்குழு ஒற்றுமை உணர்வளிக்கும்பங்கு ரிமையுடைய நிறுவன பற்றுறுதி உடையவர்களாக இருப்பார்கள். பொதுவான நாட்டினம் பண்பாட்டு ஒருமைப்பாடு மற்றும் பொதுவான வரலாற்றைச் சுற்றித் தோன்றி னாலும் மக்கள் பொதுவான மொழி, மதம் அல்லது இனத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதில்லை.

National Character Studies
தேசியப் பண்பு ஆய்வுகள்

களப்பணி தவிர்த்து ஏனைய மூலங்கள் அனைத்தையும் பயன்படுத்தும் ஆய்வு. நூல்கள், இதழ்கள், திரைப்படங்கள், தகவல் தொடர்பு முதலானவற்றைப் பயன் படுத்தியும், போர்க்கைதிகளையும், நாடுகடத்தப்பட்டவர்களையும் நேர்காணல் மூலம் அறிந்த வற்றைப்பயன்படுத்தியும் இத்தகைய ஆய்வினைச்செய்வார்கள். களப்பணி மேற்கொள்ளாமல் ஆய்வுசெய்யும் இம்முறை பண் பாட்டைத் தொலைவிலிருந்து ஆராய்தல் என்று குறிப்பிடப்படும்.

Native People
திணைக்குடியினர்

பரம்பரையாகக் குறிப்பிட்ட ஒரு நிலப்பகுதியில் வாழ் பவர்கள். வெளி ஊர்களிலி ருந்தோ வெளிநாடுகளிலிருந் தோ வந்து குடியேறாதவர்கள்.

Nativistic Movement
அகநிலைக்கருத்து இயக்கம்

ஒரு சமுதாய உறுப்பினர்களால் அவர்களின் பண்பாட்டிலிருந்து அயல்பண்பு ஆக்கக்கூறுகளை வெளியேற்றுவதற்காக ஒழுங்கமைக் கப்பட்ட முயற்சியில் பயன்படுத் தப்படுகின்ற கருத்துருவைக் குறிக்கிறது. பெரும்பாலும் தங்கள் சமுதாயத்திலிருந்து அயலாரை அகற்றுவதற்கு இக்கருத்துரு பயன்படுத்தப்படுகிறது.

Natural Area
இயற்கைப்பகுதி

நகர்ப்புற நிலச்சூழல் கோட்பாட்டில் ஒரு நகரத்தில் குறிப்பிட்ட மக்கள் குடியிருக்கும் ஒரு பகுதியை இயற்கைப்பகுதி எனக் குறிப்பிடப் படுகிறது. சான்றாகப் புறநகர்ப்பகுதி அல்லது நகரத்தில் யூதர்கள் வாழும் பகுதியைக் கூறுவர். அப்பகுதியானது சமூக பண் பாட்டுரீதியில் ஓரளவு ஒரே இனம் அல்லது வகையைச் சேர்ந்த வர்களை உடையதாக இருக்கும். அப்பகுதியனாது நிலச்சூழல்சார் சக்திகளால் உருவாக்கப்படுவதாகக் கருதப்படுகிறது. அதாவது ஒரே விதமான மக்கள் ஒரேவிதமான பகுதிக்குத் தள்ளப்படுகிறார்கள் என்பது.

Natural Selection
இயற்கைத்தேர்வு

இயற்கைத்தேர்வு என்பது ஒரு நீண்டகால நிகழ்வாகும். ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் வாழும் ஒவ்வோர் உயிரினமும் இயற்கையின் தேர்வுக்கு உட்படுகிறது. தான் சார்ந்திருக்கும் சூழ்நிலைக்கு ஏற்றவாறு தக்கவைத்துக்கொள்ளும் உயிரினங்களை இயற்கையானது தேர்வுசெய்துகொள்கிறது, பிறவற்றைக் கழித்துவிடுகிறது. இதனால் உயிரினங்கள் வாழ்க்கைப் போ ராட்டத்துக்கு ஒவ்வாத பண் புகளைக் கழித்துவிட்டு மிகவும் இணக்கமுற்ற பண்புகளை மென் மேலும் வளர்த்துக்கொள் கின்றது.

Negative Eugenics
எதிர்மறை இனமேம்பாட்டியல்

எதிர்மறை இனமேம்பாட்டியல் மனித மரபணுப் பொதுச்சேர்மத் திலிருந்து விரும்பத்தகாத பண்புகளை ஏற்படுத்தும் மரபணுக்களைத் தடுத்து குறைக்க வழிவகுக்கிறது.

Negotiated Order
இடர்நீக்கு முறைமை

சமூகவியல் நிகழ்வுகள் குறிப்பாக அமைப்பாண்மைசார் ஒழுங்குகள் மக்களிடையே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற செயலெதிர் செயல் நடைமுறைகளிலிருந்து தோன்றுகிறது. என்ற கருத்து. செயலெதிர் செயல் நடைமுறை சமூகச் செயல்பாட்டு எல்லைகளில் தொடர்ந்து இடர்நீக்குதலில் ஈடுபடுகிறது. சமூக ஒழுங்குகளின் உறுதியின்மையையும் நெகிழ்ச்சித் தன்மையையும் இடர்நீக்குமுறைமை வலியுறுத்துகிறது.

Negativism
மறுப்புவாதம்

ஒரு சமூகச்சூழ்நிலையில் காணப்படுகின்ற ஒத்துழையாமை

மற்றும் நிலையற்ற மனப்பான்மை. அந்நிலையில் ஆணையுரிமை அல்லது மேலாதிக்க விதிமுறைகள் மற்றும் எதிர்பார்ப்புகள் இணக்கத்துக்கு அழைக்கப்படும் அல்லது செயல்பட இயலாதிருக்கும்.

Neighbourhood
சுற்றுவட்டாரம்

இக்கருத்துரு இயற்பொருள்சார் நிலையிலும் சமூகரீதியிலும் வரையறுக்கப்படும். இயற்பொருள்சார் நிலை ஒரு நகர்ப்புறத்தின் ஒரு பகுதி சாலைகள், இருப்புப்பாதைகள், ஆறுகள், கால்வாய்கள் மற்றும் திறந்தவெளி போன்ற எல்லைகளால் தெளிவுபடுத்தப்பட்டிருப்பதைக் குறிக்கிறது. மேலும் அப்பகுதியின் வீடுகளும் ஒத்த தன்மை உடையவைகளாக இருக்கும். பெரும்பாலும் ஒரு வணிகமையம் அதன் வட்டார நிறுவனங்களான ஆலயங்கள் மற்றும் கிளை நூலகங்கள் ஆகியவை சுற்றுவட்டாரத்தில் மையப்பகுதிகளாக இருக்கும். சமூகரீதியில் ஒரு சுற்றுவட்டாரமானது ஒத்த தன்மையுடைய குடியிருப்புகள், குறிப்பாக ஒத்த சமூகவகுப்புகள் அல்லது இனங்கள் ஆகிய குணாதிசயங்களை உடையதாக இருக்கும்.

Neolithic Age
புதிய கற்காலம்

மனித வரலாற்றில் பண்பாடு மற்றும் பொருளாதார வளர்ச்சியின் ஒரு காலகட்டத்தைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. இக்காலகட்டம் செதுக்கப்பட்ட கல் உபகரணங்களின் வளர்ச்சி, விலங்குகள் மற்றும் தாவரங்களுக்கு மனைப் பண்பூட்டுதல் மற்றும் நெசவு மண்பாண்டம் செய்தல் ஆகியவற்றின் வளர்ச்சி குறித்த பண்புகளை உடையது. இக்காலகட்டத்தில் உலோகங்களாலான உபகர்ணங்கள் பயன்படுத்தப்படவில்லை. உலகின் பல பகுதிகளிலும் புதிய கற்காலம் வெவ்வேறு காலகட்டத்தில் தோன்றியுள்ளது.

Neolocal
புதுக்குடித்தனம்

தந்தையின் இருப்பிடத்திலோ அல்லது தாயின் இருப்பிடத்திலோ இல்லாமல் கணவன், மனைவி இருவரும் தனியிடத்தில் புதிதாகக் குடும்பம் நடத்துதல் புதுக்குடித்தனம் ஆகும்.

Neolocal Residence
புதுக்குடித்தன உறைவிடம்

இது ஒரு சமூக வழக்கத்தைக் குறிக்கிறது. திருமணத் தம்பதிகள் தாங்கள் தோன்றிய குடும்பத்தோடு இணைந்து வாழாமல் புதிதாக அல்லது தனியாகக் குடித்தனம் அமைத்துக்கொள்ளும் உறைவிடம்.

Neopositivism
புதுநேர்க்காட்சிவாதம்

சமூகவியலில் இது ஒரு முறையியல்சார் அணுகுமுறையைக் குறிக்கிறது. இது சமூக ஆய்வு இயற்பொருள்சார் அறிவியல் நடைமுறைகளின் அடிப்படையில் அமையவேண்டும் என்றும்

வெளிப்படையானநடக்கைமுறைகள் குறித்த ஆய்வை வலியுறுத்துவதாகவும், கணிதவியல் உத்திகளைப் பயன்படுத்தவேண்டுமென்றும் குறிப்பிடுகிறது

Nepotilocal Family
உடன்பிறந்தாள்மகனகக்குடும்பம்

திருமணத்துக்குப்பின் மணமக்கள் உறைவிடத்தை ஏற்படுத்திக்கொள்ள உடன்பிறந்தாள் மகன் அல்லது கீழிறங்கு தலைமுறையின் தாய்வழி ஆண் உறவினர் இடம்கொடுத்தால் அது உடன்பிறந்தாள் மகனகக் குடும்பமாகும்.

Network
வலையமைவு

ஒவ்வொரு தனிநபரும் ஈடுபடுகின்ற தனிப்பட்ட உறவுகளின் ஒழுங்கமைவை விளக்குவதற்குக் குடும்பம் மற்றும் நகர்ப்புறச் சமூகவியலில் வலையமைவு கருத்துப்பாங்கு பயன்படுத்தப்பட்டது. கணவன் மனைவிகளுக்கிடையிலான உறவு இருவரும் ஈடுபடுகின்ற ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்த உறவினர்களின் வலையமைவைச் சார்ந்துள்ளது. இத்தகைய ஆய்வுகள் ஒரு பண்புக்குழுவுக்குள் காணப்படும் வலையமைவு உறவுகளை வரைபடமாக்க முயற்சிக்கின்றன. பெரும்பாலும் கணிதவியல் அடிப்படையில் சமூகஅமைப்பு மற்றும் தகவல்தொடர்புப் பாங்கத்தினை வெளிக்கொணரும் நோக்கத்தோடு முயற்சிக்கின்றனர்.

Network of Relations
உறவு வலையமைவு

ஒவ்வொரு தனிநபரும் ஒரேவேளையில் பல உறவு நிலைகளை உடையவராகக் காணப்படுகிறார். காரணம் அவர் வெவ்வேறு நபர்களுக்கு வெவ்வேறு உறவுநிலைகளில் காணப்படுகிறார். சான்றாக ஒருவர் தன் தகப்பனுக்கு மகன் என்ற நிலையிலும் மாமாவுக்கு மருமகன் என்ற நிலையிலும் உடன்பிறந்தவர்களுக்குச் சகோதரன் என்ற நிலையிலும் காணப்படுகிறார். இவ்வாறு ஒருவரின் பலதரப்பட்ட உறவுநிலைகள் உறவின் வலையமைவாகும்.

New Middle Class
புது நடுத்தர வகுப்பு

சமகாலச் சமுதாயத்தில் தோன்றியுள்ள பெருமளவிலான புது நடுத்தர வகுப்பைக் குறிக்கிறது. இதன் குணாதிசயங்கள் பழைய நடுத்தர வகுப்பிலிருந்து வேறுபட்டுக் காணப்படும். புது நடுத்தர வகுப்பு பெரிய அளவிலான சமூக மாறுதலின் விளைவாக உள்ளது.

New working Class
புதுப் பணியாளர் வகுப்பு

1960 அளவில் உற்பத்தி தொழில்நுட்ப வளர்ச்சி பணியாளர் வகுப்புக்குள் ஒரு புதிய பிரிவை ஏற்படுத்தியது என்ற கருத்தைப் பிரெஞ்சுசமூகவியலார் தெரிவித்தனர். புதுப் பணியாளர் வகுப்பு முற்போக்கான உயர் தொழில்நுட்ப ஆலைகளில் வேலைபார்ப்பவர்களால்

ஆனது. உயர் தொழில்நுட்பத்துக்கு நன்கு கற்ற பணியாளர்கள் தேவை என்பது உறுதியாகக் கூறப் பட்டது. இத்தகைய மாறுதல்கள் பெரும் தொழில்மயம் மற்றும் சமூகப் போராட்டத் தன்மை யையும் முன்னேறச் செய்தது.

Nomads
நாடோடிகள்

நிலையாக ஒரு குறிப்பிட்ட இடத்தில் வாழாமல் பருவகாலத் திற்கேற்பத் தொடர்ச்சியாக இடம்விட்டு இடம்சென்று வாழும் மக்களே நாடோடிகளாவர். இவர்கள் இடம்பெயர்ந்து வாழ்வது ஒரு முறைப்படுத்தப்பட்ட சுழற்சியாக இருக்கும். இடப்பெயர்ச்சி என்பது வாழுமிடத்தை மாற்றும்போது ஒரு முறையான சுழற்சிமுறையைக் கொண்டிராது. நாடோடி என்னும் சொல் வேட்டையாடி உணவுசேக ரிக்கும் நாடோடிகளையும், ஆயர் வாழ்க்கையை மேற்கொண்டுள்ள நாடோடிகளையும், வீட்டுப்பொருட் களைச் செப்பனிடுதலையும், வாணிகம் செய்தலையும் மேற்கொண்டுள்ள நாடோடிகளையும் குறிக்கும்.

Nonconformity
இசைவின்மை

ஒரு குறிப்பிட்ட சூழமைவில் சமூக எதிர்பார்ப்புகளிலிருந்து இரு வேறுபட்டுச் செல்வதாக உணரப்படுகின்ற நடக்கைமுறை. சிலவேளைகளில் படைக்கும் திறனுள்ள இசைவின்மை பயனளிப்பதாக இருக்கலாம். எவ்வாறாயினும் வழக்கமாக எதிர்பார்க்கப்படுகின்ற பாங்கிலான நடக்கைமுறைக்கு உடன்படத் தவறினால் அதற்கு எதிர்மறையான ஆதரவளிக்கப்படுகிறது. இசைவின்மை ஒரு குழுவில் கட்டளைச்சட்டங்களைமீறும்செயலாக உள்ளது. ஆனால் வேறு குழுக்களின் கட்டளைச் சட்டங்களோடு ஒத்துப்போவதாக இருக்கலாம்.

Nondirective Interview
கட்டளைப்பாங்கற்ற நேர்காணல்

நெறிப்படுத்தப்படாத அல்லது வடிவமைக்கப்படாத நேர்காணல். இதில் தன்விருப்பான உரையாடலில் ஈடுபடுவதற்காகத் தகவலாளிக்கு அதிக அளவு தன்னுரிமை அளிக் கப்படுகிறது. அதாவது தகவ லாளி நினைக்கின்ற மூலக்கூறுகளை விவாதிப்பது முடிவைத் தீர் மானிக்க முக்கியமானதாக உள்ளது. பேட்டி காண்பவர் சில தூண்டுதல் கருத்துக்களை அளித்துவிட்டு மிகக் குறைவான கேள்விகளைக் கேட்பார்.

Non-Fraternal Polyandry
சகோதரரல்லா பலகணவர் மணம்

ஒன்றுக்கும் மேற்பட்ட ஆண்கள் சேர்ந்து ஒரு பெண்ணை மணந்து கொள்ளும்போது அவர்கள் சகோதரர்களாக இல்லாமல் வெவ்வேறு குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தால் அத்திருமணம் சகோதரரல்லா பலகணவர் மணம் எனப்படும்.

Non-human Primates
மனிதனல்லா உயர்பாலூட்டிகள்

உயர்பாலூட்டி வரிசையில்

மனிதனைத் தவிர ஏனைய குரங்கினங்கள் அனைத்தும் மனிதரல்லா உயர்பாலூட்டிகள் என அழைக்கப்பெறும். அவற்றுள் சில சிறப்பினங்கள் காலத்தால் அற்றுப்போயின; சில இன்றும் வாழ்ந்துவருகின்றன.

Non Literate
எழுத்தறிவின்மை

எழுத்துவடிவிலான மொழியின்மை, எழுத்தறிவற்றபண்பாட்டுக்கு எழுத்து வடிவிலான மொழியிருப்பதில்லை. சிலவேளைகளில் இச்சொல் எழுத்தறிவுக்கு முந்தைய நிலை என்ற பொருளிலும் பயன்படுத்தப்படுகிறது. எழுத்தறிவற்ற நபர்களைக் குறிக்கவும் இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

Non-material Culture
பொருள்சாராப் பண்பாடு

பொருள்சாராப் பண்பாட்டுக் கூறுகளாகத் தலைவாருதல். நண்பர்கள் சந்திக்கும்போது கைகுலுக்குதல், அன்பை வெளிப்படுத்துவதற்காக முத்தம் கொடுத்தல், கொடியேற்றியவுடன் வணக்கம் செலுத்துதல் போன்றவற்றைக் கூறலாம். இவற்றுள் பல அனைத்துப் பண் பாட்டிற்கும் பொதுவானவையாக இருக்கும். சில அந்தந்தப் பண் பாட்டிற்கு மட்டும் உரியனவாக இருக்கும்.

Non-participant Observation
தனித்திருந்து ஆழ்ந்து நோக்குதல்

ஆய்வாளர் தனித்திருந்து சற்றுதூரத்தில் நின்று ஆழ்ந்துநோக்குதல். இம்முறையில் ஆய்வாளர் ஆய்வுசெய்யும் குழுவோடு நெருங்கிப் பழகாமல் அல்லது தான் ஆய்வுசெய்யும் நிகழ்ச்சிகளில் பங்கேற்காமல் தள்ளிநின்று ஆழ்ந்து நோக்குவார். அவர் ஆய்வாளர் என்பதும் அவர் நிகழ்ச்சிகளைக் கவனித்து வருகிறார் என்பதும் பிறருக்குத் தெரியாது.

Non-response
மறுமொழியின்மை

மாதிரிக்கூறுகளைத் தேர்ந்தெடுப்பது ஒரு சார்பாக அமைவது மக்களில் சில பிரிவினர் ஒத்துழைக்க மறுப்பதனால் ஏற்படலாம். இதனால் தகவலாளிகளின் இறுதியான மாதிரிக்கூறுகள் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்ற ஒட்டுமொத்த மக்களையும் சுட்டிக்காட்டுவதில்லை. இதனை மறுமொழியின்மை என்பர்.

Non-sororal polygyny
சகோதரிகளல்லா பலமனைவி மணம்

ஒன்றுக்கும் மேற்பட்ட பெண்களை மணக்கும்பொழுது மனைவிகள் அனைவரும் சகோதரிகளாக இல்லாமல் வெவ்வேறு குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தால் அது சகோதரிகளல்லா பலமனைவி மணம் எனப்படும்.

Normative Components
நெறியியல்கூறுகள்

மக்களின் வாழ்வை நெறிப்படுத்தும் கூறுகளை நெறியியல்கூறுகள் என்பர். சமுதாயத்தில் ஒருவர் எவ்வாறு வாழவேண்டும், எவற்றைச் செய்யக் கூடாது, ஏன் செய்யக்கூடாது போன்ற விதிமுறைகளோடு

தொடர்புடைய கூறுகளே நெறியியல்கூறுகளாகும்.

Normative Integration
நெறியியல் ஒருமைப்பாடு

ஒரு குழுவின் கொள்கை மாறாத பாங்கிலான சமூக நெறிமுறைகளின் இடைத்தொடர்புகளைக் குறிக்கிறது. ஒரு சமூகக் குழுவுக்குள்ளான நெறியியல் ஒருமைப்பாடானது உறுப்பினர்களின் மதிப்பீடுகளின் செயல்பாடாக அமைகிறது. இதனால் ஒரு குழுவின் உறுப்பினர் நிலை காலப்போக்கில் மாறும்போது குழுவின் முறையான நெறிமுறைகள் புது உறுப்பினர்களால் ஒருமைப்பாட்டு நெறிமுறைகளாக நோக்கப்படுவதில்லை. அவர்கள் நீண்டநாள் உறுப்பினர்களைப் போன்று அதே மதிப்பீடுகளைச் சரியாகப் பகர்ந்து கொள்வதில்லை.

Normative Investigation
நெறியியல் ஆய்வு

மெய்ப்பிக்கப்பட்ட ஆய்வு முடிவுகளையெல்லாம் மேலும் உறுதிப்படுத்துவதற்காகச் செய்யப்படும் ஆய்வு. இம்முறை அறிவியல் ஆய்வு வழிமுறையிலிருந்து சற்று மாறுபட்டது. பொதுவாக ஆய்வு முடிவுகளை ஆய்வுவினாக்களாக மாற்றி அதை உறுதி செய்வதற்காக செய்திக்கூறுகள் சேகரிக்கப்படும். சான்றாக வகுப்பு வாதமே சமுதயாத்தில் உள்ள எல்லாத் தீமைகளுக்கும் காரணம் என்ற கருத்தை நிருபிக்க அது தொடர்பான செய்திக்கூறுகளை மட்டும் சேகரிப்பது.

Normative Pattern
நெறியியல் பாங்கம்

ஒரு குழு உறுப்பினர்களால் உறுதியாகப் பற்றிக்கொள்ளப்பட்ட இடைத்தொடர்புடைய சமூகநெறி முறைகளின் இணை.

Normlessness
நெறிமுறையின்மை

ஒழுங்கமைக்கப்பட்ட முறையான சமூகநெறிமுறைகள் அல்லது மதிப்பீடுகள் இல்லாத ஒரு நிலை. இந்நிலை தனிநபர் ஒரு சூழ்நிலையில் தன் விருப்பப்படியான செயலைத் தேர்ந்தெடுக்க அதிகாரம் அளிக்கிறது.

Norms
நெறிமுறைகள்

மக்களின் நடத்தைமுறைகளையும், செயற்பாடுகளையும் முறைப்படுத்தக்கூடிய விதிகளே நெறிமுறைகள் எனப்படும். இவை விழுமியங்களிலிருந்து மாறுபட்டவை. விழுமியங்கள் பெரும்பாலும் கருத்தியல் வடிவம் பெற்றவை. இவற்றைத்தான் செய்யவேண்டும். இவற்றைச் செய்யக்கூடாது என்று சமுதாயத்தில் ஒப்புதலளிக்கப்பட்டவை நெறிமுறைகள். இளையவர்கள் பெரியவர்களிடம் மரியாதையையும், பெரியவர்கள் இளைவர்களிடம் அன்பும் காட்ட வேண்டும் என்ற முறையை இதற்குச் சான்றாகக் கூறலாம்.

Norms Evasion
நெறிமுறை தவிர்ப்பு

சமுதாயத்தால் தடைசெய்யப்பட்ட ஆனால் பெரும்பான்மையோரால்

செய்யத்தூண்டப்படும் விதிமுறைகள் அல்லது கட்டுப்பாடுகள். இவ்விதி முறைகளையும் கட்டுப்பாடுகளையும் பெரும்பான்மையோர் வெளிப்படையாக எதிர்ப்பதில்லை. ஆனால் பிறருக்குத் தெரியாவண்ணம் தங்கள் ஆசைகளை நிறைவேற்றிக்கொள்ள இவ்விதி முறைகளை தவிர்க்கின்றனர். ஒரு குறிப்பிட்ட விதிமுறையை அடிக்கடி தவிர்ப்பதை விதிமுறை தவிர்ப்பு என்று கருதுவதற்கில்லை. காரணம் ஒரு குழுவின் அங்கத்தினர்களால் நெறிமுறைகளைக் தவிர்ப்பது ஆதரிக்கப்பட்டால்தான் நெறிமுறைதவிர்ப்பு என்று கருதப்படலாம். சான்றாகக் குற்றவாளிகளுக்கு உதவுவதன் மூலம் பயன்பெறுதல், கள்ளக்கடத்தல் பொருட்களை வாங்கி வியாபாரம் செய்தல் போன்ற செயல்களைக் கூறலாம்.

Nuclear Family
தனிக்குடும்பம்

தனிக்குடும்பம் கணவன், மனைவி மற்றும் அவர்களின் குழந்தைகள் உள்ள குடும்பம். இக்குடும்ப அமைப்பு உறவுமுறை அமைப்பின் ஓர் அடிப்படையான அங்கமாகும். தற்காலச்சமுதாயத்தில் தனிக்குடும்பங்கள் பெரும்பான்மையானவையாகத் திகழ்கின்றன.

Null Hypothesis
பயனில் கருதுகோள்

ஆராயப்படுகின்ற மாறிகளுக்கிடையே தொடர்பின்மையை அல்லது கொடுக்கப்பட்ட ஒரு மாறியின் குறிப்பான நோக்கில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குழுக்களிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடு இல்லை என்று குறிப்பிடுகின்ற கருதுகோள். இக்கருதுகோள் பெரும்பாலும் சோதனைநிலையில் பயன்படுத்தப்படுகிறது. வழக்கமாகப் புள்ளியியல் குறிப்புநிலையில் கைவிடப்படுகிறது. அவ்வாறு கைவிடப்படும்போது ஆய்வாளர் மாற்றுநிலைக் கருதுகோளுக்குத் திரும்புகிறார்.

Nuptial Stage
மணநிலை

பெரும்பாலான சமுதாயங்களில் பெற்றோர் முன்நின்று நடத்தும் திருமணங்களே மிகுதி. இந்நிலையில் திருமணம் முடிந்து மணமக்கள் இல்லற வாழ்வில் ஈடுபடும் பொழுதுதான் குடும்பத்தின் தொடக்கம் நிகழ்கிறது. இதனை மணநிலை என்பர். இந்நிலையில் தான் அவர்கள் குடும்பத்தின் அனைத்துப் பொறுப்புகளையும் ஏற்க முற்படுகின்றனர்.

Nutritional Anthropology
உணவியல்சார் மானிடவியல்

மக்கள் அவரவர் பண்பாட்டால் அறுதியிடப்பட்ட உணவுப்பொருட்களை மட்டுமே சுற்றுச்சூழலிலிருந்து பெறுகின்றனர். எவற்றை உண்பது, எவற்றைத் தவிர்ப்பது, எவை என்னென்ன ஊட்டச்சத்தினைக் கொண்டுள்ளன போன்ற அறிவு அவரவர் பண்பாட்டோடு சார்புடையது. இவைபற்றி ஆராய்வது இப்பிரிவின் முக்கிய நோக்கமாகும்.

O

Oath
உறுதிமொழிகூறுதல்

உறுதிமொழிகூறுதல் என்பது பகைவரால் பாதிப்புக்குள்ளானவர் நடந்த நிகழ்ச்சிகளை அவர் வழிபடும் தெய்வம் அறியும்படி உண்மையைக் கூறி தெய்வப் பழிமொழி கூறுவதாகும். உறுதி மொழிகூறும் முறை பண்பாட்டுக்குப் பண்பாடு மாறுபடுவதுண்டு. உறுதிமொழி எடுத்துக்கொள்வதையும் இச்சொல் குறிக்கிறது.

Objectivism
மெய்மை நோக்கு

புறப்பொருள் அறிவு உண்மையில் புறப்பொருள்களின் உளதாம் தன்மை உடையது என்ற தத்துவரீதி யிலான பார்வையைக் குறிக்கிறது. அதாவது புறப்பொருள் மெய்மை யையே வற்புறுத்தும் கருத்துப்பாங்கு.

Observation
ஆழ்ந்துநோக்குதல்

ஆழ்ந்துநோக்கும் முறை சமூகவியல் ஆய்வுமுறைகளில் மிக முக்கியமானது. களஆய்வில் மனித நடத்தைகளை அறிவதில் இது மிகவும் பயனுள்ளதாக அமைகிறது. ஆய்வுப்பொருளைக் குறித்துப் பல புதிய கருத்துக்களைத் தரவல்லது. ஆழ்ந்து நோக்கு முறையானது ஒரு நிகழ்ச்சியைப் பார்ப்பது மட்டுல்லாமல் பார்த்ததைப் பிறரோடு உரியமுறையில் விவாதித்துத் தெளிவுப்படுத்தப் படுவதாகும். எனவே, இம்முறையைக் கையாளுபவர் தான் ஆய்வுசெய்யும் சமூகத்தினரோடு ஒன்றிப் பழகி அவர்களால் விரும்பத்தக்கவராக இருத்தல் வேண்டும். இம்முறையைச் சிறந்த ஒரு களப்பணியாளரே நன்கு கையாள இயலும்.

Occupation
தொழில்

ஒரு பொருளாதாரப் பங்கு அல்லதுகடமையைச்சுற்றியமைந்துள்ள செயல்பாட்டுத் தொகுதி. தொழில் என்பது ஒரு சமூகப் பங்கு அல்லது கடமையாகும். இது ஒரு சமுதயாத்தின் பொதுவான பணிப் பாகுபாட்டினால்நிர்ணயிக்கப்படுகிறது. வழக்கமாக வாழ்க்கையை நடத்துவதற்கான ஒரு வியாபாரம் அல்லது வாழ்க்கைத்தொழிலோடு தொடர்புடையதாக இருக்கும்.

Occupational Categories
தொழில்வாரித் தரப்பிரிவுகள்

முக்கிய தொழில்களின் வகைப் படுத்தலைக் குறிக்கிறது. சமூகவியல் ஆய்வுகளுக்காகப் பல வேறுபட்ட தொழில்வாரிப் பிரிவு தொகுதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. பரவலாகப் பயன்படுத்தப்படுகின்ற தொகுதிப் பிரிவுகள் வியாபாரச் செயலாட் சியர்கள், வாழ்க்கைத்தொழிலாளர், சிறு வியாபாரிகள், உடலுழைப்பற்ற தொழிலாளர், தனித்திறம் கொண்ட உடலுழைப்புப்பணியாளர்,இடைப்பட்ட திறம்படைத்த உடலுழைப்புப் பணியாளர், தனித்திறமற்ற உடலுழைப்புப் பணியாளர் ஆகிய பிரிவுகளாகும்.

Occupational Culture
தொழில்சார் பண்பாடு

ஓர் உள் பண்பாட்டுத் தனிக்கூறுத் தொகுதி. அவை பாரம்பரியமாக ஒரு குறிப்பிட்ட தொழிலோடு தொடர்புபடுத்தப்பட்டுப் புதிதாக அத்தொழிலில் நுழைவோருக்கும் அனுப்பப்படுகிறது. தொழில்சார் பண்பாட்டில் நம்பிக்கைகள், மனப்பான்மைகள், சடங்குகள், தொழில்சார் மொழி மற்றும் ஏனைய ஆக்கக்கூறுகள் அடங்கும்.

Occupational Distance
தொழில்சார் தூரம்

தொழில்வகைப் பிரிவுகளுக் கிடையிலான தூரத்தைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. தொழில்கள் அந்தஸ்து படிநிலையில் வகைப்படுத்தப்படும்பொழுது தொழில்சார்தூரம் ஏற்படுகிறது. தொழில்சார்தூர கருத்துரு சமூக அடுக்கமைவு ஆய்வு மற்றும் செங்குத்துக்கோடு நிலையிலான சமூக நிலைபெயர்வு ஆய்விலும் பயனுள்ளதாக உள்ளது.

Occupational Group
தொழில்சார் குழு

ஒரு குழு அதன் உறுப்பினர்களின் பொதுவான அல்லது ஒரே தன்மையிலான தொழிலின் அடிப்படையில் ஒழுங்கமைக்கப் பட்டிருப்பதைக் குறிக்கிறது. தொழில்சார் பொதுநலன், தொழில்சார் பற்றுறுதி உணர்வு, தொழிலில் பிறரோடுள்ள ஒற்றுமை, குறிப்பிட்ட சில பொதுவான குறிக்கோள்கள் மற்றும் மதிப்பீடுகள், தலைமை மற்றும் குழு ஒழுங்கு முறை ஆகியவை குறித்த விழிப் புணர்வின் மூலம் ஒருங்கிணைகிறது.

Occupational Hierarchy
தொழில்சார் படிநிலை

தன்மானம், வருவாய் அல்லது ஏனைய தேர்வுமுறைகளின் அடிப்படையில் தொழில்களை அணிவரிசைப்படுத்துவதைக்குறிக்கிறது. பொதுவாகத் தொழில்கள் தரப் பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டு அப்பிரிவுகள் படிநிலையில் அணிவரிசைப்படுத்தப்படுகின்றன. அத்தகைய தொழில்சார் படிநிலைகள் சமூக வகுப்பமைப்பு மற்றும் சமூகநிலைபெயர்வு போன்ற ஆய்வுகளில்பயன்படுத்தப்படுகின்றன.

Occupational Propinquity
தொழில் ஒப்புமை

ஒரே இடத்தில் வேலை பார்ப்பவர்கள் மத்தியில் ஓர் ஆணும் பெண்ணும் திருமணம் செய்துகொள்ளும் மனப்பாங்கைக் குறிக்கிறது. இவர்கள் அடிக்கடி சந்திப்பது அத்தகைய தூண்டுதலுக்குக் காரணமாக அமைகிறது. கல்வி, அந்தஸ்து போன்ற வேறுபல சமூகக் காரணிகளும் அத்தகைய மனப்பாங்கிற்குக் காரணங்களாக உள்ளன. சமூகநிலையில் மேல்மட் டத்தில் இருப்பவர்களிடையே இத்தகைய மனப்பாங்கு அதிகமாக உள்ளது

Occupational Populations
தொழில்வாரி மக்கள் தொகை

ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் ஒரு குறிப்பிட்ட தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களின் தொகை.

இத் தொழில்வாரி மக்கள்தொகை வயது, பால், இனம் ஆகிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுக் கணக்கிடப்படும்பொழுது சமூக அமைப்பில் பல வேறுபாடுகளைக் காணலாம்.

Occupational Status
தொழில் அந்தஸ்து

தொழில் அந்தஸ்து சமுதாயத்தில் ஒரு தொழிலின் முக்கியத்துவத்தைப் பொறுத்து நிர்ணயிக்கப்படுகிறது. ஒரு தொழிலின் மதிப்பு சமூக மற்றும் பொருளாதார அளவீடுகளைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது. பொதுவாக வருமானம், பொறுப்பு மற்றும் அதிகாரத்தைப் பொறுத்து தொழில் அந்தஸ்து நிர்ணயிக்கப்படுகிறது. இது நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. காலப்போக்கில் ஒரு தொழிலின் மதிப்பு மாறுவதும் உண்டு.

Occupational Theory
தொழிற்கோட்பாடு

மக்கள் அவரவர் செய்யும் தொழில்களில் காணப்பட்ட வேறுபாட்டினால் சாதிகள் ஏற்பட்டன. அத்தொழில் வேறுபாடுகளின் தன்மை 'தூய்மை' 'தீட்டு' ஆகிய கருத்தாக்கங்களால் மதிப்பிடப்பட்டது. எனவே சாதி அமைப்பையும் அதன் செயற்பாட்டையும் அறுதியிடும் காரணியாகத் தொழில்கள் அமைந்தன. இதுவே தொழிற்கோட்பாடு ஆகும்.

Oedipus Complex
அடங்கிய உள்ளுணர்ச்சி

உள ஆய்வியலின்படி எதிர்பால ராகிய பெற்றோர் வகையில் பிள்ளைகளுக்குள் உட்செறிவாக இருப்பதாகக் கருதப்படும் அடங்கிய உள்ளுணர்ச்சிக்கூறு. பொதுவாக இச்சொல் ஒரு மகனுக்குத் தன் தாயோடுள்ள உறுதியான பற்றாசை மற்றும் தன் தாயின் பாசத்திற்காகத் தகப்பனோடுள்ள பகைமை உணர்வையும் குறிப்பதாக உள்ளது.

Official Statistics
அதிகாரபூர்வப் புள்ளிவிவரங்கள்

அரசு அல்லது ஏனைய நிறுவனங்கள் இயல்பாக செயல்படும்போது வெளியிடப்படும் அதிகாரப்பூர்வமான புள்ளிவிவரங்கள். சான்றாக மக்கள்தொகை தொடர்பான விவரங்கள், சுகாதார நிலைத் தொடர்பான புள்ளிவிரங்கள் ஆகியவற்றைக் கூறலாம். அதிகாரப்பூர்வ புள்ளிவிவரங்கள் எப்பொழுதும் சரியானவையாக இருக்க வேண்டுமென்பதில்லை.

Old Middle Class
பழைய நடுத்தர வகுப்பு

ஆலைமய சமுதாயத்திற்கு முந்தைய பழைய நடுத்தர வகுப்பு. இது முதல் நிலையாகச் சிறிய வியாபாரிகள், விவசாயிகள் மற்றும் மருத்துவர், வழக்கறிஞர் போன்ற தொழில்சார் பணிபுரிபவர்கள் ஆகியோரால் ஆனது. அவர்களின் அந்தஸ்து மற்றும் அதிகாரம் தேசியநிலையில் அல்லாமல் முதல்நிலையாக உள்ளூர் சார்ந்ததாக இருக்கும்.

Oligarchy
சிலவராட்சி

ஒருவித அரசைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. இவ்வரசில் ஒரு சிறு குழு ஆட்சி செய்வதாகவும் அது ஒரு பெரிய சமுதாயத்தின்மீது உயர் அதிகாரம் உடையதாகவும் காணப்படும்.

Omaha System
ஒமகா முறை

பேசுநரின் தகப்பனின் சகோதரர்களின் பிள்ளைகளும், தாயின் சகோதரிகளின் பிள்ளைகளும் அவருடையசகோதர சகோதரிகளோடு ஒரு தனிப்பிரிவில் சேர்க்கப்படுகிறார்கள். தாயின் சகோதரனின் பிள்ளைகள், தாய், தாயின் சகோதரி, தாயின் சகோதரன் ஆகியயோர் வேறுபட்ட பிரிவினராக்கப்பட்டு என் தாயின் வம்சாவழியைச் சேர்ந்த ஆண்/பெண் எனும் பொருளைத் தரும் சொல்லால் அழைக்கின்றனர். குரோ முறையில் பண்பாட்டு அடிப்படையில் தகப்பனின் வம்சாவழி முக்கியத்துவம் வாய்ந் ததாக அமைவது போன்று ஒமகா முறையில் தாயின் வம்சாவழி முக்கியத்துவம் வாய்ந்த பிரிவாக அமைகிறது. பேசுநர் அவருடைய தாயின் வம்சாவழி அங்கத்தினர் களுக்கு ஒரு தனி உறவில் காணப்படுகிறார். இது அவருடைய பார்வையில் தலைமுறை வேறு பாடில்லாமல் எல்லோரும் சமம் என்ற எண்ணத்தை உருவாக்குகிறது. இம்முறையின் இறுதிப் பிரிவு பேசுநரின் தகப்பனின் சகோதரியின் பிள்ளைகளையும் அவருடைய சகோதரியின் பிள்ளைகளையும் ஒன்றாக இணைக்கிறது. இவ்வாறு இந்தமுறையில் மூன்று முக்கிய உறவுமுறைப் பிரிவுகள் ஏற்படுகின்றன.

Omnilateral
பல்வழி மரபு

உறவுமுறைத் தொடர்பு எல்லா வழிகளிலும் கணக்கிடப்படு மானால் அது பல்வழி மரபு ஆகும். இது தாய், தந்தை, கணவன், மனைவி போன்ற எல்லா வழிகளிலும் கணக்கிடப் படுவதைக் குறிக்கிறது.

Ontogeny
தனிஉயிர் வரலாறு

தொகுதிவழி வரலாற்றுக்கு நேர்மாறானது தனி உயிர் வரலாறு. இது ஒரு தனிப்பட்ட உயிரின் படிமலர்ச்சி வரலாற்றைக் குறிக்கிறது. ஆகவே இது தனி உயிர் வரலாறு எனப்படும்.

Open-class Ideology
அமைப்புச்சார்பற்ற வகுப்புக் கருத்தியல்

கடின உழைப்பு மற்றும் திறமையால் சமுதாயத்தில் எந்த ஒரு மனிதனும் எந்த உயர்ந்த பதவி அல்லது சமூக வகுப்புக்கும் உயரலாம் என்ற கருத்தை மையமாகக் கொண்ட ஒரு நம்பிக்கை முறைமை. அதாவது ஒருவர் தோன்றிய வகுப்பு, தற்போதைய நிலை அல்லது அந்தஸ்து ஆகியவற்றைப் பொருட்படுத்தாது சமுதாயத்தில் எந்த நிலைக்கும் உயரலாம் என்ற கருத்துடையது.

Open -class System
அமைப்புச் சார்பற்ற வகுப்பு ஒழுங்கு

ஒரு சமூக வகுப்பு ஒழுங்கைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப் படுகிறது. இதில் செங்குத்துக் கோட்டு நிலையில் சமூகநிலை பெயர்வு சுதந்திரம் உள்ளது. அதாவது ஒரு தனிநபர் அவருடைய சமூக வகுப்புநிலையை எப்போதும் கூட்டவோ குறைக்கவோ செய்யலாம். அத்தகைய மேல்நோக்கிய அல்லது கீழ்நோக்கிய நிலைப்பெயர்வின்மீது சட்டப்படியான அல்லது பாரம்பரிய வரையறைகள் இருப்பதில்லை.

Open-ended Question
அமைப்புச் சார்பற்ற விடை வினா

பேட்டி காண்பதில் அல்லது வினாநிரலில் பயன்படுத்தப்படுகின்ற வினாமாதிரி. இதில் தகவலாளியின் பதில் முன்னரே வயரையறுக்கப்பட்ட வகைப்பிரிவுகளுக்கேற்ப வரையறுக் கப்படுவதில்லை. அவருடைய விருப்பப்படி முழு பதிலையும் அளிக்க அனுமதிக்கப்படுகிறார். அமைப்புச் சார்பற்ற விடை வினா தகவல்களை பகுப்பாய்வுக்காக வகைப்படுத்துவது வெளிப்படையாக எளிதானதல்ல. ஆனால் ஆய்வாளர் புது ஆய்வுசெய்கிற விசாரணை நிலையில் இருக்கும்பொழுது அமைப்புச்சார்பற்ற விடை வினா பயனுடையதாக அமையும்.

Open Group
அமைப்புச் சார்பற்ற குழு

எவ்விதத் தடையுமின்றி விரும்பும் எவரும் அங்கத்தினரா தக்கூடிய பொதுவான குழு. சான்றாகச் சமூகசேவை மன்றத்தைக் கூறுலாம். சமூக சேவையில் ஆர்வம்கொண்ட எவரும் மன்றத்தின் விதிகளுக்குக் கட்டுப்பட்டு அங்கத் தினராகலாம்.

Open Society
அமைப்புச் சார்பற்ற சமுதாயம்

ஒருவர் வாழக்கையில் முன்னேறிச் சமூக அந்தஸ்தில் உயர்வதற்குப் பல வாய்ப்புகள் உள்ள சமுதாயம். தொழில்மயமாக்கப்பட்ட சமுதாயத்தை வாய்ப்புள்ள சமுதாயமெனக் கூறலாம்.

Operational Definition
ஆய்வளவீட்டு விளக்கம்

ஒரு பொருளை ஆய்வு அள வீட்டைக் கொண்டு அளவிடும் போது அப்பொருளுக்குத் தரும் விளக்கம். சான்றாகத் தலைவர் என்பவர் பிறரைத் தன் வசப் படுத்துபவர் என்று பொருள் கொள்ளுதல். இப்பொருள் ஆய்வு முழுவதும் ஒரே பொருளில் பயன்படுத்தப்படும்.

Operational Research
விளைவுசார் ஆய்வு

தொழிற்சாலை, அரசு. வியாபாரம் ஆகியவற்றில் எடுக்கப்படும் தீர் மானங்களின் விளைவுகளோடு தொடர்புடைய ஆய்வு.

Opinion
கருத்துரை

ஒரு குறிப்பிட்ட நிகழ்வு, பொருள் அல்லது சூழமைவு பற்றிய ஒரு முடிவுரை அல்லது

தீர்ப்பைக் குறிக்கிறது. இதில் தனிநபர் அல்லது குழுவும் அடங்கும். கருத்துரை குறிப்பிட்ட ஒரு சிக்கலோடு தொடர்புடைய மனப்பான்மை குறித்துத் தெளிவாக சுட்டிக்காட்டுவதாகும்.

Opinion Leader
கருத்துரைத் தலைவர்

ஒரு பண்புக்குழுவுக்குள் பிறருடைய கருத்தின் முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தும் தனிநபர். குழுவிலுள்ளோர் அறிவுரைக்காகவும் செய்திக்காகவும் கருத்துரைத் தலைவரை நோக்கியிருப்பர். கருத்துரைத் தலைவர் எந்த ஒரு தலைமைப் பதவியையும் வகிக்காதவராகவும் பண்புக்குழுவை ஆய்வுசெய்யும் ஆய்வாளரால் உடனடியாகத் தெரிந்துகொள்ள இயலாதவராகவும் இருப்பார். அத்தகைய தலைவர்கள் பொதுக் கருத்துக்களை உருவாக்குவதில் முக்கியத்துவம் உடையவர்களாக இருப்பார்கள்.

Opposition
எதிரீடு

சமூகச் செயலெதிர் செயல்களில் காணப்படுகின்ற ஓர் உலகளாவிய நடைமுறையைக் குறிக்கிறது. இதில் தனிநபர்கள் அல்லது குழுக்கள் சமூகவாழ்வின்மேலாதிக்கத்திற்காக அல்லது தலைமைப்பதவி கட்டுப்பாட்டிற்காக முரண்பட்ட போட்டியில் போராடுகின்றனர் பிற தனிநபர்கள் அல்லது குழுக்களின் குறிக்கோள்கள் அல்லது மதிப்பீடுகளில் எதிர் முரண்படுவது வழக்கமாக சரியென விளக்கப்படுகிறது.

Oral Documents
வாய்மொழிச் சான்றாவணம்

சான்றாதாரங்களைச் சேகரிப்பதில் இது ஒரு முறையாகும். ஒலி நாடாக்கள் இசைத்தட்டுகள் போன்றவற்றில் ஒரு முக்கிய சம்பவத்தைக் குறித்த செய்திகள் அல்லது கருத்துக்களைத் தொடர்புடையவர் விரிவாகவும் விளக்கமாகவும் கூறுவதைப் பதிவு செய்து வைத்தல். தேவைப்படும் போது இவை ஆய்வுக்குப் பயன்படுத்தப்படும்.

Oral Tradition
வாய்மொழிப் பாரம்பரியம்

எழுத்துவடிவில் அல்லாமல் வாய்மொழியாக ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு அனுப்பீடு செய்யப்படுகின்ற பண்பாட்டைக் குறிக்கிறது. இச்சொல் வழக்கமாக, எழுத்துமொழி இல்லாத நாட்டுப்புறச் சமுதாயங்களோடு தொடர்புபடுத்திப் பயன்படுத்தப்படுகிறது.

Ordeal
சோதனைக்குட்படுதல்

பழி சுமத்தப்பட்டவர் தான் தவறு செய்யாதவர் என நிரூபிக்கச் சில கடும் சோதனைகளில் ஈடுபட்டு அதை உறுதிப்படுத்துவது சோதனைக் குட்படுதலாகும். கொதிக்கும் நீரில் கையைத் தோய்த்துக்காட்டுதல், நெருப்பின்மீது நடத்தல், காய்ச்சிய இரும்பைக் கையில் பிடித்தல் போன்ற செயல்களுள் ஒன்றை பழி சுமத்தப்பட்டவர் மேற்கொள்

ளுமாறு நடுவர்களால் பணிக்கப்படுவார். அவ்வாறு செய்யும் போது அவருக்கு ஒன்றும் ஆகாவிடில் அவர் தவறிழைக்காதவர் எனத் தீர்ப்பளிக்கப்படுகிறது. இம்முறை பண்பாட்டுக்குப் பண்பாடு மாறுபடுவதுண்டு.

Organic Analogy
உயிரியக்க ஒப்புமை

மனிதச் சமுதாயத்தின் அமைப்பு மற்றும் செயல்பாட்டை உயிர் பொருள்களின் இயற்கைத் தன்மையோடுள்ள ஒப்புமை மூலம் புரிந்துகொள்ள முயல்வதைக் குறிக்கிறது. சான்றாகச் சமுதாயம் இயற்கையில் உள்ள ஒரு உயிர்ப்பொருளைப் போன்று மிகவும் சிக்கலானதாகவும் பரிநாம மாறுதல் மூலம் அதன் சமூக அமைப்புநிலையில் வேறுபடுத்தப் படுவதாகவும் உள்ளது.

Organicism
உயிர்ப்பொருளியல்புவாதம்

அமைப்புரீதியில் சமுதாயம் ஓர் உயிரியல்சார் பொருளோடு ஒத்தது எனும் கருத்து. ஒரு மனிதனின் அல்லது விலங்கின் ஒழுங்கமைப்போடு சமுதாயம் மிகவும் ஒத்திசைவானது என்று கருதப்படுகிறது. சமுதயாத்தின் இடைத்தொடர்புடைய பகுதிகள் அல்லது உறுப்புகள் இணைந்து மொத்த உருவத்தை ஏற்படுத்துகிறது. சமூகக் கோட்பாடுகளில் இக்கருத்து பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.

OrganizationTheory
அமைப்பாண்மைக் கோட்பாடு

கடுஞ்செயல்களில் மக்களின் சமூக நடக்கைமுறை மற்றும் அமைப்பாண்மை வடிவத்தில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய காரணக் கூறுகள் ஆகியவை குறித்த அனுபவத்தால் அறியப்படுகிற மற்றும் பொதுக்கருத்துத் தொடர்பான கூர்நோக்குகளை இக்கோட்பாடு விளக்குகிறது. இது முக்கியமாக ஆட்சிமுறை நிலையிலான கடுஞ் செயல்கள் குறித்து விளக்குகிறது.

Ossification
கடினமாதல்

இச்சொல் ஒரு சமூகநிலையைக் குறிக்கிறது இந்நிலையில் சமூக மாறுதல் மற்றும் முன்னேற்றத்திற்கு எதிர்ப்புகள் காணப்படும். தற்போது இச்சொல் வழக்கமாக் காணப்படுகிறது. ஆனால் கடினமாதல் என்பது சமுதாய நோய்களில் ஒன்றாகக் கருதப்பட்டது.

Osteometry
எலும்பளவையியல்

உடல்சார் மானிடவியலில் எலும்பளவையியல்இறந்த மனிதனின் எலும்புகளை அளந்து மனித வேறுபாடுகளின் தன்மைகளை விளக்குகிறது.

Out-Group
வெளிக்குழு

ஒரு குழுவிலிருந்து விலக்கப் பட்டவர்களாகக் கருதப்பட்டவர்கள் அல்லது குழுவுக்கு வெளியே இருப்பவர்கள். ஒரு குழுவினுள் உறுப்பினராகஇல்லாத அனைவரையும் குறிக்கிறது.

Over -population
மக்கள்தொகை மிகுதி

ஒரு குறிப்பிட்ட வாழ்க்கை முறையைத் தொடர்ந்துநடத்திக் கொண்டு ஒரு குறிப்பிட்ட பகுதியில் மிகுதியான மக்கள் வாழ்ந்திருப்பதை மக்கள்தொகை மிகுதி என்பர்.

P

Paganism
புறச்சமயச்சார்பு

பலதெய்வ வழிபாடு, புறச்சமய தெய்வங்களையும் வழிபடுதல், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றைப் பின்பற்றுதல் போன்றவற்றைப் புறச்சமயச் சார்பு என்பர்.

Paired Concepts
இணையுற்றகருத்துப்படிவங்கள்

சமூக இயல் நிகழ்வுகளின் ஆய்வை இருகவர் பிரிவு இணைகளாக அமைத்துக்கொள் வதற்குப் பயன்படுத்தப்படும் கருத்துப்படிவங்கள். சான்றாக நாட்டுப்புறச் சமுதாயம்-நகர்ப்புறச் சமுதாயம், முதல்நிலை உறவினர்-இரண்டாவது நிலை உறவினர் போன்றவற்றைக் கூறலாம்.

Palaeo Anthropology
தொல்மானிடவியல்/மனிதத் தொல்லுயிரியல்

மனிதப்படிமலர்ச்சி தொடர்பான அனைத்து ஆய்வுகளில் தொல்லு யிரியல் முதன்மையாக இடம் பெறுகிறது. மனிதனோடு தொடர் புடைய புதைவடிவங்களை ஆராய்வதே இப்பிரிவின் தலையாய நோக்கமாதலால் இதனைப் 'புதைவடிவவியல்' என்றும் கூறுவதுண்டு.

Palaeolithic Age
பழங்கற்காலம்

பண்பாட்டு வளர்ச்சியியல் வாதுமைக்கொட்டை வடிவில் செய்யப்பட்ட செப்பமற்ற நிலையில் கொத்தப்பட்ட கல்லால் ஆன கருவிகளைப் பயன்படுத்திய காலகட்டம். இக்காலகட்டத்தில் வாழ்ந்துவந்த மனிதர் விலங்குகளை வேட்டையாடியும் காய்கறிகளைச் சேகரித்தும் தங்கள் உணவைப் பெற்றுக்கொண்டனர். அவர்கள் திறந்தவெளிகளிலோ குகைகளிலோ வாழ்ந்துவந்தனர்.

Panel Study
பட்டியல் ஆய்வு

இது ஒரேமாதிரியான பண்பு மாதிரியிலிருந்து குறிப்பிட்ட கால இடைவெளியில் தரவுகளைச் சேகரிப்பதில் ஈடுபடுகிறது. இத் தகைய ஆய்வு குறிப்பிட்ட மாறுதல்களின் போக்கு மற்றும் விளைவுகளை ஆராய உதவுகிறது. இதில் பண்புமாதிரிகளை முதல் நிலையாகத் தேர்ந்தெடுப்பத்தில் சிக்கல்கள் ஏற்படலாம். காரணம் நீண்டநாள் ஆய்வை விரும்புகிற மக்களைத் தேர்ந்தெடுப்பது சற்று கடினமானது. இதனை செங்குத் துக்கோடு பாங்கான ஆய்வு என்றும் குறிப்பிடலாம்.

Panel Technique
பட்டியல் உத்தி

ஒரு நேர்காணல் உத்தியைக்

குறிக்கிறது. பண்புமாதிரி அல்லது மக்கள்தொகை குறிப்பிட்ட கால இடைவெளியில் திரும்பத் திரும்ப நேர்காணப்படுவார்கள்.

Parallel Cousins
இணைச்சகோதரர்

ஒருவரின் இணைச் சகோதரர்கள் என்பது அவருடைய பெற்றோரின் சகோதர சகோதரிகளில் பெற்றோரின் பாலைச் சேர்ந்தவர்களின் பிள்ளைகளைக் குறிக்கிறது. அதாவது தாயின் சகோதரியின் பிள்ளைகள் மற்றும் தகப்பனின் சகோதரனின் பிள்ளைகள் ஆகியோர்.

Parallel Descent
இணைமரபு

இவ்வகை மரபுக்குழுவில் ஆண்கள் தம் குடிவழியை ஆண்வழியிலும் பெண்கள் தம் குடிவழியைப் பெண்வழியிலும் குறிப்பிடுவர். இணைமரபு அமைப்புடைய சமுதாயமுறை மிக அரிது.

Parallelism
இணை போகுநிலை

முழுதொத்த அல்லது ஒரே மாதிரியான கண்டுபிடிப்பு அல்லது பண்பாட்டு வடிவம் தனிப்பட்ட பண்பாடுகளில் இயல்பாக வளர்வதைக் குறிக்கிறது. இச்சொல் கோட்பாட்டுரீதியிலான ஒரு கருத்தையும் குறிக்கிறது. அதாவது அனைத்துப் பண்பாடுகளும் ஒரேமாதிரியான வரம்புகளில் வளர முற்படுகிறது என்பது.

Parochialism
குறுகியநோக்கம்

முதல்நிலையாக நகர அல்லது அருகிடச் சூழ்நிலைகளைக் குறித்து மட்டும் சார்புடையதாக இருத்தல். வேறேதாவது இடசூழ்நிலைகளைக் குறித்து இரண்டாவதுநிலையான நோக்குடையதாக இருத்தல்.

Parole
நாணய வாக்குறுதி

ஒரு கைதியை அவருடைய சிறைத்தண்டனை காலம் முடிந்தபின் விடுதலைசெய்தல். அவ்வாறு விடுதலை செய்யும்போது தப்பித்து ஓடவில்லை என்றோ விடுவிக்கப்பட்டால் திரும்பவும் சிறைக்குத் திரும்புவதில்லை அல்லது குறிப்பிட்ட காலம்வரை யாருக்கும் எதிராக எவ்வகை ஆயுதமும் ஏந்துவதில்லை என்றோ அளிக்கும் வாக்குறுதி.

Parsimony Principle
உலோபக்கொள்கை/சிக்கனக் கொள்கை

எளிய மற்றும் மிகக்குறைவான சிக்கல்களை உடைய விளக்கங்கள் மற்றும் கருதுகோள்கள் சிறந்தது என்னும் கொள்கை. மெய்ம்மைகளுக்கு ஏதுகூறும் வகையில் அவசியமானவைகட்கு மேற்பட்ட காரணங்களைக் கொள்ளுதலாகாது என்னும் விதி.

Participant observation
பங்கேற்பாய்வு/பங்கேற்று உற்றுநோக்குதல்

பங்கேற்று ஆழ்ந்துநோக்குதல். இம்முறையில் ஆய்வாளர் தான் ஆய்வுசெய்யும் குழுவுடன் தானும் ஒரு அங்கத்தினராகச்

சேர்ந்து அதன் செயல்களில் பங்கு கொண்டு நிகழ்ச்சிகளை உற்று நோக்குவார். பொதுவாக அவர் ஆய்வாளர் என்பது தெரியும். ஆய்வாளர் குழுவினரோடு இருப்பதால் குழுவின் செயற்பாடுகளைப் பாதிப்பதில்லை. பொதுவாகப் பழங்குடியினரின் வாழ்க்கையை ஆய்வு செய்வதற்கு மானிடவியலார் இம் முறையைப்பயனபடுத்துகின்றனர்.

Pastoral Culture
ஆயர் பண்பாடு

ஒரு குழு மக்கள் உணவு வழங்கீட்டுக்கு மேய்ச்சல் விலங்குகளின் மந்தைகளைச் சார்ந்திருப்பதன் மூலம் மலர்ச்சியுறுகின்ற ஒருவித வாழ்க்கைமுறை. சீரான இடப்பெயர்ச்சி கட்டாய விளைவாக இருப்பதால் அவர்களின் பொருட்கூறு பண்பாடானது எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய பொருட்களால் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும். அவர்களின் சமூகநிலையாக்கம் வலுவான இடப்பெயர்ச்சி சிறப்பியல்புகளின்செல்வாக்குக்குஉட்பட்டிருக்கும்.

Patriarchal Family
தந்தைத் ஆதிக்கக் குடும்பம்

இவ்வகைக் குடும்பத்தில் ஓர் ஆண் ஒரு பெண்ணையோ பல பெண்களையோ மணந்துகொண்டு குடும்பத்தின் அனைத்து அதிகாரங்களையும் பொறுப்புகளையும் தன்வசம் வைத்துக்கொள்வார். மார்கனின் திட்டப்படி இது பண்பாட்டுப் படிமலர்ச்சியில் நான்காம்வகையாக ஏற்பட்ட குடும்பமுறையாகும்.

Patriarchy
குடிமுதல்வராட்சி

பெண்கள்மீதான ஆண்களின் மேலாதிக்கத்தை விளக்க இக்கருத்துப்படிவம் பயன்படுத்தப்படுகிறது. இது பலதரப்பட்ட சமுதாயங்களிலும் காணப்படுகின்ற ஒரு மேலாதிக்கமாகும். மேலும் முழு குடும்பத்தையும் வயதில் மூத்த ஒரு ஆண் மேலாதிக்கம் செய்யும் குடும்ப அமைப்பாண்மையை விளக்கவும் இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

Patrilateral Cross Cousin Marriage
தந்தைவழி மணவழிச் சகோதர மணம்

இம்மணமுறையில் ஒருவர் தன் தகப்பனின் சகோதரியின் மகளைத் திருமணம் செய்துகொள்லாம். ஆனால் சகோதரனின் மகளைத் திருமணம்செய்துக்கொள்ளக்கூடாது.

Patrilineal
தந்தைவழி / பங்காளி

சில சமூக செயல்நோக்கங்களுக்காக உறவுகளை முற்றிலும் ஆண்வழியாகக் கண்டறிவதைக் குறிக்கிறது. இச்சொல்லுக்குப் பதிலாகப் பங்காளி என்ற சொல்லும் பயன்படுத்தப்படுகிறது. எனவே தந்தைவழி உறவினர்கள் அனைவரும் பங்காளிகளாக இருப்பார்கள்.

Patrilineal Descent
தந்தைவழி மரபு

ஒருவர் அவர்தம் மரபினைத் தந்தை, பாட்டன், முப்பாட்டன என ஆண்வழியில் தொடர்புபடுத்திக்

காண்பாரேயானால் அம்மரபு தந்தைவழி மரபு எனப்படும். இதில் குடிவழி ஆண்கள் வழியில் தொடர்புபடுத்தப்படுவதால் இது ஆண்வழிமரபு (Agnatic Descent) என்றும் கூறப்படும். குழந்தையின் உறவு தந்தை வழியாக நிர்ண யிக்கப்படுகிறது.

Patrilineal Extended Family
தந்தைவழி விரிந்த குடும்பம்

குடும்பத்தின் அளவு விரிவடைவது தந்தைவழி உறவினர்களால் மட்டும் அமையுமாயின் அக்குடும்பம் தந்தைவழி விரிந்த குடும்பம் எனப்படும் (காண்க: Extended Family)

Patrilineal Family
தந்தைவழிக் குடும்பம்

குடும்பத்தின் தலைமைப்பொறுப்பு பெரும்பாலும் குடிவழி, மரபுரிமை (Inheritence) போன்ற கூறுகளால் நிர்ணயிக்கப்படுகிறது. அவ்வாறு தந்தைவழியில் அமையும் குடும்பம் தந்தைவழிக்குடும்பம் எனப்படும்.

Patrilineal Inheritence
தந்தைவழிச் சொத்துரிமை

ஆண்கள் வழியாகச் சொத்துரி மையை அடைதல். இம்முறையில் பெண்களுக்குச் சொத்துரிமை இல்லை.

Patrilocal
தந்தை இருப்பிடக் குடித்தனம்

மனைவியானவள் தன் கணவனின் வீட்டிலோ அல்லது கணவனின் உறவினர்களின் இருப்பிடத்திலோ வாழ்வது.

Patrilocal Family
தந்தையகக் குடும்பம்

திருமணத்துக்குப்பின் தந்தை அல்லது தந்தைவழிக் கீழிறங்கு தலைமுறை ஆண் உறவினர் வீட்டில் உறைவிடத்தை ஏற்படுத்திக் கொண்டால் அதனைத் தந்தையகக் குடும்பம் என்பர்.

Patrimonialism
தந்தைவழிக்கொள்கை

தந்தைவழிக்கொள்கை ஒருவிதப் பாரம்பரிய அரசியல் மேலாதிக் கமாக உள்ளது. இதில் ஓர் அரச குடும்பம் அதிகார இனத்திற்குரிய அமைவு மூலம் மனப் போக்கான அதிகாரம் செலுத்தும். இம் முறையில் நிருவாக மற்றும் அரசியல் சக்திகள் ஆளுகை செய்பவரின் தனிப்பட்ட நேரடி யான கட்டுப்பாட்டின்கீழ் இருக்கும்.

Patripotestal Family
தந்தைவழிஆதிக்கக் குடும்பம்

தந்தையின் ஆதிக்கத்தை யாரும் மாற்றவோ அல்லது எதிர்க்கவோ கூடாத குடும்பம். இக்குடும்ப அமைப்பில் ஏனைய குடும்ப அங்கத்தினர்களுக்கு எவ்வித உரிமையும் இருப்பதில்லை.

Peasant Community
உழவர் பண்புச் சமுதாயக்குழு

எளிய உத்திமுறைகளை உடைய ஒரு கிராமப்புற விவசாயப் பண்புக்குழு. இக்குழு பெரிய சமுதாயத்தின் ஒரு பகுதியாகக் காணப்படும். இதன் பண்பாட்டுப் பாரம்பரியம் ஓரளவு தனிப் பட்டதாக இருக்கும். வழக்கமாக

உழவர் பண்புக்குழுக்கள் எழுத்தறிவற்றதாகவும் ஆனால் படிப்பறிவுடைய, அரசியல்ரீதியில் ஒழுங்கமைக்கப்பட்ட சமுதாயத்தினுள் இருப்பதாகவும் காணப்படும்.

Peasants
உழவர்கள்

நகர்ப்புறப் பணியாளர் வகுப்புகளிலிருந்து ஓரளவு தனிமைப்படுத்தப்பட்ட, மிகக் குறைந்த பணிப்பாகுபாடுடைய, பொருளாதாரத் தன்னிறைவுடைய, விவசாய உற்பத்தியில் ஈடுபடுகிற ஒரு வகுப்பு அல்லது பிரிவு மக்களைக் குறிக்கிறது. பல முறைகளில் உழுகுலமானது அவர்கள் பயிரிடும் நிலங்களின் அளவு, அவர்களின் நில உரிமை ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு தனி சமூக அடுக்கமைவாக வேறுபடுத்தப்படுகிறது.

Peer Group
ஓர்நிலை நட்புக்குழு

தன்னை ஒத்த வயது, இனம், பழக்கவழக்கம் போன்ற குணாதிசயங்களை உடைய உறுப்பினர்களின் கூட்டாண்மை. பொதுவான நிலையில் வயது குழுக்களைக் குறிக்கிறது. குறிப்பாக இளம்பருவப் பண்பாட்டால் இணைக்கப்பட்டவளர் இளம் பருவத்தினர்களாலான குழுக்களைக் குறிக்கிறது. இக்குழுக்கள் உயர்ந்த அளவிலான கூட்டொருமைப்பாடு, படிநிலை அமைப்பாண்மை மற்றும் பெயரியவர்களின் மதிப்பீடுகள் அல்லது அனுபவங்களைக் கைவிடுதல் அல்லது முரண்படுதல் போன்றவற்றை அடைய முற்படும். பெரியவர்களின் பார்வையில் இக்குழு ஒரு பிழைபாடாக உள்ளது. காரணம் குழு உறுப்பினர்களின் செயல்பாடுகள் குற்றங்களை ஆதரிப்பதாக இருக்கும்.

Person
தனிமனிதர்

ஒப்புக்கொள்ளப்பட்ட மனித உரிமைகளும் கடமைகளும் உடையவர். ஒரு மனிதர் சமூகவியல் ஆய்வின் ஒரு ஒருமம் என்ற நிலையில் குறிப்பிட்ட அந்தஸ்துடைய ஒரு சமூகப்பொருள் ஆவார். அவர் ஒரு சமுதாயத்தில் உறுப்பினர் என்ற நிலையிலும் அதன் பண்பாட்டுச் சீர்மைகள் மற்றும் பாரம்பரியங்களின் பங்கேற்பாளர் என்ற நிலையிலும் சமூகப் பங்குகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுகிறார்.

Personal Disorganization
தன்மய ஒழுங்குமுறைகேடு

உள்குழப்பத்தினால் ஒரு தனிநபர் சிறப்பாகச்செயல்பட இயலாதிருக்கும் நிலையைக் குறிக்கிறது. பொதுவாக அவருடைய முரண்பட்ட தரத்திலான நடக்கை முறையின் விளைவால் அத்தகைய நிலை ஏற்படுவதுண்டு.

Personal Document
தனிப்பட்ட ஆவணம்

ஒரு தனிநபரின் சமூக மற்றும் உளவியல்சார் அனுபவங்கள் குறித்த எழுதப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள். அவை கட்டுரைகள், நாட்குறிப்புகள், சுய வரலாறு அல்லது கடிதம்

போன்றவைகளாகும். அத்தகைய ஆவணங்கள்தனிநபரால்ஒழுங்கமைக் கப்படுவதால் தனிப்பட்ட ஆவணம் எனக் குறிப்பிடப்படுகிறது.

Personal Property
தனிப்பட்ட சொத்து

மரபுவழிச் செல்லும் நிலமும் நிலஞ்சார்ந்தவைகளும் அல்லாத தனியுரிமைச் சொத்து.

Personal Social Learning
தனிப்பட்ட சமூகக்கற்றல்

பண்பாட்டுரீதியில் நிர்ணயிக்கப்படாத கற்றலைக் குறிக்கிறது. ஆனால் இத்தகைய கற்றலின் பெரும்பகுதித் தனித்தன்மையாக்கப்பட்ட அனுபவங்கள் மற்றும் சமூக உறவுகளால் வளர்கிறது.

Personification
தற்குறிப்பேற்றல்

சமூகக்குழுக்கள் அல்லது சமூக வடிவமைப்புகளுக்கு மனிதப் பண்புகளைச் செயல்காரணமாகச் சுட்டிக்காட்டுவதைக் குறிக்கிறது.

Perspective
அணிமைத்தோற்றம்

வரைச்சட்டம் மற்றும் கருத்தினை அளிக்கின்ற மதிப்பீடுகள், நம்பிக்கைகள், மனப்பான்மைகள் மற்றும் பொருள்களைக் (அர்த்தங்கள்) குறிக்கிறது. இதிலிருந்து தனிநபர் ஒரு சூழ்நிலையை நோக்குகின்றார்.

Phenomenological Sociology
இயல்நிகழ்வுசார் சமூகவியல்

இயல்நிகழ்வுசார் தத்துவத்திலிருந்து தோன்றிய ஒரு சமூகவியல் பிரிவு. இது அன்றாட வாழ்வு, உலகு மற்றும் அதோடு தொடர்புடைய உணர்வுகளின் நிலைகள் ஆகியவை குறித்த ஆய்வு மற்றும் விளக்கங்களை முக்கிய குறிக்கோளாகக் கொண்டது. சமூகஅமைப்புகள் குறித்த தீர்ப்புகளை உடைத்தெறிந்துவிட்டு இத்தகைய ஆய்வு நடத்தப்படுகிறது. அதாவது சமூக அமைப்புகளின் நிலவுதல் அல்லது அதிகாரங்களைக் கருத்தில் கொள்ளாது ஆராய்வது.

Phratry
குலக்கூட்டம்

இதுவும்ஒருவழிமரபுக்குழுவாகும். குல அமைப்புடைய சமுதாயங்கள் சில நீண்ட காலகட்டத்தைக் கடந்துவரும்போது அவற்றுள் உள்ள குலங்கள் மேலும் பல பிரிவுகளாகப் பிரிந்து ஒவ்வொரு குழுவும் மேலும் நிச்சயமான மூதாதையரை இனங் காண்கின்றது. இவ்வாறு ஒரு குலம் பல பிரிவுகளாகப் பிரிந்தாலும் அது பிரிவுறா நிலையில் பெற்றிருந்த குலக்குறியைக்கொண்டுஇணைவதால் இக்குழுக்கள் அடங்கிய தொகுதி கூட்டம் எனப்படும். ஒரு கூட்டத்தில் இடம்பெறும் குழுக்கள் அனைத்தும் சில சமுதாயச் செயல்களில்ஒன்றுபட்டுச்செயல்படும் தன்மை கொண்டவையாகும்.

Phylogeny
தொகுதிவழி வரலாறு

தொகுதிவழி வரலாறு என்னும் சொல் மரபுவழியில் தொடர்புடைய (Genetically related) பல உயிரினங்களின் படிமலர்ச்சி

வரலாற்றைக் குறிப்பதாகும். உயிரினங்களின் வகைப்பாட்டில் 'Phylum' என்னும் சொல் 'தொகுதி' எனக்கையாளப்படுவதால் 'தொகுதிவழி' 'வரலாறு' எனக் குறிப்பிடப்படுகிறது.

Physical Anthropology
உடல்சார் மானிடவியல்

மானிடவியல் மிக விரிந்த துறையாக உள்ளதால் அதை உடல்சார்மானிடவியல், பண்பாடுசார் மானிடவியல் என இரு பெரும் பிரிவுகளாகப் பிரிப்பர். உடல்சார் மானிடவியல்மனிதனைமுழுநிலையில் உயிரியல்சார் நிலையில் ஆராய் கிறது. அதனாலேயே இப்பிரிவு உயிரியல்சார் மானிடவியல் (Bio logical Anthropoloy) என்றும் கூறப்படுகிறது. முக்கியமாக மனிதன் எப்போது தோன்றி எந்தெந்த நிலைகளில் மலர்ச்சியடைந்து இன்றுள்ள நிலையை அடைந் தான் என்பது பற்றியும், மனிதன் இன்றைய நிலையை அடை வதற்கு எந்தெந்த நிகழ்ச்சிகள் காரணமாய் இருந்தன அவை எவ்வாறு நிகழ்ந்தன என்பது பற்றியும், இக்கால மக்கள் வெள்ளையர்கள், கறுப்பர்கள், நெட்டையானவர்கள், குட்டையா னவர்கள், தடித்த உதட்டினர், மெலிந்த உதட்டினர், சுருள் மயிரினர், சுருளற்ற மயிரினர் போன்ற எண்ணற்ற உயிரியல் கூறுகளில் வேறுபட்டுப் பல்வேறு இனங்களாக இருப்பதற்குக் காரணமென்ன? வருங்காலத்தில் இவர்களிடையே எவ்வகையான மாற்றங்கள் நிகழும் என்பனவற்றை மையமாகக் கொண்டது உடல்சார் மானிடவியல்.

Physiological Hypothesis
உடற்கூறுசார் கருதுகோள்

உயிரினங்களின் உடற்கூறு மாறுதல்கள் நடக்கைமுறையைத் தீர்மானிக்கிறது என்ற கருத்து.

Physiological Need
உடல்சார் தேவை

உயிர்ப்பொருளின் உயிரியல்சார் அமைப்பிலிருந்து தோன்றுகிற தேவையைக் குறிக்கிறது. உடல்சார் தேவையானது முதல்நிலைத் தேவை எனக் குறிப்பிடப்படுகிறது. காரணம் அத்தகைய தேவைகள் சந்திக்கப்படுவது ஒருவர் உயிர் வாழ்வதற்குத் தேவையாக உள்ளது.

Pidgin
சிதைவுற்ற மொழிவழக்கு

வெவ்வேறு மொழிகளைச் சார்ந்த மக்களால் உருவாக்கப்படுகின்ற எளிமைப்படுத்தப்பட்ட ஒருவகை மொழி. அம்மக்களுக்கு அயல்மொழியில் குறிப்பிட்ட அளவிலான தகவல் தொடர்பு நடைமுறைத் தேவையாக இருக்கும். சான்றாகச் சிதைவுற்ற மொழிவழக்கான ஆங்கிலம், பிரெஞ்சு ஆகியவற்றைக் கூறலாம். இது ஒரு நிலையான வடிவிலான பேச்சு. இது பயன்படுத்துபவர்களால் முதல் மொழியாக அல்லது தாய்மொழியாகக் கற்றுக்கொள்ளப் படுவதில்லை. ஆனால் ஒரு துணைமொழியாகக் கற்றுக்கொள் ளப்படுகிறது.

Pluralism
பல்கூற்றாண்மை

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அதிகாரப் பரவுதலின் விருப்பத்தைப் பல்கூற்றாண்மை உறுதிப்படுத்தியது. இது பல தரப்பட்ட மத, பொருளாதார, தொழில், கல்வி மற்றும் பண்பாட்டு இணைதல்களில் பரவலாகக் காணப்பட்டது. இது அரசைத் துண்டாடி ஆட்சியுரிமை பன்முகப் படுத்தப்பட்ட ஒருமங்களாக்கியது. இதனால் சமுதாயம் அரசாலோ அல்லது தனிப்பட்ட வகுப்பாலோ மேலாதிக்கம் செலுத்தப்படவில்லை. தற்கால சமூகவியலில் பல்கூற்றாண்மை என்பது அதிகாரம் பலதரப்பட்ட குழுக்கள் மற்றும் நிறுவனங் களிடையே பரவியிருக்கும் சமூக அமைப்பாண்மைகளைக் குறிக்கிறது.

Plural Society
பன்மைச்சமுதாயம்

பலதரப்பட்ட பண்புக்குழுக் களாலான சமுதாயத்தைக் குறிக்கிறது. பெரும்பாலான சமுதாயங்களும் பலதரப்பட்ட பண்புக்குழுக்களைக் கொண்டவைகளாகும். ஆனால் இச்சொல் வழக்கமாகத் தெளிவாக வேறுபடுகின்ற சமூகக்குழுக்களாலான நாடு, மாநிலம் அல்லது அரசியற் கூட்டை வேறுபடுத்திக் குறிப்பிடுகிறது. சான்றாக மலேசியா, இந்தோனேசியா, இந்தியா போன்ற நாடுகளைக் கூறலாம்.

Polarity
உறவின் முனை

ஓர் உறவு ஏற்பட இருவர் தேவை. இவ்விருவரும் ஒருவர் மற்றவரை ஏதோ ஒரு சொல்லால் குறிப்பிட முற்படும்போது அவர்கள் ஒரு குறிப்பிட்ட 'உறவுமுனையை' ஏற்று நிற்கவேண்டியுள்ளது. இதனை உறவின் முனை எனக் குறிப்பிடலாம்.

Polar type
துருவமாதிரி

ஒரு இருகவர் பிரிவுமுறை கருத்துரு இணையின் ஒன்றைக் குறிக்கிறது. இது இரண்டு எதிரான மற்றும் முரண்படும் இலக்கியலான மாதிரிகளை உடையதாகும். அதாவது நாட்டுப்புறச் சமுதாயம் மற்றும் நகர்ப்புறச் சமுதாயம் போன்றவை.

Political Institution
அரசியல்சார் நிறுவனம்

சமூகநிறுவனம் அல்லது சமூக ஒழுங்கைப் பராமரிக்க உதவும் சமூகக் கட்டளைச் சட்டங்கள் மற்றும் சமூகப் பங்குகள் ஆகிய வற்றின் சிக்கல்வாய்ந்த முழுமை யைக் குறிக்கிறது. மேலும் நடைமுறையிலிருக்கும் ஆணை யுரிமை ஒழுங்குக்கு உறுதியை வலியுறுத்தி அதிகாரத்தை நடை முறைப்படுத்துவது, சட்ட மற்றும் நிருவாக ஒழுங்குகளில் மாறுதல் களுக்கான வழிவகைகளை அளித்தல் ஆகியவையும் இதில் அடங்கும்.

Political Participation
அரசியல்சார் பங்கேற்பு

அரசியல் நடைமுறைகளில் பங்கேற்பதைக் குறிக்கிறது. அரசியல் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பது மற்றும் பொது அரசியல் திறனை

உறுதிப்படுத்துவது அல்லது ஆக்கத்திரிபுகளை ஏற்படுத்துவது ஆகியவை அரசியல்சார் பங்கேற்பு எனக் குறிப்பிடப்படுகிறது. அவ்வாறு பங்கேற்கும் உரிமையானது மக்களாட்சி முறையின் சிறப்புக் கூறாகும்.

Political Sociology
அரசியல்சார் சமூகவியல்

அரசியல்நிலையை ஒரு சமூக இயல் நிகழ்ச்சியாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் ஆய்வு. அரசியல் அமைப்பு நிலைகள் மற்றும் மாறுதல்களில் நிலைமாற்றம் உண்டுபண்ணுகின்ற சமூக மற்றும் பண்பாட்டுக்கூறுகளைப் பற்றிய ஆய்வு.

Political Theory
அரசியற்கோட்பாடு

சாதிகள் தொழிற்பிரிவு அடிப்படையிலோ பிறப்பு அல்லது வேறு எதன் அடிப்படையிலோ தோன்றியது என்பதை அரசியற்கோட்பாடு கடுமையாக எதிர்க்கிறது. சாதி என்பது ஒரே பிரிவுதான், இதில் தனிமைப்படுத்தப்பட்ட பல பிரிவுகள் இல்லை என்ற கருத்தை வலியுறுத்துவது அரசியற்கோட்பாடு.

Polity
ஆட்சிஅமைப்புமுறை

ஒரு சமுதமுாயத்தில் காணப்படும் அரசியல் நிறுவனங்களைக் குறிக்கும் ஒரு பொதுப்படையான சொல்.

Polyandry
பலகணவர் மணம்

ஒன்றுக்கும் மேற்பட்ட ஆண்கள் கூட்டாகச் சேர்ந்து ஒரு பெண்ணை மணந்து கொள்ளும் நிகழ்வே பல கணவர் மணமாகும். ஒரு பெண் பல ஆண்களை மணக்கும் மணமுறை. இம்முறை மிகவும் அரிதாகக் காணப்படுகிறது. ஆப்பிரிக்க நாட்டுச் சில பழங்குடியினரிடையே இம்முறை காணப்படுகிறது. திபெத்திய நாட்டினரும் இம்முறையைக் கடைபிடிக்கிறார்கள். முற்காலத்தில் கேரளாவைச் சேர்ந்த நாயர்களிடையேயும், நீலகிரி தோடர்களிடையேயும் இம்முறை காணப்பட்டது. இதில் சகோதரர்கள் பலகணவர் மணம் (Fraternal Polyandry) சகோதரர் அல்லாத பலகணவர் மணம் (Non-Fraternal Polyandy) என இருவகை உள்ளன.

Polyandrous Family
பலகணவர் குடும்பம்

ஒரு பெண் பல ஆண்களுக்கு மனைவியாக வாழும் குடும்பம் பலகணவர் குடும்பமாகும்.

Polygamy
பலதுணைமணம்

ஒருவர் ஒரேநேரத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட மணத்துணைகளை ஏற்றுக்கொண்டால் அவ்வகைத் திருமணம் பலதுணைமணம் எனப்படும். இங்கு பலதுணை என்பது ஆணாகவும் இருக்கலாம், பெண்ணாகவும் இருக்கலாம். இதில் பலமனைவி மணம், பலகணவர் மணம் என இருவகை மணங்கள் உள்ளன. தற்போது இம்முறை அரிதாகவே காணப்படுகிறது.

Polygamous Family
பலதுணை மணக்குடும்பம்
ஓர் ஆண் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களையோ, ஒரு பெண் ஒன்றுக்கும் மேற்பட்ட ஆண்களையோ மணந்துகொண்டு வாழ்க்கை நடத்துவர். இவ்வகையான மணங்களால் ஏற்படும் குடும்பமுறை பலதுணைமணக் குடும்பமாகும்.

Polygenes
கூட்டு மரபணுக்கள்
மனிதர்களின் உடற்பண்புகள் கூட்டு மரபணுக்களால் நிர்ணயிக்கப்படுகின்றன. அவ்வாறே ஒவ்வொரு மக்களினத்திலும் அவ்வினத்திற்கென்றே தனிப்பட்ட பண்புகளைக் கொண்டுசெல்லும் கூட்டு மரபணுக்கள் உள்ளன. அவை புறச்சூழலால் பாதிக்கப்படாதவை. மரபுவழியில் வருபவை.

Polygenetic Hypothesis
பலவழித் தோற்ற கருதுகோள்/ பலவழித் தோற்றக் கோட்பாடு
மனித இனம் மனிதக்குரங்கு போன்ற பல்வேறு உயிரினங்களிலிருந்து உலகின் பல்வேறு பகுதிகளிலும் தோன்றியது என்ற படிமலர்ச்சி கருதுகோள். இதனைப் பலவழித்தோற்றக் கோட்பாடு என்றும் குறிப்பிடுவர்.

Polygynous Family
பலமனைவிக்குடும்பம்
பலதுணை மணக்குடும்பங்களுள் ஓர் ஆண் பல பெண்களை மணந்து கொண்டு குடும்பம் நடத்தினால் அக்குடும்பம் பலமனைவிக்குடும்பம் எனப்படும். (காண்க: Polygamous Family)

Polygyny
பலதாரமணம்/ பலமனைவிமணம்
ஓர் ஆண் பல பெண்களை மணந்துகொள்ளும் மணமுறை. இம்மணமுறை முற்காலத்தில் அரசர்களிடையேயும், ஒருசில சாதியினரிடையேயும் வழக்கில் இருந்தது. இன்றும் சில சமுதாயங்களில் வழக்கில் உள்ளது. இதில் சகோதரிகள் பலமனைவிமணம், சகோதரிகள் அல்லாத பலமனைவிமணம் என இருவகை உள்ளன.

Polytheism
பலதெய்வ நம்பிக்கை
ஒரே அந்தஸ்து நிலையில் உள்ள பல கடவுள்களை நம்புதல்.

Popular Sociology
மக்கள் சமூகவியல்
சமூகவியல் கருத்துக்கள் அல்லது ஆய்வு முடிவுகள் ஆகியவற்றைச் சமூகவியல் அறிஞர் அல்லாதவர்கள் நல்ல செய்தியமைப்பு அல்லது துறைகள் வாயிலாகப் பொதுமக்களிடையே பரப்புதல்.

Population
மக்கள் தொகை
எல்லை குறிக்கப்பட்ட ஒரு நிலப்பரப்புக்குள் வாழும் அனைத்து மக்களது தொகை. சான்றாக ஒரு கட்டளைச் சட்டத்துக்குட்பட்ட நிலப்பகுதி, ஒரு மாநிலம், ஒரு தலைநகர் பகுதி, ஒரு நகரம் ஆகியவற்றைக் கூறலாம்.

Population Centre
மக்கள்தொகை மையம்

நிலவியல்சார் மையத்தைக் குறிக்கிறது. அம்மையத்தைச் சுற்றி ஒரு குறிப்பிட்ட பகுதியின் மக்கள்தொகை ஒவ்வொரு திசையிலும் எண்ணிக்கையில் சமநிலைப் படுத்தப்படுகிறது. இதனால் மையத்தின் தென்பகுதியில் வாழும் அதே எண்ணிக்கையிலான மக்கள் வட பகுதியிலும், மேற்குப்பகுதியில் வாழும் அதே எண்ணிக்கையிலான மக்கள் கிழக்குப்பகுதியிலும் வாழ்வார்கள்.

Population Density
மக்கள்தொகை அடர்த்தி

மக்கள்கூட்டம் தங்கிவாழும் பரப்பையும் அதன் அளவையும் தொடர்புபடுத்திக் குறிப்பிடுவது. மக்கள்தொகை அடர்த்தி ஒரு சதுரமைல் அல்லது ஒரு சதுர கிலோமீட்டரில் குடியிருப்பவர்களின் எண்ணிக்கையின்படி கணக்கிடப்படுகிறது.

Population Problems
மக்கள்தொகைப் பிரச்சனைகள்

மக்களின் எண்ணிக்கையில் விரும்பத்தகாத நிலையில் ஏற்படும் உயர்வு அல்லது குறைவு தொடர்பான பிரச்சனைகள். மேலும் பால்விகிதம், வயது அமைப்பு அல்லது மக்கள்தொகைப் பண்ப ஆகியவற்றில் ஏற்படும் மாறுதல் தொடர்பான சிக்கல்களும் அடங்கும்.

Population Studies
மக்கள்தொகை ஆய்வு

வழக்கமாகப் பிறப்பு, நோய் முதலிய சமுதாயநிலை புள்ளிவிவர ஆய்வைக் குறிக்கிறது. ஆயினும் சில அறிஞர்கள் இச்சொல்லை மக்கள்தொகை இணைப்பாக்கம், மக்களின் பரப்பீடு மற்றும் பல தரப்பட்ட சமூகப் பொருளாதார மாறிகள் ஆகியவற்றிற்கிடையிலான இடைத்தொடர்புகள் குறித்த ஆய்வைக் குறிக்கவும் பயன்படுத்துகின்றனர். சிலவேளைகளில் சமூக மக்கள் தொகையியல் என்றும் குறிப்பிடப்படுகிறது.

Positive Eugenics
ஆக்கமுறை இனமேம்பாட்டியல்

ஆக்கமுறை இனமேம்பாட்டியல் சிறந்த மனித இனத்தை உருவாக்குவதற்கான பண்புகளைக் கொண்டு செல்லும் மரபணுக்களை, மனித மரபணுப் பொதுச் சேர்மத்திலிருந்து (Gene Pool) குறையாமலிருக்க வழிவகுக்கிறது.

Post-Industrial Society
பிந்தைய ஆலைமய சமுதாயம்

இக்கருத்துரு 1962-ல் முதலாவதாக முறைப்படுத்தப்பட்டது. தொடர்ந்து 1974-ல் பிந்தைய ஆலைமய சமுதாயத்தில் 20ம் நூற்றாண்டில் பிந்தைய பகுதியில் ஏற்பட்ட பொருளாதார மற்றும் சமூக மாறுதல்களை விளக்குவதற்காக விரிவுபடுத்தப்பட்டது. பொருளாதார, அரசியல், சமூக மற்றும் அனைத்து நிலைகளிலும் தீர்மானங்கள் எடுப்பதில் புதிய அறிவுசார் தொழில் நுணுக்கம் மற்றும் அறிவாளிகள் வகுப்பு ஆகியவை கடுமையான ஆக்கத்திரிபுகளை ஏற்படுத்தின.

Postnuptial Stage
பிந்தைய மணநிலை

திருமணம் முடிந்த மணமக்களின் இல்லறவாழ்வில் மணநிலைக்கு அடுத்த நிலை. இது குழந்தை வளர்ப்பு நிலையாக உள்ளது. இது சமுதாய வாழ்வில் மிக இன்றிய மையாத நிலையாகும்.

Postulate
அடிக்கோள்

அறிவியலில் உள்ள ஓர் ஆய்வுப்பொருள் அல்லது முன் மொழிவுச் செய்தியைக் குறிக் கிறது. அது சுய சான்று உடையதாக அல்லது உண்மைநிலை அறிக் கையாக அல்லது வரையறுக்கப் பட்டு - ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாகக் கருதப்படுகிறது. இது நிரூபிக்கப்பட்டதாக இல்லா திருந்தாலும் அறிவியலின் எந்த உண்மைகளாலோ அல்லது விதிமுறை களாலோ மறுதலிக்கப்படாததாக இருக்கும். மேலும் ஒரு நியா யமான தேவையான ஊகமாக இருக்கும்.

Potlatch
தகுதிகாட்டுச்சடங்கு

தரநிலைச் சமூக அமைப்பைக் கொண்ட மக்கள் தங்கள் தகுதியை வெளிப்படுத்தவும் நிலைநாட்டவும் தகுதிகாட்டுச் சடங்கினைச் செய்கின்றனர். இது பெயர்சூட்டுச் சடங்காகவோ பிற சிறப்பு நிகழ்ச்சியைக் குறித்து நடத்தும் சடங்காகவோ இருக்கும். இச் சடங்கில் பெரும் விருந்து, அன்பளிப்பு போன்றவை இடம் பெறுவதால் பெரும் பொருட்செலவு ஆகும். இருப்பினும் தங்கள் தகுதியை நிலைநாட்டுவதற்காக இச்சடங்கினைச் செய்கிறார்கள்.

Poverty
வறுமை/ஏழ்மை

ஒரு தாழ்வான வாழ்க்கைத்தரம், இது தனிமனிதன் அல்லது ஒரு குழுவின் உடல்நலம், ஒழுக்கம் மற்றும் சுயமரியாதை ஆகியவற்றை அரித்து வீழ்த்துவதற்கு ஏதுவானது.

Power
அதிகாரநிலை

சமுதாயத்தில் அல்லது குழுவில் ஒருவர் தான் நினைத்ததை ஏனை யோர் எதிர்ப்பினும் சாதிக்கும் நிலை அல்லது ஆற்றல். அதிகாரநிலை சமுதாயத்தின் குடும்பம், நிறு வனம் போன்ற எல்லாநிலைகளிலும் காணப்படுகிறது. எல்லாச் சமுதாயங் களிலும் உள்ளது.

Power Elite
அதிகாரச் செல்வாக்காளர்

சமுதயாத்தில் உயர்மட்டத்தில் முக்கிய செல்வாக்கான நிலைகளில் இருப்பவர்கள். இவர்கள் அரசு நடவடிக்கைகளை நிர்ணயிப்பதிலும் அதிகாரச் செல்வாக்கு உடையவர் களாக இருப்பார்கள்.

Powerlessness
அதிகாரமின்மை

தனிநபரின் உளவியல்சார் நிலையைக் குறிக்கிறது. அதாவது அவர் எல்லாவித பாதுகாப்பு, கட்டுப்பாடு, செல்வாக்கு அல்லது அவருடைய விதியை உறுதிப்படுத்தும் சமூக நிகழ்வுகளின் ஈடுபாடு

ஆகியவற்றை இழந்துவிட்டதாக உணரும்போது ஏற்படுகின்ற நிலையைக்குறிக்கிறது. அதிகாரமின்மை உடைமை மாற்றத்தோடு நெருங்கிய தொடர்புடையது.

Power Structure
அதிகார அமைப்பு

ஒரு பண்புக்குழுவுக்குள் காணப்படும் ஒட்டுமொத்த அதிகார வலையமைவுத் தொடர்புகளைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. முக்கியமான தீர்மானங்கள் மற்றும் செயல்பாடுகளை உறுதிப்படுத்துகின்ற முறையான மற்றும் முறைசாரா அதிகாரங்களும் இதில்அடங்கும்.

Precursors of Anthropology
மானிடவியல் முன்னோடிகள்

மானிடவியல் சார்ந்த கருத்துகளை முதன்முதலில் சிந்தித்தவர்கள். உலகின் பல பகுதிகளுக்கும் அரிய பயணங்கள் மேற்கொண்டு. பல மக்கள் இனத்தவர்களைக் கண்டு அவர்களின் வாழ்க்கைமுறைகளை எழுதியவர்கள்.

Preferential Marriage
முன்னுரிமை மணம்

திட்டவட்டமாக வரையறுக்கப்பட்ட சில அந்தஸ்துகளில் அல்லது உறவுகளில் உள்ள நபர்களுக்கிடையிலான திருமணத்தை ஊக்குவிக்கின்ற அல்லது விதிமுறைப்படுத்துகின்ற வழக்கம் அல்லது விதிமுறை. மதனிமணம், கொழுந்தன் மணம் அல்லது மணவழிச்சகோதர மணம் ஆகிய மண முறைகளைச் சான்றாகக் கூறலாம்.

Preferential Shop
முன்னுரிமைச் செயற்களம்

பதவிநிலைகளை நிரப்புவதற்கானதொழில்சங்கப்பணியாளர்கள் இல்லாதிருந்தால் மட்டுமே தொழில் சங்கத்தைச் சாராத பணியாளர்கள் பணியமர்த்தப்படுவார்கள் என்ற முன்னுரிமை உடைய பணியிடம்.

Prehistory
வரலாற்றிற்கு முற்பட்ட காலம்

பதிவு செய்யப்பட்ட வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட கால்த்திய சமுதாயங்களைக் குறித்த ஆய்வு என்று வரையறுக்கலாம். அதாவது எழுத்துவளர்ச்சிக்கு முந்தைய காலம்.

Prejudice
முற்சார்பு

ஒரு சமுதாயத்தில்.மனித இனப் பிரிவுகளுக்கும் மூலக்குடி மரபுக் குழுக்களுக்கும் இடையிலான பகைமையைக் குறிப்பதாக உள்ளது. சான்றாக அமெரிக்க ஐக்கிய நாட்டு தென்பகுதி வெள்ளையர்கள் நீக்ரோ மக்களுக்கு எதிரான முற்சார்பு உடையவர்களாக இருப்பதைக் கூறலாம்.

Preliterate Society
எழுத்தறிவிற்குமுந்தையசமுதாயம்

எழுத்தறிவு தோன்றுவதற்கு முந்தைய காலகட்டத்தில்வாழ்ந்துவந்த சமுதாயத்தினர். சான்றாக முன்பழங்குடியினர், தொல் பழங்குடியினர், பழங்குடியினர் ஆகியோரைக் கூறலாம்.

Pressure Group
செல்வாக்குக் குழு

சட்டமியற்றுகிற அல்லது ஆளுகைசெய்கிற செயலாண்மைகளில் ஆக்கத்திரிபுகளை ஏற்படுத்த முயற்சிக்கும் ஒரு குழு. அத்தகைய முயற்சி அக்குழுவின் சிறப்பு ஆர்வத்தாலோ அல்லது அக்குழு சார்ந்திருக்கின்ற பெருமளவிலான பொதுமக்களின் ஆர்வத்தாலோ ஏற்படலாம்.

Prestige
தன்மானம்

பொதுவான சமூக அந்தஸ்து, அதனோடு சமூக அங்கீகாரம், மதிப்பு, புகழ்ச்சி மற்றும் ஓரளவு வேறுபாடு ஆகியவற்றை உடையது தன்மானம்.

Pretest
முன்சோதனை

ஒரு வினாநிரலை பெருமளவில் நடைமுறைப்படுத்துவதற்குமுன் மேற்கொள்ளும் இறுதிப் பயன்பாட்டுச் சோதனை. பொதுவாக முன்சோதனை பயன்படுத்தப்படும் வினாக்கள் திருத்தியமைக்கப்பட வேண்டுமா அல்லது சேர்க்கப்படவேண்டுமா என்பனவற்றைத் தெரிந்துகொள்வதற்காகச் சில தகவலாளிகளை மட்டும் நேர்காண்பதில் ஈடுபடுகிறது.

Primary Affinal
முதல்நிலை மணவழி உறவினர்

ஒருவரின் முதல்நிலை உறவினர்களின் மணவழியில் அமைபவர்கள். ஒருவரின் மனைவியும் அவருக்கு முதல்நிலை உறவினரே. இவ்வுறவு மணவழியில் அமைவதால் அவர் முதல்நிலை மணவழி உறவினர் ஆவார்.

Primary Consanguines
முதல்நிலை இரத்தவழி உறவினர்

முதல்நிலை உறவினர் மணவழி உறவாலும் இரத்தவழி உறவாலும் அமைவர். எடுத்துக்காட்டாக ஒருவரின் தந்தை, தாய் சகோதரர்கள், சகோதரிகள், மகன், மகள் ஆகியோர் முதல்நிலை உறவினர்களாவர். இவ்வுறவுகள் இரத்தவழியில் அமைவதால் இவர்கள் முதல்நிலை இரத்தவழி உறவினர்கள் எனப்படுவர்.

Primary Deviation
முதல்நிலை விதி விலகல்

தன் வாழ்நாள் முழுவதும் அடிக்கடி சிறு விதிமுறைகளை மீறிச் செயல்படுவது. சாதாரண சில விதிமுறைகள் பிறருக்குத் தெரியாமல் அடிக்கடி மீறப்படும். இதை பெரிய குற்றமாகக் கருதுவதில்லை. மீறுபவர்கள் அதற்குரிய விளக்கத்தையும் கொடுத்துத் தாங்கள் மிகவும் நல்லவர்கள் என்றும் கருதிக் கொள்வார்கள். சிலர் எப்பொழுதாவது கட்டணம் செலுத்தாமல் நகரப்பேருந்தில் பயணம் செய்தலை இதற்குச் சான்றாகக் கூறலாம்.

Primary Document
நேரடிச்சான்றாவணம்/முதல்நிலைச் சான்றாவணம்

ஒருவர் தன் சொந்த அனுபவத்தின்மூலம் அல்லது தானே நேரடியாகக் கவனித்து அறிந்து

கொண்ட செய்திகளைப் பற்றிய குறிப்புகள்.

Primary Group
முதல்நிலைக் குழு

முதல்நிலைக் குழு குறைவான நபர்களைக் கொண்டதும் நிரந்தர மானதுமாகும். குழு அங்கத்தினர் களிடையே மிக நெருங்கிய தொடர்புஇருக்கும். ஒரவரையொருவர் நன்கு அறிந்துகொண்டு மிகவும் அன்பு கொண்டிருப்பார்கள். பிறர் நலனுக்காக எதையும் செய்வார்கள். உறுப்பினர்கள் அடிக்கடி சந்திக்கும் மிக நெருக்கமான ஒரு சமூகக்குழு. குடும்பம் மற்றும் நெருங்கிய நண்பர்கள் குழுவை முதல்நிலைக் குழுவுக்குச் சான்றாகக் கூறலாம்.

Primary Kin
முதல்நிலை உறவினா

பேசுநருக்கு (Ego) எவரொருவர் எவ்வித இடைத்தொடர்பும் இல்லாமல் நேரடியாக உறவு பெற்றுள்ளார்களோ அவர்கள் முதல்நிலை உறவினர்கள் எனக் கூறப்படுவார்கள். இவ்வகையில் ஒருவருக்கு தந்தை, தாய், சகோதரர், சகோதரி, மனைவி, மகன், மகள் ஆகியோர் முதல் நிலை உறவினர்களாக இருப்பர்.

Primary Occupation
முதல்நிலைத் தொழில்

மூலப்பொருள் உற்பத்தியோடு தொடர்புடைய தொழிலை முதல் நிலைத் தொழில் என்பர். முதல் நிலைத் தொழிலில் விவசாயம், மீன்பிடித்தல், வேட்டையாடுதல், சுரங்கத்தொழில் ஆகியவை அடங்கும். ஆலைமயமற்ற சமுதாயங்களில் பெரும்பாலான மக்கள் முதல்நிலைத் தொழிலில் ஈடுபடுகின்றனர்.

Primary Relation
முதல்நிலை உறவு

நீடித்து நிலவுகிற சமூக உறவு. இது நேரடியாக அடிக்கடி ஏற்படுகின்ற தொடர்பின் அடிப்படையிலானது. மேலும் தனிப்பட்ட ஆழமான மற்றும் உணர்ச்சிபூர்வமான ஈடுபாடுடையதாகவும் காணப்படும்.

Primary Source
முதல்நிலை ஆதாரம்

முன் ஆதார செய்திகளைக் குறிக்கிறது. இவை ஆய்வுத் தரவுகளின் மூல ஆதாரங்களாகக் காணப்படும். நேரடியாக இடையீடின்றிப் பெறப்பட்ட விவரங்களாக அல்லது பதிவு செய்யப்பட்ட நிகழ்வுகளாக இருக்கும்.

Primate
உயர்பாலூட்டி

உச்சவுயர்வுப் பால்குடி உயிரினத் தொகுதியைக் குறிக்கிறது. இதில் மனிதன், மனிதக் குரங்குகள், குரங்குகள் மற்றும் இதர தொடர்புடைய இனங்கள் அடங்கும். இவை யாவும் உடற்கூற்றமைப்பில் சில ஒப்புமைகளை உடையதாகக் காணப்படும்.

Primatology
உயர்பாலூட்டியியல்

பாலூட்டிகள் தொகுதியில் மனிதன் இடம்பெறும் வரிசை உயர்பாலூட்டி (Primate) ஆகும்.

அதனாலேதான் உயர்பாலூட்டிகளைப் பற்றிய ஆய்வு உடல்சார் மானிடவியலில் சிறப்பிடம் பெற்றுள்ளது. உயர்பாலூட்டி வரிசையில் மனிதன், மனிதனின் நேர் மூதாதையர்களான வாலில்லாக் குரங்குகள், அவற்றின் மூதாதையர்களான குரங்கினங்கள், அக்குரங்குகளின் மூதாதையரான தொடக்க காலக் குரங்கினங்கள் போன்றவை அடங்கும்.

Primitive Man
தொன்மை மனிதன்

மனிதச் சமுதாயம் என்னும் அமைப்பு தொன்மை மனிதனின் நுண்ணறிவிலிருந்து தோன்றியதாகும். இம்மக்கள் அவர்களின் தேவைகளைப் பற்றியும், சுற்றுப்புறச் சூழலைப் பற்றியும், அங்கு எவ்வாறு வாழவேண்டும் என்பதைப் பற்றியும் நன்கு அறிந்திருந்தனர்.

Primitive People
தொன்மைக்குடியினர்

பழங்காலதில் வாழ்ந்துவந்த மக்கள் தொன்மைக்குடியினர் என்று குறிப்பிடப்பட்டனர். பழங்காலத்தில் வாழ்ந்த மக்களைப் பற்றி அறிவதற்கு இன்று மிகவும் தனித்த பகுதிகளில் வாழும் தொன்மைக் குடியினரை ஆதாரமாகக் கொள்கின்றனர்.

Primitive Society
மூலமுதல் சமுதாயம்

எழுத்தறிவு முறையை வளர்த்துக்கொள்ளாத சமுதாயம். முதற்படி பண்பாட்டுக்கூறுகளை உடைய படிப்பறிவற்ற ஒரு சமுதாயம். உலோகத் தொழில், இயந்திர உற்பத்தி, முறையான அறிவியல், தத்துவம் அல்லது இறையியல் ஆகியவை குறித்த அறிவு இல்லாத சமுதாயம்.

Primitive Tribe
தொல்பழங்குடி

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே இடம்பெயர்ந்து தங்கள் வாழிடத்தை அமைத்துக்கொண்டிருக்கும் பழங்குடியினர் 'தொல்பழங்குடியினர்' எனப்படுவர். இப்பழங்குடியினர் அவர்கள் வாழும் நிலப்பரப்பிலேயே தோன்றியவர்களாக இருக்கமாட்டார்கள்.

Primitivism
தொன்மைக் கண்ணோட்டம்

வரலாற்றிற்கு முந்தைய காலத்தையொட்டிய மனித வளர்ச்சியில் ஒருபடி நிலையைப் புகழ்வதும், போலியாகப் பயன்படுத்துவதும், பழைமைக் கண்ணோட்டமாகும். தொன்மையான, மாசுமறுவற்ற வாழ்வினை நினைவில் இருத்திக் கொள்வதும், அதுபற்றிய புனைக் கதையினைத் தோற்றுவிப்பதும் ஒவ்வொரு காலத்திலும் இருந்திருக்கிறது. சான்றாக மறைந்துபோன மாவீரர்களைப் புகழ்வதில் தொடங்குவதைக் கூறலாம்.

Primogeniture
முந்துபிறப்புநிலை

ஒருவித பரம்பரை உடைமை முறையைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. இதன்படி முதலில் பிறந்த மகன் (மூத்த மகன்) தகப்பனின் முழு

சொத்தையும் பட்டங்களையும் மரபுரிமையாகப்பெற்றுக்கொள்வார். பிற பிள்ளைகளுக்கு எந்த ஒரு பரம்பரை உடைமையும் இருப்பதில்லை.

Principle
அடிப்படைமெய்ம்மை/விதி

உண்மைக்கூறுகளுக்கிடை-யிலான அடிப்படைத் தொடர்புகள் பற்றிய அறிவிப்பு. அத்தகைய அறிவிப்புகள் நேரடிச்சான்றுகள் மூலம் நன்கு மெய்ப்பிக்கப்பட்டதாகவும் பரவலாக உண்மையென ஏற்றுக்கொள்ளப் பட்டதாகவும் இருக்கும். அவை கருதுகோள்களை உருவாக்கவும் புதிய உண்மைகளை வெளிப்படுத் தவும் பயன்படுத்தப்படுகின்றன. இது ஒரு ஒப்புக்கொள்ளப்பட்ட செயற்படுமுறை விதி. இதற்குச் சான்றாக அறிவியல் செயற்படு முறைகளைக் கூறலாம்.

Private Document
தனியார் சான்றாவணம்

ஒரு எழுத்தாளர் தன் பயன் பாட்டிற்காகவோ அல்லது தன்னைச் சார்ந்த நெருங்கிய குழு அங்கத் தினர்களுக்குச் செய்தி அளிப்பதற் காகவோ கருதி வைத்துள்ள சான்றாதாரம் அல்லது குறிப்புகள். நாட்குறிப்பேடுகள், கடிதங்கள் போன்றவை இதில் அடங்கும்.

Privilege
சிறப்புரிமை

ஒருநபருக்கு அல்லது ஒரு குழுவுக்கு உத்தரவாதமளிக்கப்பட்ட ஒரு நன்மை. இந்நன்மை குழுவின் அல்லது சமுதாயத்தின் ஏனைய நபர்களுக்கு அளிக்க மறுக்கப்பட்டதாக இருக்கும். பல சிறப்புரிமைகள் முதல்நிலையாக உயர் அந்தஸ்து பிரிவின் தனிக்குத்தகையாகக் காணப்படும்.

Privileged Familiarity
முன்னுரிமையானகட்டுப்பாடின்மை

ஒரு பண்பாட்டுப் பழக்கத்தைக் குறிக்கிறது. இது குறிப்பிட்ட அந்தஸ்து மக்களுக்கிடையே பல செயலெதிர் செயல்கள் மற்றும் தனிநிலையான கட்டுப்பாடின்மை ஆகியவற்றை அனுமதிக்கிறது. சான்றாகக் கேலிஉறவு அல்லது வேடிக்கைப் பேச்சைக் கூறலாம்.

Probationary Marriage
தகுதிகாண் மணம்

ஒருவர் தான் விரும்பும் பெண் ணைத் திருமணம் செய்துகொள்ள வேண்டுமாயின் அவள் வீட்டில் பல மாதங்கள் தங்கி அனைத் துவகையான சமுதாயப் பொரு ளாதாரச் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும். அவர் செய்யும் பணிகளில் பெண்ணின் பெற்றோர் நிறைவடைந்தால் பெண்ணைத் திருமணம் செய்து கொடுப்பர். இல்லையேல் மறுத்துவிடுவர். இதனைத் தகுதிகாண் மணம் என்பர். ஆசாமிலுள்ள குக்கி (Kuki) பழங்குடிகளிடம் இம்முறை காணப்படுகிறது.

Procedure
செயற்படுமுறை

அறிவுசார் அலசியாராய்தலில் ஆய்வுசெய்வதற்கான எந்த ஒரு நிலைநாட்டப்பட்ட முன்வரை வையும் குறிக்கிறது.

Process
நடைமுறை

தொடர்ச்சியான நிகழ்வுகளைக் குறிக்கிறது. அவை திரும்பத் திரும்ப நிகழ்கின்ற அங்கீகரிக்கத்தக்க முன்மாதிரியாக இருக்கும் அதனால் ஒருவர் அத்தகைய முன் மாதிரியை மேலும்மேலும் கூர்ந்து கவனிக்கத்தக்கதாக இருக்கும். சான்றாகச் சமூகவயமாக்க நடைமுறைகளைக் கூறலாம். சில முன்குறிக்கக்கூடிய குறிக்கோள் அல்லது பலனை நோக்கிய பாங்கத்தினைத் தொடர்ந்த எந்த தொடர்ச்சியான நிகழ்வுகளைக் குறிக்கவும் இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

Production
உற்பத்தி

பொருட்களின் உற்பத்தி அல்லது உற்பத்திப் பணிகளில் ஈடுபடுகிற அனைத்துப் பொருளாதாரச் செயல்பாடுகளையும் குறிக்கிறது.

Profession
வாழ்க்கைத்தொழில்

இச்சொல் உயர்அந்தஸ்து தொழிலைக் குறிக்கிறது. இது சமுதாயத்தில் தனித்துறை வல்லுனர் பங்கு வகிக்கும் உயர்பயிற்சி பெற்ற நிபுணர்களால் ஆனது. வாழ்க்கைத் தொழில் சில குணாதிசயங்களை உடையது. அதாவதுகோட்பாட்டு அறிவு அடிப்படையிலான திறமைகளின் பயன்பாடு, அத்தகைய திறமைகளில் கல்வி மற்றும் பயிற்சி போன்றவைகள் இதில் அடங்கும்.

Professional Thief
திருட்டுத்தொழிலர்

திருட்டை ஒரு தொழிலாகத் தொடருகின்ற ஒரு குற்றவாளி. திருட்டுத் தொழிலர் என்பவர் மருத்துவர்கள், வழக்கறிஞர்கள் ஆகியோரைப் போன்று பல்கூட்டான திறமைகள் மற்றும் கைத்திறம் உடையவராக இருப்பார்.

Progress
முன்னேற்றம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பெரும்பாலான சமூகவியல் ஆய்வுகளும் முன்னேற்ற ஊகத்தின் அடிப்படையிலானது. தொழில்நுட்ப முன்னேற்றம் பொருள்சார் நலனை ஏற்படுத்தியது எனக் கருதப்பட்டது. அவை உடல் நலம் மற்றும் நீண்டநாள் வாழ்வை எதிர்நோக்கும் நிலை ஆகியவற்றில் பிரதிபலித்தது. ஆலைமயம் குடியுரிமை வளர்ச்சி, எழுத்தறிவு, கல்வி ஆகியவற்றோடு தொடர்புடையதாயிருந்தது. முன்னேற்றம் அல்லது மேம்பாடு செயல்நோக்கம், அறிவு மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றின் வெளிப்படுதலாகும்.

Proletariat
கடைவகுப்பினர்

பண்டைய உரோம சமுதாயத்தில் மிகத்தாழ்வான சமூகவகுப்பைச் சேர்ந்தவர்களைக் குறிப்பதாக இச்சொல் காணப்பட்டது. பிற்காலத்தில் தாழ்ந்த வகுப்பினரைக் குறிக்க இச்சொல் பரவலாகப் பயன்படுத்தப்பட்டது. பின்னர் மார்க்ஸ் இச்சொல்லை தங்கள் வாழ்க்கையை நடத்துவதற்காக உழைக்கும் ஆலைத்தொழிலாளர்களைக் குறிக்க

நுட்பமாகப் பயன்படுத்தினார்.

Promiscuity
கண்டபடிக்கலப்பு

அனேக துணைகளோடு உடலுறவு கொள்வதைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. பண்பாட்டு முறையில் பால்களுக்கிடையிலான உறவு நிறுவனப்பாங்காக்கப்பட்டு வரண்முறைப்படுத்தப்படுவதற்கு நேர்மாறாக உடலுறவுகொள்வது.

Propaganda
பரப்புரை

பெருமளவிலான மக்களின் முடிவுகள் அல்லது நம்பிக்கைகளில் ஆக்கத்திரிபுகளை ஏற்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட முறையான ஒரு முயற்சி. இது முரண்பாடான கருத்துக்கள் மத்தியில் மக்களை ஒரு குறிப்பிட்ட திசையில் நடத்துவதற்கு வேண்டுமென்றே வடிவமைக்கப்பட்டதாக இருக்கும்.

Property
உடைமை/சொத்து

வழக்கமாகச் சமூகவியலில் உடைமை என்பது உயிரற்ற (நிலம், வீடு போன்றவை) மற்றும் உயிருள்ள (விலங்குகள், மக்கள்) பொருட்கள் மீதான உரிமைகளின் தொகுதி எனக் கருதப்படுகிறது. இத்தகைய உரிமைகள் சமூகரீதியில் நிர்ணயிக்கப்படுவதாகவும் அதனால் சமுதாயத்துக்குச் சமுதாயம் வேறுபடுவதாகவும் உள்ளது. ஒரே சமுதாயத்திற்குள்ளும் காலப்போக்கில் வேறுபடுவதுண்டு. சொத்துரிமை மக்களிடையிலான சமூக உறவுகளை மறைமுகமாகச் சுட்டுவதாக உள்ளது.

Prophet
தீர்க்கதரிசி

மதசார்பான புனித தலைவரைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. அவர் எதிர்கால நிகழ்வுகள் மற்றும் மதிப்பீடுகள் குறித்து வெளிப்படுத்தும் தெய்வீகத்திறம்உடையவராகக்கருதப்படுவார்.

Propinquity
ஒப்புமை

ஒப்புமை என்பது நெருக்கத்தைக் குறிக்கிறது. குடும்ப ஆய்வில் ஒப்புமை சில சமூக மாறிகளிடையே காணப்படும் ஒத்த தன்மையைக் குறிக்கிறது. இத்தகைய ஒத்த தன்மைகள் தனிநபர்களுக்கிடையே திருமண உறவு ஏற்பட ஊக்கமளிக்கின்றன. இவற்றில் வாழுமிட ஒப்புமை மற்றும் பணி ஒப்புமை என்பன மிகமுக்கியமானவைகளாகும்.

Proposition
ஆய்வுப்பொருள்/முன்மொழிவுச் செய்தி

உண்மைக்கூறுகளுக்கிடையிலான தொடர்புகள் குறித்த ஒரு பொதுவான அறிக்கை. சமூகவியலில் இச்சொல் நேரடித்தரவு அல்லது கள ஆய்வின் மூலம் உறுதி செய்யப்பட்ட ஒரு கருதுகோளைக் குறிக்கிறது. ஆனால் இது ஓர் அறிவியல்சார் விதியாகக் கருதப்படுவதற்குப் போதுமான அளவு நிலைநாட்டப்படாத ஒன்றாக இருக்கும்.

Prospective Study
எதிர்கால ஆய்வு

நிகழ்காலம் முதல் எதிர்காலத்தில் ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவரை ஒரே கருப்பொருளை ஆய்வுசெய்தல்.

Prostitute
விலைமகள்/பரத்தை

பாலுறவை விற்கும் பெண். தனக்குப் பணம் கொடுக்கும் எவருக்கும் பாலுறவை விற்பவள். இவள் ஒரு பண்புக்குழுவின் பாலுறவு வரையறையற்றவள். இயல்பான பாலுறவு நடத்தை குறித்த அறமுறைகளால் அவள் பாதிக்கப்படுதில்லை.

Protective Magic
பாதுகாப்பு மந்திரம்

இயற்கையின் கொடுங்கரங்களி லிருந்து காப்பாற்றிக்கொள்ளப் பயன்படுத்தப்படும் மந்திரம்

Protestant
மறுப்புரையாளர்

கிறித்துவச்சமயத்தில்கத்தோலிக்கக் கொள்கையை மறுத்துப் பிரிந்து சென்று போப்பாண்டவரின் ஆட்சிக்கு எதிரானகொள்கையைப்பின்பற்றுகின்ற கிறித்தவ சமயத்தினர்.

Proto-anthropologist
தொன்மை மானிடவியலார்

மானிடவியல் வரலாற்றில் 17ஆம் நூற்றாண்டின் இடைக்காலம் முதல் 18ஆம் நூற்றாண்டின் இறுதிக்காலம்வரை அறிவாற்றல் சார்ந்த பல சிந்தனையாளர்கள் தோன்றினர். 18ஆம் நூற்றாண்டு அறிஞர்களின் கருத்துகள், புனைவியல் கருத்துமிகுந்த தொன்மைத் தன்மை உடையது என்றும் அக்காலக் கட்டத்தில் காணப்பட்ட மானிடவியல் அறிஞர்களைத் தொன்மை மானிடவி யலார் என்றும் கூறுவர்.

Pseudo-Communication
போலித்தகவல்தொடர்பு

தனிநபர்கள் அல்லது குழுக்களுக் கிடையிலான ஒருவித தகவல்தொடர்பு. இதில் ஒவ்வொரு சார்பினரும் தங்கள் தகவலின் முக்கியக்கூறுகளை ஏனைய சார்பினர் புரிந்து கொள்கிறார்கள் என்று நம்பு கிறார்கள். உண்மையில் இரு வேறுபட்ட ஆர்வங்கள் மற்றும் தொலைவுத்தோற்றம் காரணமாக இருசார்பினரும் உரையாடலின் ஒவ்வாத பண்புக்கூறுகளில் கவனம் செலுத்திக்கொண் டிருப்பார்கள். இதனை போலித் தகவல்தொடர்பு என்பர்.

Pseudo Science
போலி அறிவியல்

ஒருவித நம்பிக்கைமுறையைக் குறிக்கிறது. அத்தகையநம்பிக்கைகள் குறிக்கோள் மற்றும் அறிவியல்ரீதி யிலானது என உரிமை கோரப்படும். ஆனால் உண்மையில் அதன் முயற்சியில் விதிமுறையான செயல்முறைகளையோ அல்லது அறிவியல்சார் முறைகளையோ மதிப்பதும் கையாள முயல்வதும் இல்லை. சோதிடம், இரேகை சாத்திரம் போன்றவற்றைப் போலி அறிவியலுக்குச் சான்றாகக்கூறலாம்.

Psychoanalysis
உளவிளக்கம்

ஒருவரின் நடவடிக்கைகளை நிர்ணயிப்பதற்கு அவரது உள் மனம், பாலுணர்வு மற்றும் குழந்தைப்பருவ அனுபவங்கள் ஆகியவற்றிற்கு இக்கோட்பாடு முக்கியத்துவம் அளிக்கிறது. ஆளுமை வளர்ச்சி பற்றிய விளக்கம் உளவிளக்கக் கோட்பாட்டின்கீழ் வருகிறது.

Psychological Anthropology
உளவியல்சார் மானிடவியல்

இத்துறையில் உளவியல் கொள்கைகளையும் அதன் ஆய்வு முறைகளையும் பண்பாட்டிடை நிலையில் பயன்படுத்தவும் சோதித்தறியவும் செய்வர். இதனைப் பண்பாடும் ஆளுமையும் குறித்த ஆய்வுகள் எனவும் கூறுவர்.

Psychological Sociology
உளவியல்சார் சமூகவியல்

சமூகவியல்சார் இயல்நிகழ்ச்சிகளை முதல்நிலையாக தனிநபர்களின் உளவியல்சார் ஆக்கக்கூறுகளான ஆசைகள், செயல்தூண்டுதலுணர்ச்சிகள், ஆர்வங்கள், விருப்பங்கள், தேவைகள், உணர்ச்சிகள் மற்றும் தூண்டுதல்கள் ஆகியவற்றின் எல்லைக்குள் விளக்க முற்படும் அறிவுப்பகுதி அல்லது கருத்துக்கொள்கை.

Puberty
பூப்புப்பருவம்

பாலின முதிர்ச்சியின் தொடக்ககாலம். அதாவது ஒரு தனிநபர் தகப்பனாக அல்லது கருத்தரிக்கத் தகுதிபெறும் பருவம். இப்பருவத்தில் இரண்டாவது நிலை பால்சார் குணாதிசயங்கள் தோன்றும்.

Puberty Rites
பூப்புப் பருவச்சடங்கு

ஒருவர் குழந்தைப் பருவத்திலிருந்து வயதுவந்த நிலைக்கு அல்லது பாலின முதிர்ச்சியின் தொடக்க காலத்திற்குக் கடந்துசெல்லும் சமூக அங்கீகாரச் சடங்கு. இது படிப்பறிவுநிலைக்கு முந்தையநிலைச் சமுதாயங்களில் அதிகமாகக் காணப்படுகின்றது. குறிப்பாக பெண்களுக்கு இச்சடங்கு நடத்தப்படுகிறது.

Public
பொதுமக்கள்/சமுதாயமக்கள்

ஒரு குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான தனிநபர்கள். அவர்கள் ஏனையவர்களும் அவர்களும் தெரிந்துள்ள பொது ஆர்வங்களை அல்லது நலன்களைப் பகிர்ந்து கொள்வார்கள். அத்தகைய பொதுநலன் காரணமாக பொதுமக்களிடையே ஒருவித ஒற்றுமை உணர்வும் இனவுறுதிப்பாடும் காணப்படும்.

Public Document
பொதுச்சான்றாவணம்

பொதுவாக எல்லா மக்களும் பார்க்கக்கூடிய குறிப்புகள், புத்தகங்கள், செய்தித்தாள்கள் போன்றவை பொதுச்சான்றாவணமாகும். அவை மிகுந்த கவனத்தோடு பாதுகாக்கப்படும்.

Punaluan Family
குழுமணக் குடும்பம்

ஓர் இரத்தக்குழுவைச் சேர்ந்த

சகோதரிகளைத் திருமணம் செய்து கொள்ளும் முறையால் குழுமணக் குடும்பங்கள் தோன்றுகின்றன. இம்முறையில் இரத்தவழித் தொடர்பற்ற, ஒத்த வயதுதுடைய ஆண்கள் வேற்றுக்குழுவைச் சேர்ந்த சகோதரிகள் அனைவரையும் மணப்பதும், இரத்தவழித் தொடர்பற்ற ஒத்த வயதுடைய பெண்கள் வேற்றுக்குழுவைச் சேர்ந்த சகோதரர்கள் அனைவரையும் மணப்பதும் அடங்கும் இங்கு சகோதரர்கள், சகோதரிகள் என்பது ஒரே தாய் தந்தையருக்குப் பிறந்தவர்களையும் கிளைவழிச் சகோதர சகோதரிகளையும் குறிக்கும்.

Punishment
தண்டனை

தண்டனை சமூகக்கட்டுப்பாட்டுக்கு ஓர் உத்தியாகச் செயல்படுகிறது. தண்டனையானது ஆதரவைப் பின்வாங்குவது மற்றும் வலியத் தாக்கும் தூண்டுதல்களிலிருந்து பாதுகாப்பளிக்க மறுப்பது ஆகியவற்றில் ஈடுபடுகிறது. பொதுவாக இத்தகைய ஆதரவு மற்றும் பாதுகாப்பு சமூக வாழ்வின் வேண்டுகோள்களுக்கு உடன்படுகிறவர்களுக்கு அளிக்கப்படுவதாகும்.

Purdah
படுதா/திரை

பொதுமக்களின் பார்வையிலிருந்து பெண்களை ஒதுக்கிவைக்கும் பழக்கம். முகமதியர்களிடையே இப்பழக்கம் காணப்படுகிறது.

Push-Pull Migration Hypothesis
தள்ளு-இழு இடப்பெயர்வு கருதுகோள்

மக்கள்தொகையியல் சார்ந்த ஒரு கருதுகோளைக் குறிக்கிறது. அதாவது இடப்பெயர்வானது பண்புக்குழுக்களின் சமூக மற்றும் பொருளாதார விரும்பத்தக்க தன்மைகளில் காணப்படும் வேறுபாடுகளால் ஏற்படுகிறது என்ற கருத்து. இடம் பெயர்பவர்கள் ஒரு பண்புக்குழுவிற்காக இன்னொரு பண்புக்குழுவை விடுகின்றனர். தங்கள் பழைய பண்புக்குழுவின் சாதகமற்ற நிலைகள் காரணமாக அதைவிட்டுவிடுவதையும் (தள்ளுதல்) புதிய பண்புக்குழுவின் ஈர்க்கத்தக்க நிலைகளால் இழுக்கப்படுவதையும் (இழுத்தல்) காணலாம்.

Q

Qualitative Analysis
பண்புவகைசார் ஆய்வு

துல்லியமான மற்றும் எண்முறைத் தகுதி அடிப்படையில் இல்லாத ஆய்வு. சமூகவியல் ஆய்வுகள் பெரும்பாலும் பண்புவகைசார் ஆய்வுகளாகும். ஆய்வுக்குறிக்கோள்கள் இயல்நிகழ்வுகளைப்புரிந்துகொள்வதில் ஈடுபடுவதால் எண்முறையிலான அய்வுதேவைப்படுவதில்லை என்பதே இதற்குரிய காரணமாகும். சான்றாகப் பங்கேற்று கூர்ந்துநோக்கும் ஆய்வுமுறையில் சமூகவியலார் சமூக நடக்கைமுறையைக் கூர்ந்து நோக்குவதை மட்டும் குறிக்கோளாகக் கொண்டிருப்பார்கள். குறிப்பிட்ட நடக்கை முறையில் எடுத்துக்

காட்டுகளை எண்ணிக்கையாகக் கொள்வதில்லை.

Quantitative Analysis
எண்முறை ஆய்வு

புள்ளியல் முறையைக் கையாண்டு களப்பணிச் செய்திக்கூறுகளை ஆராய்தல். அதிக எண்ணிக்கையிலான பேட்டியாளர்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டால்தான் இம்முறையைக் கையாள இயலும்.

Quantitative Data
எண்முறைச் செய்திக்கூறுகள்

எண்ணிக்கை வாயிலாக அறியப் படும் செய்திக்கூறுகள். இதில் புள்ளிவிவரங்கள் அடங்கும்.

Quasi Group
முழுமையற்றக் குழு

ஒழுங்கமைக்கப்படாதவடிவமைப்பற்ற மக்கள் தொகுதியைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. மக்கள்திரள், சமூகப்பிரிவு, கூட்டம் ஆகியவற்றின் உறுப்பினர்கள் குழு உருவாவதற்கான உள்ளார்ந்த ஆற்றல்உடையவர்களாகஇருப்பார்கள். இதனை முழுமையற்றக் குழு என்பர்.

Quasi Household
முழுமையற்றக் குடும்பம்

குடியிருப்பிடமாக வகைப்படுத் தப்படாத ஓர் உறைவிடத்தில் வாழும் குழு. சான்றாக ஒரு பெரிய விடுதி, தோழமைக் கழகம், வாடகை அறைகளுள்ள வீடு அல்லது போர்வீரர் குடியமைப்பு வரிசை ஆகியவற்றைக் கூறலாம்.

Questionnaire
வினாப்பட்டியல்

ஆய்வுப்பொருளை மையமாகக் கொண்ட வினாக்களைக் கொண்டது. வினாக்கள் முறைப்படி வரிசைப் படுத்தப்பட்டிருக்கும். பொருத்தமான சொற்களைக் கொண்டு எளிய நடையில், பேட்டி கொடுப்பவர் புரிந்துகொள்ளும் வண்ணம் வினாப்பட்டியல் இருக்கும்.

Questionnaire Method
வினாப்பட்டியல் ஆய்வுமுறை

பேட்டி கொடுப்பவர் தன்னுடைய பதில்களை வினாப்பட்டியலில் எழுதிப் பூர்த்தி செய்யும் வினாப் பட்டியல் வகை. இம்முறை எளிதானதும் அதிக செலவில்லாத துமாகும். இம்முறையில் குறைந்த காலத்தில் அதிக மக்களிடமிருந்து செய்திகளைப் பெறலாம். இம்முறையில் சில குறைபாடுகள் உள்ளன. எடுத்துக்காட்டாக பூர்த்திசெய்த வினாப்பட்டியலைப் பலர் அனுப்புவதில்லை. கேள்விகளைப் பலர் புரிந்துகொள்வது இல்லை. இம்முறை படித்த மக்களிடையே மட்டுமே உகந்ததாக உள்ளது.

R

Race
இனம்

பொதுமரபில் இணைந்த குழு. இதில் அதிக எண்ணிக்கையிலான மக்கள் ஒரு தனித்த மரபுவழிப் பண்பியல்பு சார்ந்த உட்பொருளாக அமைவார்கள். அவர்கள் பொதுவான மூதாதையர்களிடமிருந்துமரபுவழியாகப் பெற்றுக்கொண்ட ஒத்த உடற்

கூற்றுப்பண்புகளை உடையவர்களாக இருப்பார்கள். இத்தகைய வரையறை துல்லியமான மதிப்புடையதாக இருந்தாலும் தற்போதைய மானிடவியல் ஆய்வு மற்றும் உத்திகளால் நிறுவ இயலாது என்ற எதிரான நிலையும் உள்ளது. எனினும் பொதுவாகப் பண்பாட்டு அளவில் வரையறுக்கப்பட்ட அனைத்து மக்கள் பிரிவுகளிலிருந்தும் பிரித்தறியப்படத்தக்க, உயிரியல் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட ஒரு மக்கள் பிரிவைக் குறிப்பிடுவதற்கு இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

Race Awareness
இனவிழிப்புணர்வு

ஒருவரின் சொந்த குழு உறுப்பினர்களுக்கும் ஏனையவர்களுக்குமிடையே காணப்படும் உடற்கூற்றுப்பண்புசார்வேறுபாடுகளைக் குறித்த உள்ளுணர்வு. இவ்வேறுபாட்டுணர்வுகள் அந்தஸ்து வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டுகின்றன என்ற எண்ணத்தோடு தொடர்புடையதாக அமைகிறது.

Race Relation
இன உறவுகள்

இன வேறுபாடுகளைக் குறித்த விழிப்புடைய வெவ்வேறு இனங்களைச் சார்ந்தவர்களிடையே காணப்படும் உறவுகள்.

Racial Minority
இனச்சிறுபான்மை

ஒரு சமுதாயத்தில் வேறுபடுத்தி உணரப்படுகின்ற, வேற்று இனத்தைச் சேர்ந்தவர்களால் மேலாதிக்கம் செலுத்தப்படுகின்ற ஓர் இனத்திரள். இவர்களின் எண்ணிக்கை ஏனைய இனத்தைவிடக் குறைவாகக் காணப்படும்.

Raciology
இனவியல்

தற்கால மனிதனின் அனைத்து இனங்களும் நியாண்டர்தால் மூதாதையிலிருந்து ஒரே சிறப்பினமாகத் தோன்றியவை என்பது குறித்தும், பல்வேறு காரணிகளின் தாக்கத்தினால் இச்சிறப்பினத்தில் பல வேறுபாடுகள் ஏற்பட்டு இன்று பல இனங்களாகப் பிரிவுபட்டுள்ளன என்பது குறித்தும் ஆராய்வது இனவியலாகும்.

Racism
இனஉயர்வுக்கொள்கை

தொழில்நுட்பத்தில் உயர்ந்து காணப்பட்ட ஐரோப்பியர்கள் தங்களை உயர்ந்தவர்கள் என்றனர். ஐரோப்பியரல்லாத மக்களைத் தாழ்ந்தவர்கள் என்றனர். இந்த உயர்வெண்ணம் புவியியல், அரசியல் வெற்றிகளோடு நிற்காமல் இனஉயர்வு வரை சென்றுவிட்ட நிலையே இன உயர்வுக் கொள்கையின் தோற்றமாகும்.

Racket
கூட்டுப்பிறழ்நடத்தை

வாணிகத் தொடர்புடைய கூட்டிணைவான செயற்பாடுகள். இது மக்கள்தொகையில் குறிப்பிடத்தக்க பகுதியினரால் ஆதரவளிக்கப்படுவதாக இருந்தாலும் சட்டத்துக்குப் புறம்பானதும் முழுமையாக அமைப்புமுறையாக்கப்படாததாகவும்

இருக்கும். சான்றாகச் சூதாட்டம், கள்ளச்சாராய வணிகம் மற்றும் பரத்தமை போன்றவற்றைக் கூறலாம்.

Radical
தீவிர சிந்தனைவாதி

தற்போதைய சமுதாய அமைப்பு அநீதி நிறைந்தது என்றும் சமுதாயத்தின் அடிப்படையிலேயே மிகுந்த மாறுதல்களைச் செய்ய வேண்டும் என்றும் தீவிரமாக நம்புகிறவர். சமுதாயத்தில் உயர் மடத்தில் உள்ளவர்களின் வாழ்க்கைக்கேற்றவாறு பொருளாதார மற்றும் சமூக அமைப்புக்கள் உள்ளன என்றும் கீழ்மட்டத்தில் உள்ளவர்களைச் சமுதாய அமைப்பு முன்னேறவிடாமல் செய்கிறது என்றும் நம்புகிறவர்.

Randomness
தொடர்பின்மை

முன்குறிக்க இயலாத ஒழுங்கில் காணப்படுகின்ற நிகழ்வுகளைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. ஒரு நிகழ்வின் தோற்றம் இன்னொரு நிகழ்வின் தோற்றத்தில் ஆக்கத்திரிபுகளை ஏற்படுத்துவதில்லை. ஒவ்வொரு நிகழ்வும் தனித்தனியாக அல்லது சுதந்திரமாகக் காணப்படும்.

Rank Societies
தரநிலைச் சமுதாயங்கள்

மரபுவழியில் அமையப்பெற்ற சில காரணிகளால் சமுதாயத்தில் தனித்தனித் தகுதிகள் கொண்ட சில தரப்பிரிவுகள் காணப்படும். தரப்பிரிவுகள் தகுதி, அந்தஸ்து ஆகியவற்றில் சமமின்மை உடையதாகவும் பொருளாதார வாய்ப்பில் ஓரளவு சமநிலை உடையதாகவும் காணப்படும். இத்தகைய சமூக அமைப்பில் தலைவன் உயர்ந்த தகுதியைப் பெற்றிருப்பான். வடமேற்குப் பசிபிக் கடற்கரைப் பகுதிகளில் வாழும் இந்தியப் பழங்குடிகள் தரநிலைச் சமுதாய வகையில் குறிப்பிடத்தக்கவர்கள்.

Rank Status
தரநிலை அந்தஸ்து

தனிநபரின் நிலை ஒரு குறிப்பிட்ட படிநிலை அமைப்புக்குள் அல்லது தரநிலை ஒழுங்குக்குள் உள்ளது என்ற கருத்து.

Rank System
தரநிலைமுறை

ஒரு குறிப்பிட்ட சமூகப் படிநிலை அமைப்புக்குள் தரநிலை அந்தஸ்துகளின் ஒழுங்கமைப்பு மற்றும் இடைத்தொடர்புகள்.

Rapport
ஒத்திசைவு

ஓர் ஆய்வாளருக்கும் அவருடைய ஆய்வு குடிமக்களுக்குமிடையிலான ஒத்துணர்வுடைய இணக்கமான உறவு. ஒத்திசைவை அடைவதற்கு ஆய்வாளர் வழக்கமாகத் தன்னுடைய ஆய்வு, ஆய்வுக்குட்படுகின்ற மக்களுக்கு எத்தகைய தீங்கையும் விளைவிக்காது என்பதைக் காண்பிப்பதன் மூலம் குடிமக்களின் நம்பிக்கையைப் பெற முயற்சிப்பார். இது சமூகவியல் மற்றும் பண்பாட்டு மானிடவியல் ஆய்வு

களில் மிக முக்கியமானது.

Rating
வீத அறுதிப்பாடு

சமூக அறிவியல் ஆய்வில் பயன்படுத்தப்படுகின்ற ஒரு முறை. இதில் தனி மனிதர்கள் பிறரின் அல்லது தங்களின் குணாதிசயங்களை மதிப்பீடு செய்து பதிவு செய்வார்கள். வீத அறுதிப்பாடு தனித்துறை அறிவு படைத்த நடுவர்களால் அல்லது கூர்ந்துநோக்குபவர்களால் மேற்கொள்ளப்படும்.

Rational Behaviour
அறிவுசார் நடக்கைமுறை

ஒழுங்குமுறையான, நேர்மையான சிந்தனையோடு ஒத்திசைகிற நடக்கைமுறை. சமூக நடக்கை முறையில் செயல்பாடுகள் பொது வாக அறிவு சார்புடையதாக மதிப்பிடப்படுகிறது.

Rationalization
அறிவார்ந்த விளக்கம்

ஏற்றுக்கொள்ளக்கூடியமறுவிளக்கம். வேதனைக்குரிய ஒரு நிகழ்ச்சியைத் தானும் பிறரும் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் அறிவார்ந்த விளக்கம் அளித்தல்.

Real Culture
நடைமுறைப் பண்பாடு

சமுதாயத்தில் கடைபிடிக்க வேண்டும் என்று சொல்லப்படுகிற எல்லாப் பண்பாட்டுமுறைகளையும் மக்கள் நடைமுறை வாழ்வில் கடைபிடிப்பதில்லை. சான்றாகக் கொல்லாமையைப் போதிக்கும் மதத்தினர் புலால் உண்ணுவதைத் தவிர்க்கவேண்டும். ஆனால் அவர்களில் பெரும்பான்மையோர் புலால் உண்ணுபவராகவும் மது அருந்துபவராகவும் இருப்பதுண்டு. மக்கள் சமுதாயத்தின் சட்டதிட்டங் களைக் கவனத்தில் கொள்ளாமல் நடைமுறை வாழ்வில் எவ்வாறு நடந்துகொள்கிறார்கள் என்பது நடைமுறைப் பண்பாடு. பொது வாழ்வில் லஞ்சம் வாங்குவது தவறு என்பது சட்டம். ஆனால் அது நடைமுறையில் செயல்படுத்தப் படுவதில்லை என்பது நடைமுறைப் பண்பாடு. அதாவது மக்கள் ஏற்றுக்கொண்ட விதிமுறைகளையே மீறி செயல்படும் இயல்பான நிலை.

Real Definition
மெய்யான பொருள் வரையறை

குறிப்பிட்ட ஓர் இயல்நிகழ்ச்சியின் இன்றியமையாத தன்மைகள் குறித்த ஓர் ஆய்வுப்பொருள் வரையறை ஒரு மெய்யான பொருள் வரையறையை "அலசி ஆராய்தலுக்குட்பட்டிருக்கின்ற இயல்நிகழ்ச்சியின் தன்மை குறித்த கருதுகோள்" என்று குறிப்பிடலாம்.

Realistic Category
உண்மைசார்வகை

மானிடவியலார் இருவகைகளில் பண்பாட்டை விளக்க முற்படுகின் றனர். அவற்றில் ஒன்று உண்மை சார் வகை. இவ்வகையில் நேரடியாக உற்றுநோக்குதல் மூலம் அறியப்படும் நடத்தை முறைகளையும் அதோடு தொடர்

புடைய வகைகளையும் கொண்டு பண்பாட்டை விளக்க முற்படு கின்றனர்.

Reasoning
வாதமுறையாக்கம்

தொடர்புடைய அனைத்து அனுபவங்களின் அமைப்பாண்மை அல்லது ஒரு குறிப்பிட்ட சிக்கல் மற்றும் சூழ்நிலையோடு தொடர்புடைய உறவுகள். வாதமுறையாக்கம் ஒருவருக்கு ஒரு சிக்கலை அல்லது சூழ்நிலையைப் பொது வான சமூக, பண்பாட்டு அல்லது உளவியல்சார் பாங்கத்தில் பொருத்த உதவுகிறது. இதனால் அவருடைய முடிவுகள் மற்றும் செயல்கள் தொடர்ச்சியானதாகவும் பிறரால் புரிந்துகொள்ளக் கூடியதாகவும் இருக்கும்.

Recidivism
மீண்டும் குற்றம்புரிகை

மீண்டும் குற்றஞ்செய்யத் தலைப்படும் நடக்கைமுறையைக் குறிக்கிறது. குறிப்பாகச் சிறைத் தண்டனைக்குப் பின்பும் குற்றம் செய்ய முற்படுவது இதற்குச் சான்றாகும். மீண்டும் குற்றம் செய்வது அவர்களின் பழக்க மான செயலாகக் காணப்படும்.

Reciprocity
பரிமாற்றம்

பரிமாற்றம் என்பது பணத் தைப் பயன்படுத்தாமல் ஒரு பொருளைக் கொடுத்து வேறொரு பொருளைப் பெறுவது. இதில் மூன்றுவகைப் பரிமாற்றங்கள் இடம் பெறுகின்றன. அவை பொதுப்படியான பரிமாற்றம், சமச்சீர் பரிமாற்றம் மற்றும் எதிர்மறைப்பரிமாற்றம் ஆகியவையாகும். இவற்றிற்கிடையிலான வேறுபாடு பரிமாறிக்கொள்ளும் நபர்களின் சமூக இடைவெளியைப் பொறுத்து அமைகிறது.

Recognition
ஏற்பு/அங்கீகாரம்

ஒருவரின் நேர் அளவையிலான சீர்தூக்கல் அல்லது சாதகமான நோக்கு அல்லது ஒருவரைக் குறிக்கும் பிறரால் ஆன சில குணாதிசயங்களைக் குறிக்கிறது.

Recreation
இன்பப் பொழுதுபோக்கு

இயல்பான பணியல்லாத இன்பக் கேளிக்கைகளில் ஈடுபடுகின்ற செயல்பாடுகள். இன்பப் பொழுது போக்குச் செயல்பாடுகள் பெரும் பாலும் பண்பாட்டு ரீதியிலும் சமூகரீதியிலும் வடிவமைக்கப் பட்டிருக்கும். விளையாட்டுகள் இயல்பான பணி மற்றும் பொறுப்புகளிலிருந்து இடைஓய்வு பெறுவதற்காக வடிவமைக்கப்பட்ட உத்திகளாகும்.

Redistribution System
மறுபங்கீட்டுமுறை

ஒருசமூகத்தின் விளைபொருட்கள் அனைத்தும் தலைவரிடம் சேர்க் கப்பட்டு அவர்மூலம் மீண்டும் மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் முறை மறுபங்கீட்டுமுறையாகும். பல ஆப்பிரிக்கப் பழங்குடி யினரிடம் இம்முறை காணப்படுகிறது.

Reference Group
முன்மாதிரிக்குழு

ஒருவர்தன்னுடையமுடிவுகளுக்கும், செயல்பாடுகளுக்கும் முன்உதார ணமாகக் கொள்ளும் குழு.

Reference Individual
முன்மாதிரிநபர்

ஒருவர் தன்னை ஒரு தனி நபரோடு ஒற்றுமைப்படுததிக் கொண்டு பல்வேறு சூழ்நிலைகள் மற்றும் பங்குகளில் அவருடைய நடக்கைமுறையைப் போன்று தன் நடைக்கை முறையை பாங்காக்கிக் கொள்வார். அவ்வாறு முன்மாதி ரியாக இருக்கும் நபரை முன் மாதிரி நபர் என்பர். முன்மாதிரி நபரின் பெரும்பான்மையான மதிப்பீடுகள், விதிமுறைகள் மற்றும் மனப்பான்மை ஆகியவை ஒற்று மைப்படுத்திக்கொள்ளும் நபரால் உள்வாங்கிக் கொள்ளப்படுகின்றன.

Regimentation
ஒருதிறமாக்குதல்

சமூகஒழுங்குகளில் ஒருவித தரப்படுத்தலைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. இது அமைப்பாண்மைரீதியில் ஓர் உருப்படுத்தலைச்சின்னமாயமைத்துக் காட்சிப்படுத்துவதாக உள்ளது. மேலும் குழுவின் ஒருமைப்பாடு அதனுள் ஒரு மதிப்பீடாகப் பெருமைப்படுத்தப்படுகிறது.

Region
பகுதி / நிலப்பரப்பு

சில தன்மைகளில் ஒரு சீரான நிலப்பரப்புசார் பகுதியைக் குறிக்கிறது. நிலப்பரப்பு எல்லை குறிக்கப்படு வதற்கான பொதுவான அடிப்படைக் கூறுகள் நிலவியல், பொருளாதாரம், பண்பாடு அல்லது இவற்றின் கலவையாகும் எனவே ஒரு நிலவியல்சார் பகுதி குறிப்பிட்ட விதத்திலான காலநிலை, திணைநிலம், மண்வளம், உயிரினத்தொகுதி ஆகிய குணாதிசயங்களை உடையதாக இருக்கும்.

Regionalism
நிலப்பகுதிவாதம்

நடக்கைமுறை ஆய்வில் நிலவியல்சார் பகுதியை ஓர் ஆய்வு ஒருமமாக வலியுறுத்தும் அணுகுமுறையைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. இது மனிதனுக்கும் அவனைச் சார்ந்த சுற்றுச்சூழலுக்குமிடையிலான உறவுகளை வலியுறுத்துகிறது. பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு அமைப்பாண்மைகள் ஆகியவை ஒரு நிலவியல்சார் பகுதிக்குள் அவற்றின் இடைத் தொடர்புகள் மற்றும் செயல்பாடு களின் வாயிலாக ஆராயப்படுகின்றன.

Regional Sociology
நிலப்பகுதிசார் சமூகவியல்

நிலப்பகுதிகளைத் தனித்தன்மை வாய்ந்த சமுதாயங்களாகக் கொண்டு அவற்றிற்கே உரிய சிறப்பியல்புப் பண்பாடு, மொழி மற்றும் கிளைமொழி, அரசியல் மனநிலைச் சார்பு மற்றும் பாரம்பரியம் ஆகியவற்றைக் குறித்து ஆராய்வது நிலப்பகுதிசார் சமூகவியலாகும்.

Regulatory Law
ஒழுங்குபடுத்து விதி

மரபு, வழக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் அல்லாத விதி. துரிதமாக மாறிவரும் சமுதாயத்தின் புதிய தேவைகளைச் சந்திப் பதற்காக இயற்றப்படும் சட்டம். துரிதமான சமூக மற்றும் தொழில் நுட்ப மாறுதல்கள் ஏற்படும்போது ஒழுங்குபடுத்துதல் தேவைப்ப டுகின்ற நிலைமைகள் தோன்று கின்றன. இத்தகைய ஒழுங்குபடு த்துதலுக்கு மரபுவழக்கமான விதிமுறைகள் போதுமானதாக அமைவதில்லை.

Rejection
மறுத்தொழிப்பு

சமூக நடக்கைமுறையில் இச்சொல் ஒருவரை உரிய இயல்பான சமூக கொடுக்கல் வாங்கல்களிலிருந்து விலக்கும் செயலைக் குறிக்கிறது. மறுத் தொழிப்பது ஒருவரைச் சமூகக் குழுவிலிருந்தோ அல்லது சமூக உறவுகளிலிருந்தோ விலக்கும்போது மட்டும் ஏற்படுவதில்லை. ஒருவர் உரிய சமூகப் பங்குகள் அல்லது உறவுகளிலிருந்து மறுக்கப்படும் போதும் ஏற்படுகிறது.

Relative Deprivation
ஏமாற்ற உணர்வு

மக்கள் முக்கியமாகத் தங்கள் சாதகமற்ற சூழ்நிலைகளை ஏனைய நபர்கள் அல்லது குழுக்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஏமாற்ற உணர்வை அனுபவிக்கின்றனர். ஒப்பிட்டுப்பார்ப்பது மக்கள்தொடர்பு கொள்கிற நபர்களோடும் பிறரோடும் ஏற்படலாம். ஒரு நபர் அல்லது குழு எந்த காரியங்களை மற்றும் எந்த முன்மாதிரிக் குழுவை ஒப்பிட்டுப் பார்பதற்கு எந்த மையப்பொருளைத் தேர்ந்தெடுக்கிறார் என்பது முக்கியமானது.

Relevant Theoritical Model
கோட்பாட்டு உருவம்

பொருத்தமான கோட்பாட்டு உருவப்படிவம். ஆய்வின் ஆரம்பத்தில் கோட்பாட்டு உருவப் படிவத்தில் கண்ட ஊகங்களைக் கள ஆய்வில் சேகரிக்கப்பட்ட செய்திக் கூறுகளோடு ஒப்பிட்டு உறுதிசெய்யக்கூடிய உருவம்.

Religion
சமயம்/மதம்

நம்பிக்கையின் அடிப்படையிலான ஒரு நடத்தை ஒழுங்குமுறை மற்றும் முறையான உறவுகளுக்கு எல்லைக்கோடு. இது கடவுளுக்கும் மனிதனுக்குமிடையே சரியான உறவை ஏற்படுத்துகிறது. சமயம் பல முறைகளில் வழிபாடு மற்றும் பொருத்தமான சடங்குகளைச் செயலுருப்படுத்துகிறது.

Religiosity
சமய உணர்வுடைமை

சமய உணர்வுடைமை ஒரு தனிநபர் சமயச் சடங்குகளில் பங்கேற்கும் அளவைப் பொறுத்து வரையறுக்கப்படலாம் அல்லது ஒரு குழுவுக்குள் மற்றும் சமுதா யத்துக்குள் மதசாரபானதாகக் கருதப்படும் பலதரப்பட்ட நடக்கை முறைகள் மற்றும் மனப்பான்மை களைப் பொறுத்து சமய

உணர்வுடைமைவரையறுக்கப்படலாம்.

Religious Institution
சமயநிறுவனம்

வாழ்க்கையின் செயல்நோக்கம் மற்றும் இறப்பின் பொருள், துன்பம் மற்றும் எதிர்பாராத நிகழ்வுகள் ஆகியவற்றோடு தொடர்புடைய வினாக்களுக்குப் பதிலளிக்கும் தேவைக்காக ஒழுங்கமைக்கப்பட்ட சமூகக் கட்டளைச் சட்டங்களின் அமைப்பு. இயற்கை கடந்த நிலைகள் மற்றும் தெய்வநிலையினரோடு மனிதனின் உறவுகளின் தன்மை ஆகியவற்றை வரையறுப்பதன்மூலம் சமய நிறுவனம் மேற்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்கிறது.

Research
ஆராய்ச்சி

பொதுவான விதிமுறைகளை வெளிக்கொண்டு வருவதற்காக ஒரு சிக்கலை ஆராய்வதற்குப் பயன்படுத்தப்படும் முறையான மற்றும் குறிக்கோள் நிலையிலான முயற்சி. ஆராய்ச்சி இயற்கனவே சேகரிக்கப்பட்ட செய்திகளோடு மேலும் அறிவைச் சேர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கும்.

Research Design
ஆய்வுத்திட்ட வரைவு

ஆய்வுத்தரவுகளைச் சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் சீர்தூக்குதல் ஆகியவற்றிற்காகத் திட்டமிடுதலைக் குறிக்க இச்சொல் பயன்படுகிறது. கட்டுப்பாட்டுக்குட்பட்ட சோதனை மற்றும் திட்டமிடப்பட்டகளஆய்வு ஆகியவை ஆய்வுத்திட்ட வரைவு மாதிரிகளாகும்.

Research Project
ஆய்வுத்திட்டம்

ஆய்வுத்திட்டம் ஒரு பல்கலைக் கழகத்தில் அல்லது ஆய்வு நிறுவனத்தில் நடைபெறும். அரசு நிறுவனம் அல்லது தனி அமைப்பின் நிதிஉதவியோடு நடைபெறும். ஆய்வுக்காலம் நிர்ணயிக்கப்பட்டிருக்கும். பொதுவாக ஆய்வுமுடிவுகள் வெளியிடப்படும்.

Research Questions
ஆய்வுவினாக்கள்

ஆய்வுத்திட்டத்தின் குறிக்கோள்களோடு தொடர்புடைய முக்கியமான வினாக்கள். இந்த ஆய்வுவினாக்கள் செய்திக்கூறுகளைச் சேகரிக்கும் உத்திகள் மற்றும் ஆய்வுத்திட்ட வழிமுறைகள் ஆகியவற்றை நிர்ணயிக்க அல்லது தீர்மானிக்க உதவுகிறது.

Residential Propinquity
வாழுமிட ஒப்புமை

அண்மையில் வாழும் இருவர் அடிக்கடி சந்திப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படுகின்றன. இது திருமணம் தொடர்பான முடிவுகள் எடுப்பதற்கு வாய்ப்பாக அமைகிறது. அண்மையில் வாழுபவர்களோடு திருமணத்தொடர்பு கொள்ளும்போது ஒருவரைஒருவர் புரிந்துகொள்வது எளிதாகுகிறது. இத்தகைய திருமணங்களில் அகமணக்குழுத் தன்மைகள் காணப்படும். மேலும் அவர்களிடையே வழிபாடு, சாதி, சமூகப் பொருளாதார அந்தஸ்து, பழக்கவழக்

கங்கள் ஆகியவற்றில் ஒத்த தன்மைகள் அதிகமாகக் காணப் படும். வாழுமிட ஒப்புமை திருமணத்துக்குப்பின் ஏற்படும் பல சிக்கல்களைத் தவிர்ப்பதற்கு ஏதுவாக அமைவதுண்டு.

Re-Socialization
ஆளுமை மறுவுருவாக்கம்

ஒருவரின் முன் ஆளுமைக் குணங்கள் மாறிப் புதிதாக வேறுபட்டு அமைதல். இவ்வாறான ஆளுமைப் புத்தாக்கம் ஒருவரின் வாழ்க்கையில் ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்குப் போகும்போது நிகழ்கிறது. திருமணமானபின் ஒருவர் பழக்க வழக்கங்களை மாற்றி அமைத்துக் கொண்டு முற்றிலும் புதியவராகிறார். ஒருவர் இராணுவத்தில் சேர்ந்தவுடன் அங்குள்ள பயிற்சிகளின்மூலம் முற்றிலும் புதியவராகி மாறுபட்ட ஆளுமைக் குணங்களைப் பெறுகிறார்.

Resource
வாய்ப்புவளம்

மனிதனின் இயற்பொருள் சார்ந்த சுற்றுச்சூழலில் எந்த ஒரு பகுதியும் வாய்ப்பு வளமாகும். அது உயிருள்ளதாகவோ அல்லது உயிரற்றதாகவோ, மனிதத் திறமையாகவோ அல்லது அறிவாகவோ இருக்கும். அது பொருட்களின் உற்பத்தி அல்லது சேவைகளில் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும்.

Respondent
தகவலாளி

ஒரு வினாப்பட்டியலுக்குப் பதிலளிக்கும் ஒரு நபரைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது அல்லது ஒரு வினாநிரல் மூலம் நேர்காண்பவருக்குப் பதிலளிக்கும் ஒருவரைக் குறிக்கிறது. இச்சொல் பொதுவாகச் சமூக அளவாய்வுகளில் பயன்படுத்தப்படுகிறது.

Restricted Code
கட்டுப்பட்ட செய்திமுறை

இக்கருத்துரு பெர்ன்ஸ்டீன் (B. Bernstein) என்பவரால் விரிவுபடுத்தப்பட்ட செய்திமுறைக்கு மாறானதாக அறிமுகப்படுத்தப்பட்டது. கட்டுப்பட்ட செய்திமுறை சூழல்சார்பான பொருளுக்குச் சிறப்புரிமையளிக்கிறது. அத்தகைய ஒழுங்கிலான பொருள்கள் சொற்கள் மற்றும் தொடரியல் தெரிந்தெடுப்பின்படி செயல்படுகிறது. விரிவுபடுத்தப்பட்ட செய்திமுறை சூழல் சார்பற்ற பொருளுக்குச் சிறப்புரிமை அளிக்கிறது.

Restricted Marital Exchange
வரையறுக்கப்பட்ட மணப்பரிமாற்றம்

ஒருவித முன்னுரிமைத் திருமணத்தைக் குறிக்கிறது. இதில் இருகுழுக்கள் மணப்பங்காளிகளைப் பரிமாறிக்கொள்கின்றன. இம்மணமுறை உலகின் பல பகுதிகளிலும் காணப்படுகிறது. குறிப்பாக ஆஸ்த்திரேலியாவிலுள்ள தொன்முதிய குடியிருப்பாளர்களிடையேபரவலாகக் காணப்படுகிறது.

Restrictive Covenant
கட்டுப்பாட்டுக் கூட்டு ஒப்பந்தம்

ஒரு பகுதியிலுள்ள சொத்தைக் குறிப்பிட்ட குழு உறுப்பினருக்கு

அல்லது சமூகப் பிரிவினருக் குத்தான் விற்கவேண்டும் என்று கட்டுப்படுத்துகின்ற ஒரு கூட்டான ஒப்பந்தத்தைக் குறிக்கிறது. பொதுவாக அத்தகைய கட்டுப்பாடுகள் இனம், மதம் மற்றும் இனக்குழுக்கள் ஆகியவற்றின் அடிப்படையிலானதாக இருக்கும். ஆனால் பிற சமூகப் பொருளாதார ஒப்பந்தங்களின் அடிப்படையிலும் ஏற்படலாம். கட்டுப்பட்ட கூட்டு ஒப்பந்தமானது எழுதப்பட்டதாகவோ, இயல்பான ஒப்பந்தமாகவோ அல்லது சொத்து ஆவணங்களாக எழுதப்பட்ட தாகவோ இருக்கலாம்.

Retail Trade Area
சில்லறை வாணிகப் பகுதி

ஒரு நகரத்தில் அல்லது மாநகரத்தில் சில்லறைச் சரக்கு விற்பனைக் கடைகள் செயல்படுகின்ற பகுதியைக் குறிக்கிறது. இது நகரத்தையே உள்ளடக்கியதாகவும் அதைச் சுற்றிலும் குடியிருப்புப் பகுதிகளை உடையதாகவும் காணப்படும். சில்லறை வாணிகப் பகுதியைப் பொதுவாக நகரத்தின் பெரும்பாலான கடைகள் மூலம் இயல்பான வழங்கும் சேவை புரியும் பகுதியென வரையறுக்கலாம். சான்றாகப் பலசரக்கு விற்பனைக் கடைகள், தட்டுமுட்டுப் பொருட் களுக்கான கடைகள் போன்ற வற்றைக் கூறலாம்.

Retreatism
ஒதுங்குநிலை/பின்னடைவுநிலை

பொதுநிலையிலிருந்து விலகிய ஒருவித நடக்கைமுறையைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப் படுகிறது. இதில் ஒரு தனிநபர் பண்பாட்டு ரீதியில் வரையறுக் கப்பட்ட வெற்றிக்கான குறிக்கோள் களையும் அவற்றை அடைவதற்கான அமைப்புமுறைக்குட்பட்ட வழிவகை களையும் ஒதுக்கித் தள்ளுகிறார். ஒதுங்குநிலை பண்பாட்டு ரீதியில் மதிக்கப்படுகின்ற குறிக்கோள்களை அடைய இயலாத நிலையில் ஏற்படுகின்ற எண்ணக்குலைவில் தன்னைத்தக்கவைத்துக்கொள்ளும் ஒரு முறையாக உள்ளது. இதற்கான சான்றுகளைச் சாராயம் அருந்துதல், போதைப்பொருளுக்கு அடிமையாதல், நாடோடித்தனம் போன்ற நடக்கை முறைகளில் காணலாம்.

Retrospective Study
கடந்தகால ஆய்வு

நிகழ்காலத்திலிருந்து கடந்த காலத்தில் ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவரை ஒரே ஆய்வுப் பொருளைப் பற்றி அய்வுசெய்தல்.

Revitalization Movement
மறு உயிராற்றல் வழங்கு இயக்கம்

ஒரு சமுதாயத்தின் உறுப்பினர் களால் அதிக மனநிறைவளிக்கக்கூடிய ஒரு பண்பாட்டை உருவாக்குவதற் காகவேண்டுமென்றே செய்யப்பெற்ற கூட்டிணைவான கவனமான முயற்சியைக் குறிக்கிறது. பண் பாட்டு ரீதியிலான நோக்கு நிலையில் மறு உயிராற்றல் வழங்குவது ஒரு சிறப்பு நிலை யிலான பண்பாட்டு மாற்ற இயல்நிகழ்வாகும்.

Revolution
புரட்சி

அனுதின வழக்காற்று மரபில் புரட்சி என்பது ஒரு சமுதாயத்தின் அரசில் திடீரென வழக்கமாக வன்முறையாக ஏற்படும் மாற்றம். எவ்வாறாயினும் சமூகஅறிவியலார் ஒரு சமூக அமைப்பின் முற்றிலுமான மாறுதலைக் குறிக்க இச்சொல்லைப்பயன்படுத்துகின்றனர்.

Right
உரிமை

ஒரு தனிநபருக்கான சட்டப்படியான அல்லது சமூகநீதியில் அங்கீகரிக்கப்பட்ட ஒழுக்கத்தத்துவம் அல்லது சட்டப்படியான உரிமை மெய்ப்பிப்பு. இது ஒருவரைப் பொறுத்தவரையிலான குறிப்பிட்ட நடக்கைமுறையை அனுமதிக்கும் அல்லது குறிப்பிட்ட நடக்கை முறையைக் கோரும். தனிப்பட்ட நபர்களின் அல்லது குழுக்களின் உரிமைகள் சீராக மறுவரையறை செய்யப்பகிடுறது, பின்வாங்கப் படுகிறது அல்லது விரிவுபடுத் தப்படுகிறது.

Rites of Passage
வாழ்வு நிலைமாற்றச் சடங்கு/ தகுதிப்பெயர்ச்சிச் சடங்கு

வாழ்வின் பல்வேறு நிலைகளில் ஒன்றிலிருந்து மற்றொரு நிலைக்கு மாறுதல். பிறப்பு, பூப்பெய்தல், திருமணம், இறப்பு போன்ற வாழ்க்கைச்சடங்குகள் வாழ்வுநிலை மாற்றத்தைக் குறிப்பிடும் சடங்குகளாகும். இதனைத்தகுதிப்பெயர்ச்சிச் சடங்குகள் என்றும் வரையறை செய்வர். ஒவ்வொரு தகுதிப் பெயர்ச்சிச் சடங்கும் மக்களை ஒரு நிலையிலிருந்து பிரிந்து மறு நிலைக்கு அறிமுகப்படுத்துகிறது.

Ritualism
சடங்குவெறி

ஒரு தனிநபர் தன்னைத் தக்கவைத்துக்கொள்ளும் தன்மையைக் குறிக்கிறது. இதில் தனிநபர் பண்பாட்டுரீதியில் வரையறுக்கப்பட்ட குறிக்கோள்களை ஒதுக்கித் தள்ளுகிறார். அவற்றைத் தான் அடைய இயலாது என்ற உணர்வுடையவராக இருப்பார். ஆனால் அவற்றை அடைய வழிகாட்டுவதாகக் கருதப்படும் அமைப்புமுறைக்குட்படுத்தப்பட்ட நடைமுறையொழுங்குகள் மற்றும் கட்டளைச் சட்டங்களைத் தொடர்ந்து பற்றிக் கொள்வார். இதனைச் சடங்குவெறி என்பர்.

Ritual Kinship
சடங்குமுறைசார் உறவுமுறை

இரத்த மற்றும் திருமண இணைப்பால் அல்லாமல் சில நடைமுறை சார்ந்த சமூக உறவுகளின் அடிப்படையில் நிலைநாட்டப்பட்ட ஒருவித உறவுமுறைத் தொடர்பு. சான்றாக ஞானத்தாய், ஞானத்தந்தை போன்ற உறவுகளைக் கூறலாம்.

Ritual Marriage
சடங்குத்திருமணம்

இவ்வகைத் திருமணம் முற்கால நாயர் சமுதயாத்தில் நடைபெற்று வந்தது. இதில் ஒவ்வொரு சிற்றூரிலும் 7 முதல் 12 வயது வரையுள்ள பூப்புநிலை அடைய விருக்கும் பெண்கள் பலரைச்

சேர்த்து அனைத்துப் பெண்களுக்கும் சடங்கு மணமகன்களைத் தேர்வு செய்து அப்பெண்களுக்குத் தாலி கட்ட வைப்பார்கள். இதன்மூலம் அவர்கள் கணவன்-மனைவி என்ற தகுதியைப் பெறுவதில்லை. இதன்மூலம் பெண்கள் சமுதாயத்தில் மதிப்பு மிக்க உறுப்பினராகுகின்றனர். இளம்பெண்கள் தாய்மைப் பேறடையும் பெண்கள் என்ற தகுதியையும் அடைகின்றனர். ஆனால் சடங்குக் கணவனுக்கும் அவன் தாலி கட்டிய பெண்ணின் குழந்தைகளுக்கும் ஒரு முக்கியமான உறவுநிலை ஏற்படுகிறது. அதாவது அவர் இறக்கும்போது அவருடைய ஈமச்சடங்குகளை அவர் தாலி கட்டிய பெண்ணின் பிள்ளைகள் தான் செய்வார்கள்.

Rituals
சடங்குமுறைகள்

சடங்குமுறைகள், சமயத்தின் கருப் பொருளாகக் கருதப்படும் புனிதத் தன்மையின்பால் மக்கள் மேற் கொள்ளும் நடத்தைக் கோலங்களின் தொகுப்பாகும். சடங்கு என்பது புனிதத்தன்மையோடு தொடர்புகொள்ள மேற்கொள்ளப்படும் முறையான செயல்முறைகள் எனக் கூறலாம். புனிதத் தன்மையைப் பாதுகாக்கவும் அதற்குக் களங்கம் ஏற்படாமலிருக்கவும் சடங்குகள் எற்படுத்தப்பட்டுள்ளன. அதாவது புனிதத்தன்மையோடு தொடர்புகொண்டு அதன் ஆற்றலைப் பெற்றுப் பயனடைய சடங்குகள் செய்யப்படுகின்றன. சமயச் சார்புடைய சடங்குகள் தவிர வாழ்வியல் சடங்குகளும் பல உள்ளன. சான்றாகப் பெயர்சூட்டுச் சடங்கு, பூப்புச்சடங்கு, திருமணம் போன்றவற்றைக் கூறலாம்.

Rivalry
போட்டிநிலை

ஒருவித போட்டி அல்லது முரண்பாட்டைக் குறிக்கிறது. இதில் ஈடுபடுகிற தனிநபர்கள் அல்லது குழுக்கள் ஒருவருக்கொருவர் தொடர்பு கொண்டிருப்பார்கள். தொடர்ந்து எதிர்சார்பினரின் வெற்றி அல்லது தோல்வியின் அடிப்படையில் தங்கள் நடக்கை முறையைத் தக்கவாறு அமைத்துக் கொள்வார்கள்.

Role
பங்கு/பணி

ஒருவரிடம் எதிர்பார்க்கப்படுகின்ற, சமூக நிலைக்கேற்றவாறு வரையறுக்கப்பட்ட நடத்தை அல்லது பணிகள். குறிப்பிட்ட சமூக அந்தஸ்துக்கேற்றவாறு கடமைகளும், உரிமைகளும் காணப்படும்.

Role Behaviour
பணிநடக்கைமுறை

ஒரு குறிப்பிட்ட பணி அல்லது பங்கில் சமூகரீதியில் எதிர்பார்க்கப் படுகின்ற நடக்கைமுறை அல்லது பணியின் பகுதியாக நிகழ்த்தப் படுகின்ற நடக்கைமுறை. குறிப்பிட்ட சில பணிகளில் குறிப்பிட்ட நபரின் நடக்கை முறையைக் குறிக்கிறது.

Role Conflict
பணிமுரண்பாடு

ஒரே பணியில் முரண்பட்ட

கடமைகளை நிறைவேற்றுவதில் ஏற்படும் முரண்பாடு அல்லது இருபணிகளை ஒரே வேளையில் நிறைவேற்றுவதில் ஏற்படும் முரண்பாடு சான்றாக வேலை பார்ப்பவர் என்ற முறையில் அலுவலகப்பணிக்கு முக்கியத்துவம் அளிப்பதா அல்லது தாய் என்ற முறையில் குடும்ப வேலைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதா என்று குழப்பமடைதல். ஒன்றினை நிறைவேற்றினால் இன்னொன்றினை மீறவேண்டிய நிலை ஏற்படுவதுண்டு.

Role Demands
பணி வேண்டுகோள்கள்

ஒரு சூழ்நிலையில் ஒரு பங்கு வகிக்கும் அல்லது பணிபுரியும் ஒருவரைப் பற்றிய பிறரின் எதிர்பார்ப்பு. அவ்வாறுபணியாற்றுபவர் பணி வேண்டுகோள்களைக் குறித்த உணர்வுடையவராகவோ இல்லாதவராகவோ இருக்கலாம்.

Role Discontinuity
பணித்தவிர்ப்பு

சமூகப்பங்குகள் அல்லது பணிகளோடு தொடர்புடைய எதிர்பார்ப்புகளுக்கிடையிலான சரிநேர் பண்புநிலையில் உள்ள குறைபாடு. அத்தகைய குறைபாடுகள் ஒரு தனிநபரால் தொடர்ச்சியாகச் செயல்படுத்தப்படும்பொழுது அதனை பணித்தவிர்ப்பு என்பர்.

Role Making
பணி ஏற்படுத்தல்

ஒரு செயல்பாட்டு மரபினைப் புதிதாக ஏற்படுத்துதல். மாணவர்களும் தேவையான நேரத்தில் சமுதாயத் தொண்டில் பங்குபெறவேண்டும் என்ற புதுப்பொறுப்பைத் தோற்றுவிப்பதைப் பணி ஏற்படுத்துலுக்குச் சான்றாகக் கூறலாம்.

Role Model
பணி முன்மாதிரி

குறிப்பிட்ட ஒரு பணியில் ஒரு தனிநபரின் நடக்கைமுறை அதே பணியில்ஈடுபடும்இன்னொருவருக்கு முன்மாதிரியை அளிப்பதைக் குறிக்கிறது. பணி முன்மாதிரி ஒருவர் ஒரு பணியை மேற்கொள்வதற்கான சரியான மனப்பான்மையை உறுதிப்படுத்துவதில் பயன்படுத்தக்கூடிய ஒரு தரத்தை அளிக்கிறது.

Role Performance
பணிநிறைவேற்றம்

குறிப்பிட்ட ஒரு சூழ்நிலையில் ஒருவர் தன் பணியை நிறைவேற்றும் விதம்.

Role Personality
பணி ஆளுமைக்குணம்

குறிப்பிட்ட ஒரு பணிநிலையில் இருப்பவருக்குத் தேவையான ஆளுமைக்குணங்கள். ஓர் உயர் கல்வி நிறுவனத்தின் பேராசிரியர் பரந்தநோக்கும், மாறுதல்களை ஆதரிக்கும் மனப்போக்குமுள்ளவராக இருக்கவேண்டும். இக்குணங்கள் பிறரின் ஒத்துழைப்போடு நிறுவனம் நன்கு செயல்பட உதவும்.

Role Playing
பணிச்செயலாற்றுகை

செயலாற்றும் ஒரு பாங்கினைத் தன் பணிக்கு உகந்ததாக மதிப்பது. பணிச் செயலாற்றுகையில் ஒருவர் கொடுக்கப்பட்ட ஒரு பணிக்கான உரிய நடக்கை முறையைச் சமூகக் கட்டளைச் சட்டங்களோடு உறுதி செய்யவேண்டும். காரணம் சமூகக் கட்டளைச் சட்டங்கள் பணி செயலாற்றுகைக்குரிய நடக்கை முறையை வரையறுக்கின்றன.

Role Primacy
பணிமுதன்மை

ஒரு பணி அல்லது பங்கின் மீதான மற்றொரு பணியின் முந்துநிலை. ஒவ்வொரு தனிநபரும் பல பணிகளைச் செயல்படுத்த வேண்டியிருக்கும். சிலவேளைகளில் ஒரு பணியின் உரிமைக் கோரிக்கைகள் இன்னொரு பணியின் உரிமைக்கோரிக்கையோடு முரண்படும்.

Role Relinquishment
பணிவிடல்

வேறொரு பணியை ஏற்றுக்கொள்வதற்காக நடைமுறையில் உள்ள ஒரு பணியை விட்டுவிடுதல்.

Role Set
பணித்தொகுதி

ஒருசமூகநிலையில் ஒன்றுக்கொன்று தொடர்புடைய பணிகளின் அல்லது பொறுப்புக்களின் தொகுதி ஒரு சமூக அந்தஸ்தை உருவாக்குகிறது. துறையினைநடத்துதல், ஆய்வுசெய்தல், கற்பித்தல் போன்ற ஒன்றுக்கொன்று தொடர்புடைய பொறுப்புக்கள் பேராசிரியர் பதவிக்கான பணித்தொகுதியாகும். அதாவது குறிப்பிட்ட ஒரு சமூக அந்தஸ்தை மையமாகக் கொண்ட பணிகளின் தொகுதியைக் குறிக்கிறது.

Role Strain
பணிச்சிரமம்

ஒரு பணிநிலை அந்தஸ்திற்கான கடமைகளைச் செய்வதில் ஏற்படும் சிரமம். சான்றாகக் காவல்துறை அதிகாரி ஒருவர் கடமையின் பொருட்டுத் தன் உறவினர்களின்மீது நடவடிக்கை எடுக்கும் போது ஏற்படும் கடினநிலைமையைக் கூறலாம்.

Role Transition
பணிநிலை மாற்றம் / பொறுப்பு மாற்றம்

வாழ்க்கையின் ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு மாறும்போது பொறுப்பு மாற்றம் ஏற்படுகிறது. பொதுவாக இளம் வயதினர் அவர்களின் அடுத்த வாழ்வு நிலையான திருமண வயதை அடையும்போது அவர்களின் பொறுப்பு மாறுகிறது. வாழ்வுநிலை மாற்றத்துக்கு ஏற்றவாறு மனிதனும் தன் மனப்பான்மை மற்றும் உயர் மதிப்பீடுகளை மாற்றிக்கொள்கிறான். சமுதாயமும் அதை எதிர்பார்க்கிறது.

Rooming-House Area
வாடகை அறை வீட்டுப்பகுதி

நகரத்தின் ஒரு பகுதியைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப் படுகிறது. இதில் பல இணைக்கப் படாத நடமாடிக்கொண்டிருக்கும் தனிநபர்கள் வாடகை அறைகள் உள்ள வீடுகளில் வாழ்ந்துகொண்

டிருப்பார்கள். வாடகை அறை வீட்டுப்பகுதி மக்கள் தொகையில் தலைகீழ் மாற்றம் ஏற்படல், உயர்ந்த அளவிலான பெயர்தெரியா நிலை, குழு இணைப்பின்மை, இரண்டாம் நிலையிலான உறவுகள் மற்றும் பண்புக்குழு உறுதியின்மை போன்ற குணாதிசயங்களை உடையதாக இருக்கும்.

Ruling Class
ஆளும்வகுப்பு

சமூகவியலில் ஓரளவு பழமையான ஒரு சொல். வழக்கமாக நடைமுறையில் உள்ள அரசியல் நிறுவனங்கள் வாயிலாகச் சமுதாயத்தைக் கட்டுப்படுத்துகிற பொருளாதார ரீதியில் மேலாதிக்கம் செலுத்துகிற வகுப்பு. அத்தகைய கட்டுப்பாடு சில சமுதாயங்களில் வெளிப்படையாகத் தெரிவதில்லை. உயர்ந்த கோட்பாட்டாளர்கள் உண்மையான மக்களாட்சி சாத்தியமானதல்ல என்றும் அனைத்து சமுதாயங்களும் எத்தகைய சமூகஅமைப்பை உடையதாக இருந்தாலும் ஆளும் வகுப்பால் மேலாதிக்கம் செலுத்தப்படும் என்றும் வாதாடுகின்றனர்.

Rumour
வதந்தி

வழக்கமாக ஒரு தவறான அல்லது உண்மையற்ற பொது மொழியைக் குறிக்கிறது. இது முறையாக அல்லாமல் ஒரு நபரிடமிருந்து இன்னொரு நபருக்குப் பொதுவாக வாய்மொழியாக அறிவிக்கப்படுகிறது. வதந்திகள் வழக்கமாகப் பொது மக்களுக்கு முனைப்பான ஆர்வத்தில் உள்ள நிகழ்வுகள் அல்லது மக்களைக் குறித்ததாகவும், கூடுதல் செய்திகளை அறிய விரும்புகிற வற்றைக் குறித்ததாகவும் இருக்கும்.

Rural Community
நாட்டுப்புற பண்புக்குழு

ஓர் உள்ளூர் பகுதியில் மக்களுக்கும் அவர்களின் நிறுவனங்களுக்குமிடையே பேணப்படுகின்ற ஒருவித உறவு அல்லது தொடர்பு. அப்பகுதியில் அவர்கள் பரவலாக வாழ்வார்கள். வழக்கமாக ஒரு கிராமம் அவர்களின் பொதுவான செயல்பாடுகளின் மையமாக அமையும்.

Rural Place
நாட்டுப்புற இடம்

நகர்ப்புற இடமாக வரையறுக்கப்படாத இடத்தைக் குறிக்கிறது. அதாவது கூட்டிணைவு ஆக்கப் பெறாத அல்லது திறந்த நாட்டுப்பகுதி.

Rural Sociology
நாட்டுப்புற சமூகவியல்

சமூகக் குழுக்களின் அமைப்பாண்மை மற்றும் செயற்பாடுகளில் நாட்டுப்புற வாழ்க்கைமுறையின் செயல்விளைவு குறித்த ஆய்வு.

Rural-Urban Continuam
நாட்டுப்புற-நகர்ப்புறத் தொடர்ச்சி

நாட்டுப்புற மற்றும் நகர்ப்புற குணாதிசயங்கள் தொடர்ந்திருக்கும் நிலை. பொதுவாகக் கிராமப் பகுதியில் அமைந்துள்ள நகர்ப்புற விரிவாக்கங்களிலும் நகரத்துக்கு அருகில் உள்ள கிராமங்களிலும்

இதைக் காணலாம்.

Rurbanization
நாட்டு-நகர் பண்பாக்கம்

நகர்ப்புற மக்கள் நாட்டுப்புறப் பகுதியில் பரவுவதன் வாயிலாக ஏற்படும் நகர்ப்புற மற்றும் நாட்டுப்புற வாழ்க்கைமுறையின் கலவையைக் குறிக்கிறது. இதன் விளைவாகப் பெரிய புற எல்லைப்பகுதிகள் தோன்றுகின்றன. அல்லது நகர்ப்புற மற்றும் நாட்டுப்புற கலப்புப் பகுதிகள் தோன்றுகின்றன. அவை உண்மை யான நாட்டுப்புறமாகவோ அல்லது உண்மையான நகர்ப்புற மாகவோ இருப்பதில்லை.

S

Sacred Society
புனிதச் சமுதாயம்

ஓரின அமைதி, ஒருமைப்பாடு மற்றும் நிலையான தன்மை ஆகிய உயர்ந்த பல மதிப்பீடுகளையும் வழக்கங்களையும் மாற்ற இயலாத தாகவும் மதிக்கிற தன்மையை ஏற்படுத்துகின்ற சமுதாயத்தைக் குறிக்க இச்சொல் பயன்படுத் தப்படுகிறது. ஒரு புனித சமுதா யத்தில் மதிப்பீட்டு முறைகள் மற்றும் சமூக உறவுகள் ஒரு சமயச்சார்பற்ற சமுதாயத்தில் காணப்படுவதைவிட அதிக முழுமையானதாகவும், இயற்கையான தாகவும் எதிர்ப்பற்றதாகவும் காணப்படும்.

Salience
புறமுனைப்பு

மனப்பான்மை குறித்த ஒரு ஆய்வில் இச்சொல் ஒரு தனிநபரின் சிந்தனை மற்றும் நடக்கைமுறையில் குறிப்பிட்ட ஒரு மனப்பான்மையின் அல்லது குழு ஒருமைப்பாட்டின் முதன்மை நிலையைக் குறிக்கிறது. ஒரு குறிப்பிட்ட மனப்பான்மை அல்லது குழு ஒருமைப்பாடு ஒரு தனி நபரின் புறமுனைப்பாக இருந் தால் அது அவருடைய விழிப் புணர்வின் முன்னணியில் காணப்படும்.

Sampling
பண்புமாதிரி தெரிந்தறிதல்

ஒரு பகுதியை மட்டும் ஆய்வுசெய்து அந்த மாதிரியிலிருந்து ஒரு மக்கள்தொகை அல்லது மனித இன முழுமை குறித்த செய்திகளைச் சேகரித்தல் மற்றும் முடிவுகளை எழுதுதல். இம்முறை சமூக அறிவியலில் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. மக்கள் தொகையின் அனைத்து உறுப்பினர் களிடமிருந்தும் செய்திகளைப் பெறுவது நடைமுறையில் இயலாததாகவும் அதிக செயலவுடை தாகவும் இருக்கும்போது இம்முறை கையாளப்படுகிறது.

Sampling Error
பண்புமாதிரிப் பிழை

பல சமூகவியல்சார் ஆய்வுகள் பரந்த மக்கள்தொகையிலிருந்து இங்கொன்றும் அங்கொன்றுமாகத் தொடர்பற்ற நிலையில் தேர்ந் தெடுக்கப்பட்ட பண்பு மாதிரி களைச் சார்ந்திருக்கின்றன. ஒரு மாதிரியானது குறிப்பிட்ட மக்கள் தொகையின் துல்லியமான

தெரிவிப்பாக இருப்பதில்லை. எனவே மாதிரிக் கணக்கிடலானது பிழைகளுக்குட்படுவதுண்டு. அத்தகைய விழைகளைப் பண்பு மாதிரிப் பிழை என்பர்.

Sampling Unit
பண்புமாதிரி ஒருமம்

ஒருமாதிரியைத்தேர்ந்தெடுப்பதில் பயன்படுத்தப்படும் ஒருமம். பலவிதமான மாதிரிகளில் தொடர்பின்றி எடுக்கப்பட்ட தனி மாதிரி என்ற நிலையில், பண்புமாதிரி ஒருமமானது மாதிரியை உள்ளடக்கிய ஒரு தனிநபராக இருக்கலாம். பன்மடங்குப் படிநிலைப் பண்புமாதிரியில் முதல்நிலைப் பண்புமாதிரி ஒருமங்கள் நிகழ்வினங்களின் தொகுதியாக இருக்கலாம். அவற்றிற்குள்ளிருந்து இறுதியான பண்புமாதிரி ஒருமங்கள், அதாவது தனிநபர் நிகழ்வினங்கள் தேர்ந்தெடுக்கப்படும்.

Sanction
இசைவு/ஒப்புதல்

சிலவகையிலான நடக்கைமுறைகளை ஊக்குவிப்பதற்கு அல்லது ஊக்கங் கொடுப்பதற்கு ஒரு நபரை நோக்கி ஏவப்படுகின்ற ஒரு பரிசளிப்பு அல்லது தண்டனையைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. ஆக்கமுறை இசைவுக்கான சான்றுகளில் புகழ்தல், கைதட்டுதல், பதக்கங்கள் அளித்தல் ஆகியவை அடங்கும்.

Scala Naturae
இயற்கையின் வரிசை

இறைவனால் படைக்கப்பட்ட அனைத்து உயிரினங்களும் ஒரு படிநிலையில் அடுக்கப்பட்டுள்ளன என்ற கருத்தே 17 மற்றும் 18ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த மேற்கத்திய மக்களிடம் மேலோங்கியிருந்தது. உயிரினங்களின் இந்த படிநிலை (Hierarchy) இயற்கையின் வரிசை என இறையியல் நூல்களில் குறிப்பிடப் பெறுகின்றன. இது உயிரினங்களின் தொடர்ச்சி என்றும் கூறப்படும். இந்த உயிரினத்தின் வரிசையில் மனிதன் மேல்நிலையிலும், விலங்குகள், பறவைகள், தாவரங்கள் முதலானவை மனிதனுக்குக் கீழும் உள்ளன. மனிதனுக்கும் உயர்பாலூட்டிகளுக்கும் உள்ள உருவத்தோற்ற ஒற்றுமை இறைவனின் தெய்வீகப் படைப்பின் தனித்தனிச் செயல்களால் உண்டானதாகும் என்று நம்பினர்.

Scale
அளவீடு உத்தி

அளவீடு உத்தி மனிதரின் மனப்பான்மையைத் தெரிந்துகொள்ள உதவுகிறது. அளவீடு உத்தி பல பதில்கள் வரையறுக்கப்பட்ட வினாக்களின் முறையான தொகுப்பைக் கொண்டது. பேட்டி கொடுப்பவரின் பதில்கள் எல்லாவற்றையும் சேர்த்து அவர் மனப்பான்மையை நிச்சயம் செய்வதாகும். பொதுவாகச் சாதாரண அளவீட்டு உத்தி ஆம், இல்லை என்ற பதில்களைக் கொண்டிருக்கும்.

Scapegoating
பழிக்கு இரையாக்குதல்

ஒருவரின் தொல்லைகள்,

மனக்குலைவு அல்லது குற்றஉணர்வு ஆகியவற்றிற்குக் காரணமான பழியைப் பொருத்தமான ஆனால் ஓரளவு குற்றமற்ற நபர் அல்லது குழுவின்மீது சுமத்துகிற கருத்துருவைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. பழிக்கு இரையாக்குதலானது தேசிய அரசியல் அதிகாரத்தில் இருப்பவர்களால் ஒரு கருத்துப்பரப்பு உத்தியாக அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது. ஓர் பகைவன் அல்லது சமுதாயத்துக்குள் காணப்படும் சில உட்குழுக்கள் மோசமான முறைமைகளுக்காகப் பழி சுமத்தப்படுகின்றன. இதனால் ஆளும் வகுப்பினரிடமிருந்து பகைமை அல்லது எதிர்ப்பு திசைதிருப்பப்படுகிறது.

Scheduled tribe
வரையறுக்கப்பட்ட பழங்குடி

தற்போது பின்தங்கிய நிலையில் வாழும் பிற்பட்ட மக்களைத் தனியாகப் பிரித்து அவர்களுக்கு சலுகைகளையும், நல்வாழ்வுத் திட்டங்களையும் செயற்படுத்த இந்திய அரசு நிறுவாக வசதிக்காக வகைப்படுத்தப்பட்டுள்ள பழங்குடிப் பிரிவினரே வரையறுக்கப்பட்ட பழங்குடியினர்.

Schemata
உள்ளார்ந்த கருத்துருவாக்கம்

உள்ளார்ந்த கருத்துருவாக்கம் என்பதுமனதிற்குள்ளேயேஉலகத்தைப் பற்றி ஒருவர் உருவாக்கிக்கொள்ளும் எண்ணம். அன்றாட வாழ்வில் அவரவர் செயல்பாடுகளின் மூலம் ஏற்படும் உணர்வுகள், எண்ணங்கள், பட்டறிவு முதலானவை மூலம் உள்ளார்ந்த கருத்துருவாக்கம் ஏற்படுகிறது.

Schismogenesis
உட்பிளவாதரவு

வேறுபட்ட சமூகப் பணிகளோடு தொடர்புடைய நடக்கைமுறை வகையிலிருந்து ஒரு குழுவுக்குள் தோன்றுகிற பிளவு. உட்பிளவு நடைமுறை படிப்படியாகத் திரண்டு வளர்வதாகும். அதாவது பணிநடக்கை முறையனது தொடர்ந்து எதிர் விளைவுகளை ஏற்படுத்த முயலும் போது அது தொடர்புடைய நடக்கைமுறைப் பாங்கத்தினைத் தீவிரப்படுத்துகிறது. சான்றாகப் பாலினங்களுக்கிடையே வளருகின்ற உட்பிளவைக் கூறலாம்.

Schools
கொள்கைக்குழுவினர்

அறிஞர்களின் மனப்போக்கும் சமுதாயத்தைப் பற்றிய எண்ணங்களும் மாறுபடுகின்றன. இம்மாறுதல்களை விளக்க முற்பட்ட சிந்தனையாளர்கள் பல்வேறு கருத்துடையவர்களைப்பல கொள்கைக் குழுவினராகப் பிரித்துள்ளனர்.

Scientific Attitude
அறிவியல் மனப்பான்மை

ஒரு பொருளைத் தன் விருப்பு வெறுப்பு ஏதுமின்றி ஆய்வுசெய்து அதன் உண்மை நிலையைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற மனப்பான்மை. இத்தகைய அறிவியல் மனப்பான்மை உடையவர்கள் ஆய்வுக்குறிக்கோள்களுக்கு முக்கியத்துவம் அளிப்பார்கள்.

எதையும் நன்கு அறிந்துகொள்ள வேண்டும் என்ற இயல்போடு விடாமுயற்சியாகச் செயல்பாடுவார்கள். தங்கள் கண்டுபிடிப்புகளைப் பிறர் சோதனை செய்து சரிபார்ப்பதை வரவேற்பார்கள்.

Scientific Method
அறிவியல்முறை

கூர்ந்துநோக்குதல், சோதனைமுறை, பொது விதியாக்கம் மற்றும் ஒப்பாய்வு ஆகியவை மூலம் ஓர் அறிவியல்சார் அறிவுமுழுமையைக் கட்டி உருவாக்குவதைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. ஆய்வாளரின் சொந்த விருப்பு வெறுப்பின்றிக் குறிப்பிட்ட விதி முறைகளைக் கடைபிடித்து முறையாக ஒரு பொருளை ஆய்வு செய்தல், இம்முறைப்படி சமூக வியல் ஆய்வுகளில் கீழ்க்கண்ட படிநிலைகள் உள்ளன.

1. ஆய்வுத்தலைப்பைத் தேர்ந்தெடுத்து அதுதொடர்பான இன்றியமையாத கருத்துருக்களுக்கு செயல்விளக்கம் அளித்தல்.

2. ஆய்வோடு தொடர்புடைய கோட்பாடுகளைக் கவனமாகப் படித்துத் தெளிவான அறிவுபெறுதல்.

3. முக்கிய ஆய்வுக் குறிக்கோள்களைத் தீர்மானித்தல்.

4. முன்னோடி ஆய்வு செய்தபின் செயலில் நிறைவேற்றக்கூடிய இறுதியான ஆய்வு குறிக்கோள்களை நிச்சயித்து, செய்திக்கூறுகளைச் சேகரிக்கும் திட்ட வரைவு உருவாக்குதல்.

5. செய்திக்கூறுகளைச் சேகரித்தல்

6. சேகரிக்கப்பட்ட செய்திக்கூறுகளை ஒழுங்குபடுத்தி அட்டவணைகள் தயாரித்து, விளக்கமளித்து ஆய்வின் முடிவுகளைத் தெரிவித்தல்.

Seasonal Variation
பருவகால மாறுபாடு

பருவகால மாறுதலோடு தொடர்புடைய ஒரு மாறியின் எதிர் திசை திரும்புகிற அல்லது திரும்பத்திரும்ப நிகழ்கிற பாங்கதிலான மாறுதலைக் குறிக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டம் சில பருவகாலங்களில் சீராக அதிகரிப்பதையும் வேறு பருவ காலத்தில் குறைவதையும் சான்றாகக் கூறலாம். பருவகால மாறுபாடு ஒருவிதச் சுழல் நகர்வாகும்.

Secondary Group
இரண்டாம்நிலைக் குழு

இரண்டாம்நிலைக்குழுவின் அங்கத்தினர்களிடையே மேலோட்டமான சுயநோக்குடைய உறவு காணப்படும். அங்கத்தினர்களின் சில தேவைகளைச் சந்திப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட குழுவாக இருக்கும். அதிக எண்ணிக்கையுள்ள அங்கத்தினர்களைக் கொண்டது. தனி நபர்களுக்கு அளிக்கும் முயக்கியத்துவத்தைவிடக் குழு விதி முறைகளுக்கு அதிகமுக்கியத்துவம் அளிக்கப்படும். உறுப்பினர்களின் வாழ்வின் ஒரு பகுதிமட்டுமே குழுவில் ஈடுபடும். உறுப்பினர்களுக்கிடையிலான உறவுகள் நேரடியானதாகவோ அல்லது மறைமுகமானதாகவோ காணப்படும்.

பெற்றோர்-ஆசிரியர் கழகங்கள், வாழ்க்கைத் தொழில்சார் குழுக்கள் மற்றும் அரசியல் அமைப்பாண்மைகள் ஆகியவற்றைச் சான்றாகக் கூறலாம்.

Secondary Kin
இரண்டாம்நிலை உறவினர்

பேசுநரின் முதல்நிலை உறவினர்களான ஏழு பேருக்கு எவரெவர் முதல்நிலை உறவினர்களாக அமைகிறார்களோ அவர்களெல்லாம் பேசுநருக்கு இரண்டாம்நிலை உறவினர்களாவர். இவ்வகையில் ஒருவருக்கு 33 இரண்டாம்நிலை உறவினர்கள் அமைவர் என முர்டாக் குறிப்பிடுகிறார்.

Secondary Occupation
இரண்டாம்நிலைத் தொழில்

மனிதனால் செய்யப்படுகின்ற பொருள்களின் உற்பத்தித் தொடர்பான தொழில் அல்லது மூலப்பொருள்களைச் செய்முறையால் புத்துருவாக்கும் தொழிலைக் குறிக்கிறது. இரண்டாம்நிலைத் தொழிலில் எல்லாவிதமான ஆக்கத்தொழில்கள், உணவு பதப்படுத்துதல், கைவினைப்பொருள் தயாரித்தல் ஆகியவை அடங்கும்.

Secondary Relations
இரண்டாம்நிலை உறவுகள்

ஆட்சார்பற்ற மனப்பூர்வமான ஈடுபாடு இல்லாத தனிச்சிறப்பான சமூக உறவைக் குறிக்கிறது. இது பொதுவாக ஒரு குறிப்பிட்ட செயல்பாடோடு நின்றுவிடுவதுண்டு. சான்றாக விற்போர் வாங்குவோர் உறவைக் கூறலாம். இரண்டாம் நிலை உறவு குறுகியகால அளவுடையதாக இருக்கும். இதில் ஈடுபடுபவர்கள் ஒரு செயலைச் செய்பவர்களாகக் கருதப்படுவார்கள். இத்தகைய உறவில் ஒரு குறிப்பிட்ட நபரோடுள்ள பிணைப்பு இருப்பதில்லை. தற்கால நகர்ப்புற சமுதாயமானது பல இரண்டாம் நிலை உறவுகளை உடையது.

Secondary Source
இரண்டாம்நிலை ஆதாரம்

செய்திகள் அல்லது தரவுகளின் ஒருவித மூலத்தைக் குறிக்கிறது. இது ஒரு முதல்நிலைத் தரவிலிருந்தோ அல்லது இன்னொரு இரண்டாம்நிலைத் தரவிலிருந்தோ படிஎடுக்கப்பட்ட அல்லது தொகுக்கப்பட்ட தரவுகளை அளிக்கிறது. செய்திகளை வெளியிடுகின்ற நபராலோ அல்லது நிறுவனத்தாலோ முதல்நிலையாகச் சேகரிக்கப்பட்டதாக இருக்காது.

Secret Society
இரகசியச் சமுதாயம்

இரகசியச் சமுதாயம் மறைபொருள் மரபுகளையும், நடைமுறைகளையும் பணிகளையும் கொண்ட குழுவாகும். இரகசியத்தைக் காக்கச் சூளுரை எடுத்துக் கொள்ளுதல், முறைப்படி கூட்டம் கூடுதல், குறிமொழியைப் பயன்படுத்துதல், உறுப்பினர்கள் அனைவரும் கடப்பாடுடன் பணியாற்றுதல், உறுப்பினர்கள் அனைவரும் ஒரே அரசியல், சமய கருத்துக்களில் நம்பிக்கை வைத்தல், தம் சமுதாயத்துக்கு அடிப்படை

வசதிகளை அமைத்துத் தருதல் போன்றவை இக்குழுவின் முக்கிய தன்மைகளாகும். இதுபோன்ற குழுக்கள் ஆப்பிரிக்க மற்றும் அமெரிக்க இந்தியப் பழங்குடி களிடையே காணப்படுகின்றன.

Sect
மதச்சார்புக்குழு

குறைவான அங்கத்தினர்களைக் கொண்ட சிறிய மதக்குழு. இக்குழு வாழ்க்கையின் எல்லாப் பிரச் சனைகளோடும் தொடர்பு வைத்திருக்கும். மேலும் இக்குழு எல்லா அங்கத்தினர்களையும் மதக் கோட்பாடுகளைத் தவறாது பின்பற்ற வற்புறுத்தும்.

Sector Hypothesis
தனிக்குழு கருதுகோள்

நகர்ப்புற வளர்ச்சி குறித்த ஒரு கருதுகோள். இக்கருதுகோள் நகரத்தில் தனித்தன்மையான பகுதிகள் ஒரே மையமுள்ள மண்டலங்களாக அல்லாமல் தனிக்குழு வடிவில் வளர்கின்றன என்ற கருதுகோள்.

Secularization
மதச்சார்பின்மையாதல்

மதக்கோட்பாட்டு நம்பிக்கை யிலிருந்து பகுத்தறிவு நிலைக்கும், பயன்பாட்டு நிலைக்கும் எதையும் ஆராய்ந்து தெளிந்துநோக்கும் நிலைக்கும் மாறிவருதல்.

Secular Society
மதச்சார்பற்ற சமுதாயம்

பலவகைப்பட்ட வாழ்க்கை முறைகளையும், கோட்பாடுகளையும் கொண்ட ஒரு சமுதாயத்தில் குறிப்பிட்ட எந்த மதத்திற்கும் அதிகமுக்கியத்துவம் கொடுக்காமல் எல்லா மதத்தினரையும் ஒரே சீராக நடத்தும் சமுதாயம்.

Segregation
தனிப்படுத்துதல்

இச்சொல் சமூகச் செயல்நோக் கங்களுக்காகத் தனிநபர்கள் அல்லது குழுக்களின் பிரிதலைக் குறிக்கிறது. சில நிகழ்வுகளில் அத்தகைய பிரிதல் தொடர்புடை யவர்கள் விரும்பித் தன்னார் வத்தோடு நடைபெறுகிறது. சமூகவியல்ரீதியில் அத்தகைய தன்னார்வப்பிரிதலின் செயல்நோக்கம் பண்பாட்டுத் தன்னாட்சியைக் காத்துப் பேணுவதும், பிற சமூகக்குழு உறுப்பினர்களோடான வெளிப்படையான முரண்பாடுகளைக் குறைப்பதுமாகும்.

Self - consciousness
தன்னறிவு

தன்னைநோக்கிய சமூக மனப் பான்மை உடையவராக இருத்தல். குறிப்பிட்ட நபர் பிறர் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்பதன்படி தன்னைக்குறித்து விழிப்புணர் வுடன் இருத்தல்.

Self - control
சுயக் கட்டுப்பாடு

ஒருவரின் நடக்கைமுறையின் வரன்முறையைக் குறிக்கிறது. அதாவது ஒருவர் தன்னோடு அல்லது தன் குழுவோடு தொடர்புடைய சில இலக்கி யலான குறிக்கோள்களை அடை

வதைத் தனித்திற அலகாகக் கொண்டிருத்தல். நடைமுறைக்கு. உகந்ததாகவும் விரும்பத்தக்க தாகவும் கருதப்படுகின்ற நடக்கை முறைத் தரத்தில் நிலையாயிருத்தல்.

Self -esteem
சுயமதிப்பு

ஒரு நபரின் தன்னைக்குறித்த சீர்தூக்கலைக் குறிக்கிறது. அதாவது தன்னைக்குறித்த பிறரின் எண்ணங் களைக் கூர்ந்து கவனிக்கின்ற விதத்தை அலகாகக் கொண்டு தன்னைச் சீர்தூக்குதல்.

Self - image
சுயமதிப்புருவம்

ஒருவரின் தன்னைப் பற்றிய சொந்தக் கருத்து அல்லது எண்ணம். பொதுவாக இது பிறரின் எண்ணத்தோடு நெருங்கிய தொடர்புகொண்டது. சான்றாக ஒருவர் தான் அறிவாளியா, புத்திசாலியா என்று கருதுவது பெரும்பாலும் பிறரின் கருத்தைப் பொறுத்து அமைகிறது.

Semi - nomads
முழுமையற்ற - நாடோடிகள்

சில நாடோடிகள் ஒரு தொழிலை முதன்மையாகக் கொண்டுள்ளதுடன் சில துணைத் தொழில்களையும் செய்ய முற்படு கின்றனர். குறிப்பாக மழைக் காலங்களில் குறைந்த அளவில் வேளாண்மை செய்யும்போது இவர்கள் ஓரிடம் தங்கி வேளாண் பணிகளைக் கவனித்துவிட்டு மீண்டும் நாடோடி வாழ்வில் ஈடுபடுகின்றனர். இவர்கள் நாடோடி வாழ்வில் முழுமையாக ஈடுபடாததால் முழுமையற்ற நாடோடிகள் எனப்படுவர்.

Semiotics
புறக்குறிஆய்வு

குறிகள் அல்லது அடையாளக் குறிப்புகள் குறித்த ஆய்வு. இது தகவல்தொடர்பு குறித்த சமூக வியலில் சில ஆக்கத்திரிபுகளை ஏற்படுத் துகிறது. இது வாய் மொழியிலான மற்றும் வாய் மொழியில் அல்லாத செய்திகள் குறித்த ஆய்வில் ஒரு முறை மையை அளிக்க நாடுகிறது.

Senicide
முதுமைக்கொலை

ஒரு சமுதாயத்தில் வயதுமுதிர்ச்சி காரணமாக உடல்வலிமையற்ற உறுப்பினர்களைக் கொலை செய்தல்.

Sensate Culture
புலனுணர்வுப் பண்பாடு

உலோகாயத மற்றும் நேரடிப் பார்வையிலுள்ள மதிப்பீடுகள் அல்லது விழுமியங்கள் சிறப்புப் பெற்றிருக்கின்ற ஒருவித பண் பாட்டைக் குறிக்கிறது. அத்தகைய பண்பாடுகளில் இறுதி மெய்ம்மை யானது நேரடி ஆய்வுக்கு உட்படுகின்ற இயற்கையான இயல்நிகழ்வுகளை மட்டும் உள்ள டக்கியதாக இருக்கும். புலனு ணர்வால் வெளிப்படுத்தக்கூ டியதற்கு அப்பாற்பட்டு எந்த மெய்ம்மையும் இருப்பதில்லை.

Sentiment
உணர்ச்சிக்கனிவு

இக்கருத்துரு இரு வெவ்வேறு பொருள்களை உடையது.

1. உணர்ச்சிக்கனிவு பண்பாட்டு ரீதியில் பாங்காக்கப்பட்ட உணர்ச்சிவேகமாகும். உணர்ச்சிக்குமுறல் கடுஞ்சின உணர்ச்சிக்கனிவோடு ஒத்திசைகிறது.

2. பரிமாற்றக் கோட்பாட்டில் சமூகக் குழுக்களில் தனிநபர்களுக்கிடையிலான பரிமாற்றம் கூட்டான உணர்ச்சிக் கனிவுகளான வாய்மை தவறாமை, நட்பு, பொதுநலப்பண்பு மற்றும் குழு பொறுப்பு ஆகியவற்றை ஏற்படுத்துகிறது. இது பொதுவான கட்டளைச்சட்டங்களை வலுப்பெறச் செய்கிறது.

Sequential Analysis
தொடர்விளைவு ஆய்வு

இச்சொல் ஓர் ஆய்வு நடைமுறையைக் குறிக்கிறது. இதில் ஆராயப்படவேண்டிய அல்லது கூர்ந்து நோக்கப்படவேண்டிய நிகழ்வுகளின் மொத்த எண்ணிக்கை முன்கூட்டியே நிர்ணயிக்கப்படுவதில்லை. ஆனால் அவ்வப்போது சேகரிக்கப்பட்ட தரவுகளை ஆராய்வதன்மூலம் ஆய்வு முன் செல்லும்போது தீர்மானிக்கப்படுகிறது. இத்தகைய ஆய்வில் கருதுகோளானது ஏற்றுக்கொள்ளப்படுமா அல்லது மறுக்கப்படுமா, அதிக தரவுகள் தேவைப்படுமா அல்லது குறிப்பிட்ட மாதிரியிலான தரவுகள் அதிகமாகத் தேவைப்படுமா என்பனவற்றைத் தீர்மானிக்க ஆய்வின் ஒவ்வொரு நிலைகளிலும் தரவுகள் ஆராயப்படுகின்றன.

Serial monogamy
தொடர் ஒருதுணைமணம்

மேலைநாட்டுச் சமுதாயங்களில் குறிப்பாக அமெரிக்கா போன்ற நாடுகளில் ஒருவர் ஒரு துணையுடன் மட்டும் வாழ்வதும் பின்னர் அத்துணையைக் கைவிட்டு வேறொரு மணத்துணையைத் தேடிக்கொள்வதும் பின்னர் அத்துணையையும் கைவிட்டு மூன்றாம் துணையைச் சேர்த்துக் கொள்வதும்வழக்கில்காணப்படுகிறது. இதனைத் தொடர் ஒருதுணைமணம் என்பர்.

Serology
இரத்தவியல்

இப்பிரிவு பெரும்பாலும் மானிட உடலளவையியலின் ஓர் உட்பிரிவாகச் சேர்க்கப்பட்டுள்ளது. மனிதர்களை வகைப்படுத்துவதில் இரத்தக்குழுக்கள் மிகுந்த பயனுள்ளவையாக உள்ளன.

Service Center
சேவைமையம்

சுற்றுப்புறப் பகுதிகளுக்குச் சேவைபுரிகிற ஒரு நகரம் அல்லது கிராமத்தைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. அவ்வாறான சேவைகள் பொருளாதார, மருத்துவ, இன்பப் பொழுது போக்குச் சார்ந்த, மதம்சார்ந்த மற்றும் கல்வி சார்ந்தவைகளாக இருக்கும்.

Service Class
பணிவிடை வகுப்பு

வகுப்பு நிலைகளைத் தரவாரியாகப் பிரிப்பதற்காக இச்சொல் பயன்படுத்தப்பட்டது. அதாவது வியாபார மேலாளர்கள், நிறுவனங்களால் பணியமர்த்தப்பட்ட வாழ்க்கைத்தொழிலர், பொது அலுவலர்கள் போன்ற உயர்ந்த நிலையிலான உடல் உழைப்பற்ற குழுக்களைப் பிரிப்பதற்காக இச்சொல் கையாளப்பட்டது. இக்கருத்துரு பரவலாகப் பயன் படுத்தப்படவில்லை.

Sex
பால்

ஆணுக்கும் பெண்ணுக்குமிடையிலான இரு பெரும் அந்தஸ்துகளான உயிரியல்சார் செயல் பாகுபாட்டின் விரிவுபடுத்துதலைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப் படுகிறது. இதன் அடிப்படையில் அனைத்துச் சமுதாயங்களிலும் நடக்கைமுறை வேறுபடுகிறது.

Sex Drive
பாலுணர்வு

மனிதர்களிடையே காணப்படும் உயிரியல் அடிப்படையில் இயற்கையாகவே பெறப்படும் பாலுணர்வு தொடர்பான வழக்கங்களும் உணர்வுகளும், சான்றாகப் பாலுணர்வு நடைமுறைகளைக் கூறலாம்.

Sexism
பால் வேறுபாட்டுணர்வு

சமுதாயத்தில் ஆண்களுக்கு ஏற்ற பங்கு, பெண்களுக்கு ஏற்ற பங்கு என்று பாரம்பரியமாக நிலவும் கருத்தின்படி ஆண்களையும், பெண்களையும் நடத்துதல். சான்றாகப் பெண்கள் வீட்டு வேலைகளுக்குத்தான் உகந்தவர்கள் என்றும் வேறு வெளி வேலைகளுக்கு உகந்தவர்கள் அல்ல என்றும் கருதுவதைக் கூறலாம்.

Sex Ratio
பால்விகிதம்

ஒரு குறிப்பிட்ட மக்கள் தொகையில் 100 பெண்களுக்கு எத்தனை ஆண்கள் இருக்கிறார்கள் என்ற விகிதம்.

Sex Role
பால்கடமைக்கூறு

ஒரு பாலின் அங்கத்தினர் என்ற நிலையில் ஒரு ஆண் அல்லது பெண்ணுக்கு ஒதுக்கப் பட்ட பண்பாட்டளவிலான கடமைக்கூறு.

Shaman
மந்திரசூனிய மதகுரு

தனித்துறை வல்லுனராயில்லாத மருத்துவ, மந்திர மற்றும் மதம்சார் தொழில் நடத்துபவரைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. மேலும் இவர் மருத்துவர் அல்லது சூனிய மருத்துவர் என்றும் அழைக்கப்படுவார்.

Shamanism
மந்திரசூனிய மதகுரு ஆட்சி

மாயவித்தை, சூனியம் ஆகியவற்றை உட்கூறுகளாகக் கொண்ட சைபீரியப் பழங்குடி மக்களின் சமயம் மற்றும் ஆட்சிமுறை.

Shifting Cultivation
இடம்பெயர் வேளாண்மை

இவ்வகை வேளாண்மையில் காட்டுப்பகுதியில் வாழும் பழங் குடியினர் அவர்களின் குடியிருப் புக்கருகில் ஓர் இடத்தைத் தெரிவு செய்து அங்குள்ள காட்டினை அழித்து வெட்டிய மரங்களைத் தீயிட்டுக் கொளுத்துவர். இதனால் கிடைக்கும் சாம்பல் நிலத்துக்கு உரமாக அமையும். இவ்வாறு தயார் செய்யப்படும் நிலத்தில் மூன்று முதல் ஐந்தாண்டுகள் வரை பயிரிடுவர். அதன்பின் வேறொரு புதிய இடத்தைத் தெரிவுசெய்து மீண்டும் பழையபடியே காட்டை அழித்துப் பயிரிடுவர். இவ்வாறு குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு ஒரு முறை இடம்விட்டு இடம் பெயர்ந்து பயிரிடுவதால் இடம் பெயர் வேளாண்மை என்பர்.

Sib
மரபுஉறவினர்

குடும்பம் அல்லது மரபுவழியில் இணைக்கப்பட்டவர்களால் உருவான ஒரு சமூக ஒருமம். பெரும்பாலும் ஒரு பெயர் மற்றும் சில குறியீ டுகளை உடையதாக இருக்கும். அதை நோக்கிய மதிப்பும் பயபக்தியும் மரபு உறவினர் களிடையே காணப்படும். மேலும் சடங்குகள், சடங்குமுறை சார்ந்த உபகருணங்கள் போன்ற பல வகைப்பட்ட உடைமைகளையும் உடையதாகக் க்ாணப்படும்.

Sibling
உடன்பிறப்பு

ஒரு சகோதரன் அல்லது சகோதரியைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. அதாவது ஒரு தாய்வயிற்றுப் பிள்ளைகளுள் ஒருவர். ஒரே தாய் தந்தையரின் பிள்ளைகள் உடன்பிறப்புக்களாவர்.

Sick Role
நோய்ப்பட்டோருக்குரிய பணி

சமூகவியல் பார்வையில் உடல் நலக் கேடு ஒருவித சமூக விலகல் எனக் கருதப்படலாம். இதன்படி ஒரு தனிநபர் ஒரு குறிப்பிட்ட பணியை மேற்கொள்கிறார். நோய் வாய்ப்பட்டோருக்குரிய பணி நான்கு முக்கிய குணாதிசயங்களை உடையது.

1. நோய்வாய்ப்பட்டநபர்இயல்பான சமூகப் பொறுப்புகளிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

2. நோயுற்றிருப்பவர்நோயாளியாக இருப்பதற்காகப் பழி சுமத்தப் படுவதில்லை.

3. நோயுற்றிருத்தல் சமூகரீதியில் விரும்பத்தகாததாக இருப்பதால் குறிப்பிட்ட நபர் தகுதிவாய்ந்த உதவிகள் நாடுவதை எதிர்பார்க் கப்படுகிறார்.

4. நோய்ப்பட்டோருக்குரிய பணி தகுதியான மருத்துவர் குறித்துள்ள திட்டமுறை வாழ்கைக்கு உடன்ப டுவது எதிர்பார்க்கப்படுகிறது.

Significant Others
குறிப்பிடத்தக்கோர்

ஒருவரின் வாழ்வில் குறிப் பிடத்தக்கவர்கள். சிறுவர்கள்,

விளையாடும்போது சிலநேரங்களில் பெரியவர்களைப் போன்று நடந்து காண்பிப்பார்கள். அப்பெரியவர்கள் சிறுவர்களின் குறிப்பிடத்தக்க மனிதர்களா கிறார்கள். பொதுவாகக் குழந்தைகள் அவர்களின் பெற்றோர்களைப் போலவும், ஆசிரியர்களைப் போலவும் நடந்து காட்டுவார்கள். எனவே ஆசிரியர்களும் பெற்றோர்களும் அவர்களின் வாழ்வில் குறிப்பிடத்தக்கவர்களாகிறார்கள்.

Silent Trade
அரவமற்ற வாணிகம்

எளிய பொருளாதாரத்தை உடைய சில சமுதாயங்களில் காணப்படும் பழக்கத்தைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. இதில் சமூகத்தொடர்பு இல்லாமலே பொருட்கள் பரிமாறிக்கொள்ளப் படுகின்றன. பரிமாறிக்கொள்ளப் படவேண்டிய பொருட்கள் தேர்ந்தாராயப்படுவதற்கும் எடுத்துக் கொள்வதற்கும் குறிப்பிட்ட இடத்தில் வைக்கப்படும். ஒரு நேரத்தில் ஒருவர்மட்டுமே அங்கு இருப்பார்.

Situs
இடங்குறித்தமைத்தல்

சமுதாயத்தில் உயர்வு அல்லது தாழ்வினை அலகாகக் கொண்டு வெளிப்படையாகச் சீர்தூக்காமல் வேறுபாடு கண்டறிதல். பால் வேறுபாடு, குல உறுப்பினர் பதவி மற்றும் சரிசமமான உயர்வுடைய தொழில்கள் ஆகியவற்றை இதற்குச் சான்றுகளாகக் கூறலாம்.

Six Fundamental Interests
ஆறு அடிப்படை நலன்கள்

ஆல்பியன் சுமாலின் கூற்றுப்படி மனித நடத்தையின் அல்லது இயக்கத்தின் ஆறு அடிப்படை மூலவிசைகள் வருமாறு:
1) உடல்நலம் 2) செல்வம் 3) தோழமை 4) அறிவு 5) அழகு 6) நேர்மை.

Skid Row
விசைத்தடுக்கு வரிசை

பெரும் நகரங்களில் காணப்படுகின்ற ஒரு பகுதியைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. அப்பகுதி பெரும்தொகையிலான வீடு இல்லாதவர்கள் வாழ்வதாகவும் பரத்தையர்கள், குடிகாரர்கள், திருடர்கள் மற்றும் மீட்புப் பணிக்குழுக்கள் ஆகியோர் அதிகமாகக் காணப்படுவதாகவும் இருக்கும்.

Slavery
அடிமைமுறை

அடிமைமுறை ஒருவிதச் சொத்தாக வரையறுக்கப்படுகிறது. அடிமைமுறை ஒருவருக்கு இன்னொருவர்மீது உடைமையுரிமை கொண்டாட வழிவகுக்கிறது. ஏனைய உற்பத்திகளைப் போன்று அடிமையும் ஒரு பொருளாகக் கருதப்பட்டது. அடிமை உழைப்பு பலதரப்பட்ட சமூகநிலைகளில் காணப்பட்டது.

Slogan
கொள்கைக்குரல்

கவர்ச்சியூட்டுகிற, சுருக்கமான, எளிதில் மனதில் வைத்துக்

கொள்கிற ஒரு கூற்றைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. அத்தகைய கூற்று ஒரு மாற்ற முடியாத கருத்து, மதிப்பீடு அல்லது குறிக்கோளை வெளிப் படுத்தும்.

Slum
சேரி

முதல்நிலையாக ஏழைஎளிய மக்களால் குடியிருப்பிடமாகக் கொள்ளப்பட்ட பகுதி. இப்பகுதி ஒழுங்கு குலைந்த குடும்பங்கள், தரக்குறைவான குணாதிசயங்கள், சுகாதாரமற்ற நிலைகள், அதிக மக்கள்தொகை மற்றும் சமூக ஒழுங்குமுறையற்ற தன்மை ஆகியவற்றை உடையதாகக் காணப்படும்.

Sociability
சமூகத்தன்மை

இக்கருத்துரு பிறரோடு தொடர்பு கொள்வதற்கான மனச்சார்பைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. அத்தகைய தொடர்பு மனிதர்களின் பரிமாற்ற மகிழ்வு, நடைமுறை குறிக்கோள்களைக் குறித்து எண்ணாமை அல்லது ஏனைய கருத்தார்ந்த செயல்நோக்கங் களுக்காக ஏற்படுவதாகும்.

Social
சமூக நேர்வு

தனிநபர்கள் அல்லது குழுக் களுக்கிடையிலான இடைத் தொடர்புகளோடு தொடர்புடை யதாயிருத்தலைக் குறிக்கிறது. குறைந்தபட்சம் ஒரு தனிநபரின் நடத்தைமுறை வேறொருவரால் அல்லது குழுவால் பாதிக்கப் படும்போதுதான் ஒரு சமூகக் காரணக்கூறு நிலவுவதாகக் கூறப்படுகிறது.

Social Action
சமூகச்செயல்

ஏனைய மக்கள்தொடர்பாகத் திசைமுகமாக்கப்பட்ட செயலாட்சி. சில குறிக்கோள்களை அடை வதற்கு ஒரு குழு மக்கள் சார்பான கூட்டுமுயற்சி.

Social Adaptation
சமூகத்தழுவல்

ஒரு குழு அல்லது தனிநபர் தன்னுடைய நடத்தையைச் சமூக சுற்றுச்சூழலுக்கு இசைவாக்கிக் கொள்கிற நடைமுறையைக் குறிக்கிறது. அதாவது ஏனைய குழுக்களுக்கு அல்லது பெரிய சமுதாயத்திற்கு இசைவாகத் தங்கள் நடத்தைய்ய மாற்றி அமைத்துக்கொள்வது.

Social Administration
சமூகநிருவாகம்

சமூகப்பணிகளை நிருவகிக்கும் நபர்களின் பணி அல்லது சமூக அரசியல்திறன் குறித்த ஆய்வு பாடப்பிரிவைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. இதன் செயல்விளைவானது சமூகச் சிக்கல்களோடு நடைமுறைத் தொடர்புடையதாகவும் இதன் செயல்நிறைவேற்றம் சமூகச் செயல்பாடுகள் மூலமானதாகவும் காணப்படும்.

Social Anthropology
சமூக மானிடவியல்

சமூக மானிடவியல் தொன்மைக்குடியினர், பழங்குடியினர், எழுத்தறிவில்லாதார் போன்றோரின் சிறு சமுதாயங்களை முறைப்படியாக ஒப்பிட்டு ஆராய்ந்து அதன்மூலம் மனித சமுதாயத்தின் தன்மையையும் அமைப்பையும் கொள்கைச் சார்ந்த அளவில் விளக்குகிறது. சமூக மானிடவியலார் சமுதாய உறவுகளைப் படிப்பதையே முதன்மையாகக் கொண்டுள்ளனர். குடும்பம், உறவுமுறை, அரசியல் அமைப்பு, சட்டம், சமயம், பொருளாதாரம் போன்றவற்றைச் சமூக அமைப்பு என்ற பெரும் தலைப்பின்கீழ் ஆராய்கின்றனர். சமூக மானிடவியல் வரலாற்று அணுகுமுறையைச் சாராதது. ஆனால் ஒப்பீட்டுமுறையை உயிர்மூச்சாகக் கொண்டது.

Social Behaviour
சமூகநடக்கை

பிறரின் நடக்கையின் பொருளுக்கு எதிர்செயலாக அல்லது மறுமொழியாகக் காணப்படுகின்ற மனித செயற்பாடுகள் அல்லது பிறரோடு பொருளுடைய எதிர்ச் செயலைச் செய்ய எண்ணுவது.

Social Category
சமூக வகையினம்

சமூக இடைத்தொடர்பு ஒழுங்கமைப்புக்குள் கூட்டிணைவாயில்லாத பலவாயிருக்கும் நிலையிலான நபர்களைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. அவர்கள் ஒருகுழுவாய் இணைந்திருப்பதில்லை. ஆனால் அவர்களும் ஒத்த சமூகக் குணாதிசயங்கள் அல்லது அந்தஸ்துகளை உடையவர்களாக இருப்பார்கள். வேலைபார்க்கும் பெண்கள், 65 வயதுக்கு மேற்பட்டவர்கள், பெருஞ் செல்வந்தவர்கள், இளம் வாலிபர் போன்ற பிரிவுகளைச் சமூக வகையினத்துக்குச் சான்றாகக் கூறலாம்.

Social Cause
சமூகக்காரணி

மக்களின் நடத்தையில் உள்ள மறைகருத்தினை வெளிப்படுத்துகின்ற ஒரு செயல் அல்லது நிலைமை.

Social Change
சமூகமாறுதல்

பொதுவாக மக்களின் கருத்துக்கள், விதிமுறைகள், மதிப்பீடு, சமூகப்பங்கு அல்லது கடமைக் கூறு, சமூகப் பழக்கங்கள் மற்றும் அவர்களின் அமைப்பாண்மை அல்லது இணைப்பாக்கம் ஆகிய வற்றில் ஏற்படுகின்ற எந்த ஒரு மாறுதலையும் குறிப்பிடுவதற்கு இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

Social Class
சமூகப்பிரிவு

சமூகப் பொருளாதார நிலைகளில் ஒத்த தகுதிகளையும், குணங்களையும் உடைய மக்களின் சமூகப்பிரிவு. உயர்ந்த, நடுத்தர மற்றும் தாழ்ந்த என்று முக்கிய

பிரிவுகள் உள்ளன.

Social Collective
சமூகத்திரள்

இச்சொல் ஒரு குழுவாகக் காணப்படும் தனிநபர்கள் அல்லது குடும்பங்களைக் குறிக்கிறது. இவர்கள் உடனிணைந்து பங்கு கொண்ட பாரம்பரியத் தன்மைகளால் ஒருவருக்கொருவர் இணைக்கப்பட்டிருப்பார்கள். அல்லது அவர்களின் பொதுவான ஆர்வம் மற்றும் பொதுவான தொலைநோக்கினால் இணைக்கப் பட்டிருப்பார்கள். அவர்கள் குறிப் பிட்ட கருத்தியல் கொள் கைசார் ஒருமைப்பாட்டில் விழிப் புணர்வு டையவர்களாய் இருப் பார்கள்.

Social Contagion
சமூகத்தொற்று

கருத்துக்கள், மனப்பாங்குகள் அல்லது நடக்கைமுறைகள் ஆகிய வற்றின் பரவுதலைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. அவை மனக்கிளர்ச்சியான தொனியில் வதந்திகள் மற்றும் போலி விளக்கக்கூறுகளைப் போன்று வேகமாக பரப்பப்படும்.

Social Contract
சமூக உடன்படிக்கை

உடன்படிக்கைக் கோட்பாடு சமுதாயத்தில் காணப்படும் உரிமைகள், பரஸ்பரக் கடப் பாடுகள் ஆகியவற்றின் தோற் றங்கள் மற்றும் இணைக்கும் சக்திகள் ஆகியவற்றை விளக்க முற்படு கிறது. சமுதாயநிலைக்கு முந்தையநிலையில் மக்கள் முழு மையான தனிப்பட்ட சுதந்திரத்தை அனுப வித்தனர். ஆனால் அதே சுதந்திரம் அவர்கள் உடல்சார் வன்முறை மற்றும் சுரண்டல் போன்ற அச்சுறுத்தலுக்குப் புகலி டமற்றவர்கள் என்ற பொரு ளையும் அளித்தது. அத்தகைய அச்சுறுத்தலை அகற்றுவதற்காக மக்கள் ஒருவரோடொருவர் சமூக உடன்படிக்கையில் நுழைந்தனர். அவர்களின் தனிப்பட்ட முழுமை யான சுதந்திரத்தை ஒரு மூன் றாவது நபரிடம் அதாவது நாட்டரசிடம் ஒப்படைத்தனர். அது சமூக ஒழுங்கு மற்றும் திடநிலைக்கு உத்தரவாதமாகச் செயல்பட்டது.

Social Control
சமூகக் கட்டுப்பாடு

ஒரு சமுதயத்தின் ஒத்துக் கொள்ளப்பட்ட சமூக விதி முறைகளைத் தனிநபர்களும் குழுக்களும் பின்பற்றுவதற்கும் ஒத்துப்போவதற்கும் என்றே உருவாக்கப்பட்ட அமைப்பு மூலமான வழிவகைகள். வீண் பேச்சு ஏளனம் அல்லது கேலி மற்றும் புகழ்ச்சி போன்ற உத்திகள் வாயிலாக தனிநபர்மேல் ஒரு குழுவால் முயன்று உண்டு பண்ணப்படுகின்ற முறைசாரா வற்புறுத்தல் வேண்டுமென்றே உருவாக்கப்பட்ட வழிமுறை களுக்கு அப்பாற்பட்டுச் சமூக நடக்கையைச் சிலவழிகளில் கொண்டு செலுத்துகின்ற குழு விவாதமும் ஒருவித சமூகக் கட்டுப்பாடாகும்.

Social Darwinism
சமூக உயிர்மலர்ச்சிக் கோட்பாடு

இயற்கையின் தாவரங்களும் விலங்குகளும் இயற்கைத்தேர்வு விதிமுறைக்கு உட்பட்டிருப்பது போன்று பண்பாட்டுக் குழுக்களும் இனங்களும் இயற்கைத் தேர்வுக்கு உட்பட்டவை என்ற கருத்து. இதன்படி வலுவற்ற குழுக்கள் எண்ணிக்கையில் தாழ்வுற்றும் அவற்றின் பண்பாடுகள் கட்டுப்படுத்தப்பட்டும் காணப்படும். அதேவேளையில் வலுவான குழுக்கள் எண்ணிக்கையில் வளர்வதாகவும் வலுவற்ற குழுக்களின் மீது பண்பாட்டு ஆதிக்கம் செலுத்துவதாகவும் காணப்படும்.

Social Differentiation
சமூக வேறுபாடு

ஒரு சமுதாயத்தில் ஏற்படுகின்ற அந்தஸ்து வேறுபாட்டு வளர்ச்சி அல்லது பெருக்கம். ஒரு சமுதாயத்தில் வளர்கின்ற சமூக மற்றும் பண்பாட்டு வேறுபாடுகள்.

Social Disintegration
சமூகச்சிதைவு

ஒரு சமுதாயத்தில் சமூக உறவின் கட்டுப்பாட்டில் ஏற்படுகின்ற தீவிரமான சிதைவு, மற்றும் உட்குழுக் கூட்டொருமைப்பாடு. மக்கள் மிகச்சில சமூகச் செயல்களில் மட்டும் பங்கேற்கின்ற நடைமுறை. இதனால் மக்களிடையே கொடுக்கல் வாங்கலின் அளவு குறைந்து குழுக் கட்டுப்பாடுகள் வலுவிழக்கின்றன.

Social Disorganization
சமூக ஒழுங்குமுறைக் கேடு

எய்தப்பெற்ற அல்லது முயன்று அடைந்த அமைப் பாண்மையில் ஏற்படுகின்ற குறைபாடு அல்லது இழப்பு. குறிப்பிட்ட சில தரத்தின்படி குறைபாடுடைய அமைப்பாண் மையாகக் காணப் படுவது. ஒரு சமுதாயத்தில் பொருள் தெளி வின்மை, முரண்பாடுகள் அல்லது நிறுவனங் களுக்கிடையிலான சிக்கல்கள், சமூக விதிமுறைகள் மற்றும் பழக்கங்கள் ஆகியவை தனிநபர் மற்றும் குழுக்களின் மீதான கட்டுப்பாடுகளைக் குறைப் பதாக இருக்கும். அதாவது குற்றம் மற்றும் தீச்செயல், மதுப்பழக்கம், மனநோய் மற்றும் தற்கொலை ஆகியவை பெருகியிருக்கும்.

Social Distance
சமூக வேறுபாட்டுணர்வு

ஒருவர் பிற குழு அல்லது சமூகத்தினருடன் எந்த அளவு விருப்பு அல்லது வெறுப்பு உணர்வு கொண்டுள்ளார் என்ற நிலை. பொதுவாக இது பல்வேறு இனத்தவர் அல்லது சாதியினரிடையே நிலவும் தொடர்பைத் தெரிந்துகொள்ள உதவும் பண்பாட்டு, இன, மத, பொருளாதார மற்றும் பல வேறுபாடுகள் காரணமாக வெவ்வேறு குழுக்களைச் சேர்ந்த மக்கள் ஒருவரையொருவர் எந்த அளவுக்கு ஒதுக்கிவைத்து நடத்துகிறரர்கள் என்பதே சமூக

வேறுபாட்டுணர்வாகும்.

Social Dynamics
சமூக இயக்காற்றல்

இச்சொல் சமூக நடைமுறைகள் குறித்த ஆய்வோடு தொடர்புடையது. இடைத் தொடர்புடைய சமூக நடைமுறைகளை அலகாகக் கொண்டு சமுதாயத்தை ஆராய்தல் மற்றும் தொடர்ச்சியான சமூக மாறுதல்களின் படிநிலைகளை ஆராய்தலையும் குறிக்கிறது.

Social Engineering
சமூகப்பொறியியல்

குறிப்பிட்ட சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்குச் சமூகவியல் விதிமுறைகளைப் பயன்படுத்துவதைச் சமூகப் பொறியியல் என வரையறுக்கலாம்.

Social Evolution
சமூகப் படிமலர்ச்சி

மனிதச் சமுதாயமானது நீண்ட காலப்போக்கில் மிக உயர்ந்த வடிவங்களை வளர்க்க நாடி இயங்கும் என்ற ஊகத்தின் அடிப்படையிலான ஒரு சமூக மாறுதல் கோட்பாடு.

Social Experiment
சமூகச்சோதனை

ஒரு சமுதாயத்தில் பெரிய அளவில் அல்லது நிறுவன அளவில் திட்டத்தின் விளைவுகளைப் பற்றித் தெரியாத நிலையில் ஒரு புதிய கருத்தை அல்லது திட்டத்தைக் கடைபிடித்து விளைவுகளைப் பார்த்தல். ஆரம்பக்கல்வி முறையைக் கிராமப்புறப் பள்ளிக்கூடங்களில் புகுத்தியது சமூகச்சோதனைக்குச் சான்றாகக் கூறலாம்.

Social Facilitation
சமூக ஊக்குவித்தல்

ஒரு தனிநபரின் செயல்நோக்கம் அல்லது செயல்நிறைவேற்றத்தில் ஏனைய மக்களின் ஊக்கம் ஊட்டுகிற தன்மை.

Social Father-pater
சமூகத்தந்தை

முற்கால நாயர் சமுதாயத்தில் ஒரு பெண் கருவுறும்பொழுது அவளின் தாய்மைப்பேற்றிற்குக் காரணமானவன் நான்தான் என்று கூற ஒன்று அல்லது ஒன்றிற்கும் மேற்பட்ட ஆண்கள் முன்வருவர். இந்த உறுதிமொழி குழந்தை பிறந்ததும் பிறப்பைக் கவனித்த செவிலித்தாய்க்குக் கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுப்பதன்மூலம் அவர் அக்குழந்தையின் சமூகத்தந்தை என்னும் தகுதியைப் பெறுவார். ஆனால் அதன்மூலம் ஒருவர் அக்குழந்தையோடும் குடும்ப பொருளாதார, அதிகார சடங்குகளோடும் தொடர்பு பெற்றுவிடமுடியாது.

Social Gospel
சமூக நற்செய்தி

மதம் சமூகநலத்தில் அல்லது சமூகநீதியில் மிகவும் அக்கரை கொண்டது என்ற நம்பிக்கை.

Social Group Work
சமூகக் குழுப் பணி

சமூகப்பணியில் தனிக்குழுக்கள், கூட்டுக்குழுக்கள் போன்ற தன்னார்வச் சமூகக் குழுக் களோடு இணைந்து பணியாற்றுதல் மற்றும் ஆதரவளிக்கும் உத்தியைக் குறிக்கிறது. இதனால் சமூகநீதியில் விரும்பத்தக்க தன்மைகள் வளர்கின்றன.

Social Hierarchy
சமூக ஏற்றத்தாழ்வு/சமூகப் படிநிலை

பல்வேறு ஏற்றத்தாழ்வு கொண்ட சமுதாய அமைப்பு. ஒரு சமுதாயத்தில் அல்லது அமைப்பில் உள்ள அனைவரையும் பல்வேறு படிநிலைகளைக் கொண்டவர்களாகப் பிரித்தல். அவர்களின் கடமைகள் உரிமைகள் மற்றும் தனிச்சலுகைகள் ஆகியவை தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்கும். ஒருவரின் அந்தஸ்து நிலையை நிர்ணயிக்கும் அளவீடுகள் அச்சமுதாயத்தின் தன்மையைப் பொறுத்து அமையும். இன்றைய சமுதாயங்களில் ஒருவரின் கல்வி, வேலை, வருவாய், சாதி/வகுப்பு ஆகியவை அவருடைய சமூக அந்தஸ்து நிலையை நிர்ணயிக்கின்றன.

Social Hygiene
சமூக உடல்நலம்

பரத்தைமை மற்றும் ஒழுக்கக் கேட்டினால் ஏற்படுகின்ற நோய்களைக் கட்டுப்படுத்துதல் போன்ற சிக்கல்களோடு தொடர்புடைய சமூகப்பணியைக் குறிக்கிறது.

Social Inequality
சமூக ஒப்பின்மை

ஒரு சமுதாயத்தில் அல்லது குழுவில் வெவ்வேறு சமூக நிலைகள் அல்லது அந்தஸ்துகளுக்கு நடைமுறையில் இருக்கின்ற சமநிலையற்ற வாய்ப்புகள் மற்றும் பிரதிபலன்கள்.

Social Institution
சமூக நிறுவனம்

சமூக விதிமுறைகள் மற்றும் பங்குகளின் இடைத்தொடர்புடைய ஒழுங்கமைப்பு. அவை முக்கியமான சமூகத்தேவை அல்லது செயல்பாட்டுக்காக ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும். சமூகவியலில் இச்சொல் சமுதாயத்தில் நிலைநாட்டப்பட்ட அல்லது நிறுவப்பட்ட ஒன்றைக் குறிக்கிறது. சமூக நிறுவனம் என்பது நிலைநாட்டப்பெற்ற வழியிலான நடக்கைமுறையாகும்.

Social Integration
சமூக ஒருமையாக்கம்

தனிக்குழுக்களாக இருந்தவை ஒரு குழுவாக இணைவதைக் குறிக்கிறது. அதாவது முந்தைய சமூகப் பண்பாட்டு குழு வேறுபாடுகள் மற்றும் தனிக்குழுத் தன்மைகளைத் துடைத்தழித்துவிட்டு ஒரு குழுவாக இணைதல். சமூக ஒருமையாக்கமானது ஒரே பண்பாட்டில் உள்ள குழுக்களிடையே நடைபெறுவது வழக்கம்.

Social Interaction
சமூகச்செயல்விளைவு

ஒன்றுக்கொன்று தொடர்புடைய

சமூகச் செயல்பாடுகள். சமுதாயத்தில் ஓர் அமைப்பில் உள்ள அங்கத்தினர்களின் செயல்கள் மற்றொருவரைப் பாதிக்கும்படியான சமூகச் செயல்பாடுகள். இத்தகைய சமூகத்தொடர்புடைய செயல்பாடுகளை நன்கு ஆராய்வதன்மூலம் சமுதாயத்தை நன்கு புரிந்துகொள்ளமுடியும்.

Socialism
சமூகவுடைமை

சமுதாய அமைப்பில் சொத்துரிமை, பொருட்களை உற்பத்தி செய்யும் முறை ஆகியவை தனியாரிடம் இல்லாமல் சமுதாயத்திற்குப் பொதுவாகவும் சமுதாய கட்டுப்பாட்டிற்குள்ளும் இருத்தல்.

Socialization
சமூகவயமாக்கம்

சமூகச் சூழ்நிலைகளின் அனுபவங்கள் மூலம் மனநிலையிலும் உடல்நிலையிலும் மனித நடக்கைமுறையை உருவாக்குவதைக் குறிக்கிறது. சமூகவயமாக்கமானது கற்றல், தகவல் தொடர்பு மற்றும் பண்பாட்டு வயமாக்கம் ஆகியவற்றின் அனைத்து நடைமுறைகளையும் உள்ளடக்குகிறது. இதன்மூலம் ஒரு தனிநபர் சமூகத்தன்மையை வளர்த்துக்கொள்வதோடு சமூக வாழ்வில் பங்கேற்கத் தகுதியுடையவராகிறார். இத்தகைய நடைமுறைகள் தொடர்ந்து வாழ்நாள் முழுவதும் நடைபெறுகின்றன. அதாவது குழந்தைப் பருவத்திலிருந்தே பிள்ளைகள் அவர்தம் பண்பாட்டை அறிந்து கொள்ளவும் அதில் எவ்வாறு பொறுப்புடையவர்களாகச் செயல்படவேண்டும் என்பதைத் தெரிந்துகொள்ளவும் பயிற்றுவிக்கப்படுவதைக் குறிக்கிறது.

Social Milieu
சமூகச்சூழல்

மனிதனின் சமுதாய சுற்றுச் சூழலைக் குறிக்கிறது. மனிதர்கள் அவர்களின் சுற்றுச் சூழலுக்கு மறுமொழி அளிக்கும்போது அது இயற்பொருள்சார் மற்றும் இடம் சார் கிளர்சியூட்டிகளுக்கு மட்டுமல்லாமல் அவர்களின் சமூக சுற்றுப்புறத்திற்குமாகும். அதாவது எல்லா சூழ்நிலைகளிலும் ஏனைய நபர்களின் எதிர்பார்ப்புகளும் விதிமுறைகளும் ஈடுபடுகின்றன.

Social Mobility
சமூகநிலைபெயர்வு

தனிநபர் அல்லது குழு ஒரு சமூக வகுப்பு அல்லது சமூக தரத்திலிருந்து இன்னொரு சமூக தரத்திற்கு நகர்வதைக் குறிக்கிறது. வழக்கமான பயன்பாட்டில் சமூக நிலைபெயர்வு என்பது சமூகப் படித்தர ஒழுங்கமைவில் மேல் அல்லது கீழ் நகருதல் என்ற பொருளை உடையது. இதில் செங்கோட்டு நிலையிலான மற்றும் கிடைக்கோடு நிலையிலான நகர்வும் அடங்கும்.

Social Morphology
சமூக வடிவமைப்பியல்

சமூக அமைப்புக்கும் இயற்பொருள்சார் சுற்றுச்சூழலுக்கு

மிடையிலான தொடர்புகளைக் குறித்த ஆய்வு. மேலும் ஒரு குறிப்பிட்ட இயற்பொருள்சார் சுற்றுச்சூழலில் ஒரு பண்புக் குழுவின் அல்லது சமுதாயத்தின் சமூக அமைப்பால் வெளிப்படுத் தப்படுகின்ற பொருள்சார் வடிவங் களோடும் தொடர்புடையது. சான்றாக பல்வேறு மக்களின் பரப்பீடு மற்றும் சேவைகள், மக்கள்தொகை அடர்த்தி போன்ற வற்றைக் கூறலாம்.

Social Movement
சமூக இயக்கம்

இச்சொல்லானது மறுசீரமைப் பைக் குறிக்கோளாகக் கொண்ட பலதரப்பட்ட செயல்களின் திரளை உள்ளடக்குகிறது. பொது வகாகச் சமூக இயக்கம் உயர்ந்த அளவில் அமைப்புமுறையாக்கப் பட்டதல்ல. ஆனால் குறிப்பான அல்லதுபரவலாக மனக்குறைகளை நோக்கிய இயல்பான சமூக மறுப்பிலிருந்து தோன்றுகிறது சான்றாக அறமுறை சீர்திருத்தங் களுக்கான இயக்கங்களைக் கூறலாம்.

Social Need
சமூகத்தேவை

ஒரு தனிநபர் சமூகச் செயலெதிர் செயல்களின் மூலம் கற்றுக்கொள்கின்ற தேவைகளைக் குறிக்கிறது.

Social Norm
சமூக நெறிமுறை

எத்தகைய நடக்கைமுறை யானது சமூகரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படும் என்பது குறித்த இரண்டு அல்லது மேற்பட்ட மக்களின் பகர்ந்து கொள்ளப்பட்ட எதிர்பார்ப் புகளின் மூலம் வரையறுக்கப்பட்ட விதிமுறை அல்லது நடக்கைத் தரம். சமூக நெறிமுறைகள் குறிப்பிட்ட சமூகச் சூழ்நிலைக்கு உகந்த மற்றும் கையாளத்தக்க நடக்கை முறை குறித்த வழிகாட்டுதலை அளிக்கிறது. இவ்வாறு ஒரு சமூகக்குழுவில் ஒருவரின் பங்கு மற்றும் கடமைகள் அக்குழுவின் சமூக நெறிமுறைகளால் வரையறுக்கப் படலாம்.

Social Object
சமூகப்பொருள்

ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் சமூகநடக்கைமுறையின் குவிமை யமாக இருக்கும் பொருள் அல்லது இயல்நிகழ்வைக் குறிக் கிறது. அப்படியானால் ஒரு சமூகப் பொருள் ஒரு மனிதராக, ஒரு குழுவாக, ஒரு மனப்பான் மையாக, ஒரு குறிக்கோளாக இருக்கலாம்.

Social Obligation
சமூகக் கடப்பாடு

சமூக எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதற்குத் தேவையானதென அங்கீகாரிக்கப்பட்ட நடக்கை முறை.

Social Order
சமூக ஒழுங்கு

ஒரு சமுதாயத்தில் சமூகநிறுவ னங்களின் ஒட்டுமொத்த சிக்கல்

வாய்ந்த முழுமை மற்றும் அவற்றின் இடைத்தொடர்புகள். சமூகக் கட்டளைச் சட்டங்களின் முரண்பாடின்மை மற்றும் இணக்கமான சமூக உறவுகள் ஆகியவை சிறப்புப் பெற்றிருக்கும் ஒரு சமுதாயத்தின் அல்லது குழுவின் நிலையைக் குறிக்கிறது.

Social Organisation
சமூக அமைப்பாண்மை

ஒரு சமூகக் குழு அல்லது சமுதாயம் சமுதாயத்தை ஒன்றோடொன்று தொடர்புடைய படிநிலை அமைப்பு மற்றும் அந்தஸ்து நிலைகள் ஆகியவற்றால் அமைத்தல். ஒரு சமுதாயத்தில் சமூக பழக்கங்கள், மதிப்பீடுகள் மற்றும் கருத்துப்பாங்குகள் ஆகியவற்றில் உயர்ந்த அளவிலான ஒழுங்கு மற்றும் ஒருமைப்பாடு நிலவக் கூடிய முறைமை அல்லது கட்டுப்பாடு. இதனால் மக்களிடையே மிகக் குறைவான சிக்கல்கள் மற்றும் பொருள்தெளிவின்மை காணப்படும். மக்களிடையே வழக்கமான முறைப்பட்ட உறவுகள் காணப்படும். மக்கள் ஒருவரோடொருவர் வழக்கமாக முறையான வழியில் நடந்து கொள்வார்கள்.

Social Ossification
சமூகக் கடினமாக்கம்

சமூக அந்தஸ்து நிலைக்ளை மிகவும் உறுதிப்பாடானதாக்கும் நடைமுறை. சமூகப் பழக்கங்களின் தரப்படுத்தப்படும் நடைமுறை.

Social Parasite
சமூக ஒட்டுண்ணி

பிறரின் செலவழிவில் தன் வாழ்வுக்கு வழிசெய்கின்ற ஒரு வித மனிதன். அவர் தனக்கு உதவியவர்களுக்கு எதையும் திருப்பிச் செலுத்த முயற்சிக்கவும் மாட்டார். சான்றாகப் பிச்சைக்காரர்கள், அச்சுறுத்திப் பணம் பறிப்போர், தாங்கள் சார்ந்திருக்கும் நிறுவனங்களுக்கு எதுவும் செய்யாதிருக்கும் ஊதியம் பெறும் அலுவலர்கள் ஆகியோரைக் கூறலாம்.

Social Philosophy
சமூகத் தத்துவம்

தத்துவவியல் கருத்துருக்கள் மற்றும் நுண்ணறிவுத்திறங்களைப் பயன்படுத்தி சமுதாயம் மற்றும் சமூகவாழ்வை ஆராய்தல்.

Social Problem .
சமூகச்சிக்கல்

இலக்கியல் நிலையிலிருந்து வேறுபடுகின்ற எந்த ஒரு சமூக நிலைமை அல்லது பழக்கம். சமுதாயத்தின் மதிப்பீடுகளிலிருந்து வேறுபடுகின்ற சமூகப் பழக்கங்கள் மற்றும் நிலைமைகள் தனிமனிதர் நிலைகுலைவை ஏவிச் சமூக மதிப்பீடுகளைத் தக்கவைத்தல் மற்றும் சாதனைகள் படைத்தல் ஆகியவற்றில் பெரும் தடையை ஏற்படுத்தும். சமூக ஒருமைப்பாடு மற்றும் ஒழுங்குக்குரிய மதிப்பின் அளவைக் குறைக்கும்.

Social Process
சமூக நடைமுறை

மனிதர்களிடையே காணப்படும் சமூகச் செயலெதிர் செயல்கள். ஒரு குழு மக்களிடையே காணப் படும் தொடர்ச்சியான செயல்கள். சில குறிக்கோள்களை அடைவதற் காக குழு மக்கள் ஒருவரோ டொருவர் செயல்படுகின்ற வழி முறைகள்.

Social Psychology
சமூக உளவியல்

ஒரு குழுச் சூழமைவில் தனிமனிதர் நிலையின் வளர்ச்சி குறித்த முறையான ஆய்வு. கூட்டங்கள், மக்கள் திரள்கள், பொதுமக்கள் ஆகியோரின் கூட் டான இயக்கம் குறித்த ஆய்வும் அவர்களின் நடத்தை எந்த வழிகளில் செல்வாக்குச் செலுத் தப்படுகிறது. திசை திருப்பப் படுகிறது, கட்டுப் படுத்தப் படுகிறது. என்பனவற்றைப் பற்றிய ஆய்வும் இதில் அடங்கும்.

Social Pyramid
சமூகக் கூம்பு வடிவம்

கூம்பு வடிவில் உருவாகியுள்ள சமூக அடுக்கமைவு. கூம்பு வடிவின் அடிப்பகுதி அதிக எண்ணிக்கையிலான தாழ்ந்த அடுக்குகளை உடையதாகவும், கூம்பு வடிவின் மேல்பகுதி குறைந்த எண்ணிக்கையிலான உயர்ந்த வகுப்புகள் அல்லது அடுக்குகளை உடையதாகவும் காணப்படும். இதுவே சமூகக் கூம்பு வடிவம் ஆகும்.

Social Relationship
சமூகஉறவு

சமுதாயத்தில் தொடர்ந்து நடைமுறையில் காணப்படும் சமூகச் செயலெதிர் செயல்கள் மற்றும் உறவுகள். சான்றாகக் குடும்ப அங்கத்தினர்களிடையே காணப்படும் உறவுகளையும், கிராமச் சமுதயாத்தில் சாதி களிடையேயும், சாதியினுள்ளும் நிலவும் உறவுகளையும் கூறலாம்.

Social Reorganization
சமூக மறுசீரமைப்பு

சமுதாயத்தில் விரும்பத்தகாத நிலைகளை எதிர்த்துத் தடை செய்கிற கூட்டிணைவான செயல் நடைமுறைகள்.

Social Research
சமூகஆய்வு

சமூக அமைப்பில் மக்களின் செயல்பாடுகளைக் கவனித்து செய்திக்கூறுகளைச் சேகரித்து முறையாக ஆராய்வது. இவ் வாய்வின் முக்கிய நோக்கம் சமூகக் கோட்பாடுகளைச் சோதித்தறிதலும் அவைகளை வளர்த்த லுமாகும். இத்தகைய ஆய்வு சமூகவியல் அறிஞர் களின் முக்கியப் பணியாகும்.

Social Revolution
சமூகப்புரட்சி

ஒரு சமுதாயத்தில் அந்தஸ்து அமைப்பில் அல்லது சமூகப் பழக்கங்களில் திடீரென ஏற்படு கின்ற கடுமையான மாறுதல்கள்.

Social Sciences
சமூக அறிவியல்

மனிதச் சமூகநடத்தையின் குறிப்பிடத்தக்கப் பண்புக் கூறுகளை மெய்யான அல்லது புலனால் அறியக்கூடிய நிலையில் ஆராய்கின்ற தொடர்புடைய எந்த ஓர் அறிவியலும் சமூக அறிவியல் ஆகும். சமூக அறிவியலின் இன்றியமையாத துறைகளாகச் சமூகவியல், அரசியல், பொருளியல், பண்பாட்டு மானிட வியல், சமூக நிலவியல், மக்கள் தொகையியல், மொழியியல் மற்றும் சமூக உளவியல் ஆகியவை சேர்க்கப்படும். சமூக அறிவியலார் உடல்சார் மானிட வியல் மற்றும் உளவியல், வரலாற்று எழுத்தாண்மை மற்றும் தொல்பொருள் ஆராய்ச்சி ஆகிய வற்றையும் சமூகஅறிவியலில் சேர்க்கின்றனர்.

Social Statistics
சமூகப் புள்ளியியல்

சமூகச்சிக்கல்களுக்குப் புள்ளியியல் முறைகளைக் கையாளுவது. இன்னொருவகையாக அத் தகைய சிக்கல்களின் மீது விளைவுகளை ஏற்படுத்துகின்ற சேகரிக்கப்பட்ட உண்மையான எண்முறைத் தரவுகளைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

Social Statics
சமூக நிலையமைவியல்

ஒரு குறிப்பிட்ட நேரத்தில் சமூக அமைப்பு மற்றும் அதன் வெவ்வேறு பகுதிகளின் இடைத் தொடர்புகள் குறித்த ஆய்வு.

Social Status
சமூக அந்தஸ்து

ஒரு குழுவிலுள்ள தனிநபரின் படிநிலை. சமுதாயத்தில் ஒருவரின் அந்தஸ்து நிலை அல்லது படி நிலை அவரது வயது, செல்வம், தொழில் போன்ற பல்வேறு காரணக் கூறுகளைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது.

Social Stratification
சமூக அடுக்கமைப்பு

மக்கள் அவரவருக்கென்று ஏற்படுத்திக்கொள்ளும் தகுதி சமுதாய உறுப்பினர்களைப் பல தரப்பிரிவுகளாகப் பிரித்து, அதன் மூலம் உயர்வு தாழ்வுடைய பல படிநிலைகளை ஏற்படுத்து கிறது. ஒத்த தன்மையுடைய தொழிலைச் செய்வோர் அனைவரும் சமுதா யத்தில் ஒரு தனிக்குழுவாக மதிக்கப்படு கின்றனர். இதனை சமூக அடுக்கமைப்பு என்பர்.

Social Structure
சமூக அமைப்பு

மக்களிடையே காணப்படும் நம்பிக்கைகள், உயர் மதிப்பீடுகள், சமூகஉறவுகள் ஆகியவற்றைக் கொண்ட ஓர் அமைப்பு. மானிட வியல் அறிஞர்களின் கருத்துப்படி சமூக அமைப்பு குடும்பம், உறவுமுறை, மதம், அரசியல் மற்றும் பொருளாதார அமைப்பு ஆகியவற்றை முக்கிய அங்கங் களாகக் கொண்டிருக்கும்.

Social Survey
சமூக அளவாய்வு

ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பு,

பண்பாட்டு அல்லது ஆட்சிப் பகுதியில் வாழும் மக்களின் அனுபவச்செய்திகளை முறையாகச் சேகரிக்கும் ஆய்வு.

Social System
சமூக முறைமை

மக்கள் ஒருவரோடொருவர் தகவல்தொடர்பு கொள்வதற்குப் பயன்படுத்துகின்ற பழக்கங்கள் மற்றும் பொதுக்குறியீடுகளின் மொத்த தொகுதி. ஒரு சமுதாய மக்கள் மத்தியில் காணப்படும் முறைப்பட்ட உறவுகளே சமூக முறைமை ஆகும்.

Social Work
சமூகப்பணி

மக்களின் தனிப்பட்ட மற்றும் குடும்ப சிக்கல்களுக்கு ஆற்றல் வாய்ந்த முறையில் தீர்வுகாண உதவுவதை வாழ்க்கைத் தொழிலாகக் கொண்ட முயற்சி சமூகப்பணி ஆகும்.

Society
சமூகம்

ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் வாழக்கூடியதாகவும், சுதந்திரமாகத் தானே வளரக்கூடியதாகவும், தனக்கென்ற ஒரு பண்பாட்டை உடையதாகவும், தனக்குள்ளே எல்லாச் செயல்களையும் நடத்திக்கொள்கிறதாகவும் அமைந்துள்ள ஒரு மனிதக்குழு. இதுவே மிகப் பெரிய சமூகக்குழுவாகும்.

Sociobiology
சமுதாய உயிரியல்

சமுதாய உயிரியலில் உயிரியல் அறிவும் சமுதாயப் பண்பாட்டு அறிவும் மிக முக்கியமானவை. மனிதர்கள் அனைவரும் உயிரியல் அடிப்படையில் ஒத்தவர்கள். அவ்வாறிருக்க மக்கள் குழுவினர் தனித்தனி வாழ்க்கை முறையையும், பண்பாட்டையும் கொண்டுள்ளனர். அதற்குக் காரணம் அவரவர் வாழும் புவிச்சூழலேயாகும். அதன்வழி அமைவதே அவரவர் பண்பாடாகும். சமுதாய உயிரியலை சிலர் உயிர்சார் இலக்கணம் (Biogrammar) என்றும் கூறுவர். இலக்கணம் எவ்வாறு ஒரு மொழியின் எல்லையை வரையறுக்கிறதோ அவ்வாறே உயிர்சார் இலக்கணமும் மனிதநடத்தை முறைகளுக்கு ஓர் எல்லையை வரையறை செய்கிறது என்பதாகும்.

Socio-Economic Status
சமூகப் பொருளாதார அந்தஸ்து

சமுதாயத்தில் ஒருவரின் வருவாய்த் தொகை. சொத்து, வேலையின் தன்மை ஆகியவற்றோடு தொடர்புபடுத்தப்பட்ட அந்தஸ்து அல்லது செல்வாக்கின் அளவு.

Sociogram
சமூக நெளிவரைவு

ஒரு குழு உறுப்பினர்களுக்கிடையிலான உறவுகளை வரைவுப் பதிவு மூலம் ஒரு நெளிவரையில் அளிக்கலாம். அதாவது யார் யாரோடு பரிமாறிக்கொள்கிறார்கள், யார் யார் வலுவான தலைவர்கள்

என்பனவற்றை வரைவுப் பதிவு மூலம் குறிப்பிடுவது.

Socic-Group
சமூகக்குழு
ஒருவர் இணைகிற ஒரு குழுவானது உளவியல்சார் மனநிறைவுக்காக அவர் தனிப்பட்ட நிலையில் சொந்த மாகத் தேர்ந்தெடுக்கப்படுவதாக அல்லாமல் அக்குழுவின் சமூக முக்கியத்துவத்தினால் நடைபெறுகிறது. அத்தகைய குழுவைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

Sociolinguistics
சமூக மொழியியல்
சமூகவியலுக்கும் மொழியியலுக்குமிடையிலான இடைத்தொடர்புகள் குறித்தஆய்வு. அதாவது மொழிக்கும் சமூக உறவுகளுக்குமிடையிலான தொடர்பு.

Sociological Consciousness
சமூகவியல் நோக்குணர்வு
சமுதாயத்தில் இயங்கும் பல்வேறு சக்திகளைப் பற்றிய தெளிவான உணர்வு. ஒரு சமூகம் செயல்படும் விதத்தைக் கண்டறிகை. மனிதர்கள் சமூகத்தில் எவ்வாறு பல்வேறு சக்திகளால் தங்கள் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்திக் கொள்கிறார்கள் என்பதை அறிவது. எந்த சக்திகள் ஒருவரின் வெற்றி தோல்விகளை நிர்ணயிக்கிறது என்பதை உணர்வது போன்றவை சமூகவியல் நோக்குணர்வாகும்.

Sociological Determinism
சமூகவியல் நியதிவாதம்
தனிநபர் நடக்கைமுறையானது முற்றிலுமாகப் பண்பாடு மற்றும் குழு ஆக்கத் திரிபுகளால் உறுதிப்படுத்தப்படுகிறது என்ற கருத்து. இக்கருத்து தனிநபர் வேறுபாடுகள் அல்லது உளவியல்சார், உயிரியல்சார் மற்றும் நிலவியல் ஆக்கக் கூறுகளால் ஏற்படுகின்ற ஆக்கத்திரிபுகளின் உட்பொருள்களைக் கணக்கில் கொள்ளாதிருக்க முற்படுகிறது.

Sociological Fact
சமூகவியல் மெய்மை
ஒரு சமூக இயல் நிகழ்ச்சியைக் குறித்த மெய்ப்பிக்கத்தக்க அறிவிப்பு அல்லது கூர்நோக்கு. அது ஒரு சமூகவியல் கருதுகோள் அல்லது பொது மெய்மையோடு தொடர்புடையதாகக் காணப்படும்.

Sociological Imagination
சமூகவியல் கருத்துரு
சமூகத்தில் தற்போது நிலவிவரும் நடைமுறைகளுக்குப் பதிலாக நன்கு பயன் தரக்கூடிய மாற்றுச் சமுதாய முறைகளைப் பரிந்துரைக்கும் திறன். இது தனி மனிதர்களையும் மனிதச் சமுதாயத்தையும் கவனத்தில் கொண்டு கடந்தகால, நிகழ்கால மற்றும் எதிர்காலத் தேவைகளை ஆராய்ந்து கூறப்படும் கருத்துக்கள் அடங்கியது.

Sociological Novel
சமூகவியல் நாவல்
சமூக நாவல்களில் வரும் பாத்திரங்கள் நிகழ்ச்சிகள் ஆகிய

வற்றின்மீது சமகாலத்திய சமுதாய, பொருளாதார நிலைமைகள் ஏற்றிச் சொல்லப்பட்டிருக்கும். வெளிப்படையாகவோ, குறிப்பாகவோ சமுதாய சீர்திருத்தத்தை மையமாகக் கொண்டு சமூகவியல் நாவல்கள் அமைவதனால் இவற்றைச் சமூக ஆய்வு நாவல்கள் என்றும் கூறலாம்.

Sociological Perspective
சமூகவியல் நோக்கு

சமூகத்தில் மனிதர்களின் செயல்பாடுகள் ஒவ்வொன்றும் எவ்வாறு உருவாக்கப்பட்டு நடைமுறையில் செயல்படுகின்றன என்பதைப் பல கோணங்களில் பார்ப்பது. பெரும்பாலும் இச் சமூகவியல் நோக்கு ஒரு கோட்பாட்டின் அடிப்படையில் அமைகிறது. குறிப்பாகச் சமூக முரண்பாடுகள் என்ற கோட்பாட்டு நோக்கில் அணுகினால் முரண்பாடுகள் சமூகத்தில் எப்பொழுதும் உள்ளன என்றும், வாழ்வில் முரண்பாடுகள் முக்கியப் பங்கு கொண்டுள்ளன என்றும் புரிந்துகொள்ளலாம். எதிர்ப்புகள், முரண்பாடுகள் ஆகியவை சமூகவாழ்வின் ஒரு பகுதியாகும்.

Sociological Practice
சமூகவியல் நடைமுறை

சமூகவியல் அறிவை நடைமுறையில் உள்ள மனிதர்களின் பிரச்சனைகளைத் தீர்க்கப் பயன்படுத்துதல். சமூகவியல் அறிஞர்களின் ஆய்வு முடிவுகள் அதிகாரிகளுக்கும் மக்கள் நலத்திட்டங்களைச் செயல்படுத்துவதற்கும் உதவுகின்றன.

Sociology
சமூகவியல்

சமூகத்தை அறிவியல் முறையில் ஆராயும் முறை. சமுதாயத்தில் மக்களின் வாழ்க்கையையும், செயல்பாடுகளையும் எந்த சக்திகள் உருவாக்கிக் கட்டுப்படுத்துகின்றன என்பதைத் தெளிவாகவும் அறிவுபூர்வமாகவும் தெரிந்துகொள்ள உதவும் துறை. சமூகவியல் என்ற பெயரைக் கொடுத்தவர் அகஸ்டே காம்டே என்ற பிரெஞ்சு தத்துவஞானி ஆகும். இத்துறை 19ஆம் நூற்றாண்டில் தோன்றி 20 ஆம் நூற்றாண்டில் சிறப்பாக வளர்ந்து தற்போது பல பிரிவுகளை உடையதாகக் காணப்படுகிறது.

Sociology of Art
கலைச் சமூகவியல்

கலையின்மீது சமுதாயத்தின் ஆக்கத்திரிபுகள் மற்றும் சமுதாயத்தில் கலையின் பங்கு, அதன் ஆக்கத்திரிபுகள் ஆகியவற்றைக் குறித்த ஆய்வு.

Sociology of Development
வளர்ச்சிச் சமூகவியல்

வளரும் சமுதாயங்களின் மீது ஆலைமயமாக்கத்தின் சமூக மற்றும் அரசியல் உடைமை உரிமைகள் குறித்த ஆய்வில் ஈடுபடுகிற ஒரு சமூகவியல் பிரிவு.

Sociology of Education
கல்விச் சமூகவியல்

கல்வி நிறுவனங்கள் மற்றும் அமைப்பாண்மைகளை ஆய்வு செய்கிற ஒரு சமூகவியல் பிரிவு.

Sociology of Family
குடும்பச் சமூகவியல்

குடும்ப அங்கத்தினர்களுக்கிடையிலான உறவுகளின் அடிப்படையில் குடும்பங்களின் வகைகளை ஆராய்தல். பொதுவாகக் குடும்பத்தில் வாழ்வுக் காலம் மற்றும் நவநாகரிக நடத்தை, மணநல்வாழ்வோடு இணைந்த காரணக்கூறுகள், குடும்பத்தில் நகர்ப்புற மற்றும் கிராமப்புற வாழ்க்கைமுறையின் தாக்கம், அத்தகைய தாக்கத்தின் திருப்புக்கட்டமான இடப்பெயர்ச்சி, மணவிலக்கு கைவிடப் பட்ட நிலை, இறப்பு ஆகியவை பற்றிய ஆய்வும் இதில் அடங்கும்.

Sociology of Gender
பால்வகைச் சமூகவியல்

ஆண், பெண் பால்களைக் குறித்த சமூகவியல் ஆணுக்கும் பெண்ணுக்குமிடையிலான உடல் சார் வேறுபாடுகள், பண்பாடு மற்றும் சமூக அமைப்பால் இடைநின்றிணைக்கப்படும் விதத்தை ஆழ்ந்து ஆராய்கிறது. இத்தகைய வேறுபாடுகள் பண்பாட்டு ரீதியிலும் சமூகரீதியிலும் விரிவுபடுத்தப்படுகிறது.

Sociology of knowledge
அறிவுப்பரப்புச் சமூகவியல்

அறிவு அல்லது சிந்தனை ஒழுங்குகளுக்கும் சமூக மற்றும் பண்பாட்டு ஆக்கக்கூறுகளுக்கு மிடையிலான தொடர்புகளோடு ஈடுபட்டுள்ள ஒரு சமூகவியல் பிரிவு.

Sociology of Law
சட்டச் சமூகவியல்

சமூகவியல் கருத்துக்களை அலகாகக் கொண்டு சட்டநிறுவனங்களை ஆய்வு செய்வதைக் குறிக்கிறது.

Sociology of Literature
இலக்கியச் சமூகவியல்

இலக்கியச் சமூகவியல் இலக்கியத்தைச் சமூகவியல் நோக்கில் ஆராய்வதில் ஈடுபடுகிறது. இது எழுத்தாளர்களின் சமுதாயத்தோடு தொடர்புடைய நுண்ணறிவுத்திறனை வெளிப்படுத்துவதற்காக அல்லது சமுதாய அமைப்போடு இலக்கியத்தைத் தொடர்புபடுத்துவதற்காக மேற்கொள்ளப்படுகிறது.

Sociology of Occupations
தொழில்முறைச் சமூகவியல்

இச்சொல் பல்வேறுபட்ட கூறுகளைக் கொண்ட தொகுதியான ஆய்வுகளைக் குறிக்கிறது. இது தொழில்முறை அமைப்பு மற்றும் குறிப்பிட்ட தொழில்கள் எவ்வாறு சமுதாயத்தின் ஏனைய பகுதிகளான குடும்பம், பொருளாதாரம், கல்விமுறை, அரசியல் முறை மற்றும் சமூக அடுக்கமைவு முறை ஆகியவற்றோடு இணைக்கப்படுகின்றன என்ற சிக்கல்களை ஆராய்கிறது.

Sociology of Religion
சமயச் சமூகவியல்

சமயச் சமூகவியல் என்பது மத நிறுவனங்களுக்கும் பிற சமூக நிறுவனங்களுக்குமிடையே உள்ள தொடர்பை விளக்குவதாகும். சமூக ஒழுங்கைத் தக்கவைப்பதில் சமயம் எவ்வாறு பங்களிக்கிறது என்பதுகுறித்து ஆராய்கிறது. அதாவது மதம் எவ்வாறு மக்களின் அமைப்பாகச் செயல்படுகிறது என்றும் கோயில் எவ்வாறு ஒரு முக்கிய சமூக நிறுவனமாகிறது என்பது பற்றியும் சமயச் சமூகவியல் விளக்குகிறது. சடங்குகள் மற்றும் விழாக்கள் எவ்வாறு தனி மனிதனின் வாழ்க்கையிலும் சமூகத்திலும் முக்கிய பங்கு வகிக்கின்றன என்பதையும் ஆராய்கிறது.

Socio-metric
சமூக உறவு அளவீடு

சமூகத்தில் யார் யார் யாரிடம் எவ்விதமான உறவு கொண்டுள்ளார்கள் என்பதை அறிய உதவும் முறை. பொதுவாகச் சமூகத்தில் மக்களால் அதிகமாக விரும்பப்படுபவரைக் கண்டறிய இம்முறை கையாளப்படுகிறது.

Soft Information
மாறுபடும் செய்திக்கூறு

உணர்ச்சிகளின் பாதிப்பை அதிகமாகக் கொண்ட செய்திக்கூறு. அடிக்கடி மாறும் தன்மையைக் கொண்டது. களஆய்வின் மூலம் அறுதியிட்டு நிரூபிக்க முடியாது. ஒருவரின் மனப்பான்மை மற்றும் கருத்துக்கள் தொடர்பான செய்திக் கூறுகள் அடிக்கடி மாறும் தன்மை கொண்டவை.

Solidarity
கூட்டொருமை

ஒரு குழுவுக்குள் நிலவுகின்ற ஒரு நிலைமையைக் குறிக்கிறது. அதாவது குழு குறிக்கோள்களை அடைவதை நோக்கிய சமூக ஒட்டிணைவாற்றலோடு கூடிய ஒத்துழைப்பு மற்றும் கூட்டுச் செயல்பாடு.

Somatometry
புறத்தோற்ற உடல் அளவியல்

உடல்சார் மானிடவியலார் உடல்அளவையை முப்பெரும் பிரிவுகளாகப் பிரித்து ஆராய்கின்றனர். அவற்றில் ஒன்று புறத்தோற்ற உடல்அளவியலாகும். இது உயிர்வாழும் மக்களின் புற உறுப்புகளின் அளவுகளை எடுத்து ஆராய்கிறது.

Sororal Polygyny
சகோதரிகள் பலமனைவி மணம்

ஒன்றுக்கும் மேற்பட்ட மனைவிகளைக் கொள்ளும்போது வெவ்வேறு குடும்பங்களைச் சேர்ந்த பெண்களைத் தேடாமல் சகோதரிகளைத் திருமணம் செய்துகொள்கிறார்கள். இதனைச் சகோதரிகள் பலமனைவிமணம் என்பர்.

Sororate
கொழுந்தி மணம்

கொழுந்தி மணம் என்பது

ஒருவன் தன் மனைவி இறந்துவிட்டால் அவளுடைய மணமாகாத சகோதரியைத் திருமணம் செய்துகொள்வதைக் குறிக்கும். சிலவேளைகளில் மனைவிக்குக் குழந்தை பேறில்லாதிருந்தாலும் அவருடைய சகோதரியை மணம் செய்துகொள்வதுண்டு.

Sororilocal Family
உடன்பிறந்தாளகக் குடும்பம்

திருமணத்துக்குப்பின் மணமக்கள் உறைவிடம் ஏற்படுத்திக்கொள்ள உடன்பிறந்தாள் அல்லது தந்தையின் உடன்பிறந்தாரின் பெண் பிள்ளைகள் இடம் கொடுத்தால் அதனை உடன்பிறந்தாளகக் குடும்பம் என்பர்.

Soulmate
உணர்ச்சித் தோழன்

பரந்த பெரும் இவ்வுலகில் நமக்கென்று ஒருவர் இருக்கிறார் என்ற நம்பிக்கை. இந்த நம்பிக்கை மிகவும் சுயதிருப்தியளிப்பதாக உள்ளது : காரணம் அந்த ஒருவர் மட்டுமே நமது தேவைகளைச் சந்திக்கமுடியும் என்றும் அதற் காகவே அவர் படைக்கப் பட்டிருக்கிறார் என்றும் அந்த நம்பிக்கை உணர்த்துகிறது. மேலும் இது ஒரு துணிச்சலான தன்மை உடையதாகவும் உள்ளது: காரணம் வளரிளமைப் பருவம், முன் வயதுவந்த பருவம், அத்தகைய உணர்ச்சித்தோழனைத் தேடுவதற்கு அற்பணிக்கப்படுவதுண்டு.

Specialization
தனித்துறைப்பாடு

தனித்துறைப்படுத்தப்பட்ட பணிப்பாகுபாட்டைக் குறிக்கிறது. அதாவது ஒரு குழு, பொது பண்புக்குழு அல்லது சமுதாயத்தின் ஆட்சிப்ரப்பு சார்ந்த பகுதி பல இடைத்தொடர்புடைய மற்றும் தனித்துறைப்படுத்தப்பட்ட செயல் பாடுகளை உடையதாக உள்ளது.

Specificity
இனக்குறிப்பொதுக்கம்

சமூக உறவுகள் குறுகலான வரையறுக்கப்பட்ட உரிமைகள் மற்றும் கடப்பாடுகளின் வரம்புக் குட்படுத்தப்படுகின்றன என்ற எதிர்பார்ப்பைக் குறிக்கிறது. தனிநபர் ஆள்தத்துவத்தின் வரம்புக் குட்பட்ட பண்புக்கூறுகள் மட்டுமே அத்தகைய உறவுகளில் ஈடுபடுகின்றன.

Specific Death Rate
குறிப்பான இறப்புவீதம்

குறிப்பிட்ட ஒரு மக்கள் தொகையில் ஒரு பிரிவின் இறப்பு வீத வரையறை. குறிப்பான. இறப்புவீத்தில் முக்கியமான இறப்புவீதம் வயது, பால் குறித்த வீதமாகும்.

Spiritism
ஆவியுலக நம்பிக்கை

தன்னுரிமையாகக் கட்டின்றி இயங்குகிற ஆவிகள் குறித்த நம்பிக்கையைக் குறிக்க இச் சொல் பயன்படுத்தப்படுகிறது. இறந்தவர்களின் ஆவிகள் உயிர் வாழ்பவர்களோடு தொடர்பு

கொள்வது இயலும் என்பது போன்ற நம்பிக்கை. மதங்களின் தோற்றம் குறித்த பரினாம வளர்ச்சிக் கோட்பாட்டில் ஆவியுலகத் தொடர்பு ஆன்ம வாதத்தைத் தொடர்ந்த ஒரு படிநிலையாகக் கருதப்பட்டது.

Spurious Culture
தன்னியல்பற்ற பண்பாடு/ போலியானப் பண்பாடு

சில பண்பாடுகள் உறுப்பினர்களுக்கிடையே மன வருத்தங்களையும், முரண்பாடுகளையும் ஏற்படுத்தி அவர்களை ஒருவிதத் துன்பத்தில் ஆழ்த்திவிடுகிறது. இத்தகைய பண்பாட்டைத் தன்னியல்பற்ற அல்லது போலியானப் பண்பாடு என்பர்

Standard of living
வாழ்க்கைப் படித்தரம்

ஒரு தனிநபர் அல்லது குழு வாழ்கின்ற பொருளாதார உயர்வுப்படிநிலையைக் குறிக்கிறது.

Standardization
தரப்படுத்தல்

ஓர் அமைப்பாண்மையில் சீரான முறையிலான நடக்கை முறையை நிலைநாட்டுவதைக் குறிக்கிறது.

State
நாட்டரசு

தற்கால அரசு சட்டமன்றம், செயலாட்சித்துறை மத்திய மற்றும் வட்டார ஆட்சிதுறை, நீதி நிலையத் துறை, காவல்துறை மற்றும் ஆயுதப்படை ஆகியவற்றை உள்ளடக்கிய நிறுவனங்களின் தொகுதியாகும்.

State Organization
அரசு அமைப்பாண்மை

இது அரசியல் படிமலர்ச்சியில் இறுதியாக ஏற்பட்ட முறையாகும். இதனை "பல சமூகங்கள் அல்லது வர்க்கங்களை உள்ளடக்கிய ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதி மைய அமைப்புடைய அரசாங்கத்தின் மூலம் வரிவிதித்தல், படைத்திறன் கொண்டிருத்தல். சட்டங்கள் இயற்றி அனைவரையும் பின்பற்றச் செய்தல், குற்றமிழைப் போருக்கு நீதித்துறை மூலம் தண்டனை விதித்தல் முதலான பணிகளைக் கொண்ட ஒரு முன்னுரிமை வாய்ந்த அமைப்பு" எனக் குறிப்பிடுவர்.

Stationary Population
நிலையிருப்பு மக்கள்தொகை

பிறப்பு மற்றும் இறப்பு விகிதங்கள் நிலையானதாகவும் ஒன்றுக்கொன்று பெரிதும் ஒத்திருக்கின்றதுமான மக்கள்தொகை. இதனால் வயது மற்றும் பால் பிரிவுகளும் நிலையாக அல்லது மாறா மதிப்பளவை உடையதாகக் காணப்படும்.

Statistical Hypothesis
புள்ளியியல் கருதுகோள்

ஒரு குறிப்பிட்ட மக்கள் தொகைப் பரவலோடு செயல் தொடர்புடைய மிகவும் திட்டவட்டமான கருதுகோள். இது ஒன்று அல்லது மேற்பட்ட மக்கள் தொகை நிலையளவுருவைத்

தேர்வுநிலையாகக் குறிப்பிடுகிறது. ஒரு மக்கள் தொகையின் குணாதிசயங்களைச் சுருக்க அளவில் குறிப்பிடுகிறது. ஏனைய கருதுகோள்களைப் போன்று புள்ளியியல் கருது கோளும் களஆய்வின் மூலம் சோதித்தறியப்படுவதற்காக முறைப்படுத்தப்படுகிறது.

Status
அந்தஸ்து நிலை

ஒரு சமூக முறைமையில் காணப்படும் ஒரு நிலை அல்லது பதவி, பணிநிலை போன்றவை. ஒரு குழுவில் ஒருவரின் அந்தஸ்துநிலை அல்லது பிற குழுக்களோடு ஒப்பிடும்போது ஒரு குழுவின் அந்தஸ்து நிலை என்பதைக் குறிக்கிறது. கல்வி, வேலை, பால், வயது, சாதி, வருமானம் போன்ற சில முக்கியமான காரணிகள் ஒருவரின் அந்தஸ்துநிலையை நிர்ணயிக்கின்றன.

Status Congruence
ஒப்பான அந்தஸ்துநிலை

ஒன்றுக்கொன்று பொருந்தி வருகின்ற அந்தஸ்துநிலை. ஓர் அந்தஸ்துநிலையில் ஒருவர் தாழ்ந்தவராக இருந்தால் ஏனைய அந்தஸ்துநிலைகளிலும் தாழ்ந்தவராக இருப்பார். சான்றாகத்தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒருவர் பெரும்பாலும் பொருளாதார நிலையிலும், கல்விநிலையிலும், தொழிலிலும் தாழ்ந்த அந்தஸ்துநிலையை உடையவராக இருப்பார்.

Status Consistency
அந்தஸ்து உடன்பாடு

ஒரு தனிநபரால் அமர்வு கொள்ளப்பட்ட பலதரப்பட்ட அந்தஸ்துகளை நோக்கிய சமூக மற்றும் பண்பாட்டு எதிர்பார்ப்புகளின் ஒப்புமையைக் குறிக்கிறது.

Status Continum Hypothesis
அந்தஸ்து தொடர்புக் கருதுகோள்

சமுதாயத்தின் சமூக அடுக்கமைவுமுறை தெளிவாக வேறுபடுத்தப்பட்ட சமூக வகுப்புகளை உடையதாக இருக்கவேண்டுமென்பதில்லை: ஆனால் அமைப்புரீதியில் எவ்வித தெளிவான பிளவுகளும் இல்லாது தொடர்ச்சியான அந்தஸ்து பின்காட்சித் தோற்றம் உடையதாக இருக்க வேண்டும் என்ற கருதுகோளைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

Status Discrepancy
அந்தஸ்து ஒப்பிசைவின்மை

ஒரு சமூகச் சூழ்நிலையில் ஒருவர் வகிக்கின்ற அந்தஸ்துகளுக்கிடையிலான தன்மான வேறுபாடுகள் இரு அந்தஸ்து முறைகளாக உள்ளன. சான்றாக அச்சுறுத்திப் பணம்பறிக்கும் ஒருவர் மிகவும் செல்வந்தர் என்ற அந்தஸ்தில் உயர்ந்த தன்மானம் உடையவராகவும், குற்றவாளி என்ற அந்தஸ்தில் தாழ்வான தன்மானம் உடையவராகவும் இருப்பார்.

Status Group
அந்தஸ்து குழு

பொதுவான அந்தஸ்து நன் மதிப்பு மற்றும் குறிப்பிட்ட வாழ்க்கை மாதிரி ஆகிவற்றைப் பகிர்ந்துகொள்ளும் குழு மக்கள் ஒருவரையொருவர் சமமாக நோக்குகின்றனர். அவர்கள் ஒரு குழு என்ற விழிப்புணர் வுடையவர்களாக இருப்பார்கள். அவர்களிடையே குழு அமைப் பாண்மையும் காணப்படும். ஒரு சாதியை அந்தஸ்து குழுவுக்குச் சான்றாகக் கூறலாம்.

Status Honour
மதிப்பு அந்தஸ்து

ஓர் அந்தஸ்துக்குழுவின் அனைத்து உறுப்பினர்களும் அக்குழுவில் நன்கு நிலைநிற்க விரும்பினால் அவர்கள் கடை பிடிக்கவேண்டிய நடக்கை முறை விதிகளைக் குறிக்கிறது. சான்றாக அந்தஸ்துக் குழுவுக்குள் திருமணம் செய்வது மதிப்பு அந்தஸ்துக்கு தேவையா னதாக இருப்பதைக் கூறலாம்.

Status Inconsistency
அந்தஸ்துநிலை முரண்பாடு

ஒருவரின் பல்வேறு அந்தஸ்து நிலைகளிடையே காணப்படும் முரண்பாடுகள். ஒருவர் ஒரே வேளையில் பலவாறான பொறுப் புகளை வகிக்கும்போதும் வெவ் வேறு அந்தஸ்துகளை உடைய பல சமூகநிலைகளில் இருக்கும் போதும், அவரின் சமூகநிலைகள் ஒன்றுடன் ஒன்று ஒத்துப்போவ தில்லை. எனவே முரண்பாடுகள் ஏற்படுகின்றன. முன்பு செய்து வந்த பணிகளை அல்லது பொறுப்புகளை விடாதிருந்தாலும் இந்நிலை ஏற்படலாம். சில வேளைகளில் ஒருவர் தான் அனுபவித்துவந்த வசதிகளை அல்லது பலன்களை புதிய பொறுப்புக்காக விட்டுக்கொடுக் காமல் இருந்தாலும் முரண் பாடுகள் ஏற்படும். சான்றாக உயர்ந்த கல்விநிலைத் தகுதி அடைந்தவர்கள் உயர்ந்த சமூக அந்தஸ்தை உடையவர்களாக இருப்பார்கள். அவர்கள் மிகக் குறைந்த சம்பளமுடைய பணியில் பணியமர்த்தப்படுவதால் தாழ் வான அந்தஸ்து மற்றும் தன் மானம்உடையவர்களாகஇருக்கலாம்.

Status Personality
அந்தஸ்துத் தனியாள் நிலை

சமுதாயத்தில் எந்தஓர் அந்தஸ் துக்கும் உகந்ததாகக் கருதப் படுகின்ற தனியாள் நிலையின் குணாதிசயங்களின் தொகு தியைக் குறிக்க இச்சொல் பயன் படுத்தப்படுகிறது. சான்றாக ஒரு தொழில்சார் அந்தஸ்தைக் கூறலாம்.

Status Sequence
அந்தஸ்துத் தொடர்வரிசை

சமூகரீதியில் பாங்காக்கப்பட்ட இடைவெளியில் ஏற்படுகின்ற அந்தஸ்தின் தொடர்ச்சியைக் குறிக்கிறது. சான்றாக ஒரு மருத்துவக்கல்லூரி மாணவரால் தொடர்ச்சியாக அமர்வு கொள் ளப்படுகின்ற அந்தஸ்துகளைக் கூறலாம். அதாவது முதிர் மாணவ மருத்துவர், தனி மருத்துவர் போன்றவை.

Status-set
அந்தஸ்துத் தொகுதி

ஒரு தனிநபரால் அமர்வு கொள்ளப்படுகின்ற தெளிவாக வேறுபட்ட அந்தஸ்துகளின் பல்கூட்டுத் தொகுதியைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. எனவே ஒருவரின் பலதரப்பட்ட அந்தஸ்துகளில் ஒன்று மாறும் போது அவருடைய அந்தஸ்துத் தொகுதியானது திருத்தியமைக் கப்படுகிறது.

Status Symbol
அந்தஸ்துக் குறியீடு

ஒரு குழு அல்லது சமுதாய அங்கத்தினர்கள் ஏதாவது ஒரு பொருள், திறமை, அனுபவம் அல்லது செயல் ஆகியவற்றின் மீது மிகுந்த மதிப்பு வைத்திருப் பார்கள். அந்தஸ்துகளை முடிவு செய்வதற்கு அதைமூலப்பிர மாணமாகப் பயன்படுத்துவார்கள்.

Status System
அந்தஸ்து ஒழுங்கு

ஒரு சமூக ஒழுங்குக்குள் காணப்படுகின்ற ஒன்றோ டொன்று தொடர்புபடுத்தப்பட்ட அந்தஸ்துகளின் ஒழுங்கு.

Stereo Type
வழக்கமுறைக் கருத்து

சமுதாயத்தில் ஒரு குழு அல்லது பிரிவைச் சேர்ந்த வர்களைக் குறித்து பிற குழு வினரிடையே நிலவும் வழக்க மான கருத்து. சான்றாகப் போலீசார் அனைவரும் மன உறுதி படைத்தவர்கள், வலிமை யானவர்கள் என்று மக்களி டையே நிலவும் கருத்தைக் கூறலாம்.

Stimulus Diffusion
தூண்டற்பரவல்

பண்பாட்டுக்கூறுகளின் பரவல் முறையில் தூண்டற்பரவல் என்பதும் ஒரு முறையாகும். ஓர் அயற்பண்பாட்டிற்குரிய ஒரு பயன்பாட்டுக்கூறின் கருத்தைப் பயன்படுத்தி தன் சொந்தப் பண்பாட்டில் புதுமையாக்கத்தை ஆக்கிக்கொள்வதைத் தூண்டற் பரவல் என்பர். சான்றாகச் செமிட்டிக் மொழியின் நெடுங் கணக்கைக் கிரேக்கர்கள் அவர்கள் மொழிக்கேற்பப் பின்பற்றியதைக் கூறலாம்.

Stratification
அடுக்கமைப்பு

சமூகப் பொருளாதாரக் காரணி களின் அடிப்படையில் சமுதாயத் திலுள்ள மக்களை உயர்ந்த வர்கள், தாழ்ந்தவர்கள் எனத் தரப்படுத்துவதைச் சமுதாயத் தரப்பிரிவு அல்லது அடுக்கமைவு எனலாம். சமுதாயத் தரப்பிரிவில் தாழ்நிலையில் வாழ்பவர்கள் சிற்சில நிலைகளில் இயலாமை காரணமாக உயர்நிலையிலுள் ளவர்களைச் சார்ந்து வாழும் நிலை ஏற்படுவதுண்டு.

Stratifying Factor
அடுக்கமைவாக்குங் கூறு

அடுக்கமைவுகளாக அமைந்த மாதிரிகளின் தேர்வில் மக்கள் தொகையை அடுக்குகளாகப்

பிரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் மாறி.

Stratigraphy
மண்ணடுக்கியல்

மண்ணடுக்குகளிலிருந்துபெறப்படும் புதைபடிவங்கள் குறித்த ஆய்வு. இது மனிதப் படிமலர்ச்சி ஆய்வுக்கு மிகவும் உதவுகிறது. சில மண்ணடுக்குப் பிரிவுகளில் புதை படிவங்கள் குறைவாகவும் சிலவற்றில் மிகுதியாகவும் உள்ளன. இது பல்வேறு வகையான வினாக்களுக்கு விடைகூறுவதாக அமைகிறது. மண்ணடுக்கியல் பல்வேறு காலகட்டங்களைக் காட்டுகிறது.

Stress-strain Concept
அழுத்த-இழுவை கருத்துரு

ஒரு சமூக ஒழுங்கு ஒரு முழுமையான நடுநிலை அமைதி நிலையில் இருப்பதில்லை. அதன் உள்ளடங்கிய பகுதிகளுக்குள் பணி எதிர்பார்ப்புகள் சமூக நிறுவனங்கள் முதலியன காணப்படும். முரண்பாடுகள் அழுத்தம் மற்றும் இழுவையை ஏற்படுத்துவதாகக் காணப்படும். இத்தகைய உள்ளார்ந்த அழுத்தம் மற்றும் குறிக்கோள்களை அடைவதில் இடையூறுகளை ஏற்படுத்தும். இன்னும் கடுமையான நிலையில் சமூக ஒழுங்கின் நீடுநிலவலுக்கு அச்சுறுத்தலையும் ஏற்படுத்தும்.

Strike
வேலைநிறுத்தம்

தொழில்சார் சமூகவியலார் வேலைநிறுத்தச் செயலைப் பணியாளர்கள் தொடர்ந்து பணியாற்றுவதைக் கூட்டாக மறுப்பது எனக் கருதுகின்றனர். இதனை ஒரு தொழிற்சாலைசார் முரண்பாடாகவும் நோக்குகின்றனர் சமூகவியலார் வேலைநிறுத்தம் குறித்த நிகழாய்வு, புள்ளிவிவர ஆய்வுகள் போன்றவற்றில் ஈடுபடுகின்றனர்.

Structural-functional Analysis
அமைப்பு-செயற்பாட்டியலாய்வு

இது ஓர் ஆய்வுமுறையியல் மற்றும் கோட்பாட்டியல் வரைச்சட்டமாகும். இதனைச் சமுதாய அமைப்பு மற்றும் அதன்பல்வேறு பகுதிகளின் செயற்பாட்டு உறவுகளை அலகாகக் கொண்டு சமூக இயல்நிகழ்வுகளை ஆராய்வதற்குப் பயன்படுத்துகின்றனர்.

Structural Imperative
அமைப்பியற் கட்டளை

சமூக ஒழுங்கமைப்பில் ஒரு குறிப்பிட்ட மேலாதிக்கப் பாங்கம் அல்லது அமைப்பின் நிலவுதலால் இன்றியமையாததாக்கப்பட்ட நடக்கைமுறைப் பாங்கினைக் குறிக்க இக்கருத்துரு பயன்படுத் தப்படுகிறது.

Structuralism
அமைப்பியற்கொள்கை

பண்பாட்டுக்கூறுகள் பல அமைப்பியல் விதிகளால் ஆக்கப்பெற்றது என்ற கருத்தை விளக்குவது அமைப்பியற் கொள்கை. இக்கொள்கை மானிடவியலில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது. இதை வகுத்தவர் பிரெஞ்சு மானிடவியலார் கிளாட் இலெவிஸ்ட்ராஸ் ஆவார்.

Structural Linguistics
அமைப்பியல் மொழியியல்

அனைத்து மொழிகளுக்கும் பொதுவான அமைப்புக்களைக் காண்பது. இவ்வகை அணுகுமுறை மூலம் மக்கள் அனைவரும் கருத்துப் புலப்படுத்தும் முறையில் கொண்டுள்ள பொதுவான அமைப்புமுறைகளை அறிய முடிகிறது.

Structure
அமைப்புமுறை

ஒருங்கிணைக்கப்பட்ட கூட்டிணைவான முழுமையின் ஆக்கக் கூறுகள், பகுதிகள் மற்றும் பாங்கங்களுக்கிடையிலான உள்ளார்ந்த மற்றும் நிலையான உறவு.

Structured Interview
திட்டமிட்ட நேர்காணல்

பொருத்தமான சொற்களைக் கொண்டு முதலிலேயே திட்டமிட்டுத் தயாரிக்கப்பட்ட வினாப் பட்டியல் மூலம் தகவலாளியைப் பேட்டி காணும் முறை. இம்முறையில் கேள்விகளை முறையான வரிசையில் கேட்டுப் பதில்களை எழுதிக்கொள்ள முடிகிறது. இதில் பதில்கள் விட்டுப்போவதற்கான வாய்ப்பு மிகக்குறைவு.

Struggle for Existence
வாழ்வுக்கான போராட்டம்

இனப்பெருக்கம் மூலம் தோற்றுவிக்கப்பட்ட அனைத்து உயிரினங்களும் குறிப்பிட்ட சூழலில் வாழவேண்டிய கட்டாயத்தில் உள்ளன. அந்நிலையில் அவை வாழ்வுக்குத் தேவையான அடிப்படைகளை ஈட்டி நீண்ட காலம் வாழத் தீவிரமாக முயல்கின்றன. அதனால் உயிரினங்களுக்கிடையே வாழ்வுக்குப் போராட்டம் ஏற்படுகிறது. இப் போராட்டத்தில் தகுதியானவை பிழைக்கின்றன. தகுதியற்றவை அழிந்துபோகின்றன.

Subcentralization
மைய உட்பிரிவாக்கம்

வாழ்க்கைச் சூழல்சார் நடைமுறையைக் குறிக்கிறது. பெரும் நகர்ப்புறத்தில் இரண்டாவது நிலை சேவை மையங்கள் வளர்கின்றன. இதனை மைய உட்பிரிவாக்கம் என்பர். அத்தகைய இரண்டாவதுநிலை மையங்கள் அவற்றின் சுற்றுப்புறப் பகுதிளுக்கு வரம்புக்குட்பட்ட அடிப்படை சேவைகளை அளிக்கும். ஆனால் முழு நகரப்பகுதிக்கும் மேலான மத்திய வியாபார கோட்டத்தின் மேலாதிக்கத்தை அச்சுறுத்துவத்தில்லை.

Sub Culture
பண்பாட்டு உட்பிரிவு

சமூகத்தின் பொதுப் பண்பாட்டோடு தொடர்புடையதும் அதேநேரத்தில் ஒரு குறிப்பிட்ட குழுவினரால் கடைபிடிக்கப் படும் வேறுபட்ட பழக்கங்கள். இந்தியாவில் காணப்படும் சாதி அமைப்பைப் பண்பாட்டு உட் பிரிவுக்குச் சான்றாகக் கூறலாம். அனைத்துச் சாதியினரும் பொது வான பண்பாட்டு முறைகளைக் கடைபிடித்தாலும் திருமணம் போன்ற சில

சடங்குகளில் தங்கள் சாதிக்கே உரித்தான தனி முறைகளையும் கொண்டுள்ளனர். அவை பிற சாதியினரின் திருமணமுறையிலிருந்து மாறுபடுகின்றன. அரிசனர் மற்றும் பிராமணர் சாதியினர் தங்களுக்கென்று சில வாழ்க்கைமுறைகளைக் கொண்டுள்ளனர். வாழ்க்கைச் சடங்குமுறைகளிலும் அவர்கள் வேறு சாதியினரிடமிருந்து தனித்து நிற்கிறார்கள். அதாவது ஒரு பெரும் பண்பாட்டின் உட்பண்பாக விளங்குவது அல்லது ஒரு முதன்மைப் பண்பாட்டில் ஒரு பகுதியாக விளங்கும் பண்பாடு.

Sub Family
குடும்ப உட்பிரிவு

குழந்தைகள் உள்ள அல்லது இல்லாத தம்பதியர் அல்லது பெற்றோரில் ஒருவர் 18 வயதுக்குக் குறைவான ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகளோடு உறவுடைய ஒரு குடும்பத்தில் வாழ்வது. குடும்ப உட்பிரிவுக்குப் பொதுச் சான்றாகத் தம்பதியர் கணவனின் அல்லது மனைவியின் பெற்றோரின் வீட்டைப் பகிர்ந்து கொள்வதைக் கூறலாம்.

Sub Group
குழு உட்பிரிவு

பெரிய ஒரு குழுவின் ஒரு பகுதியாக இருக்கும் குழுவைக் குறிக்கிறது. ஒரு குழு உட்பிரிவு பெரிய குழுவின் ஒரு செயற்பாட்டு ஒருமமாக செயல்படலாம் அல்லது பிளவு உண்டாக்குவதாகவும் இருக்கலாம்.

Subjective Method
அகஉணர்வு முறைமை

தரவுகளைப் பகுப்பாய்வு செய்வது மற்றும் சீர்தூக்குவதில் விதிமுறைகளைக் கையாளுவது குறித்த ஆய்வாளரின் உணர்வு அவருடைய அறிவுப்பரப்பின் அடிப்படையில் நிறுவப்படுகிறது. அவை முற்றிலுமாக மெய்ப்பிக்கத்தக்கதாக இருப்பதில்லை. இதனை அக உணர்வு முறைமை என்பர்.

Subjectivity
அகஉணர்வுநிலை

அகஉணர்வுநிலை என்பது ஆளப்படுபவர்களின் தன்னறிவு தொடர்பான விழிப்புணர்வாகும். ஆனால் அமைப்பியல்வாதத்தில் வரலாற்றுரீதியில் அகஉணர்வு நிலை குறிப்பாகத் தற்கால மேற்கத்தியப் பண்பாட்டுக்குரிய விழிப்புணர்வு முறை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. உளவியல் பகுப்பாய்வு, மார்க்சீயம் மற்றும் அமைப்பியல்வாதம் ஆகியவற்றின் அண்மைக்கால வளர்ச்சி பாரம்பரிய ஊகங்கள் குறித்த வினாக்களை எழுப்பி அகஉணர்வு நிலையின் தலைமைச்சிறப்பையும் குறிப்பிடுகிறது.

Subordination
துணைத்தாழ்வுநிலை

தனிநபர் அல்லது குழு அதிகாரம் மற்றும் ஆணையுரிமை செலுத்தும் இன்னொரு நபர்

அல்லது குழுவை விட தாழ்ந்த நிலையில் அமர்த்தப்படும் அல்லது நடத்தப்படும் நடை முறையைக் குறிக்கிறது.

Subsistence Economy
வாழ்க்கைப் பொருளாதாரம்

பிழைப்பாதாரமாகக் காணப்படும் பொருளாதாரம். மனிதனின் வாழ்க்கைப் பொருளாதாரம் வேடுவ வாழ்க்கை, ஆயர் வாழ்க்கை, வேளாண் வாழ்க்கை ஆகிய மூன்று நிலைகளில் வளர்ச்சியடைந்துள்ளது என்று மானிடவியல் அறிஞர்கள் கூறுவர்.

Sub Structure
அமைப்பு உட்பிரிவு

ஒரு சமூக அமைப்பின் உட்பிரிவு அல்லது உட்பகுப்பு களைக் குறிக்கிறது.

Suburb
புறநகர்

ஒரு மத்திய நகரைச் சார்ந்த அருகாமையில் காணப்படும் நகர்மயமாக்கப்பட்ட பகுதியின் ஒரு பிரிவாக உள்ள ஒரு சிறிய பண்புக்குழுவைக் குறிக்கிறது. இது ஒரு தலைநகர் பகுதி யோடோ அல்லது தலைநகர் அல்லாத நகரத் தோடோ இணைக்கப்பட்டதாக இருக்கும். ஒரு புறநகர் அரசியல்ரீதியில் மத்திய நகரத்திலிருந்து தனிப்பட் டதாக இருக்கும். ஆனால் பொருளதாரரீதியில் மத்திய நகரைச் சார்ந்திருப்பதாகக் காணப்படும்.

Suburban Way of Life
புறநகர் வாழ்க்கைமுறை

புறநகரில் வாழ்பவர்கள் ஒரு வேறுபட்ட வாழ்க்கைமுறையை உடையவர்கள் என வாதிடப் படுகிறது. அயலகத்தார் மற்றும் நண்பர்களோடு அரையளவான முதல்நிலை உறவுகளில் ஈடுபடு வார்கள் எனவிளக்கப்படுகின்றனர்.

Suburbanization
புறநகராக்கம்

மக்களும் சேவைகளும் பெரும் நகரங்களிலிருந்து அதன் சுற்றுப் புறப்பகுதிகளுக்கு நகர் வதைக் குறிக்கிறது. இதன் விளைவாக நகரங்களின் அரசியல் எல்லைக்கப்பால் சுற்றிலும் புறநகர் வரிசை தோன்றும். புறநகராக்கம் அடர்த்தி நீக்கம் மற்றும் நடுவாட்சி வலுத் தளர்த்தல் ஆகிய நடை முறைகளின் பிரதிபலிப்பாகும்.

Sudanese System
சூடானிய முறை

சூடானியமுறை உறவாயன் முறைக்கு மாறானது. அதாவது ஒருவரின் பெற்றோரின் சகோதர சகோதரிகளின் பிள்ளைகள் ஒருவருக்கொருவர் வேறுபடுத் தப்படுவதோடு அவரின் உடன் பிறப்புக்களிலிருந்தும் வேறு படுத்தப்படுகிறார்கள். இம் முறையில் ஐந்துவிதமான உறவுகள் ஏற்படுகின்றன.

Suicide
தற்கொலை

வேண்டுமென்றே தன் உயிரைத்

தான் போக்கிக் கொள்ள முயலும் குற்றம். தற்கொலை குறித்த கோட்பாடு களிலிருந்து முக்கிய மான சமூகவியல்சார் பாரம்பரி யங்கள் வெளிப்படுகின்றன. அதாவது தற்கொலை வீதமும் வேறுபட்ட சமூக சூழ்நிலைகளும் தொடர் புடையவை. குறிப்பாகத் தற்கொலை சமூக ஒருமைப் பாட்டு அளவோடு தொடர் புடையது. எனவே ஒருமைப் பாட்டு சிதைவு அதிகரிக் கும்போது தற்கொலை எண்ணிக் கையும் அதிகரிக்கும்.

Super Ego
சுய கட்டுப்பாட்டுணர்வு

மனிதனின் ஆழ்மனதில் ஒரு சுய கட்டுப்பாட்டுணர்வு உள்ளது. அதை அவருடைய மனச்சாட்சி என்று கொள்ளலாம். இதனால் தான் மனிதனின் செயல்பாடுகள் சமூகத்தில் ஒழுங்குப்படுகிறது. இதனால் ஒருவர் மனச்சாட்சிக்கு எதிராகச் செயல்படும்போது அவருக்குக் குற்றஉணர்வு ஏற்படு கிறது. இதனை சுய கட்டுப்பாட் டுணர்வு என்பர்.

Superordination
மேம்பட்ட பதவித்தரம்

ஒரு தனிநபர் அல்லது குழு இன்னொரு நபர் அல்லது குழு வோடு ஒப்பிடப்படும்போது மேம்பட்டநிலையில் வைக் கப்படும் அல்லது நடத்தப்படும் நடைமுறை.

Super Organic
உயர் உயிரத்துவம்

குரோபர் பண்பாட்டை ஓர் உயிரியைவிட மேலானது என்று குறிப்பிட்டுள்ளார். பிறப்பின் மூலம் சமுதாயத்தில் நுழையும் ஒவ்வொருவரும் தாம் நுழைவ தற்குமுன் பண்பாட்டில் இடம் பெற்றுள்ள முறைப்படியான கட்டுப்பாடுகளை ஏற்று நடக்க வேண்டியுள்ளது. அக்கட்டுப் பாடுகள் எவராலும் இயக்கப் படுவதில்லை. பண்பாடே இயங் குகிறது. இவ்வகையான பண்பு களைக் கொண்டுள்ளதால் பண் பாட்டை ஓர் உயர் உயிரத்துவம் என்று குறிப்பிடுவர்.

Superstition
மூடநம்பிக்கை

பகுத்தறிவிற்குப் பொருந்தாத அச்சம்நிறைந்த நம்பிக்கைகளின் முறைப்படுத்தப்படாத திரள். இது ஒரு இயல்நிலை கடந்த பண்புக்கூறு உடையதாகக் காணப்படும்.

Surrogate
பெயரான்/துணைக்குரு

ஒருவருக்கு மாற்றுப்பெற்றோராக அல்லது உறவினராக அமையும் ஒரு சமூகப் பணியைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

Survey
அளவாய்வு

அளவாய்வு என்பது தனி நபர்கள் குறித்த அல்லது பொதுவான கூட்டான செய்திக் கூறுகளை முறையாக சேகரிக்கும் ஆய்வு. நேர்காணல் அல்லது அஞ்சல் வினாநிரல் முறைகளைப்

பயன் படுத்தி செய்திகளை பெற்றுக் கொள்கின்றனர். அவ்வாறு பெறப்பட்ட தரவு களைப் புள்ளியியல் பகுப் பாய்வு மூலம் விளக்கு கின்றனர். இது பங்கேற்று உற்றுநோக்குதல் அல்லது சோதனைமுறைக்கு ஒரு மாற்று முறையை அளிப்ப தாகவும் சமூக வியலில் பரவலாகப் பயன்படுத் தப்படு வதாகவும் உள்ளது.

Survival of the Fittest
தகுதியன பிழைத்தல்

உயிரினங்களுக்கிடையே ஏற்படும் வாழ்வுக்கான போராட் டத்தில் தகுதியானவை பிழைக் கின்றன; தகுதியற்றவை அழிந்து போகின்றன. தகுதியன பிழைத்தல் என்பது இயற்கைத்தேர்வு நிகழ் வால் கிடைக்கப்பெறும் தேர்ச் சியைக் குறிக்கும்

Sustenance Relations
வாழ்வாதார உறவுகள்

குறிப்பிட்ட ஒரு வாழ்விடத்தில் தொடர்ந்து வாழ்க்கை நடத்து வதற்கு குறிப்பிட்ட மக்கள் தொகையில் காணப்படுகின்ற சமூகஉறவுகளைக் குறிக்கிறது. வாழ்வாதார உறவுகள் பொருட் களின் உற்பத்தி, வினியோகம் மற்றும் சேவைகள் ஆகியவற் றிற்கான அமைப்பாண்மையை ஏற்படுத்துகிறது.

Symbiosis
இணைவாழ்வுத்திறம்

சமூகவியலில் ஒரு பொதுப் பண்புக் குழுவுக்குள் ஒத்திராத மற்றும் தெளிவாக வேறுபடும் குழுக்களுக்கிடையே காணப்படும் பரஸ்பர சார்புடைய உறவு. இத்தகைய உறவு அவர்களின் பரஸ்பர நலனுக்குப் பணி யாற்றுகிறது.

Symbol
குறியீடு

கருத்துப் பரிமாற்றம் செய்யும் அல்லது உரையாடும் நபர்களிடையே பொதுவான பொருளை உடையது குறியீடு. சமூகத்தில் கருத்துப் பரிமாற்றத்திற்கு மொழி ஒரு முக்கியமான குறியீட்டு முறை யாகும்.

Symbolic Anthropology
குறியீடுசார் மானிடவியல்

ஒவ்வொரு குழுவிற்குள்ளும் அனைவரும் பகிர்ந்துகொள்ளும் எந்தஒரு செயலும், பொருளும், நடத்தையும், உணர்வுகளும் குறியீடு என்னும் பொருளைப் பெறக்கூடியது. இக்கருத்தின் அடிப்படையில் பண்பாடு ஒரு குறியீட்டு அமைப்பு எனக் கூறப்படுகிறது. இதனை முழுமை யாக ஆராயும் ஒரு மானிடவியல் பிரிவு குறியீடுசார் மானிட வியலாகும்.

Symbolic Interaction
குறியீட்டுப் பரிமாற்றம்

மனிதச் சமூகவாழ்வின் தனிச் சிறப்புப் பண்பான தகவல் தொடர்பு மற்றும் கருத்துப் பரிமாற்றத்தின் உருமாதிரியான வடிவத்தைக் குறிக்கிறது. இதில் மொழி அல்லது உடல் உறுப்பசைவு

ஈடுபடுத்தப்படுகிறது.

Sympathetic Introspection
ஒத்துணர்வு உட்புறக்காட்சி

இது ஒரு சமூக பகுப்பாய்வு முறையாகும். இதன்மூலம் ஒருவர் பிறர் உணர்வுகள் மற்றும் மனப்பான்மைகளை அவர்களோடு நெருங்கிப்பழகுதல் மூலமும் அவர்களின் வாழ்க்கை முறையில் பங்கேற்றல் மூலமும் உய்த்துணர முயற்சிப்பார். பின்புத் தன் நுண்ணறிவுத் திறனைப் பயன்படுத்தி அவர்கள் எவ்வாறு சிந்திக்கிறார்கள், உணர்கிறார்கள் என்பதைப் பகுப்பாய்வு செய்வார்.

Syncretism
சமரசப்பண்பு

வெவ்வேறு ஒழுங்கமைப்புகளிலிருந்து வெளிவருகின்ற தனிவேறுபட்ட ஆக்கக்கூறுகளின் இணைவு. பண்பாட்டுச் சமரசப் பண்பு ஒரு பண்பாட்டின் தனிவேறுபட்ட நம்பிக்கைகள் மற்றும் பழக்கவழக்கங்கள் இன்னொரு பண்பாட்டோடு கூட்டுக்கலவையாதலாகும்.

Syndiasmian Family
நிலையற்ற பிணைப்புக் குடும்பம்

ஓர் ஆணும் பெண்ணும் திருமணம் செய்துகொண்டு ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து வாழ்நாள் முழுவதும் நிலையாக இணைந்து வாழாமல் நினைத்த போது மணவுறவைத் துண்டித்துக் கொண்டோ பிற துணையுடன் சேர்ந்தோ வாழும் குடும்பம் நிலையற்ற பிணைப்புக் குடும்பமாகும். எவ்வகையான துணையுடன் உறவுகொண்டு வாழ்ந்தாலும் அவர்களுக்கிடையே மிகுந்த பிணைப்பு இருப்பதில்லை. குழுமணக் குடும்பத்திற்கும் தந்தைத் தலைமைக் குடும்பத்திற்கும் இடைப்பட்ட நிலையைக் கொண்டதே நிலையற்ற பிணைப்புடைய மணக் குடும்பமாகும்.

Syndicalism
தொழிற்சங்க ஆட்சி இயக்கம்

வேலைநிறுத்தம், போராட்டம் முதலிய நடைமுறைச் செயல்கள் மூலம் தொழிலாளரே உற்பத்தியுரிமையைத் தம்பால் மாற்றி அமைத்துக்கொள்ளும் நோக்கமுடைய இயக்கம். அதாவது இக்கருத்துரு மூலத்துவ நிலையிலான பொதுநலக் கூட்டுத் தத்துவத்தைக் குறிக்கிறது.

System
முறைமை

ஓர் ஒருமமாக அமைகின்ற இடைத்தொடர்புடைய மற்றும் இடைச்சார்புடைய பகுதிகளின் அமைப்பாண்மை. முறைமை என்பது ஒரு பொதுக்கருத்து தொடர்பான முன்மாதிரியாகும். இது சிக்கலான, இயல் நிகழ்வுகளைத் துருவித்தேடுதல், பகுப்பாய்வுசெய்தல் ஆகியவற்றை எளிதாக்குகிறது.

Systematic Observation
முறையான ஆழ்ந்துநோக்கல்

ஒரு ஆழ்ந்துநோக்கும் முறையைக் குறிக்கிறது. இது

நடக்கைமுறையின் முக்கியமான பண்புக்கூறுகளை ஆழ்ந்து நோக்குவதற்கு உறுதியளிக்கக்கூடிய நிலையில் வகைப்படுத்தப்பட்டுத் தயாரிக்கப்பட்ட வினா நிரலைப் பயன்படுத்துவதன் அடிப்படையில் அமைகிறது.

System Analysis
முறைமை ஆய்வு

ஒரு கோட்பாட்டியல் அணுகுமுறையைக் குறிக்கிறது இதில் தனிப்பட்ட ஒருமங்களின் ஆய்வுகளைவிட அமைப்பாண்மை மற்றும் இடைத்தொடர்புகளை தனித்திற அலகாகக் கொண்ட ஆய்வுக்கு முதலிடம் அளிக்கப்படுகிறது. சமூகவியலில் முறைமை ஆய்வு சமூகப் பண்பாட்டு ஒழுங்கு முன்மாதிரி ஆய்வில் கவனம் செலுத்தி, இம் முன்மாதிரியை அலகாகக் கொண்டு சமுதாயம் மற்றும் பண்பாட்டை ஆராய்கிறது.

T

Taboo
விலக்கு

விலக்கு என்பது புனிதத்தன்மை என்றும் தடைசெய்யப்பட்டவை என்றும் பொருள்படும். சிலைகள், கோயில்கள், உயர்குலத்தவர்கள், இன்னும் சில பொருட்கள் போன்றவற்றைச் சாதாரண மக்கள் தொடுவதற்குத் தடை செய்யப்பட்டுள்ளது. இதனை விலக்கு என்றும் குறிப்பிடுவர்.

Tabulation
அட்டவணைப்படுத்துதல்

செய்திக்கூறுகளை அவற்றின் மாறிகளின் (variable) தன்மைக்கேற்ப வகைப்படுத்தி அட்டவணைகள் தயாரிக்கும் முறை.

Taxonomy
வகைப்பாட்டியல்

இம்முறையில் ஒத்த உயிரினங்களைத் தொகுதி (phylum) என்றும் அதில் வேறுபாடுகள் உள்ளனவற்றைப் பிரித்து வகுப்பு (class) என்றும், அதனுள் மாற்றங்களுடன் வேறுபட்டுக் காணப்படுவனவற்றை இனம் (genus) என்றும், இவற்றினுள் மேலும் சில வேறுபாடுகளைக் கொண்டுள்ளனவற்றைச் சிறப்பினம் (Species) என்றும் வகைப்படுத்துவர். சுவீடன் நாட்டைச் சேர்ந்த இலின்னேயஸ் (1707-1778) உயிரின வகைப்பாடடியலின் தந்தை என போற்றப்படுகிறார்.

Technic Ways
தொழில்நுட்ப வழிவகைகள்

இவை தற்கால அறிவியல் சார்மற்றும் தொழில்நுட்ப வழிவகையிலான நாகரீக நடக்கைமுறைப் பாங்கத்தினைக் குறிக்கின்றன. இவை பாரம்பரிய நாட்டுப்புற வழிவகைகள் மற்றும் வழக்கடிபாடுகள் ஆகியவற்றிற்குப் பதிலாக இடம்கொள்கின்றன.

Technological Determinism
தொழில்நுட்பம்சார் நியதிவாதம்

இயந்திரங்களின் கண்டுபிடிப்பு போன்ற உற்பத்தி உத்திகளில்

ஏற்படும் மாற்றம் சமூக மாறுதல்களை ஏற்படுத்துகிறது என்ற கருத்து. ஆலைப்புரட்சி அத்தகைய உத்திகளின் ஒரு குவியலாக உள்ளது.

Technological Unemployment
தொழில்நுட்ப வேலையின்மை

தொழிற்சாலைகளில் அல்லது ஏனைய பணியிடங்களில் தானாக இயங்கும் இயந்திரங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் அல்லது ஏனைய தொழில்நுட்ப மாறுதல்களினால் ஏற்படுகின்ற வேலையில்லாத் திண்டாட்டம்.

Technology
தொழில்நுட்பம்

சமூகவியல் சொல்லாட்சியில் தொழில்நுட்பம் என்பது எல்லா விதமான உற்பத்தி உத்திகளையும் குறிக்கிறது. இதில் கைத்தொழிலும் அடங்கும். தொழிற்சாலை குறித்த சமூகவியலில் இச்சொல் உற்பத்தி முறையின் இயற்பொருள்சார் அமைப்பாண்மையை உள்ளடக்குகிறது. அதாவது பணியிடத்தில் உற்பத்தி தொடர்பான வலிய உலோகங்களால் செய்யப்பட்ட பொருள்கள் எவ்விதத்தில் ஒழுங்குபடுத்தப் படுகின்றன, இதனால் ஏற்படும் பணிபாகுபாடு மற்றும் பணி அமைப்பபாண்மை ஆகியவற்றையும் குறிக்கிறது. தொழில் நுட்பத்தைச் சமூக நடைமுறையின் விளைவாகப் பகுப்பாய்வு செய்யலாம்.

Teknonymy
சேய்வரு பெயர்மை

குழந்தையின் பெயர் பெற்றோருக்கு வழங்கும் முறை சேய்வரு பெயர்மை ஆகும். அதாவது வயதுவந்த ஒருவரை அவருடைய குழந்தையின் பெயரைச் சொல்லி அழைப்பதாகும். பிள்ளைகளின் வழியே தந்தை அல்லது தாய் குறிப்பிடப்படுவதால் சேய்வரு பெயர்மை எனப்படுகிறது.

Tendency
போக்கு

திரும்பத் திரும்ப நிகழ்கின்ற நடக்கைமுறைத் தொடர்ச்சி. சில செயல்களைத் தொடர்ந்து குறிப்பிட்ட சில செயல்கள் அல்லது எதிர் செயல்கள் நிகழும் பாங்கத்தினைக் குறிக்கிறது.

Term of Address
விளிச்சொல்

உறவுமுறைச் சொற்கள் பயன்படுகின்ற முறையில், ஓர் உறவினரை நேரடியாக அழைக்கவோ அல்லது சுற்றுமுகமாக அவரைக் குறிப்பிடவோ பயன் படுகின்றன. நேரடியாக அழைக்கப் பயன்படும் சொல் விளிச்சொல் எனப்படும். எல்லா உறவுமுறைச் சொற்களும் விளிச்சொற்களாகப் பயன்படுத்தப்படுவதில்லை. உறவினர் அல்லாதவர்களையும் உறவுமுறைச் சொற்களால் அழைப்பதுண்டு. உறவு முறைச் சொல் அல்லாத பல சொற்களும் விளிச்சொற்களாகப் பயன்படுத் தப்படுவதுண்டு.

Term of Reference
குறிச்சொல்

உறவுமுறைச் சொற்கள் பயன் படுகின்ற முறையில், ஓர் உறவினரை நேரடியாக அழைக்கவோ அல்லது அவரைக் குறிப்பிடவோ பயன்படுத்தப் படுகின்றன. அவரைப் பிறரிடம் குறிப்பிடப் பயன்படுத்தும் சொல் குறிச்சொல் எனப்படும்.

Territorial Endogamy
வட்டார அகமணம்

சில சமுதாயங்களில் அகமணம் என்பது ஒரு குறிப்பிட்ட நிலப் பரப்பைச் சார்ந்தும் அமைகிறது. இது வாட்டார அகமணம் எனப்படும்.

Territorial Group
நிலப்பரப்புசார் குழு/வட்டாரக் குழு

ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் உள்ள உறைவிடங்களில் ஒழுங் கமைக்கப்பட்ட குழுவைக் குறிக் கிறது. ஒரு சமுதாயம், நகரம் மற்றும் சுற்றுப்புறக் குழு ஆகியவை நிலப்பரப்புசார் குழுவுக்குச் சான்றுகளாகும். இதனை வட்டாரக் குழுக்கள் என்றும் குறிப்பிடுவர்.

Tertiary Kin
மூன்றாம்நிலை உறவினர்

பேசுநரின் இரண்டாம்நிலை உறவினர்களுக்கு யார் யார் முதல்நிலை உறவினர்களோ அவர்கள் பேசுநருக்கு மூன்றாம் நிலை உறவினர்களாவர். பேசு நருக்கு மூன்றாம்நிலை உறவினர் களைத் தொடர்புபடுத்த இடையில் இரண்டு உறவு நிலைகள் தேவைப்படுகின்றன. பொதுவாக ஒருவருக்கு 151 வகையான மூன்றாம்நிலை உறவினர்கள் அமைவர் என மர்டாக் கூறுகிறார்.

Tertiary Occupation
மூன்றாம்நிலைத் தொழில்

பொருள்களின் உற்பத்தி அல்லாமல் சேவைப்பணிகளுக்கு முன்னேற்பாடு செய்தலோடு தொடர்புடைய தொழிலைக் குறிக்கிறது. மூன்றாவது நிலைத் தொழிலில் அரசு, செயலாட்சி, மதம், போக்குவரத்து, தகவல் தொடர்பு, தனிப்பட்ட சேவை முதலிய பணிகள் அடங்கும். இப்பிரிவில் வேறுபட்ட தொழில் களான பேருந்து ஓட்டுதல், முடிவெட்டுதல், வழக்கறிஞர், நடிகர் மற்றும் பத்திரிகை நிருபர் ஆகியவையும் அடங்கும்.

Theoretic Bias
கோட்பாட்டுச்சாய்வு

ஓர் ஆய்வுமுறையியல்சார் அணுகுமுறையைக் குறிக்கிறது. இதில் கோட்பாட்டாளர் அவருடைய கோட்பாட்டு உருவாக்கத்தில் ஒரு கண்டுணர் உபாயமாக வேண்டு மென்றே கோட்பாட்டை மிகைப் படுத்தலைப் பயன்படுத்துவார்.

Theoritical Model
கோட்பாட்டு மாதிரி

சில உண்மைக்கூறுகளை விளக் கும்போது ஆய்வில் பின்பற்று வதற்காக மனதில் திட்ட மிடப்பட்டுள்ள கோட்பாட்டு

மாதிரிப்படிவம். சான்றாக மண விலக்கை ஆராய்வதற்குத் தனி மனிதர்களிடையே எழும் கருத்து முரண்பாடுகள் காரணம் என்னும் கோட்பாட்டினை ஆய்விற்கு மாதிரிப்படிவமாக எடுத்துக் கொள்ளலாம்.

Theory Laden
கோட்பாட்டுச் சுமையேற்றம்

ஓர் ஆய்வுப்பொருள் அல்லது செயலறிவுசார் கண்டுபிடிப்பு ஒரு குறிப்பிட்ட கோட்பாட்டுச் சூழ் நிலையில் மட்டும் பொரு ளுடையதாகவோ அல்லது குறிப் பிட்ட கோட்பாட்டால் உருவாக் கப்பட்டதாகவோ இருந்தால் அதனைக் கோட்பாட்டுச் சுமை யேற்றம் என்பர். கோட்பாட்டுச் சுமை யேற்றம் நடுநிலையாக இருப்ப தில்லை. அத்தகைய ஆய்வுப் பொருள்கள் கோட் பாட்டால் ஆக்கத்திரிபு ஏற்படுத்தப்பட்ட தாக இருக்கும். சில சமூகவியலார் அனைத்துச் சமூக வியல் கண்டுபிடிப்புகளும் தவிர்க்க முடியாத நிலையில் கோட்பாட்டுச் சுமையேற்றம் உடையவை என வாதாடு கின்றனர்.

Theory of Abiogenesis
உயிரிலிப் பிறப்புக்கொள்கை

படிமலர்ச்சியில் மிகவும் கீழ்நிலையில் உள்ளவை கனிமப் பொருள்களே ஆகும் (Inorganic Matter). அப்பொருள்களிலி ருந்தே முதல் உயிர் தோன்றியது என்ற கருத்தை ஐசக் நியூட்டன் போன்ற சில அறிஞர்கள் கொண்டிருந்தனர். உயிரற்ற கனிமப்பொருட்களிலிருந்து உயிர் தோன்றியது என்பதால் அவர்களின் கொள்கை உயிரிலிப் பிறப்புக்கொள்கை எனப்பட்டது.

Theory of Family Origin
குடும்பத் தோற்றக் கோட்பாடு

உயிரியல் தேவைகளுக்காகக் குழந்தைகள் பெரியோர்களைச் சார்ந்திருக்க வேண்டியுள்ளது என்ற உண்மையால்தான் மனித குடும்பங்கள் தோன்றியது என்ற கருதுகோளைக் குடும்பத் தோற்றக் கோட்பாடு என்பர்.

Theory of Special Creation
சிறப்புப் படைப்புக் கொள்கை

இவ்வுலகத்தையும் உயிரினங் களையும் இறைவன் 6 நாட்களில் படைத்தார். முதல்நாள் தாவரங் களையும் ஆறாம்நாள் இறுதியில் மனிதனையும் படைத்தார் எனும் கொள்கை. சிறப்புப் படைப்புக் கொள்கையின் இக்கருத்து குறிப்பாகக் கிறித்தவர்களிடம் காணப்படுகிறது. பண்டைக் காலத்தில் வாழ்ந்த எபிரேயர்கள் சிறப்புப்படைப்புக் கொள்கையில் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

Therapeutic Interview
நோய்நீக்க நேர்காணல்

அதிக அளவு தகவல்களை வெளிப்படுத்துவதற்காக அல்லாமல் தகவலாளி தன் பகைமை மற்றும் எண்ணக்குலைவுகளை வெளிப் படுத்த அனுமதிக்கும்வகையில் அல்லது தன்னைப்பற்றி நன்கு புரிந்துகொள்ளும் நிலையை

வளர்க்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட நேர்காணல்.

Time Series
காலத்தொடர்

குறிப்பிட்ட முறையான கால இடைவெளிகளில் வகை மாதிரிக்குப் பொருத்தமாக முறைப்படுத்தப்பட்ட தரவுகள். சமூகவியல் ஆய்வுகளில்பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்ற காலத் தொடர் தரவுகள் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் பட்டியல் ஆய்வுகளிலிருந்து வெளிக் கொணரப் படுகின்றன. இச்சொல் ஒரு மாறியைக் குறித்த அளவுகள் அல்லது கூர்ந்துநோக்கிய கருத்துக்களை ஒரு தொடராக அவை தோன்றுகின்ற தொடர்ச்சியான காலத்தருவாயில் ஒழுங்குபடுத்தப்படுவதையும் குறிக்கிறது.

Toleration
பொறுத்தமைவு

ஒருவித இசைவுபடுத்துதலைக் குறிக்கிறது. இதில் ஒத்துப் போகாத எதிரான குழுக்கள் வேறுபாடுகள் மற்றும் கருத்து மாறுபாடுகளுக்கிடையே ஒன்றுக்கொன்று ஒத்திசைவு மற்றும் முரண்பாடுகளைத் தவிர்த்தல் மனப்பான்மைகளை மிகவும் ஏற்றுக்கொள்ளத்தக் கதாகவும் நடைமுறைத்தீர்வாகவும் எடுத்துக் கொள்வார்கள்.

Total Institution
முழு இலக்க நிறுவனம்

பிறரின் நடக்கைமுறையை நெருக்கமாகக் கட்டுப்படுத்துவதற்கு அதிகாரம் கொடுக்கின்ற குறிப்பிட்ட தரத்திலான மக்களின் ஓர் அமைப்பாண்மையைக் குறிக்கிறது. அதாவது ஒருவரின் அன்றாட வாழ்வில் அதிக முக்கியத்துவம் பெறும் அல்லது அன்றாட வாழ்வைப் பெரிதும் பாதிக்கும் நிறுவனம். அதற்குப்பணிந்துபோனால் பாராட்டும், எதிர்த்தால் தண்டனையும் கிடைக்கும். இந் நிறுவனம் ஒருவரின் மனப்பான்மையையும், மதிப்பீடுகளையும் தரப்படுத்த முயற்சிக்கிறது. கைதிகளுக்குச் சிறையை முழு இலக்க நிறுவனமாகக் கூறலாம். மேலும் இராணுவ ஒருமங்கள், உறைவிடப் பள்ளிகள், கன்னிமாடங்கள் மற்றும் துறவி மடங்கள் ஆகியவற்றையும் சான்றுகளாகக் கூறலாம்.

Totalitarianism
சர்வாதிபத்தியம்

நாட்டரசு வாழ்க்கையின் அனைத்துப் பகுதிகளையும் கட்டுப்படுத்திச் சீராக்குகிற ஒருவிதச் சமுதாயத்தைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. இத்தகைய கட்டுப்பாடு நாட்டரசின் அதிகாரத்தை நிலைபேறுடையதாகவும் சமுதாயத்தின் நலனைக் கருதி செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் இன்றியமையாததாகக் கருதப்படுகிறது.

Totem
குலக்குறி/மரபுச்சின்னம்

சில சமுதாயத்தினர் தம்

குலத்தவர்கள் சில இயற்பொருட் சின்னங்களிலிருந்து தோன்றியவர்கள் என்றும் அவற்றோடு வேறுபல முறைகளில் தொடர்புற்றவர்கள் என்றும் நம்புவதால் அப்பொருளை அவர்தம் குலத்தின் குறியாகக் கொண்டுள்ளனர். விலங்குகள், தாவரங்கள், இயற்கைப்பொருட்கள் ஆகியவை குலக்குறிகளாக உள்ளன. இது குறிப்பாகத் திருமணமுறை, உறவுமுறை, வழிபாட்டு முறை, உணவு முறை போன்றவற்றோடு மிகவும் நெருக்கமாகச் செயலுறவைக் கொண்டுள்ளது. குலக் குறியோடு கொண்டுள்ள நடைமுறைகள், நம்பிக்கைகள், செயற்பாடுகள் அனைத்தையும் சேர்த்து குலக்குறியம் (Totemism) என்று கூறப்படும்.

Totemic Kinship
மரபுச்சின்ன உறவு

ஒரே மரபுச் சின்னத்தை வழிபடுகின்ற இன உறவுடைய அங்கத்தினர்களிடையே காணப்படும் குறியீடாயமைந்த அல்லது அடையாள உறவு.

Totemism
மரபுச்சின்னமுறைமை/குலக்குறியம்

குலமரபுச் சின்ன நம்பிக்கை. ஒரு சமுதாயத்தின் அமைப்பாண்மை குலமரபுச் சின்னங்களாக அமைந்திருப்பதைக் குறிக்கிறது.

Totem Pole
குலக்குறிக்கம்பம்

குலக்குறியை உடைய பழங்குடியினருள் பெரும்பான்மையோர் தம் குலக்குறியை மரத்திலோ வேறுசில வடிவங்களிலோ சித்தரித்த கம்பங்களைத் தம் குடியிருப்புப் பகுதி அல்லது தாம் விரும்பும் பகுதியினுள் நட்டு வழிபடுகின்றனர். இதைக் குலக்குறிக் கம்பம் என்று கூறுவர். இதற்குப் பல சடங்குகள் நடத்திச் சிறப்பாக வழிபடும் முறை பல பழங்குடியினரிடம் காணப்படுகிறது.

Town
நகரம்

ஒரு சிறிய நகர்ப்புறக் குடியிருப்பைக் குறிக்கிறது. இது ஒரு சிற்றூர் அல்லது கிராமத்தைவிடப் பெரியதாகவும் பெரும் நகரத்தைவிடச் சிறியதாகவும் இருக்கும். இது பெரும்பாலும் ஒரு கிராமப்புற வர்த்தகப் பகுதியின் குவிமையப் பகுதியாக இருக்கும்.

Town Planning
நகர அமைப்புத்திட்டம்

நகர அமைப்பு என்பது நகரங்களின் வடிவமைப்பு மற்றும் அமைப்புத் திட்டம் என்ற பொருளில் மிகப் பழமையானதாக இருந்தாலும் ஒருவித மத்திய மேல் கட்டுப்பாடு மற்றும் நிலப் பயன்பாட்டின் ஒருங்கிணைப்பு என்ற பொருளில் பார்க்கும் போது ஓரளவு 'அண்மைக்காலத் தோற்றமாக உள்ளது. பத்தொன் பதாம் நூற்றாண்டில் உலகில் விரைவாக நகர்மயமாகிய பெரும்பாலான நாடுகளிலும் ஆலைகள் மற்றும் வீடுகள்

கட்டுதல் நில அபிவிருத்தி ஆகியவற்றின் மீதான அரசின் எந்தக் கட்டுப்பாட்டையும் தனிப்பட்ட விடுதலையுரிமையின் மீதான அத்துமீறலாகக் கருதப் பட்டது. இருப்பினும் அத்தகைய ஒட்டுமொத்தக் கட்டுப்பாடின்மை நெருக்கடியையும் நகர்ப்புறங் களின் ஒழுங்கற்ற நிலையையும் ஏற்படுத்தியது. இதனால் ஒருவித மத்திய வழிகாட்டலின் தேவை உணரப்பட்டது.

Trade Area
வாணிகப்பகுதி

ஒரு பெரும் நகரம், நகரம் அல்லது கிராமத்தால் பொருளா தாரரீதியில் மேலாதிக்கம் செலுத் தப்படுகின்ற ஒரு நிலவியல்சார் பகுதி. இது ஒரு பொது நிதி மற்றும் வாணிக மையமாகவும் பணியாற்றுகிறது.

Trade Union
தொழிற்சங்கம்

பணிநிலைகளையும் ஊதியங் களையும் மேம்படுத்துவதற்காகப் பணியாளர்கள் இணைந்து ஏற்படுத்துகின்ற அமைப்பாண்மை. தொழிற்சங்கங்கள் குறித்த சமூகவியல் ஆர்வங்கள் பல தரப்பட்ட உண்மைகளை உள்ளடக்குகின்றன. சமுதாயத் திலும் தொழிற்சாலையிலும் சிக்கல்களை அமைப்புமுறைக் குட்படுத்துவதில் சங்கங்களின் பங்களிப்பு மிக முக்கியமானது.

Tradition
மரபு

மரபு என்பது மனித பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், நிறுவனம் அல்லது கலைத் தொழில் ஆகியன ஒரு தலை முறையிலிருந்து அடுத்த தலை முறைக்குச் செல்வதைக் குறிக்கிறது. சில பண்பாட்டுக்கூறுகள் ஒரு சமூகக் குழுவின் பொதுவான மரபு ரிமையின் ஒரு பகுதியாகக் கருதப்படுகிறது.

Traditional Co-operation
மரபுவழிக் கூட்டுறவு

ஒரு சமூகத்தில் எல்லா மக்களாலும் அங்கீகரிக்கப்பட்ட பொது குறிக்கோள்களை அடைய எடுத்துக்கொள்ளும் கூட்டு முயற்சி. இது சமூகத்தில் பழக்கவழக்கங்கள் மற்றும் மரபுகளோடு ஒன்றிப் போனது. கிராம மக்கள் கோவில் திருவிழாவை ஒருங்கிணைந்து நடத்துவது மரபுவழிக் கூட்டுற வுக்குத் தக்க சான்றாகும்.

Traditionalism
மரபு மனப்பான்மை

குறிப்பிட்ட மனப்பான்மை அல்லது தத்துவத்தைக் குறிக்கிறது. அதாவது நிலை நாட்டப்பட்ட பழங்காலப் பாங்கங்கள் அல்லது முன்மாதிரிகள் நிகழ்கால மற்றும் எதிர்கால நடக்கைமுறைகளைத் தீர்மானிப்பதற்கு நல்ல வழி காட்டிகளாகும் என்ற கருத்தை வற்புறுத்துவது.

Transculturation
சமகலப்புப் பண்பாட்டுப் பேறு

இரு பண்பாடுகள் நேருக்குநேர் சந்திக்க நேரிடும்போது ஒன்று

மற்றதன் சிறப்புக் கூறுகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது இரண்டு பண்பாடுகளும் ஒன்று மற்றதன் பண்புகளை ஏற்றுக் கொள்ளும். இவ்வாறு இரண்டு பண்பாடுகளுமே சிறப்புப் பண்புகளைப் பரிமாறிக்கொண்டால் அது சமக்கலப்புப் பண்பாட்டுப் பேறு எனப்படும்.

Transhumance
புடைபெயர்ச்சி

பருவகாலத்திற்கு ஏற்றபடி மேய்ச்சலுக்காகக் கால்நடைகளை இடத்துக்கிடம் கொண்டு செல்லும் செயல். இது நாடோடித் தன்மையிலிருந்து வேறுபட்டது. சான்றாக இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் கோடை காலத்தில் மந்தைகளை மலைப் பகுதிக்குக் கொண்டு சென்று விட்டுக் குளிர்காலத்தில் திரும்பி வருதலைக் கூறலாம்.

Tribal Analogy
பழங்குடி ஒப்புமை

தற்கால ஆலைமயப் பண்புக் குழுவில் ஒரு சமூக அமைப்பை ஒரு பழங்குடிப் பண்புக் குழுவைப் போன்று பாவித்து நடத்துகின்ற ஒப்பு மையைக் குறிக்க இச்சொல் பயன் படுத்தப்படுகிறது.

Tribal council
பழங்குடி அவை

பல பழங்குடிச் சமுதாயங்களில் சமுதாய வாழ்வை முறைப் படுத்தவும் வழக்குகளைத் தீர்க் கவும், பிற பொதுப்பணிகளைக் கவனிக்கவும் பழங்குடி அவை செயல்படுகிறது. இதில் தலைவர் மற்றும் இவருக்கு உதவியாக ஒவ்வொரு கால்வழிக் குலத் தலைவர்களும் இருப்பார்கள். தலைவர் பதவிக்கு மரபுவழியாக வரும் முறையும், மக்கள் அனைவரும் விரும்பும் நபரை ஏற்றுக்கொள்ளும் முறையும் பரவலாக உள்ளது.

Tribe
பழங்குடி

பொதுவான பெயரையும், ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் தன்மையையும், ஒரே மொழியைப் பேசும் இயல்பையும், திருமணம், செய்யும் தொழில் ஆகியவற்றில் சில வரையறை களையும் கொண்ட, ஒருவருக் கொருவர் கடப்பாடுடனும், பொருள்களைப் பரிமாறிக் கொண்டு வாழும் பல குடும்பங்களின் தொகுதியே பழங்குடியாகும். இது மஜூம் தாரின் வரையறையாகும்.

Turanian System
துரானிய வகை

பண்பாட்டுப் படிமலர்ச்சி பற்றி மார்கன் அவரது கொள்கையை விளக்கும்பொழுது உறவு முறையின் வளர்ச்சியை மூன்று நிலைகளாகக் குறிப்பிடுகிறார். அவற்றில் ஒன்று 'துரானிய வகை'. இக்கால மானிடவி யலாரின் உறவுமுறை வகைப் பாட்டின்படி துரானிய வகை இரோகுவாய்ஸ் முறைக்கு (Iroquois system) இணையானது

(காண்க Iroquois System)

Twin Cities
இரட்டை நகரங்கள்

அருகிலுள்ள எல்லையை உடைய இரு நகரங்களை உள்ளடக்கிய ஒரே நிலச் சூழல்சார் பண்புக் குழுவை வகுத்தமைக்கின்ற ஒரு பல் கூட்டான பகுதியைக் குறிக்கிறது. ஆட்சி முறையில் இரு நகரங்களும் தனியாகவே இருக்கும்.

U

Under Class
கீழ்வகுப்பு

பலமேற்கத்தியச் சமுதாயங்களில் பெண்களும் இனச் சிறுபான்மையினரும் மிகக் குறைந்த சம்பளங்களில் பாதுகாப்பற்ற மிகவும் வெறுக்கத்தக்க பணிகளில் அமர்த்தப்படுகின்றனர். அவர்கள் கீழ் வகுப்புகளாக அமைகின்றனர். பால் மற்றும் இனக் குணாதிசயங்களை உடைய அந்தஸ்துக் குழுக்கள் கீழ்வகுப்புகளை வகுப்புப் படிநிலையில் கீழ்நிலைக்கு ஒதுக்கித் தள்ளுகின்றனர்.

Underdeveloped Area
வளர்ச்சியடையா பகுதி

பெருமளவில் ஆலைமயமாக்கப்படாத ஒரு பகுதி அல்லது நாட்டைக் குறிக்கிறது. முதல் நிலையாக இது நகர்ப்புறம் அல்லாமல் கிராமப்புறமாக இருக்கும். மேலும் இயந்திர மயமாக்கப்பட்ட விவசாயம் இல்லாதிருக்கும்.

Under Development
வளர்ச்சி நிறைவின்மை

வளர்ச்சி நிறைவின்மை மூலப் பொருட்களின் ஏற்றுமதி மற்றும் உருவாக்கப்பட்டவற்றின் இறக்குமதியில் சார்ந்திருப்பதில் ஈடுபடுகிறது. வளர்ச்சி நிறைவற்ற சமுதாயங்கள் மிகப்பெரிய பின்னணிப் பிரிவினரோடு இணைக்கப்பட்ட சிறிய தொழிற்சாலைப் பிரிவினரை உடையதாக இருக்கும். வட்டாரச் சந்தைகள் இறக்குமதிப்பொருட்களால் தடுக்கப்பட்டிருக்கும். குறைந்த சம்பளம் மற்றும் குறைந்த உற்பத்தி காணப்படும்.

Under Population
குறைந்த மக்கள்தொகை

ஒரு குறிப்பிட்ட பகுதியில் குறிப்பிட்ட ஒரு வாழ்க்கை முறையை நடத்தக்கூடிய மக்களின் எண்ணிக்கையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது போதாத அல்லது குறைந்த எண்ணிக் கையில் காணப்படுகின்ற குடியிருப்பாளர்களைக் குறிக்கிறது.

Unibonded Group
ஒரே பிணைப்புக்குழு

ஒரு குழுவின் உறுப்பினர்கள் ஒரே ஒரு பொதுவான செயல் நோக்கத்திற்காக அல்லது நலனுக்காக ஒன்றுபட்டிருப்பதைக் குறிக்கிறது. உறுப்பினர்களின் வாழ்வில் ஒரு சிறு பகுதி மட்டுமே குழுவில் ஈடுபடும். உறுப்பினர்களுக்கிடையிலான உறவுகள் தனிக் குறிப்

பீடாக அல்லது வரையறுக் கப்பட்ட உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் உடையதாக இருக்கும்.

Unilineal Descent
ஒருவழி மரபு

உறவுச்சொற்கள் தந்தைவழிப் பெற்றோர் யார், தாய்வழிப் பெற்றோர் யார், மகன்வழி மக்கள் யார், மகள்வழி மக்கள் யார் யார் என வகைப்படுத்தாமல் இருந்தால் அது ஒருவழி மரபாகும். இவ்வகை மரபைச் சேர்ந்தோர் அவர்தம் குடிவழியைத் தந்தை வழியில் அல்லது தாய்வழியில் மட்டும் தொடர்புபடுத்திக் காண்பர்.

Unilineal Descent Group
ஒருவழி மரபுக்குழு

தந்தைவழி மரபு, தாய்வழி மரபு ஆகிய ஒருவழி மரபு களையுடைய சமுதாய அமைப் பில் மக்கள் பல குழுக்களாகப் பிரிந்து ஒவ்வொரு குழுவினரும் ஒரு பொதுவான மூதாதை யரிடமிருந்து தோன்றியதாகக் கூறுவர். இவ்வாறு ஒரு பொது மூதாதையர்வழி தோன்றி யதாகக் கூறுவோர் அனைவரையும் உள்ளடக்கிய குழுவே ஒருவழி மரபுக்குழு எனப்படும்.

Unilinear Evolution
ஒருவழிப் படிமலர்ச்சி

பண்பாடுகள் ஒரு நேர் கோட்டில் வளர்ச்சி பெற்று வந்துள்ளன என்ற கருத்தை வலியுறுத்துவது ஒருவழிப் படி மலர்ச்சியாகும். இன்றைய நவீனச் சமுதாயங்கள் அனைத்தும் இந்த நேர்கோட்டில் இடம்பெறும் பல படிநிலைகளைக் கடந்தே வந்துள்ளன என்பர்.

Unilocal Residence
ஓரிட உறைவிடம்

திருமணமான தம்பதியர் அவர்களில் யாராவது ஒருவரின் பெற்றோரின் வீட்டில் அல்லது அருகாமையில் அல்லது உற வினர் வீட்டில் உறைவிடத்தை அமைக்க வேண்டுமென்று குறிப்பிடும் ஒரு வழக்கம்.

Union
ஒன்றியம்

பணியாளர்களின் ஓர் இணை தலைக் குறிக்கிறது. சங்கங்கள் அவற்றின் உறுப்பினர்களின் சிறப்புநலன்களை முன்னேற்று வதற்காக இணைத்தமைக்கப்படுகிறது.

Unique Experience
தனிநிலை அனுபவம்

பிறரின் அனுபவத்தைப் போன்ற தல்லாமல் தனக்கே உடையதான வேறுபட்ட அனுபவம்.

Universal Evolutionism
உலக படிமலர்ச்சிக்கொள்கை

சமுதாயங்கள் மிகவும் எளிய நிலையில் தொடங்கி அவற்றின் அங்கங்களிடையே ஏராளமான பங்குப்பணிகளை மேலும் ஏற்படுத்திக்கொண்டு சிக்கலான நிலைக்குத் தொடர்ந்து மாறி வந்துள்ளன. ஆகவே உயிரியல் படிமலர்ச்சி போன்றே பண் பாட்டு படிமலர்ச்சியும் ஓர் உண்மை நிகழ்வே என்ற

கருத்தை உலப் படிமலர்ச்சிக் கொள்கை வலியுறுத்துகிறது.

Universality
உலகப் பொதுத்தன்மை

ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி, சூழ்நிலை, இடம், காலம், மனிதர் என்ற வரையறையைத் தாண்டி உலகு எங்கும் ஏற்றுக்கொள்ளத் தக்கதாய் விளங்கும் தன்மையே உலகப் பொதுத்தன்மை என்று சொல்லப்படும்.

Universal Values
உலக மதிப்பீடுகள்

ஒவ்வொரு சமுதாயமும் சில உலகளாவிய மதிப்பீடுகளால் நெறிப்படுத்தப்படுகிறது. இவை கண்ணுக்குப் புலப்படாதவை. ஒருசில சூழல்களில் சொற்களால் விவரிக்க இயலாத தன்மையைப் பெற்றவை என்றும் கூறுவர்.

Unskilled Manual Worker
உடல் உழைப்பாளி

மிகக்குறைவான பயிற்சி, அறிவு அல்லது அனுபவம் தேவைப்படும் பணியைச் செய்யும் ஓர் உடல் உழைப்பாளி.

Unstructured Interview
நெறிப்படுத்தப்படாத நேர்காணல்

இத்தகைய நேர்காணலில் வினாப்பட்டியல் இல்லாமல் உரையாடல் தன்னிச்சையாக இருக்கும். சிறு குறிப்புகளைக் கொண்டோ அல்லது அவ்வப் போது மனதில் தோன்றும் கேள்விகளைக் கொண்டோ பேட்டியளிப்பவரை ஆய்வுத் தொடர்பான பொருள்களில் பேசச் செய்வார்கள். பெரும் பாலும் முன்னாய்வு நிலையில் இம்முறை பயன்படுத்தப்படுகிறது.

Unwilled Absence of One Spouse
விரும்பா ஒருதுணை இழப்பு

கணவன் அல்லது மனைவியின் இறப்பினால் சில குடும்பங்கள் நிலைகுலைகின்றன. போர், சிறையில் அடைக்கப்படுதல், வாழ்க்கையில் விரக்தி போன்ற வற்றாலும் குடும்பத்தில் பிரிவு ஏற்படுகிறது. இதுபோன்ற குடும்பத்தில் ஏற்படும் கேடான முடிவுகளால் வாழ்க்கைத் துணையை இழக்க நேரிடுகிறது. இத்தகைய இழப்பு ஒருவர் விரும்பாமல் நிகழ்கிறது.

Unwilled Major Role Failure
விரும்பா முக்கிய பங்குத் தோல்வி

குடும்பத்தில் திடீரெனநேரிடும் கேடான முடிவுகளால் மனரீதி யிலான உணர்ச்சிவசப்பட்ட அல்லது உடல்ரீதியிலான விளைவுகள் ஏற்படுகின்றன. ஒரு குழந்தை மனவளர்ச்சியற்றதாக இருக்கலாம். குழந்தை அல்லது வாழ்க்கைத் துணை மனநோயாளியாகலாம். கடுமையான நோயால் தொடர்ந்து மருத்துவ சிகிச்சையில் இருக்கலாம். இதுபோன்ற நிலைகளில் ஒருவர் தன் முக்கிய கடமைகளை நிறைவேற்ற இயலாத நிலை ஏற்படுகிறது. இதனை விரும்பா முக்கிய பங்குத் தோல்வி என்பர். இத்தகைய பங்குத்தோல்வி

தாங்கள் விரும்பாமல் நிகழ்கிறது.

Upper Class
உயர்வகுப்பு/உயர்வர்க்கம்

சமுதாய அடுக்கமைவில் அதிகாரம், ஆணையுரிமை, செல்வம், மற்றும் செல்வாக்கு ஆகிய தகுதிகள் மூலம் கீழ்வகுப்புப் படியினர் மீது மேலாதிக்கம் செலுத்தும் சமூகத் தரத்தினர்.

Upper-lower Class
உயர்கீழ்நிலை வகுப்பு

இப்பிரிவில் நிலையான வருவாய் உடைய தொழிலாளர்கள் அடங்குவர். இவர்கள் கீழ் வர்க்கத்தினர் எனக் குறிப்பிடும் போது சலிப்படைபவர்களாக இருப்பார்கள்.

Upper Middle Class
உயர் நடுத்தர வகுப்பு

ஓரளவு செல்வச்செழிப்பான வியாபாரம், தொழில் மற்றும் அரசுப்பணிகளை உடைய சமூக தரத்தைக் குறிக்கிறது. பண்புக்குழு செயல்பாடுகளில் முன்னின்று செயல்படுவார்கள். இப்பிரிவினர் வாணிகம் மற்றும் தொழில்முறை சார்ந்த துறைகளில் செல்வாக்கு பெற்றவர்கள். நல்ல குடும்பப் பின்னணியும் நிறைவான வருவாயும் உடையவர்கள்.

Upper-upper Class
உயர் மேல்நிலை வகுப்பு

இப்பிரிவைச் சேர்ந்தவர்கள் நெடுங்காலமாகச் செல்வக் குடும்பத்தினர் என்னும் தகுதி உடையோராவர். இவர்களிடம் காணப்படும் மிகுந்த செல்வம் எப்பொழுது வந்தது என்பதைக் கணக்கிடமுடியாத அளவு இவர்கள் பழமைமிக்கவர்கள்.

Urban Community
நகர்ப்புறப் பண்புக்குழு

உயர்ந்த மக்கள்தொகை அடர்த்தி, பெரும் தொகையிலான விவசாயம் அல்லாத தொழில்கள், சிக்கலான பணிப்பாகுபாட்டை விளை விக்கும் உயர்ந்த அளவிலான தனித் துறைப்பாடு மற்றும் ஒரு விதிமுறைப்படுத்தப்பட்ட முறையிலான வட்டார அரசு ஆகியவற்றை உடைய ஒரு பண்புக் குழுவைக் குறிக்கிறது.

Urban Fringe
நகர்ப்புற ஓரம்

ஒரு பெரும் நகரத்தின் சட்டப்படி நிறுவப்பட்ட புற நகரங்களுக்கு அப்பாற்பட்ட பகுதி. இங்கு நகர்ப்புற மற்றும் கிராமப்புறக் குணாதிசயங்கள் இணைவுறுகின்றன. இது புற நகர்ப்பகுதியைவிடக் குறைந்த அளவில் ஒழுங்கமைக்கப்பட்ட பல்வகையான நிலப் பயன் பாடுடைய பகுதியாகக் காணப்படும்.

Urban Ring
நகர சுற்றுவளையம்

ஒரு பெரும் நகரத்தைச் சுற்றிய பகுதியைக் குறிக்கிறது. இதில் புற நகரங்கள் மற்றும் நகர புற எல்லையும் அடங்கும்.

Urban Society
நகர்ப்புறச் சமுதாயம்

நகர்ப்புறச் சமுதாயம் பெருமளவிலான பலதரப்பட்ட மக்கள் தொகை, வாணிகம், தகவல் தொடர்பு போன்றவை மூலம் ஏனைய சமுதாயங்களோடு நெருங்கிய தொடர்பு, சிக்கலான பணிப் பாகுபாடு, குறிப்பிட்ட குறிக்கோள்களை நோக்கி நடக்கைமுறைகளை ஒழுங்கமைக்கும் விருப்பம் போன்ற குணாதிசயங்களை உடையதாகக் காணப்படும்.

Urban Sociology
நகர்ப்புறச் சமூகவியல்

முதல்நிலையாக மனித சமூக வாழ்வின் நகர்ப்புறப் பண்புக் கூறுகளில் கவனம் செலுத்தும் ஒரு சமூகவியல் ஆய்வுப்பிரிவு. இது நகரவாழ்வு, பழமையான, இடைக்கால மற்றும் தற்கால நிலைகள், ஒப்பாய்வுகள், நகர்ப்புற பண்புக் குழுக்களில் மக்களின் பரிமாற்றங்கள் குறித்த சிறு ஆய்வுகள், புற நகரங்கள் போன்ற ஆய்வுகளை வரிசைப் படுத்துவதில் கவனம் செலுத்துகிறது.

Uxorilocal Family
மனைவியகக் குடும்பம்

திருமணத்திற்குப்பின் மணமக்கள் மனைவியின் வீட்டில் அல்லது இடத்தில் உறைவிடத்தை ஏற்படுத்திக்கொண்டால் அது மனைவியகக் குடும்பமாகும்.

V

Value
உயர்மதிப்பீடு/மதிப்புக்கோள்

சமுதாயத்தில் அல்லது குழுவில் பெரும்பான்மையினரால் குறிப்பிட்ட செயல் அல்லது பொருளுக்குத் தனி முக்கியத் துவம் அளிக்கப் படுவது உயர் மதிப்பீடு ஆகும். சமுதாயத்தில் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பது உயர் மதிப்பீடாகும். அதேபோன்று போர்வீரர்களிடையே நாட்டுக்காக உயிர் துறப்பது பெருமையாகக் கருதப் படுவது ஓர் உயர் மதிப்பீடாகும். உயர்மதிப்பீடு தனிமனிதனைப் பொறுத்தும் சமுதாய நோக்கைப் பொறுத்தும் அமைகிறது.

Value Conflict
உயர்மதிப்பீட்டு முரண்பாடு

ஒருவர் தனது வாழ்க்கையில் இருவகையான பண்பாட்டுக் கூறுகளின் தாக்கத்தால் பாதிக்கப் படும்போது உயர்மதிப்பீட்டு முரண்பாடு ஏற்படுகிறது. பழமையான சமூகத்திலிருந்து வரும் படித்த பெண்ணுக்குத் தன் சொந்த சுதந்திர வாழ்க்கைக்கு முக்கியத் துவம் அளிப்பதா அல்லது மரபுசார்ந்த பழமை யான முறையிலேயே வீட்டினுள் வாழ்வதா என்று குழப்பம் ஏற்படுவது உயர்மதிப்பீட்டு முரண்பாடாகும். பொதுவாக இத்தகைய உயர்மதிப்பீட்டு முரண்பாடுகள் விரைவாக மாறிக் கொண்டிருக்கும் சமுதாயத்தில் பெரும்பாலான மக்களிடையே

காணப்படும்.

Value Judgement
மதிப்பீட்டுத் தீர்ப்பு

எது விரும்பத்தக்கது அல்லது தகுதியனது என்பதான தீர்ப்பு. விடாக் கண்டிப்புகள் மற்றும் பிடிவாதமான நிலை எழுந்தால் ஒழிய அனைத்துச் சமூகச் செயல்பாடுகளிலும் மதிப்பீட்டுத் தீர்ப்பு இன்றியமையாததாக உள்ளது. கிடைக்கின்ற அல்லது கிடைக்ககூடிய உண்மைகள், அறிவு அல்லது நுண்ணறிவுத் திறம் ஆகியவற்றை விலக்கித் தள்ளவோ அல்லது இருள்நிலை ஏற்பட்டாலோ மட்டுமே சமூகவியல் மதிப்பீட்டுத் தீர்ப்பு விரும்பத்தகாததாகக் காணப்படும்.

Value Stretch
மதிப்பீட்டு விரிவு இழுப்பு

பண்பாட்டு நன்முறைகளைப் பற்றி உயர்வாகப் பேசுதல். அதேவேளையில் அன்றாட வாழ்வில் அவற்றைக் கடைபிடிக்க எவ்வித முயற்சியும் எடுத்துக்கொள்ளாதிருத்தல். சான்றாக மக்கள் ஏழைகளுக்கு உதவி செய்யவேண்டும் என்பதை வலியுறுத்திப் பேசிவிட்டு தாங்கள் பிறருக்கு எந்த உதவியும் செய்யாமல் விட்டு விடுவதைக் கூறலாம்.

Value System
மதிப்பீட்டு முறைமை

ஒரு சமுதாயத்தின் அல்லது குழுவின் ஒழுங்கமைக்கப்பட்டப் பாங்கிலான மதிப்பீடு. இதில் தனிநபர் மதிப்பீடுகள் இடைத்தொடர்புடையதாகின்றன. இதனால் மதிப்பீடுகள் ஒன்றுக்கொன்று வலுப்பட்டு இசைந்திணைகின்ற முழுமையாக உருவாகிறது. ஒரு மதிப்பீட்டு முறைமை சமூகக் கட்டளைச் சட்டங்கள், நம்பிக்கைகள் மற்றும் நடக்கைமுறை ஆகியவற்றைப் பகுப்பாய்வு செய்வதற்கான ஒரு வரைச் சட்டத்தை அளிக்கிறது.

Variable
மாறி

ஒரு மனிதருக்கும் இன்னொரு மனிதருக்கும், ஒரு குழுவிற்கும் இன்னொரு குழுவிற்கும், ஒரு காலகட்டத்திற்கும் இன்னொரு காலகட்டத்திற்கும் இடையே உள்ள மாறுபட்ட குணங்கள் அல்லது தன்மைகள். பொதுவாக மாறுபடுகின்ற எந்த ஒரு அளவையும் குறிக்கிறது. அடுத்தடுத்த தனி நிகழ்ச்சிகளில் வேறுபட்ட மதிப்பீடுகளை உடைய அளவீடு செய்யத்தக்க தனிச்சிறப்புப் பண்புகள் என்றும் வரையறுக்கலாம்.

Verbal Test
வாய்மொழிச் சோதனை

மொழிப் பயன்பாட்டைச் சார்ந்த ஒரு சோதனையைக் குறிக்கிறது. சோதிக்கப்பட வேண்டிய நபர் எந்த ஒரு பணியையும் நிறைவேற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுவதில்லை. ஆனால் சொற்களில்மறுமொழிகூறவேண்டும்.

Verifiable Evidence
மெய்ச்சான்று

பிற தேர்ச்சிபெற்ற ஆய்வாளர்கள் ஆழ்ந்துநோக்கி, அளவிட்டு, சோதனை செய்து தெரிந்து கொள்ளும் வகையிலான அறிவார்ந்த கண்டுபிடிப்புகள்.

Vertical Group
பல்சமூக நிலைக்குழு

எல்லாச் சமூகப் பொருளாதார நிலைகளையும் சேர்ந்த மக்களை அங்கத்தினர்களாகக் கொண்ட குழு. கிறித்தவ ஆலயத்தை இதற்குச் சான்றாகக் கூறலாம். காரணம் கிறித்தவ ஆலயங்களில் சமுதாயத்தின் எல்லாப் பிரிவினரும் அங்கத்தினர்களாக உள்ளனர்.

Vertical occupational Movement
நிலை பணிசார் இயக்கம்

தொழில்நிலையில் ஏற்படுகின்ற மாற்றத்தைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. இது பொருளாதார அல்லது சமூக அந்தஸ்து நிலையில் மேல் நோக்கிய அல்லது கீழ்நோக்கிய மாற்றத்தில் ஈடுபடுகிறது.

Vertical Social Mobility
சமூக அந்தஸ்து நிலைமாற்றம்

சமூக அந்தஸ்துநிலை மாற்றம் ஒருவரோ அல்லது குழுக்களோ, உயர்ந்த அல்லது தாழ்ந்த அந்தஸ்து நிலைக்கு மாறுவதைக் குறிக்கிறது. இது வகுப்புமுறைச் சமுதாயத்தில்தான் நடைபெறும். ஒருவர் தனது வேலை மற்றும் பொருளாதார நிலையை உயர்த்திக்கொள்ளும்போது அவர் சமூகத்தில் உயர் அந்தஸ்து நிலையை அடையமுடிகிறது. அதேபோன்று ஒருவர் தனது செல்வத்தை இழக்கும்போது சமூகத்தில் கீழ்நிலை அந்தஸ்துக்குச் சென்றுவிடுகிறார்.

Vertical Work Group
பல் பணிநிலைக் குழு

தன்மானம், வருவாய், திறமை அல்லது ஆணையுரிமை ஆகியவற்றின் அளவுகளில் வேறுபடுகின்ற பணிகளைச் செய்யும் தனிநபர்களைக் கொண்ட ஒரு பணிக்குழு.

Vested Interest
சுய நலக்கும்பல்

தனிச்சிறப்பு மற்றும் நிலைநாட்டப்பெற்ற முன்வாய்ப்புக்களை உடைய ஒரு நலக்குழு. இது சமூக ஒழுங்கமைப்புக்குள் அதன் நிலையை அச்சுறுத்துகின்ற செயல்திறநுட்பங்களை எதிர்ப்பதன் மூலம் அதன் முன்னுரிமைகளைத் தக்க வைத்துக்கொள்ள முயலும்.

Vestigial Organ
எச்ச உறுப்பு

பயனற்ற பண்புகள் அடுத்தடுத்த தலைமுறையில் தேய்ந்துகொண்டே செல்லும். குரங்கிலிருந்து தோன்றிய மனிதனிடம் வால் அறவே இல்லாமல் அவ்வுறுப்பு ஓர் எச்ச உறுப்பாகக் காணப்படுகிறது. ஆனால் முயன்று பெறும் பண்புகளும், பயன்பாடுமிக்க உறுப்புகளும் பின் தலைமுறையில் நிலைபெறுகின்றன.

Vice
தீயொழுக்கம்
ஒரு சமுதாயத்தினுள் முக்கியமான சமூகக் கட்டளைச் சட்டங்களை மீறுகின்ற கண்டனம் செய்யப்பட்ட நடக்கைமுறை.

Vice Area
தீயொழுக்கப் பகுதி
பரத்தையர்கள், போதைப் பழக்கத்திற்கு அடிமையானவர்கள், குடிகாரர்கள் மற்றும் ஏனைய சமூகப் பொதுநிலையிலிருந்து விலகிய நிலையுடையவர்கள் அதிகமாக வாழும் ஒரு நகர்ப்புறப் பகுதி.

Village
கிராமம்
பல அரசியல் அமைப்புக்களில் கிராமம் குறித்த பல்தரப்பட்ட சட்டப்படியான பொருள் விளக்கங்கள் உள்ளன. பொதுவாக கிராமம் என்பது சிற்றூரைவிட (திருக்கோயில் இல்லாத ஊர்) பெரியதாகவும், நகரத்தைவிடச் சிறியதாகவும் காணப்படும்.

Village Community
கிராமப் பண்புக்குழு
விவசாயத்தில் ஈடுபடுகின்ற, நெருக்கமான குடியிருப்பில் வாழ்கின்ற, குறைந்த எண்ணிக்கையிலான குடும்பங்கள். அவர்கள் பயிர்செய்கின்ற நிலத்தின் பயன்பாடு மற்றும் உரிமைகளைக் கூட்டாகக் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்வார்கள்.

Village Endogamy
கிராம அகமணம்
சில சமூகத்தினர் அவர்கள் வாழும் ஊருக்குள் மட்டுமே மணம் செய்துகொள்ள வேண்டும் என்ற முறையைக் கொண்டுள்ளனர். இதனை கிராம அகமணம் என்பர்.

Village Exogamy
கிராமப் புறமணம்
ஒரு கிராமத்தைச் சேர்ந்தவர் வேறு கிராமத்தைச் சேர்ந்தவர்களை மட்டுமே மணந்துகொள்ள வேண்டும். வடஇந்தியச் சமுதாயங்களில் இம்முறை மிகவும் கண்டிப்பான விதிமுறையாகப் பின்பற்றப்படுகிறது. தென்னிந்தியச் சமுதாயங்களில் கிராமப் புறமணம் கண்டிப்பான விதிமுறையாக இல்லை.

Virilocal Family
கணவனகக் குடும்பம்
திருமணத்திற்குப்பின் மணமக்கள் கணவனின் வீட்டில் அல்லது இடத்தில் உறைவிடத்தை ஏற்படுத்திக்கொண்டால் அது கணவனகக் குடும்பமாகும்.

Visiting Husbands
பார்வைக் கணவர்கள்
முற்கால நாயர் சமுதாயத்தில் சடங்குத் திருமணம் முடிந்த பெண்கள் பூப்பு எய்தியவுடன் தங்களுக்குப் பிடித்த ஆண்களுடன் உடலுறவு கொள்வர். இவர்கள்பார்வைக் கணவர்கள் எனக் கூறப்படுகின்றனர். இந்த ஆண்களுள் அவளுக்குத் தாலி

கட்டிய சடங்குக் கணவனும் இடம்பெறலாம். தாலிகட்டிய சடங்குக்கணவனுக்குப் பாலுறவில் முன்னுரிமை கொடுப்பது அவளின் விருப்பத்தைப் பொறுத்ததாகும்.

Visual Anthropology
புகைக் காட்சி மானிடவியல்

மானிடவியல் களப்பணியில் ஒளிப்படங்கள் எடுப்பது ஓர் இன்றியமையாத உட்பிரிவாக உள்ளது. இந்த உட்பிரிவினைப் புகைக் காட்சி மானிடவியல் என்பர். குறிப்பிட்ட சில நிகழ்ச்சிகளை அப்படியே படம் பிடிக்கும் முறை மானிடவியலாரிடம் பெருகியுள்ளது. இவ்வகைப் படங்கள் ஆய்வாளர் களத்தில் உற்றுநோக்கும்பொழுது அவர் கருத்துக்குக் கிடைக்காத பல செய்திகளைக் கொண்டிருக்கும்.

Vital Statistics
உயிர்நிலைப் புள்ளித்தொகுப்பு

எண்முறையிலான தரவுகளைக் குறிக்கிறது. வழக்கமாக இது பிறப்பு, திருமணம், இறப்பு போன்ற பொது ஆவண வடிவில் காணப்படும். மேலும் வட்டார, தேசிய மற்றும் அகில உலக மக்கள்தொகை குறித்த பதிவு செய்யப்பட்ட செய்திகளும் இதில் அடங்கும்.

Voluntarism
தன்னார்வச் செயல்முறைக் கொள்கை

செயலாற்றுபவர்களின் உட்கருத்து அல்லது செயல்நோக்கங்களின் அடிப்படையிலான சமூகவியல்சார் கோட்பாடுகளில் இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. அவ்வாறு செயல்படுபவர்கள் சமூக அமைப்பால் நிர்ணயிக்கப்படாமல் தன்னார்வத்தோடு செயல்படுவதாகப் பாவனை செய்துகொள்கிறார்கள்.

Voluntary Association
தன்னார்வத் தோழமை

குறிப்பிட்ட சில செயல்களை நடைமுறைப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட நெறிமுறைகளைக் கொண்ட நிறுவனம். விருப்பத்தைப் பொறுத்து தன்னார்வமாகச் செயல்படுவது.

Voluntary Group
தன்னார்வக்குழு

தங்களுடைய விருப்பத்தின் படியும் சொந்த முயற்சியாலும் ஒன்றுசேரும் குழுவே தன்னார்வக் குழுவாகும். பெரும்பாலும் தங்கள் நோக்கத்தை நிறைவேற்றவே இக்குழுவில் அங்கத்தினராகச் சேருகிறார்கள். அரசியல் கட்சி மக்கள் தங்கள் விருப்பப் படிச் சேரும் தன்னார்வக் குழுவாகும்.

Voting
வாக்களிப்பு

தேர்வுகளில் வாக்களிக்கும் பாங்கு முதல்நிலையாகச் சமூகப் பொருளாதாரக் காரணக்கூறுகளோடு தொடர்புடையது. இது தேர்வுக் காலத்தில் கட்சிகளின் அரசியல் பிரச்சாரத்தால் உருவாக்கப்படுவது மட்டுமல்லாமல் நீண்டகால அரசியல் சமூகவயமாக்கம் வாயிலாகக் கட்சிப் பற்றுறுதிக்கு

அடிப்படையாக அமைகிறது.

W

War
போர்

அரசியல்ரீதியில் ஒழுங்கமைக் கப்பட்ட நாடுகள் அல்லது உள்நாடுகள் ஆகிய குழுக்களுக் கிடையிலான கூட்டான உடல் ரீதியிலான முரண்பாட்டு நிலையைக் குறிக்கிறது.

Web of Life
வாழ்விணைப்பு

மனிதர்கள் போன்ற உயிரினங் களின் சுற்றுச்சூழல் மீதான சார்புடைமை மற்றும் ஒன்றுக் கொன்றின் சார்புடைமையைக் குறிக்கிறது. ஒரு பொதுப் பண்புக்குழு ஒருமைப்பாடுடைய ஒரு ஒழுங்கமைப்பாகக் கருதப் படுகிறது. அத்தகைய ஒருமைப்பாடு பண்புக்குழுவின் வெவ்வேறு பகுதிகளுக்கிடையிலான சிக்கலான இடைச்சார்புடைய தொடர்பு களின் விளைவாக ஏற்படுகிறது.

We-feeling
நாம் உணர்வு

ஒரு குழு தனித்தன்மை வாய்ந்ததாக அமைகிறது என்று பலரால் அளிக்கப்படும் அங்கீ காரம். அத்தகைய அங்கீகாரம் இதுபோன்ற ஏனைய குழுக்களை விட முன்னுரிமையாக அவர்களின் பற்றுறுதியை உணர்வூட்டி போற்றத் தக்கதாக அமைகிறது.

Welfare State
ஆக்கநல அரசு

அரசு அதன் குடிமக்களின் நல்வாழ்வுக்குக் கடமைப்பட்டது அல்லது பொறுப்புடையது என்பதை அடிப்படை மெய்க்கோளாகக் கொண்ட அரசு. தனி நபரிடமோ, தனியார் கூட்டுரிமைக் குழு விடமோ இக்கடமையைக் காக்கும் பொறுப்பை ஒப்படைக்க இயலாது.

White Collar Crime
மேல்குடி குற்றங்கள்

அரசியல்வாதிகள், சமூகத்தில் மதிப்புவாய்ந்த வர்த்தகர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் செய்யும் பணமோசடி போன்ற குற்றங்களை மேல்குடி மக்களின் குற்றங்கள் என்று சதர்லாண்ட் (Southerland) என்ற அறிஞர் குறிப்பிடுகிறார். பொதுவாக இவர்களின் குற்றங்களைப் பற்றிய எல்லா விவரங்களும் வெளி வருவதில்லை. தங்கள் உயர் அந்தஸ்து, செல்வநிலை, செல் வாக்கு இவற்றின் உதவியால் இவர்கள் தண்டனைக் குட்படு வதில்லை.

White Collar Worker
மேல்குடிப் பணியாளர்

ஒரு தொழிலை ஊதியம் தரும் வாழ்க்கைத்தொழிலாகக் கொண்ட வாழ்க்கைத் தொழிலாளர்கள், வாணிக மேலாளர்கள் மற்றும் உரிமையாளர்கள், எழுத்தாளர்கள் ஆகியோரை மேல்குடிப் பணியாளர் என்பர்.

White Magic
தூய மந்திரம்

தனிமனிதனின் நலனுக்காகவும் சமூதயத்திலுள்ள அனைவரின் நலனுக்காவும் பயன்படுத்தப் படும் மந்திரம். வேட்டையில் விலங்குகள் கிடைப்பதற்கு, விளைச்சல் பெருக, போரில் வெற்றி பெற, நோய்களைத் தீர்க்க என்பன போன்ற பயன்தரும் செயல்களுக்குத் தூயமந்திரம் பயன்படுத்தப்படுகிறது.

White Man's Burden
வெள்ளையரின் சுமை

வெள்ளையர்கள் உலகிலேயே மிக உயர்ந்த பண்பாட்டை உடையவர்களாக இருப்பதால் எழுத்தறிவுக்கு முந்தைய நிலையில் உள்ள வெள்ளையர் அல்லாத இனக்குழுக்களை மேம்படுத்தி நாகரிகப்படுத்து கின்ற பொறுப்பை மேற்கொள் வதற்கு அவர்கள் கடமைப்படுத் தப்பட்டவர்கள் என்ற கருத்தினை வெள்ளையரின் சுமை எனபர்.

Witch
சூனியக்காரி

நல்ல அல்லது தீய செயல் களுக்கு மாயவித்தை அல்லது மந்திரம் செய்கின்ற உள்ளார்ந்த சக்தி உடையவர் என நம்பப் படுகின்றவர். பெரும்பாலும் இவர் பெண்ணாக இருப்பார்.

Witch Craft
பில்லிசூனியம்

இயற்கை கடந்த உத்திகளைப் பயன்படுத்தி ஒருவருக்கு அல்லது அவருடைய ஆன் மாவுக்குத் தீங்கு விளைவிக்கவோ அல்லது உதவி செய்யவோ, சூனியம் செய்பவருக்கு உள்ளார்ந்த சக்தி உள்ளது என்ற நம்பிக்கை. அத்தகைய நம்பிக்கையோடு இணைந்த மந்திர உத்திகளும் இதில் அடங்கும்.

Work
பணி

ஒரு குறிக்கோளை அடைவதற் காக அர்ப்பணிக்கப்பட்ட கட்டுப்பாட்டுக்குள்ளான உறுதி யாக நிற்கின்ற செயல்பாடு. இது பொருளாதாரத் தேவைகளோடு தொடர்புடைய பணிகளையும் குறிக்கிறது.

Work Ecology
பணிச்சூழல்

ஆலைகள், வாணிக அலுவ லகங்கள் மற்றும் இதுபோன்ற வற்றில் பணியாளர்களின் பரப்பீடு குறித்த சூழல்சார் ஆய்வு எனக் குறிப்பிடலாம். பணி உறவுப் பாங்கம் மற்றும் முறை சாராச் சமூக உறவுகள் ஆகியவற்றோடு இத்தகைய பணியாளர்களின் பரப்பீட்டின் தொடர்பு குறித்த ஆய்வையும் குறிக்கிறது.

Working Class
பணியாளர் வகுப்பு

தனித்திறன் கொண்ட மற்றும் தனித்திறனற்ற உடலுழைப்புப் பணியாளர் பிரிவினைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. சிலவேளைகளில் இச்சொல் குறைந்த ஊதியம் பெறும்

அலுவலகப் பணியாளர் களைக் குறிக்கவும் விரிவுபடுத்தப்படுகிறது. இச்சொல் தெளிவற்றதாக இருப்பதால் சமூக வியலில் மிகக் குறை வாகவே பயன்படுத்தப்படுகிறது.

Working Hypothesis

செயல் பாட்டுக் கருதுகோள்

களஆய்வு சோதனைக்குட்படாத கருதுகோள். குறிப்பாக இச்சொல் அதிக அறிவியல்சார் ஆய்வுக் குட்படாத இயல்நிகழ்ச்சிகள் அல்லது தொடர்புகள் குறித்து செயல்தொடர்பு கொள்கிற கருது கோளைக் குறிக்கிறது. இந் நிலையில் கருதுகோளானது தற்காலிகமாக கையாளப்படுகிறது.

World View

உலகநோக்கு

குறிப்பிட்ட ஒரு சமூகக்குழுவின் உலகக் குணாதிசயங்கள் மீதான ஒரு பரந்த காட்சியை உருவாக் குகின்ற நம்பிக்கைகளின் தொகுதி. சான்றாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் உலக நோக்கானது தற்பற்று, செல்வவளம், குடும்ப செழிப்புணர்வு, ஒழுக்கமுறை மற்றும் மிதமான மதபக்தி ஆகியவற்றை உள்ளடக்கியது என்பர்.

Written Document

எழுத்துச் சான்றாவணம்

கல்வெட்டுக்கள், பாறை ஓவியங்கள், மர ஓவியங்கள், செதுக்கப்பட்ட சிலைகள், தாளில் எழுதப்பட்ட எழுத்துக்கள் அல்லது அடையாளங்கள் போன்றவை எழுத்துச் சான்றாவணங்களாகும்.

X

Xenocentrism

அயலின உயர்வுவாதம்.

சொந்தப் பண்பாட்டின் முறைகள் சிறந்தவையல்ல, பிற பண்பாட்டு முறைகளே சிறந்தவை எனக் கருதிப் பண்பாட்டு மாற்றத்திற்கு விரும்புவது. இக்கருத்தை உடைய வர்கள் தங்கள் சொந்தப் பண் பாட்டினை மதிக்காதவர்களாகவும் அயல் பண்பாட்டினை உயர்வாகக் கருதுபவர்களாகவும் இருப்பார்கள். தன் சொந்தப் பண்பாட்டுப் பொருள்களையும், நடத்தைமுறை களையும் வெறுத்து ஒதுக்குவர். சான்றாக வெளிநாட்டு வாழ்க்கை முறைகள், உடை, கல்விமுறை, உணவுப்பழக்கங்கள் போன்றவை தன் சமூகத்தின் முறைகளைவிட உயர்ந்தது என்று எண்ணுவதைக் கூறலாம்.

Z

Zone

மண்டலம்

ஒரு மண்டலம் என்பது ஒருநகரத்தின் குறிப்பிட்ட இயற் பொருள்சார் அல்லது சமூகக் கூறுகளால் தனித்தன்மையளிக் கப்பட்ட பகுதியாகும். இவ்வாறு ஒரு நகரமானது கட்டிடங்கள் எவ்வகைப் பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளன என்பதன் படி வாணிக உற்பத்தி மற்றும் குடியிருப்பு போன்ற மண்டலங் களாகப் பிரிக்கப் படலாம். சமூகவியல்ரீதியில் வேறுபிரிக் கப்பட்ட மண்டலங்கள் வெவ்வேறு

அளவுகளிலான செல்வம் அல்லது வறுமை, சமூக வசதிகள் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும்.

Zone of Transition
இடைமாறுதலுக்குரிய மண்டலம்

இடைமாறுதலுக்குரிய மண்டலம் மைய நகரத்தைத் தொட்ட அருகாமையிலுள்ள பகுதியாகும். மைய நகரத்தின் பொருளாதார செயல்பாடுகள் விரிவடையும் போது இடைமாறுதலுக்குரிய மண்டலத்தில் நிலப்பகுதிகள் அலுவலகங்கள், பெரியகடைகள் அல்லது விடுதிகளாக வளர்ச்சியடைகின்றன. இதன்விளைவாக இடைமாறுதலுக்குரிய மண்டலம் ஒரு வலுவற்ற பகுதியாகிறது. நில உரிமையாளர்கள் நிலத்தை அதிக லாபத்திற்கு விற்க காத்துக்கொண்டிருப்பார்கள்.

Zoning
மண்டலமாக்கம்

பொது பண்புக்குழுவின் மரபுக் கூறுகளைக் கட்டுப்படுத்துவதற்கான நிலம் மற்றும் கட்டிடங்களின் பயன்பாட்டின் பொது ஒழுங்குபடுத்துதலைக் குறிக்கிறது. நகரம் மற்றும் பெரும் நகரப்பகுதிகள் பொதுநலம் கருதி தனிச் சிறப்பான பயன்பாட்டிற்காக வரையறுக்கப்படுகின்றது. இதனால் குடியிருப்புப் பகுதியில் ஆலைகள் பரப்பப்படுவதில்லை. மண்டலமாக்கம் பொது பண்புக் குழு குறித்த திட்டமிடலில் ஒரு ஆக்கக்கூறாக உள்ளது.

தமிழ்க் கலைச்சொல் அகரவரிசை

தமிழ்க் கலைச்சொல் அகரவரிசை

அ

அக உணர்வுநிலை	-	Subjectivity
அக உணர்வு முறைமை	-	Subjective Method
அகநிலைக் கருத்து இயக்கம்	-	Nativistic Movement
அகமணம்	-	Endogamy
அகலுலகக் குடிமகார்	-	Cosmopolitan
அகவய நோக்கு	-	Emic Viewpoint
அகிம்சை	-	Ahimsa
அங்கீகாரம்	-	Recognition
அட்டவணைப்படுத்துதல்	-	Tabulation
அடங்கிய உள்ளுணர்ச்சி	-	Oedipus Complex
அடிக்கோள்	-	Postulate
அடிப்படை உரிமைகள்	-	Fundamental Rights
அடிப்படைச் சமுதாயம்	-	Gemeinschaft
அடிப்படைச் சமூக நிறுவனம்	-	Basic Social Institution
அடிப்படை மெய்மை	-	Principle
அடிமைமுறை	-	Slavery
அடுக்கமைப்பு	-	Stratification
அடுக்கமைவாக்குங்கூறு	-	Stratifying Factor
அடுக்கமைவியல் விதி	-	Law of Stratification
அடைபட்ட சமுதாயம்	-	Closed Society
அடைபட்ட குழு	-	Closed Group
அடைபட்ட வர்க்கமுறை	-	Closed-class System
அணிமைத்தோற்றம்	-	Perspective
அணுமைக் கோட்பாடு	-	Atomism
அணுவாக்குதல்	-	Atomization
அணுவாகுதல்	-	Individuation
அத்தையகக் குடும்பம்	-	Amitalocal Family
அத்தையுறவு	-	Amitate
அதிகார அமைப்பர்	-	Bureaucrat
அதிகார அமைப்பு	-	Power Structure
அதிகாரச் செல்வாக்காளர்	-	Power Elite
அதிகாரநிலை	-	Power
அதிகாரபூர்வப் புள்ளிவிவரங்கள்	-	Official Statistics
அதிகாரமின்மை	-	Powerlessness

அந்தஸ்து உடன்பாடு	-	Status Consistency
அந்தஸ்து ஒப்பிசைவின்மை	-	Status Discrepancy
அந்தஸ்து ஒழுங்கு	-	Status System
அந்தஸ்து குழு	-	Status Group
அந்தஸ்துக் குறியீடு	-	Status Symbol
அந்தஸ்துத் தனியாள் நிலை	-	Status Personality
அந்தஸ்துத் தொகுதி	-	Status-Set
அந்தஸ்துத் தொடர்வரிசை	-	Status Sequence
அந்தஸ்து தொடர்புக் கருதுகோள்	-	Status Continuam Hypothesis
அந்தஸ்து நிலை	-	Status
அந்தஸ்து நிலை முரண்பாடு	-	Status Inconsistency
அமைப்பாண்மைக் கோட்பாடு	-	Organization Theory
அமைப்பியல் கட்டளை	-	Structural Imperative
அமைப்பியல் மொழியியல்	-	Structural Linguistics
அமைப்பியற் கொள்கை	-	Structuralism
அமைப்பு உட்பிரிவு	-	Substructure
அமைப்புச்சார்பற்ற குழு	-	Open Group
அமைப்புச்சார்பற்ற சமுதாயம்	-	Open Society
அமைப்புச்சார்பற்ற வகுப்பு ஒழுங்கு	-	Open -Class System
அமைப்புச்சார்பற்ற வகுப்புக் கருத்தியல்	-	Open-Class Idedology
அமைப்புச் சார்பற்ற விடை வினா	-	Open - Ended Question
அமைப்பு-செயற்பாட்டியலாய்வு	-	Structural-functional Analysis
அமைப்புமுறை	-	Structure
அமைப்புமுறையாக்கம்	-	Institutionalization
அமைப்பொழுங்கு	-	Configuration
அயல்வேற்றுவர் தனிமைப்பாட்டுஇனம்	-	Alien
அயலின உயர்வுவாதம்	-	Xenocentrism
அயலீடுபாட்டாளர்	-	Extrovert
அயன்மைத் தனிமைப்பாடு	-	Alienation
அயன்மை மக்கள் திரள் நோக்கு	-	Allienated Mass View
அரசாண்மைப் பகுதிப்பரப்பு	-	Administrative Region
அரசியல்கோட்பாடு	-	Political Theory
அரசியல்சார் சமூகவியல்	-	Political Sociology
அரசியல்சார் நிறுவனம்	-	Political Institution
அரசியல்சார் பங்கேற்பு	-	Political Participation
அரசு	-	Government

அரசு அமைப்பாண்மை - State organization
அரவமற்ற வாணிகம் - Silent Trade
அழுத்த-இழுவை கருத்துரு - Stress-strain Concept
அழையாநுழைவு மணம் - Marriage by Intrusion
அளவாய்வு - survey
அளவீடு உத்தி - Scale
அறமுறைக் கட்டுப்பாடு - Moral Restraint
அறவியல் - Ethics
அறிதல்சார் உடன்பாடு - Cognitive Consonance
அறிதல்சார் கூறுகள் - Cognitive Components
அறியும் ஆற்றல் - Cognition
அறிவார்ந்த விளக்கம் - Rationalization
அறிவியல் மனப்பான்மை - Scientific Attitude
அறிவியல் முறை - Scientific Method
அறிவு - Cognition
அறிவுசார் நடக்கைமுறை - Rational Behaviour
அறிவுத்திறம் - Intelligence
அறிவுத்திறம் வாய்ந்தோர் - Intellectuals
அறிவுத்திறன் குழாம் - Intelligentsia
அறிவுத்திறன் சோதனை - Intelligence Test
அறிவுப்பரப்புச் சமூகவியல் - Sociology of knowledge
அறிவுரை பகர்தல் - Counselling
அனுபவச் செய்திக்கூறு - Fact

ஆ

ஆக்கநல அரசு - Welfare state
ஆக்கநிலைக் காலம் - Constructive Period
ஆக்கமுறை இனமேம்பாட்டியல் - Positive Eugenics
ஆட்சி அமைப்புமுறை - Polity
ஆண்டுச்சடங்கு - Calenderical Rite
ஆண் பேசுநர் - Male Ego
ஆண்வழி உறவு - Agnation
ஆணையிடு விதி - Enacted Law
ஆணையுரிமை - Authority
ஆதிக்கப் பண்பாடு - Dominent Culture
ஆய்வளவீட்டு விளக்கம் - Operational Definition
ஆய்வுக்கான குழு - Experimental Group
ஆய்வுத்திட்டம் - Research Project
ஆய்வுத்திட்ட வரைவு - Research Design
ஆய்வுப்பொருள் - Proposition
ஆய்வுமுறையியல் - Methodology

ஆய்வு வினாக்கள்	-	Research Questions
ஆயத்தமாக்குதல்	-	Mobilization
ஆயர் பண்பாடு	-	Pastoral Culture
ஆர்வக்குழு	-	Interest Group
ஆர்வச்சிறு குழு	-	Clique
ஆர்வவெறி	-	Craze
ஆராய்ச்சி	-	Research
ஆரிய செமிட்டிக்-உரேலிய வகை	-	Aryan-semetic-Uralian System
ஆவணச்செய்தி ஆதாரம்	-	Documentary Sources of Information
ஆவணம்	-	Document
ஆவியுலகக் கோட்பாடு	-	Animism
ஆவியுலக நம்பிக்கை	-	Spiritism
ஆழ்ந்து நோக்குதல்	-	Observation
ஆழ்நிலை நேர்காணல்	-	Depth Interview
ஆளும் வகுப்பு	-	Ruling Class
ஆளுமைக்குணம்	-	Ego
ஆளுமை மறுவுருவாக்கம்	-	Re-Socialization
ஆறு அடிப்படை நலன்கள்	-	Six Fundamental Interests
ஆறுதல் மனப்பணி	-	Buttress Function
ஆன்மவாத மதக் கோட்பாடு	-	Animistic Theory of Religion
ஆன்மா மணம்	-	Ghost Marriage

இ

இசைவறிய முறை	-	Adaptation
இசைவின்மை	-	Nonconformity
இசைவு	-	Sanction
இசைவுபடுத்துதல்	-	Accommodation
இடங்குறித்தமைத்தல்	-	Situs
இடப்பெயர்வு	-	Migration
இடம்பெயர் வேளாண்மை	-	Shifting Cultivation
இடைத்தொடர்பு செயல்வாதம்	-	Interactionism
இடைத்தொடர்பு நிலை	-	Interaction
இடைத்தொடர்பு நிலைவாதம்	-	Interactionism
இடைநின்றிணைத்தல்	-	Mediation
இடர்நீக்கு முறைமை	-	Negotiated Order
இடைமாறுதலுக்குரிய மண்டலம்	-	Zone of Transition
இணக்கப்படுத்தல்	-	Conciliation
இணைச்சகோதரர்	-	Parallel Cousins
இணை போகு நிலை	-	Parallelism
இணைமரபு	-	Parallel Descent

இணையுற்ற கருத்துப்படிவங்கள் - Paired Concepts
இணைவாழ்வுதிறன் - Symbiosis
இயல் சோதனை - Aptitude Test
இயல்திறம் - Aptitude
இயல்நிகழ்வுசார் சமூகவியல் - Phenomenological Sociology
இயல்புணர்வுகள் - Instincts
இயல்பு பிறழ்ந்த நடக்கை - Abnormal Behaviour
இயற்கைப் பகுதி - Natural Area
இயற்கைத்தேர்வு - Natural Selection
இயற்கையின் விரிசை - Scala Naturae
இயற்பண்பு - Attribute
இயற்பொருள்வாதம் - Materialism
இரகசியச் சமுதாயம் - Secret Society
இரட்டை நகரங்கள் - Twin Cities
இரண்டாம் நிலை ஆதாரம் - Secondary Source
இரண்டாம் நிலை உறவினர் - Secondary Kin
இரண்டாம் நிலை உறவுகள் - Secondary Relations
இரண்டாம் நிலைக் குழு - Secondary Group
இரண்டாம் நிலைத் தொழில் - Secondary Occupation
இரத்த உறவினரக உறைவிடம் - Consanguineolocal
இரத்த உறவு - Consanguinity
இரத்த உறவுக் குடும்பம் - Consanguine Family
இரத்த உறவுக்குழு - Consanguineal Kin Group
இரத்தக்கலப்பு - Consanguine
இரத்தச் சண்டை - Blood Feud
இரத்தவியல் - Serology
இராணுவ நிறுவனம் - Military Institution
இருதார மணம் - Bi-gamy
இருப்பிடம் - Habitat
இருபிளவமைப்பு - Moiety
இருவழி கணக்கிடல் - Bilateral Reckoning
இருவழிப் பெயரிடல் - Binominal Nomenclature
இருவழி மரபு - Bilateral Descent
இருவழி மணவழிச் சகோதரமணம் - Bilateral Cross-cousin Marriage
இரோக்குவாய்ஸ் முறை - Iroquois System
இலக்கியச் சமூகவியல் - Sociology of Literature
இலக்கு - Goal
இளங்குற்ற முறை மன்றம் - Juvenile Court
இளம் குற்றவாளிகள் - Juvenile Delinquents
இளையோர்க் கூடங்கள் - Dormitories

இறக்கும் இயல்பு - Mortality
இன்பப் பொழுதுபோக்கு - Recreation
இன அழிப்பு - Annihilation
இன உயர்வுக்கொள்கை - Racism
இன உறவுகள் - Race Relations
இனக்கலப்பு - Miscegenation
இனக்குழு - Ethnic Group
இனக்குழு அறிவியல் - Ethno Science
இனக்குழு ஒப்பாய்வியல் - Ethonology
இனக்குழுத் தாவரவியல் - Ethnobotany
இனக்குழு வரலாற்றுமுறை - Ethno Historic Method
இனக்குழு வரலாறு - Ethnohistory
இனக்குழுவியல் - Ethnography
இனக்குறிப்பொதுக்கம் - Specificity
இனச் சிறுபான்மை - Racial Minority
இனத்திரள் - Horde
இனம் - Race
இனமேம்பாட்டியல் - Eugenics
இனவியல் - Raciology
இனவிழிப்புணர்வு - Race Awareness
இனவேறுபாட்டுணர்வு - Apartheid

ஈ

ஈட்டிய பங்கு - Achieved Role
ஈட்டு சாதனைத் தகுதி - Achieved Status
ஈட்டுச் சாதனைத் தூண்டுணர்ச்சி - Achievedment motivation
ஈடிணைத்தல் - Matching
ஈரிட உறைவிடம் - Ambilocal/Bilocal
ஈரியல் மரபு - Ambilineal

உ

உகந்தநிலைப் பண்பாடு - Ideal Culture
உட்குழு - In-group
உட்பிளவாதரவு - Schismogenesis
உடல் உழைப்பாளி - Unskilled Manual Worker
உடல்சார் தேவை - Physiological Need
உடல் சார்பில்லா உடைமை - Incorporeal Property
உடல்சார் மானிடவியல் - Physical Anthropology
உடல்நெருக்க குடும்பத்தோற்றக் கோட்பாடு - Body Intimacy Theory of Family Origin
உடற்கூற்றியல் - Anatomy
உடற்கூறுசார் கருதுகோள் - Physiological Hypothesis

உடன்பாட்டு வினை	-	Affirmative Action
உடன்பிறந்தவளக உறைவிடம்	-	Fratrilocal Family
உடன்பிறந்தாள் மகனகக் குடும்பம்	-	Nepotilocal Family
உடன்பிறந்தாளகக் குடும்பம்	-	Sororilocal Family
உடன்பிறப்பு	-	Sibling
உடன்போக்கு மணம்	-	Marriage by Elopement
உடனிணக்க மணம்	-	Consensual Marriage
உடைமை	-	Property
உடைமைவர்க்கம்	-	Burgeoisie
உண்மைசார் வகை	-	Realistic Category
உண்மைப் பண்பாடு	-	Genuine Culture
உணர்ச்சிக்கனிவு	-	Sentiment
உணர்ச்சித் தன்மை	-	Affectivity
உணர்ச்சித் தூய்மையாக்கம்	-	Catharsis
உணர்ச்சித்தோழன்	-	Soulmate
உணர்வுக் கருத்தளவை	-	Inference
உணவியல்சார் மானிடவியல்	-	Nutritional Anthropology
உய்த்துணர்தல்	-	Deduction
உய்த்துணரும் முறை	-	Inductive Method
உயர் உயிரத்துவம்	-	Super Organic
உயர் கீழ்நிலை வகுப்பு	-	Upper-lower Class
உயர் குடியாட்சி	-	Aristocracy
உயர்சாதி மணம்	-	Hypergamy
உயர்ந்தோர் குழாம்	-	Elite
உயர் நடுத்தர வகுப்பு	-	Upper Middle Class
உயர் பாலூட்டி	-	Primate
உயர்பாலூட்டியியல்	-	Primatology
உயர்மதிப்பீட்டு முரண்பாடு	-	Value Conflict
உயர் மதிப்பீடு	-	Value
உயர் மேல்நிலை வகுப்பு	-	Upper-upper Class
உயர்வகுப்பு	-	Upper Class
உயர்வர்க்கம்	-	Upper Class
உயிர்சார் திரள் ஆற்றல்	-	Biomass
உயிர்நிலைப்புள்ளித்தொகுப்பு	-	Vital Statistics
உயிர்ப்பொருளியல்புவாதம்	-	Organicism
உயிரியக்க ஒப்புமை	-	Organic Analogy
உயிரிய சமூகவியல்	-	Biological Sociology
உயிரியம்	-	Animatism
உயிரியல் நியதிவாத பண்பாட்டு	-	Biological Determinist

மாற்றக் கொள்கை		view of culture change
உயிரிலிப் பிறப்புக் கொள்கை	-	Theory of Abiogenesis
உரிமை	-	Right
உரிமையில்லா உயர்நிலை மணம்	-	Morganatic Marriage
உருவாக்கக் குடும்பம்	-	Family of Procreation
உருவாக்க காலம்	-	Formulatory Period
உருவாக்கச் சொற்கள்	-	Derivative Terms
உலகச் சீரழிவு	-	Decay of the world
உலகநோக்கு	-	world view
உலகப்படிமலர்ச்சிக்கொள்கை	-	Universal Evolutionism
உலகப்பொதுத்தன்மை	-	Universality
உலக மதிப்பீடுகள்	-	Universal Values
உலோகாயத வாதம்	-	Agnosticism
உலோபக்கொள்கை	-	Parsimony Principle
உழவர்கள்	-	Peasants
உழவர் பண்புச் சமுதாயக் குழு	-	Peasant Community
உழைப்பாட்சி வகுப்பு	-	Labour Aristocracy
உள்நாட்டு புலப்பெயர்வு	-	Internal Migration
உள்விளைவுச் செயல்	-	Latent Function
உள்ளார்ந்த உணர்வு	-	Innate Urge
உள்ளார்ந்த கருத்துருவாக்கம்	-	Schemata
உள்ளார்ந்த நடக்கைமுறை	-	Innate Behaviour
உள்ளார்ந்த பண்பாடு	-	Implicit Culture
உளவியல்சார் சமூகவியல்	-	Psychological Sociology
உளவியல்சார் மானிடவியல்	-	Psychological Anthropology
உள விளக்கம்	-	Psychoanalysis
உற்பத்தி	-	Production
உற்பத்திமுறை	-	Mode of Production
உறவமைதிக்குழு	-	Congeniality Group
உறவின் முனை	-	Polarity
உறவினர்	-	Kin
உறவுக்குழு	-	Kin Group
உறவுக்கூட்டம்	-	Kindred
உறவுமுறை	-	Kinship
உறவுமுறை அமைப்பு	-	Kinship System
உறவுமுறை நடக்கை	-	Kinship Behaviour
உறவுமுறையியல்	-	Kinology
உறவுவகைகள்	-	Kin Categories
உறவு வலையமைவு	-	Network of Relations
உறவெல்லை	-	Levels of Kinship Relation

உறுதிமொழி கூறுதல் - Oath
உறுநுணுக்க சமூகவியல் - Meta Sociology

எ

எச்ச உறுப்பு - Vestigial Organ
எண்ணக்குலைவு - Frustration
எண்ணப்படிவிலான பண்பாடு - Ideational Culture
எண்முறை ஆய்வு - Quantitative Analysis
எண்முறைச் செய்திக்கூறுகள் - Quantitative Data
எதிர்கால ஆய்வு - Prospective Study
எதிர் பண்பாட்டுப்பேறு - Contra-Acculturation
எதிர்பண்பாடு - Counter Culture
எதிர்மறை இனமேம்பாட்டியல் - Negative Eugenics
எதிரீடு - Opposition
எலும்பளவையியல் - Osteometry
எழுத்தறிவிற்கு முந்தைய சமுதாயம் - Preliterate Society
எழுத்தறிவின்மை - Nonliterate
எழுத்துச் சான்றாவணம் - Written Document
எஸ்கிமோ முறை - Eskimo System

ஏ

ஏமாற்ற உணர்வு - Relative Deprivation
ஏழ்மை - Poverty
ஏற்பு - Recognition

ஒ

ஒத்திசைவு - Rapport
ஒத்துப்போகுதல் - Adjustment
ஒத்துழையாமை - Civil Disobedience
ஒத்துணர்வு உட்புறக் காட்சி - Sympathetic Introspection
ஒதுக்கநிலை - Isolation
ஒதுங்குநிலை - Retreatism
ஒப்பந்தச் சமுதாயம் - Contract Society
ஒப்பந்தம் - Contract
ஒப்பான அந்தஸ்துநிலை - Status Congruence
ஒப்பியல் உடற்கூற்றியல் - Comparative Anatomy
ஒப்பீட்டு ஆய்வு முறை - Comparative Method
ஒப்புதல் - Sanction
ஒப்புமை - Propinquity
ஒமகா முறை - Omaha System
ஒரு கடவுள் வாதம் - Monotheism
ஒருகுடி இனமலர்ச்சி கருதுகோள் - Monogenetic Hypothesis
ஒருதிறமாக்குதல் - Regimentation

ஒருதுணை மணக்குடும்பம் - Monogamian Family
ஒருதுணை மணம் - Monogamy
ஒருபடித்தான சமுதாயம் - Homogeneous Society
ஒருபடித்தான மணம் - Homogamy
ஒரு பொருண்மை வாதம் - Monism
ஒருமித்த உணர்வு - Consciousness of Kind
ஒருமுகப்படுத்தப்பட்ட காலம் - Convergent Period
ஒருமையாக்கம் - Integration
ஒருவழித் தோற்றக் கொள்கை - Momogenesis
ஒருவழிப் படிமலர்ச்சி - Unilineal Evolution
ஒருவழிப் போதனை - Indoctrination
ஒருவழி மரபு - Unilineal Descent
ஒருவழி மரபுக்குழு - Unilineal Descent Group
ஒருரே பிணைப்புக்குழு - Unibonded Group
ஒழுக்கவிதிகள் - Mores
ஒழுங்காசாரம் - Etiquette
ஒழுங்குபடுத்து விதி - Regulatory Law
ஒழுங்குபண்ணப்பட்ட மணம் - Arranged Marriage
ஒன்றாக்கம் - Amalgamation
ஒன்றிணைக்கும் அறிவியல் - Coordinating Science
ஒன்றியம் - Union
ஒன்றுபடுதல் - Identification

ஓ

ஓய்வுநேரம் - Leisure
ஓர்நிலை நட்புக்குழு - Peer Group
ஓர் மனமற்ற போக்கு - Ambivalence
ஓரக்குழு - Marginal Group
ஓரப்பகுதி - Marginal Area
ஓரப் பண்பாடு - Marginal Culture
ஓர மனிதன் - Marginal Man
ஓரிட உறைவிடம் - Unilocal Residence
ஓரினக்குழு - Ethclass
ஓரினத்திரள் - Aggregate
ஓரினமாதல் - Assimilation

க

கட்டமைந்த ஒப்பீடு - Controlled Comparison
கட்டளைப்பாங்கற்ற நேர்காணல் - Nondirective Interview
கட்டற்ற விருப்பம் - Free will
கட்டாயப்படுத்துதல் - Coercion
கட்டிட அடர்த்தி - Building Density

கட்டுப்பட்ட செய்திமுறை	-	Restricted Code
கட்டுப்பாட்டுக் குழு	-	Control Group
கட்டுப்பாட்டுக்குழு முறை	-	Control Group Method
கட்டுப்பாட்டுக் கூட்டு ஒப்பந்தம்	-	Restrictive Covenant
கட்டுப்பாட்டுப் பண்பாடு	-	Control Culture
கடத்தல் மணம்	-	Marriage by Capture
கடந்தகால ஆய்வு	-	Retrospective Study
கடினமாதல்	-	Ossification
கடும்நோன்பு	-	Asceticism
கடைவகுப்பினர்	-	Proletariat
கண்டபடிக் கலப்பு	-	Promiscuity
கணவனகக் குடும்பம்	-	Virilocal Family
கந்தர்வ மணம்	-	Gandarva Marriage
கருச்சுருக்கம்	-	Abstract
கருத்தியல் கோட்பாடு	-	Idealism
கருத்தியல்சார் சமுதாயம்	-	Idealistic Society
கருத்தியல்வகை	-	Idealistic Category
கருத்துப்படிவம்	-	Concept
கருத்துப்பரிமாற்ற ஆய்வு	-	Conversational Analysis
கருத்துமாற்றம்	-	Conversion
கருத்துரை	-	Opinion
கருத்துரைத்தலைவர்	-	Opinion Leader
கருதுகோள்	-	Hypothesis
கருவழக்கேடு	-	Infertility
கருவளம்	-	Fertility
கருவளவிகிதம்	-	Fertility Ratio
கருவளவீதம்	-	Fertility Rate
கல்வி	-	Education
கல்விசார் நிறுவனம்	-	Educational Institution
கல்வி சமூகவியல்	-	Sociology of Education
கலப்பினப்பிறவி	-	Mestizo
கலப்புத்திருமணம்	-	Mixed Marriage
கலப்புமணம்	-	Heterogamy
கலப்பு மணவுறவு	-	Intermarriage
கலப்புறைவிடம்	-	Heterolocal Family
கலவை அமைப்பாண்மை	-	Complex Organization
கலவைக் கருதுகோள்	-	Complex Hypothesis
கலவைச் சமுதாயம்	-	Complex Society
கலவை நிலை சமுக அமைப்பு	-	Gesellschaft
கலைச் சமூகவியல்	-	Sociology of Art

கலைத்திறன்	-	Art
கவர்ச்சிப்பாவனை	-	Dramatic Role Presentation
கள ஆய்வுமுறை	-	Field Study Method
களச்சோதனை	-	Field Experiment
கற்றல்	-	Learning
காட்டுமிராண்டி	-	Barbarian
காட்டுமிராண்டித்தன்மை	-	Heathenism
காதலாட்டம்	-	Courtship
காமக்கிழத்தியர் உறவு	-	Concubinage
காரணக்கூறு	-	Factor
காரணக்கூறுப் பகுப்பாய்வு	-	Factor Analysis
காரணமான கருதுகோள்	-	Causal Hypothesis
கால்வழி	-	Lineage
காலத்தொடர்	-	Time Series
கிராம அகமணம்	-	Village Endogamy
கிராமப் பண்புக்குழு	-	Village Community
கிராமப் புறமணம்	-	Village Exogamy
கிராமம்	-	Village
கிளைவழி உறவினர்	-	Collateral Relative
கிளைவழி பிரித்தல்முறை	-	Bifurcate Collateral System
கிளைவழி விரிந்த குடும்பம்	-	Laterally Extended Family
கிறித்தவப் பொதுப்படை வாதம்	-	Ecumenism
கிறித்தவ மரபாண்மைகள்	-	Christian Orthodoxy
கீழ்ச்சாதிமணம்	-	Hypogamy
கீழ்நிலை ஆவியுலகக் கோட்பாடு	-	Lower Animism
கீழ்வகுப்பு	-	Underclass
குடிசார்பு ஊழிய முறை	-	Jajmani System
குடித்தனம்	-	Household
குடிமரபுப்பகை	-	Feud
குடிமுதல்வராட்சி	-	Patriarchy
குடியாட்சி	-	Democracy
குடியேற்ற அரசு	-	Colonial Government
குடியேறுதல்	-	Immigration
குடிவழக்கு	-	Folkway
குடிவழிப்பட்டியல்	-	Genealogical Chart
குடும்ப உட்பிரிவு	-	Sub Family
குடும்பக் கட்டுப்பாடு	-	Family Planning
குடும்ப சமூகவியல்	-	Sociology of Family
குடும்பத் தோற்றக் கோட்பாடு	-	Theory of Family Origin
குடும்ப நிகழ்வுச்சூழல்	-	Family Cycle

குடும்ப நிறுவனம் - Family Institution
குடும்பப் பண்பாடு - Family Culture
குடும்பம் - Family
குடும்பம்சார் பணி - Domestic Labour
குருதி உறவு - Cognate
குரோ முறை - Crow System
குலக்குறி - Totem
குலக்குறிக்கம்பம் - Totem Pole
குலக்குறியம் - Totemism
குலக்கூட்டம் - Phratry
குலம் - Clan
குவிமைய நேர்காணல் - Focused Interview
குழந்தை இறப்புவீதம் - Infant Death Rate
குழந்தைப்பருவம் - Childhood
குழந்தையறிவு - Motor Intelligence
குழந்தைவளர்ப்புநிலை - Child Rearing Stage
குழாம் - Band
குழு - Group
குழு ஆற்றல் இயல் - Group Dynamics
குழு இணைவாற்றல் - Group Cohesiveness
குழு இலக்கு - Group Goal
குழு இனமறிதல் - Group Identification
குழு உட்பிரிவு - Sub Group
குழு உணர்வு - Group Feeling
குழு உறுப்பினர்நிலை - Group Membership
குழு எதிர் பார்புகள் - Group Expectations
குழு ஏற்பு - Group Acceptance
குழு ஒருமைப்பாடு - Group Integration
குழு ஒழுக்கச்சிதைவு - Group Demoralization
குழு நிலை - Group Climate
குழு மணக் குடும்பம் - Punaluan Family
குழுமணம் - Group Marriage
குழுவிடைத்தொடர்புகள் - Intergroup Relations
குற்றத்தன்மை - Guilt
குற்றவாளிப் பழங்குடியினர் - Criminal Tribe
குறி சொல் - Term of Reference
குறிப்பான இறப்புவீதம் - Specific Death Rate
குறிப்பிடத்தக்கோர் - Significant Others
குறியீட்டுப் பரிமாற்றம் - Symbolic Interaction
குறியீடு - Symbol

குறியீடுசார் மானிடவியல் - Symbolic Anthropology
குறுக்கிடு மாறி - Intervening Variable
குறுகிய நோக்கம் - Parochialism
குறைந்த மக்கள்தொகை - Under Population
கூட்டம் - Crowd
கூட்டரச அமைப்புமுறை - Federalism
கூட்டாண்மை - Collectivism
கூட்டிணைவு - Coalition
கூட்டுக்குடும்பம் - Joint Family
கூட்டுச் சொத்துரிமைக்குழு - Corporate Group
கூட்டுடமையின் இணையுரிமைச் சொத்து - Co-parcenary
கூட்டுடமையின் இணையுரிமையாளர் - Co-Parsoners
கூட்டு நடக்கைமுறை - Collective Behaviour
கூட்டுப்பிறழ் நடத்தை - Racket
கூட்டுப்பேரம் - Collective Bargaining
கூட்டுப்பொறுப்பு - Collective Responsibility
கூட்டுமணம் - Cenogamy
கூட்டுமரபணுக்கள் - Polygenes
கூட்டுரிமைக்கழக முறை - Corporatism
கூட்டுரிமைச்சொத்து - Corporate Property
கூட்டுறவு - Cooperation
கூட்டுறவுக்குழு - Guild
கூட்டொருமை - Solidarity
கூடிஇணைதல் - Incorporation
கூடிவாழும் தன்மை - Gregariousness
கூர்மதியாளர் - Genius
கேலிஉறவு - Joking Relationship
கொடை - Gift
கொள்கைக்குரல் - Slogan
கொள்கைக்குழுவினர் - Schools
கொழுந்திமணம் - Sororate
கோட்பாட்டு உருவம் - Relevant Theoritical Model
கோட்பாட்டுச் சாய்வு - Theoretic Bias
கோட்பாட்டுச் சுமையேற்றம் - Theory Laden
கோட்பாட்டு மாதிரி - Theoritical Model
உறவாய் முறை - Hawaiian System

ச

சகோதர பலகணவர் மணம்	-	Fraternal Polyandry
சகோதரரல்லா பலகணவர் மணம்	-	Non-fraternal Polyandry
சகோதரிகள் பலமனைவி மணம்	-	Sororal Polygyny
சகோதரிகளல்லா பலமனைவி மணம்	-	Non-sororal Polygyny
சங்கம்	-	Association
சட்டச் சமூகவியல்	-	Sociology of Law
சட்டப்படியான புனைவு	-	Legal Fiction
சட்டத் தொகுப்பேடு	-	Code
சட்டமீறுகைகள்	-	Delicts
சட்டவிரோத பிறப்புவிகிதம்	-	Illegitimacy Ratio
சட்டவிரோதம்	-	Illegitimacy
சடங்கு	-	Ceremony
சடங்குமுறைகள்	-	Rituals
சடங்குதலைவர்	-	Ceremonial Chief
சடங்குத்திருமணம்	-	Ritual Marriage
சடங்குமுறைசார் உறவுமுறை	-	Ritual Kinship
சடங்குவெறி	-	Ritualism
சந்தை	-	Market
சமக்கலப்பு பண்பாட்டுப்பேறு	-	Transculturation
சமச் சமூகநிலைக்குழு	-	Horizontal Group
சமச் சமூகநிலை மாற்றம்	-	Horizontal Mobility
சமச்சீர் பரிமாற்றம்	-	Balanced Reciprocity
சமத்துவச் சமுதாயம்	-	Egalitarian Society
சமநிலைப் பணிக்குழு	-	Horizontal Work Group
சமய உணர்வுடைமை	-	Religiosity
சமயச் சமூகவியல்	-	Sociology of Religion
சமய நிறுவனம்	-	Religious Institution
சமயம்	-	Religion
சமரசப்பண்பு	-	Syncretism
சமுதாய ஆச்சாரமுறை	-	Etiquette
சமுதாய உயிரியல்	-	Sociobiology
சமுதாய மக்கள்	-	Public
சமுதாயத் தோற்ற ஒப்பந்தக் கோட்பாடு	-	Contract Theory of Societal Origin
சமூக அடுக்கமைப்பு	-	Social Stratification
சமூக அந்தஸ்து	-	Social Status
சமூக அந்தஸ்து நிலைமாற்றம்	-	Vertical Social Mobility
சமூக அமைப்பாண்மை	-	Social Organisation

சமூக அமைப்பு	-	Social Structure
சமூக அளவாய்வு	-	Social Survey
சமூக அறிவியல்	-	Social Sciences
சமூக ஆய்வு	-	Social Research
சமூக இடப்பெயர்ச்சி விதி	-	Law of Social Migration
சமூக இயக்கம்	-	Social Movement
சமூக இயக்க விதி	-	Law of Social Motion
சமூக இயக்காற்றல்	-	Social Dynamics
சமூக உடல்நலம்	-	Social Hygiene
சமூக உடன்படிக்கை	-	Social Contract
சமூக உயிர்மலர்ச்சிக் கோட்பாடு	-	Social Darwinism
சமூக உளவியல்	-	Social Psychology
சமூக உறவு	-	Social Relationship
சமூக உறவு அளவீடு	-	Socio-metric
சமூக ஊக்குவித்தல்	-	Social Facilitation
சமூக எதிர்மறைநடக்கை	-	Anti Social Behaviour
சமூக ஏற்றத்தாழ்வு	-	Social Hierarchy
சமூக ஒட்டுண்ணி	-	Social Parasite
சமூக ஒப்பின்மை	-	Social Inequality
சமூக ஒருமையாக்கம்	-	Social Integration
சமூக ஒழுங்கு	-	Social Order
சமூக ஒழுங்குமுறைக்கேடு	-	Social Disorganisation
சமூகக் கட்டுப்பாடு	-	Social Control
சமூகக் கடப்பாடு	-	Social Obligation
சமூகக் கடினமாக்கம்	-	Social Ossification
சமூகக் காரணி	-	Social Cause
சமூகக்குழு	-	Socio-group
சமூகக் குழுப்பணி	-	Social Group Work
சமூகக் கூம்புவடிவம்	-	Social Pyramid
சமூகச் சிக்கல்	-	Social Problem
சமூகச்சிதைவு	-	Social Disintegration
சமூகச்சூழல்	-	Social Milieu
சமூகச்செயல்	-	Social Action
சமூகச் செயல்விளைவு	-	Social Interaction
சமூகச் சோதனை	-	Social Experiment
சமூகத் தத்துவம்	-	Social Philosophy
சமூகத் தந்தை	-	Social Father-Pater
சமூகத் தழுவல்	-	Social Adaptation
சமூகத்தன்மை	-	Sociability
சமூகத்திரள்	-	Social Collective

சமூகத்தேவை	-	Social Need
சமூகத் தொற்று	-	Social Contagion
சமூகநடக்கை	-	Social Behaviour
சமூக நடைமுறை	-	Social Process
சமூக நற்செய்தி	-	Social Gospel
சமூக நிலைபெயர்வு	-	Social Mobility
சமூக நிலையமைவியல்	-	Social Statics
சமூக நிருவாகம்	-	Social Administration
சமூக நிறுவனம்	-	Social Institution
சமூக நெளிவரை	-	Sociogram
சமூக நெறிமுறை	-	Social Norm
சமூக நேர்வு	-	Social
சமூகப்படிநிலை	-	Social Hierarchy
சமூகப் படிமலர்ச்சி	-	Social Evolution
சமூகப்பணி	-	Social Work
சமூகப்பிரிவு	-	Social Class
சமூகப்புரட்சி	-	Social Revolution
சமூகப்புள்ளியியல்	-	Social Statistics
சமூகப்பொருள்	-	Social Object
சமூகப் பொருளாரதார அந்தஸ்து	-	Socio-Economic Status
சமூகப் பொறியியல்	-	Social Engineering
சமூகம்	-	Society
சமூக மறுசீரமைப்பு	-	Social Reorganization
சமூக மாறுதல்	-	Social Change
சமூக மானிடவியல்	-	Social Anthropology
சமூக முறைமை	-	Social System
சமூக மொழியியல்	-	Sociolinguistics
சமூக வகையினம்	-	Social Category
சமூக வடிவமைப்பியல்	-	Social Morphology
சமூகவயமாக்கம்	-	Socialization
சமூகவயமாகாக் குழந்தைகள்	-	Feral Children
சமூகவியல்	-	Sociology
சமூகவியல் கருத்துரு	-	Sociological Imagination
சமூகவியல் நடைமுறை	-	Sociological Practice
சமூகவியல் நாவல்	-	Sociological Noval
சமூகவியல் நியதிவாதம்	-	Sociological Determinism
சமூகவியல் நோக்கு	-	Sociological Perspective
சமூகவியல் நோக்குணர்வு	-	Sociological Consiousness
சமூகவியல் மெய்மை	-	Sociological Fact
சமூகவிதிமுறை	-	Communal Norms

சமூக வுடைமை	-	Socialism
சமூக வேறுபாட்டுணர்வு	-	Social Distance
சமூக வேறுபாடு	-	Social Differentiation
சர்வாதிபத்தியம்	-	Totalitarianism
சாதி	-	Caste
சாதிச் சமுதாயம்	-	Communal Society
சார்பற்ற மாறிகள்	-	Independent Variables
சார்புப் பழக்க அடிமையாதல்	-	Addiction
சார்புடைய மாறிகள்	-	Dependent Variables
சிக்கனக்கொள்கை	-	Parsimoney Principle
சிசுக் கொலை	-	Infanticide
சிதறிப்பரவல்	-	Diaspora
சிதைந்த குடும்பம்	-	Broken Family
சிதைவுற்ற மொழிவழக்கு	-	Pidgin
சில்லறை வாணிகப்பகுதி	-	Retail Trade Area
சிலவராட்சி	-	Oligarchy
சிற்றுயிர் சமுதாயம்	-	Insect Society
சிற்றூர்	-	Hamlet
சிறப்புப் படைப்புக்கொள்கை	-	Theory of Special Creation
சிறப்புமொழி	-	Jargon
சிறப்புரிமை	-	Privilege
சிறுபான்மை	-	Minority
சிறுபான்மைக்குழு	-	Minority Group
சுய கட்டுப்பாட்டுணர்வு	-	Super Ego
சுயக் கட்டுப்பாடு	-	Self-control
சுயநலக்கும்பல்	-	Vested Interest
சுயமதிப்பு	-	Self-esteem
சுயமதிப்புருவம்	-	Self Image
சுருக்கிப் பிரித்தெடுத்தல்	-	Abstraction
சுழல் இயக்கம்	-	Cyclical Movement
சுற்றுச்சூழல்வாதம்	-	Environmentalism
சுற்றுவட்டாரம்	-	Neighbourhood
சூழ்விளைவு	-	Ambience
சூடானியமுறை	-	Sudanese System
சூனியக்காரி	-	Witch
செய்தி சேகரிப்பாளர்	-	Investigator
செயல்	-	Action
செயல் கோட்பாடு	-	Action Theory
செயல் தனி பகுதியாக்கம்	-	Compartmentalisatiou
செயல்பாட்டாய்வு	-	Action Research

செயல்பாட்டுக்கருதுகோள்	-	Working Hypothesis
செயலறிவு	-	Empirical
செயலறிவுச் சோதனை	-	Empirical Test
செயலறிவு முறை	-	Empirical Method
செயலூக்கம்	-	Drive
செயற்படுமுறை	-	Procedure
செயற்பாட்டியல் கொள்கை	-	Functionalism
செயற்பாட்டு உறவு	-	Functional Relationship
செயற்பாட்டு ஒருமையாக்கம்	-	Functional Integration
செயற்பாட்டுக்குழு	-	Functional Group
செயற்பாட்டுச் சீர்குலைவு	-	Functional Disorder
செயற்பாட்டுத் தேவைக்கூறு	-	Functional Requisits
செயற்பாட்டுப் பண்புக்குழு	-	Functional Community
செல்வாக்காண்மை	-	Influence
செல்வாக்குக்குழு	-	Pressure Group
செல்வாக்கு மதக்குழு	-	Ecclesla
செல்வாக்குமிக்கோர்	-	Influentials
செறிவுநீக்குதல்	-	Deconcentration
சேதச் செயல் ஆய்வு	-	Disaster Studies
சேய்வரு பெயர்மை	-	Teknonymy
சேரி	-	Slum
சேவைமையம்	-	Service Center
சைகை	-	Gesture
சொத்து	-	Property
சோதனைக்குட்படுதல்	-	Ordeal
ஜீவனாம்சம்	-	Alimony

த

தகவலாளி	-	Respondent
தகாப்புணர்ச்சி	-	Incest
தகாப்புணர்ச்சித் தடைக்கட்டு	-	Incest Taboo
தகுதிக்கேற்ற அந்தஸ்து	-	Meritocracy
தகுதிகாட்டுச் சடங்கு	-	Potlatch
தகுதிகாண்மணம்	-	Probationary Marriage
தகுதிப்பெயர்ச்சிச் சடங்கு	-	Rites of Passage
தகுதியன பிழைத்தல்	-	Survival of the Fittest
தட்பவெப்ப நியதிவாதம்	-	Climatic Determinism
தண்டனை	-	Punishment
தந்தை ஆதிக்கக் குடும்பம்	-	Patriarchal Family
தந்தை இருப்பிடக் குடித்தனம்	-	Patrilocal
தந்தையகக் குடும்பம்	-	Partilocal Family

தந்தைவழி ஆதிக்கக் குடும்பம்	-	Partipotestal Family
தந்தைவழிக் குடும்பம்	-	Patrilineal Family
தந்தைவழிக் கொள்கை	-	Patrimonialism
தந்தைவழிச் சொத்துரிமை	-	Patrilineal Inheritence
தந்தைவழி	-	Patrilineal
தந்தைவழிமணவழிச் சகோதர மணம்	-	Patrilateral Cross Cousin Marriage
தந்தைவழி மரபு	-	Patrilineal Descent
தந்தைவழி விரிந்த குடும்பம்	-	Patrilineal Extended Family
தர அளவுபடுத்தல்	-	Coding
தரநிலை அந்தஸ்து	-	Rank Status
தரநிலைச் சமுதாயங்கள்	-	Rank Societies
தரநிலை முறை	-	Rank System
தரப்படுத்தல்	-	Standardization
தரவுகள்	-	Data
தலைக்கடவுள் கோட்பாடு	-	Henotheism
தலைநகர்ப் பகுதி	-	Metropolitan Area
தலைநகரப் பண்புக்குழு	-	Metropolitan Community
தலைமுறை	-	Generation
தலைமுறை முறை	-	Generational System
தலைமுறையிடைத் திருமணம்	-	Intergenerational Marriage
தலைமுறையிடை நிலைபெயர்வு	-	Inter-generational Mobility
தலைமை	-	Leadership
தலைமைநிலை	-	Hegemony
தலைமையுரிமை அமைப்பு	-	Chiefdom
தலையுரிமையற்றமை	-	Acephalous
தலைவர்	-	Leader
தலைவேட்டை	-	Head Hunting
தவிர்ப்பு	-	Avoidance
தவிர்ப்புச் சடங்குகள்	-	Avoidance Rituals
தவிர்ப்புநிலை உறவு	-	Avoidence Relationship
தள்ளு-இழு இடப்பெயர்வு கருதுகோள்	-	Push-pull Migration Hypothesis
தற்குறிப்பேற்றம்	-	Personification
தற்கொலை	-	Suicide
தற்புனைவுஎண்ணம்	-	Autistic Thinking
தன்மய ஒழுங்குமுறைக் கேடு	-	Personal Disorganization
தன்மானம்	-	Prestige
தன்முனைப்பாட்சி	-	Autocracy
தன்முனைப்பு	-	Ego

தன்முனைப்பு ஆளுமை	-	Egocentric
தன்முனைப்புப் போக்கு	-	Egoism
தன்முனைப்பு வழியமையும் குழு	-	Ego-focused Group
தன்மீறல்	-	Individual Deviant
தன்னறிவு	-	Self-consciousness
தன்னார்வக்குழு	-	Voluntary Group
தன்னார்வச் செயன்முறைக் கொள்கை	-	Voluntarism
தன்னார்வத் தோழமை	-	Voluntary Association
தன்னியல்பற்ற பண்பாடு	-	Spurious Culture
தன்னின உண்ணுந்தன்மை	-	Cannibalism
தன்னின உயர்வுக்கொள்கை	-	Ethnocentrism
தன்னுரிமை	-	Autonomy
தன்னொறுப்பு	-	Asceticism
தனக்கில்லா உணர்வு	-	Absolute Deprivation
தனி உயிர் வரலாறு	-	Ontogeny
தனி உரிமை	-	Monopoly
தனிக்குடும்பம்	-	Nuclear Family
தனிக்கும்பு	-	Gang
தனிக்குழு கருதுகோள்	-	Sector Hypothesis
தனிச்சமூகம்	-	Commune
தனித்தன்மையாதல்	-	Individuation
தனித்திருந்து ஆழ்ந்துநோக்குதல்	-	Non-participant Observation
தனித்துறைப்பாடு	-	Specialization
தனித்துவ எண்ணம்	-	Identity
தனித்துவக் கலக்கம்	-	Identity confusion
தனித்துவ நெருக்கடிக்காலம்	-	Identity crisis
தனித்துவம்	-	Individualism
தனிநபர் பிரதிநிதித்துவம்	-	Individual Representation
தனிநிலை அனுபவம்	-	Unique experience
தனிப்பட்ட ஆவணம்	-	Personal Document
தனிப்பட்ட சமூகக்கற்றல்	-	Personal Social Learning
தனிப்பட்ட சொத்து	-	Personal Property
தனிப்படக் குறிக்கும் சொல்	-	Denotative term
தனிப்படுத்துதல்	-	Segregation
தனிமச் சொற்கள்	-	Elementary Terms
தனிமனித மதிப்பீடு	-	Individual Values
தனிமனிதர்	-	Person
தனிமனிதரிடை உறவுகள்	-	Interpersonal Relations
தனிமை	-	Isolation

தனியார் சான்றாவணம்	-	Private Document
தாய்ஆதிக்கக் குடும்பம்	-	Matriarchal Family
தாய்ஆதிக்கச் சமுதாயம்	-	Matriarchate
தாய்சார் இழப்புணர்வு	-	Maternal Deprivation
தாய்-தந்தையக உறைவிடம்	-	Matri-patrilocal Residence
தாய்மாமன் தலைமைக்குடும்பம்	-	Avuncupotestal Family
தாய்மாமனாட்சிக் குடும்பம்	-	Avuncupotestal Family
தாய்வழி ஆதிக்கம்	-	Matripotestal
தாய்வழிச் சொத்துரிமை	-	Matrilineal Inheritence
தாய்வழி மரபு	-	Matrilineal Descent
தாய்வழி விரிந்த குடும்பம்	-	Matrilineal Extended Family
தாயக உறைவிடம்	-	Matrilocal Residence
தாயத்து	-	Amulet
தாழ்ந்த கீழ்நிலை வகுப்பு	-	Lower-lower Class
தாழ்ந்த நடுத்தரவகுப்பு	-	Lower-middle Class
தாழ்ந்த மேல்நிலைவகுப்பு	-	Lower-upper Class
தானெய்து பங்கு	-	Achieved Role
திட்டமிட்ட நேர்காணல்	-	Structured Interview
திடீர் நிகழ்வுக் கொள்கை	-	Catastrophism
திண்ணிய சமூகவகுப்பு	-	Concrete Social Class
திணைக்குடியினர்	-	Native People
திரள் இயக்கம்	-	Mass Movement
திரள் கூர்நோக்கு	-	Mass Observation
திரள் சமுதாயம்	-	Mass Society
திரள் தகவல் தொடர்பு	-	Mass Communication
திரள் பண்பாடு	-	Mass Culture
திருட்டுத்தொழிலர்	-	Professional Thief
திருமணத்துக்கு முந்தைய நிலை	-	Formative Prenuptial Stage
திருமணம்	-	Marriage
திருமுறைக் கோட்பாடு	-	Creed
திரை	-	Purdah
திறமை	-	Ability
தீய மந்திரம்	-	Black Magic
தீயொழுக்கப் பகுதி	-	Vice Area
தீயொழுக்கம்	-	Vice
தீர்க்கதரிசி	-	Prophet
தீர்வுகட்ட காலம்	-	Critical Period
தீவிரச் சிந்தனைவாதி	-	Radical
துணைக்குழு	-	Surrogate
துணைத்தாழ்வு நிலை	-	Subordination

துரானியவகை - Turanian System
துருவமாதிரி - Polar Type
தூண்டற்பரவல் - Stimulus Diffusion
தூண்டியநேர்காணல் - Guided Interview
தூய மந்திரம் - White Magic
தூரத்து உறவு - Distant Relation
தேக்க நிலை உணர்வு - Inhibition
தேசியப் பண்பு ஆய்வுகள் - National Character Studies
தேர்வுமணம் - Marriage by Trial
தொகுதிவழி வரலாறு - Phylogeny
தொடர் ஒருதுணைமணம் - Serial Monogamy
தொடர்பின்மை - Randomness
தொடர்பு - Contact
தொடர்பு நிலைமுறை நோக்கு - Interactionist Perspective
தொடர்விளைவு ஆய்வு - Sequential Analysis
தொல்பழங்குடி - Primitive Tribe
தொல் மானிடவியல் - Palaeoanthropology
தொல்லியல் - Archaeology
தொழில் - Occupation
தொழில் அந்தஸ்து - Occupational Status
தொழில் உழைக்கும் சக்தி - Labour Force
தொழில் உழைப்பு - Labour
தொழில் உழைப்பு தகராறு - Labour Dispute
தொழில் உழைப்பு நடைமுறை - Labour Process
தொழில் உழைப்போர் இயக்கம் - Labour Movement
தொழில் ஒப்புமை - Occupational Propinquity
தொழில்சார் குழு - Occupational Group
தொழில்சார் தூரம் - Occupational Distance
தொழில்சார் படிநிலை - Occupational Hierarchy
தொழில்சார் பண்பாடு - Occupational Culture
தொழில்நிலை உறவு - Industrial Relation
தொழில்நிலைச் சமுதாயம் - Industrial Society
தொழில்நிலைச் சமூகவியல் - Industrial Sociology
தொழில்நிலைப் புரட்சி - Industrial Revolution
தொழில்நிலை முரண்பாடு - Industrial Conflict
தொழில்நுட்பம் - Technology
தொழில்நுட்பம்சார் நியதிவாதம் - Technological Determinism
தொழில்நுட்ப வழிவகைகள் - Technic Ways
தொழில்நுட்ப வேலையின்மை - Technological Unemployment
தொழில்முறைச் சமூகவியல் - Sociology of Occupations

தொழில்வாரித் தரப்பிரிவுகள்	Occupational Categories
தொழில்வாரி மக்கள்தொகை	Occupational Populations
தொழிற் கோட்பாடு	Occupational Theory
தொழிற்சங்க ஆட்சி இயக்கம்	Syndicalism
தொழிற்சங்கம்	Trade Union
தொழிற்பகுப்பு	Division of Labour
தொன்மைக் கண்ணோட்டம்	Primitivism
தொன்மைக்குடியினர்	Primitive People
தொன்மை மனிதன்	Primitive Man
தொன்மை மானிடவியலார்	Proto-anthropologist
தொன்மை மூதாதையர்	Mythical Ancestor
தோழமை	Association
தோழமைநிலை மணம்	Companionate Marriage
தோற்கூற்றியல்	Dermatoglyphics
தோன்றிய குடும்பம்	Family of Orientation

ந

நகர்ப்புறச் சமுதாயம்	Urban Society
நகர்ப்புறச் சமூகவியல்	Urban Sociology
நகர்ப்புறப் பண்புக்குழு	Urban Community
நகர அமைப்புத்திட்டம்	Town Planning
நகர உட்புறம்	Inner City
நகர சுற்றுவளையம்	Urban Ring
நகரப்புற ஓரம்	Urban Fringe
நகரம்	Town
நடக்கை	Behaviour
நடக்கைக்கொள்கை	Behaviourism
நடக்கைசார் அறிவியல்	Behavioural Science
நடக்கைப் பாங்கு	Behaviour Pattern
நடுத்தர வகுப்பு	Middle Class
நடத்தை	Conduct
நடவடிக்கை	Activity
நடைமுறை	Process
நடைமுறைப் பண்பாடு	Real Culture
நவீனமயமாக்குதல்	Modernization
நாட்டரசு	State
நாட்டினம்	Nation
நாட்டு-நகர் பண்பாக்கம்	Rurbanization
நாட்டுப்புற இடம்	Rural Place
நாட்டுப்புறச் சமுதாயம்	Folk Society
நாட்டுப்புறச் சமூகவியல்	Rural Sociology

நாட்டுப்புற. நகர்ப்புறத் தொடர்ச்சி - Rural-Urban Continuam
நாட்டுப்புறப் பண்பாடு - Folk Culture
நாட்டுப்புறப் பண்புக்குழு - Rural Community
நாட்டுப்புறவியல் - Folklore
நாடோடிகள் - Nomads
நாணய வாக்குறுதி - Parole
நாத்திகம் - Atheism
நாம் உணர்வு - We-feeling
நிகழ்ச்சி பகுப்பாய்வு - Event Analysis
நிகழாய்வு - Case study
நிர்ணய நிலை - Labelling
நிலப்பகுதிசார் சமூகவியல் - Regional Sociology
நிலப்பகுதிவாதம் - Regionalism
நிலப்பண்ணைமுறை சமுதாயம் - Feudal Society
நிலப்பரப்பு - Region
நிலப்பரப்பு சார் குழு - Territorial Group
நிலவியல்சார் நியதிவாதம் - Geographic Determinism
நிலவியல்சார் பண்புக்குழு - Geographical Community
நிலைக்குத்தான பணிசார் இயக்கம் - Vertical Occupational Movement
நிலைபெயர்வு - Mobility
நிலைமை வரையறை - Definition of the Situation
நிலையற்ற பிணைப்புக் குடும்பம் - Syndiasmian Family
நிலையான செய்திக்கூறு - Hard Information
நிலையிருப்பு மக்கள்தொகை - Stationary Population
நிறுவன ஒழுங்கு - Institutional Order
நிறுவனப் பதிலாண்மை - Institutional Agency
நிறுவனப்பாங்கம் - Institutional Pattern
நிறுவனம் - Institution
நினைவுத்திறம் - Memory
நீட்டுநோக்காய்வு - Longitudinal Study
நுண்ணிய சமூகவியல் - Micro-Sociology
நுண்ணிய செயற்பாட்டியல் - Micro-Functionalism
நெருக்கடி - Crisis
நெருக்கடிச் சடங்கு - Crisis Rite
நெறிப்படுத்தப்படாத நேர்காணல் - Unstructured Interview
நெறிபிறழ்தல் - Delinquency
நெறிபிறழ் நடத்தை குழு - Delinquent Group
நெறிமுறைகள் - Norms
நெறிமுறை தவிர்ப்பு - Norms Evasion

நெறிமுறையின்மை - Normlessness
நெறியியல் ஆய்வு - Normative Investigation
நெறியியல் ஒருமைப்பாடு - Normative-integration
நெறியியல் கூறுகள் - Normative Components
நெறியியல் பாங்கம் - Normative Pattern
நேர்காணல் - Interview
நேர்காணல் அட்டவணை - Interview Schedule
நேர்காணல் முன்மாதிரி - Interview Guide
நேர்பார்வையில்லாத உடைமை - Absentee Ownership
நேர்வழி உறவினர் - Lineal Relatives
நேர்வழி உறவுமுறைச் சொல்வழக்கு - Lineal Terminology
நேர்வழி முறை - Lineal System
நேர்வழி விரிந்த குடும்பம் - Lineally Extended Family
நேரடிச் சான்றாவணம் - Primary Document
நோய் நிகழ்வு நிலை இயல் - Epidemiology
நோய்நீக்க நேர்காணல் - Therapeutic Interview
நோய்ப்பட்டோருக்குரிய பணி - Sick Role

ப

பகுதி - Region
பங்காளி - Patrilineal
பங்கு - Role
பங்கேற்பாய்வு - Participant Observation
பசுமைச் சடங்கு - Green Funeral
பசுமைப் பகுதி நகரம் - Greenbelt Town
பட்டியல் ஆய்வு - Panel Study
பட்டியல் உத்தி - Panel Technique
படித்தரம் - Gradient
படிநிலை அமைப்பு - Hierarchy
படிமலர்ச்சி - Evolution
படுதா - Purdah
பண்டமாற்று - Barter
பண்பாட்டிடை அணுகுமுறை - Cross Cultural Approach
பண்பாட்டிடை ஆய்வுமுறை - Cross-Cultural Method
பண்பாட்டியல் - Culturology
பண்பாட்டு அடித்தளம் - Culture Base
பண்பாட்டு அதிர்ச்சி - Culture Shock
பண்பாட்டு அனுப்பீடு - Cultural Transmission
பண்பாட்டு ஆதாரம் - Culture Base
பண்பாட்டு இழப்புணர்வு - Cultural Deprivation
பண்பாட்டு உட்பிரிவு - Sub Culture

பண்பாட்டு உய்வு	-	Cultural Survival
பண்பாட்டு ஏமாற்றம்	-	Cultural Deprivation
பண்பாட்டு ஏவல் வடிவங்கள்	-	Cultural Imperatives
பண்பாட்டு ஒட்டுப்பண்பு	-	Culture Adhesion
பண்பாட்டு ஒருபொருண்மைவாதம்	-	Cultural Monism
பண்பாட்டு ஒழுங்கமைப்பு வாதம்	-	Cultural Orthegenesis
பண்பாட்டு ஒன்றியம்	-	Cultural Integration
பண்பாட்டுக் கலவை	-	Culture Complex
பண்பாட்டுக் குவியல்	-	Culture Accumulation
பண்பாட்டுக் கூறு	-	Culture Trait
பண்பாட்டுச் சமூகவியல்	-	Cultural Sociology
பண்பாட்டுச் சார்புடைமை	-	Cultural Relativism
பண்பாட்டுச் சிறுபான்மையினர்	-	Cultural Minority
பண்பாட்டுச் சூழ்நிலம்	-	Cultural Landscape
பண்பாட்டுக் சூழலியல்	-	Cultural Ecology
பண்பாட்டுத் தீவு	-	Cultural Island
பண்பாட்டுத் தேக்கம்	-	Cultural Lag
பண்பாட்டுத் தொடர்பு	-	Cultural Contact
பண்பாட்டு நியதிவாதம்	-	Cultural Determinism
பண்பாட்டுப் படிமலர்ச்சி	-	Cultural Evolution
பண்பாட்டுப் படிமாதிரி மரபாய்வு	-	Culture Typology
பண்பாட்டுப் பண்பாண்மை	-	Cultural Ethos
பண்பாட்டுப் பரப்பு	-	Culture Area
பண்பாட்டுப் பரவல்	-	Culture Spread
பண்பாட்டுப் பன்மைவாதம்	-	Cultural Pluralism
பண்பாட்டுப் பாங்கு	-	Culture Pattern
பண்பாட்டுப் பிறழ்வு	-	Cultural Drift
பண்பாட்டுப் புனைந்துரை	-	Culture Myth
பண்பாட்டுப் பொதுமைகள்	-	Cultural Universals
பண்பாட்டுப் பொருள்	-	Culture Object
பண்பாட்டுப் பொருள் முதல்வாதம்	-	Cultural Materialism
பண்பாட்டு மடமை	-	Cultural Blindness
பண்பாட்டு மதிப்பீடுகள்	-	Cultural Values
பண்பாட்டு மாதிரி	-	Cultural Type
பண்பாட்டு மாற்றத்தில் உயர்மனிதக் கோட்பாடு	-	Great Man Theory in Culture Change
பண்பாட்டு மாற்றம்	-	Cultural Change

பண்பாட்டு மானிடவியல் - Cultural Anthropology
பண்பாட்டு முரண்பாடு - Culture Conflict
பண்பாட்டு முழுமை - Cultural Absolute
பண்பாட்டு வடிவமைதி - Cultural Configuration
பண்பாட்டுவயமாக்கம் - Enculturation
பண்பாடு - Culture
பண்பாடு வரையறுத்தல் - Cultural Conditioning
பண்பாடு ஏற்றல் - Acculturation
பண்பாண்மை - Ethos
பண்புமாதிரி ஒருமம் - Sampling Unit
பண்புமாதிரி தெரிந்தறிதல் - Sampling
பண்புமாதிரிப் பிழை - Smpaling Error
பண்புவகைசார் ஆய்வு - Qualitative Analysis
பணி - Role
பணி - Work
பணி ஆளுமைக்குணம் - Role Personality
பணி ஏற்படுத்தல் - Role Making
பணிக்கு வராமை - Absenteeism
பணிச்சிரமம் - Role Strain
பணிச்சூழல் - Work Ecology
பணிச் செயலாற்றுகை - Role Playing
பணித்தவிர்ப்பு - Role Discontinuity
பணித்தொகுதி - Role Set
பணிநடக்கைமுறை - Role Behaviour
பணிநிலை மாற்றம் - Role Transition
பணிநிறைவேற்றம் - Role Performance
பணிமணம் - Marriage by Service
பணிமுதன்மை - Role Primacy
பணிமுரண்பாடு - Role Conflict
பணிமுன்மாதிரி - Role Model
பணியாளர் சமுதாயம் - Employee Society
பணியாளர் வகுப்பு - Working Class
பணிவரலாறு - Career
பணிவிடல் - Role Relinquishment
பணிவிடை வகுப்பு - Service Class
பணிவேண்டுகோள்கள் - Role Demands
பயன்பாட்டுச் சமூகவியல் - Applied Sociology
பயனறிதல் ஆய்வு - Evaluative Research
பயனில் கருதுகோள் - Null Hypothesis
பரத்தை - Prostitute

பரப்புரை	-	Propaganda
பரவல்	-	Diffusion
பரவல்வாதம்	-	Diffusionism
பரவலாகுகை	-	Diffuseness
பரிசம்	-	Bride Price
பரிமாற்ற மணம்	-	Marriage by Exchange
பரிமாற்றம்	-	Reciprocity
பருவகால மாறுபாடு	-	Seasonal Variation
பல்கூற்றாண்மை	-	Pluralism
பல்சமூக நிலைக்குழு	-	Vertical Group
பல்பணி நிலைக்குழு	-	Vertical Work Group
பல்பிணைப்புக் குழு	-	Multibonded Group
பல்வழி மரபு	-	Omnilateral
பல கணவ மணம்	-	Polyandry
பலகணவர் குடும்பம்	-	Polyandrous Family
பலதார மணம்	-	Polygyny
பலதுணை மணக்குடும்பம்	-	Polygamous Family
பலதுணை மணம்	-	Polygamy
பலதெய்வ நம்பிக்கை	-	Polytheism
பலமனைவிக் குடும்பம்	-	Polygynous Family
பலமனைவி மணம்	-	Polygyny
பலவழித் தோற்ற கருதுகோள்	-	Polygenetic Hypothesis
பழக்கம்	-	Habit
பழங்கற்காலம்	-	Palaeolithic Age
பழங்குடி	-	Tribe
பழங்குடி அவை	-	Tribal Council
பழங்குடி ஒப்புமை	-	Tribal Analogy
பழம்பொருள் ஆய்வாளர்	-	Antiquarian
பழமைவாதம்	-	Conservatism
பழிக்கு இரையாக்குதல்	-	Scapegoating
பழைய நடுத்தர வகுப்பு	-	Old Middle Class
பன்மைச் சமுதாயம்	-	Plural Society
பாதுகாப்பு மந்திரம்	-	Protective Magic
பார்வைக் கணவர்கள்	-	Visiting Husbands
பாரம்பரியப் பங்கு	-	Ascribed Role
பால்	-	Sex
பால்கடமைக்கூறு	-	Sex Role
பால்கூறு	-	Gender
பால்வேறுபாட்டுணர்வு	-	Sexism
பால்வகைச் சமூகவியல்	-	Sociology of Gender

பாலவிகிதம்	-	Sex Ratio
பாலுணர்வு	-	Sex Drive
பிணைமுறை	-	Correlation
பிணைமுறைத் தொகுதி	-	Correlation Cluster
பிந்தைய ஆலைமய சமுதாயம்	-	Post-industrial Society
பிந்தைய மணநிலை	-	Postnuptial Stage
பிரித்திணைத்தல் முறை	-	Bifurcate Merging System
பிரிவுறுதல்	-	Bifurcation
பில்லிகுனியம்	-	Witch Craft
பிறந்தகம்	-	Family of Orientation
பிறப்புச் சார்புத்தகுதி	-	Ascribed Status
பிறப்புத் தகுதி உணர்வு	-	Ascritption
பிறருக்கேற்ற சுய ஆளுமை	-	Looking Glass Self
பின்னடைவுநிலை	-	Retreatism
புகுமுக உரிமை	-	Initiation Rites
புகுமுகச் சடங்கு	-	Initiation Ritual
புகுமுகம் செய்தல்	-	Induction
புகைக்காட்சி மானிடவியல்	-	Visual Anthropology
புடையெழுச்சி	-	Transhumance
புதிதுபுனைதல்	-	Invention
புதிய கற்காலம்	-	Neolithic Age
புதுகுடித்தன உறைவிடம்	-	Neolocal Residence
புதுகுடித்தனம்	-	Neolocal
புது நடுத்தர வகுப்பு	-	New Middle Class
புதுநேர்க்காட்சிவாதம்	-	Neopositivism
புதுப் பணியாளர் வகுப்பு	-	New Working Class
புதுமுறை காணல்	-	Innovation
புதுமையாக்கம்	-	Modernization
புதைவடிவங்கள்	-	Fossils
புரட்சி	-	Revolution
புராணக்கதை	-	Legend
புராணக்கதை	-	Myth
புலப்பெயர்வு	-	Migration
புலம்பெயர்ந்த பணியாளர்	-	Migrant Worker
புலம்பெயர்பவர்	-	Migrant
புலனுணர்வுப் பண்பாடு	-	Sensate Culture
புள்ளியியல் கருதுகோள்	-	Statistical Hypothesis
புறஇனச் சமுதாயம்	-	Gentile Society
புறக்குடி பெயர்வு	-	Emigration
புறக்குறி ஆய்வு	-	Semiotics

புறச்சமயச்சார்பு	-	Paganism
புறஞ்சேரி	-	Suburb
புறத்தோற்ற உடல்அளவியல்	-	Somatometry
புறநகர்	-	Suburb
புறநகர் வாழ்க்கைமுறை	-	Suburban Way of Life
புறநகராக்கம்	-	Suburbanization
புறமணக்குழு	-	Exogamous Group
புறமணம்	-	Exogamy
புறமுனைப்பு	-	Salience
புறவயநோக்கு	-	Etic Viewpoint
புனிதச் சமுதாயம்	-	Sacred Society
புனைகுழு	-	Contrived Group
புனைவியல் உறவு	-	Fictive Kinship
பூப்புப் பருவச் சடங்கு	-	Puberty Rites
பூப்புப் பருவம்	-	Puberty
பெண்ணுரிமைவாதம்	-	Feminism
பெண்தன்மையாதல்	-	Feminization
பெண்வழி மரபு	-	Matrilineal Descent
பெயர்அழைத்தல்	-	Name Calling
பெயராள்	-	Surrogate
பெருங்குற்றம்	-	Felony
பெருங்கூட்டம்	-	Moiety
பெருந்தகை	-	Hero
பெற்றோர் உடன்பிறந்தார் பிள்ளைகள் வகைப்பாடு	-	Cousin Classification
பெற்றோர் தலைமுறை உறவுகள்	-	Avuncular Systems
பேச்சிழப்பு	-	Aphasia
பேசுநர்	-	Ego
பேட்டிகாணல்	-	Interview
பேட்டியாளரின் பாதிப்பு	-	Interviewer's Effect
பேரரசுக்கொள்கை	-	Imperialism
பேரியச் சமூகவியல்	-	Macro-sociology
பேரியச் செயற்பாட்டியல்	-	Macro-functionalism
பேறுகாலத் தனிமை	-	Couvade
பொகார்டஸ் சமூக-மனத்தாக்கலைவு விதி	-	Bogardus Law of Social Tension
பொதுச் சான்றாவணம்	-	Public Document
பொதுச்சீர்மயமாக்கம்	-	Generalization
பொதுச்செயல்	-	Commensalism
பொது நலப்பண்பு	-	Altruism

பொதுப்படிப் பரிமாற்றம்	-	Generalized Reciprocity
பொதுப் பண்புச் சமுதாயக் குழு	-	Community
பொதுப் பண்புச் சமுதாயக் குழு அமைப்பாண்மை	-	Community Organisztion
பொதுப் பண்புச் சமுதாயக் குழு ஆய்வுமுறை	-	Community Study Method
பொதுமக்கள்	-	Public
பொது மணப்பரிமாற்றம்	-	Generalized Martial Exchange
பொருள்சார் பண்பாடு	-	Material Culture
பொருள் சார்பு ஆய்வு	-	Content Analysis
பொருள்சாராப் பண்பாடு	-	Non-material Culture
பொருள் பகுப்பாய்வு	-	Componential Analysis
பொருளடக்க அட்டவணை	-	Index
பொருளாதார சமூகவியல்	-	Economic Sociology
பொறுத்தமைவு	-	Toleration
பொறுப்புமாற்றம்	-	Role Transition
போக்கு	-	Tendency
போட்டிநிலை	-	Rivalry
போர்	-	War
போலச்செய்கை	-	Imitation
போலச்செய்யும் மந்திரம்	-	Imitative Magic
போலி அறிவியல்	-	Pseudo Science
போலி உறவு	-	Fictive Kinship
போலித் தகவல்தொடர்பு	-	Pseudo Communication
போலிப் பொருள் வழிபாடு	-	Fetishism
போலியானப் பண்பாடு	-	Spurious Culture
போலி விளக்கக்கூறு	-	Fad

ம

மக்கட்கும்பல்	-	Mob
மக்கட்கும்பல்	-	Herd
மக்கள் சமூகவியல்	-	Popular Sociology
மக்கள் திரள்	-	Mass
மக்கள்திரள்	-	Crowd
மக்கள் திரள் தகவல்தொடர்பு சாதனம்	-	Mass Media
மக்கள் திரள் நடக்கைமுறை	-	Mass Behaviour
மக்கள்தொகை	-	Population
மக்கள்தொகை அடர்த்தி	-	Population Density
மக்கள்தொகை ஆய்வு	-	Population Studies

மக்கள்தொகைக் கணக்கு - Census
மக்கள்தொகைப் பிரச்சனைகள் - Population Problems
மக்கள்தொகை மிகுதி - Over-Pouplation
மக்கள்தொகை மையம் - Population Centre
மக்கள்தொகையியல் - Demography
மகவுத்தொடர்பு - Filliation
மண்டலம் - Zone
மண்டலமாக்கம் - Zoning
மண்டையோட்டளவையியல் - Craniometry
மண்ணடுக்கியல் - Stratigraphy
மண்ணியல் காலக்கணிப்புமுறை - Geochronology
மண உரிமம் - Connubium
மண உறவு - Affinal Relation
மணக்கொடை - Dowry
மணநிலை - Nuptial Stage
மணப்பெண் பணம் - Bride-price
மணவழி உறவினரகக் குடும்பம் - Affinolocal Family
மணவழிக் குடும்பம் - Conjugal Family
மணவழிச் சகோதர மணம் - Cross-cousin Marriage
மணவழிச் சகோதரர் - Cross-cousins
மணவாழ்வுக்குரிய - Conjugal
மணவிலக்கு - Divorce
மணவீதம் - Marriage Rate
மணஉறவுக்கோட்பாடு - Alliance Theory
மதச்சார்பற்ற சமுதாயம் - Secular Society
மதச்சார்பின்மையாதல் - Secularization
மதச்சார்புக்குழு - Sect
மதம் - Religion
மதமாற்றம் - Conversion
மதனி மணம் - Levirate
மதிப்பீட்டுத் தீர்ப்பு - Value Judgement
மதிப்பீட்டு முறைமை - Value System
மதிப்பீட்டு விரிவு இழுப்பு - Value Stretch
மதிப்பு - Esteem
மதிப்பு அந்தஸ்து - Status Honour
மதிப்புக்கோள் - Value
மந்திரகுனிய மதகுரு - Shaman
மந்திரகுனிய மதகுரு ஆட்சி - Shamanism
மந்திரம் - Magic
மந்தை - Herd

மருத்துவ சமூகவியல் - Medical Sociology
மருத்துவ மானிடவியல் - Medical Anthropology
மருட்சி - Delusion
மரபு - Tradition
மரபு உறவினர் - Sib
மரபுச்சின்ன உறவு - Totemic Kinship
மரபுச்சின்னம் - Totem
மரபுச்சின்ன முறைமை - Totemism
மரபுசார் சட்டங்கள் - Customary Laws
மரபுசாரா உள்பண்பு - Deviant Sub Culture
மரபுசாரா நடக்கை - Deviant Behaviour
மரபுசாராப் பழக்கம் - Deviant Habits
மரபுசாரமை - Deviance
மரபுத்தொடர்பு - Heredity
மரபுப் பண்பு - Genetic Character
மரபு மனப்பான்மை - Traditionalism
மரபுமுறை - Genetic Method
மரபுரிமை - Inheritence
மரபுரிமையும் உறவுமுறையும் - Descent and Kinship
மரபு வழக்கம் - Convention
மரபுவழிக் குழுக்கள் - Descent Groups
மரபுவழிக் கூட்டுறவு - Traditional Co-operation
மரபுவழி வருகை - Descent
மரபேற்பாளர் - Fundamentalist
மல்தூசியன் போதனை - Malthusian Doctrine
மலட்டுத்தன்மை - Infertility
மலாய முறை - Malayan System
மறு உயிராற்றல் வழங்கு இயக்கம் - Revitalization Movemnt
மறுப்புரையாளர் - Protestant
மறுப்புவாதம் - Negativism
மறு பங்கீட்டு முறை - Redistribution System
மறுமொழியின்மை - Non-response
மறுத்தொழிப்பு - Rejection
மறைவான பாடத்திட்டம் - Hidden Curriculum
மனப்பாங்கு - Mood
மனப்பான்மை - Attitude
மனப்பான்மை அளவை - Attitude Scale
மனித இயல்பு - Human Nature
மனித உறவு - Human Relation
மனிதச் சூழலியல் - Human Ecology

மனிதத் தொல்லுயிரியல்	-	Palaeo Anthropology
மனிதநேயம்	-	Humanism
மனிதனல்லா உயர்பாலூட்டிகள்	-	Non-human Primates
மனைவியகக் குடும்பம்	-	Uxorilocal Family
மாதிரி ஆளுமைக் குணங்கள்	-	Model Personality
மாதிரிச்சமுதாயம்	-	Model Society
மாநகரம்	-	City
மாமனகக் குடும்பம்	-	Auvnculocal Family
மாமனுறவு	-	Avunculate
மாமியார் தடைக்கட்டு	-	Mother-in-law Taboo
மார்க்சீய மக்கள்தொகைக் கோட்பாடு	-	Marxian Theory of population
மாற்று நிலைக் கருதுகோள்	-	Alternative Hypothesis
மாறி	-	Variable
மாறுபடும் செய்திக்கூறு	-	Soft Information
மாறுபாடு	-	Contradiction
மானிட உடலளவையியல்	-	Anthropometry
மானிடமாக்கம்	-	Anthropomorphise
மானிட முதலாய்வு	-	Anthropogeny
மானிட மையம்	-	Anthropocentric
மானிட வழிபாடு	-	Anthropolatry
மானிடவியல்	-	Anthropology
மானிடவியல்பு சார்த்தும் கொள்கை	-	Anthropomorphism
மானிடவியல் முன்னோடிகள்	-	Precursors of Anthropology
மானிடவியலார்	-	Anthropologist
மானிடவினப் பரப்பாய்வு	-	Anthropography
மீண்டும் குற்றம்புரிகை	-	Recidivism
முதல் குடிக்குழு	-	Allopatric Group
முதல்நிலை ஆதாரம்	-	Primary Source
முதல்நிலை இரத்தவழி உறவினர்	-	Primary Consanguines
முதல்நிலை உறவினர்	-	Primary kin
முதல்நிலை உறவு	-	Primary Relation
முதல்நிலைக் குழு	-	Primary Group
முதல்நிலைச் சான்றாதாரம்	-	Primary Document
முதல்நிலைத் தொழில்	-	Primary Occupation
முதல்நிலை மணவழி உறவினர்	-	Primary Affinal
முதல்நிலை விதி விலகல்	-	Primary Deviation
முதலாளித்துவம்	-	Capitalism
முதியவர் ஆட்சிமுறை	-	Gerontocracy

முதிர்கை	-	Maturation
முதிர்கை கருதுகோள்	-	Maturation Hypothesis
முதிர்ச்சிநிலை	-	Maturing Stage
முது பழங்குடி	-	Aboriginal Tirbe
முதுமைக்கொலை	-	Senicide
முந்துபிறப்பு நிலை	-	Primogeniture
முரண்பாட்டுக் கோட்பாடு	-	*Conflict Theory*
முரண்பாடு	-	Conflict
முழு இலக்க நிறுவனம்	-	Total Institution
முழுக் கருத்தேற்பு	-	Internalization
முழுமையற்றக் குடும்பம்	-	Quasi Household
முழுமையற்றக் குழு	-	Quasi Group
முழுதளாவிய் அணுகுமுறை	-	Holistic Approach
முழுதளாவியம்	-	Holism
முழுநிலை இழப்புணர்வு	-	Absolute Deprivation
முழுமையற்ற நாடோடிகள்	-	Semi nomads
முற்சார்பு	-	Prejudice
முற்போக்காளர்	-	Liberal
முறைகேடு	-	Illegitimacy
முறைசார் குழு	-	Formal Group
முறைசார் பண்பாட்டு விதிமுறைகள்	-	Formal Norms
முறைசாரா அமைப்பாண்மை	-	*Informal Organization*
முறைசாராக் குழு	-	Informal Group
முறைசாரா விதிமுறைகள்	-	Infromal Norms
முறைப்படுத்தப்படாத இறப்புவீதம்	-	Crude Death Rate
முறைமை	-	System
முறைமை ஆய்வு	-	System Analysis
முறையான அமைப்பாண்மை	-	Formal *Organization*
முறையான ஆழ்ந்துநோக்கல்	-	Systematic Observation
முறையின்மை	-	Agamy
முன்சோதனை	-	Pretest
முன்மாதிரிக் குழு	-	Reference Group
முன்மாதிரிநபர்	-	Reference Individual
முன்மொழிவுச்செய்தி	-	Proposition
முன்னறிசமூகவமயமாக்கம்	-	Anticipatory Socialization
முன்னுரிமைச் செயற்களம்	-	Preferential Shop
முன்னுரிமை மணம்	-	*Preferential* Marriage
முன்னுரிமையான		

கட்டுப்பாடின்மை	-	Privileged Familiarity
முன்னேற்றம்	-	Progress
முன்னோர் வழிபாடு	-	Ancestor Worship
மூடநம்பிக்கை	-	Superstition
மூப்பியல்	-	Gerontology
மூலதனம்	-	Capital
மூலமுதல் சமுதாயம்	-	Primitive Society
மூளைச்சலவை	-	Brain Washing
மூன்றாம்நிலை உறவினர்	-	Tertiary kin
மூன்றாம் நிலைத் தொழில்	-	Tertiary Occupation
மெய்ச் சான்று	-	Verifiable Evidence
மெய்ந்நிகழ்ச்சித் தீர்ப்பு	-	Factual Judgement
மெய்மை நோக்கு	-	Objectivism
மெய்யான பொருள் வரையறை	-	Real Definition
மேம்பட்ட பதவித்தரம்	-	Superordination
மேல்குடி குற்றங்கள்	-	White Collar Crime
மேல்குடிப் பணியாளர்	-	White Collar Worker
மேல்நிலை ஆவி புகக் கொள்கை	-	Higher Animism
மேலாண்மை	-	Management
மேலாண்மைசார் சமூகவியல்	-	Managerial Sociology
மைய உட்பிரிவாக்கம்	-	Subcentralization
மையப் பண்பாடு	-	Culture Centre
மைய வலுத்தளர்த்தல்	-	Decentralization
மொழி	-	Language
மொழியியல்	-	Linguistics
	ய	
யூதர்கள் வாழும் பகுதி	-	Ghetto
	ல	
லெனின் கோட்பாடு	-	Leninism
	வ	
வகுப்பு முரண்பாட்டு சமுதாய விளக்கம்	-	Class Conflict Interpretation of Society
வகைப்படுத்தும் சொல்	-	Classificatory Term
வகைப்பாட்டியல்	-	Taxonomy
வட்டார அகமணம்	-	Territorial Endogamy
வட்டாரக்குழு	-	Territorial Group
வடிவ அமைப்பியல்	-	Morphology
வடிவமைதி முறை	-	Fachion
வதந்தி	-	Rumour

வயதுக்குழுக்கள்	Age-sets
வயது தரநிலை	Age Grade
வயதுநிலைக் கருதுகோள்	Age-area Hypothesis
வயது, பால் குறிப்பான இறப்புவீதம்	Age-sex Specific Death Rate
வர்க்க உணர்வு	Class Consciousness
வர்க்க சமுதாயம்	Class Society
வர்க்கப் போராட்டம்	Class Struggle
வர்க்கமுறை	Class System
வரதட்சணை	Dowry
வரலாற்றிற்கு முற்பட்ட காலம்	Prehistory
வரலாற்று இயற்பொருள்வாதம்	Historical Materialism
வரலாற்றுச் சமூகவியல்	Historical Sociology
வரலாற்று நிகழாய்வு	Case History
வரலாற்று முறை	Historical Method
வரிசையர்	Estates
வரையறுக்கப்பட்ட பழங்குடி	Scheduled Tribe
வரையறுக்கப்பட்ட மணப்பரிமாற்றம்	Restricted Marital Exchange
வரையறை மொழி	Jargon
வல்லந்த நுழைவு	Invasion
வலையமைவு	Network
வழக்கடிபாடுகள்	Mores
வழக்கம்	Custom
வழக்கமுறைக் கருத்து	Stereo Type
வழிபாட்டுக்குழு	Cult
வளர்ச்சிச் சமூகவியல்	Sociology of Development
வளர்ச்சி நிறைவின்மை	Underdevelopment
வளர்ச்சியடையா பகுதி	Underdeveloped Area
வளரிளமை	Adolescence
வற்புறுத்தல்	Force
வறுமை	Poverty
வாக்களிப்பு	Voting
வாடகை அறை வீட்டுப்பகுதி	Rooming-house Area
வாணிகப்பகுதி	Trade Area
வாதமுறை ஆய்வு	Dialectic
வாதமுறையாக்கம்	Reasoning
வாய்ப்புவளம்	Resource
வாய்மொழிச் சான்றாவணம்	Oral Documents
வாய்மொழிச் சோதனை	Verbal Test

வாய்மொழிப் பாரம்பரியம்	-	Oral Tradition
வாழ்க்கைச் சரித்திரமுறை	-	Life-history Method
வாழ்க்கைச்சுழல்	-	Life-cycle
வாழ்க்கைச்சுழல் ஒப்புமை	-	Life cycle Analogy
வாழ்க்கைச்சுழல் சடங்குகள்	-	Life Cycle Ceremonies
வாழ்க்கைச்சூழல்	-	Ecology
வாழ்க்கைச்சூழல் அமைப்பு	-	Ecological Structure
வாழ்க்கைச்சூழல் ஒருமம்	-	Ecological Unit
வாழ்க்கைச்சூழல் தூரம்	-	Ecological Distance
வாழ்க்கைச்சூழல் நிலைபெயர்வு	-	Ecological Mobility
வாழ்க்கைத்தொழில்	-	Profession
வாழ்க்கைப் படித்தரம்	-	Standard of Living
வாழ்க்கைப் பொருளாதாரம்	-	Subsistence Economy
வாழ்க்கைமாதிரி	-	Life-style
வாழ்க்கை வாய்ப்புவள அட்டவணை	-	Life Table
வாழ்வாதார உறவுகள்	-	Sustenance Relation
வாழ்வினைப்பு	-	Web of Life
வாழ்வுக்கான போராட்டம்	-	Struggle for Existence
வாழ்வுநிலைமாற்றச் சடங்கு	-	Rites of Passage
வாழ்வுப்படி	-	Alimony
வாழ்வெல்லை	-	Life Span
வாழுமிட ஒப்புமை	-	Residential Propinquity
விசைத்தடுக்கு வரிசை	-	Skid Row
விதி	-	Principle
விரிவுக் குடும்பத்தினர்	-	Extended Household
விரிவுக்குடும்பம்	-	Fxtended Family
விருந்தினர்	-	Guest People
விருப்பத் திருமணம்	-	Gandarva Marriage
விரும்பா ஒருதுணை இழப்பு	-	Unwilled Absence of One Spouse
விரும்பா முக்கிய பங்குத்தோல்வி	-	Unwilled Major Role Failures
விலக்கு	-	Taboo
விலகியிருத்தல்	-	Absenteeism
விலங்கின நடத்தையியல்	-	Ethology
விலைமகள்	-	Prostitute
விலைமணம்	-	Marriage by Purchase
விவசாய இயக்கம்	-	Agrarian Movement
விவசாயப் பொதுமைக்கோட்பாடு	-	Agrarian Socialism

விவாகரத்து	-	Divorce
விளக்க உறவுமுறை	-	Descriptive Kinship
விளக்கச்சொல்	-	Descriptive Term
விளக்க மொழியியல்	-	Descriptive Linguistics
விளிச்சொல்	-	Term of Address
விளைவு சார் ஆய்வு	-	Operational Research
வினாப்பட்டியல்	-	Questionnaire
வினாப்பட்டியல் ஆய்வுமுறை	-	Questionnaire Method
வினை	-	Action
வீத அறுதிப்பாடு	-	Rating
வீரன்	-	Hero
வெள்ளையரின் சுமை	-	White Man's Burden
வெளிக்குழு	-	Out-group
வெளிப்படைச் செயல்கள்	-	Manifest Functions
வெளிப்படைப் பண்பாடு	-	Explicit Culture
வெளிமய-பண்பாட்டு கூறுகள்	-	Emergent Properties
வெறுமைக் குடும்பம்	-	Empty Shell Family
வேட்டையாடி உணவு சேகரித்தல்	-	Hunting and Food-gathering
வேலைநிறுத்தம்	-	Strike
வேற்றுச் சந்தர்ப்பம்	-	Differential Opportunity
வேற்றுச் சேர்கை	-	Differential Association
வேற்றுமை விளக்கம்	-	Differentiation
வேறுபாட்டுணர்வு	-	Discrimination

ஆதாரங்கள் (Sources)

Bell R. Robert 1983 Marriage and Family Interaction
The Dorsey Press,
Homewood, Illinois.

Bhushan. B. 1989 Dictionary of Sociology
Anmol Publications,
New Delhi.

Ember R. Carol &
Ember Melvin 1977 Anthropology (Second Edition)
Prentice-Hall Inc.
Englewood Cliffs, New Jersey.

Leela Dube 1974 Sociology of Kinship
Popular Prakashan,
Bombay.

Mair Lucy 1972 An Introduction to Social Anthropology
Oxford University Press,
Delhi.

Nock L.Steven 1987 Sociology of the Family
Prentice-Hall Inc.
Englewood Cliffs,
New Jersey.

Santhanam, P.V., 'Basic Concepts in Sociology'
Directorate of Distance Education,
Annamalai University,
Annamalainagar.

Schwartz M. Barton
& Ewald H.Robert 1968 Culture and Society-An Introduction to Cultural Anthropology.
The Ronald Press Company,
New York.

Smith W.Ronald &
Preston W.Frederick 1977 Sociology-An Introduction
St.Martin's Press,
New York.

Spencer Metta 1979 Foundations of Modern Sociology
Prentice-Hall Inc.
Englewood Cliffs,
New Jersey.

Tylor, E.B. 1991 Dictionary of Anthropology
(Special Indian Edition)
Goyl Saab, Delhi.

இராதா செல்லப்பன். 1985 கலைச் சொல்லாக்கம் (முதற்பதிப்பு)
தஞ்சாவூர்.

இராபர்ட். சத்தியசோசப், தா. 1996 சமகாலத் தமிழர்களின் உறவுமுறை
அமைப்பும் உறவுமுறைச்
சொற்களும்.
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

---------------------- 1999 "சமூக அறிவியல்
கலைச்சொல்லாக்கம்"
எட்டாவது கருத்தரங்கு மலர்,
அனைத்திந்திய அறிவியல்
தமிழ்க் கழகம், பக்கம் 663-669
தஞ்சாவூர்.

சச்சிதானந்தன், வை., 1983 மேலை இலக்கியச் சொல்லகராதி.
Macmillan India Limited,
Madras.

சுப்பிரமணியன், பா.ரா., "கலைச்சொற்களும், அகராதியியலும்"
வெளியிடப்படாத அறக்கட்டளைச்
சொற்பொழிவுக் கட்டுரை,
மொழி அறக்கட்டளை, சென்னை.

பக்தவத்சல பாரதி, 1990 பண்பாட்டு மானிடவியல்
மணிவாசகர் பதிப்பகம், சென்னை.